காவல் உதவி ஆய்வாளர் கையேடு

காவல் உதவி ஆய்வாளர் கையேடு :

தனிச்சுற்றுக்கு மட்டும்

முதற்பதிப்பு – 2008

இந்த கையேட்டில் உள்ள அனைத்து படிவங்களும் மாதிரிகளே.

பிரிண்டஸ் : சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட்

முன்னுரை

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.'' – திருக்குறள்

தமக்கென்றுண்டானப் பொருளை உண்டாக்கினால், பகைவர் தருக்கொழிந் தாமே அடங்குவார். அதைவிட கூரிய படைக்கலம் வேறு ஏதுமில்லை என்பது பொருள். அதுபோல காவல் துறையில் தினந்தோறும் எதிர்கொள்ளப்படும் அனைத்துவிதமான சவால்களிலும் முதன்முதலில் முன்னின்று பணி செய்யும் காவல் உதவி ஆய்வாளர்களுக்கு தேவையான வழிமுறைகள் அனைத்தும் உள்ளடக்கியதாகவும், தமிழக காவல்துறையில் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படும் காவல் உதவி ஆய்வாளர்கள் பயிற்சியின் போதே காவல் துறையில் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு திரு. K. ராமானுஜம், இ.கா.ப., ADGP & Director, V&AC அவர்கள் மேற்பார்வையிலும், திரு. T. ராஜேந்திரன், இ.கா.ப., ADGP (Law and Order) அவர்கள் மேற்பார்வையிலும், மற்றும் வழிகாட்டுதலிலும் இந்த "கையேடு'' தயாரிக்கப்பட்டுள்ளது.

காவல் உதவி ஆய்வாளர் ஒவ்வொருவரும் தன் பணிக்காலத்தில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் அனைத்தையும் உள்ளடக்கி களப்பணியில் எவ்வாறான நடைமுறை கையாளப்படுகிறதோ அவ்வாறே எளிய நடையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையேடு உருவாவதற்கு பங்களிப்பு செய்த அனைத்து காவல் அலுவலர்களையும் பெருமைப்படுத்தும் படியாக அவர்களின் பெயர்ப் பட்டியலை இக்கையேட்டின் இறுதியில் காணலாம்.

இந்தக் கையேடு பயிற்சி உதவி ஆய்வாளர்கள் மட்டுமல்லாமல் களப்பணியில் இருக்கும் காவல் உதவி ஆய்வாளர்களுக்கும் பயன்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கையேட்டைப் படிப்பவர்கள் இந்த முதற்பதிப்பில் திருத்தங்கள் தேவையானால் அவற்றைச் சுட்டிக் காட்டினால் பின் வரும் பதிப்புகளில் அவற்றைச் சரி செய்ய ஏதுவாகும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர். – திருக்குறள்

பொருளடக்கம்

I. நிர்வாகம்

1. நிலையப் பணிப்பொறுப்பேற்றல் 1

பொதுவான காவல் நிலையப் பணிகள்

2. பட்டியல் வரிசை அழைப்பு (Roll call) 2
3. பொது நாட்குறிப்பு 2
4. ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள் தணிக்கை 2
5. தொடர் வண்டி மற்றும் பேருந்துப் பயணச்சீட்டுகள் 3
6. பணப் பதிவேடு 3
7. நிலைய சாதனங்களை பராமரித்தல் 3
8. விடுப்பு வழங்குதல் 3
9. குடியிருப்புகள் 4
10. சிறிய பணிப்புத்தகம் (Small Service Book) 4
11. மருத்துவ சரித்திர தாள் (Medical History Sheet) 4
12. பிழை குறியீட்டுத் தாள் (Defaulter Sheet) 5
13. நிலையப்பணியிலிருந்து மாற்றலில் விடுவிக்கப்படுதல் 5

தினசரி

14. நிலைய அறிக்கை 5

வாரந்தோறும்

15. வாராந்திர அறிக்கைகள் 5
16. வாராந்திரக் கூட்டங்கள் 5
17. வாராந்திரக் கவாத்து 5
18. வாராந்திர ஓய்வு 6
19. நிலையம் மற்றும் நிலைய சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல் 6
20. இரு வாரங்களுக்கு ஒருமுறை அறிக்கைகள் 6
21. கிராம விழிப்புணர்வுக் குழு கூட்டம் 6

SI_GUIDE.indb V 1/6/2009 8:50:16 AM

மாதந்தோறும்

22. மாதாந்திரத் தொகுப்புகள் 6
23. பயணப் படி பட்டியல் 7
24. மிகை நேர அலுவல் படி பட்டியல் 7
25. மாதாந்திர அறிக்கைகள் 7
26. மாதாந்திர குற்றக்கூட்டங்கள் 7

காலாண்டு

27. வழக்குகள் தொகுப்பு 7
28. கிராமத் தணிக்கை 8
29. அரசு சொத்துக்களைப் பராமரித்தல் 8

அரையாண்டு

30. துப்பாக்கி உரிமங்கள் தணிக்கை செய்தல் 8
31. துப்பாக்கி உரிம பதிவேட்டினை ஒப்பிடுதல் 8

ஆண்டுதோறும்

32. பாகம்–1 வருடாந்திரக் குற்றத்தொகுப்பு 9
33. வருடாந்திர நிர்வாக அறிக்கைகள் 9
34. வருடாந்திர துப்பாக்கி சுடும் பயிற்சி 9

II. காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள்

1. பொது நாட்குறிப்பு 11
2. முதல் தகவல் அறிக்கைத் தொகுப்பு 17
3. பாகம்–1 நிலைய குற்ற வரலாறு 17
4. பாகம்–2 குற்ற வரைபடம் 17
5. பாகம்–3 பொது தண்டனைப் பதிவேடு 20
6. பாகம்–4 கிராம சரித்திரப் பதிவேடு காவல் நிலை ஆணை–756 படிவம்–110 22
7. பாகம்–5 கெட்ட நடத்தைக்காரர்களின் சரித்திரப் பதிவேடு 23
8. கெட்ட நடத்தைக்காரர் தணிக்கைப் பதிவேடு 37
9. பெயர் வரிசைப் பதிவேடு 39
10. குற்ற செய்முறை தனித்தாள் தொகுப்பு 40
11. முன் தண்டனைக்குற்றவாளிகள் பதிவேடு 41
12. விசாரணை படிவம் “அ” 45
13. விசாரணை படிவம் “ஆ” 45
14. குற்றத் தொகுப்பு 45
15. கைது அட்டை 48

16.	கைதி பரிசோதனைப் பதிவேடு	49
17.	பிணைப் பத்திரம்	51
18.	கட்டளைப் பதிவேடு	52
19.	கைவிரல் ரேகை பதிவுத்தாள்கள்	52
20.	சிறுவழக்குப் பதிவேடு	55
21.	சமுதாயப் பணிப் பதிவேடு	57
22.	மருத்துவமனைக் குறிப்பாணை	60
23.	போக்கிரிப் பதிவேடு	61
24.	காவல்முறை மாற்றுப் புத்தகம்	63
25.	அலுவல் பதிவேடு	65
26.	மிகைநேர அலுவல் படிப் பதிவேடு	67
27.	நோட்டுப் புத்தகம்	69
28.	பணப் பதிவேடு காவல் நிலை ஆணை – 262	71
29.	அஞ்சல் அனுப்புகைப் பதிவேடு	73
30.	நடப்புத்தாள் பதிவேடு (CURRENT REGISTER)	74
31.	ஆயுத வழங்குப் பதிவேடு	75
32.	துப்பாக்கி உரிமப் பதிவேடு	76
33.	ஆயுத வைப்புப் பதிவேடு காவல் நிலை ஆணை – 322 படிவ எண் – 47	79
34.	கிராமப் பதிவேடு	80
35.	அரசு சொத்துப் பதிவேடு	82
36.	காலமுறைத் தொகுப்புகள்	87
37.	உயரலுவலர்கள் பார்வைப் பதிவேடு	90
38.	உயரலுவலர்கள் ஆய்வுப் பதிவேடு	94

III. புலன் விசாரணை

1.	மருத்துவமனைத் தகவல்	99
2.	முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல்	103
3.	புகைப்படம்	107
4.	மாதிரி வரைபடம்	108
5.	பார்வை மகஜர்	110
6.	கைப்பற்றுதல் மகஜர்	113
7.	161 (3) கு.வி.மு.ச. வாக்குமூலங்கள்	117
8.	கைது நடவடிக்கை	118
9.	ஒப்புதல் வாக்குமூலம்	123
10.	வீடு சோதனை	125
11.	கைது செய்யப்பட்டவரை சோதனை செய்தல்	129

12.	பிணையில் விடுவதற்கான வகை முறைகள்	132
13.	கைதி வழிக் காவல் அனுப்பும் முறை	133
14.	படிவம் – 91	135
15.	வழக்கு நாட்குறிப்பு எழுதும் முறை	136
16.	164 கு.வி.மு.ச. வாக்குமூலங்கள்	142
17.	காவல் கைதி	143
18.	அடையாள அணிவகுப்பு	145
19.	இயற்கைக்கு மாறான மரணம்– பிரேத விசாரணை	147
20.	பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தை ஒப்புவிக்கும் முறை	151
21.	பிரேதப் பரிசோதனை	152
22.	பிரேதப் பரிசோதனை – மருத்துவரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள்	153
23.	பிணத்தை தோண்டி எடுத்து பிரேதப் (EXHUMATION) பரிசோதனை செய்தல்	158
24.	மரண வாக்குமூலம்	160
25.	குற்ற அறிக்கை தாக்கல் செய்தல் (LAYING OF CHARGE SHEET) கு.வி.மு.ச. பிரிவு 173 (2)	162
26.	தொடர் புலன் விசாரணை – வழி முறைகள்	163
27.	புலனாய்வில் அறிவியலின் பங்கு	164
28.	(CASE DIARY – MAINTENANCE AND DISPOSAL) வழக்குக் கோப்பு – பராமரித்தலும் அழித்தலும்	165
29.	சமுதாயப் பணிப்பதிவேடு மற்றும் மனு விசாரணை	166
30.	குற்றப் பதிவு, புலன் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணை குறித்து மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள்	167

IV. நீதிமன்றம் சம்மந்தப்பட்ட அலுவல்கள்

1.	நீதிமன்றம் ஆஜராதல்	183
2.	நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் முறை	189
3.	நீதிமன்றத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் சொத்துக்கள் பதிவேடு	191
4.	அழைப்பாணை / பிடிகட்டளை ஒப்பீடுப் பதிவேடு	191
5.	பிடிகட்டளையினை நிறைவேற்றுதல்	192

V. சரிபார்த்தல் மற்றும் தணிக்கை அலுவல்

1.	ரோந்து அனுப்புதல், தணிக்கை செய்தல் மற்றும் வரவு வைத்தல்	199
2.	கெட்டநடத்தைக்காரர்கள் தணிக்கை	215
3.	துப்பாக்கி உரிமங்களைத் தணிக்கை செய்தல்	219
4.	விடுதலை / பிணையம் / பரோலில் வெளிவருவோர்களைக் கண்காணித்தல்	222
5.	வாகனத் தணிக்கை VEHICLE CHECK)	228
6.	பணி நியமன விசாரணை	230
7.	அன்னிய நாட்டு பயண அனுமதி சீட்டு / கடவுச் சீட்டு விண்ணப்ப விசாரணை	236

8. அகதிகள் முகாம் (REFUGEES CAMP) 242
9. கோயில் பாதுகாப்புப் படை (TEMPLE PROTECTION FORCE) 244
10. மறைமுகக் கண்காணிப்பு (SHADOWING) 245

VI. பார்வை மற்றும் ஆய்வு

1. மாவட்டக் குற்றப் பதிவேடுகள் கூடம் (DISTRICT CRIME RECORDS BUREAU) 249
2. விரல் ரேகைக் கூடம் (FINGER PRINT BUREAU) 254
3. தமிழ்நாடு தடய அறிவியல் துறை (TAMILNADU FORENSIC SCIENCES DEPARTMENT) 262
4. புறக் காவல் நிலையம் (OUT POST POLICE STATIONS) 263
5. புகைப்படப் பிரிவு (PHOTO SECTION) 264
6. நிலையப் பார்வை / ஆய்வுப் பதிவேட்டுக் குறிப்புரைகளை நிறைவேற்றுதல் 266
7. உடைப் பொருட்கள் தணிக்கை (KIT INSPECTION) 267
8. உயர் அலுவலர்களின் ஆய்வுக்குத் தயார்படுத்திக் கொள்ளுதல் 268

VII. தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

1. பாதுகாப்பு நோக்கு கைது நடவடிக்கைகள் 271
2. அமைதிக் குழு – அமைப்பு முறையும் அதன் பணியும் 280

VIII. பாதுகாப்பு, அமலாக்கல் மற்றும் இதர அலுவல்கள்

1. சிறு வழக்குகள் (PETTY CASES) 286
2. மோட்டார் வாகன சிறு வழக்குகள் (Motor Vehicle Petty Cases) 290
3. மோட்டார் வாகனச் சட்டம் 293
4. சூதாட்ட வேட்டை (Gambling Raid) 295
5. மதுவிலக்கு வேட்டை (Prohibition Raid) 299
6. விபச்சாரத் தடுப்பு வேட்டை (Brothel Raid) 303
7. இரவு ரோந்து (Night Beat) 308
8. நகர ரோந்து (Town Beat) 311
9. நெடுஞ்சாலை ரோந்து (Highway Patrol) 313
10. இருப்புப் பாதை ரோந்து 316
11. போக்கிரி ரோந்து (Rowdy Beat) 318
12. சுற்றுலாத் தல ரோந்து 319
13. போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் (Regulation of Traffic) 320
14. கிராமத் தணிக்கை (Village Visit) 322
15. இரவு தங்கல் (Night Halt) 323
16. கிராமக் கண்காணிப்புக் குழு (Village Vigilance Committee) 325

17.	முக்கிய நபர் பாதுகாப்பு (VIP Security)	326
18.	சந்தைகள் மற்றும் திருவிழாக்கள் பாதுகாப்பு (Fairs and Festivals Security)	330
19.	சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு அலுவல் (L&O Bandobust Duty)	340
20.	சட்டம் ஒழுங்கு அலுவல்கள்	341
21.	கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தும் பணி (Regulation of Assemblies)	355
22.	தகவலாளர் முறை (Informant System)	362
23.	சமுதாயக் காவல் (Community Policing)	363
24.	பேரிடர் மேலாண்மை (Disaster Management)	365

I. நிர்வாகம்

1. நிலையப் பணிப்பொறுப்பேற்றல்

i. பொது நாட்குறிப்பில் மாற்றல் ஆணை விவரங்களைக் குறிப்பிட்டு பணிப்பொறுப்பேற்ற விபரங்களை பதிவு செய்ய வேண்டும். பின்பு நிலைய காவலர்களை சந்தித்து காவல் நிலையத்தின் நடப்புகளை கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

ii. பணிப்பொறுப்பேற்ற விபரம் குறித்து மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. உயர் அலுவலர்களை சந்தித்து மரியாதை செலுத்தி அறிவுரைகள் பெற வேண்டும்.

iv. நிலைய அலுவல் பதிவேட்டில் விபரங்களைப்பதிவு செய்ய வேண்டும்.

v. நிலைய அரசு சொத்து பதிவேட்டில் பொறுப்பினை பெற்றுக் கொண்ட ஒப்புவித்த விபரங்களை பதிவு செய்ய வேண்டும்.

vi. பொறுப்பேற்றவுடன் நேரடியாக (Physically) அரசு சொத்துக்கள், நிலைய பதிவேடுகள், வழக்கு நாட்குறிப்பு கோப்புகள் நிலுவை நடப்புத்தாள்களை சரிபார்த்து பட்டியல் தயார் செய்து பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டும். மாவட்ட காவல் அலுவலகத்திற்கு மேற்படி பொறுப்பேற்பு பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும்.

vii. மாறுதலில் செல்லும் உதவி ஆய்வாளர் 30 நாட்களுக்குள் புதிதாக சேர்ந்த உதவி ஆய்வாளருக்கு பணிப்பொறுப்பினை ஒப்படைக்காத சந்தர்ப்பத்தில் புதிதாக சேர்ந்த உதவி ஆய்வாளர் தாமாகவே பொறுப்பெடுத்துக் கொண்டு விபரங்களை மாவட்ட காவல் அலுவலகத்திற்கு மேற்படி பொறுப்பேற்பு பட்டியலை சமர்பிக்க வேண்டும். இதில் தவறினால் குறைபாடுகளுக்கு புதிதாக பொறுப்பேற்ற உதவி ஆய்வாளரே பொறுப்பாளியாவார்.

viii. சரக நீதித்துறை நடுவர்களை சந்தித்து மரியாதை செலுத்தி அறிவுரைகள் பெற வேண்டும்.

ix. சரக நிர்வாகத்துறை நடுவர்களை சந்தித்து மரியாதை செலுத்தி அறிவுரைகள் பெற வேண்டும்.

SI_GUIDE.indb 1 1/6/2009 8:50:17 AM

பொதுவான காவல் நிலையப் பணிகள் (General Routine)

2. பட்டியல் வரிசை அழைப்பு (Roll call)

i. காலை 07.00 மணி முதல் 08.00 மணிவரையிலும் மாலை 17.00 மணி முதல் 18.00 மணி வரையிலும் வரிசை அழைப்பு நடத்தப்பட வேண்டும்.

ii. வரிசை அழைப்பு நடத்தும் முன் நிலைய கைதி அறை மற்ற அறைகள் மற்றும் காவல் நிலையத்தை சுற்றியுள்ள இடங்களை பார்வையிட்டு கைதிகள் மற்றும் தேவையற்ற, கணக்கில் இல்லாத பொருட்கள் ஏதேனும் உள்ளனவா என்பதை நேரடியாக கவனிக்க வேண்டும்.

iii. ஆளினர்களின் சீருடை, காலணி, முகச்சவரம், தலைமுடி ஆகியவைகளை சரிபார்க்க வேண்டும். குறைபாடிருந்தால் O.R. Register–ல் பதிவு செய்து ஆய்வாளர் முன்பு O.R. March செய்ய வேண்டும்.

iv. அந்தந்த கிழமைக்குரிய பாடம் போதிக்கப்படுதல் வேண்டும். (திங்கள் – புலனாய்வு வழக்குகள், செவ்வாய் – காவலர் பொதுமக்கள் தொடர்பு, புதன் – தலைமறைவு கெட்ட நடத்தைக்காரர்கள், வியாழன் – ஆயுதங்கள் சுத்தம் செய்தல், வெள்ளி – வாராந்திர கவாத்து, சனி – நிலையம் மற்றும் நிலைய சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல், ஞாயிறு – ஓய்வு)

v. நிலையத்தில் அன்றைய தினம் பாதுகாப்பு அனுப்பப்பட வேண்டிய நிகழ்வுகள், வழக்குகளில் கைது செய்யப்பட வேண்டிய எதிரிகள், நீதிமன்ற வழக்கு விபரங்கள், பிடியாணை நிலுவை மற்றும் மேலதிகாரிகளின் அறிவுரைகள் ஆகியவை பற்றி விளக்கி கூறவேண்டும். ஏற்கனவே வழக்குகளை கண்டுபிடிக்கும் தனி அலுவலில் உள்ள காவலர்கள் வழக்குகளில் செய்துள்ள விசாரணை முன்னேற்றம் பற்றிய விவரங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

vi. ஆளினர்களின் நோட்டுப்புத்தகத்தினை சரிபார்த்து கையெழுத்திட வேண்டும்.

vii. காவலர்களுக்கு அன்றையதின அலுவல் நியமித்து, அலுவல் விவரங்கள் தெரியப்படுத்த வேண்டும். காவலர்கள் அலுவல் விபரம் எழுதியவுடன் கையொப்பம் செய்ய வேண்டும்.

viii. மருத்துவ விடுப்பு, ஆஜரின்மை போன்ற விவரங்கள் பற்றி உயரலுவலர்கள் மூலமாக மாவட்ட காவல் அலுவலகத்திற்கு எழுத்துமூலமான அறிக்கை அனுப்ப வேண்டும்.

ix. மாலை 17.00 மணி வரிசை அழைப்பில் நிலைய ஆஜரில் உள்ள காவலர்கள், இரவு ரோந்து காவலர்கள் மற்றும் மருத்துவ விடுப்பில் புறநோயாளியாக உள்ள காவலர்கள் கலந்து கொண்ட விவரங்கள் எழுதப்பட வேண்டும்.

x. காவலர்கள் தனிப்பட்ட நோட்டுப்புத்தகம் பராமரிப்பதை சரிபார்த்து அதில் நிலைய கிராமங்கள், கெட்ட நடத்தைக்காரர்கள் விவரம் ஆகியவை குறிப்பிட்டிருக்கிறார்களா என்பதை சரிபார்க்க வேண்டும்.

3. பொது நாட்குறிப்பு

அத்தியாயம் II -ல் குறிப்பிட்டுள்ளது போல் பொது நாட்குறிப்பு பராமரிக்கப் பட வேண்டும்.

4. ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள் தணிக்கை

i. நிலைய துப்பாக்கிகள், கையிருப்பு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை நேரடியாக சரிபார்க்க வேண்டும். இதைப் பொது நாட்குறிப்பில் குறிப்பிட வேண்டும்.

ii. துப்பாக்கிகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

iii. நிலைய காவல் பணியில் உள்ள காவலரின் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் தவிர மற்ற துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் பாதுகாப்பாக பூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

5. தொடர் வண்டி மற்றும் பேருந்துப் பயணச்சீட்டுகள்

i. நிலைய எழுத்தர் பொறுப்பில் பூட்டப்பட்ட இடத்தில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.
ii. உரிய முறையில் வழங்கப்பட்டு பெற்றவரின் அத்தாட்சி பெறப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.
iii. கையிருப்பு கணக்கு சரியாக உள்ளதா என சரிபார்க்க வேண்டும்.
iv. உரிய அலுவலக முத்திரை மற்றும் அலுவலர் பதவி நிலை முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா என சரிபார்த்தல் வேண்டும்.
v. அலுவல் முடித்து நிலையம் திரும்பும்போது அடிக்கட்டையில் (Counter foil) பயண விவரங்களை தவறாமல் முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும். கடவுச்சீட்டுடன் பெற்று வரவு வைக்க வேண்டும்.

6. பணப் பதிவேடு

i. உதவி ஆய்வாளர் தன் கைப்பட பணப்புத்தகத்தினை நிர்வகித்தல் வேண்டும்.
ii. பணப்பரிமாற்றம் உள்ள நாட்களில் அதனை குறிப்பிட்டு, பணப்புத்தகத்தினை முடிவு செய்து ஆரம்பிக்க வேண்டும்.
iii. நிலுவை நிரந்தர முன்பணம் (Contingent Permanent Advance) குறித்த தனியான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.
iv. பணம் வரவு மற்றும் வழங்குகை குறித்த விவரம் பதிவு செய்யப்பட வேண்டும்.
v. பணப்புத்தகத்தினை முடிவு செய்கையில் கையெழுத்திடல் வேண்டும்.
vi. மாத முடிவில் நிலுவை கையிருப்பு தாளினை (Balance sheet) தயார் செய்தல் வேண்டும்.
vii. உயர் அலுவலர்கள் தணிக்கை செய்தால் அன்றைய தினம் முடிவு செய்து ஆரம்பிக்க வேண்டும்.

7. நிலைய சாதனங்களை பராமரித்தல்

i. நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள கணிப்பொறி, வீடியோ கேமரா, ஜெராக்ஸ் மிஷின், பேக்ஸ் ஃபோன், வான் தொலைபேசி போன்ற சாதனங்களை சுத்தம் செய்தல் வேண்டும்.
ii. அவை முறையான பராமரிப்பில் உள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.
iii. அவற்றில் பழுது ஏதேனும் இருப்பின் பழுது நீக்கிட ஆவண செய்ய வேண்டும்.
iv. காவல்துறை நவீன மயமாக்கல் (MPF) திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சாதனங்கள் குறித்து தனியான பதிவேடு ஒன்றினை நிர்வகிக்க வேண்டும்.

8. விடுப்பு வழங்குதல்

i. ஆளினர்களை விடுப்பில் அனுப்புகையில் விடுப்பு கடவுச்சீட்டு கொடுத்தனுப்ப வேண்டும்.
ii. கடவுச்சீட்டில் எந்த தேதியில் எப்போது பணிக்கு மீண்டும் அறிக்கை செய்ய வேண்டும் என்பதனை குறிப்பிட வேண்டும்.
iii. விடுப்பை நீட்டிக்க கூடாதென கடவுச்சீட்டில் குறிப்புரை எழுத வேண்டும்.
iv. நீண்ட விடுப்பு வழங்கும் போது உரிய விடுப்பாணை வழங்கப்பட்டுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.

v. பயணச்சலுகையுடன் கூடிய விடுப்பு வழங்கும்போது உரிய விடுப்பாணை வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும்.
vi. மருத்துவ விடுப்பு வழங்கும் போது விடுப்பிற்கான மருத்துவரின் பரிந்துரை உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும்.
vii. மருத்துவ விடுப்பில் இருந்து திரும்புகையில் மருத்துவரால் அளிக்கப்பட்ட பணித்தகுதி சான்று உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும்.
viii. ஆளினர்கள் நீண்ட விடுப்பு மற்றும் பயணச்சலுகையுடன் கூடிய விடுப்பில் சென்ற மற்றும் விடுப்பு முடிந்து திரும்பிய விவரத்தினை உடனுக்குடன் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்த வேண்டும்.
ix. விடுப்பு வழங்கும் போது நிலையத்தில் ஆஜரில் உள்ள காவல் ஆளினர்கள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

9. குடியிருப்புகள்

i. குடியிருப்புகளை ஆளினர்களுக்கு அவர்கள் நிலையத்தில் அறிக்கை செய்த முதுநிலை அடிப்படையில் (Seniority Basis) ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
ii. முதுநிலைப்படி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய ஆளினர் குடியிருப்பு தேவையில்லை என தெரிவிக்கும் போது எழுதி வாங்கிக் கொண்டு அடுத்த முதுநிலை ஆளினர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
iii. குடியிருப்பு வழங்குவதில் பாரபட்சம் காட்டக்கூடாது.
iv. குடியிருப்புகளை ஆளினர்கள் சரிவர சுத்தமான முறையில் பராமரிக்கின்றனரா என்பதனை அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும்.
v. குடியிருப்பின் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்ய ஆவன செய்ய வேண்டும்.
vi. குடியிருப்புகளில் கால்நடைகள் வளர்க்க அனுமதிக்ககூடாது.
vii. குடியிருப்புகளில் மின்சாரம், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் சரிவர உள்ளதா என கண்காணிக்க வேண்டும்.

10. சிறிய பணிப்புத்தகம் (Small Service Book)

i. மாற்றலில் அறிக்கை செய்யும் போது ஆளினர்களின் மேற்படி ஆவணங்களை பெற்று நிலைய எழுத்தர் பொறுப்பில் ஒப்புவிக்க வேண்டும்.
ii. சிறிய பணிப்புத்தகத்தில் ஆளினர் நிலைய பணிக்கு அறிக்கை செய்த நாள் மாற்றல் ஆணை விவரம், அவருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு, வெகுமதிகள், உடுப்பு பொருட்கள், நிலைய பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாள், மாற்றல் ஆணை பற்றிய விவரங்களை அவ்வப்போது பதிவு செய்ய வேண்டும்.

11. மருத்துவ சரித்திர தாள் (Medical History Sheet)

i. மருத்துவ சரித்திர தாளினை ஆளினர் பிணி அறிக்கை செய்து சிகிச்சைக்கு செல்லும் போது கொடுத்தனுப்ப வேண்டும். அவரது நோய் மற்றும் அதற்கான சிகிச்சை பற்றிய விவரங்கள் மருத்துவரால் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.
ii. ஆளினர்களை இரண்டாண்டிற்கு ஒரு முறை (Biennial) மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி தகுதிச்சான்று பெற்ற விவரம் அதில் மருத்துவரால் பதிவு செய்யப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.

12. பிழை குறியீட்டுத் தாள் (Defaulter Sheet)

i. பிழைக்குறியீட்டு தாளில் ஆளினர் பெற்ற தண்டனைக் குறிப்புகளை பதிவு செய்ய வேண்டும்.
ii. நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைகள் குறித்த விவரங்களை பென்சிலால் எழுதி உரிய காலக்கெடு முடிந்ததும் உத்தரவு பெற்று அதனை அழித்திடல் வேண்டும்.

13. நிலையப்பணியிலிருந்து மாற்றலில் விடுவிக்கப்படுதல்

i. பொது நாட்குறிப்பில் மாற்றல் ஆணை விபரம் குறிப்பிட்டு பணியிலிருந்து விடுவித்தல் பெற்ற விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.
ii. பணியிலிருந்து விடுபட்ட விபரம் குறித்து மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.
iii. நிலைய அலுவல் பதிவேட்டில் விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.
iv. நிலைய அரசு சொத்து பதிவேட்டில் பொறுப்பினை ஒப்புவித்த விபரத்தினை பதிவு செய்ய வேண்டும்.
v. பொறுப்பெடுத்தலுக்குரிய பட்டியல் தயார் செய்து பொறுப்பினை ஒப்புவிக்க வேண்டும்.

தினசரி

14. நிலைய அறிக்கை

i. உரிய படிவத்தில் தயார் செய்யப்பட வேண்டும்.
ii. ஆளினர்களின் அன்றைய தின பணி விவரங்கள் குறிக்கப்பட வேண்டும்.
iii. கால தாமதம் இன்றி வட்ட ஆய்வாளர் / துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலத்திற்கு மறுதினமே பொது நாட்குறிப்புடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

வாரந்தோறும்

15. வாராந்திர அறிக்கைகள்

i. கோரப்படும் அறிக்கைகளை உரிய படிவத்தில் கவனமாக தயார் செய்து அனுப்ப வேண்டும்.
ii. குறிப்பிட்ட கிழமைகளில் தவறாது அனுப்பி வைக்க வேண்டும்.

16. வாராந்திரக் கூட்டங்கள்

i. குறிப்பிட்ட கிழமைகளில் தவறாமல் உயரலுவலர்கள் கூட்டத்தில் கேட்கப்பட்ட விவரங்களுடன் வாராந்திர கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
ii. உயர் அலுவலர்களின் அறிவுரைகளை குறிப்பெடுத்து, தவறாமல் நிறைவேற்ற வேண்டும்.
iii. அறிவுரைகளை நிறைவேற்றியது குறித்து அறிக்கை அனுப்ப வேண்டும்.

17. வாராந்திரக் கவாத்து

i. குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் ஆஜராக வேண்டும்.
ii. ஆளினர்களின் சீருடை மிடுக்கினை சரிபார்த்து அவர்களை கவாத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

iii. Squad, Arms and Lathi Drill எடுக்க வேண்டும். தலைமைக் காவலர்களை கவாத்து எடுக்க வைத்து தவறுகளை திருத்த வேண்டும்.
iv. சிறு பிழை செய்தவர்களை உயர் அலுவலர்கள் ஒழுங்கு முறை அறையில் ஆஜர்படுத்த வேண்டும்.
v. ஒழுங்கு முறை அறையில் வழங்கப்படும் சிறு தண்டனைகளை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும்.
vi. குறைகள் உள்ள ஆளினர்களை உயர் அலுவலர்கள் முன் ஆஜர் செய்ய வேண்டும்.
vii. கவாத்திற்கு பின்னர் பொதுவான நடைமுறைகள் மற்றும் அறிவுரைகள் காவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

18. வாராந்திர ஓய்வு

i. ஆஜரிலுள்ள ஆளினர்களுக்கு குறிப்பிட்ட கிழமைகளில் வாராந்திர ஓய்வு அளிக்க வேண்டும்.
ii. அலுவல் நெருக்கடி காரணமாக வார ஓய்வு அளிக்கப்படாவிடில் அதற்கான மிகை நேர அலுவல் படி (ETR) வழங்கப்பட ஆவண செய்ய வேண்டும்.

19. நிலையம் மற்றும் நிலைய சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல்

i. சனிக்கிழமை தோறும் நிலையம் மற்றும் நிலைய சுற்றுப்புறங்களை ஆஜரிலுள்ள ஆளினர்கள் உதவியுடன் சுத்தம் செய்ய வேண்டும்.
ii. நிலைய ஆவணங்களை உரிய இடத்தில் சீராக அடுக்கி வைக்க வேண்டும்.
iii. நிலைய சொத்துக்கள் அறையினை சுத்தம் செய்து சொத்துக்களை சீராக வைக்க வேண்டும்.
iv. நிலைய சுற்றுப்புறங்களில் உள்ள தேவையற்ற புல் பூண்டுகளையும், குப்பை, கூளங்களையும் அகற்ற வேண்டும்.

20. இரு வாரங்களுக்கு ஒருமுறை அறிக்கைகள்

i. குறிப்பிட்ட தேதிகளில் கோரப்படும் அறிக்கைகளை தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும்.
ii. உரிய படிவத்தில் தயார் செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

21. கிராம விழிப்புணர்வுக் குழு கூட்டம்

i. இருவாரங்களுக்கொருமுறை தவறாமல் நடத்தப்பட வேண்டும்.
ii. சம்மந்தப்பட்ட கிராமங்களுக்கு சென்று கிராம விழிப்புணர்வு குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாட வேண்டும்.
iii. கிராமத்தில் நடைபெறும் குற்றங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்க வேண்டும்.
iv. கிராம மக்கள் தரப்பில் கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாதந்தோறும்

22. மாதாந்திரத் தொகுப்புகள்

i. அனைத்து பதிவேடுகளிலும், குறிப்பிட்ட படிவத்தில் தவறாமல் மாதாந்திர தொகுப்புகள் வரையப்பட வேண்டும்.

ii. தொகுப்புகளில் முழு விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அதன் கீழ் உதவி ஆய்வாளர் கையெழுத்திட வேண்டும்.

23. பயணப் படி பட்டியல்

i. மாதந்தோறும் 5–ம் தேதிக்குள் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
ii. உரிய கடவுச்சீட்டுகள் இணைத்தனுப்ப வேண்டும்.
iii. பயன்படுத்திய புகைவண்டி மற்றும் பேருந்து பயணச்சீட்டுகள் இணைத்து அனுப்ப வேண்டும்.
iv. பயணப்படி பட்டியலில் உதவி ஆய்வாளர் கையெழுத்திட வேண்டும்.
v. பயணப்படி பட்டியலில் ஆய்வாளர் உறுதி அளிக்கும் முறையில் மேற்கையொப்பம் இட வேண்டும்.
vi. பயணச்சீட்டு பட்டியல் (Abstract) இணைத்து அனுப்ப வேண்டும்.

24. மிகை நேர அலுவல் படி பட்டியல்

i. மாதந்தோறும் 5–ம் தேதிக்குள் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.
ii. உரிய படிவத்தில் தயார் செய்து உதவி ஆய்வாளர் கையெழுத்திட வேண்டும்.
iii. ஆய்வாளர் உறுதி அளிக்கும் முறையில் மேற்கையொப்பம் இட வேண்டும்.
iv. மிகை நேர அலுவல் முன் அறிவிப்பு அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும்.

25. மாதாந்திர அறிக்கைகள்

i. உரிய படிவத்தில் தயார் செய்யப்பட வேண்டும்.
ii. குறிப்பிட்ட தேதியில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
iii. உதவி ஆய்வாளர் கையெழுத்திடல் வேண்டும்.

26. மாதாந்திர குற்றக்கூட்டங்கள்

i. குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட இடத்தில் தவறாமல் ஆஜராக வேண்டும்.
ii. கோரப்படும் விவரங்களை கொண்டு செல்ல வேண்டும்.
iii. அறிவுரைகளை குறிப்பெடுத்துக்கொண்டு, கொடுக்கப்பட்ட அறிவுரைகளை நிறைவேற்றி அறிக்கை அனுப்ப வேண்டும்.

காலாண்டுதோறும்

27. வழக்குகள் தொகுப்பு

i. காலாண்டுக்கு ஒருமுறை தயார் செய்ய வேண்டும்.
ii. உரிய படிவத்தில் தயார் செய்ய வேண்டும்.
iii. அதன் பிரதிகளை துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும், மாவட்ட குற்ற ஆவணக்காப்பகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும்.
iv. காலாண்டின் முதல் வாரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

28. கிராமத் தணிக்கை

i. உதவி ஆய்வாளர் காலாண்டுக்கு ஒருமுறை நிலைய சரகத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் தவறாமல் தணிக்கை செய்ய வேண்டும்.
ii. தணிக்கை செய்த விவரங்களை கிராம பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
iii. கிராம பதிவேட்டில் காலாண்டுதொகுப்பு வரைய வேண்டும்.
iv. கிராமங்களை மறுபார்வையிட்ட விவரங்கள் குறிப்பிட வேண்டும்.
v. கிராமங்களில் இரவு தங்கிய விவரங்கள் குறிப்பிட வேண்டும்.
vi. கிராம பார்வையின் போது கிராம விழிப்புணர்வு குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தகவல்கள் சேகரிக்க வேண்டும்.

29. அரசு சொத்துக்களைப் பராமரித்தல்

i. அரசு சொத்து பதிவேட்டில் காலாண்டுக்கொருமுறை நடப்பில் உள்ளபடி சொத்துவிவரங்களை அடுத்த காலாண்டிற்கு எடுத்து பதிவு செய்ய வேண்டும்.
ii. காலாண்டு சான்றிதழ்கள் வரையப்பட வேண்டும்
iii. சான்றிதழில் உதவி ஆய்வாளர் கையெழுத்திட வேண்டும்.
iv. பதிவேட்டில் புதிதாக பெறப்பட்ட அரசு சொத்துக்கள் பற்றிய விவரம் பதிவு செய்யப்பட வேண்டும்.

அரையாண்டுக்கொருமுறை

30. துப்பாக்கி உரிமங்கள் தணிக்கை செய்தல்

i. நிலைய சரகத்தில் உள்ள துப்பாக்கி உரிமங்களில் ரிவால்வர் மற்றும் பிஸ்டல் தவிர மற்றவைகளை முறையே ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில், உதவி ஆய்வாளர் தணிக்கை செய்ய வேண்டும். ரிவால்வர்/பிஸ்டல் ஆகியவற்றை ஆய்வாளர் தணிக்கை செய்வார்.
ii. உரிமம் புதுப்பிக்கப்பட்டு நடப்பில் உள்ளதா என சரிபார்க்க வேண்டும்.
iii. உரிமத்தில் கண்டுள்ள விவரப்படி துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் சரியாக உள்ளதா என நேரடியாக சரிபார்க்க வேண்டும்.
iv. உரிமம் புதுப்பிக்கப்படாத துப்பாக்கிகளை பெற்று மாவட்ட ஆயுதக்கிடங்கின் வைப்பில் வைத்திருக்க ஆவண செய்ய வேண்டும்.

31. துப்பாக்கி உரிம பதிவேட்டினை ஒப்பிடுதல்

i. நிலைய துப்பாக்கி உரிம பதிவேட்டினை வட்டாட்சியர் அலுவலக பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து சான்று பெறவேண்டும்.
ii. துப்பாக்கி உரிமங்கள் புதுப்பிக்கப்பட்ட விவரத்தைச் சரிபார்க்க வேண்டும்.
iii. புதுப்பிக்கப்படாத துப்பாக்கி உரிமதாரர்களின் விபரங்களை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டுக்கொருமுறை

32. பாகம்–1 வருடாந்திரக் குற்றத்தொகுப்பு

i. உரிய படிவத்தில் பாகம்–1 வருடாந்திர குற்றத்தொகுப்பு தயார் செய்து அனுப்ப வேண்டும்.
ii. பழைய மற்றும் புதிய வடிவங்களில் தயார் செய்ய வேண்டும்.
iii. அடுத்து வரும் ஆண்டிற்கான குற்றத்தடுப்பு திட்டம் குறித்து விரிவாக குற்றத்தொகுப்பில் குறிப்பிட வேண்டும்.

33. வருடாந்திர நிர்வாக அறிக்கைகள்

i. கோரப்படும் நிர்வாக அறிக்கைகளை உரிய படிவங்களில் தயார் செய்ய வேண்டும்.
ii. மாவட்ட குற்ற ஆவண காப்பகத்திற்கு குறிப்பிட்ட தேதிகளில் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

34. வருடாந்திர துப்பாக்கி சுடும் பயிற்சி

i. ஆஜர் ஆளினர்களை குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட துப்பாக்கி சுடும் களத்தில் தவறாமல் ஆஜராகும்படி அனுப்பி வைக்க வேண்டும்.
ii. நிலைய கையிருப்பில் உள்ள குண்டு தோட்டாக்கள் மற்றும் ரவை தோட்டாக்களை பயிற்சியில் பயன்படுத்திட வேண்டும்.
iii. புதிய கையிருப்பை பெற்று நிலையத்தில் வைக்க வேண்டும்.
iv. நன்கு குறிப்பார்த்து சுட தெரிந்தவர்களை கண்டறிந்து பட்டியலிட வேண்டும்.

II. காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள்

1. பொது நாட்குறிப்பு

(காவல் நிலை ஆணை 706 மற்றும் 707 படிவம் எண் – 76)

i. நிலையத்தில் அன்றாட நடைமுறை குறித்த விபரங்களை பதிவு செய்யும் பதிவேடு ஆகும்.
ii. தினமும் காலை 07.00 மணிக்கு முடிக்கப்பட்டு அதே நாள் காலை 07.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும்.
iii. மலைப் பகுதி காவல் நிலையங்களில் 08.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மறுநாள் 08.00 மணிக்கு முடிக்கப்பட வேண்டும்.
iv. காலை பொது நாட்குறிப்பை துவங்குகையில் கையிருப்பு ஆயுதங்கள் மற்றும் குண்டு தோட்டாக்கள், புகை வண்டி மற்றும் பேருந்து பயணச்சீட்டு மற்றும் கையிருப்பு பணம் பற்றிய விவரங்களை தணிக்கை செய்து குறிப்பிடப்பட வேண்டும். அன்று வரிசை அழைப்பில் எடுக்கப்பட்ட வகுப்பு மற்றும் முக்கிய அறிவுரைகள் குறித்து குறிப்பெழுத வேண்டும்.
v. வரிசை அழைப்பு நடத்தப்பட்ட விவரங்களை குறிப்பிட வேண்டும்.
vi. காலை 08.00 மணிக்கு ஆளினர்களுக்கு அளிக்கப்பட்ட அலுவல் விவரங்களை குறிப்பிடப்பட வேண்டும்.
vii. மனுக்கள் பெறப்பட்ட விவரங்களை பெற்ற நேரம் மற்றும் தேதியுடன் பதிவு செய்ய வேண்டும்.
viii. வழக்கு பதிவு செய்த விவரங்களை தேதி, நேரம், எதிரிகள் கைது, பிணை மற்றும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிய விவரம் பதிவு செய்ய வேண்டும்.
ix. பதிவுகள் ஏதும் இல்லாவிட்டால் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை விசேஷம் ஏதும் இல்லை என குறிப்பு எழுத வேண்டும்.
x. ஒவ்வொரு பதிவின் முடிவிலும் பதிவு செய்தவர் முழு கையொப்பம் செய்து தனது பதவி நிலையை குறிப்பிட வேண்டும்.

SI_GUIDE.indb 11 1/6/2009 8:50:18 AM

xi. பொது நாட்குறிப்பை துவக்கி விவரங்கள் எழுதி பொறுப்பில் வைத்துள்ளவர், நிலையத்தைவிட்டு வெளி அலுவலில் செல்லும் போது அந்த விவரத்தை எழுதி பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப் படுகிறதோ அவரிடம் கையெழுத்து பெறவேண்டும்.

xii. வெளியலுவல் முடித்து நிலையம் திரும்புகையில் நிலையத்தில் இடைப்பட்ட நேரத்தில் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளை படித்து பார்த்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நிலையத்திலிருந்து புறப்பட்டது முதல் நிலையம் திரும்பும் வரை செய்த அலுவல் விவரங்களை பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.

xiii. இரவு மற்றும் பகல் ரோந்து அனுப்புகையில் அலுவல் செய்ய வேண்டிய விவரம், தணிக்கை செய்யப்படவேண்டிய நபர்கள் பற்றிய விவரங்கள் ஆகியவை விவரம் குறிப்பெழுத வேண்டும்.

xiv. வழக்கு விசாரணை அல்லது மனு விசாரணைக்கு யாரேனும் நிலையம் வந்தால், விசாரணை செய்த விபரம் / திருப்பி அனுப்பிய விபரம் பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்பட வேண்டும். வழிக்காவலில் கைதி உணவிற்கோ அல்லது கழிப்பிட வசதிக்காகவோ நிலையம் அழைத்து வரப்பட்டது மற்றும் திரும்ப சென்ற விபரம் குறிப்பெழுத வேண்டும்.

xv. அதே போல் ரோந்துப்பணி முடித்து வருகையில் அலுவல் புரிந்த விவரங்கள் தெளிவாக எழுத வேண்டும்.

xvi. பொதுநாட்குறிப்பு முடிக்கப்பட்டவுடன் நிலைய அறிக்கையுடன் (SHR) இணைத்து வட்ட ஆய்வாளர் / துணைக் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

xvii. பொது நாட்குறிப்பு புத்தகம் முடிந்ததும் தொகுதி (Volume) எண் மற்றும் எந்த தேதி முதல் எந்த தேதி வரை என்று குறிப்பிட்டு நிலைய ஆவண பதிவேட்டு அறையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

i. அடித்தல், திருத்தலுடன் எழுதுதல்.
ii. புரியாத வண்ணம் எழுதுதல்.
iii. பக்க எண்கள் குறிப்பிடாமல் எழுதுதல்.
iv. உடனுக்குடன் எழுதாமல் இருத்தல்.

காவல் நிலையம்

பெயர்: xxxxx

பொதுநாட்குறிப்பு

நாள் : _____

கிழமை: _____

காவல் நிலையம்

0700	இன்றைய பொதுநாட்குறிப்பு காவல் உதவி ஆய்வாளர் xxxx ஆகிய என்னால் ஆரம்பிக்கப்பட்டது.
-do-	அரசு சொத்துக்கள்:- பணம்(PA) ரூ. 5000/. . பஸ்வாரண்ட் எண் —— 70 ——. கிரயம் வாரண்ட் எண் —— 70 ——. 9mm பிஸ்டல் -2, ரோட்டா. 20, 410 மஸ்கட் -5, ரோட்டா. 50, .303 துப்பாக்கி. 5, ரோட்டா. 50, கம்ப்யூட்டர் -1, மானிட்டர் -1, ஸ்பீக்கர் -2, ஜெனரேட்டர் மெஷின் -1, பிரிண்டர் -1 ஆகியன சரிபார்க்கப்பட்டு கிடுப்பில் வைக்கப்பட்டது.
-do-	ஆஜர் பட்டியல் சரிபார்க்க காண் மற்றும் H.C.: XYZ, GRZ PC: ABC, PC: DEF ஆஜர். கீழ் அலுவலர்கள்:- அயல் பணியாக 2நா ஏ.கா ——, ஏனை அலுவல் ஏ.கா ——, C.L மு.நி.கா ——, காவலர் ——, EL மு.நி.கா ——, M.L ஏ.கா ——, விடுபோடு ஏ.கா —— ஆகியோர் சரிபார்க்கப்பட்டது
0800	ஆஜர் காவலர்களுக்கு அந்வரை வழங்கி ரோல்கால் முடிக்கப்பட்டது
-do-	ஏ.கா —— என்பவரை நிலைய எழுத்தராகவும், ஏ.கா —— என்பவரை நீதிமன்ற அலுவலுக்கும், ஏ.கா —— என்பவரை சம்மன் சார்பு செய்வதற்கும், மு.நி.கா —— என்பவரை சொத்து பொருள் பாதுகாப்பிற்கும் நியமிக்கப்பட்டது
-do-	ஏ.கா —— என்பவரை பாரா காவலராக நியமித்து மு.நி.கா —— என்பவர் நிலைவு செய்யப்பட்டது.
0820	காண் கேஸ் ஆரவு கு.எண் 50/08 u/s 307 IPC வழக்கு தொடர்பாக —— கைது செய்து சிறை வைத்தால் ஒ.ம் பொறுப்பை ஏ.கா —— வசம் ஒப்படைத்து கையெழுத்திடுகிறேன்
-do-	ஒ.ம். பொறுப்பை பெற்றுக்கொண்டேன். ஏ.கா ——.
0900	ஏ.கா —— ஆகிய காண் நிலைய பொறுப்பில் இருந்தபோது x என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த மனுவைப் பெற்று மனு இரசீது எண்: 25/08 வழங்கப்பட்டு உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏ.கா ——.
1100	பாராதுகாவலர் x சீருடை செய்யப்பட்டு, மு.நி.கா —— பாரா காவலுக்கு நியமிக்கப்பட்டது. ஏ.கா ——.
1105	சார்பு ஆய்வாளராகிய காண் நி.கு.எண்: 50/08 u/s 307 IPC விசாரணையை மேற்கொண்டு பகல் நேர ரோந்து பணியை முடிக்கும் குற்றம் நடவாமல் ஏதேனும் இயற்கை நிலையம் வந்து ஒ.ம் பொறுப்பை பெற்றுக்கொண்டேன்

காவல் நிலையம்

பெயர்: xxxxx

காவல் நிலையம்

பொதுநாட்குறிப்பு

நாள் : _____

கிழமை : _____

0700	இன்றைய பொதுநாட்குறிப்பு காவலர் 2ஆவி ஆய்வாளர் xxxx ஆகிய என்னால் ஆரம்பிக்கப்பட்டது.
-do-	அரசு சொத்துக்கள்:- பணம்(PA) ரூ. 5000/. பஸ்வாரண்ட் எண் —— To ——. கிராமங் வாரண்ட் எண் —— To ——. 9mm பிஸ்டல் -2, தோட்டா-20, 410 மஸ்கட் -5, தோட்டா-50, .303 துப்பாக்கி-5, தோட்டா-50, கம்ப்யூட்டர்-1, மானிட்டர்-1, ஸ்பீக்கர்-2, ஜெனரேட்டர் மெஷின்-1, பிரிண்டர்-1 ஆகியன சரிபார்க்கப்பட்டு கிடங்கில் வைக்கப்பட்டது.
-do-	ஆஜர் பட்டியல் சரிபார்க்க நான் மற்றும் H.Cs: XYZ, GRI PCs: ABC, PCs: DEF ஆஜர். கீழ் அதிகாரிகள்:- அமல் பணிமாக 2ஸ்ட் ஏ.கா ——, ஏனி அதிகாரி ஏ.கா ——, C.L மு.நி.கா ——, காவலர் ——, EL மு.நி.கா ——, M.L ஏ.கா ——, விடுமுறை ஏ.கா —— ஆகியோர் சரிபார்க்கப்பட்டது.
0800	ஆஜர் காவலர்களுக்கு அறிவுரை வழங்கி roll call முடிக்கப்பட்டது.
-do-	ஏ.கா — என்பவரை நிலைய எழுத்தராகவும், ஏ.கா — என்பவரை நீதிமன்ற அதிகாரியாகும், ஏ.கா — என்பவரை சம்மன் சார்பு செய்வதற்கும், மு.நி.கா — என்பவரை சொத்துப்பாதுகாப்பிற்கும் நியமிக்கப்பட்டது.
-do-	ஏ.கா — என்பவரை பாரா காவலராக நியமித்து மு.நி.கா — என்பவர் நிலைய செய்யப்படுது.
0820	நான் கேற்று கிராம மு.எண் 50/08 u/s 307 IPC வழக்கு தொடர்பாக —— கைதிற்கு செல்வதால் ஒ.ப பொறுப்பை ஏ.கா — வசம் ஒப்படைத்து வைக்கின்றேன்.
-do-	ஒ.ப. பொறுப்பை பெற்றுக்கொண்டேன். ஏ.கா —.
0900	ஏ.கா — ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, x என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த மனுவை பெற்று மனுநீதி எண்: 25/08 வழங்கப்பட்டு 2ஆவி ஆய்வாளர் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. ஏ.கா —.
1100	பாராகாவலர் x சிலை செய்யப்பட்டு, மு.நி.கா — பாரா காவலுக்கு நியமிக்கப்பட்டது. ஏ.கா —.
1105	சார்பு ஆய்வாளராகிய நான் கி.மு.எண்: 50/08 u/s 307 IPC விசாரணையை மேற்கொண்டு சுரேஷ் பணியை முடிக்கும் குற்றம் நடவாமல் தடுக்கும் இதுசமயம் நிலையம் வந்து ஒ.ப பொறுப்பை பெற்றுக்கொண்டேன்.

1110 மனு கிடைத்து எண் 25/08 சம்பந்தப்பட்ட எதிர் மனுதாரரை விசாரணைக்கு அழைத்து வர மு.நி.கா — எஸ்பவர் அனுப்பப்பட்டது. [illegible]

1245 காண் நிலைய பொறுப்பில் இருக்கும் போது — S/o — எஸ்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரைப் பெற்று நிலைய கு.எண் 51/08 u/s 341, 323 IPC இப்படி வழக்கு பதிவு செய்தேன். காயம்பட்ட வாதியை FIR நகல் மற்றும் மருத்துவ சான்றை கொடுத்து, மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தேன். [illegible]

1255 நிலைய கு.எண் 51/08 u/s 341, 323 IPC வழக்கு சம்பந்தமாக எதிர்களை தேடி த.கா — மற்றும் காவலர் — 2ன் கைது செய்கிறேன். த.உ பொறுப்பு நிலைய எழுத்தர் வசம் 2ன் [illegible]

-do- த.உ பொறுப்பு பெற்றுக்கொண்டேன். த.கா —.

1300 பாரா காவலர் x நிலை மாற்றப்பட்டு காவலர் — பாராவுக்கு நியமிக்கப்படுகிறது. த.கா —.

1500 விசேஷம் இல்லை. த.கா —.

1630 நிலையம் கு.எண்: 51/08 u/s 341, 323 வழக்கு சம்பந்தப்பட்ட எதிர்கள் X மற்றும் Y ஆகியோரை பஸ் நிலையம் மேற்பு கைது செய்தும், சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார்த்தும், பார்வை மகஜர் தயார்த்தும், காட்சிகளை விசாரணை செய்தும் பின்னர் புறப்பட்டு — என்று கிடைத்தில் பகல் ரோந்தை முடித்தை செய்தும், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிர்களுடன் இருவரையும் நிலையம் வரவு. [illegible]

1650 மேற்படி வழக்கில் எதிர்கள் குற்றவாளி ஒப்புக்கொண்டதன் பேரில் எதிர்களை பாரா காவலர் மேல் நீதிமன்ற பிணையை செய்து பின்னர் சரண்படி நிலை முதலில் பதிவு செய்து பாரா காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது. [illegible]

1655 மேற்படி வழக்கில் உள்ள எதிர்களை நிபந்தனை காவலாகி மற்றும் அனுதியுடன், மு.நி.கா — மற்றும் காவலர் — மேல் கைது வழக்காவலாக 15 நாட்கள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த கனம் J.M. நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. [illegible]

-do- நாள் மாலை நகர ரோந்து பணிக்கு மு.நி.கா — மற்றும் காவலருடன் மேற்கொண்ட த.உ பொறுப்பை த.கா — வசம் ஒப்படைத்து செல்கிறேன். [illegible]

-do- த.உ. பொறுப்பை பெற்றுக்கொண்டேன். த.கா —.

1700 அனுப்பட்டியல் சரிபார்க்கப்பட்டது, நிலைய எழுத்தராகிய நான், த.கா —, மு.நி.கா — ஆகிய. த.கா —.

1800 சோதனை முடிக்கப்பட்டது. த.கா X. பாராவில் நிலை மாற்று, மு.நி.கா — பாராவாக நியமிக்கப்பட்டார். த.கா —

-do- வான் மைக்கு மேல் கிடைத்த தகவலின் அடிப்படையில் 2வது ஆண்வாணர் 2ன் — கிழித்தும் என்று

1900 ரிட்டன் ஒருங்கு மாற்றத்தை நடத்திட வேண்டிய தகவலை 2ன்றுமாக 2வது ஆண்வாணருக்கு தெரிவித்தேன்.

2000 விசேஷம் இல்லை. த.கா.

-do- நகர மாலை ரோந்து பணிமேற்று பாரிட்ட எதிரும் நிலையம் வந்து த.உ பொறுப்பை பெற்றுக் கொண்டேன்.

பீட் காவலர்கள் த.கா — பீட் தகவலுடன் வரவு வைத்தும், காலச்சொறு த.கா — வரவு வைத்து [illegible]

நீதி மன்ற காவலர் — வரவு வைத்தும், சம்மன் சர்வீஸ் காவலர் — வரவு வைத்தும் நிலைய கிடேயில்

21000 வைக்கப்பட்டது. [illegible]

த.கா —, மு.நி.கா ஆகியோரை நம்பர் I பீட்டில் குற்றம் செய்யப்பட்டுள்ள கிடங்குகளிலும், த.கா —, காவல் — ஆகியோரை நம்பர் II பீட்டில் குற்றம் செய்யப்பட்டுள்ள கிடங்குகளிலும் இரவு நடவடிக்கை ரோந்தும், கைப்பட்டியை காரிகளை கண்காணித்தும் வர பீட் தகவல் கொடுத்து அனுப்பிவைக்கப்பட்டது. [illegible]

காவல் நிலையம் | பொதுநாட்குறிப்பு

காவல் நிலையம்

2200	நான் த.கா — மற்றும் மே.நி.கா — வுடன் இரவு ரோந்து செல்வதால் ஒ.உ பொறுப்பு த.கா — வசம் உள்ளது. அறிக.
-மு-	ஒ.உ பொறுப்பை பெற்றுக் கொண்டேன். த.கா —.
2300	விசேஷம் இல்லை. த.கா -
0100	விசேஷம் இல்லை. த.கா -
0300	வாகன தணிக்கை செய்ய வேண்டும் என்று தலைமை காவலர் மேல் உதவி ஆய்வாளருக்கு தெரிவிக்கப்பட்டது. மு.கா -
0500	விசேஷம் இல்லை. த.கா -
0650	நான் இரவு ரோந்து பணி மேற்கொண்டு நிலையம் வரவு. இரவு 2300 மணிக்கு GEAT 'I' காவலுக்கு — இடையில் தணிக்கை செய்ய ஆணை. 0200 மணிக்கு GEAT-II காவலுக்கு — இடையில் தணிக்கை செய்ய ஆணை, பின்னர் அப்பால் புறப்பட்டு 0300 மணிக்கு வாகன சோதனையின் அடிப்படையில் வாகன தணிக்கை செய்தும், நிலைய கு.எண்: 50/08 u/s 307 IPC வழக்கு தொடர்பு எதிரிகளுக்காக ரோந்து 'பணி' வைரமும், பின்னர் அப்பால் புறப்பட்டு 0350 மணி அளவில் — இடத்தில் சிறைபிடிக்கும் பகுதியாகவும், மேன்மேலும் பின் முழுமை பேசிய சுமுகம் இடுவதை கைது செய்தும் நிலைய கு.எண் 52/08 u/s 41(1) Cr.P.C படி வழக்கு பதிவு செய்தும், நீதிமன்றத்தில் செய்தும், கைதி பதிவு செய்தும் இதுவரையில் பணியை ஒப்படைக்கப்பட்டது. அறிக.
0700	இன்றைய பொது நாட்குறிப்பு முடிக்கப்பட்டது அறிக.

ABSTRACT

① CASES REGISTERED	- 2 (TWO)	ஒப்பம் xxxxx
② CSR ISSUED	- 1 (ONE)	சான்று ஆய்வாளர்
③ NBW PENDING	- 5 (FIVE)	சட்டம் ஒழுங்கு
④ ACCUSED ARRESTED/REMANDED	- 2 (TWO)	xxxx நா.நிலையம்
⑤ ACCUSED IN CUSTODY	- 2 (TWO)	

2. முதல் தகவல் அறிக்கைத் தொகுப்பு

இப்பதிவேட்டில் நிலைய சரகத்தில் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளின் விபரங்கள் தொகுக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

i. புதிய முதல் தகவல் அறிக்கை பதிவேடு துவக்கப்படும்போது நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த முழு விபரம் ஆரம்பத்தில் எழுதப்பட வேண்டும்.

ii. இதில் குற்ற எண், சட்டப்பிரிவு, குற்றம் நடந்த தேதி, பதிவு செய்த தேதி, வாதியின் பெயர் முகவரி, எதிரியின் பெயர் முகவரி, களவு போன மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட சொத்துக்களின் விபரம், வழக்கின் சுருக்கம், இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம், வழக்கின் முடிவு, குற்றம் நடந்த இடம் ஆகிய விபரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iii. வழக்கு பற்றிய முக்கிய விவரங்கள் சுருக்கமாக குறிப்புரைக்கான பகுதியில் பதிவு செய்யப்பட வேண்டும்.

iv. மாதாந்திர தொகுப்பு வரைய வேண்டும். நீதிமன்ற நிலுவையில் உள்ள வழக்குகள் அட்டவணையில் விவரமாக குறிப்பிட வேண்டும். முடிவுற்ற முதல் தகவல் அறிக்கை தொகுப்பு எண் (Volume Number) கொடுத்து பராமரிக்கப்பட்ட வேண்டும்.

v. வழக்கின் முடிவுகள், சம்மந்தப்பட்ட ஆண்டின் முதல் தகவல் அறிக்கை தொகுப்பில் குறிப்பிட வேண்டும்.

3. பாகம்–1 நிலைய குற்ற வரலாறு

(காவல் நிலை ஆணை 742–743 – படிவம் எண். 107)

இப்பதிவேட்டில் சொத்து சம்பந்தமான குற்றங்களில் உண்மையான வழக்குகள் உண்மை சம்பவப் பதிவேடு மற்றும் அதனை செய்ய முயற்சித்த வழக்குகள் ஆகியவற்றை பற்றிய விபரங்கள் காலக்கிரமப்படி (chronological

order) பதிவு செய்யப்படும். இது **6** கட்டங்களை உடையது. இது காவல் நிலையத்தின் நிரந்தரப்பதிவேடு ஆகும்.

i. இப்பதிவேட்டில் குற்ற எண், சட்டப்பிரிவு, குற்றம் நடந்த நாள், நேரம், இடம், வாதியின் பெயர், முகவரி, களவுபோன / கைப்பற்றப்பட்ட சொத்தின் விவரம் மற்றும் மதிப்பு, குற்ற செய்முறை, அக்குற்றம் பற்றிய பயனுள்ள தகவல்கள் எதிரியைக்கைது செய்த விபரம் மற்றும் வழக்கின் முடிவு ஆகிய விபரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் வழக்கில் எதிரி கையாண்டுள்ள குற்ற செய்முறைகளை **6**வது கட்டத்தில் விபரமாக குறிப்பிட வேண்டும்.

ii. தொடர்புடைய பதிவுகளை தொடர்புடைய பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும் (CROSS REFERENCE) எதிரி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த தேதி மற்றும் கைவிரல் ரேகை பதிவுக் கூட வரிசை எண் (FB Serial Number) குறிக்கப்பட வேண்டும்.

iii. அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்கள் அடியில் குறியிட்டு காட்டப்பட வேண்டும்.

iv. ஆண்டு முடிவில் ஆண்டுக்கான குற்றத்தொகுப்பு தயார் செய்ய வேண்டும். அதில் வரும் ஆண்டிற்கான குற்றத்தடுப்பு திட்டங்கள் குறித்து விவரமாகக் குறிப்பிட வேண்டும்.



Station Crime History (Part – 1) for

Crime number P.S. Section and date of offence.	Name of the Complainant	Village Number, Name, distance and direction	Value and nature of Property	Classification	Any Useful information respecting modus operandi, any discovery made during the investigation including the names of the known or suspected accused with grounds of suspicion and the result of the case.
274/06 u/s 379 IPC P/o 18.2.06 0900 SR 18.02.06 0930	xxxxxxxxx ஆண்/32 S/o xxxxxxxx முனிசாலைத்தெரு திண்டிவனம்	பஸ் நிலை எண்: 15 திண்டிவனம் பஸ் நிலையம் திண்டிவனம்	பணம் ரூ.30	IV (P)	[illegible]
	A2	NO REPORTS	A1		
	CLASS IV(P) LCI 137 PART I VOL 22 AND 12 GCR VOL V GCR AND 24 S.No 1930 C.MEMO 240/06 P.S.NO – SDR NO – A.INDEX 35 BWL EX.CP 20 S.NO	NO. [illegible] C.M. 28.06 CC. NO: 3364/06 XXIII [illegible] CONVICTION / [illegible] A1 AND FINE Rs. 500/- ON 28-10-2006.	CLASS IV-P LCI 136 PART I VOL 22 AND 12 GCR VOL V GCR AND 24 S.No 1267 C.MEMO 240/06 P.S.NO – SDR NO – A.INDEX 35 BWL EX.CP 20 S.NO		

4. பாகம்–2 குற்ற வரைபடம்

(காவல் நிலை ஆணை 744)

இது நிலைய சரகத்தில் நடந்த குற்றங்களையும், எல்லைக் காவல்நிலைய சரகத்தில் நடந்த குற்றங்களையும் காட்டும் வரைபடம் ஆகும்.

i. இதில் நிலைய சரகத்திலுள்ள கிராமங்கள், அதன் எல்லைகள், முதன்மையான, புவியியல் ரீதியிலான அமைப்புக்கள், எல்லைக்காவல் நிலையங்கள் ஆகியவை குறிக்கப்பட வேண்டும்.

ii. குற்ற நிகழ்வுகளை குற்ற செய்முறை வாரியாக தனித்தனி வண்ணத்தில் குறிப்பிட்டு குற்ற நிகழ்வு தேதியை உரிய இடத்தில் குறிப்பிட வேண்டும்.

iii. (உதாரணம் II(e) III (j))
12–05 12–7

iv. நிலைய சரகத்தின் எந்த பகுதியில் குற்றங்கள் பெருமளவில் நடைபெறுகிறது என்பதனைக் காட்டும் வகையில் இருத்தல் வேண்டும்.

v. நிலைய சரகத்திலுள்ள கிராமங்கள், நடைபெறும் முக்கிய திருவிழாக்கள், சந்தை கூடுமிடங்கள், பௌர்ணமி, அமாவாசை தினங்கள் பற்றிய குறிப்புகள் வரைய வேண்டும்.

vi. ரோந்து வாரியாக கிராமங்களைப் பிரித்து தனித்தனி வண்ணத்தில் வரைய வேண்டும்.

vii. சொத்து சம்மந்தப்பட்ட குற்றங்கள், விபத்துக்குற்றங்கள், மதுவிலக்கு குற்றங்கள் ஆகியவைகளுக்கு தனித்தனியாக வரைபடங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.



5. பாகம்–3 பொது தண்டனைப் பதிவேடு (GCR - General Conviction Register)

(காவல் நிலை ஆணை 745 – படிவம் எண். 116)

i. இப்பதிவேட்டில் நிலைய சரகத்தில் சொத்து சம்பந்தமான குற்றங்களில் ஈடுபட்டு தண்டனையடைந்தவர்களைப்பற்றிய விபரம், தண்டனைக்குறிப்புகள் பதிவு செய்யப்படும்.

ii. இதில்இ.த.ச.12மற்றும்17வது அத்தியாயங்களின்படி மூன்றாண்டுகள்மற்றும் அதற்கு மேல்தண்டனை விதிக்கத்தக்க குற்றங்களில் தண்டனையடைந்தவர்கள், இ.த.ச. பிரிவு 498(A) படி 489 – D–ன்படி தண்டனையடைந்தவர்கள் பிரிவு 109 மற்றும் 110 கு.வி.மு.ச–ன்படி நன்னடத்தைக்கான பிணையம் பெறப்பட்டவர்கள் மற்றும் பிரிவு 65 தமிழ்நாடு நகர காவல் சட்டத்தின்படி தண்டனையடைந்தவர்கள், வழக்கமாய் குற்றஞ்செய்யும் குற்றவாளிகள் தடை சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்கவர்கள், 1949–ம் ஆண்டின் தமிழ்நாடு வழக்கமான குற்றவாளிகள் கட்டுபாட்டு சட்டத்தின் இணைப்பில் கண்டுள்ள இதர அத்தியாயம் 16–ன் கீழ் வரும் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள். மேலும் இதே சட்டத்தின் பிரிவு 12–ன் கீழ் தண்டனை பெற்றவர்கள் மற்றும் 1955–ஆம் ஆண்டின் குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் ஆகியவர்களின் தண்டனை குறிப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iii. தண்டனையடைந்த நபரின் பெயர், வயது, விலாசம், உறவினர்கள் விபரம் தண்டனை விபரம், நீதிமன்றம், தண்டனை பெற்ற நாள், நீதிமன்ற வழக்கு எண் ஆகிய விபரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iv. சிறைக்கு அனுப்பப்பட்டால் எந்த சிறைக்கு அனுப்பப்பட்டார் எனும் விபரமும், சிறையிலிருந்து விடுதலையாகும் நாள் ஆகியவை பதிவு செய்யப்பட வேண்டும்.

v. கைவிரல் ரேகைக்கூட வரிசை எண் பெற்று பதிவு செய்ய வேண்டும்.

vi. தண்டனையடைந்த நபரை அடையாளம் காட்டத்தக்க இரு காவல் ஆளிநர்களின் விபரம் பதிவு செய்யப்பட வேண்டும்.

vii. வழக்கு குறித்த பதிவுகள் தொடர்புடைய மற்ற பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும் (Cross reference).

viii. இதர காவல் நிலைய சரகத்தைச்சேர்ந்த நபர்களின் தண்டனைக்குறிப்புகளை அந்த காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்து அக்காவல் நிலையப்பதிவேட்டில் தண்டனைக்குறிப்புகள் பதிவு செய்யப்பட்ட விபரம்தனைப் பெற்று பதிவு செய்ய வேண்டும்.

ix. அதேபோல் நமது காவல் நிலைய சரக நபர் வேறு காவல் நிலையத்தில் தண்டனை பெற்றிருந்தால் அந்த தண்டனை விபரம் தனை பெற்று நமது தண்டனை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

x. பொது தண்டனைப் பதிவேட்டில் பதியப் பெற்றுள்ள குற்றவாளிகளின் பெயர்களை அவர்களது கடைசி தண்டனை முடிந்த 10 ஆண்டு காலங்களுக்கு பிறகு இப்பதிவேட்டிலிருந்து நீக்கி விடலாம். ஆனால் இப்பதிவேட்டில் இடம் பெற்ற குற்றவாளி ஒருவருக்கு சரித்திர ஏடு துவக்கப் பட்டிருந்தால் அச்சரித்திர ஏடு முடிவு செய்யப்படும் வரை பெயரை நீக்கக்கூடாது. காலவரையறை முடிந்த குற்றவாளிகளின் பெயரினை காவல் ஆய்வாளர் நீக்க வேண்டும்

PART – III AND GENERAL CONVICTION REGISTER

Order Nos. 487 and 737

Number and Jail number	Name and age of convict and village	Parentage and caste, name and villages of relatives.	Place and date, Court and calendar number of conviction.	Offence, Station and number, nature and value of property, names of associates.	Punishment awarded and period of surveillance.	Place of crime, if committed outside village, complainant's name.	Number and names of two Police Officers to prove conviction. Date of return. Finger – Print Bureau serial number.	Remarks including the broad classification of crime committed by the criminal.
4440	xxxxxx 19	தந்தை: xxxxxx	வண்டி	J.M 2 COURT	CONVICTION.	–	(1) xxxxxxx	
	S/o xxxxxx தேவி-மகன்	தாய் : xxxxxx	J.M 2 - Court	வண்டி. P.S	TWO MONTHS		SUB-INSPECTOR	
	வண்டி கோயில்	தாய்வழி: xxxxxx	90/2004	400/2004			கோயில் Sq. P.S தீவிர	
			CH. 5.8.2004	U/s 380 IPC			(2) HC-117	F.P.B. S.NO: 12345678
				U/s 75 IPC			xxxxxx xxxxxx	Regn. No:
				மொத்த: 5 வருட				123456780123
				ஒழுக்க-10 Rs. 250/-				தே. 31.10.2004

CLASS IV (E)
LCZ 137
PART I VOL 32 P. NO: 12
GCR VOL
GCR. P.NO: 24 S. NO.
C. MEMO 400/04
P.S. NO –
S.B. NO –
A. INDEX 35
B. INL
EX C.P 20 S.NO: 3

6. பாகம்–4 கிராம சரித்திரப் பதிவேடு காவல் நிலை ஆணை–756 படிவம்–110

i. இப்பதிவேட்டில் காவல் நிலைய சரகத்தில் உள்ள கிராமங்களை பற்றிய விவரங்கள் பதிவு செய்து பராமரிக்கப்பட வேண்டும்.
ii. இப்பதிவேடு காவல் நிலையத்தில் நிரந்தரமாக பராமரிக்கப்பட வேண்டியதாகும்.
iii. இது 7 தாள்களை உடையதாகும்.
iv. Sheet No–1/ பொதுத்தகவல்
v. Sheet No–2/ குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்கள்
vi. Sheet No–3/ தகவல் கொடுப்பவர், படைக்கலம் மற்றும் வெடிபொருள் உரிமங்கள் பற்றிய தகவல்கள்.
vii. Sheet No–4/ கடைகள், திருவிழாக்கள்
viii. Sheet No–5/ அரசியல் கட்சிகள்
ix. Sheet No–6/ போக்கிரிகள்
x. Sheet No–7/ உரிமம் பெற்ற வாடகை வண்டிகள், உணவு விடுதிகள்
xi. இது காவல் ஆய்வாளரால் பராமரிக்கப்பட வேண்டும்.
xii. நிலைய சரகத்தில் உள்ள தாய் மற்றும் குக்கிராமங்களின் வரலாறு, முக்கிய இடங்கள் தொழிற்சாலைகள், பள்ளிகள், ஆலயங்கள் மற்றும் அனைத்து முக்கிய நிகழ்வுகள் பற்றி குறிப்பிட வேண்டும்.
xiii. ஒவ்வொரு கிராமத்தின் மக்கள் தொகை, முக்கிய நபர்களின் விபரங்கள், தேர்தல் சம்மந்தமான நிகழ்ச்சிகள், கொடுங்குற்ற நிகழ்வுகள், முக்கிய திருவிழாக்கள் மற்றும் சாதி பிரச்சனைகள் பற்றி குறிப்பிட வேண்டும்.

STATION CRIME HISTORY
PART IV
NOTES ON IMPORTANT EVENTS

DISTRICT: NAMAKKAL **STATION: NAMAKKAL TOWN**

I. Village : **BODINAYACKENPATTY**

Hamlets : **1. Kariaperumal pudur**
2. kombai

II. Area and Boundaries:

Area= 1973 acres 08 cents.
Boundaries:
North – Palayam village
South- Bodinayackenpatty mother village
East – Kolli hills
West – NH 7 main road.

III. Physical features :

This village has its boundaries as shown above. The total area is fertile in nature and the people mostly depend on agriculture. The foot hill area is prone to prohibition offences as there is abundance of raw materials. The hill area is having the heritage for herbs.

IV. Population: **Male: 1800** **Female: 1700** **Total: 3500**

(a)	Hindus	3400
	Major community	VANNIYARS
(b)	Muslims	10
(c)	Christians	15
(d)	Brahimins	6
(e)	Depressed class	69

Bodinayackenpatty. **Code No. (please refer to DCRB)**

Bodinayackenpatty village is located about 12 kms from Namakkal Taluk Police Station in East direction. The hamlet villages are Kariaperumalpudur and Kombai.

The total population is about 3500 of whom 95% are vanniyars and 5% are other communities. The mariamman festival is the major festival of the village. On Thursdays the weekly sandy will assemble during which a beat shall be marched to control the activities of the offenders.

This village people totally depend on agriculture. Only 2% of the village people go for the viewing factory as daily wages.

The nearest railway station is only at Namakkal 12 kms away from the village on the western side.

The sale of ID arrack is totally eradicated and the village people live in peace.

No communal clashes emerged so far All the community people live together peacefully.

7. பாகம்–5 கெட்ட நடத்தைக்காரர்களின் சரித்திரப் பதிவேடு

(காவல் நிலை ஆணை 746 படிவம் எண் 111)

இச்சரித்திர ஏடுகள் நிலைய சரகத்தை நிரந்தரமான அல்லது தற்காலிகமான வசிப்பிடமாக கொண்ட தொடர்ந்து குற்றங்களில் ஈடுபடும் நபர்களுக்கும், வழக்கமாய் திருட்டுச் சொத்து வாங்கும் நபர்களுக்கும் துவக்கப்ப்டடு பராமரிக்கப்பட வேண்டும்.

இது 9 தாள் (Sheet) களை கொண்டது

தாள் எண். 1– இதில் கெட்ட நடத்தைக்காரரின் பெயர், சாதி, தொழில் சொந்த இருப்பிடம், தந்தை பெயர், குற்ற செய்முறை (M.O.) ஆகியவைகள் குறிப்பிட வேண்டும்.

தாள் எண். 2– இதில் கெட்ட நடத்தைகாரரின் உயரம், உடல் அமைப்பு, வயது போன்றவற்றை குறிப்பிட வேண்டும்.

தாள் எண். 3– இப்பிரிவில் கெட்ட நடத்தைகாரரின் உறவினர்கள், வழக்கமாக செல்லும் இடங்கள் கெட்ட நடத்தைகாரரின் கூட்டாளிகள் பற்றிய விவரங்கள் குறிப்பிட வேண்டும்.

தாள் எண். 4– இப்பிரிவில் குற்ற செய்முறை (M.O) களவுப் பொருட்கள் பற்றிய விவரம், களவுப் பொருட்களை வாங்கியவர் பற்றிய விவரம் குறிப்பிட வேண்டும்.

தாள் எண். 5– இப்பிரிவில் கெட்ட நடத்தைக்காரரின் கடந்த கால கைது பற்றிய மற்றும் வழக்குகள் பற்றிய விவரங்களை குறிப்பிட வேண்டும்.

தாள் எண். 6– இப்பிரிவில் கெட்ட நடத்தைக்காரருக்கு தொடர்புடைய சந்தேகமான வழக்குகளின் விவரங்கள் குறிப்பிடவேண்டும்.

தாள் எண். 7– இப்பிரிவில் கெட்ட நடத்தைக்காரர்களின் முன் தண்டனைகன் பற்றிய விவரங்கள் குறிப்பிட வேண்டும்.

தாள் எண். 8– இப்பிரிவில் கெட்ட நடத்தைக்காரரின் தற்போதைய நடவடிக்கைகள் (Current doings) உபயோகமான தகவல் அடிப்படையில் எழுதப்பட வேண்டும். இவை தவிர ஏதாவது தேவையான தகவல் இருந்தால் உடனுக்குடன் பதிவு செய்து வைக்க வேண்டும்.

தாள் எண். 9– இப்பிரிவில் கெட்ட நடத்தைக்காரர்களின் நிழற்படங்கள் 5 கோணங்களில் (1. இடது பக்க முகம் மட்டும், 2. வலது பக்க முகம் மட்டும், 3. முழு முகம் மட்டும், 4. முழு உயரம் மட்டும், 5. தோள், தலை மட்டும்) எடுத்து வைக்க வேண்டும். ஒவ்வொரு குற்றவாளியின் நிழற்படமும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும். மேலும், அவர்களின் கைரேகை பதிவுகள் எடுத்து வைக்க வேண்டும்.

சரித்திர பதிவேட்டின் குறிப்புக்களை உதவி ஆய்வாளர் தணிக்கை செய்து ஆண்டு இறுதியில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு சரித்திர பதிவேட்டினை தொடர்ந்து பராமரிக்கவோ (அ) முடிக்கவோ உத்தரவு பெற காவல் ஆய்வாளர் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

சரித்திர பதிவேடுகளில் கெட்ட நடத்தைக்காரருக்கு சாதகமான குறிப்புக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை இப்பகுதியில் பதிவு செய்ய வேண்டும்.

1. K.D.(Known Depredator) ஊரறிந்த குற்றவாளி/தெரிந்த குற்றவாளி

i. இந்திய தண்டனை சட்டம் 12 மற்றும் 17 அத்தியாயங்களின் ஏதாவது ஒரு பிரிவின் ஆயுள்தண்டனை பெற்று விடுதலை ஆனவர்கள்.
ii. வழக்கமாக நஞ்சு கலப்பவர்கள்.
iii. பிரிவு 395 முதல் 402 வரையிலான இ.த.ச. பிரிவுகள் கீழ் ஒரு முறை தண்டனை அடைந்தவர்கள்.
iv. பிரிவு 392 முதல் 394 வரையிலான இ.த.ச. பிரிவுகள் மற்றும் பிரிவு 75 இ.த.ச.வின்படி இரண்டு முறை தண்டனை பெற்றவர்கள்
v. கன்னக்களவு வழக்குகளில் இரண்டு முறை தண்டனை பெற்றவர்கள்.
vi. திருட்டு வழக்குகளில் மூன்று முறை தண்டனை பெற்றவர்கள்.
vii. பிரிவு 109 கு.வி.மு.ச.–ல் இரண்டு முறை கடப்பாட்டு ஆவணங்கள் (Bound over) இயற்றியவர்.
viii. பிரிவு 110 கு.வி.மு.ச.–வில் ஒருமுறை கடப்பாட்டு ஆவணங்கள் (Bound over) இயற்றியவர் ஆகியோர் ஊரறிந்த குற்றவாளி என அழைக்கப்படுவார்.

மேற்படி நபர்களுக்கு காவல் நிலைய பொறுப்பு அதிகாரி தன்னிச்சையாகவே சரித்திர பதிவேடு ஆரம்பிக்க வேண்டும். சரித்திர பதிவேடு ஆரம்பிக்கபட்டவுடன் நிலைய சரித்திர பதிவேடு அட்டவணை (H.S. Index)–ல் வரிசை எண் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

II.(Dossier Criminal)

அட்டவனை/கைச்சுவடி குற்றவாளி ஒரு காவல் உட்கோட்ட எல்லைக்கு அப்பால் சென்று குற்றங்கள் புரியவர்.

இவர்களின் சரித்திர பதிவேடு படிவம் 124–ல் ஆரம்பிக்கப்பட வேண்டும். சில அடிப்படை காரணங்களுக்காகவும், காவல் துணை கண்காணிப்பாளர் மூலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அனுமதி பெற்று சரித்திர பதிவேடு ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சரித்திர பதிவேட்டிற்கும் குற்றவாளி எண் கொடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய சரித்திர ஏடுகள் நிலையத்திலும், மாவட்ட குற்ற ஆவண காப்பகத்திலும் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

III.H.O. (Habitual Offender) வழக்கமான குற்றவாளி

வழக்கமாக களவு போன்ற குற்றம்புரிவதையே தொழிலாக கொண்டவர்கள் H.O. என்று அழைக்கப்படுவார். இவர்களின் சரித்திரப் பதிவேட்டினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் உத்தரவுப் பெற்று ஆரம்பித்தல் வேண்டும்.

Maintained. Periodical abstracts have been drawn. There are 13 cases (L&O -11 and Crime - 2) under investigation and 100 cases (L&O - 66 and Crime - 34) are under PT as on date and case diaries are available.

h) Cash book:

Maintained. Checked and found cash balance of Rs.3650/- to be correct. Instructed to maintain separate cash books for regular cash and permanent advance.

14) Parade:

Sub Inspector of Police Tr.M.Selvarasu presented 9 other ranks. The turn-out was good. I awarded GSE for HCs 192, 331, 390, 496, 759 and PCs 1214, 1329, 1394 and 1400.

The Sub Inspector of Police conducted squad drill, Arms drill and Lathi drill. He knew his words of command and delivery was satisfactory. The standard of the men was good in squad drill and Arms drill. More practice is required in Lathie drill.

15) Kit Inspection :

Kit were laid out neatly. There was no shortage. Spoke to the men. They had no request to make.

16) General:

This station is functioning satisfacrily.

Dy. Inspector General of Police
Kancheepuram Range

To

The Superior Officers Visiting Book of Kalpakkam PS.

Copy to the Director General of Police, Law & Order, Chennai - 4.
Copy to the Addl. Director General of Police, Law & Order, Chennai - 4.
Copy to the Inspector General of Police, North Zone, Chennai -16.
Copy to the Superintendent of Police, Kancheepuram District.
Copy to the Senior Administrative Officer, Kancheepuram Range.

III. புலன் விசாரணை

1. மருத்துவமனைத் தகவல்

- மருத்துவமனைத் தகவல் என்பது (Hospital Intimation) காயம்பட்ட / பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்திருப்பது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு மருத்துவமனையில் இருந்து – நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ அல்லது புறக்காவல் நிலைய வான்தந்தி மூலமோ (VHF) அல்லது தபால் மூலமோ கொடுக்கப்படும் தகவல் ஆகும்.

மருத்துவமனை தகவல் – படிவத்தில் நோயாளியின்

i. பெயர், வயது, பாலினம்.
ii. முகவரி
iii. யாரால் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டார் மற்றும் தேதி, நேரம்.
iv. காயம் மற்றும் விபத்து நடைபெற்ற இடம்
v. காயத்தின் தன்மை
vi. காயத்திற்கான காரணம் / எவ்வாறு ஏற்பட்டது.
vii. சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட வார்டு
viii. மரண வாக்குமூலம் தேவையா / இல்லையா

வரிசை எண். 7 ல் காயம் பட்ட நபர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளாரா அல்லது வேறு மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறாரா அல்லது இறந்து போய்விட்டாரா மற்றும் சிகிச்சையிலிருந்து தலைமறைவு (Absconding) ஆகிவிட்டாரா என்ற விபரங்கள் இருக்கும்.

மரண வாக்குமூலம் பெற வேண்டியிருப்பின் நீதிமன்ற நடுவர் அவர்களுக்கும் தகவல் தெரிவிக்கப் படும்.

- **(மருத்துவத்துறை படிவம் எண். I – 26 இணைக்கப்பட்டுள்ளது).**

இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 62 – ன்படி மருத்துவமனைத் தகவலை சாட்சியமாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

SI_GUIDE.indb 99 1/6/2009 8:51:25 AM

மருத்துவமனை தகவல் பெற்றவுடன் காவல் அலுவலர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

i. மேற்படி தகவல் பெற்ற தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு மருத்துவமனைத் தகவலில் கையொப்பம் செய்ய வேண்டும். (பெயர், பதவி, எண் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.)

ii. மேற்படி தகவல் பெற்ற விபரத்தை நிலையப் பொது நாட்குறிப்பில் உடனே பதிவு செய்ய வேண்டும்.

iii. உடனடியாக நிலையப் பொறுப்பில் உள்ள காவல் அலுவலர் மருத்துவமனைக்குச் சென்று விபத்துப் பதிவேடு (Accident Register) நகல் பெற்று அதில் நோயாளி கூறியுள்ள விபரங்களை படித்துப் பார்த்து சம்மந்தப்பட்ட நோயாளியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் படித்துக் காட்டி கையொப்பம் பெற வேண்டும். அதன் கீழ் பதிவு செய்யப்பட்ட இடம், தேதி, நேரம் குறிப்பிட்டு பதிவு செய்த அதிகாரி கையொப்பம் செய்ய வேண்டும்.

iv. ஒரு வேளை நோயாளி சுயநினைவு இல்லாமல் இருந்தால், அவரைச் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தவர் / உடனிருப்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும். (இவ்வாறு செய்யும் போது பணி மருத்துவ அலுவலர் (Duty Medical Officer) அவர்களிடம் அந்த வாக்கு மூலத்தில் நோயாளியின் அப்போதைய நிலை குறித்து தெளிவாக எழுதிப் பெற வேண்டும்) (like - Whether the patient conscious or unconscious / oriented well or not etc)

v. மாறாக நோயாளி சுயநினைவின்றி இருக்கும்போதும் அவரை சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தவர்கள் யாரும் இல்லாத நிலையிலும், புற நோயாளியாக (Out Patient) சென்றிருந்தாலும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்து, சம்பவ இடம் சென்று விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vi. காவல் நிலையம் வந்த பின்னர் வாக்குமூலத்தில் கூறியுள்ள புகார் பிடிக்க கூடிய குற்றமாக இருந்தால் மட்டும் முதல் தகவல் அறிக்கை குற்ற எண், சட்டப்பிரிவு, வழக்குப் பதிவு செய்யும் தேதி, நேரம் ஆகியவற்றை வழக்குப் பதிவு செய்யும் அலுவலர் எழுதி கையொப்பம் செய்ய வேண்டும்.

vii. புகார் வாக்குமூலம் பதிவு செய்யும்போதும், எழுத்துமூலமான புகார் பெறப்படும்போதும் புகார்தாரர் சம்பவம் குறித்து ஆஜர்படுத்தும் சொத்துக்களை மகஜரில் / படிவம் 95 ல் கைப்பற்ற வேண்டும். இந்தத் தகவலைப் புகாரில் குறிப்பிட வேண்டும்.

viii. இறந்த பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படும் பிரேதம் தொடர் புடைய வழக்குகளில் கூடுமான வரை இறந்தவர்களின் உறவினர்களிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.

ix. திருமணம் ஆகி 7 ஆண்டுகளுக்குள் இறந்துவிடும் பெண்கள் தொடர்பான வழக்குகளில் முடிந்தவரை இறந்துபோன பெண்ணின் பெற்றோரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.

x. மருத்துவமனை தகவல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும். பிடிக்கக் கூடாத குற்றமாக இருந்தால் கு.வி.மு.ச. பிரிவு 155 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

xi. மருத்துவமனை தகவல் காவல் நிலையத்திற்கு பெறும் முன்னரே அந்த ஒரு சம்பவம் குறித்து ஏற்கனவே வழக்கு பதிவு செய்திருப்பின், அதன் பின் பெற்ற அந்த சம்பவதகவலின் தேதி, நேரம் குறிப்பிட்டு ஏற்கனவே வழக்கு பதிவு செய்த விபரங்களை எழுதி அந்த தகவலினைக் கட்டாயம் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும்.

சட்டப்பிரிவு 62 இந்திய சாட்சியச் சட்டம் : (முதல்தர ஆவணம்) முதல்தர ஆவணம்என்பது நீதிமன்றத்தின் ஆய்வுக்காகத் தாக்கல் செய்யப்படும் ஆவணம் என்றே பொருள்படும்.

சட்டப்பிரிவு 155 கு.வி.மு.ச கைது செய்தற்குரியதல்லாத வழக்குகள் பற்றித் தகவல் கொடுத்தலும் அத்தகைய வழக்குகளைப் புலனாய்வு செய்தலும்: –

i. காவல்நிலையப் பொறுப்பு அலுவலரின் எல்லைக்குள் கைது செய்தற்குரியதல்லாத குற்றமொன்று செய்யப்பட்டிருப்பது பற்றி அவருக்குத் தகவல் கொடுக்கப்படும்போது, அவர் அந்தத் தகவலின்

சாராம்சத்தை மாநில அரசு இதற்கென வடிவமைத்துள்ள படிவத்தில், தாம் வைத்து வரவேண்டிய ஒரு குறிப்பேட்டில் **(STATION GENERAL DIARY)** பதிவு செய்து, அல்லது செய்வித்து, தகவல் கொடுத்தவரை நடுவரிடம் சாட்டி விடவேண்டும்.

ii. கைது செய்தற்குரியதல்லாத வழக்கொன்றை விசாரணை செய்யவோ. அவ்வழக்கை மேல் விசாரணைக்கனுப்பி வைக்கவோ, அதிகாரம் கொண்டுள்ள நடுவரொருவரின் கட்டளையின்றி, காவல் அலுவலர் எவரும் அத்தகைய வழக்கைப் புலனாய்வு செய்தல் ஆகாது.

iii. அத்தகைய கட்டளையைப் பெறுகின்ற காவல் அலுவலர் எவரும், புலனாய்வு சம்பந்தமாக, காவல் நிலைய பொறுப்பு அலுவலர் ஒருவர் கைது செய்தற்குரிய வழக்கில் செலுத்தக்கூடிய (பிடிகட்டளையில்லாமல் கைது செய்யும் அதிகாரம் தவிர) அதே அதிகாரங்களைச் செலுத்தலாம்.

iv. ஒரு வழக்கு, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குற்றங்களைப் பற்றியதாயிருந்து, அவற்றில் குறைந்தது ஒன்றேனும் கைது செய்தற்குரிய குற்றமாக இருக்குமிடத்து, பிற குற்றங்கள் கைது செய்தற்குரியதல்லாத குற்றங்களாக இருந்தாலும் கூட அவ்வழக்கு கைது செய்தற்குரிய வழக்காகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. மருத்துவமனை தகவல் புகாருக்கும், வாக்குமூலப் புகாருக்கும் முரண்பாடு இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.	புகார் கிடைத்தவுடன் காலதாமதம் செய்தல்.
2. தகவலினை புகாருடன் சேர்த்து நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்,	தகவலின் நகலை வழக்குக்கோப்பில் வைத்தல்
3. முடிந்தவரை புகார்தாரரிடமிருந்து எழுத்துமூல மான புகார் பெற வேண்டும்.	



ACCIDENTS AND INJURIES MEDL : 1-26

INTIMATION TO POLICE

Patients name xxxxxx ஏ/மெ xxxxx Age : 40 Sex ஆண்

Address Street மெயின் ரோடு Village : வாசிம் Town : கடலூர் Door No:

Brought by : xxxxxx ஏ/மெ xxxxxx

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல்

154 கு.வி.மு.ச மற்றும் காவல் நிலை ஆணை எண் 551 (சாதாரண முதல் தகவல் அறிக்கை) 555 (பாரி குற்றம்) (காவல் துறை படிவம் எண் 59) கீழ் அதிகாரம் அளிக்கிறது.

குற்ற விசாரணைமுறைச் சட்டத்தில் முதலாவதாக இணைப்புப் பட்டியலின்படியோ, அவ்வப்போது அமலில் உள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ (Schedule – 1) பிடி ஆணை இன்றி கைது செய்யக் கூடிய குற்றங்கள் –

1. பிடிக்கக்கூடிய புகார்பற்றிய தகவல் காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு வாய் மொழியாக கொடுக்கப்பட்டதை எழுத்து மூலமாகப் பதிவு செய்து அவருக்குப் படித்துக் காண்பித்து அவரது கையொப்பம் பெற்ற புகார் அல்லது எழுத்து மூலமாகவோ அல்லது தபால் / தந்தி மூலமாகவோ கிடைக்கப்பெற்றால் அந்த தகவலை 6 பிரதி முதல் தகவல் அறிக்கையாகப் பதிவு செய்ய வேண்டும்.

2. முதல் தகவல் அறிக்கையின் கட்டம் 14 ல் வாதியிடம் கையொப்பம் பெற வேண்டும்.

3. அதில் அசல், முதல் தகவல் அறிக்கையுடன் அந்தப் புகாரை இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், 2 வது நகலை நிலைய கோப்பிலும், 3 வது நகலை ஆய்வாளர் அலுவலகம் மூலமாக காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கும், 4 வது நகலை மாவட்ட / மாநகரக் குற்றப் பதிவேடுகள் கூடத்திற்கும், 5 வது நகலை இலவசமாக புகார் கொடுத்தவருக்கும் கொடுக்க வேண்டும். **(154 (2) குவிமுச)** 6 வது நகலை நிலைய அடிக்கட்டையில் (Station counterfoil) வைக்கவேண்டும்.

a) முதல் தகவல் அறிக்கை 15 கட்டங்களை உள்ளடக்கியதாகும். அதில்

i. காலம் 3 (A) ல் சம்பவ தேதியும், நேரமும் சரியாகத் தெரியாத போது எந்த தேதியிலிருந்து எந்த தேதிக்குள் ணமற்றும் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணிக்குள் என்று தனித்தனியாக குறிப்பிடல் வேண்டும்.

ii. கட்டம் 8 ல் முதல் தகவல் அறிக்கையின் கால தாமதத்திற்கு உரிய காரணத்தை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

iii. பாரிக் குற்றம் (Express FIR) கொலை, மரணம் விளைவிக்கும் குற்றம், கூட்டுக் கொள்ளை, கொள்ளை, கன்னக்களவு வழக்குகளில் ரூபாய் 35000/– க்கு மேலும் சாதாரண திருட்டு வழக்குகளில் ரூபாய் 50,000/– க்கு மேலும் திருடப்பட்ட வழக்குகள், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய கடுமையான கலவரம், பிச்சை எடுக்க வைக்கும் பொருட்டு குழந்தைகளை கடத்துதல், ஆதி திராவிடர்களுக்கு எதிராக விளைவித்திடும் வன்கொடுமை குற்றங்கள், தனித் தன்மையான கொடிய குற்றங்கள் போன்ற வழக்குகளில் (Grave Cases) (PSO – 555) முதல் தகவல் அறிக்கையின் தலைப்பில் சிவப்பு மையினால் EXPRESS FIR என்று குறிப்பிட்டு நீதிமன்றத்திற்கும், இதர உயரதிகாரிகளுக்கும் துரித தபாலில் தனிக் காவலர் மூலம் காலதாமதமின்றி அனுப்ப வேண்டும்.

iv. FIR பதிவு செய்ததைப் பற்றி பதிவு நேரம் மற்றும் தன்மை குறித்து நிலைய பொதுநாட்குறிப்பில் (Station General Diary) வழக்கை பதிவு செய்யும் அலுவலரால் குறிக்கப்படல் வேண்டும்.

v. வழக்குப் பதிவு செய்யும் அலுவலர், புலன் விசாரணை அலுவலர் ஆகியோரைப் பற்றியும் பதவி, எண், பெயர் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

vi. வாக்குமூலம்/ புகார் இவைகளுடன் முதல் தகவல் அறிக்கை எந்த நீதிமன்றத்திற்கு எப்பொழுது அனுப்பப்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்பட வேண்டும்.

vii. கீழே கண்டுள்ளவாறு குறிப்பிட்டுள்ள இடத்திற்கு அசல் முதல் தகவல் அறிக்கைகள் அனுப்பப்படல் வேண்டும்.

- 174 குவிமுச வழக்குகள் (சாதாரண வழக்குகள்) – அசல் பிரதி வருவாய் வட்டாட்சியர்.

- திருமணமாகி 7 வருடங்களுக்குள் பெண் மரணம் – அசல் பிரதி முதல் தகவல் அறிக்கையை கோட்ட வருவாய் அலுவலருக்கும் – (பிரேத விசாரணை அலுவலர் – வருவாய் கோட்டாட்சியர்) புலன் விசாரணை அலுவலர் – காவல் துணைக் கண்காணிப்பாளர்.
- 174 குவிமுச வழக்குகள் (சந்தேக மரணம்) – அசல் பிரதி சம்பந்தப்பட்ட நீதிமன்றம், புலன் விசாரணை – காவல் ஆய்வாளர்.
- 304 (B) இதச வழக்குகள் – அசல் பிரதி நீதிமன்றம் – நகல் கோட்ட வருவாய் அலுவலர் அவர்கள். புலன் விசாரணை அலுவலர் – காவல் துணைக் கண்காணிப்பாளர்
- SC/ST Act Cases – அசல் பிரதி – நீதிமன்றம் – புலன் விசாரணை அலுவலர் – காவல் துணைக் கண்காணிப்பாளர்.

viii. பிடிக்கக்கூடாத குற்றங்கள் பற்றிய புகார்கள் பெறப்படும்போது அந்தப் புகாரை நிலையப் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் **155 (4) குவிமுச** மற்றும் காவல் நிலை ஆணைகள் **561** ன் படியும் நீதிமன்ற ஆணை பெற்றுத்தான் நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும்.

ix. வழக்குகள் தாக்கலாகும் போது, குற்ற சம்பவ இடம் குறித்து இரண்டு காவல் நிலையங்களுக்கிடையேயான எல்லை குறித்து சந்தேகம் ஏற்படும்போது முதலில் தாக்கலாகும் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படல் வேண்டும் (காவல் நிலை ஆணைகள் எண் **559**) முதல் புலன் விசாரணை மேற்கொண்டு அதனை சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு பொதுக்குறிப்பானையுடன் தனிக்காவலர் மூலம் உரிய காவல் நிலையத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற்று அந்த காவல் நிலைய குற்ற எண் விபரங்களை நிலையத்தில் உள்ள counterfoil ல் ஒட்ட வேண்டும்.

- பாதிக்கப்பட்ட பெண் கற்பழிக்கப்பட்டிருப்பதாக தெரியவந்தால் அந்தப் பெண்ணை நீதிமன்றத்தின் மூலமாக மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.
- அந்தப் பெண் **18** வயது நிரம்பாத இளம்வயது பெண்ணாக இருப்பின் (Minor) அவருக்கு வயது சம்மந்தமாக சான்றிதழ் பெற, நீதிமன்றம் மூலமாக கதிர் இயக்க நிபுணர் (Radiologist) அவர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.
- அவ்வாறான வழக்குகளில் ஆணும், பெண்ணும் ஒரு இடத்தில் தங்கியிருந்து குற்றம் செய்யப்பட்டிருந்தால் அப்படி அவர்கள் தங்கிய வீடு / இடத்தின் உரிமையாளரை / பொறுப்பாளரை விசாரித்து வாக்குமூலம் பெறப்படவேண்டும்.

x. பொய்யாகப் புனையப்பட்ட ஆவணங்களின் வழக்குகளில் சாட்சிகள் மற்றும் எதிரிகள் கையெழுத்துகளை ஒப்பிட்டு சரிபார்க்க கையெழுத்து நிபுணருக்கு அறிக்கை அனுப்பி அறிக்கை பெற வேண்டும். அந்தக் கையெழுத்துக்களை எப்படி பெற வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

xi. காவல் மீறல் பற்றி (Police Excess) புகார் இருப்பின் PSO **151** ன்படி உரிய சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து கோட்ட வருவாய் அலுவலர் அவர்களது புலன் விசாரணைக்கு அனுப்ப வேண்டும்.

சட்டப்பிரிவு 154 குவிமுச– கைது செய்வற்குரிய வழக்குகளில் தகவல் கொடுத்தல் –

(2) (1) வது உட்பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட நகலொன்று தகவல் கொடுத்தவருக்கு இலவசமாக உடனடியாகக் கொடுக்கப்படவேண்டும்.

***PSO* 551 – <u>முதல் தகவல் அறிக்கையில் கீழ்க்கண்ட குற்றங்கள் சம்பந்தமாக வழக்குகள் பதிவு செய்யலாம்.</u>**

ஒரு காவல் நிலையத்தில் அடியிற்கண்ட தலைப்புகளில் எதன் கீழேனும் வரும் செய்தியை பெற்றுக்கொள்ளும் போது, அதனை, குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு, பிரிவு 154 – ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள புத்தகமாகிய முதல் தகவல் அறிக்கைப் புத்தகம் (FIR Book) (படிவம் 73) ல் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

- விசாரணைக்கென குற்றவியல் துறை நடுவர்களால் காவல்துறைக்கு அனுப்பப்படுபவை உட்பட பிடியாணை வேண்டா வழக்குகள்.
- தற்கொலைகள், தற்செயலான மரணங்கள் போன்ற காவல் விசாரணை தேவைப்படும் சகல நிகழ்ச்சிகள், தீ விபத்துக்கள்.
- குவிமுச 107 முதல் 110 வரையுள்ள பிரிவுகளின் கீழ் வரும் வழக்குகள்.
- குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 144,145 – வது பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் பொருட்டு நிர்வாகத்துறை நடுவர்களுக்கு செய்யப்படும் அறிக்கைகள்.

PSO 561 – Non Cognizable Cases:

i. பிடியாணையில்லாமல் பிடிக்கத்தகாத ஒரு வழக்குக்குரிய விஷயங்கள் பற்றி ஒரு காவல் நிலையத்தில் பெற்றுக் கொள்ளப்படும் தகவலை அல்லது பிடியாணையில்லாமல் பிடிக்கத்தகாத வழக்கில் காவலர் தாங்களாகவே எடுத்துக் கொண்ட எந்த நடவடிக்கைகளையும் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ii. ஒரு காவல் அலுவலர் பிடியாணையில்லாமல் பிடிக்கத்தகாத வழக்கில் ஒரு குற்றவியல் நீதிபதியின் முன்பு தகவல் கொடுப்பது அவசியமென்று கருதும்போது அவர் குவிமுச 190(1) (ஆ) பிரிவின் கீழ் அத்தகைய குற்றத்தை உருவாக்கும் விஷயத்தை குறித்து அறிக்கையொன்றை எழுத்துருவில் குற்றவியல் நீதிபதிக்குக் கொடுக்கலாம்.

PSO 555 – Express Reports / FIRs – விரைவு அறிக்கைகள்

i. கீழ்காணும் அனைத்து வழக்குகளிலும் –

- கொலை
- மரணம் விளைவிக்கும் குற்றங்கள்,
- கூட்டுக்கொள்ளை
- கொள்ளை
- வீட்டை உடைத்து ரூ. 35,000/– க்கு மேற்பட்ட திருட்டு
- ரூ. 50,000/– க்கு மேற்பட்ட திருட்டு
- கடுமையான கலவரம்
- பிச்சை எடுக்க வைக்கும் பொருட்டு குழந்தை கடத்தல்.
- ஆதி திராவிடர்களுக்கு கொடுங்காயம் விளைவித்திடும் வன்முறை.
- வன் புணர்ச்சிக்கு உள்ளாகும் ஆதிதிராவிடர்.
- ஆதிதிராவிடர் சொத்துக்களைப் பாதிக்கும் கடுமையான அழிம்பு மற்றும் தீவைப்பு.
- குடியுரிமை பாதுகாப்புச் சட்டப்பிரிவுகள் 3 & 4 ன் கீழான குற்றங்கள்.

- சாதி அடிப்படையிலானது என சந்தேகப்படத்தக்க ஆதி திராவிடருக்கு எதிரான குற்றங்கள்.
- தனித்தன்மையான கொடிய குற்றங்கள் ஆகியவற்றிற்க்கு விரைவு முதல் தகவலறிக்கை அனுப்பப் படவேண்டும்.

ii. இவ்வறிக்கைகள் விரைவு அறிக்கைகள் எனப்படுகிறது. மற்றும் இவைகளை இயன்றவரையில் விரைந்து காவலர் மூலமாக சரக நீதிமன்றம், காவல் ஆய்வாளர், து.கா.கண்காணிப்பாளர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தனிப்பிரிவு அலுவலகம் மாவட்டக் குற்றப் பதிவேடுகள் கூடம் ஆகிய இடங்களுக்கு அனுப்ப வேண்டும். (to the jurisdiction court, Inspector, DSP., S.P., SB Office, DCRB.)

குறிப்பு – பழமை வாய்ந்த பொருட்கள் மற்றும் சிலைகள் திருட்டு தொடர்பான அனைத்து வழக்குகளும், களவுபோன சொத்தின் மதிப்பினை கருதாமல் ''தனிப்பட்ட பாரித்தன்மை யுடையதாகக்'' (Specially grave in nature) கருதப்படும்.

PSO – 559 – குற்றம் நடந்த இடத்தின் சரக காவல் நிலைய எல்லை எது எனும் சந்தேகம் ஏற்படும்போது வழக்குபதிவு செய்தல் (Registry of Cases when station limits of occurrence are doubtful)

i. இரண்டு காவல் நிலையங்களுக்கு இடையே உள்ள ஒரு எல்லைக்கு அருகில் ஒரு குற்றம் செய்யப்பட்டு அது எந்த காவல் நிலைய வரம்பிற்குள் நிகழ்ந்ததெனும் ஐயம் ஏற்படுகையில் அது முதலில் அறிவிக்கப்பட்ட காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலர் வழக்கைப் பதிவு செய்து புலன் விசாரணையை மேற்கொள்ளவேண்டும், பின்பு அதனை தொடர்புடைய சரக காவல் நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்.

ii. இருப்புப்பாதை காவல் அதிகார வரம்புக்குள் செய்யப்பட்ட ஒரு குற்றமானது அந்த இருப்புப்பாதை வழியில் உள்ள ஒரு மாவட்டக் காவல் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டால் இரண்டாவதாக சொல்லப்பட்ட காவல் நிலையம் சம்பந்தப்பட்ட ரயில் காவல் நிலையத்துக்கு உடனடியாக அதனைத் தந்திச் செய்தி மூலம் அறிவிக்க வேண்டும். அந்தத்தந்திச் செய்தியைத் தொடர்ந்து மேற்படி வழக்கை மாற்றும் வகையில் முதல் தகவல் அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டும். அவ்விதம் அதிகார வரம்புள்ள ரயில் காவல் நிலையத்துக்கு அவ்வழக்கை மாற்றும் முதல் தகவல் அறிக்கையை மிக மிக விரைவான செய்தி அறிவிப்பாகவும் ரயில் காவலர் சிப்பந்தி மூலமாகவும் உடனடியாக அனுப்பிவிடவேண்டும்.

PSO 151 – காவல்துறையினர் சித்ரவதை செய்ததாக அல்லது மரணம் விளைவித்ததாக அல்லது கொடுங்காயம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்படும் நிலையில் பின்பற்ற வேண்டிய நடைமுறை (Procedure in respect of charges of torture by the Police, or of death or grievous hurt caused by the Police).

i. The following procedure is prescribed in respect of allegations of torture or of causing death or grievous hurt or other serious offences against the person made against the Police officials. In cases of allegation or rape or commission of an unnatural offence, such as enquiry shall be held irrespective of the fact whether the act or acts committed was in the course of duties or outside the sphere of duties.

ii. **(7) General** – When complaints of torture, etc., against a Police Subordinate are received by a Police officer either in the muffassil or in the City through

telegram from non-official source or anonymous or pseudonymous petitions, letters or even by vague rumour, the officer receiving the same should immediately inform the RDO concerned in the muffassil and the PA to Collector in the City of the fact that a complaint has been received and that he is trying to verify the veracity or authenticity of the information and that the result of the verification will be communicated to him as early as possible. **He should not however register the complaint as a FIR until after such verification.**

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. புகார் பெற்றதும் உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திடல் வேண்டும்.	1. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதிலும் நீதிமன்றத்திற்கு அனுப்புவதிலும் காலதாமதம் செய்தல்.
2. புகார் கொடுத்தவரிடம் உடனே முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் பெற்று ஒரு நகலை இலவசமாக அவருக்குக் கொடுக்க வேண்டும்,	2. வழக்கைப் பதிவு செய்த உடன் விசாரணை மேற்கொள்வதில் காலதாமதம் செய்தல்.
3. முதல் தகவல் அறிக்கை அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதப்பட வேண்டும்,	3.வழக்குப் பதிவு செய்த விபரத்தை எதிரியிடமோ அல்லது வேறு பொதுநபர்களிடமோ தகவல் தெரிவித்தல்.
4. முதல் தகவல் அறிக்கை தயார் செய்யும் போது முதலில் தகவல் விபரத்தை எழுதியபின்தான் அதனைத் தொடர்ந்து புகார் விபரத்தை எழுத வேண்டும்.	

3. புகைப்படம்

i. இந்திய சாட்சியச் சட்டப் பிரிவு 7 ன் படி நீதிமன்றத்தில் முக்கிய சாட்சியாக ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

ii. கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, கூட்டுக் கொள்ளை, கற்பழிப்பு மற்றும் வீடு புகுந்து கன்னக்களவு ஆகிய முக்கிய பாரி வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடன் புலன் விசாரணையின் பேரில் சம்பவ இடம் சென்றவுடன் முதலில் சம்பவ இடத்தைப் புகைப்படம் எடுக்கவேண்டும்.

iii. விஷம், தூக்கிலிட்டு ஏற்படும் இறப்பு வழக்குகளில் கொலையா அல்லது தற்கொலையா என்பதை முடிவு செய்ய புகைப்படம் மிக மிக பயனுள்ளதாக அமைகிறது.

பார்வை :– Section 7 of I.E. Act : (Facts which are the occasion, cause or effect of facts in issue.)

செய்யவேண்டியவை

1. புகைப்படம் எடுப்பவரை வழக்கின் சாட்சியாகச் சேர்த்து அவரிடம் புகைப்படம் எடுத்ததைப் பற்றி சாட்சியமாக வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.

2. புகைப்படம் மற்றும் அதன் Negative இவைகளை சான்றாவணமாக (Material Object) சேர்த்து கால தாமதமின்றி எழுத்து மூலமான வேண்டுகோளுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி விடவேண்டும்.

3. புகைப்படத்தில் சம்பவ இடம், சம்பவ இடத்திலுள்ள அனைத்து சான்று பொருட்களையும் (Position, direction and discription marks) துல்லியமாக தெரியும்படி எடுக்க வேண்டும்.

4. எடுக்கப்பட்ட புகைப்படத்திற்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் Negative க்கும் மாறுபாடு இருக்கக் கூடாது.

செய்யக்கூடாதவை

1. வழக்கிற்கு தேவையில்லாத பொருட்களை புகைப் படத்தில் காண்பித்து சான்றாவணமாகச் சேர்த்தல்.

4. மாதிரி வரைபடம்

ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட குற்ற நிகழ்வு இடத்தை (Scene of crime) அந்த வழக்கின் புலன் விசாரணையின் பொருட்டு புலன் விசாரணை அதிகாரி நேரடியாக (காவல் நிலை ஆணை எண் 569(2)) தானாக முன்வந்து அல்லது குவிமுச பிரிவு 160 ன் படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட 2 பொது நபர் சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு தயார் செய்யும் ஆவணம் ஆகும். அதில் காவல் நிலையக் குற்ற எண், சட்டப்பிரிவு குறிப்பிடல் வேண்டும். (FIR Number i.e. Crime Number and Section of law)

i. மாதிரி வரைபடம் தயார் செய்யும் போது முதலில் வடக்குப் பார்த்து நின்று திசையைக் குறிப்பிட்டு வரைய ஆரம்பிக்க வேண்டும்.
ii. சம்பவ இடத்தில் 4 திசைகளிலும் கண்ணுக்குப் புலப்படும் வரையுள்ள தொலைவுகளில் கண்ட நிரந்தரக் குறியீடுகளான (permanent land marks), கி.மீ, கல், மின் கம்பம், சாலை, பாலங்கள், கோவில், நில அளவை குறியீடுகள் போன்றவைகளை இடமிருந்து வலமாக அல்லது வலமிருந்து இடமாக (Clock wise or anti clock wise) முறையில் குறிப்பிடல் வேண்டும்.
iii. துல்லியமாகக் குற்ற நிகழ்வு இடத்தை (scene of crime) தொலைவு (distance) உடன் குறிப்பிடல் வேண்டும்.
iv. வழக்கு சம்மந்தப்பட்ட தடயங்களான – சம்பவ இடத்தில் கிடக்கும் ஆயுதம், இதர இரத்தக் கரை, டயர் மார்க்ஸ், கால் தடப் பதிவுகள் குறிப்பிடல் வேண்டும்.
v. வரைபடம் இரவு நேரத்தில் தயார் செய்யும் போது மின் கம்பம் வெளிச்சம் இருந்தால் அதைக் குறிப்பிட வேண்டும்.
vi. சம்பவ இடத்தை புகைப்படம், வீடியோ எடுத்தல் அவசியம்.
vii. வலது கீழ் பக்கம் புலன் விசாரணை அதிகாரி கையெழுத்திட வேண்டும்.

viii. மொத்தம் 3 பிரதிகள் (1 + 2) தயார் செய்து அதன் அசலை அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நகல்களை நிலையக் கோப்பிலும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்திற்கு வழக்கு நாட்குறிப்புடன் அனுப்பவேண்டும்.

Section 160 Cr. P.C. –சாட்சிகள் முன்னிலையாவதைக் கோருவதற்கு காவல் அலுவலருக்குள்ள அதிகாரம் (Police Officers power to require attendance of witnesses)

(1) கொடுக்கப்பட்ட தகவலிலிருந்தோ வேறு விதமாகவோ வழக்கின் நிகழ்மைகள் மற்றும் சூழ்நிலைகளுடன் பரிச்சியம் உள்ளவராக தோன்றுகிறவர் எவரேனும் தம் அதிகார எல்லைக்குள் அல்லது அடுத்துள்ள நிலையத்தின் அதிகார எல்லைக்குள் இருப்பாரானால் அவரைத் தம் முன் முன்னிலையாகுமாறு அந்த அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் எவரும் எழுத்து மூலமாக உத்திரவிட்டுக் கோரலாம், மற்றும் அத்தகையவரும் அவ்வாறு கோரப்பட்ட படியே ஆஜராக வேண்டும்.

PSO 569(2) : ஒரு விசாரணை அலுவலர் குற்றம் நிகழ்ந்த இடத்திலாவது அல்லது வேறெந்த இடத்திலாவது சான்றாக முக்கியத்துவம் கொள்ளக்கூடிய கவனிக்க வேண்டிய விஷயங்களை காணும்போது அத்தகைய விஷயங்கள் கவனிக்கப்படும் சமயத்தில் உள்ள சாட்சிகளின் (கூடியவரை அவ்விடத்தில் கௌரவமாக வாழ்க்கை நடத்துவோராய் இருக்க வேண்டும்) முன்னிலையில் பார்வையிட்டு மேற்கண்ட விஷயங்களை அவசியமானால் ஒரு மாதிரி வரைபடத்தால் **(Rough Sketch)** விளக்கி ஓர் பதிவினை எழுதிக்கொள்ளவேண்டும்.

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. சம்பவ இடத்திற்கு செல்லும்போது புலன் விசாரணை அலுவலர் தன்னுடன் சம்பவ இடம் பற்றி வரைபடம் வரைவதற்கு வேண்டிய பேப்பர், கார்பன், பேனா, பென்சில், ஸ்கேல், டார்ச் லைட், டேப், கேமரா, வீடியோ மற்றும் தேவையான பொருட்களை (Investigation kit) கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டும்.	1. மாதிரி வரைபடத்தை புலன் விசாரணை அதிகாரி தவிர மற்றவர்கள் தயார் செய்தல்.
2. புகைப்பட நிபுணரை உடன் அழைத்துச் செல்ல வேண்டும் அல்லது சமப்வ இடத்திற்கு அவரை வரவழைக்க ஏற்பாடுகள் கண்டிப்பாக செய்ய வேண்டும்.	2. மாதிரி வரைபடத்திற்கும் பார்வை மகஜருக்கும் வேறுபாடுகள் இருத்தல்.
3. மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்துதான் வழக்கின் புலன் விசாரணை அலுவலரால்தான் தயார் செய்யப்படல் வேண்டும்	
4. வழக்கின் தன்மையைப் பொறுத்து தடய அறிவியல் உதவியாளர் கைவிரல் ரேகை நிபுணர் காவல் மோப்ப நாய் போன்றவை (Scientific Assis tant, FP expert, Police Dog etc.,) அழைக்கப்பட வேண்டும்.	
5. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் மூலம் சம்பவ இடத்தை அடையாளம் காண வேண்டும்.	



5. பார்வை மகஜர்

ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட குற்ற நிகழ்வு இடத்தை (scene of crime) அந்த வழக்கின் புலன் விசாரணையின் பொருட்டு புலன் விசாரணை அதிகாரி நேரடியாக PSO **569(2)** படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட **2** பொது நபர் சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு தயார் செய்யும் ஆவணம் ஆகும். அதில் தேதி, மணி,

சம்பவ இடம், யார் முன்னிலையில், யார் அடையாளம் காட்டியது, வழக்கின் குற்ற எண், சட்டப்பிரிவு, அந்த 2 பொது நபர் சாட்சிகளின் பெயர், விலாசம், யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விபரங்களை குறிப்பிடப்படல் வேண்டும். பார்வையிடும் நேரம் இரவு நேரமாக இருப்பின் எத்தகைய வெளிச்சத்தில் பார்வை செய்யப்பட்டது என்ற விபரம் குறிப்பிட வேண்டும். சம்பவ இடம் கலைந்துவிடாமல் இருக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் முன் கூட்டியே செய்ய வேண்டும்.

i. சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்தின் திசை, தொலைவு குறிப்பிடல் வேண்டும்.
ii. சம்பவ இடத்தில் உள்ள நிரந்தர குறியீடுகளான (permanent objects) – கி.மீ. கல், மின் கம்பம், சாலை, பாலங்கள், கோவில், நில அளவைக் குறியீடுகள் போன்றவைகளை இடமிருந்து வலமாக அல்லது வடமிருந்து இடமாக (Clock wise or anti clock wise) முறையில் குறிப்பிடல் வேண்டும்.
iii. துல்லியமாக குற்ற நிகழ்வு இடத்தை (scene of crime) குறிப்பிடல் வேண்டும்.
iv. வழக்கு சம்மந்தப்பட்ட தடயங்களான – சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதம், சம்பவ இடத்தில் உள்ள இரத்தக் கறை, டயர் மார்க்ஸ், கால் தடப் பதிவுகள் போன்றவைகளைக் குறிப்பிடல் வேண்டும்.
v. வலது பக்கம் இரண்டு பொது நபர் சாட்சிகளின் கையொப்பம் பெறல் வேண்டும்.
vi. இடது கீழ் பக்கம் புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் செய்தல் வேண்டும்.
vii. மொத்தம் 3 பிரதிகள் (1 + 2) தயார் செய்து அதன் அசலை அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நகல்களை நிலையக் கோப்பிலும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்திற்கு வழக்கு நாட்குறிப்புடன் அனுப்ப வேண்டும்.
viii. வழக்கு மற்றும் எதிர் வழக்குகளில் (case in counter) இரண்டு புகார்கள் கிடைக்கும் போது ஒரே அலுவலர்தான் இரண்டு வழக்குகளையும் பதிவு செய்து, புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த மாதிரியான இரண்டு குற்ற எண்களிலும் ஒரே ஒரு பொதுவான பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தால் போதுமானது. கைப்பற்றுதல் மகஜர் ஏதேனும் இருப்பின் இரண்டு வழக்குகளுக்கும் ஏற்ப தனித்தனியாகக் கைப்பற்ற வேண்டும்.

Section 160 Cr. P.C. – சாட்சிகளை வரவழைக்க காவல் அலுவலர்ளுக்குள்ள அதிகாரம் (Police Officers power to require attendance of witnesses)

(1) கொடுக்கப்பட்ட தகவலிலிருந்தோ வேறு விதமாகவோ வழக்கின்நிகழ்மைகள் மற்றும் சூழ்நிலை களுடன் பரிச்சியம் உள்ளவராக தோன்றுகிறவர் எவரேனும் தம் அதிகார எல்லைக்குள் அல்லது அடுத்துள்ள நிலையத்தின் அதிகார எல்லைக்குள் இருப்பாரானால் அவரைத் தம் முன் முன்னிலையாகுமாறு அந்த அத்தி யாயத்தின்படி புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் எவரும் எழுத்து மூலமாக உத்தரவிட்டுக் கோரலாம், மற்றும் அத்தகையவரும் அவ்வாறு கோரப்பட்டபடியே முன்னிலையாதல் வேண்டும்.

PSO 569(2) : ஒரு விசாரணை அலுவலர் குற்றம் நிகழ்ந்த இடத்திலாவது வேறெந்த இடத்திலாவது சான்றாக முக்கியத்துவம் கொள்ளக்கூடிய கவனிக்க வேண்டிய விஷயங்களை காணும்போது அத்தகைய விஷயங்கள் கவனிக்கப்படும் சமயத்தில் உள்ள சாட்சிகளின் முன்னிலையில் கூடியவரை அவ்விடத்தில் கௌரவமாக வாழ்க்கை நடத்துவோராய் இருக்க வேண்டும். மேற்கண்ட விஷயங்களை அவசியமானால் ஒரு தோராய வரைபடத்தால் (Rough plan) விளக்கி ஓர் பதிவினை எழுதிக்கொள்ளவேண்டும். அச்சாட்சிகளுக்கு அதன் உள்ளடக்கத்தை (Contents of Observation mahazar) படித்துக்காட்டி கவனமாக விளக்கி பின்னர், அப்பதிவில் அவர்கள் கையெழுத்திடலாம். அவர்கள் கவனித்த விஷயங்களை மெய்ப்பிப்பதற்காக அவர்களை பிற்பாடு சாட்சிகளாக நீதிமன்றத்தில் குறிப்பிடலாம்.

செய்யவேண்டியவை

1. பார்வைமகஜர் சம்பவ இடத்தில் வைத்துதான் வழக்கின் புலன் விசாரணை அலுவலரால்தான் தயார் செய்யப்படல் வேண்டும்.
2. ஒரே வழக்கில் இரண்டு, மூன்று சம்பவ இடங்கள் அமைந்திருக்குமானால் ஒவ்வொரு சம்பவ இடத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் தனித்தனி பார்வை மகஜர் தயார் செய்ய வேண்டும்.
3. பார்வை மகஜர் சாட்சிகளை வழக்கிற்காக சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. மற்ற காவல் ஆளிநர்கள் தயார் செய்யும் பார்வை மகஜரில் புலன் விசாரணை அலுவலர் சம்பவ இடத்தை பார்வையிடாமல் கையொப்பம் செய்தல்.
2. பார்வை மகஜரில் சம்பவ இடம் சம்பந்தமாக குறைபாடுகளும் குழப்பங்களும் இருத்தல்.
3. பார்வை மகஜருக்கும் மாதிரி வரைபடத்திற்கும் வேறுபாடுகள் இருத்தல்.



6. கைப்பற்றுதல் மகஜர்

ஒரு காவல் அலுவலர் ஒரு குற்ற வழக்கின் பொருட்டு சம்பவ இடத்தில் வழக்கிற்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களைக் கீழ்கண்ட படிவத்தின் கீழ் கைப்பற்ற வேண்டும் (PSO 569(1) படிவம் எண் 86)

அந்தப் படிவத்தில் கீழ்க் கண்ட குறிப்புகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

i. காவல் நிலையம், குற்ற எண், சட்டப்பிரிவு
ii. கைப்பற்றிய தேதி, நேரம், இடம்
iii. யாரிடமிருந்து என்ன காரணத்திற்காக கைப்பற்றப்பட்டது
iv. யார் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது
v. கைப்பற்றிய அலுவலரின் பெயர் விலாசம்
vi. கைப்பற்றிய சொத்தின் விபரம்
vii. சாட்சிகளின் கையொப்பம்
viii. கைப்பற்றிய அலுவலரின் கையொப்பம்

மொத்தம் 3 பிரதிகள் (1 + 2) தயார் செய்து அதன் அசலைப் படிவம் 91 (1 + 1) – உடன் கைப்பற்றிய சொத்துக்களையும் சேர்த்து அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பி, சொத்து பதிவேடு எண் (PR / CR/ PI No.) பெறல் வேண்டும். நகல்களை நிலையக் கோப்பிலும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்திற்கு வழக்கு நாட்குறிப்புடன் அனுப்பப்பட வேண்டும்.

i. கட்டம் 6 ல், கைப்பற்றப்படும் சொத்துக்கள் பற்றிய துல்லியமான எடை, நீளம், அகலம், உயரம், நிறம் மற்றும் அடையாளங்களை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அவ்வாறு கைப்பற்றப் பட்ட ஒவ்வொரு சொத்துக்களின் மீதும் தனித்தனியாக லேபிள் ஒட்டி அதில் காவல் நிலையம், குற்ற எண், சட்டப்பிரிவு, எதிரியின் பெயர் முகவரி, ஆகியவைகளை சிவப்பு மையினால் குறிப்பிட்டும், புலன் விசாரணை அதிகாரி கையொப்பம் செய்ய வேண்டும்.
ii. வழக்கு மற்றும் எதிர் வழக்குகளில் (case in counter) இரண்டு புகார்கள் கிடைக்கும் போது ஒரே அலுவலர்தான் இரண்டு வழக்குகளையும் பதிவு செய்து, புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். கைப்பற்றுதல் மகஜர் ஏதேனும் இருப்பின் இரண்டு வழக்குகளுக்கும் ஏற்ப தனித்தனியாக கைப்பற்ற வேண்டும்.
iii. மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் குற்ற வழக்குகளில் சம்பவ இடத்திலிருந்து மனித உடல் சம்மந்தப்பட்ட தடயக் கூறுகள் – இரத்தக் கரை, உமிழ் நீர், விந்து, வியர்வை, முடி, தசை போன்ற சொத்துக்கள் கைப்பற்றப்படுதல் வேண்டும்.
iv. களவு வழக்குகளில் தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்கள், உடைக்கப்பட்ட பூட்டு, இரும்பு, மரப்பாகங்கள், எதிரி விட்டுச் சென்ற தடயங்கள் கைப்பற்றப்படுதல் வேண்டும்.
v. வழக்குகளில் புலன் விசாரணையின் போது கைப்பற்றப்படும் ஆவணங்கள் (Documents) அனைத்தையும் குறிப்பாணை மூலம் (General Memo/Separate memo prepared in a separate sheet) நீதிமன்றத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும்.

5. SPECIAL & LOCAL LAWS வழக்குகளான

i. மது விலக்கு வழக்குகள்
ii. போதைப் பொருள் வழக்குகள்
iii. வெடிப்பொருட்கள்
iv. சூதாட்ட வழக்குகள் மற்றும் இதர வழக்குகள்

போன்ற வழக்குகளில் கைப்பற்றப்படும் அனைத்து தடயங்களையும தனித்தனி பேப்பர் / பாட்டில் / பெட்டி ஆகிய ஏதாவது ஒன்றில் பாதுகாப்பான முறையில் சேகரம் செய்து, உறையிடப்பட்டு முத்திரை குத்தப்பட்டு நீதிமன்றத்திற்கு அன்றே அனுப்ப வேண்டும். மது விலக்கு வழக்குகளில் மாதிரிகள் எடுத்தும், மீதமுள்ள

சாராயம் மற்றும் சாராய ஊறல் ஆகியவைகளை அவ்விடத்திலேயே ஆய்வாளர் முன்னிலையில் அழித்தல் மகஜர் **(Destruction Mahazar)** மூலம் கொட்டி அழிக்கப்படவேண்டும்.

இ) கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் பகுப்பாய்வு அறிக்கை பிரிவு **45** இந்திய சாட்சிய சட்டத்தின் படி முக்கிய சான்றாவணமாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும்.

PSO 569(1) : ஒரு காவல் அலுவலர் வழக்கப்படியான வீட்டுச் சோதனையின்றி வேறு வகையாய் எந்த சொத்தினையேனும் மீட்கையில் ஆணை எண் **679** – ல் குறிப்பிட்டுள்ள படிவம் **86** ல் அத்தகைய மீட்பு பற்றிய விஷயங்கள் குறித்து அதே சமயத்தில் எழுதிய பதிவு ஒன்றை தயாரித்து அக்கைப்பற்றுதலின்போது இருந்த சாட்சிகளின் சான்றொப்பத்தை வாங்கிக் கொள்ளலாம். அவ்வாறு செய்யப்பட்ட அப்பதிவானது அதனைத் தயாரித்த காவல் அலுவலரின் சான்றினை உறுதிப்படுத்துவதற்கு நீதிமன்றத்தார் சான்றில் ஏற்கத்தக்கதாகும். அப்பதிவினை தாமதமின்றி குற்றவியல் நடுவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பிரிவு 45 இந்திய சாட்சியச் சட்டம்.

Section 45 Indian Evidence Act – வல்லுநர்களின் கருத்துக்கள் –

அயல் நாட்டுச்சட்டம், அறிவியல் அல்லது கலை பற்றிய பிரச்சனை ஒன்றைக் குறித்தோ அல்லது கையெழுத்தின் அல்லது விரல் பதிவுகளின் தனித்தன்மை குறித்தோ நீதிமன்றம் ஒரு கருத்துக்கு வரவேண்டியிருக்கும்போது அந்த பிரச்சனையைப் பற்றி அத்தகைய அயல்நாட்டுச் சட்டத்திலோ, அறிவியலிலோ அல்லது கையெழுத்தின் அல்லது விரல் பதிவுகளின் தனித்தன்மை குறித்த பிரச்சனைகளிலோ சிறப்பாக தேர்ச்சி பெற்றவர்களின் கருத்துக்கள் தொடர்புற்ற பொருண்மையாகும்.

செய்யவேண்டியவை

1. சாட்சிகளின் முன்புதான் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அவர்களின் கையொப்பம் பெற வேண்டும்.
2. அந்த மகஜர் சாட்சிகளை வழக்கிற்காக சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. சம்பவ இடம் மற்றும் சோதனையிடப்படும் இடத்திலிருந்து வழக்கிற்கு சம்பந்தமில்லாத பொருட்களைக் கைப்பற்றுதல்.
2. கைப்பற்றிய சொத்துக்கள் அனைத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவுதில் காலதாமதம் செய்தல்.

கைப்பற்றுதல் மகஜர்.

1	கைப்பற்றிய தேதி, மணி	:	27.02.2008 ந்தேதி 12.20 மணி.
2	சம்பவ இடம்	:	கிச்சிப்பாளையம் காவல் நிலைய சரகம், பச்சப்பட்டி சுடுகாட்டில் உள்ள முட்புதர் மறைவில்.
3	யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது	:	யயயயயய (40), க/பெ. ளளளளள, 109, மாரியம்மன்கோயில்தெரு, பச்சப்பட்டி, சேலம் -15.
4	யாரால் கைப்பற்றப்பட்டது	:	ணணணணணணண, காவல் உதவி ஆய்வாளர், கிச்சிப்பாளையம் காவல் நிலையம்.
5	யார் முன்னிலையில் கைப்பற்றியது	:	1. கककक வயது (45), த/பெ. பபபபபப, எஸ்.எம்.சி காலனி, சேலம்-15. 2. தततततत வயது 50, த/பெ. மममममम, மேட்டுத்தெரு, தாதகாப்பட்டி, சேலம் -6.
6	எதற்காக கைப்பற்றியது	:	மது விலக்கு வழக்கின் நிமித்தம்.
7	கைப்பற்றிய தடயங்கள் விபரம்	:	சுமார் 5 லிட்டர் பிடிக்கக் கூடிய ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் சுமார் 5 லிட்டர் விஷ வாடையுடன் கூடிய கள்ளச்சாராயம், சில்வர் டம்ளர் ஒன்று, பணம் ரூ 10/- மற்றும் சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய மூன்று கார் டியூப்புகளில் மொத்தம் 55 லிட்டர் விஷ நெடியுடன் கூடிய கள்ளச்சாராயம்.
8	சாட்சிகள் கையொப்பம்	:	(ஒப்பம்) 1. கककक 2. தततततत
	கைப்பற்றிய அதிகாரியின் கையொப்பம்.	:	(ஒப்பம்) 27.02.2008 காவல் உதவி ஆய்வாளர், கிச்சிப்பாளையம் காவல் நிலையம்.

அழித்தல் மகஜர்.

1	கைப்பற்றிய தடயங்களை அழித்த தேதி, நேரம்	:	27.02.2008 ந் தேதி 14.15 மணி
2	கைப்பற்றிய இடம்	:	கிச்சிப்பாளையம் காவல் நிலைய வளாகத்தில் உள்ள வெற்றிடம்
3	யாரிடமிருந்து கைப்பற்றி அழிக்கப்பட்டது	:	யயயயயய (40), க/பெ. ளளளளள, 109, மாரியம்மன்கோயில்தெரு, பச்சப்பட்டி, சேலம் -15.
4	யாரால் அழிக்கப்பட்டது	:	சசசசசச காவல் ஆய்வாளர், கிச்சிப்பாளையம் காவல் நிலையம் சேலம் மாநகரம்.
5	குற்ற எண்	:	426/08 u/s 4(1)(i), 4(1)(aa) & 4(1-A) TNP Act
6	யார் முன்னிலையில் அழிக்கப்பட்டது	:	1. கककक வயது (45), த/பெ. பபபபபப, எஸ்.எம்.சி காலனி, சேலம்-15. 2. தततततत வயது 50, த/பெ. மममममम, மேட்டுத்தெரு, தாதகாப்பட்டி, சேலம் -6.
7	அழிக்கப்பட்ட தடயங்களின் விவரம்	:	மகஜரில் கைப்பற்றப்பட்ட மூன்று கார் டியூப்களில் மொத்தம் 55 லிட்டர் மற்றும் வெள்ளை நிற பிளாஸ்டிக்கேனில் சுமார் 5 லிட்டர் ஆக மொத்தம் 60 லிட்டர் விஷ வாடையுடன் கூடிய கள்ளச்சாராயத்தை ஒன்றாக கலக்கி அதிலிருந்து 750 மிலி பிடிக்கக்கூடிய இரண்டு வெள்ளை நிற பாட்டில்களில் தலா சுமார் 500 மிலி மாதிரிக்கும் ரசாயன பரிசோதனைக்கும் எடுத்தது போக மீதமுள்ள விஷ வாடையுடன் கூடிய கள்ளச்சாராயத்தை காவல் நிலைய வெற்றிடத்தில் கொட்டி அழிக்கப்பட்டது
8	சாட்சிகள் கையொப்பம்	:	(ஒப்பம்) 1. கककक 2. ततततत
9	தடயங்களை அழித்த அதிகாரியின் கையொப்பம்.	:	ஒப்பம். 27.02.2008 காவல் ஆய்வாளர், கிச்சிப்பாளையம் காவல் நிலையம், சேலம் மாநகரம்.

7. 161 (3) கு.வி.மு.ச. வாக்குமூலங்கள்

ஒரு புலன் விசாரணை அலுவலர் ஒரு வழக்கின் புலன் விசாரணையின் பொருட்டு சாட்சிகளை வாய்மொழியாக விசாரித்து அந்த சாட்சிகள் அளிக்கும் சாட்சியத்தை அப்படியே பதிவு செய்தல் வாக்குமூலம் ஆகும்.

i. ஒரு வழக்குப் பதிவு செய்தவுடன் உடனடியாக சம்பவ இடம் சென்று, சம்பவ இட சாட்சிகளையும், வாதி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தால் மருத்துவமனைக்குச் சென்று விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்ய வேண்டும்.

ii. சம்பவம் குறித்த சாட்சியின் வாக்கு தனித்தனியாகவும், சரியாகவும் பதிவு செய்தல் வேண்டும்.

iii. சம்பவம் நடந்த தேதி, மணி, இடம், யாரால், யாரை, ஏன், எப்படி, எதற்காக சம்பவம் நடந்தது என்பது பற்றிய விரிவான விபரங்கள் அந்த சாட்சியின் பேச்சு வழக்கிலேயே பதிவு செய்ய வேண்டும் (Colloquial language). மேலும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இரவு நேரத்தில் சம்பவம் நடைபெற்றிருந்தால் வெளிச்சத்தின் தன்மை இருத்தல் வேண்டும்.

iv. கால தாமதத்திற்கான காரணத்தை குறிப்பிடல் வேண்டும்.

v. இந்த வாக்குமூலத்தில் சாட்சியின் கையெழுத்துப் பெறக் கூடாது.

vi. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் பற்றியும், சம்பவத்தின்போது அவர்கள் இருந்த இடம் பற்றியும், ஒவ்வொரு சாட்சியின் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

vii. சாட்சியம் வேறு மொழியில் கொடுக்கப்பட்டால் அதனை நம்பகத் தன்மை பெற்ற மொழி பெயர்ப்பாளர் மூலம் மொழி பெயர்ப்பு செய்து பதிவு செய்ய வேண்டும். அந்த மொழி பெயர்ப்பாளரிடம் அந்த வாக்குலத்தில் கையொப்பம் பெற வேண்டும். மேலும் மொழி பெயர்ப்பாளருக்கு தனி வாக்குமூலம் பதிவு செய்யப்படவேண்டும்.

viii. முதல் தகவல் அறிக்கை, விபத்துப் பதிவேடு ஆகியவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் வாக்குமூலத்தில் மாறுபடும் பட்சத்தில் அதற்கான விளக்கங்களை குறிப்பிட்டு விசாரிக்க வேண்டும்.

ix. வாக்குமூலத்தின் இறுதியில் வாக்குமூலம் முடிந்த பின்பு சாட்சிக்குப் படித்துக் காட்டி அவரால் "படிக்க கேட்டேன் / படித்துப் பார்த்தேன்" சரியாக இருந்தது என்று குறிப்பிட வேண்டும்.

x. புலன் விசாரணை அலுவலரின் முன்பு அவரது உத்தரவின் பேரில் வேறு காவல் அலுவலர் வாக்கு மூலத்தை பதிவு செய்தால் அதை பதிவு செய்த காவல் அலுவலர் இடது பக்கம் கையொப்பம் செய்ய வேண்டும்.

xi. சாட்சிகளை விசாரித்த பின்பு மீண்டும் வழக்கு சம்மந்தமாக புதிய தகவல் இருப்பின் அந்த சாட்சியத்தின் மறு வாக்குமூலம் (Further Statement) பதிவு செய்ய வேண்டும்.

xii. புலன் விசாரணை அலுவலர் வாக்குமூலத்தின் கடைசியில் கையொப்பம் செய்தல் வேண்டும்.

xiii. இத்தகைய **161 (3)** கு.வி.மு.ச. வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் சாட்சிகளின் வாக்கு மூலங்களுக்கிடையே எற்படும் முரண்பாட்டை (Contradiction) வெளிக்கொணரவே பயன்படுத்தப் படும்.

xiv. மொத்தம் **3** பிரதிகள் **(1 + 2)** தயார் செய்து அதன் அசலை அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நகல்களை நிலையக் கோப்பிலும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்திற்கு வழக்கு நாட்குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

161(3) கு.வி.மு.ச.: இந்த பிரிவின்படி செய்யப்படும் விசாரணையின்போது காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலம் எதையும் அவர் எழுதிக் கொள்ளலாம், அவர் அவ்வாறு எழுதுவாரானால் அவர் எவரொருவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்கிறாரோ அவர் ஒவ்வொருவரின் வாக்குமூலத்தையும் தனித்தனியாகவும் சரியாகவும் பதிவு செய்தல் வேண்டும்.

162 கு.வி.மு.ச.: காவல் துறையினரிடம் அளிக்கப்படும் வாக்குமூலங்களில் கையொப்ப மிட வேண்டியதில்லை (Statement to Police not to be signed).

செய்யவேண்டியவை

1. புலன் விசாரணையின்போது பதிவு செய்யப்படும் வாக்கு மூலங்கள் அனைத்தும் காலதாமதமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இது வழக்கில் தண்டனை பெற மிகுந்த உதவியாக இருக்கும்.
2. காய வழக்குகள் மற்றும் கலக வழக்குகளில் (Hurt and Rioting Cases) வாக்குமூலங்கள் பதிவு செய்யும்போது எதிரிகளின் வெளிப்படையான (Overtact) அனைத்தும் தனித்தனியாக குறிப்பிடப் படல் வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. வாக்குமூலங்கள் பதிவு செய்யும்போது முரண் பாடுகள் (Contradictions) இருத்தல்.
2. வாக்குமூலங்கள் பதிவு செய்யும்போது கவனக் குறைவாக இருத்தல்.
3. வாக்குமூலங்களில் அடித்தல் திருத்தல் இருத்தல்.

8. கைது நடவடிக்கை

பிடிக்கக்கூடிய குற்றங்களில் (Cognizable Offences) ஒருவர் குற்றம் புரிந்தது உண்மை என சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது புலன் விசாரணை அலுவலர் எடுக்கும் நடவடிக்கையே கைது நடவடிக்கை ஆகும். **(41** கு.வி.மு.ச**)**

i. கைது செய்யப்படும் நபரை குற்றம் சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் (PSO 597)
ii. அவ்வாறு கைது செய்யும்போது உச்ச நீதிமன்றத்தின் **11** கட்டளைகள் பின்பற்றி (D.K. Basu V/s State of West Bengal) கைது செய்ய வேண்டும். உடனடியாக அவரைச் சோதனை செய்து கைது குறிப்பாணையில் அவரிடம் கையொப்பம் பெறுதல் வேண்டும். மேற்படி கைது குறித்து அவரது உறவினர்களுக்கு நேரிடையாகவோ, தந்தி மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ (Supreme Court of India, Criminal M.P. No. **539/86, 592/97) (46** கு.வி.மு.ச**)** தகவல் தெரிவித்தல் வேண்டும்.
iii. கைது செய்யப்படும் நபரிடம் கைது செய்வதற்கான காரணத்தை கூறி கைது குறிப்பானை மூலம் கைது செய்ய வேண்டும். **(50 (1)** கு.வி.மு.ச**)**
iv. காவல் நிலையத்திற்கு கொண்டு சென்ற தேதி, நேரம் ஆகியவைகளையும் கைது பற்றிய தகவல்களையும் பொது நாட்குறிப்பில் (General Diary) பதிவு செய்யவேண்டும்.
v. அவரை தக்க திரேகப் பரிசோதனை செய்து கைதிகள் திரேகப் பரிசோதனை பதிவேட்டில் (Prisoners Search Register) பதிவு செய்ய வேண்டும். (51 CrPC) அப்போது கட்டம் **8** ல் அவர் உடுத்தியிருக்கும் உடைகள், உடைமைகள், காயங்கள் குறித்து தெளிவாக குறிப்பிடல் வேண்டும். அவர் வசம் உள்ள தனி நபர் சொத்துக்களைப் படிவம் **86** மூலம் அவர் அடைக்கப்படும் சிறையில் ஒப்புவிக்கவேண்டும் (PSO **636)** பெண்களை பெண்காவலர் / பெண் மூலம் தான் திரேகப் பரிசோதனை செய்யவேண்டும் **(51 (2)** கு.வி.மு.ச (Personal properties should be sent to the prison cocerned where the accused lodged through form 96)
vi. எதிரியை நிலையச் சுற்றுக்காவல் பதிவேட்டில் (Sentry Relief Book) பதிவு செய்து சுற்றுக் காவலரிடம் ஒப்புவிக்கவேண்டும்.
vii. கைது அட்டை (Arrest Card) தயார் செய்ய வேண்டும். **(58** கு.வி.மு.ச**)**
viii. ஒரு புலன் விசாரணை அதிகாரி ஒரு நபரைக் கைது செய்வதற்கு தமக்கு கீழ் உள்ள அலுவலருக்கு உத்திரவிடலாம். **(55** கு.வி.மு.ச**)**

ix. நிலையப் பிணையில் விடுவித்தால் தவிர கைது செய்யப்பட்ட நேரத்தில் இருந்து (பயண நேரம் தவிர) 24 மணி நேரத்திற்குள் அடைப்புக்காவல் அறிக்கை வேண்டுகோளுடன், கைது அறிக்கை, கைது குறிப்பாணை, கைது அட்டை, கைது தகவல் பற்றிய ஆவணங்கள் கைதி வழிக்காவல் கடவுச்சீட்டுடன் நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர் படுத்தி உத்திரவுப்படி நடக்க வேண்டும். (57 கு.வி.மு.ச)

x. கைது செய்யப்படும் நபர்கள் முதியோர்கள், குழந்தைகள், உடல் நலம் குன்றியவர்களாக இருப்பின் இரவு நேரத்தில் கைது செய்வதை முடிந்தவரை தவிர்த்தல் வேண்டும்.

xi. எதிரியை வெளியூரிலோ, வெளி மாநிலத்திலோ கைது செய்யும் போதும் வழக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு உட்பட்ட நீதிமன்றத்தில் 24 மணி நேரத்திற்குள் ஆஜர் செய்ய முடியாத போதும் அவரைக் கைது செய்த இடத்திற்கு சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி, மேற்படி நடுவரின் ஆணையோடு வழக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரணை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டும்.

xii. ஒரு வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி 18 வயது நிரம்பாத இளஞ்சிறாராக இருக்கும் பட்சத்தில் அவரை மற்ற எதிரிகளோடு (with major) அதே நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் அந்த இளம் குற்றவாளிகளை மட்டும் சம்மந்தப்பட்ட இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கு (Juvenile Justice Board) அனுப்ப வேண்டும்.

xiii. அதே போல் அந்த இளம் குற்றவாளிகளின் விசாரணை அந்தக் குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தில் தான் நடைபெறும்.

xiv. பெண்களை எக்காரணத்தை முன்னிட்டும் இரவு நேரத்தில் கைது செய்யக்கூடாது. அப்படி கைது செய்ய நேரும் போது பெண் காவலர்களைக் கொண்டு தான் கைது செய்ய வேண்டும்.

xv. பெண் கைதிகளை விசாரணை முடிந்தவுடன் பெண் காவலர்கள் மூலம் காலதாமதமின்றி உடனே நீதிமன்ற காவலுக்கு அனுப்பி விடவேண்டும். (24 மணி நேரத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை)

xvi. சூரிய மறைவிற்கு பின்பும், சூரிய உதயத்திற்கும் முன்பும் எக்காரணம் கொண்டும் பெண்களை கைது செய்யக்கூடாது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் (In exceptional cases) பெண்களை கைது செய்ய வேண்டிய சூழ்நிலையில் அந்தப் பெண் கைதியை கைது செய்யும் முன்பு அந்தப் பகுதியின் நீதித்துறை நடுவர் அவர்களின் முன் அனுமதி (Prior permission order) ஒன்று பெற்ற பின்னரே அவரைக் கைது செய்ய வேண்டும்.

xvii. அவசியமான சந்தர்ப்பங்களில் பெண்களைக் கைது செய்ய நேரும்போது முன் கூட்டியே தகவல் (Advance Intimation) அனுப்பிவிட்டு கைது செய்ய வேண்டும்.

Section 41 Cr P.C. (கு.வி.மு.ச பிரிவு 41)–

1. காவல் அலுவலர் எவரும் ஒரு நடுவரிடமிருந்து கட்டளையில்லாமலும் பிடிகட்டளையில்லாமலும் பின் வரும் எவரையும் கைது செய்யலாம்.

அ) கைது செய்தற்குரிய குற்றம் எதிலும் சம்பந்தப்பட்டிருக்கிறவரை, அல்லது அவ்வாறு சம்பந்தப் பட்டிருப்பதாக எவர் பேரில் நியாயாமான முறையீடொன்று செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது நம்பகமான தகவல் வந்திருக்கிறதோ அல்லது நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ அத்தகையவரை அல்லது

ஆ) சட்டப்பூர்வமான காரணமின்றி (அக்காரணத்தை மெய்ப்பிக்கும் சுமை அவரையே சார்ந்தது) தம் கைவசத்தில் கன்னமிடுவதற்கான கருவி எதையும் வைத்திருக்கின்றவரை,

இ) இந்தச் சட்டத்தின்படி அல்லது மாநில அரசின் கட்டளை மூலமாக குற்றவாளியென விளம்பரப் படுத்தப்பட்டுள்ளவரை அல்லது

ஈ) திருடப்பட்டதென நியாயமாகச் சந்தேகிக்கலாகும் பொருள் எதுவும் எவரது கைவசத்தில் காணப்படுகிறதோ, மற்றும் அத்தகைய பொருளைப் பொறுத்து ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாக எவர் பேரில் நியாயமாகச் சந்தேகம் எழுகிறதோ அவரை

உ) ஒரு காவல் அலுவலர் தம் கடமையை நிறைவேற்றுங்கால் அவரைத் தடை செய்கிறவரை அல்லது சட்டப்பூர்வமான காவலில் இருந்து தப்பித்துக் கொண்டவர், அல்லது தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறவரை, அல்லது

ஊ) ஒன்றியத்து ஆயுதப்படைகள் எதிலிருந்தும் தம் பொறுப்பை விட்டு ஓடி வந்தவரென நியாயமாகக் சந்தேகிக்கப்படுகிறவரை, அல்லது

எ) எந்தச் செய்கை இந்தியாவில் செய்யப்பட்டால் தண்டிப்பதற்குரிய குற்றமாக இருந்திருக்குமோ மற்றும் எந்தச் செய்கைக்காக உரிய நாட்டிடம் குற்றவாளியை ஒப்படைத்தல் தொடர்பான ஒரு சட்டத்தின்படியோ வேறு விதமாகவோ இந்தியாவில் கைது செய்யப்படுவதற்கு அல்லது காவலில் வைக்கப்படுவதற்கு ஒருவர் உட்பட்டவரோ அந்தச் செய்கையை இந்தியாவிற்கு வெளியே எந்த இடத்திலேனும் செய்வதில் சம்பந்தப்பட்டிருக்கிறவர் அல்லது அச்செய்கையில் சம்பந்தப்பட்டிருப்பதாக எவர் பேரில் நியாயமான முறையீடொன்று செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது நம்பகமான தகவல் வந்திருக்கிறதோ அல்லது நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ அவரை அல்லது

ஏ) விடுவிக்கப்பட்ட குற்றவாளியாக இருந்து 356 ஆவது பிரிவின் (5) ஆவது உட்பிரிவின்படி செய்யப்பட்ட விதி எதையும் மீறுகிறவரை அல்லது

ஐ) எவரைக் கைது செய்வதற்காக வேண்டுகோள் எதுவும் எழுத்து மூலமாயினும், வாய்மொழியாயினும் மற்றொரு காவல் அலுவலரிடமிருந்து வந்துள்ளதோ அவரை

(2) ஒரு காவல் நிலைய பொறுப்பு அலுவலர் அதே முறையில் 109 ஆவது பிரிவில் அல்லது 110கு.வி.மு.ச பிரிவில் குறிப்பிட்டுள்ள இனங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகளை சேர்ந்த எவரையும் கைது செய்யலாம் அல்லது செய்விக்கலாம்.

PSO 597 – காவலர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் கேள்வி கேட்டல்

ஒரு குற்றத்துக்குக் காரணமானவரைக் கண்டுபிடிக்க முயலும்போது அவர்களுக்குப் பயனுள்ள தகவலைக் கொடுக்கக்கூடியவரென அவர்கள் கருதும் எதிரி உள்பட எவரையேனும் விசாரணை செய்வதோ கேள்விகள் கேட்பதோ சரியான செயலாகுமானால் ஒரு எதிரி கைது செய்யப்படுகையில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டை அவருக்கு முதன் முதலாக தெரியப்படுத்த வேண்டும். அதன் பின்னர் விசாரணை அலுவலர், விசாரணை நடக்கும் காலத்தில் அவர் கேட்டறிந்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எவற்றையேனும் எதிரி விளக்குவதற்கோ தெளிவாக்குவதற்கோ சாதகமாயிருக்கும் பொருட்டு எதிரியைக் கேட்க அவசியம் என அவர் கருதும் கேள்விகளை அவர் தடையின்றி கேட்கலாம். தன் நிலையை விளக்கும் பொருட்டு தற்காப்பிற்குரியவற்றை எதிரி கூறத்தொடங்கினால் அவர் கூறியதின் விளக்கத்தைத் தெரிவதற்காக மேலும் கேள்விகளைக் கேட்கலாம்.

Section 46 Cr P.C – கைது செய்தல் எவ்வாறு என்பது

1) கைது செய்கையில், காவல் அலுவலரோ அதைச் செய்கின்ற மற்றொருவரோ கைது செய்யப்பட வேண்டியவர் சொல்லால் அல்லது செயலால் காவலுக்குப் பணிந்து உட்பட்டாலன்றி அவருடைய உடம்பை நேரிடையாக தொடவோ, கட்டுக்காவலில் வைக்கவோ வேண்டும்.

2) அத்தகையவர், தம்மை கைது செய்யும் முயற்சியை வன்மையாகத் தடுக்கிறார், அல்லது தாம் கைது செய்யப்படுவதிலிருந்து தந்திரமாக தப்பிக்க முயற்சி செய்கிறார் எனில், அத்தகைய காவல் அலுவலரோ மற்றவரோ கைது செய்வதை நிறைவேற்ற அவசியமான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளலாம்.

3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், மரண அல்லது ஆயுள் தண்டனைக்குரிய குற்றம் சாட்டப்படாத ஒருவரது மரணத்தை விளைவிப்பதற்கான உரிமையை அளிக்கவில்லை.

Section 50 Cr P.C – கைது செய்யப்பட்டவருக்கு, கைது செய்வதற்கான காரணங்களையும் பிணையில் செல்வதற்கான உரிமைகளையும் பற்றித் தெரிவித்தல்.

1) ஒவ்வொரு காவல் அலுவலரும் அல்லது பிடிகட்டளையின்றி எவரையும் கைது செய்கின்ற மற்றொருவரும் எந்தக் குற்றத்திற்காக ஒருவர் கைது செய்யப்படுகிறாரோ அந்தக் குற்றத்தின் முழு விவரங்களை அல்லது அவ்வாறு கைது செய்வதற்கான மற்ற காரணங்களை அவருக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

2) பிணையில் விடாக் குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவரல்லாத வேறொருவரையும் பிடிகட்டளையின்றி ஒரு காவல் அலுவலர் கைது செய்யுமிடத்து அக்காவல் அலுவலர், கைது செய்யப்பட்டவருக்கு பிணையில் விடுபட உரிமை உண்டு என்றும், அவர் தம் சார்பாக பிணையாட்களை ஏற்பாடு செய்யலாம் என்றும் அவரிடம் தெரிவிக்க வேண்டும்.

Section 51 Cr PC – Search of Prisoner – கைது செய்யப்பட்டரை சோதனையிடுதல்

1) பிணையில் விடுவதற்கு வகை செய்யாத ஒரு பிடிகட்டளையின்படி ஒருவர் ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்படும்போதெல்லாம் அல்லது பிணையில் விடுவதற்கு வகை செய்கிற ஒரு பிடி கட்டளையின்படி அவ்வாறு காவல் அலுவலரால் கைது செய்யப்பட்டு, ஆனால் கைது செய்யப்பட்டவர் பிணையம் கொடுக்க முடியாதிருக்கும் போதெல்லாம் மற்றும்

பிடிகட்டளையில்லாமலோ ஒரு பிடிகட்டளையின்படி தனிப்பட்ட ஒருவரோ ஒருவர் கைது செய்யப்பட்டு கைது செய்யப்பட்டவரைச் சட்டப்படி பிணையில் விடக்கூடாத போதெல்லாம் அல்லது அவர் பிணையம் அளிக்க இயலாத போதெல்லாம்

கைது செய்கின்ற அலுவலரோ அல்லது தனிப்பட்ட ஒருவரால் கைது செய்யப்படும் போது அவர் கைது செய்யப்பட்டவரை எவரிடம் ஒப்படைக்கிறாரோ அந்தக் காவல் அலுவலரோ, கைது செய்யப்பட்டவரை சோதனை செய்து அவரிடத்தில் காணப்படும் அவசியமான உடுக்கும் ஆடைகள் தவிர மற்ற அனைத்து உருப்படிகளையும் பாதுகாப்பில் வைக்கலாம். மற்றும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து, காவல் அலுவலரால் கைக்கொள்ளப்பட்ட உருப்படிகளைக் குறிப்பிடுகின்ற வரவுச் சீட்டு ஒன்று அத்தகையவருக்கு கொடுக்கப்படுதல் வேண்டும்.

2) ஒரு பெண்ணைச் சோதனை செய்விப்பது அவசியமாக இருக்கும் போதேல்லாம் சற்றும் பண்பு குறையாத வகையில் வேறொரு பெண்ணால் அச்சோதனை செய்யப்படுதல் வேண்டும்.

Section 52 Cr PC – தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.

இந்தச் சட்டத்தின்படி கைது செய்கின்ற அலுவலர் அல்லது வேறொருவரும், கைது செய்யப்பட்டவர் தம் வசம் வைத்திருக்கும் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் எவற்றையும் அவரிடமிருந்து எடுக்கலாம், மற்றும் அவ்வலுவலரோ அல்லது கைது செய்கின்றவரோ கைது செய்யப்பட்டவரை, எவரது முன்னிலையில் கொண்டு செல்ல வேண்டுமென்று இந்தச் சட்டத்தால் கோரப்படுகிறதோ, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலரிடம் அவ்வாறு எடுக்கப்பட்ட அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைத்தல் வேண்டும்.

PSO 636 – கைதி சோதனை

1) பிணையில் விடுவிக்கப்படாத கைதிகளைக் காவல் நிலையத்துக்குக் கொண்டு வந்தவுடன் சோதனை செய்து, அவசியமாய் அணியவேண்டிய உடையைத் தவிர அவர்கள் உடல்களின் மேலுள்ள சகல சொத்தினையும் 86 ஆம் எண் படிவத்துடன் சம்பந்தப்பட்ட சிறைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

Section 58 Cr P.C காவல்துறையினர் கைது செய்தது குறித்து அறிவித்தல் (Arrest Card)

காவல் நிலையங்களின் பொறுப்பு அலுவலர்கள் அவர்களுடைய காவல் நிலைய எல்லைக்குள், பிடி கட்டளை யின்றிக் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை அத்தகையவர்கள் பிணையில்போக அனுமதிக்கப் பட்டிருந்தாலும் இல்லையென்றாலும் மாவட்ட நடுவருக்கோ, அவர் அவ்வாறு கட்டளையிடுவாராயின் உட்கோட்ட நடுவருக்கோ அறிவித்தல் வேண்டும்.

Section 55 Cr P.C

ஒரு காவல் நிலைய பொறுப்பு அலுவலரோ, 12 வது அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்து வருகின்ற காவல் அலுவலரோ ஒரு பிடி கட்டளையின்றி (தம் முன்னிலையில்லாமல் மற்றபடி) கைது செய்யுமாறு தமக்கு கீழ் நிலையிலுள்ள அலுவலர் எவரையும் கோரும்போது, அவ்வாறு கோரப்படும் அலுவலருக்கு கைது செய்யப்படவுள்ளவர் யார் என்பதையும் எந்தக்குற்றத்திற்காக, அவ்வாறு வேறு காரணத்திற்காக அவர் கைது செய்யப்பட இருக்கிறார், என்பதையும் குறியிட்டு, எழுத்து மூலமான கட்டளையொன்றை அவர் கொடுக்க வேண்டும், மற்றும் அவ்வாறு கோரப்பட்ட அலுவலர் கைது செய்வதற்கு முன்பு அக்கட்டளையின் சாராம்சத்தை கைது செய்யப்பட வேண்டியவருக்கு அறிவிக்க வேண்டும். மேலும் அத்தகையவரால் வேண்டிக்கொள்ளப்பட்டால் அந்தக் கட்டளையை அவருக்கு காட்டவும் வேண்டும்.

Section 57 Cr P.C கைது செய்யப்பட்ட ஒருவரை இருபத்து நான்கு மணி நேரத்துக்கு மேல் காவலில் வைத்திருத்தல் கூடாது.

பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்பட்ட ஒருவரை, சந்தர்ப்ப சூழ்நிலைகள் அனைத்தையும் கருதும் போது, நியாயமெனத் தோன்றும் கால அளவிற்கு மேற்பட்டு காவல் அலுவலர் எவரும், காவலில் வைத்திருக்கலாகாது, மற்றும் 167 ஆவது பிரிவின்படி நடுவர் ஒருவரின் சிறப்புக்கட்டளை இல்லாதபோது, கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நடுவரின் நீதிமன்றத்திற்குச் செல்லும் பயணத்திற்கு அவசியமான நேரம் நீங்கலாக, அந்தக் கால அளவானது இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு மேற்படுதல் ஆகாது.

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. எதிரிகளைக் கைது செய்யும் போது அவர்களை மரியாதையாக நடத்த வேண்டும்.	1. திரேக பரிசோதனை என்ற பெயரில் அவர்களுக்கு தேவையற்ற தொல்லைகளும் செயல்களும் செய்தல்.
2. சோதனையின்போது அகப்படும் அனைத்து தனிப் பட்ட சொத்துக்கள் அனைத்தையும் முறையாக கையாள வேண்டும்,	2. சோதனையின் போது அகப்படும் தனிப்பட்ட சொத்துக்களை நிலையத்தில் வைத்துக் கொள்ளல்.
3. கைது அட்டை முறைப்படி தயார் செய்து அடைப்புக் காவலுக்கு அனுப்பும்போது அடைப்புக் காவல் அறிக்கையுடன் கண்டிப்பாக இணைத்து நீதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும்,	3. கைது அட்டையில் உள்ள பத்திகளை கவனக் குறைவாக பூர்த்தி செய்தல்.
	4. பெண்கள் மற்றும் இளம் குற்றவாளிகள் புகைப் படங்களை செய்தித்தாள்களில் கொடுத்தல்.

9. ஒப்புதல் வாக்குமூலம்

பிரிவு 163 கு,வி.மு.ச ¬ 24 – இந்திய சாட்சிய சட்டம்

ஒரு காவல் அலுவலர் ஒரு வழக்கின் புலன் விசாரணையின் போது அவ்வழக்கு தொடர்பாக எதிரியை கைது செய்த பின்பு எதிரி தானாகத் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு தானாக முன் வந்து அந்த குற்றத்தைப் பற்றி செய்த விதம், செய்ய பயன்படுத்திய ஆயுதம், செய்த இடம், அந்த குற்றத்தின் தடயங்களை எங்கு மறைத்து வைத்துள்ளார், திருட்டுப் பொருளை யாரிடம் விற்றுள்ளார் அல்லது அடமானம் வைத்துள்ளார் என்பது பற்றி கொடுக்கும் வாக்குமூலமே ஒப்புதல் வாக்குமூலம். இந்த வாக்குமூலத்தை எதிரி தானாக முன் வந்து சொல்ல வேண்டும். தூண்டுதல், மிரட்டுதல், உறுதிமொழி எதுவும் கொடுத்தல் கூடாது. அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் பட்சத்தில் நம்பகத்தன்மையுள்ள இரண்டு சாட்சிகள் முன்னிலையில் காவல் அலுவலர் பதிவு செய்ய வேண்டும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சொல்லக்கூடிய ''என்னைக் கூட்டிச் சென்றால் நான் சம்பவத்தில் உபயோகப்படுத்திய ஆயுதம் / திருடிய சொத்துக்களை மறைத்து வைத்துள்ள இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் செய்கிறேன்'' என்ற பகுதி மட்டும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன்படி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் கையொப்பம், காவல் அலுவலர் கையொப்பம் இட வேண்டும். மேற்படி ஆவணம் 1+2 தயார் செய்து அசல் நகலை அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நகல்களை நிலையக் கோப்பிலும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்திற்கு வழக்கு நாட்குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட எதிரிகள் ஒரு வழக்கில் சம்மந்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் சொத்தை தனித் தனியே மறைத்து வைத்திருக்கும்போது ஒவ்வொரு எதிரியையும் தனித்தனியே விசாரித்து ஒப்புதல் வாக்கு மூலம் பெறவேண்டும்.

Section 163 Cr P.C. தூண்டுதல் எதையும் முற்படுதல் கூடாது

1) காவல் அலுவலரோ, அதிகாரத்திலுள்ள வேறொருவரோ, 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 24 ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள படியான தூண்டுதல், மிரட்டுதல், அல்லது வாக்குக் கொடுத்தல் எதையும் செய்ய முற்படுதலோ, செய்தலோ, செய்விக்க முற்படுதலோ, செய்வித்தலோ ஆகாது.

2) ஆனால் இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் புலனாய்வின்போது தன்னிச்சையாகவே ஒருவர் வாக்குமூலம் கொடுக்க முனைந்தால் அவ்வாறு கொடுப்பதை காவல் அலுவலர் அல்லது வேறெருவரும் எச்சரிக்கை மூலமாகவோ, வேறு விதமாகவோ தடுத்தல் ஆகாது

இருப்பினும் இந்தப் பிரிவிலும் எதுவும் 164 ஆவது (4) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளைப் பாதித்தல் ஆகாது.

Section 24 I.E. Act 1872 –

எதிரி மீதுள்ள குற்றச்சாட்டு சம்பந்தமாக அதிகாரத்திலுள்ள ஒருவரால் செய்யப்படும் தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதியால் எதிரியின் ஒப்புதலுரை விளைவிக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றத்திற்குத் தோன்றுவதுடன், அந்த ஒப்புதலுரை கொடுப்பதால் எதிரியின் மீதுள்ள அந்த நடவடிக்கையில் உலகியல் சார்ந்த அனுகூலம் எதையனும் அவர் பெறலாமென்றோ அல்லது உலகியல் சார்ந்த பொல்லாங்கு எதையேனும் அவர் தவிர்க்கலாமென்றோ அவர் உத்தேசிப்பதற்கு நியாயமெனத் தோன்றும் ஆதாரங்களை அவருக்கு அளிப்பதற்கு, அத்தகைய தூண்டுதலோ, அச்சுறுத்தலோ, வாக்குறுதியோ நீதிமன்றத்தின் கருத்துப்படி போதுமானதாக இருக்குமானால், எதிரியால் அல்லது கொடுக்கப்படும் ஒப்புதலுக்கு குற்ற வழக்கு நடவடிக்கையில் தொடர்புற்றதாகும்.

Section 27 I.E. Act 1872 – எதிரியிடமிருந்து பெற்ற தகவலில் எவ்வளவு மெய்ப்பிக்கப் படலாம்

இருப்பினும் குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்டு ஒரு காவல் அலுவலரின் பாதுகாவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெற்ற தகவலின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்டதாக பொருண்மை எதையும் பற்றி சாட்சியம் கொடுக்கப் படுகிறபோது, அத்தகைய தகவல் எந்த அளவு அந்தத் தகவலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைக்கு ஐயத்திற்கிடமின்றி சம்பந்தமுடையதாயிருக்கிறதோ அந்த அளவு தகவலை, அது ஒப்புதலுரையாக ஆனாலும் சரி இல்லையென்றாலும் சரி, மெய்ப்பிக்கலாம்.

செய்யவேண்டியவை

1. கைது செய்யப்படும் இடத்திலேயே இரண்டு சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படல் வேண்டும்,
2. அடைப்புக் காவல் அறிக்கையுடன் கண்டிப்பாக ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் வழக்குச் சொத்துக்களோடு உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
3. இரண்டு சாட்சிகளை வழக்கிற்காக சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
4. சமீபத்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் கையெழுத்து பெற வேண்டிய அவசியம் இல்லை.

செய்யக்கூடாதவை

1. ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்புவதில் தாமதம் செய்தல்.

10. வீடு சோதனை

வழக்கின் புலன் விசாரணையின் தொடர்பாக குடியிருப்புக்கள், அலுவலகங்கள், அறைகள், நாற்புறமும் மறைக்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றை சோதனையிட கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

i. சோதனை செய்யும் அலுவலர் ஒரு இடத்தை சோதனை இடுவதற்கு முன்பு நீதிமன்றத்தில் இருந்து சோதனை கட்டளை பெற வேண்டும். கால அவகாசம் இல்லை என்று தெரியவரும் நிலையில் அவர் நீதிமன்றத்திற்கு முன் தகவல் (Advance Intimation) அனுப்பிவிட்டு உடனடியாக சோதனையை துவக்கலாம். **(165 கு.வி.மு.ச)**

ii. நீதிமன்றத்தால் அதிகாரம் வழங்கப்படும் எந்த ஒரு நபரும் வீடு சோதனை செய்யலாம்.

iii. சோதனையிடச் செல்லும் போது அந்தப் பகுதியைச் சேர்ந்த மரியாதைக்குரிய இரண்டு சாட்சிகளை தம்முடன் அழைத்துச் செல்ல வேண்டும்.

iv. வீடு சோதனையின்போது பெண்கள் இருப்பின் அந்தப் பகுதியைச் சேர்ந்த மரியாதைக்குரிய இரண்டு பெண்கள் மற்றும் பெண்காவலர்களை உடன் வைத்துதான் சோதனை செய்ய வேண்டும்.

v. சோதனை செய்யப்படவேண்டிய வீட்டில் உள்ள அதன் உரிமையாளருக்கோ, அல்லது அங்கு இருக்கும் நபர்களுக்கோ வீடு சோதனை குறித்து தகவல் தெரிவிக்கவேண்டும்.

vi. சோதனையிடுவதற்கு முன்பு அந்தச் சோதனை செய்யும் இடத்தின் உரிமையாளர் அல்லது அங்கு சோதனையின் போது ஆஜரில் இருக்கும் நபர்கள் சோதனை செய்யும் அலுவலர் மற்றும் சாட்சிகள் அனைவரையும் சோதனை செய்த பின்பு தான் சோதனை மேற்கொள்ள வேண்டும்.

vii. சோதனை செய்யப்பட வேண்டிய வீட்டில் உள்ளவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும். வீட்டின் உரிமையாளர் மற்றும் சாட்சிகள் முன்னிலையில்தான் சோதனை நடத்த வேண்டும்.

viii. சோதனை செய்வதற்கு இடையூறுகள் விளைவிக்க முயன்றால் குறைந்த அளவில் அதிகாரத்தை பயன்படுத்தலாம்.

ix. வீட்டுச் சோதனையின் போது சந்தேகத்தின் பேரில் தனிப்பட்ட நபரையும் சோதனை செய்யலாம்.

x. வீடு சோதனை பட்டியல் (House Search List) நான்கு பிரதிகளாக தயார் செய்ய வேண்டும். கைப்பற்றப்படும் பொருட்களை அதில் குறிப்பிடவேண்டும். அதில் வீட்டு உரிமையாளர் அல்லது ஆஜரில் இருப்பவர் மற்றும் சாட்சிகள், கைப்பற்றிய அதிகாரி ஆகியோர் கையொப்பம் இடல் வேண்டும். அதன் அசலை நீதிமன்றத்திற்கும், நகல்களில் ஒன்றை வீட்டின் உரிமையாளர் அல்லது ஆஜரில் இருப்போருக்கு ஒப்புதல் பெற்று வழங்க வேண்டும். மற்ற இரண்டு நகல்களை வழக்கு கோப்பிலும், அடிக்கட்டையிலும் (House search list book counterfoil) வைக்க வேண்டும்.

xi. வீடு சோதனை பட்டியலின் படி கைப்பற்றப்படும் அனைத்து பொருட்களும் படிவம் – **91** ன் மூலம் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

xii. சோதனையின் போது எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை எனில் சோதனை பட்டியலில் எந்தப் பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று குறிப்பிடவேண்டும்.

xiii. ஒரு நீதிமன்ற நடுவரின் அதிகார எல்லைக்கு வெளியே செய்யும் பட்சத்தில் அந்தப் பகுதிக்கு உட்பட்ட நீதிமன்ற நடுவருக்கு முன் தகவல் (Advance Intimation) அனுப்ப வேண்டும்.

xiv. சோதனை ஆணை பெற்று சோதனை மேற்கொள்ளும் வழக்குகளில் கைப்பற்றப்படும் சொத்துக்கள எந்த நீதிமன்றத்தில் இருந்து உத்திரவு பெறப்பட்டதோ அந்த நீதிமன்றத்தில் இரவு, பகல் எந்த நேரமாகிலும் சோதனை முடிந்த உடனே (Soon after the search) கால தாமதமின்றி ஒப்படைக்க வேண்டும்.

xv. சோதனை மேற்கொள்ளும் இடம் வேறொரு காவல் நிலைய எல்லைக்குட்பட்டு இருப்பின் அக்காவல் நிலைய காவல் பொறுப்பு அலுவலருக்கு சோதனை செய்வதற்கு முன்பே அறிவிப்பு தகவல் கொடுக்க வேண்டும். அதன் பேரில் அந்த காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் உடனிருப்பார்.

Section 100 Cr P.C. –

1) இந்த பிரிவின்படி, சோதனையோ, ஆய்வோ, செய்வதற்குட்பட்டுள்ள எந்த இடமேனும் மூடப் பட்டிருக்கும் போதெல்லாம் பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற அலுவலரோ வேறு எவருமோ கோரிக்கை யிடுவதுடன் பிடிகட்டளையையும் காட்டுவாரானால், இந்த இடத்தில் குடியிருக்கின்ற அல்லது அதன் பொறுப்பினைக் கொண்டுள்ள எவரும், அவரைத் தடையின்றி அந்த இடத்திற்குள் நுழைய விடவேண்டும், அங்குச் சோதனையிடுவதற்கு நியாயமான வசதிகள் அனைத்தையும் அளித்தலும் வேண்டும்.

2) மேற்சொன்னவாறு அந்த இடத்தற்குள் நுழைவு கிட்டவில்லையானால், பிடி கட்டளையை நிறை வேற்றுகின்ற அலுவலரோ, வேறு எவருமோ 47 ஆவது பிரிவின் (2) வது உட்பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

3) அத்தகைய இடத்தில் அல்லது அதன் சுற்றுப்புறத்தில், எந்த பொருளுக்காகச் சோதனை செய்ய வேண்டுமோ, அந்த பொருள் எதையும் ஒருவர் தம் உடம்பில் மறைத்து வைத்திருப்பதாக நியாயமான சந்தேகம் ஏற்படுமிடத்து, அவரைச் சோதனை போடலாம். அத்தகையவர் ஒரு பெண்ணாயிருப்பின், அச்சோதனை, மற்றொரு பெண்ணால் சற்றும் பண்பு குலையாத வகையில் செய்யப்படுதல் வேண்டும்.

4) இந்த பிரிவின்படி சோதனை போடுவதற்கு முன்பு, சோதனைச் செய்யப் போகிற அலுவலரோ வேறு எவருமோ, எந்த வட்டாரத்தில் சோதனையிடப்பட வேண்டிய இடம் அமைந்துள்ளதோ அதில் வசிப்பவர்களில் சுயேச்சையான, மதிப்பிற்குரிய இருவர் அல்லது இருவருக்கும் மேற்பட்டவர்களை, அல்லது மேற்சொன்ன வட்டாரத்தில் வசிப்பவரில் அத்தகையவர் எவரும் கிடைக்கவில்லை என்றால் அல்லது அச்சோதனைக்கு ஒரு சாட்சியாக இருக்க விரும்பவில்லையென்றால், வேறு எந்த வட்டாரத்திலேனும் வசிப்பவர்களில் அத்தகைய இருவர் அல்லது இருவருக்கும் மேற்பட்டவர்களை, மேற்படி சோதனைக்கு சாட்சியாக வந்திருக்குமாறு கோரவேண்டும், மற்றும் அவ்வாறு செய்ய அவர்களுக்கோ, அவர்களில் எவருக்குமோ, எழுத்து மூலமான உத்தரவொன்றைப் பிறப்பிக்கலாம்.

5) அந்த சோதனை அவர்களது முன்னிலையில் செய்யப்படவேண்டும். மற்றும் அத்தகைய சோதனையின்போது கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட்களையும் அவை முறையே, காணப்பட்ட இடங்களையும் குறிப்பிடுகின்ற வீடு சோதனை பட்டியலொன்று (House Search List) தயாரிக்கப்பட்டு, அத்தகைய சாட்சிகளால் கையொப்பம் இடவேண்டும், ஆனால் இந்தப் பிரிவின்படி நடத்தப்படும் சோதனைக்குச் சாட்சியாக இருக்கின்ற எவரையும் அச்சோதனைக்குச் சாட்சியாக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்குமாறு, அதற்கென அந்நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தாலன்றி, கோரக்கூடாது.

6) சோதனையிடப்படும் இடத்தில் வசிப்பவரை, அல்லது அவர் சார்பாக எவரையும், அந்தச் சோதனை நடக்கும் ஒவ்வொரு தடவையிலும் வந்திருப்பதற்கு அனுமதிக்க வேண்டும். மற்றும் இந்தப் பிரிவின்படி தயாரிக்கப்பட்ட பட்டியலின் நகலொன்றை மேற்சொன்ன சாட்சிகளால் கையொப்பமிடப்பட்டு அந்த இடத்தில் வசிப்பவருக்கோ, அத்தகையவருக்கோ கொடுக்கப்படல் வேண்டும்.

7) ஒருவரை (3) உட்பிரிவின்படி சோதனையிடும்போது, கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருள்களுக்கும் பட்டியலொன்று தயாரிக்கப்படவேண்டும். மற்றும் அதன் நகல் ஒன்று அத்தகையவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

8) இந்தப் பிரிவின்படி நடக்கும் சோதனைக்குச் சாட்சியாக வந்திருக்க வேண்டுமென்று தமக்குக் கொடுக்கப்பட்ட, அல்லது கொடுக்கப்படுவதற்கு முற்பட்ட எழுத்து மூலமான உத்தரவு வாயிலாக ஒருவர் வேண்டப்பட்டிருந்தும், நியாயமான காரணமின்றி, அவ்வாறு செய்ய அவர் மறுப்பாரானால், அல்லது, செய்வதைப் புறக்கணிப்பாரானால், அவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் 187 ஆவது பிரிவின்படி குற்றமொன்றைச் செய்திருப்பதாகக் கருதப்படுவார்.

Section 47(2) Cr P.C. –

2) (1) ஆவது உட்பிரிவின்படி அத்தகைய இடத்திற்குள் நுழைய முடியவில்லையாயின், ஒரு பிடிகட்டளையை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தில், அத்தகைய இடத்திற்குள் நுழைந்து அதனை சோதனையிடுவது எவருக்கும் சட்டப்பூர்வமானதாகும். மற்றும் ஒரு பிடி கட்டளையைப் பெறலாம் என்றாலும், கைது செய்யப்படவேண்டியவருக்கு தப்பித்து செல்லும் வாய்ப்பினைக் கொடுக்காமல் அந்தப்பிடி கட்டளையைப் பெற முடியாத சந்தர்ப்பத்தில் ஒரு காவல் அலுவலர் அவ்வாறு செய்வது சட்டப்பூர்வமானதாகும். மற்றும் அத்தகைய இடத்திற்குள் புகுவதற்காக, மேற்சொன்ன எவரும் தமக்குள்ள அதிகாரத்தையும் நோக்கத்தையும் அறிவித்தும் நுழைவை உரியவாறு கோரியதற்கும் பின்பு, அவரால் புகமுடியவில்லையாயின், வீடு அல்லது இடம் எதிலும் அது கைது செய்யப்பட வேண்டியவருடையதாயினும் அதன் வெளிக்கதவு அல்லது உட்கதவையோ ஜன்னலையோ உடைத்து திறத்தல் சட்டப்பூர்வமானதாகும்.

செய்யவேண்டியவை

1. முன் தகவலினை உடனுக்குடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.
2. வீட்டு சோதனையின் போது இயன்றவரை ஒளி நாடா முலம் பதிவு (Video graph) செய்வது நல்லது
3. கைப்பற்றப்படும் அனைத்து சொத்துக்களையும் உடனே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
4. வீடு சோதனையின்போது வழக்கிற்குத் தேவை யான நடவடிக்கைகள் மட்டும் மேற்கொள்ள வேண்டும்.
5. முடிந்தவரை வருவாய்துறை (VAO & Village Asst) அலுவலர்களைச் சாட்சிகளாகக் கொள்ள வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. வீடு சோதனையின் போது வழக்கிற்கு தேவை யில்லாத சொத்துக்களுக்கு இடையூறுகள் செய்தல்.
2. வழக்கிற்கு தேவையில்லாத சொத்துக்களை கைப் பற்றுதல்.
3. வீடு சோதனையின் போது வீட்டில் உள்ளவர் களுக்கு தேவையற்ற தொந்தரவுகள் செய்தல்

போலீஸ் – ஆ – 77 A
A
58776

முதலாம் படி

வடிவ எண் 65. ஆணை எண் .544

தமிழ்நாடு காவல் துறை.

நிலையம் xx xxx

மாவட்டம் திருச்சி

சோதனைப் பட்டியல்

(கு.வி.மு.ச . பிரிவு 102, 165)

1. சோதனை நடக்கும் ஊரின் பெயர். உறையூர்

2. (அ) சோதனை செய்யப்பட்ட வீட்டின் உரிமையாளரது பெயர். xxxxx s/o xxxx

(ஆ) கு. வி.மு.ச . பிரிவு 102 (3) அல்லது 165 ன் படி சோதனையிடப்பட்ட நபரின் பெயர். xxxxx s/o xxxxx

3. எத்தகவலின் பேரில் சோதனைப்செய்யப்பட்டது. திருமண உத்தரவுபடி

சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களின் விவரம்	தோராய மதிப்பு ரூ.	பை.
அரசு நெல்லைகளின் பைட்கள் (10)	30,000	
வேறு சிலவும் (1)	3000	
	33,000	

சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களின் விவரம்	தோராய மதிப்பு ரூ.	பை.
மொத்த மதிப்பு 33,000/-		

4. சோதனை செய்த நாளும் நேரமும். 04.10.2007/1600 மணி

5. சோதனையின் போது உடனிருந்த சான்றுலர்களின் ஒப்பம். xxxxx VAO
xxxxx கிராம உதவியாளர்

6. குற்றவியல் நீதிபதிக்கு பட்டியல் அனுப்பப்பட்ட நாளும் நேரமும். 04.10.2007/2000 மணி

7. சோதனையின் போது வீட்டுக்காரர் உடன் இருந்தாரா? இல்லாவிட்டால், அவர் சார்பாக வேறு எவரேனும் உடன் இருந்தாரா? இருந்தார்

(xx xxxxx)

(சோதனை பட்டியல் படியீனை பெற்றுக் கொண்டமைக்காக வீட்டின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாளரது ஒப்பம்.)

SI

சோதனைக்கு பொறுப்புடைய காவல் அலுவலரின் ஒப்பம்.

11. கைது செய்யப்பட்டவரை சோதனை செய்தல்

சந்தேகப்படும் விதத்தில் இருக்கும் எந்த ஒரு நபரையும் சோதனை செய்யும் அதிகாரம் காவல் அலுவலருக்கு (கு.வி.மு.ச. 51) வழங்கப்பட்டுள்ளது.

i. ஒரு நபரை சோதனை செய்வதற்கு முன்பு அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்ட பின்புதான் அவரைச் சோதனை செய்ய வேண்டும். சோதனை செய்யப்படும் நபரை சோதனை செய்வது சம்மந்தமாக கேள்விகள் கேட்கப்பட வேண்டும். மறுக்கும் நிலையில் அவரை சோதனை செய்ய தலை முதல் கால் வரை சோதனை செய்து ஏதாவது பொருட்கள் மறைத்து வைத்துள்ளாரா என்பதை கண்டறிந்து அவ்வாறு இருக்கும் நிலையில் மறைத்து வைப்பதற்கான காரணம், சரியான முகாந்திரம் தெரிவிக்காத நிலையில் அவரைக் கைது செய்யலாம்.

ii. போதைக் குற்ற வழக்குகளில் (NDPS) சந்தேகப்படும் நபரிடம் ''உங்களிடம் போதை பொருள் உள்ளதாக தகவல் உள்ளது, எனவே நான் உங்களை சோதனை செய்யலாமா அல்லது உங்களை சோதனை செய்ய நிர்வாகத் துறை நடுவர் மூலமோ அல்லது நீதித்துறை நடுவர் மூலமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ முன் நிறுத்தி சோதனை செய்யலாமா'' எனக் கேட்டு, ஒப்புதல் பெற்று நீங்களே என்னை சோதனை செய்யலாம் என்று எழுத்து மூலமாக எழுதி வாங்கிக் கொண்டு சோதனை செய்ய வேண்டும்.

iii. சோதனை செய்யும்போது எதரியிடம் இருந்து கிடைக்கப் பெற்ற வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்களை ''கைப்பற்றுதல் மகஜரில்'' கைப்பற்ற வேண்டும். நிலையத்தில் வைத்து கைது செய்யும் போது அகப்பட்ட சொத்துக்களை படிவம் – 91 ன் மூலம் தான் கைப்பற்ற வேண்டும். மேற்படி படிவத்தில் எதிரியின் கையொப்பம் பெற வேண்டும். எதிரியின் தனிப்பட்ட சொத்துக்களை படிவம் 86 ல் கைப்பற்றி அதில் எதிரியின் கையொப்பம் பெற வேண்டும். அதன் ஒரு நகலை எதிரிக்கு வழங்க வேண்டும். அவரது தனிப்பட்ட சொத்துக்களை அவர் சிறைச்சாலையில் அடைக்கப்படும்போது அவர் எங்கு அடைக்கப்படுகிறாரோ அந்த சிறைச்சாலையில் ஒப்புவித்து ஒப்புகை பெறல் வேண்டும்.

iv. பெண்களைச் சோதனை செய்யும் போது, பெண்களைக் கொண்டுதான் சோதனை செய்ய வேண்டும். (51 (2) – கு.வி.மு.ச). சம்பந்தப்பட்ட பதிவுருக்களில் சோதனை செய்ய உதவிய பெண்களின் கையொப்பம் பெற வேண்டும்.

v. கைதி திரேக பரிசோதனைப் பதிவேட்டில் (Prisoner Search Register) மூத்த காவல் அலுவலர், நிலைய எழுத்தர் மற்றும் கைதி ஆகியோர் கையெழுத்துச் செய்யவேண்டும். PSO 636(3)

vi. சோதனையின் போது அவரிடம் ஆயுதங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை கைப்பற்ற வேண்டும் (52 கு.வி.மு.ச)

vii. சோதனையின் போது அவர் உடலில் ஏதாவது காயங்கள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ குறிப்பாணையுடன், கைதி வழிக் காவல் மூலம் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். (53 கு.வி.மு.ச) காயம் ஏதாவது இருந்தால், அதன் தன்மையை கைதிகள் பரிசோதனைப் பதிவேடு, கைது குறிப்பாணை மற்றும் அடைப்புக் காவல் அறிக்கை PSR, Arrest memo, Remand Report ஆகியவற்றில் குறிப்பிட வேண்டும்.

viii. எதிரி மருத்துவ சிகிச்சைக்கு தன்னை அனுப்பும்படி கோரும்போது உடனடியாக மருத்துவ குறிப்பாணையுடன், கைதி வழிக் காவல் மூலம் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். (54 கு.வி.மு.ச)

Section 51 Cr PC–

கைது செய்யப்பட்டரை சோதனையிடுதல் (Search of the prisoner)

1) பிணையில் விடுவதற்கு வகை செய்யாத ஒரு பிடிகட்டளையின்படி ஒருவர் ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்படும்போதெல்லாம் அல்லது பிணையில் விடுவதற்கு வகை செய்கிற ஒரு பிடி கட்டளையின்படி அவ்வாறு காவல் அலுவலரால் கைது செய்யப்பட்டு, ஆனால் கைது செய்யப்பட்டவர் பிணையம் கொடுக்க முடியாதிருக்கும் போதெல்லாம் மற்றும் பிடிகட்டளையில்லாமலோ ஒரு பிடிகட்டளையின்படி தனிப்பட்ட ஒருவரோ ஒருவர் கைது செய்யப்பட்டு கைது செய்யப்பட்டவரைச் சட்டப்படி பிணையில் விடக்கூடாத போதெல்லாம் அல்லது அவர் பிணையம் அளிக்க இயலாத போதெல்லாம்

கைது செய்கின்ற அலுவலரோ அல்லது தனிப்பட்ட ஒருவரால் கைது செய்யப்படும் போது அவர் கைது செய்யப்பட்டவரை எவரிடம் ஒப்படைக்கிறாரோ அந்தக் காவல் அலுவலரோ, கைது செய்யப்பட்டவரை சோதனை செய்து அவரிடத்தில் காணப்படும் அவசியமான உடுக்கும் ஆடைகள் தவிர மற்ற அனைத்து உருப்படிகளையும் பாதுகாப்பில் வைக்கலாம். மற்றும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து, காவல் அலுவலரால் கைக்கொள்ளப்பட்ட உருப்படிகளைக் குறிப்பிடுகின்ற வரவுச் சீட்டு ஒன்று அத்தகையவருக்கு கொடுக்கப் படுதல் வேண்டும்.

2) ஒரு பெண்ணைச் சோதனை செய்விப்பது அவசியமாக இருக்கும் போதேல்லாம் சற்றும் பண்பு குறையாத வகையில் வேறொரு பெண்ணால் அச்சோதனை செய்யப்படுதல் வேண்டும்.

Section 52 Cr PC – தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.

இந்தச் சட்டத்தின்படி கைது செய்கின்ற அலுவலர் அல்லது வேறொருவரும், கைது செய்யப்பட்டவர் தம் வசம் வைத்திருக்கும் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் எவற்றையும் அவரிடமிருந்து எடுக்கலாம், மற்றும் அவ்வலுவலரோ அல்லது கைது செய்கின்றவரோ கைது செய்யப்பட்டவரை, எவரது முன்னிலையில் கொண்டு செல்ல வேண்டுமென்று இந்தச் சட்டத்தால் கோரப்படுகிறதோ, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலரிடம் அவ்வாறு எடுக்கப்பட்ட அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைத்தல் வேண்டும்.

Section 53 Cr P.C : - காவல் அலுவலரின் வேண்டுகோளின்பேரில் குற்றம்சாட்டப்பட்டவரை மருத்துவர் ஒருவர் பரிசோதனை செய்தல்

1) குற்றத்தைச் செய்ததான ஒரு குற்றச் சாட்டின் மீது ஒருவர் கைது செய்யப்படும் போது, அவரது உடம்பை பரிசோதனை செய்தால், அக்குற்றம் செய்யப்பட்டது பற்றிய சான்றை அச்சோதனை அளிக்கும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்களை அக்குற்றத்தின் தன்மையும் அது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் சூழ்நிலைகளும் அளிக்குமேயானால், அப்போது உதவி ஆய்வாளரின் நிலைக்குக் கீழ்ப்படாத ஒரு காவல் அலுவலரின் வேண்டுகோளின் பேரில் பதிவு பெற்ற ஒரு மருத்துவரும், அவருக்கு உதவியாகவும் அவரது கட்டளையின்படியும் நல்லெண்ணத்துடன் செயற்படுகின்ற எவரும், மேற்சொன்ன சான்றை அளிக்கக்கூடிய விவரங்களை உறுதியாகத் தெரிந்து கொள்வதற்காக நியாயமாக வேண்டிய அளவிற்கு, கைது செய்யப்பட்டவரைப் பரிசோதனை செய்தலும், அந்த நோக்கத்திற்காக நியாயமாக வேண்டிய அளவிற்கு வன்முறையைக் கையாளுதலும் சட்டப்பூர்வமானதாகும்.

2) இந்தப் பிரிவின்படி ஒரு பெண்ணின் உடம்பு பரிசோதனை செய்யப்பட வேண்டியபோதெல்லாம் அப்பரிசோதனை பதிவு பெற்ற ஒரு பெண் மருத்துவரால் அல்லது அவரது மேற்பார்வையின் கீழ் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

Section 54 Cr P.C :- கைது செய்யப்பட்டவரின் வேண்டுகோளின் மீது அவரை மருத்துவ பரிசோதனை செய்தல்

1) ஒரு குற்றச்சாட்டின் மீதோ, வேறு விதமாகவோ கைது செய்யப்படும் ஒருவர், ஒரு நடுவர் முன் நிறுத்தப்படும் போது அல்லது காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது, எந்த நேரத்திலும், தம் உடம்பை பரிசோதனை செய்தால், தம்மால் குற்றம் எதுவும் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவதைப் பொய்ப்பிக்கின்ற அல்லது தம் உடம்புக்கு வேறெவரேனும் செய்த குற்றம் எதையும் மெய்ப்பிக்கின்ற சாட்சியத்தை அளிக்கும் என்று சொல்லித் தம் உடலைப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்வாரானால், அந்த வேண்டுகோள் அலைக்கழிவு செய்வதற்காகவோ, தாமதம் செய்வதற்காகவோ, நீதியின் நோக்கத்தைச் சிதைப்பதற்காகவோ செய்யப்படுகிறது என்று அந்நடுவர் கருதினாலன்றி, பதிவு பெற்ற ஒரு மருத்துவரால் அத்தகையவரின் உடம்பை அவ்வாறு பரிசோதனை செய்வதற்கு அவர் கட்டளையிடவேணடும்.

PSO 636 – கைதி சோதனை

1) பிணையில் விடுவிக்கப்படாத கைதிகளைக் காவல் நிலையத்துக்குக் கொணடு வந்தவுடன் சோதனை செய்து, அவசியமாய் அணியவேண்டிய உடையைத் தவிர அவர்கள் உடல்களின்மேல் சகல சொத்தினையும் 86 ஆம் எண் படிவத்துடன் சம்பந்தப்பட்ட சிறைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

2) கைதி வைத்துக் கொண்ட அணியும், உடுப்பும் நீங்கலாக, சொத்துப்பட்டியல் ஒன்றை (படிவம் 85) தயார் செய்து, விபரங்களை கைதிகள் சோதனை பதிவேட்டில் (Prisoner Search Register) எழுதிக் கொண்டு, அதில் முதுநிலைக் காவல் அலுவலர், காவல் நிலைய எழுத்தர், கைதி ஆகியோர் கையெழுத்துச் செய்ய வேண்டும்.

செய்யவேண்டியவை

1. எதிரியை திரேக பரிசோதனை செய்யும்போது அவர்மீதுள்ள அனைத்து சொத்துக்களையும் வழக்குச் சொத்து, தனிப்பட்ட சொத்து என்று பிரித்து தனித்தனியாக பாகுபடுத்தி உரிய படிவத்தில் கைப்பற்றுதல் வேண்டும். பின்பு அவைகளை நீதிமன்றம் அல்லது உரிய சிறைச்சாலைக்கு காலதாமதமின்றி அனுப்பிட வேண்டும்.

2. எதிரி மீது காணப்படும் அனைத்துக் காயங் களையும் கண்டிப்பாக PSR ல் குறிக்க வேண்டும்.

3. எதிரியை அடைப்புக்காவலுக்கு அனுப்புமுன் அவரை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தி மருத்துவரின் சான்று பெற்று பின்பு அனுப்ப வேண்டும்.

4. கைதிவழிக்காவல் செல்லும் காவல் ஆளிநர்களின் கையொப்பத்தை PSR, Sentry Relief Book ஆகியவற்றில் கண்டிப்பாக வாங்கிய பின்புதான் கடவுச்சீட்டுடன் அனுப்பி வைக்கவேண்டும்.

செய்யக்கூடாதவை

1. எதிரியை திரேக பரிசோதனை செய்யும்போது அவர்மீதுள்ள அனைத்து சொத்துக்களையும் வழக்குச் சொத்து, தனிப்பட்ட சொத்து என்று பிரித்து தனித்தனியாக பாகுபடுத்தி உரிய படிவத்தில் கைப்பற்றிய பின்பு நிலையத்தில் வைத்திருத்தல்.

2. திரேக பரிசோதனை செய்யும்போது எதிரியை கண்ணியக் குறைவாக நடத்துதல்.

12. பிணையில் விடுவதற்கான வகை முறைகள்

பிணையில் விடக்கூடிய குற்றம் செய்த நபரை கைது செய்து நிலையம் கொண்டுவரும் போது புலன் விசாரணை அலுவலர் அவருக்கு யாரேனும் பிணையம் கொடுப்பாரானால் அவரை பிணையில் விடுவிக்கலாம். (59, 169 – கு.வி.மு.ச) (காவல் நிலை ஆணைகள் எண் 655)

i. பிணைப் பத்திரம் (காவல் ஆணை – 641, படிவம் எண் 93) மூலம் இரு பொது நபர்கள் பிணையில் விடுவிக்கலாம்.
ii. சாதாரண வழக்குகளில் கைது செய்யப்படும் நபரை புலன் விசாரணை அலுவலர் அவர் விரும்பும் நிலையில் பிணைதாரர்கள் மூலமோ அல்லது பிணைதாரர்கள் இன்றியோ பிணையில் விடுவிக்கலாம்.
iii. கைது செய்யப்படும் முதியோர்கள், குழந்தைகள், பெண்கள், உடல் குன்றியவர்களாக இருப்பின் பிணையில் விடுவிக்கலாம்.
iv. இரு பொது நபர் பிணையாளர்களிடம் சரியான பெயர், முகவரி அடங்கிய குடும்ப அட்டை / ஒட்டுநர் உரிமம் / வங்கிக் கணக்குப் புத்தகம் / வாக்காளர் அட்டை ஆகியவைகளின் நகல்கள் கட்டாயம் பெற வேண்டும். முடிந்தவரை உள்ளூர் பிணையாளராக இருத்தல் வேண்டும்.
v. பிணையில் விடுவிக்கும் போது பிணைதாரர்களிடமும், எதிரிகளிடமும் ஒரு குறிப்பிட்ட பிணை முறித் தொகை குறிப்பிட்டும், குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில், சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்பதை தெரிவிக்க வேண்டும்.
vi. பிணைப் பத்திரம் – பிணை முறி ஆவணத்தில் எதிரியிடமும், பிணைதாரர்களிடமும் கையொப்பம் பெற்று புலன் விசாரணை அதிகாரியும் கையொப்பம் இட வேண்டும். குறிப்பிட்ட தேதியில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாதபட்சத்தில், பிணைதாரர்கள் மீது 81 கு.வி.மு.ச. படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது சம்மந்தமாக பிணையில் விடும்போது ஆஜர் முச்சலிக்கா எழுதி வாங்க வேண்டும்.
vii. காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு மட்டுமே பிணையம் வழங்க அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

Section 59 Cr P.C :- கைது செய்யப்பட்டவர் விடுவிக்கப்படுதல்

ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்பட்டுள்ள ஒருவர் எவரும் தம் சொந்தப்பத்திரத்தின் மீதோ, பிணையின் பேரிலோ, ஒரு நடுவரின் சிறப்பான கட்டளையின்படியோ அல்லாமல், விடுவிக்கப்படுதல் கூடாது.

Section 169 Cr P.C :- சாட்சியம் குறைவுள்ளதாக இருக்கும்போது எதிரியை விடுவித்தல்

எதிரியை நடுவரிடம் அனுப்பி வைப்பதை நியாயமென மெய்ப்பிக்கப் போதுமான சாட்சியோ, நியாயமான சந்தேகத்திற்கான ஆதாரமோ இல்லை என்பதாக இந்த அத்தியாயத்தின் படி நடத்திய புலனாய்வின்பேரில், காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்குத் தோன்றுமானால், அத்தகையவர் காவலில் இருப்பாரானால், அவரை அந்த அலுவலர், காவல் அறிக்கையின் பேரில் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும், எதிரியை விசாரிக்க அல்லது மேல் விசாரணைக்காக அனுப்பவும், அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடுவர் முன், கோரப்பட்டால், அல்லது கோரப்படும்போது முன்னிலையாவதற்கு அந்த அலுவலர் உத்திவிடுகிற படி பிணையாள்களுடனோ, இல்லாமலோ பத்திரமொன்றை (Bail Bond) எழுத வைப்பதின் பேரில், அவரை விடுவித்தல் வேண்டும்.

PSO 655 :- காவல் நிலைய பொறுப்பு அலுவலர் மட்டும் பிணையில் விடலாம்

குவிமுச 436, 437 பிரிவுகளின் கீழ் காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு மட்டும் பிணையில் விடுவிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு விசாரணை அலுவலர் பிணையில் விடுவிக்கும்படி பரிந்துரையுடன் ஒருவரை அவரிடம் அனுப்பலாம். குவிமுச 169 வது பிரிவின் கீழ், ஒரு காவல் நிலைய பொறுப்பு அலுவலரோ விசாரணை அலுவலரோ குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை விடுவிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்,

செய்யவேண்டியவை

1. பிணைப்பத்திரத்தில் எதிரியின் கையொப்பம் கண்டிப்பாக பெற வேண்டும்.
2. பிணையில் விடுவிக்கும் அலுவலரும் கண்டிப்பாக கையொப்பம் செய்ய வேண்டும்,
3. முக்கியமாக அடிக்கட்டையில் எதிரி, பிணையாட்கள் மற்றும் பிணையில் விடுவிக்கும் அலுவலர் ஆகியோர் கையொப்பம் செய்தல் அவசியம்.

செய்யக்கூடாதவை

1. பிணைப்பத்திரத்தில் அடித்தல் திருத்தல், குறைவான விவரங்கள் இருத்தல்.
2. பிணைப்பத்திரம் என்பது எதிரி சம்பந்தப்பட்ட முக்கியமான ஆவணம் ஆனபடியால் அதனை கவனகுறைவாக கையாளுதல்.

13. கைதி வழிக் காவல் அனுப்பும் முறை

ஒரு கைதியை காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கும், நீதிமன்ற அடைப்புக் காவலுடன் நீதிமன்றத்தில் இருந்து சிறைச்சாலைக்கும் காவல் அலுவலர்களால் ஆஜர் படுத்தப்படும் முறைக்கு கைதி வழிக் காவல் முறை எனப்படும்.

i. நீதிமன்ற விசாரணையின் போது சிறைச்சாலையில் இருந்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் குறிப்பிட்ட தேதியில் கைதி வழிக்காவல் மூலம் ஆஜர் படுத்தி விசாரணை முடிந்து மீண்டும் காவல் நீட்டிப்பு செய்தால் திரும்ப சிறைச்சாலையில் அடைக்கப்படவேண்டும்.

ii. எதிரிகளின் குணம், நடத்தை, குற்றத்தின் தன்மை போன்றவைகளை மனதில் கொண்டு கைதி வழிக் காவல் அலுவலர் விரும்பும் பட்சத்தில் கைதிகளுக்கு கைவிலங்கு, தேவைப்பட்டால் நீண்ட சங்கிலியும் போடப்பட வேண்டும். நீதிமன்ற வளாகத்திற்குள் செல்லும் போது கைதிகளுக்கு நீதிமன்றத்தின் உத்திரவு இல்லாமல் கைவிலங்கு போடக்கூடாது. (PSO – 641)

iii. கொடுங்குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகளுக்கு ஒரு காவல் அலுவலர் மற்றும் காவலர்களின் எண்ணிக்கை அதிகப்படியாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில், எதிரிகளின் தன்மையைப் பொறுத்து நியமிக்கப்படவேண்டும்.

iv. கைதிவழிக் காவலுக்காக நிலைய அதிகாரி காவலர்களுக்கு கடவுச் சீட்டு வழங்கும் போது

- கைதிகளை மிகவும் விழிப்புடன் பாதுகாத்து, எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்றும்,
- தேவையற்ற இடங்களில் கைதிகளை அழைத்துச் செல்லவோ, தங்க வைக்கவோ கூடாது என்றும், வழியில் உள்ள காவல் நிலையங்களில் வைத்துதான் எதிரிகளுக்கு உணவு வழங்குதல் வேண்டும் என்றும்,
- கைதிகளின் உறவினர்களை பார்த்து பேச அனுமதிக்கவோ, உறவினர்களிடமிருந்து பொருட்களை வாங்கவோ அனுமதிக்கக் கூடாது என்றும்,

- எக்காரணம் கொண்டும் காவலர்கள் தங்களது உடைமைகளையும் பொருட்களையும் கைதிகளிடம் கொடுக்க கூடாது என்றும்,
- கைதி வழிக்காவலின்போது காவலர்களின் துப்பாக்கிகளை எக்காரணத்தை முன்னிட்டும் கைதிகளின் கைகளுக்கு கிடைக்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும்,
- அவர்களை செல் போனில் பேச அனுமதிக்கக்கூடாது என்றும்,
- இரவில் தங்க நேரிடும் பட்சத்தில் வழியில் உள்ள ஏதாவது ஒரு காவல் நிலையத்தின் கைதி அறையில் தான் அடைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

PSO 348(12)

(a) : - Escort of Prisoners under Prisoners Act சிறைக்கைதிகளின் சட்டப் பிரிவின் படி கைதிவழிக்காவல் அனுப்பும் முறை

கைதிகளின் எண்ணிக்கை	வழிக்காவலர் எண்ணிக்கை
ஒரு கைதி மட்டும்	2 காவலர்கள்
இரண்டு கைதிகள்	2 காவலர்கள்
இரண்டுக்கு மேல் நான்கு கைதிகளுக்கு மிகாமல்	2 காவலர்கள்
நான்குக்கு மேல் ஆறு கைதிகளுக்கு மிகாமல்	3 காவலர்கள்
ஆறுக்கு மேல் 10 கைதிகளுக்கு மிகாமல்	1 தலைமைக் காவலர் மற்றும் 4 காவலர்கள்.

(b) பெண் கைதியாக இருந்தால் குறிப்பிடப்பட்டுள்ள காவலர் எண்ணிக்கையுடன் ஒரு பெண் காவலர் மற்றும் பெண் வார்டர் அனுப்பப்படல் வேண்டும்.

PSO 641 – கைவிலங்கு பயன்படுத்துதல்

1) ஒரு எதிரி விசாரணையின்போது நீதிமன்றத்தில் இருக்கையில், அவன் நீதிமன்றப் பாதுகாப்பில் இருப்பதாகக் கருதப்படவேண்டும். ஒரு எதிரி கைவிலங்கிடப்படுவதற்கு அவசியமான வகையில் அபாயகரமானவனாயிருந்தால், நீதிமன்றத்துக்கு ஒரு முறையீடு செய்ய வேண்டும். நீதிமன்றம் அவ்விஷயத்தில் தகுதியான கட்டளைகளைப் பிறப்பிக்கும். இக்காரணங்களை முன்னிட்டு, விசாரணையின்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகளை நீதிமன்றத்தின் அனுமதியின்றிக் கைவிலங்கிடலாகாது.

2) விசாரணைக் கைதிகளை நீதிமன்றத்துக்கு கொண்டு போகும் போதும் திரும்பக் கொண்டு வரும் போதும், அவர்கள் மேல் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களின் கொடுந்தன்மை, அல்லது அவர்களுடைய குணம் அல்லது நடத்தையிலிருந்து அத்தகையோர் பலாத்காரத்தை உபயோகிப்பார்கள் என்றோ, அல்லது தப்பித்துக்கொள்ள முயற்சிசெய்வார்கள் என்றோ, அல்லது அவர்களை விடுவிக்க முயற்சி செய்யப்படும் என்றோ, ஒரு நியாயமான முன்னெச்சரிக்கை இருந்தாலன்றி மற்றபடி, அவர்களை கைவிலங்கிட்டு சங்கிலியால் கட்டக்கூடாது. காவலரின் காவலின் கீழ்ப் பொது இடங்களில் செல்லும் தண்டனைக் கைதிகளுக்கும் அதே கொள்கை பயன்படும். கை விலங்குகளையோ, சங்கிலிகளையோ உபயோகப்படுத்த வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பானது காவல் நிலையப் பொறுப்பு அலுவலரையோ அல்லது அவரில்லாவிட்டால் முது நிலையில் அவருக்கு அடுத்து கீழுள்ள அலுவலரையோ சார்ந்ததாகும்.

இயன்றவரை ஒவ்வொரு நிலையிலும் அத்தகையோர் தப்பித்துக்கொள்வதையோ தகாத தொந்தரவைக் கொடுப்பதையோ தடுப்பதற்குப் போதிய அளவு பலமுள்ள காவற்படையை வைத்துக்கொள்ள வேண்டும்.

3) தண்டிக்கப்படாத எதிரிகளை கைவிலங்கிடும்போதெல்லாம் அவ்விபரத்தையும் அதற்கான காரணங்களையும் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் எழுதி வைக்க வேண்டும்.

4) விசாரணையில் உள்ள சிறைக் கைதி வழிக்காவல் காவலர்களால் கழிப்பிடங்களுக்குக் கொண்டு செல்லப்படும் போதெல்லாம் அக்கைதிகளைநீளமான சங்கிலியால் பிணைத்து பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அவர்கள் தப்பித்துச் செல்லாமல் தடுக்கும் பொருட்டு அச்சங்கிலியின் கைப்பிடியை பிடித்துக்கொண்டு வெளியில் காவலிருக்க வேண்டும்.

5) கட்டுப்படுத்துவதற்கு கடினமான தீவரவாத அமைப்பைச் சார்ந்த உறுப்பினர்களைத் தவிர அரசியல் சிறைக் கைதிகள் மீது கைவிலங்குகளைப் பயன்படுத்தக் கூடாது.

செய்யவேண்டியவை

1. கைதிகளை வழிக்காவல் செய்யும் காவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்க வேண்டும்.
2. கைதிவழிக்காவல் அலுவலர்களுக்கு கடவுச் சீட்டுடன் இரயில் மற்றும் பேருந்து பயண ஆணைகள் கொடுத்து அவற்றின் முக்கியத்துவம் குறித்தும், பயன் படுத்தும் விதம் குறித்தும் தக்க அறிவுரைகள் வழங்குதல் அவசியம்.
3. கைதிவழிக்காவல் முடிந்து திரும்பியதும் அலுவலர் களிடம் இருந்து பயன்படுத்தாத இருப்புப்பாதை மற்றும் பேருந்து பயண ஆணை இவைகளைப் பெறுதல் அவசியம்,
4. இருப்புப்பாதை மற்றும் பேருந்து பயண ஆணை இவைகளை பயன்படுத்திய விபரங்களை நிலை யத்தில் உள்ள அடிக்கட்டையில் பதிவு செய்யப் பட்டுள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும்,

செய்யக்கூடாதவை

1. வழிக்காவலுக்கு, குறைவான காவலர்களை அனுப்புதல்.
2. கைதிவழிக்காவல் அலுவலர்களுக்கு கடவுச் சீட்டுடன் இரயில் மற்றும் பேருந்து பயண ஆணைகள் கொடுத்து அனுப்ப மறந்து விடுதல்.
3. பெண்களுக்கும் இளம் குற்றவாளிகளுக்கும் கைவிலங்கு பயன்படுத்துதல்.

14. படிவம் – 91

காவல் நிலையத்தில் தாக்கலான வழக்குகளில் புலன் விசாரணையின் போது கைப்பற்றப்படும் சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்கு பயன்படுத்தப்படும் படிவம் ஆகும். இது 5 கட்டங்களை உடையது.

i. இப்படிவத்தில் புலன் விசாரணை அலுவலரால் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள், காவல் நிலையத்தில் சாட்சிகளால் ஆஜர் படுத்தப்படும் சொத்துக்கள் மற்றும் பிரேத பரிசோதனைக்குச் செல்லும் காவலர்கள் காவல் நிலையத்தில் ஆஜர் படுத்தும் சொத்துக்கள் அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்படவேண்டும்.
ii. நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் அனைத்துச் சொத்துக்களின் விபரங்கள் (நீளம், அகலம்) ஆகிய வைகளை கைப்பற்றுதல் மகஜரில் உள்ளது போல் அடித்தல், திருத்தல் இல்லாமல் தெளிவாக குறிப்பிடவேண்டும்.
iii. பணம் எனில் வரிசை எண் குறிப்பிட வேண்டும்,
iv. அதிகமான பொருட்கள் இருப்பின் தனித்தாளில் பட்டியல் இட்டு இணைக்க வேண்டும்,

v. இந்த படிவம் ஒரே வரிசை எண்களைக் கொண்ட மூன்று பிரதிகளாக இருக்கும். முதல் இரண்டு பிரதிகளை நீதிமன்றத்திற்கு, கைப்பற்றிய சொத்துக்களுடன் ஒப்புவித்து நீதிமன்ற சொத்து பதிவேட்டு எண் PR/CR/ PI பெற்று இப்புத்தகத்தின் அடிக்கட்டையில் ஒட்டியும், PR/CR/PI எண்ணை மூன்றாவது பிரதியில் எழுதி அதை வழக்கு கோப்பில் வைக்க வேண்டும்.

vi. சொத்துக்கள் காவல் நிலையத்தில் நேரடியாக கைப்பற்றப்படும் போதும், ஆஜர் படுத்தப்படும் போதும், சம்மந்தப்பட்ட சாட்சிகள் / எதிரிகளின் கையொப்பம் பெறப்பட வேண்டும். கைப்பற்றும் அலுவலரும் கையொப்பம் செய்ய வேண்டும்.

vii. கைதி / எதிரி சோதனையின் போது கைப்பற்றப்படும் தனிச் சொத்துக்களை படிவம் 86 ன் மூலம் சம்மந்தப்பட்ட சிறையில் ஒப்புவித்து, ஒப்புகை பெற வேண்டும்.

viii. இப்படிவத்தில் கைப்பற்றப்படும் அனைத்து சொத்துக்களும், அன்றே நீதிமன்றத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

ix. வழக்குகளில் புலன் விசாரணையின் போது கைப்பற்றப்படும் ஆவணங்கள் (Documents) அனைத்தையும் படிவம் – 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பக்கூடாது.

செய்யவேண்டியவை

1. படிவம் தயார் செய்த நாளினையும், சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பிய நாளினையும் கண்டிப் பாக குறிப்பிடல் வேண்டும்.
2. வழக்குச் சொத்து சம்பந்தமான முக்கிய ஆவணம் ஆதலால் கவனமாக கையாளவேண்டும்.
3. நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட இப்படிவத்தின் நகலை புத்தகத்தில் ஒட்டி விட்டு நீதிமன்ற நகலில் குறிப்பிடப்பட்டுள்ள PR / CR / RP எண்களை கண்டிப்பாக அடிக்கட்டையில் எழுதி அதனை கிழித்து எடுத்து வழக்குக் கோப்பில் வைக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. அடித்தல் திருத்தல் இருத்தல்.
2. நீதிமன்றத்திற்கு அனுப்பிய நகல் சேதம் அடைந்து இருந்தால் அதை அப்படியே நிலையத்தில் உள்ள அடிக்கட்டையில் ஒட்டுதல்.
3. சொத்துக்களை இப்படிவத்தின் மூலம் நீதி மன்றத்திற்கு அனுப்புவதில் கால தாமதம் செய்தல்.

15. வழக்கு நாட்குறிப்பு எழுதும் முறை

(காவல் நிலை ஆணை எண் 567, 568, 570, 571, 572) படிவம் எண் 74 (172 Cr.PC)

புலன் விசாரணை வழக்குகளுக்கு (U.I. CASES) வழக்கு நாட்குறிப்பு எழுதும் முறை.

ஒரு வழக்கு சம்மந்தமாக புலன் விசாரணை செய்யும் காவல் அலுவலர் அந்த வழக்குப் பற்றி அன்றாடம் எடுத்த நடவடிக்கை குறிப்புகளைத் தனித் தனியாக அந்தந்த நாளில் வழக்கு நாட்குறிப்பில் எழுதி வரவேண்டும். அந்த வழக்கு நாட்குறிப்பின் தலைப்பில் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் பெயர், குற்ற எண், குற்ற சட்டப்பிரிவு, மாவட்டம், சம்பவம் நடந்த நாளும், நேரமும், இடமும் குறிப்பிட வேண்டும். இது 7 தலைப்புகளில் உள்ளது.

வழக்குநாட்குறிப்பு தேதி – (முதல் நாள் வழக்கு நாட்குறிப்பு)

i. வழக்குப் பதிவு செய்யப்பட்ட நாள், நேரம்,
ii. வாதியின் பெயர் முகவரி
iii. எதிரிகளின் பெயர் முகவரி(கள்)
iv. களவு சொத்து விபரம்
v. கண்டுபிடிக்கப்பட்ட சொத்து விபரம்
vi. கடைசி வழக்கு நாட்குறிப்பு தேதி
vii. வழக்கின் நிலை

இந்தக் தலைப்புகள் வழக்கு நாட்குறிப்பின் இடது புறத்தில் எழுதப்பட வேண்டும். அதற்குக் கீழே காயம்பட்ட / பாதிக்கப்பட்ட / இறந்த நபர்களின் பெயர் விலாசம் குறிப்பிடவேண்டும்.

வலது பக்கத்தில் தொடர்ச்சியாக கீழ்க்கண்டவாறு வழக்கு நாட்குறிப்பு எழுதப்படவேண்டும்.

i. இறப்பு வழக்குகளில் பஞ்சாயத்தார் பெயர் முகவரி குறிப்பிடவேண்டும்.
ii. விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பெயர் முகவரி குறிப்பிடவேண்டும்.
iii. வழக்கின் சுருக்கம் எழுதப்படவேண்டும்.
iv. முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் எழுதப்படவேண்டும்.
v. புலன் விசாரணை ஆரம்பித்த மற்றும் முடித்த நேரம், இடம் ஆகியவற்றைப் பற்றி எழுதப்பட வேண்டும்.
vi. வரைபடம், பார்வை மகஜர், புகைப்படம், சொத்துக்கள் கைப்பற்றிய விபரம் ஆகியவற்றைப் பற்றி எழுதப்படவேண்டும்.
vii. சாட்சிகளின் வாக்குமூலங்களின் சுருக்கம் குறிப்பிடவேண்டும்.
viii. புலன் விசாரணையின் முடிவு பற்றி எழுதப்படவேண்டும்.
ix. கைது, பிணையம், காவல் அடைப்பு பற்றிய விபரம் எழுதப்படவேண்டும்.
x. வாகன விபத்து வழக்கில் வாகனங்களை இயக்கூர்தி ஆய்வுக்கு உட்படுத்திய விபரம் (வாகனங்களின் ஆவணங்கள் குறித்து விளக்கமாக குறிப்பிட வேண்டும்) வாகனங்களின் RC, IC, Tax, Per அவை மற்றும் எதிரியின் D.L., பற்றிய குறிப்புகள், தொலைபேசி எண்கள் போன்றவைகள் தெளிவாக எழுதப்பட வேண்டும்.
xi. வேதியியல் பரிசோதனைக்கு சேகரிக்கப்பட்ட சொத்துக்களின் விபரம், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி குறிப்பிட வேண்டும்.
xii. களவு வழக்குகளில் கைவிரல் ரேகை, கால் பதிவுகள், துப்பறியும் நாய் பற்றிய சம்பவ குறிப்புகள், தடய ஆய்வக நிபுணர்களின் சம்பவ இட பார்வை பற்றிய குறிப்புகள் குறிப்பிடவேண்டும்.
xiii. காய வழக்குகளில் காயம்பட்ட நபர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனை விபரம் குறிப்பிட வேண்டும்.
xiv. வழக்கில் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறிப்பிடவேண்டும்.
xv. வழக்கு நாட்குறிப்பில் புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் இடவேண்டும்.

சாதாரண வழக்குகளில் வழக்கு நாட்குறிப்பு இரண்டு நகல்கள் தயார் செய்து, அசலை நிலைய வழக்கு கோப்பிலும், நகலைக் காவல் ஆய்வாளர் மூலமாக காவல் துணைக் கண்காணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

கொடுங்குற்ற வழக்குகளில் 3 நகல்கள் ஆய்வாளர் தயார் செய்து, அசலை நிலைய வழக்கு கோப்பிலும், ஒரு நகலை அதிகப்படியாக (Extra) உள்ள வழக்கு கோப்பிலும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் மூலமாக காவல் துணைக் கண்காணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

அனைத்து வழக்குகளிலும் அன்றாடம் தயார் செய்யும் சான்றாவணங்களில் அசல்களை நீதிமன்றத் திற்கும், ஒரு நகலை அன்றாட வழக்கு நாட்குறிப்பிடனும் இணைக்கவேண்டும்.

அந்த வழக்கில் தொடர் புலன் விசாரணை செய்யும் நாட்களில் அந்தந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட விபரங்களும் விரிவாக குறிப்பிட்டு அந்தந்த நாளில் வழக்கு நாட்குறிப்பு எழுதப்படவேண்டும்.

நீதிமன்ற நிலுவை வழக்குகளுக்கு (P.T. CASES) வழக்கு நாட்குறிப்பு எழுதும் முறை.

நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகளின் விசாரணை நாட்களில் நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கை குறித்து வழக்கு நாட்குறிப்பில் எழுத வேண்டும். இதில் குற்ற எண், சட்டப்பிரிவு, சம்பவம் நடந்த தேதி, நேரம், இடம், மாவட்டம் ஆகியவைகள் தலைப்பில் குறிக்கப்படவேண்டும். வழக்கு நாட்குறிப்பு தேதி – புலன் விசாரணை வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 7 காலங்களும் எழுதப்பட வேண்டும். அத்துடன் கீழ்கண்ட விபரங்கள் எழுதப்பட வேண்டும்.

இடது புறம் தலைப்பில் நீதிமன்ற நடவடிக்கை நாளினை எழுத வேண்டும் – அதற்குக் கீழ்

நீதிமன்ற கோப்பு எண் (STC, CC, PRC, SC / Year)

i. குற்றப்பத்திரிக்கை நாள்
ii. மொத்த விசாரணை நாட்களின் எண்ணிக்கை
iii. அழைக்கப்பட்ட சாட்சிகள் எண்ணிக்கை /விபரம்
iv. விசாரிக்கப்பட்ட சாட்சிகள் எண்ணிக்கை/ விபரம்
v. பயணப் படி விபரம்
vi. காவல்அலுவலர் வருகை பற்றிய விபரம்
vii. நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்த அரசு வழக்குரைஞர்
viii. அடுத்த விசாரணை தேதி, எதற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
ix. குறிப்பு – இந்தப் பகுதியில் நீதிமன்றத்தில் சாட்சிகள் அரசு தரப்புக்கு சாதகமாகவா அல்லது பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்தார்களா என்ற விபரம் மற்றும் இதர நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகளை விவரமாக எழுத வேண்டும்.

Section 172 Cr P.C :-

1) இந்தப் பிரிவின்படி, புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் ஒவ்வொருவரும், புலனாய்வில் தாம் எடுக்கும் நடவடிக்கைகளை ஒரு நாட்குறிப்பில் அந்தந்த நாளில், தமக்கு வந்து சேர்ந்த நேரம், தம் புலனாய்வைத் தாம் ஆரம்பித்த நேரம், முடித்த நேரம், தாம் பார்வையிட்ட இடம் அல்லது இடங்கள் மற்றும் தம் புலனாய்வின் மூலம் நிச்சயிக்கப்பட்ட விவரங்களைப் பற்றிய குறிப்பு ஆகியவற்றைப் பதிவு செய்து வருதல் வேண்டும்.

2) குற்ற வழக்கு நீதிமன்றம் எதுவும், அந்நீதிமன்றத்தில் பரிசீலனை அல்லது விசாரணையிலுள்ள வழக்கு சம்பந்தமான காவல் நாட்குறிப்புகளைத் தருவிக்கலாம், மற்றும் அத்தகைய நாட்குறிப்புகளை அவ்வழக்கில் சாட்சியமாக அல்லாமல் ஆனால் அத்தகைய பரிசீலனை, அல்லது, விசாரணையில், அந்நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் பயன் படுத்தலாம்.

3) எதிரிக்கோ, அவரது முகவர்களுக்கோ அத்தகைய நாட்குறிப்புகளை வரவழைக்கும் உரிமை கிடையாது. அவற்றை நீதிமன்றம் பார்வையிட்டிருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமே, அவற்றைப் பார்ப்பதற்கும் அவருக்கோ, அவர்களுக்கோ உரிமை கிடையாது. ஆனால் அவற்றை எழுதிய காவல் அலுவலர் நினைவுபடுத்திக் கொள்வதற்காக, அவற்றைப் பயன்படுத்துவாரானால், அத்தகைய காவல் அலுவலரின் கூற்றை முரண்படுத்தும் நோக்கத்திற்காக, நீதிமன்றம் அவற்றை பயன்படுத்துமானால் 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின் வகைமுறைகள் நேர்விற்கேற்ப, இயங்குதல் வேண்டும்.

Section 161 I.E. Act :-

முந்திய கடைசி இரண்டு பிரிவுகளின் வகைமுறைகளில் குறிப்பிட்ட எழுத்து எதுவும், எதிர்த்தரப்பினர் அதைக் கோரினால், தாக்கல் செய்யப்பட்டு, அவருக்குக் காட்டப்படுதல் வேண்டும். அத்தகைய தரப்பினர், தாம் விரும்பினால், அதன் பேரில் குறுக்கு விசாரணை செய்யலாம்.

P.S.O. 567 :-

(1) விசாரணையை குவிமுச 172 ஆவது பிரிவில் நிர்ணயித்துள்ள நாட்குறிப்பாகிய (படிவம் எண் 62) விசாரணை நாட்குறிப்பில் கோப்பு செய்து கொள்ள வேண்டும், அது முதல் தகவல் அறிக்கையின் எண்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) புலனாய்வு அலுவலர் ஒருவர் தனது நிலையத்தில் இல்லாதபோது தினந்தோறும் தனது விசாரணை நாட்குறிப்பை அனுப்பி வைக்க வேண்டும்.

P.S.O. 568 :-

1) ஒரு வழக்கு நாட்குறிப்பிலுள்ள விசாரணைப் பதிவில் விசாரணை அலுவலருக்குத் தகவல் கிடைத்த நேரம், அவர் தனது விசாரணையைத் தொடங்கிய நேரம், முடித்த நேரம், அவர் சென்றுப் பார்த்த இடம் அல்லது இடங்கள், விசாரணை மூலம் அவர் கேட்டறிந்த விபரங்களின் அறிக்கை ஆகிய இவற்றின் அன்றாட விவரங்கள் மட்டும் கொண்டிருக்க வேண்டும்.

2) வழக்கு நாட்குறிப்பு விசாரணை அலுவலரிடம் இருக்கையில் விசாரணைபற்றி அதில் பதிவு செய்யவேண்டும். நாட்குறிப்பு இல்லாவிடில் .விசாரணையை குறிப்பேட்டில் உடனே பதிவு செய்து, அதிலிருந்து வழக்கு நாட்குறிப்பைத் தொகுக்க வேண்டும். ஒரு விசாரணை நடைபெறும் போது காவலர் விசாரித்த ஆட்களின் வாக்கு மூலத்தை உண்மையாகவும் விவரமாகவும் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்படும் இவ்வாக்குமூலங்கள் இயன்றவரை அவர்கள் சொன்னவிதத்திலேயே இருக்கவேண்டுவதுமன்றி, சாட்சிகள் சொல்லும் மொழியில் இருத்தல் வேண்டும். வழக்கு நாட்குறிப்புகளை இரண்டு தனிப்பட்ட பகுதிகளாக, அவையாவன (1) புலனாய்வுப் பகுதி (2) கு,வி,மு,ச 162 ஆவது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலப்பகுதி எனத் தயாரிக்க வேண்டும். எதிரிகளுக்கு கொடுக்க வேண்டிய நகல்களை எழுதுவதற்காக குற்றவியல் துறை நடுவரின் எழுத்தருக்கு இரண்டாம் பகுதியை மட்டும் ஒப்புவிக்க வேண்டும்.

3) காவல் அலுவலர் ஒருவர் தம்மிடம் கொடுக்கப்பட்ட எந்த வாக்குமூலத்தையேனும் குவிமுச 161 ஆவது பிரிவின் கீழ் எழுதிக்கொள்கையில் அவர் எவரொருவர் வாக்குமூலங்களைப் பதிவு செய்கின்றாரோ அவர்கள் ஒவ்வொருவருடைய வாக்குமூலங்களையும் தனித்தனியாகப் பதிவு செய்து கொள்ளவேண்டும். சாட்சிகள் ஒவ்வொருவருடைய வாக்குமூலங்களையும் தனித்தனியே பதிவு செய்யாமை கு,வி,மு,ச, 161(3) ஆவது பிரிவின் வலியுறுத்துக் காப்புரைகளை மீறுவதாகும்.

4) (அ) கு,வி,மு,ச 174 ஆவது பிரிவின் கீழ் புலன் விசாரணைசெய்யும் போது இறந்தவருடைய உறவினர் எவரேனும் கொடுக்கின்ற வாக்குமூலங்களை அல்லது இறப்புக்குக் காரணமான பொருண்மைகளுக்குத் தொடர்பானவற்றைக் கூறும் மற்றவர்கள் வாக்குமூலங்களை வழக்கு நாட்குறிப்பேட்டில் விவரமாக பதிவு செய்ய வேண்டும். இயன்றவிடங்களில் விசாரிக்கப்படுவோர் தாமே கூறும் முறையில் அவர்தம் மொழியிலேயே அவற்றைப் பதிவு செய்யவேண்டும்.

(ஆ) தற்செயலாக இறப்பு ஏற்படும் நேர்வுகளில் பிரேத பரிசோதனை அறிக்கைகளுடன் கூடுதலாக வழக்கு நாட்குறிப்பேடு எழுத வேண்டியதில்லை. ஆனால் பின்வரும் விலக்குகளுக்குட்பட்டு, பிரேத

பரிசோதனை அறிக்கையின் இறுதியில் வழக்கு பற்றிய சுருக்கத்தை ஒருசில சொற்றொடர்களில் குறிப்பிடல் வேண்டும்.

(I) பிணப் பரிசோதனை நடத்தப்பட்டால், அந்தப் பிணப் பரிசோதனையின் முடிவைப் பதிவு செய்யும் பொருட்டு வழக்கு நாட்குறிப்பு ஒன்று எழுதப்பட வேண்டும்.

(II) பிரேத பரிசோதனை செய்யப்பட்டபோது இல்லாத காரணத்தினால் விசாரிக்கப்படாத முக்கியமான சாட்சிகளின் வாக்குமூலங்கள் வழக்கு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

5) நீதிமன்றங்களின் விசாரணைகளின் முன்னேற்றத்தைக் காட்டும் பொருட்டு வழக்குகளின் விசாரணைகள், ஒத்தி வைப்புகள் ஆகிய அனைத்தும் பற்றிய தகவல்களை வழக்கு நாட்குறிப்பேட்டிலும் எழுதிவர வேண்டும்.

P.S.O. 570 :-

வழக்கு நாட்குறிப்புகளை மைபடித்தாள் (Carbon copy) செய்முறையால் இரட்டிப்பாக்கிக்கொண்டு, ஒரு நகலை காவல் நிலையத்தில் கோப்பில் வைத்துக்கொண்டு இன்னொன்றை காவல் வட்ட ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் ஏதேனும் தேவையான குறிப்புரையை எழுதி அதனைக் காவல் கண்காணிப்பாளருக்காவது உட்கோட்ட அலுவலருக்காவது அனுப்ப வேண்டும். வழக்கு நாட்குறிப்புகளில் செய்யப்படும் குறிப்புரைகள் நேர்வுக்கேற்ப காவல் ஆய்வாளர்களுக்கோ அல்லது காவல் நிலைய பொறுப்பு அலுவலர்களுக்கோ குறிப்பிட்ட வழக்கு நாட்குறிப்புகளை அசலில் திருப்பி அனுப்புவதற்கு பதிலாக குற்றக்குறிப்பாணைகள் (Crime Memos) மூலம் அறிவிக்கப்படும்.

குறிப்பு :– (1) மதுவிலக்கு வழக்குகள் நேர்வில் வட்ட ஆய்வாளர்கள் வழக்கு நாட்குறிப்புகளை அவர்களே கோப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(2) தமிழ்நாடு காவல் நகர சட்டப் பிரிவு 64 ¬ 65 ன் கீழான வழக்குகளின் வழக்கு நாட்குறிப்புகளை உட்கோட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டியதில்லை, ஆய்வாளர்களே கூர்ந்தாய்வுக்குப் பின்னர் கோப்பில் வைத்துக் கொள்ளலாம்.

P.S.O. 571 :-

(1) அடைப்புக் காவல் அறிக்கையினை (Remand Report) வழக்கு நாட்குறிப்பு படிவங்களில் எழுத வேண்டும். காவலில் வைக்கப்பட வேண்டுமெனக் கோரும்போது, கு.வி.மு.ச. 167(1) வது பிரிவின்படி வழக்கு நாட்குறிப்பின் நகலொன்றை அனுப்ப வேண்டும். ஆகையால், விசாரணை அலுவலர் ஒரு கைதியை காவலில் வைக்க வேண்டியிருக்குமென்று அறிந்திருக்கும்போது அவர் வழக்கு நாட்குறிப்புக்குக் கூடுதலான மைபடித்தாள் நகலொன்றைத் தயாரிக்க வேண்டும்,

(2) காவல் விசாரணைக்குச் சம்பந்தப்பட்ட பிடி ஆணைகள் அல்லது சோதனை ஆணைகள் பொது அறிவிப்புகள், இதர கட்டளைகள், ஆகிய இவற்றிற்காக குற்றவியல் துறை நடுவர்களுக்கு மனு செய்து கொள்வதற்காகவும், சோதனைப்பட்டியல்கள் அனுப்புவதற்காகவும், இச்செய்தி அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்குத் தொடர்புடையதாக இருப்பின் வழக்கு நாட்குறிப்புப் படிவங்களைப் பயன் படுத்த வேண்டும். மற்றபடி குறிப்புப் படிவம் (படிவம் 61) ஐ பயன்படுத்த வேண்டும்.

P.S.O. 572 :-

மரண தண்டனை விதிக்கப்படுள்ள ஒருவனுடைய கருணை மனுவை மத்திய அரசினரின் உள்நாட்டு அமைச்சகத்துக்கு அனுப்பும்போது, வழக்கமாக அதனை, அவ்வழக்கின் இதர பதிவுக் கட்டுகளோடு காவல் குறிப்பினை ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றைச் சேர்த்து அனுப்பவேண்டுமென்று மைய அரசின் உள்துறை நெறியுறுத்தியுள்ளது. ஆகையால் எதிரிகள் மரண தண்டனை விதிக்கப்பெற்ற வழக்குகள் அனைத்திலும், காவல் கண்காணிப்பாளர்கள், காவல் நாட்குறிப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பின் சான்றிட்ட நகல்கள் இரண்டினை அரசின் உள்துறைக்கு அனுப்ப வேண்டும். உயர் நீதிமன்றம் ஒரு மரண தண்டனைத் தீர்ப்பை உறுதிப்படுத்தினவுடனேஅல்லது அந்நீதிமன்றம் அமர்வு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனையை விதித்தவுடனேயே மேற்காணும் பதிவை இயன்றவரை தாமதமன்றி காவல் கண்காணிப்பாளர்கள் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

செய்யவேண்டியவை

1. அனைத்து விபரங்களும் முழுமையாகவும், அடித்தல் திருத்தல் இல்லாமல் தெளிவாக எழுதப்பட வேள்டும்.
2. புலன் விசாரணைக்காக வெளியூர் செல்ல நேரிடும் சமயங்களில் வழக்கில் அன்றாடம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் குறித்து அங்கேயே வழக்கு நாட்குறிப்புகள் எழுதப்பட வேண்டும்.
3. வழக்கு நாட்குறிப்புகளில் அன்றாடம் செய்யப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் நேரம், இடம் போன்றவைகளை மனதிற்கொண்டு வரிசைக்கிரமமாக குறித்தல் வேண்டும்.
4. வழக்கு நாட்குறிப்புகளில் அன்றாடம் மேற்கொள்ளப்படும் பணி விபரங்களை ஒன்றன் பின் ஒன்றாக முறையாகவும் வரிசைக் கிரமமாகவும் கோப்பில் வைக்க வேண்டும்.
5. வழக்கு கோப்புகளை சுத்தமாகவும் கிழிந்து போகாமலும் கையாளுதல் மிகமிக அவசியம்.
6. வழக்கு நாட்குறிப்புகளின் மைபடித்தாள் நகல்கள் (Corbon copy) படிக்கக்கூடிய தாக இருக்க வேண்டும்.
7. வழக்கு கோப்பில் உள்ள தாள்களும் வழக்கு நாட் குறிப்புகளும் கிழிந்தும், கசங்கியும், மேலும் கீழும் தாறுமாறாகவும் உள்ள நிலையில் வைத்திருக்கக் கூடாது.
8. வழக்குநாட்குறிப்புகளை வழக்குக் கோப்பில் முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றி வைக்கக் கூடாது

செய்யக்கூடாதவை

1. வழக்கு நாட்குறிப்புகளில் தேவையில்லதவைகளை எழுதுதல்..
2. வழக்கு நாட்குறிப்புகளில் அடித்தல் திருத்தல் இருத்தல்.

16. 164 கு.வி.மு.ச. வாக்குமூலங்கள்

சாட்சியோ அல்லது எதிரியோ சம்பவத்தைப் பற்றி நீதிமன்ற நடுவர் முன்பு தாங்களாகவே முன்வந்து ஆஜராகிக் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் அல்லது வாக்குமூலம் ஆகும். இந்த வாக்குமூலம் கொடுக்கும் சாட்சிகளுக்கோ அல்லது எதிரிகளுக்கோ எவ்வித தூண்டுதலும், அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் இருக்கக்கூடாது.

i. சாட்சிகளோ / எதிரிகளோ ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வரும் போது அவர்களது வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய மாவட்ட முதன்மை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்க வேண்டும். மேற்படி வாக்குமூலம் பதிவு செய்ய நடுவரை முதன்மை நீதித்துறை நடுவர் நியமிப்பார். அதற்காக நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் அழைப்பாணையை பெற்றுச் சார்பு செய்ய வேண்டும்.

ii. ஒப்புதல் வாக்குமூலத்தை நடுவர் முன்பு கொடுக்க இருக்கும் சாட்சியோ / எதிரியோ அவர் ஒப்புதல் வாக்குமுலம் கொடுக்க கட்டுப்பட்டவர் அல்ல என்றும், அவர் அவ்வாறு கொடுப்பாரானால் அவருக்கு எதிராக அது சாட்சியமாகப் பயன்படுத்தப்படலாம் என்று நடுவர் அவர்களால் விளக்கப்படுவார். மேலும் நடுவர் அவர்கள் 24 மணி நேரம் கால அவகாசம் கொடுப்பார். அதற்குப் பின்னிட்டு சாட்சி / எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வார்.

iii. நடுவர் அவர்கள் முன்பு சாட்சிகள் / எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க விரும்பாதபோது நடுவர் அவர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

iv. ஒப்புதல் வாக்குமூலம் அளித்த சாட்சி / எதிரி மற்றும் நடுவர் அவர்கள் வாக்குமூலத்தில் கையொப்பம் வேண்டும்.

v. இவ்வாறு நடுவரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

vi. புலன் விசாரணை அலுவலர் நீதிமன்றத்தில் இருந்து வேண்டுகோள் மூலம் அந்த சாட்சி / எதிரியின் நகலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

vii. சாட்சி / எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்கு சாதகமாக இருப்பின் அந்த வாக்குமூலத்தை பதிவு செய்த நடுவரை வழக்கின் சாட்சியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

viii. இப்பிரிவின் கீழ் புலன் விசாரணை அலுவலர் மட்டுமே எதிரிக்கோ அல்லது சாட்சிகளுக்கோ வாக்குமூலம் பதிவு செய்ய விண்ணப்பிக்க முடியும். எதிரியானவர், அவர் அவ்வழக்கில் இருந்து வேறொருவரைக் காப்பாற்றும் பொருட்டோ அல்லது வழக்கைத் திசை திருப்பும் பொருட்டோ வாக்குமூலம் கொடுத்தால் புலன் விசாரணை அலுவலர் நீதிமன்றத்தில் ஆஜராகி அதற்கு ஆட்சேபனைத் தெரிவித்து பதிவு செய்ய விடக்கூடாது.

ix. சாட்சியோ / எதிரியோ காவல் துரையினரின் பொறுப்பில் இருக்கும்போது இப்பிரிவின் கீழ் முடிந்தவரை வாக்குமூலம் பதிவு செய்ய வைத்தல் கூடாது.

x. இவ்வாக்குமூலங்கள் பதிவு செய்யும் போது காவலர்களோ, காவல் அலுவலர்களோ உடன் இருக்கக் கூடாது. அப்போது தான் அந்த விசாரணையை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும்.

xi. ‘‘எதிரி குற்றத்தை மறைக்கவும், தப்பித்துக் கொள்ளவும், காவல்துறையினரின் விசாரணையைத் தவிர்க்கவும், அவராகவே காயங்களை ஏற்படுத்திக் கொண்டு அல்லது இருப்பின்மை ஏற்படுத்தியதாக’’ இரகசிய விசாரணையில் தெரியவரும்போது, உடனடியாக அந்த எதிரியை இப்பிரிவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய விண்ணப்பம் கொடுக்க வேண்டும்.

xii. இந்த சாட்சியம் நீதிமன்றத்தில் வழக்கிற்கு தொடர்புடைய சாட்சியாக ஏற்றுக் கொள்ளப்படுமே (corroborative evidence) தவிர வழக்கின் முடிவான சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (Conclusive Proof)

Section 164 Cr P.C :- ஒப்புதலுரைகளையும் வாக்குமூலங்களையும் பதிவு செய்தல்

(1) பெரு நகர் நடுவர், அல்லது நீதித்துறை நடுவர் எவரும் வழக்கை நடத்தத் தமக்கு அதிகாரமிருந்தாலும் இல்லையென்றாலும், அந்த அத்தியாயத்தின்படியோ, அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின் படியோ, நடக்கும் புலனாய்வின் போது அல்லது அதற்குப் பின்பும், பரிசீலனை அல்லது விசாரணை தொடங்குவதற்கு முன்புமான எந்தக்காலத்திலும், தம்மிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம், அல்லது வாக்குமூலம் எதையும் பதிவு செய்யலாம்.

145 I.E. Act:

சாட்சி ஒருவரால் எழுதிக்கொடுக்கப்பட்ட அல்லது எழுத்து வடிவில் கொண்டு வரப்பட்டவையும் பிரச்சனை யிலுள்ள விஷயங்களுக்கு தொடர்புடையவையுமான முந்திய உரைகளைப் பற்றி அத்தகைய எழுத்து அவருக்குக் காட்டப்படாமலேயே அல்லது மெய்ப்பிக்கப்படாமலேயே அவர் குறுக்கு விசாரணை செய்யப்படலாம். ஆனால் அந்த எழுத்தைக் கொண்டு அவரை முரண்படுத்தக் கருதினால் அந்த எழுத்து மெய்ப்பிக்கப்படுவதற்கு முன்பு எழுத்தின் எந்தப் பகுதிகள் அவரது உரையை முரண்படுத்தும் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அந்தப் பகுதிகளுக்கு அவரது கவனம் ஈர்க்கப்படுதல் வேண்டும்.

செய்யவேண்டியவை

1. வாக்குமூலம் பதிவு செய்ய நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் அழைப்பாணைகளை மட்டும் சாட்சிகளுக்கோ அல்லது எதிரிகளுக்கோ சார்வு செய்தால் போதும்.
2. வாக்குமுலம் பதிவு செய்யக்கூடிய நாட்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.
3. காவல் ஆளிநர்கள் யாரும் சாட்சிகள் அல்லது எதிரிகளுடன் வாக்குமூலம் பதிவு செய்யும் நாட்களில் நீதிமன்றத்திற்குள் உடன் இருக்கக் கூடாது.

செய்யக்கூடாதவை

1. வாக்குமூலம் பதிவு செய்ய சாட்சிகளை அல்லது எதிரிகளை நாமே ஆஜர் படுத்துதல்.

.

17. காவல் கைதி

வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியானவர் நிதிமன்றத்தில் சரணடைந்தாலோ / மற்ற வழக்குகளில் வேறொரு காவல் நிலைய அலுவலரால் கைது செய்யப்பட்டு, சிறையில் இருக்கும் போது வழக்கில் சம்மந்தப்பட்டு காவல் அதிகாரி மேற்படி எதிரியை நீதிமன்ற உத்திரவு பெற்று அவர் எங்கு அடைக்கப்பட்டுள்ளாரோ அந்த சிறைச்சாலையில் சிறை அதிகாரி முன்பு கைது குறிப்பாணை மூலம் முறைப்படியாக கைது செய்வது (Formal arrest) ஆகும். அதில் எதிரியிடமும், சிறை அலுவலரால் கையொப்பம் பெற்றும், புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் செய்தும் அதன் ஒரு நகலை எதிரிக்கு வழங்க வேண்டும். ஒப்புதல் பெறப்பட்ட அந்த நகலை நீதிமன்றத்தில் சமர்பித்து கைது பரிமாற்ற பிடிகட்டளை (Prisoner Transit Warrant) பெற்று அதை மீண்டும் அந்த சிறையில் ஒப்புவிக்க வேண்டும். அதன் பேரில் அந்த எதிரியை அந்த வழக்கின் பொருட்டு சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் வழிக் காவல் மூலம் ஆஜர்படுத்தப்படுவார்.

i. காவல் துறையின் பொறுப்பு காவலில் எடுக்க, புலன் விசாரணை அலுவலர் எதிரி கைது செய்யப்பட்டு காவலில் அடைக்கப்பட்ட சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் (அதிகப்படியாக 15

நாட்களுக்குள்) விண்ணப்பம் மற்றும் பிரமாணப் பத்திரம் (Affidavit) கையொப்பம் பெற்று தாக்கல் செய்ய வேண்டும். நீதிமன்றம் அதனைப் பெற்று பின்பு தாக்கல் செய்த புலன் விசாரணை அலுவலரை எதிரியின் முன்பு வைத்து பதிவு செய்தும், எதிரி மற்றும் அரசு வழக்குரைஞரின் கருத்து பெற்றும் நீதிமன்ற ஆணைப் பெற்று அந்த நபரை குறிப்பிட்ட நாட்களுக்கு எடுத்து கைதியை விசாரித்து நீதிமன்ற கெடு முடிவதற்குள் திரும்ப நீதிமன்றத்தில் ஒப்புவிக்க வேண்டும். மீண்டும் விசாரணைக்கு தேவைப்படும் போது எதிரியை மீண்டும் மேற்படி முறைப்படி எடுத்து விசாரிக்கலாம்.

ii. நீதிமன்றக் காவலில் இருந்து காவல்துறையினர் பொறுப்பில் காவலுக்கு பெறப்படும் போதும், மீண்டும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போதும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி சான்று பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

iii. காவல்துறையினர் பொறுப்பில் பெற்று காவலில் இருக்கும் கைதியை உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ துன்புறுத்தலின்றி விசாரித்து வாக்குமூலங்களைப் பதிவு செய்து அதன் மூலம் ஏதாவது தடயங்கள் / களவு சொத்துகள் கிடைப்பின் உரிய மகஜரில் கைப்பற்றப்படவேண்டும். விசாரணை முடிந்த பின்பு குறிப்பிட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்க வேண்டும்.

Section 167 (2) Cr P.C (அடைப்புக் காவல்):–

(2) எதிரி ஒருவர், இந்தப்பிரிவின்படி எந்த நடுவரிடம் அனுப்பிவைக்கப்படுகிறாரோ, அந்த நடுவர், அந்த வழக்கை விசாரிக்கத் தமக்கு அதிகாரமிருந்தாலும் இல்லையென்றாலும், தாம் பொருத்தமென நினைக்கும் வகையில், அவ்வப்போது மொத்தத்தில் பதினைந்து நாள்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு எதிரியைக் காவலில் வைப்பதற்கு அதிகாரம் அளிக்கலாம். மற்றும் அவ்வழக்கை விசாரிக்கவோ, அதை மேல் விசாரணைக்காக அனுப்பவோ, தமக்கு அதிகாரம் இல்லை என்பதுடன், மேற்கொண்டு காவலில் வைத்திருப்பது அவசியமில்லை, என்றும் தாம் எண்ணுவாரானால், அத்தகைய அதிகாரம் கொண்டுள்ள நடுவரிடம் எதிரியை அனுப்பி வைப்பதற்கு அவர் கட்டளையிடலாம்.

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. எதிரிகள் கைது செய்யப்பட்டு, அடைப்புக் காவலுக்கு அனுப்பப்பட்டு அவருக்கு நடுவர் அவர்களால் வழங்கப்பட்ட முதல் விசாரணை நாளுக்குள் எதிரியை காவல்துறை காவலில் எடுக்க ஆவண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	1. நீதிமன்றக்காவலில் இருந்து விசாரணையின் நிமித்தம் எதிரிகளை காவல்துறை காவலில் எடுத்த பின்பு விசாரணை என்ற பெயரில் எதிரிக்கு துன்புறுத்தலோ, மன உளைச்சலோ கொடுத்தல்.
2 பெண் எதிரியாக இருப்பின் அவரை காவலில் எடுக்கும்போது பெண் காவல் ஆளிநர்கள் கண்டிப் பாக உடன் இருக்க வேண்டும்.	2. நீதிமன்றக்காவலில் இருந்து விசாரணையின் நிமித்தம் எதிரிகளை காவல்துறை காவலில் எடுத்த பின்பு எதிரிகளை அவரது உறவினர்களோ, தெரிந்த நபர்களோ அவர்களைப் பார்க்கவோ, பேசவோ அனுமதித்தல்.
3. காவல் விசாரணையின் போதும் எதிரியை திரும் பவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை பெண் காவல் ஆளிநர்கள் கண்டிப்பாக உடன் இருக்க வேண்டும்.	3. எதிரியின் உறவினர்களோ மற்றும் வெளி ஆட்களோ வாங்கி வரும் உணவுப் பண்டங்களை தர அனுமதித்தல்.

4. காவல் விசாரணையின் போது கண்டிப்பாக உதவி ஆய்வாளர் தகுதிக்கு கீழ் படாத ஒருவர் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உடனிருந்து விழிப் புடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.
5. நீதிமன்றக்காவலில் இருந்து விசாரணையின் நிமித்தம் எதிரிகளை காவல்துறை காவலில் எடுத்த பின்பு அவர்களுக்கு காவல்துறை தரப்பில் இருந்து தான் சோதனையிடப்பட்ட உணவு பொருட்கள் தரப்படல் வேண்டும்.

18. அடையாள அணிவகுப்பு

(9 I.E. Act) & PSO – 600

ஒரு குற்ற நிகழ்வின் போது சாட்சிகளால் நேரில் பார்க்கப்பட்ட பெயர் விலாசம் தெரியாத எதிரிகளை அடையாளம் காண்பிப்பதற்காக நடத்தப்படும் அணிவகுப்பாகும்.

i. புலன் விசாரணை அலுவலரால் எதிரி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட பின்னர் அவர்களை சாட்சிகள் நேரில் பார்த்தும், பெயர் முகவரி தெரியாத சூழ்நிலையில் எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காண்பிப்பதற்காக மாவட்ட முதன்மை நடுவர் அவர்களுக்கு எக்காரணத்தை முன்னிட்டும் காலதாமதமின்றி உடனே வேண்டுகோள் கடிதம் கொடுக்க வேண்டும்.
ii. மாவட்ட முதன்மை நடுவர் அவர்கள் மேற்படி கைதிகளின் அடையாள அணிவகுப்பை நடத்துவதற்காக அவர் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு குற்றவியல் நடுவர் அவர்களை நியமனம் செய்வார்.
iii. நியமனம் செய்யப்பட்ட குற்றவியல் நடுவர், அவர்கள் சாட்சிகளை ஒரு குறிப்பிட்ட தேதி, நேரத்தில் அடையாள அணிவகுப்பிற்கு ஆஜராகுமாறு எதிரிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையைக் குறிப்பிட்டு அழைப்பாணை வழங்குவார்.
iv. அந்த அழைப்பாணையின் பேரில் காவல் அலுவலர்கள் சாட்சிகளுக்கு சார்வு செய்து அவர்களை ஆஜர் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
v. இந்த அடையாள அணிவகுப்பு சம்மந்தப்பட்ட எதிரி அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் மற்ற எதிரிகளோடு கலந்து நிற்கச் செய்து நடத்தப்படும். இவ்வாறு 3 முறை உடை, நிற்கும் இடம், உடனிருக்கும் கைதிகள் ஆகியோரை மாற்றி மாற்றி நிற்க வைத்து சாட்சியால் அடையாளம் காட்டக் கோரப்படுவார்கள்.
vi. இந்த அணிவகுப்பில் சாட்சிகள் எதிரிகளை சரியான அடையாளம் காண்பிக்கும் போது அது நீதிமன்றத்தில் நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்.
vii. இந்த அணிவகுப்பின் நடவடிக்கை குறிப்பினை சான்றாவணமாக குறிக்கப்படவேண்டும். அதோடு அடையாள அணி வகுப்பு நடத்திய குற்றவியல் நடுவர் அவர்களும் சாட்சியாக விசாரிக்கப்படுவார்.
viii. அடையாள அணிவகுப்பு நடத்தும் முன்பு எக்காரணத்தைக் கொண்டும் கைது செய்யப்பட்ட எதிரிகளின் புகைப்படங்கள் செய்தித்தாள்களிலோ, தொலைக்காட்சிகளிலோ காண்பிக்கப்படக் கூடாது. இதனை விசாரணை அலுவலர்கள் கவனமாகக் கடைபிடிக்க வேண்டும்.

Section 9 of I.E.Act 1872 :-

தீர்வுதரு நிகழ்மை அல்லது தீர்வுதவு நிகழ்மையொன்றை விளக்கவோ அறிமுகப்படுத்தவோ அவசியமாக இருக்கும் நிகழ்மைகள் அல்லது தீர்வு தரு நிகழ்மை அல்லது தீர்தவு நிகழ்மை குறிப்பாய் உணர்த்தும் ஓர் ஊக்கத்திற்குத் துணை நிற்கின்ற நிகரூமைகள், அல்லது அதை மறுக்கின்ற நிகழ்மைகள்அல்லது எந்தப்பொருளின் அல்லது ஆளின் தனித்தன்மை தொடர்புற்றதோ அந்தப் பொருள் அல்லது ஆளின் தனித்தன்மையை நிலைநாட்டுகிற நிகழ்மைகள் அல்லது தீர்வுதரு நிகழ்மை நிகழ்ந்த நேரத்தையோ, இடத்தையோ நிர்ணயிக்கின்ற நிகழ்மைகள், அல்லது எந்தத் தரப்பினர்களால் அத்தகைய நிகழ்மை நிகழ்த்தப்பட்டதோ அந்தத் தரப்பினர்களின் உறவைக் காட்டுகின்ற நிகழ்மைகள், அந்தந்த நோக்கத்திற்கு அவசியமாக இருக்குமளவிற்குத் தொடர்புற்றவையாகும்.

PSO 600:- அடையாளம் காணல்

(1) ஒரு சம்பவத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களை அடையாளம் காட்ட முடியுமென்று சாட்சிகள் கூறும்போது, விசாரணை அலுவலர்கள் அவர்களுடைய விவரக்குறிப்புகளை விவரமாக எழுதிக் கொள்ளவேண்டும்.

(2) ஆட்களை அடையாளம் காட்டுவதற்காக சாட்சிகள் முன்பு அவர்களை காட்ட வேண்டியிருக்கும் போது, அவர்களைக் கவனமாக சாட்சிகள் பார்வைக்குப் புறம்பாக வைத்துக்கொண்டு அவர்கள் வகையைச் சேர்ந்த, இதர ஆட்கள் பலருடன் கலந்து வைக்கவேண்டும். பிறகு சாட்சிகளை ஒருவர் பின் ஒருவராகவும் தனித்தனியாகவும் கூப்பிட்டு அவர்களுக்குத் தெரிந்துள்ள எந்த ஆளையேனும் காட்டும்படி கேட்கவேண்டும்.

(3) பிறகு,அந்த நபரின் விவரக் குறிப்பு முதன் முதல் கொடுக்கப்பட்டதோடு ஒத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

(4) அடையாளம் காட்டும் அணி வகுப்பினை ஒரு குற்றவியல் நடுவர் நடத்த வேண்டும் அல்லது குற்றவியல் நடுவர் இல்லாதபோது சாட்சிகள் முன்னிலையில் காவலர், அணிவகுப்புக்குரிய முன்னேற்பாடுகளை ஒழுங்கு செய்து விட்டு விலகிச் சென்று அணிவகுப்பினை குற்றிவியல்துறை நடுவர் அல்லது சாட்சிகள் தனியாக நடத்தும்படி விட்டு விடவேண்டும். சாட்சிகள் அடையாளம் காட்டும் அணிவகுப்பு நடத்திட வேண்டுறுத்திடும்போது குற்றவியல் நடுவர் அடையாள அணிவகுப்பு நடத்திட முடியாததற்கான காரணங்களை புலனாய்வு அலுவலர் எழுத்துருவில் பதிய வேண்டும்.

செய்யவேண்டியவை

1. சாட்சிகளுக்கு அழைப்பானை பெற்று கால தாமத மின்றி சார்வு செய்து அவர்களை அடையாள அணிவகுப்புக்கு ஆஜர் செய்ய வேண்டிய நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்,

2. சாட்சிகளுக்கு சம்பவத்தின்போது எதிரியை அல்லது எதிரிகளை பார்த்தபோது இருந்த அடை யாளங்களை நினைவு கூர்ந்திடும் வகையில் அறிவுரைகள் வழங்கிடல் வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. அடையாள அணிவகுப்பு நடத்திடும்முன்பு சாட்சி களை காவல் நிலையத்தில் வைத்தோ அல்லது புகைப்படம் மூலமோ எதிரிகளை பார்த்திட அனும தித்தல்.

19. இயற்கைக்கு மாறான மரணம்– பிரேத விசாரணை

ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் அல்லது மற்றொருவராலோ, விலங்கினாலோ, இயந்திரத்தாலோ, ஒரு விபத்தாலோ இறந்திருக்கிறார் என்ற நியாயமான சந்தேகம் எழுகின்ற சூழ்நிலையில் கிடைக்கும் தகவலின் பெயரில் காவல் அலுவலர் வழக்குப் பதிவு செய்து மேற்கொள்ளும் விசாரணை பிரேத விசாரணை எனப்படும்.

i. வழக்குப் பதிவு செய்தவுடன் சாதாரண வழக்குகளில் இரண்டாம் வகுப்பு நிர்வாகத் துறை நடுவருக்கும், Tahsildar (வருவாய் வட்டாட்சியர்), திருமணமாகி ஒரு பெண் 7 வருடங்களுக்குள் மரணமடைந்தால் முதல் வகுப்பு நிர்வாகத் துறை நடுவர் RDD (வருவாய் கோட்டாட்சியர்) அவர்களுக்கும் முதல் தகவல் அறிக்கையை அனுப்ப வேண்டும்.
ii. புலன் விசாரணையின் பேரில் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்று மகஜர், புகைப்படம் தயார் செய்ய வேண்டும்.
iii. அடையாளம் தெரியாத பிரேதமாக இருப்பின் பிரேதப் பரிசோதனைக்கு முன்பே அவரது கை ரேகைகள் பதிவு செய்யப்படவேண்டும்.
iv. பிரேதம் கிடக்கும் இடம், பிரேதம் ஆகியவை துல்லியமாக நன்கு தெரியும்படி புகைப்படம் எடுக்கப் படல் வேண்டும்.
v. மேற்படி புகைப்படத்தை உடனே காலதாமதம் செய்யாமல் செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி, சென்னையில் உள்ள தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்த வேண்டும்.
vi. துண்டுப் பிரசுரங்கள் தயார் செய்து விநியோகித்தும், தண்டோரா மூலமும் விளம்பரப்படுத்த வேண்டும்.
vii. தமிழ்நாடு குற்ற நுண்ணறிவு இதழில் (Tamilnadu Criminal Intelligence Gazette) – ல் வெளியிட மாவட்ட குற்றப்பதிவேடு கூடம் மூலம் வேண்டுகோள் கடிதம் மற்றும் புகைப்படம், முதல் தகவல் அறிக்கை, துண்டுப் பிரசுரம் (Discriptive particulars) ஆகியவைகள் இரண்டு பிரதிகள் இணைத்து அனுப்ப வேண்டும்.
viii. காணாமல் போனவர்கள் பற்றிய படிவம் (Talash) படிவம் தயாரித்து அனுப்ப வேண்டும்.
ix. பிரேத விசாரணை (INQUEST) – 174 Cr.PC
x. சம்பவ இடம் சென்று பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பாணை (படிவம் – 87) சார்வு செய்து பிரேதத்தின் மீது பிரேத விசாரணை (Inquest) மேற்கொள்ள வேண்டும். மேற்படி பஞ்சாயத்தார் 2 அல்லது அதற்கு மேற்பட்டவராகவும், இறந்தவரின் உறவினர் அல்லாதவராகவும், பலதரப்பட்ட இனத்தை சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
xi. பிரேத விசாரணை அறிக்கையானது 26 காலங்களை உள்ளடக்கியதாகும் (படிவம் – 85)
xii. சாட்சிகளை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ய வேண்டும்.
xiii. இறப்பிற்கான வெளிப்படையான காரணம் (காலம் – 9) மற்றும் பஞ்சாயத்தார் குழுவின் இறப்பிற்கான அபிப்ராயம் (காலம் – 15) ஆகியவை ஒன்றையொன்று ஒத்திருக்கவேண்டும்.
xiv. காலம் – 16 ல் பஞ்சாயத்தார்கள் கையொப்பம் பெற வேண்டும்.
xv. காலம் – 17 ல் புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் செய்ய வேண்டும்.
xvi. காலம் 26 ல் பிரேத விசாரணை துவங்கிய, முடிவுற்ற தேதி, நேரம், இடம், ஆகியவைகளை குறிப்பிடல் வேண்டும்.
xvii. கடைசியாக புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் செய்ய வேண்டும்.

Section 174 Cr P.C :-

(1) ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அல்லது மற்றொருவராலோ, விலங்கினாலோ இயந்திரத்தாலோ, ஒரு விபத்தாலோ கொல்லப்பட்டிருக்கிறார் அல்லது வேறொருவர் குற்றமொன்றைச்

செய்திருக்கிறார் என்னும் நியாயமான சந்தேகத்தை எழுப்புகிற சூழ்நிலைகளில், அவர் இறந்திருக்கிறார் என்பதாகக் காவல் நிலையப் பொறுப்பலுவலருக்கோ, மாநில அரசால் அதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறொரு காவல் அலுவலருக்கோ, தகவல் கிடைக்கும் போது, அவர் அது பற்றிய தகவலைப் பிரேத விசாரணை நடத்த அதிகாரமளிக்கப்பட்டுள்ளவரும், மிகவும் அருகாமையிலுள்ளவருமான நிர்வாகத்துறை நடுவருக்கு உடனடியாக தெரிவித்தல் வேண்டும், மற்றும் மாநில அரசால் விதிக்கப்பட்ட விதி ஏதொன்றின் மூலமாகவோ மாவட்ட அல்லது உட்கோட்ட நடுவரின் பொது அல்லது சிறப்பு உத்தரவு ஏதொன்றின் மூலமாகவோ வேறு விதமாக உத்திரவிடப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு மரணமடைந்தவரின் உடல் இருக்கின்ற இடத்திற்குச் சென்று, அங்கே, அண்டையில் குடியிருப்பவர்களில் மதிக்கத்தக்க இருவர், அல்லது மேற்பட்டவர்களின் முன்னிலையில் புலனாய்வைச்செய்து அந்த உடலின் மீது காணப்படும் காயங்கள் எலும்பு முறிவுகள், கன்றிப்போன காயங்கள் மற்றும் வேறு காயக்குறிகள் ஆகியவற்றை விவரித்தும், எந்த விதத்தில், அல்லது எந்த ஆயுதத்தால் அல்லது கருவியால் (ஏதேனுமிருப்பின்) அத்தகைய காயக்குறிகள் உண்டாக்கப்பட்டதாகத் தோன்றுகின்றன என்பதை உரைத்தும், மரணமுண்டானதற்குத் தோன்றுகின்ற காரணத்தைத் தெரிவிக்கும் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும். (Inquest Report)

2) அந்த அறிக்கை, அத்தகைய காவல் அலுவலராலும், வேறு ஆட்களாலும் அல்லது அவர்களில் எத்தனை பேர்கள் அதற்கு உடன்படுகிறார்களோ அத்தனை பேர்களாலும் கையொப்பம் இடப்படவேண்டும். மற்றும் அது மாவட்ட நடுவருக்கு அல்லது உட்கோட்ட நடுவருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3) கீழ்காணும் நேர்வுகளில்

(i) திருமணம் புரிந்த 7 வருடங்களுக்குள் பெண் தற்கொலை செய்து கொண்டால் அல்லது

(ii) திருமணம் புரிந்த 7 வருடங்களுக்குள் பெண்ணின் மரணமானது வேறு நபர் குற்றம் செய்திருப்பார் எனச் சந்தேகச் சூழ்நிலைகள் இருப்பின் அல்லது

(iii) திருமணம் புரிந்த 7 வருடங்களுக்குள் மரணம் அடைந்ததின்பேரில் பெண்ணின் உறவினர் எவராவது ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க அல்லது

(iv) மரணத்திற்கான காரணத்தில் சந்தேகமிருப்பின் அல்லது

(v) வேறு ஏதேனும் காரணங்களுக்காக காவல் அலுவலர் தேவையெனக் கருதும் நேர்வில்

மாநில அரசினால் அது தொடர்பாக குறிப்பிடப்படும் விதிகளுக்கிணங்க, இறந்தவரின் உடலை ஆய்வு செய்திட அந்நபரின் உடலை அருகிலுள்ள அல்லது மாநில அரசினால் நியமிக்கப்படும் தகுதி பெற்ற மருத்துவருக்கு அனுப்பி விடலாம்.

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல தொலைவும் வானிலையும் இடங்கொடுக்காமல் அது அழுகிடக் கூடிய அபாயம் இருப்பின்

(4) பின்வரும் நடுவர்கள் பிரேத விசாரணையை நடத்த அதிகாரமளிக்கப்படுகின்றனர். அதாவது மாவட்ட நடுவர் அல்லது உட்கோட்ட நடுவரும் மாநில அரசால் அல்லது மாவட்ட நடுவரால் இதற்கெனச் சிறப்பாகஅதிகாரமளிக்கப்பட்ட வேறெந்த நிர்வாகத்துறை நடுவரும்.

PSO 583 :-

(1) (அ) குவிமுச 174 வது பிரிவின் கீழ் காவல் நிலையப் பொறுப்பிலுள்ள அலுவலர்களாவது அதற்கென மாநில அரசினால் தனியாக அதிகாரமளிக்கப்பெற்று வேறெந்த காவல் அலுவலராவது மற்றும் அவர்கள் இல்லாவிட்டால் கிராமத் தலைமை அலுவலர்கள், ஒருவர்

(i) தற்கொலை செய்து கொண்டதாகவோ அல்லது

(ii) மற்றொருவரால் அல்லது ஒரு விலங்கால் அல்லது இயந்திரத்தால் அல்லது விபத்தினால் கொல்லப்பட்டிருப்பதாகவோ அல்லது

(iii) மற்றொருவர் ஒரு குற்றம் செய்திருப்பதாக ஒரு நியாயமான சந்தேகத்தை எழுப்பும் சந்தர்ப்பங்களின் கீழ் இறந்து போய் விட்டதாகவோ

செய்தி வரப்பெற்ற வழக்குகளில் மரணத்தின் வெளிப்படையான காரணம் குறித்து புலன் விசாரணை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்

(ஆ) கு.வி.மு.ச 174(5) பிரிவில் குறிப்பிட்டுள்ள குற்றவியல்துறை நடுவர் பிரேத விசாரணையை செய்யக் கூடுமாதலால், அதனை இவ்வலுவலர்கள் செய்ய வேண்டுவதில்லை.

(இ) ஒரு காவல் நிலையத்தில் சந்தேக சந்தர்ப்பங்களில் ஒரு மரணம் நேர்ந்துள்ளதாகச் செய்தி கிடைத்தவுடனே, புலன் விசாரணை செய்ய அதிகாரமளிக்கப் பெற்ற காவல் அலுவலர் பிரேதத்தை ஆய்வு செய்யப் புறப்பட்டு சென்று, முதலில் உடலில் காணப்படக்கூடிய காயங்கள், எலும்பு முறிவுகள், மற்ற காயக்குறிகள் ஆகியவைகளையும், அதைத்தவிர அவ்வடையாளங்களை விளைவித்த (ஏதேனும்) ஆயுதம் அல்லது கருவியையோ அல்லது அவை செய்யப்பட்ட முறையையோ குறித்துக் கொள்ள வேண்டும்.

(ஈ) (i) மரணத்தின் காரணத்தைப் பற்றி ஏதேனும் சந்தேகமிருந்தால், அல்லது வேறெந்தக் காரணமாகவேனும் புலனாய்வு செய்யும் காவல் அலுவலர் அப்படி செய்வது தகுதியெனக் கருதினால், பிரேதத்தை அக்காரியத்துக்குத் தேவையான காலம் வரை வைத்திருக்க வேண்டுமேயன்றி மற்றபடி அதனை உடனடியாக பிரேதப் பரிசோதனைக்காக மிக அருகிலுள்ள அல்லது அதற்கென மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவேறு தகுதி வாய்ந்தவருக்கோ, அனுப்ப வேண்டும். பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பப்படும் பிணங்களை படிவம் 80 ல் தகவல் குறிப்போடு சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

(ii) பிரேதத்தை அனுப்புவதில் ஒவ்வொரு மணிநேரத்தாமதமும் அதனை மேலும் அழுகிக் கெட்டுப்போகச் செய்வதுமின்றி, மரணத்தின் காரணத்தைத் துலக்குவது மேலும் கடினமாகி விடுமானதால், காலதாமதமின்றி அதனை அனுப்பிவிடுவது மிகவும் முக்கியமானதாகும்.

(iii) மரணத்தின் வெளிப்படையான காரணம் பற்றிய தொடக்க நிலைப் புலன் விசாரணை முடிவடைந்த பின்பும், பிரேதப் பரிசோதனையை நடத்த வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானித்த பின்பும், கு.வி.மு.ச 174(1) பிரிவின் கீழ் ஒரு காவல் அலுவலர் செய்ய வேண்டிய விசாரணையைச் செய்து படிவம் எண் 79 ல் ஓர் அறிக்கை தயாரிக்கலாம்.

(iv) பிரேத விசாரணை செய்து முடிந்த பின்பு பிரேத விசாரணை செய்த அலுவலர், பிணத்தை முடிவு செய்து 12 மணி நேரத்துக்குள்ளே சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு பற்றிய விதிகளில் 6 வது விதியின்படி சென்னை மாநகர் விஷயத்திலும், 1919 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 327,347(1) பிரிவுகளின்படி மரணத்தின் வகை, காரணம் முதலியனவற்றை படிவம் எண் 79 ல் காவல் நிலைய அதிகார வரம்புக்குள் உள்ள நகராட்சி அல்லது ஊராட்சி மன்றத்தின் நிர்வாக அதிகாரிக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

(v) ஐயத்திற்குள்ளான மற்றும் இயற்கைக்கு மாறான மரணங்களின் நேர்வில், சம்பவ இடத்திற்கு உடன் சென்றுள்ள தலைமைக் காவலர், பிரேத விசாரணையின் போது சார்வு ஆய்வாளர் தலைமைக்காவலருடன் கலந்து கொள்ளும் வகையில் முதல் தகவலறிக்கை நகலினை அவருக்கு அனுப்பிட வேண்டும். உயர் அலுவலர்கள் தங்கள் சுற்றுப்பயணத்தின்போது, இயற்கைக்கு மாறான மரணங்களின் வழக்குகளில் ஆய்வு

மேற்கொள்ள வேண்டும். ஒரு நாளுக்கு மேற்பட்ட புலனாய்வு வழக்குகளில் காவல் ஆய்வாளர் மேற்பார்வை செய்திட வேண்டும்.

(உ) இவ்வாறு காவலரால் செய்யப்பட்ட தொடக்க நிலைப் புலன் விசாரணை பற்றிய அறிக்கையொன்றை பிரேத விசாரணை நடத்துவதற்கு அதிகாரம் பெற்ற மிக அருகிலுள்ள குற்றவியல் நடுவருக்கும் காவல் சரக ஆய்வாளருக்கும் தாமதமின்றி அனுப்பவேண்டும். காவல் ஆய்வாளர், ஏதேனும் தேவையாயுள்ள குறிப்புரையைச் செய்தபின்பு, அதனை காவல் கண்காணிப்பாளருக்காவது உட்கோட்ட அலுவலருக்காவது அனுப்பவேண்டும். கு.வி.மு.ச 174(4) பிரிவின் கீழ் கிராமத் தலைமை அலுவலரோ காவலரோ நடத்திய புலன் விசாரணை முடிவடைந்த பின்பு காவலர், பிடியாணை வேண்டாக்குற்றம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறதா என்று உடனே விசாரணை செய்து கொண்டு மற்ற வழக்குகளில் செய்வது போல் அது குறித்து மேலும் புலனாய்வு செய்யத் தொடங்க வேண்டும். ஆனால், இதன் காரணமாக கு.வி.மு.ச 174 வது பிரிவின் கீழ் மரணத்தின் வெளிப்படைக் காரணம்பற்றி செய்யப்படும் தொடக்கநிலை விசாரணையின் முடிவினை தாமதம் செய்யலாகாது.

(ஊ) கு.வி.மு.ச 174 வது பிரிவின் கீழ் புலன் விசாரணை நடத்தும் காவல் அலுவலர் ஒருவர் மரணத்தின் காரணத்தையொட்டி இறந்தவரது உறவினரின் சாட்சியத்தையும் சான்றளிக்கக்கூடிய மற்றவர்களின் சாட்சியத்தையும் வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

PSO 584

சென்னை நகரில் காவல் ஆணையரும் தலைநகரில்லாத புறப்பகுதியில் காவல் கண்காணிப்பாளரின், வேண்டுகோளின்பேரில் ஆயுள் காப்பீட்டு கழகம், மரணமுற்றவருக்கு காப்பீட்டு தொகை தீர்வு செய்ய வேண்டி மரணத்திற்கான காரணம் அறிந்து கொள்ள பிரேத பரிசோதனை சான்றிதழ் நகலை ஒவ்வொன்றுக்கும் ரூ 10/– கட்டணத்தின் பேரில் ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு வழங்கிடலாம்.

அவ்வாறு வசூலிக்கப்பட்ட கட்டணம் உரிய கணக்குத் தலைப்புகளில் அரசுக்கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(2) ஆட்களுக்கு மரணமோ காயமோ விளைந்ததன் சம்பந்தமாக குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்படும் மோட்டார் வண்டி விபத்துகள் விஷயத்தில் காவலர் சம்பந்தப்பட்ட ஆயுள் காப்பீட்டு கழகங்களுக்கு குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளதென்று அறிவிப்பு அனுப்பலாம். வழக்கின் விவரங்களை கொடுக்க வேண்டியதில்லை.

(3) ஆயுள் காப்பீட்டு கழகத்தின் வேண்டுகோளின்படி காவலர் குற்றச்சாட்டின் முடிவு குறித்து அவர்களுக்கு அறிக்கை அனுப்பலாம். அத்தகைய ஒவ்வோர் அறிக்கைக்கும் 10 ரூபாய் கட்டணம் ஒன்றை விதிக்க வேண்டும், அது வேண்டுகோளுடன் முன்னதாகவே கட்டப்படவேண்டும்,

(4) இறந்துபோனவர்களின் குடும்பங்களுக்குக் கொடுக்கத்தக்க ஈட்டுத்தொகையினை மதிப்பிடு வதற்காக மாநில மற்றும் மத்திய அரசுத்துறைகள் வேண்டப்படும் பிரேத விசாரணை அறிக்கைகள் பிணப் பரிசோதனைச் சான்றுகள் ஆகியவற்றின் நகல்களை இலவசமாகக் கொடுக்கலாம்.

(5) காப்பீடு செய்தவர்களுக்கு மரணம் நேராத விபத்து விஷயங்களைக் குறித்த காவல் விசாரணை அறிக்கைகளின் நகல்கலையுங்கூட, அரசுத்துறைகள் வேண்டும்போதெல்லாம், அவை கேட்கப்படும் நோக்க மானது, காப்பீட்டு கழகத்தின் நோக்கம் போன்றதாகவேயிருந்தால் அவற்றை அவர்களுக்கு இலவசமாக வழங்கலாம்.

செய்யவேண்டியவை

1. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தை குறைந்தது 3 நாட்களாவது மருத்துவ மனையில் அது அழுகிப் போகாதவாறு ஏற்பாடுகள் செய்து பாதுகாப்பாக வைக்க வேண்டும்.
2. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தின் மீது காணப்படும் ஒவ்வொரு பொருளையும் கைப்பற்றி கவனமாக பாதுகாப்பாக வைத்திடல் வேண்டும்.
3. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது கைரேகைகளை பதிவு செய்து தனிவிரல் ரேகை கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
4. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந் தால் அவரது பிரேதத்தைச் சொந்தம் கொண்டாடி வரும் நபர்கள் அல்லது உறவினர்கள் கூறும் கூற் றுக்களை நன்கு விசாரித்தபிறகே அந்தப் பிரேதம் குறித்து ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தை உடனே அடக்கம் செய்து விடல்.
2. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தின் மீது காணப்படும் பொருட்கள் குறித்து அசட்டையாகவோ, கவன குறைவாகவோ இருத்தல்.
3. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது கைவிரல் ரேகைகள் பதிவு செய்வதில் மெத்தனமாகவோ, ஏனோதானோ வென்று இருந் திடக்கூடாது.
4, இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந் தால் அவரது இறப்பு குறித்து சரியாக தீவிரமான விசாரணை செய்யாமல், பெயரளவில் விசாரணை செய்து அவசரப்பட்டு முடிவு எடுத்தல்.

20. பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தை ஒப்புவிக்கும் முறை

(Handing over dead bodies for Post Mortem examination)

i. பிரேத விசாரணை (Inquest) முடிந்தவுடன் பிரேதத்தின் நிலையினை படிவம் 86 ல் பதிவு செய்து, இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு காவலர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்ய எடுத்து செல்லும் காவலரின் கையொப்பம் பெற்று அவரிடம் பிரேதத்தையும் அதன் உடமைகளையும் கடவுச்சீட்டு மூலம் ஒப்புவிக்க வேண்டும். மேற்படி வழிக்காவலர் பிரேதத்துடன்தான் செல்லவேண்டும். (PSO 589)

ii. பிரேதவழி காவலர் கடவுச்சீட்டுடன் அருகாமையில் உளள அரசு மருத்துவ மனையில் அலுவலி லுள்ள மருத்துவ அலுவலர் முன்பு பிரேதத்தை ஆஜர் படுத்த வேண்டும்.

iii. பிரேதத்தை காலம் 14 ல் கண்டுள்ளபடி அடக்கம் செய்ய அதன் உறவினர்கள் வசம் ஒப்புவித்து ஒப்புகை பெறவேண்டும். அனாதைப் பிரேதமாக இருப்பின் பிரேத பரிசோதனைக்கு பின் அருகாமையிலுள்ள மயானத்தில் கிராம நிர்வாக அலுவலர் / உதவியாளர் முன்னிலையில் நல்லடக்கம் செய்து அதற்கு மயான ரசீது / கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் பெற வேண்டும்.

iv. திருமணமாகி 7 வருடங்களுக்குள் ஏற்படும் மரண வழக்குகளும் வரதட்சணை கொடுமை வழக்குகளிலும் பிரேதத்தை, பெற்றோர்களிடமும், மற்ற சமயங்களில் கணவரிடமும் ஒப்புவிக்க வேண்டும்.

v. புலன் விசாரணை அலுவலர் அந்த சொத்தை தனி அறிக்கையுடன் படிவம் 91 ன் மூலம் நீதிமன்றம் / நிர்வாகத்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், அந்த கடவுச் சீட்டை வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிட்டும் வழக்கு கோப்பில் வைக்க வேண்டும்.

PSO 589

பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்தின் பொறுப்பிலுள்ள காவல் அலுவலர் மருத்துவ அலுவலரால் பரிசோதிக்கப்பட்ட உடல்தான் வழிக்காவல் செய்து அடுத்து வரப்பட்ட உடல் என்று சாட்சி சொல்லக்கூடியவராயிருக்க வேண்டும். பிரேதப்பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட ஓர் உடலை இறந்தவரின் நணபர்களாவது உறவினர்களாவது விரும்பினால் அவர்களிடம் ஒப்புவித்து அதனை அடக்கம் செய்வதற்கு காவலர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

செய்யவேண்டியவை

1. பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்துடன்தான் அதனை வழிக்காவல் செய்யும் காவலர் செல்ல வேண்டும் என்பதை தெளிவாகக் கூறி அனுப்ப வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்தின் பொறுப்பிலுள்ள காவல் அலுவலர் பிணத்தை யார் பொறுப்பிலாவது விட்டுவிட்டு அவர் தனியாக செல்லுதல்.

21. பிரேதப் பரிசோதனை

பிரேத பரிசோதனையின் போது புலன் விசாரணை காவல் அலுவலர் உடன் இருக்கவேண்டும். தேவைப்படும் போது ஒன்றுக்கு மேற்படட மருத்துவர்களை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுக்க வேண்டும்.

i. பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து, மருத்துவர் அவர்களுக்கு பிரேதத்தை அடையாளம் காட்ட வேண்டும். பிரேத பரிசோதனையின் போது பிரேதத்தின் மீது காணப்பட்ட சொத்துக்களை கைப்பற்ற வேண்டும்.

ii. பிரேத பரிசோதனையின் போது மருத்துவ அலுவலரால் பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகள் / தோல் மற்றும் குரல் வளை / மண்டை ஓடு ஆகியவைகள் சேகரிக்கப்பட்டால், பிரேத பரிசோதனை சான்று பெற்றும் நிர்வாகத் துறை நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் பெற்றும், மருத்துவ அலுவலரின் கடிதம் பெற்றும், உரிய தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்க ஆவண செய்ய வேண்டும்.

iii. பிரேத பரிசோதனை முடிந்தவுடன் கடவுச்சீட்டில் மருத்துவ அலுவலரின் கையொப்பம் பெற வேண்டும்.

iv. பிரேத வழி காவலர் கடவுச் சீட்டுடன் நிலையம் திரும்பி வந்து தனி அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனையின் போது பிரேதத்தின் மீது காணப்பட்ட/கைப்பற்றிய வழக்கின் சொத்துக்களுடன் அறிக்கை செய்ய வேண்டும்.

செய்யவேண்டியவை

1.பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்தின் மீது காணப்படும் சொத்துக்களை (உடைகள் உட்பட) கைப்பற்றி காவல் நிலையத்தில் ஒப்படைக்க தக்க அறிவுரைகள் வழங்க வேண்டும்.

2, Visceraவை உடனுக்குடன் எந்தவித கால தாமதமும் இன்றி வேதியியல் பகுப்பாய்வுக்கு (Chemical Analysis) உரிய தடய அறிவியல் துறைக்கு அல்லது மருத்துவமனை ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்தின் மீது காணப்படும் சொத்துக்களை ஏனோ தானோவென்று கையாள அனுமதித்தல்.

2. Viscera வை அனுப்புவதில் காலதாமதம் செய்தல்.

22. பிரேதப் பரிசோதனை – மருத்துவரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள்.

பிரேதத்தின்மீது காணப்பட்ட வெளி மற்றும் உள்காயங்களின் தன்மை, காயங்கள் ஏற்பட்டவிதம், பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் / திரவம் / தீ / நஞ்சு ஆகியவைகளின் தன்மை, இறப்பின் தன்மை, இறப்பிற்கான காலம், இறப்பிற்கான காரணம் இவைகள் குறித்து கேள்விகள் கேட்கப்பட வேண்டும். (Enclosure MODI's MEDICAL JURISPRUDENCE Book Page Nos. 786 to 790)

செய்யவேண்டியவை

1. மேற்கண்ட கேள்விகளை வழக்கின் தன்மையைப் பொறுத்து உரிய மருத்துவரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட நிபுணரிடமோ உடனுக்குடன் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
2. மேற்படி நிபுணர்களின் பதிலறிக்கைகளை பெற்றதும் கண்டிப்பாக மருத்துவ அலுவலரின் இறுதி கருத்துப் பெற நட வடிக்கை மேற் கொள்ள வேள்டும்.

செய்யக்கூடாதவை

1. வழக்கின் தன்மையைப் பொறுத்து கேள்விகளை நேரிடையாகவோ அல்லது நீதிமன்றம் மூலமோ தபால் அனுப்பி அறிக்கை பெறு வதில் காலதாமதம் செய்தல்.
2. மேற்படி நிபுணர்களின் கருத்துக்களை பெற்று கவனக்குறைவாக வழக்கு கோப்பில் வைத்துக் கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்வதை கைவிட்டுவிடுதல்.

APPENDIX I

QUESTION TO BE PUT TO MEDICAL WITNESSES

(FROM OUDH CRIMINAL DIGEST)

NO. I. **Questions that may be put to a Medical Witness in a case of Suspected Poisoning after Post-mortem Examination of the Body**

1. Did you examine the body of , a late resident of , and if so, what did you observe?
2. What do you consider to have been cause of death? State your reasons.
3. Did you find any external marks of violence on the body? If so, describe them.
4. Did you observe any unusual appearances on further examination of the body? If so, describe them.
5. To what do you attribute these appearances; to disease, poison or other cause?
6. If to poison, then to what class of poisons?
7. Have you formed an opinion as to what particular poison was used?
8. Did you find morbid appearances in the body besides those which are usually found in cases of poisoning .....? If so, describe them.
9. Do you know of any disease, in which the post-mortem appearances resemble those which you observed in this case?
10. In what respect do the post-mortem appearances of that disease differ from those which you observed in the present case?
11. What are the symptoms of that disease in the living?
12. Are there any post-mortem appearances usual in case of poisoning by ..... but which you did not discover in this instance?
13. Might not the appearances you mention have been the result of spontaneous changes in the stomach after death?
14. Was the state of the stomach and bowels compatible or incompatible with vomiting and purging?
15. What are the usual symptoms of poisoning by .....?
16. What is the usual interval between the time of taking the poison and the commencement of the symptoms?
17. In what time does ..... generally prove fatal?
18. Did you send the contents of the stomach and bowel (or other matters) to the Chemical Examiner?
19. Were the contents of the stomach (or other matters) sealed up in your presence immediately on removal from the body?
20. Describe the vessel in which they were sealed up, and what impression did the seal bear?
21. Have you received a reply from the Chemical Examiner? If so, is the report now produced that which you received?
22. (If a female adult) what was the state of the uterus?

NO. II. **Questions that may be put to a Chemical Examiner**

1. Was the poison isolated by you in a pure form or mixed?
2. What was the strength, the absolute quantity or percentage of poison found by you? Was the strength of the poison sufficient to kill a person?
3. From what organs and from what material i.e. vomit, urine, etc., articles of food did you find the poison and in what quantity and percentage?
4. What in your opinion is the fatal dose of this poison?
5. Could this poison be naturally found in the body or present as a result of decomposition?
6. Could this poison have come from the reagents used by you in your analysis? (For lead and arsenic).
7. Was a chemical preservative used in the samples sent to you?

NO. III. **Questions that may be put to a Non-professional Witness in a case of Suspected Poisoning**

1. Did you know , a late resident of ? If so, did you see him during his last illness and previously?
2. What are the symptoms from which he suffered?
3. Was he in good health previous to the attack?
4. Did the symptoms appear suddenly?
5. What was the interval between the last time of eating or drinking and the commencement of the symptoms?

If Death occurred

6. What was the interval between the commencement of the symptoms and death?
7. What did the last meal consist of?
8. Did anyone partake of this meal with.....?
9. Were any of them affected in the same way?
10. Had he ever suffered from a similar attack before?

If any of the following symptoms have been omitted in answer to question 2, special questions (11-14) may be asked regarding them as follows:—11. Did vomiting occur? 12. Was there any purging? 13. Was there any pain in the stomach? 14. Was he very thirsty? 15. Did he become faint? 16. Did he complain of headache or giddiness? 17. Did he appear to have lost the use of his limbs? 18. Did he sleep heavily? 19. Had he any delirium? 20. Did convulsions occur? 21. Did he complain of any peculiar taste in the mouth? 22. Did he notice any peculiar taste in his food or water? 23. Was he sensible in the intervals between the convulsions? (This is with reference to Nux Vomica). 24. Did he complain of burning or tingling in the mouth and throat, or of numbness and tingling in the limbs? (Aconite).

NO. IV. Questions that may be put to a Medical Witness in a case of Supposed Death by Wounds or Blows after Post-mortem Examination of the Body

1. Did you examine the body of , late resident of , and if so, what did you observe?
2. What do you consider to have been the cause of death? State your reasons.
3. Did you find any external marks of violence on the body? If so, describe them.
4. Are you of opinion that these injuries were inflicted before or after death? Give your reasons.
5. Did you examine the body internally? Describe any unnatural appearance which you observed.
6. You say that in your opinion.... was the cause of death; in what immediate way did it prove fatal?
7. Did you find any appearance of disease in the body?
8. If so, do you consider that, if the deceased had been free from this disease, the injuries would still have proved fatal?
9. Do you believe that the fact of his suffering from this disease lessened his chance of recovery from the injuries sustained?
10. Are these injuries taken collectively, or any one of them ordinarily and directly dangerous to life?
11. Have they been caused by manual force or with a weapon?
12. Did you find any foreign matters in the wound?
13. By what sort of weapon has the wound been inflicted?
14. Could the injuries have been inflicted by the weapon now before you (No. .... in the police charge sheet)?
15. Could the deceased have walked (so far) or spoken, etc., after the receipt of such an injury?
16. Have you chemically or otherwise examined the stains (or the weapon, clothes, etc.) now before you (No. ..... in the police charge sheet)?
17. Do you believe the stains to be those of blood?
18. What time do you think elapsed between the receipt of the injuries and death?
19. What was the direction of the wound, and can you form an opinion as to the position of the person inflicting such a wound with respect to the person receiving it?
20. Is it possible for such a wound to have been inflicted by anyone on his own person? Give your reasons.
21. (In gun shot wounds) give the precise direction of the wound.
22. Did the appearance of the wound indicate that the gun had been discharged close to the body or at some distance from it?
23. Did you find any slug, bullet, wadding, etc., in the wound or had..... made its exit?
24. Did you think it possible that you could have mistaken the aperture of entrance for that of exit?

NO. V. Questions that may be put to a Medical Witness in a case of Supposed Infanticide after Post-mortem Examination of the Body

1. Did you examine the body of a (male or female) child sent to you by the District Superintendent of Police on the ..... of ..... 19.....? And, if so, what did you observe?
2. Can you state whether the child was completely born alive, or born dead? State the reasons for your opinion.
3. What do you consider to have been the cause of death? Give your reasons.

4. What do you believe to have the uterine age of the child? State your reasons.
5. What do you believe to have been the extra-uterine age of the child? Give reasons.
6. Did you find any marks of violence or other unusual appearances externally? If so, describe them accurately.
7. Did you find any morbid or unusual appearances on examination of the body internally? If so, describe them accurately.
8. Do you believe the injuries you observed to have been inflicted before or after death? Give reasons.
9. Can you state how they were inflicted? Give reasons.
10. Do you consider that they were accidental or not? Give reasons.
11. Had the infant respired fully, partially, or not at all?
12. Did you examine the person of the alleged mother of the infant? If so, have you reason to suppose that she was recently delivered of a child? Can you state approximately the date of her delivery? Give reasons.

NO. VI. **Questions that may be put to a Medical Witness in a case of Supposed Death by Hanging or Strangulation**

1. Did you examine the body of , a late resident of , and if so, what did you observe?
2. What do you consider to have been the cause of death? State reasons for your opinion.
3. Did you observe any external marks of violence upon the body?
4. Did you observe any unnatural appearance on examination of the body internally.
5. Was there any rope or other such article round the neck when you saw the body?
6. Can you state whether the mark or marks you observed, were caused before or after death?
7. By what sort of articles do you consider the deceased to have been hanged (or strangled)?
8. Could the marks you observed have been caused by the rope or other article now before you (No. ..... of the police charge sheet)?
9. Do you think that this rope could have supported the weight of the body?
10. If strangulation, would great violence be necessary to produce the injuries you describe?
11. What, as far as you can ascertain, were the general characteristics of his previous disposition?
12. Does he appear to have had any previous attacks of insanity?

NO. VII. **Questions that may be put to a Medical Witness in a case of Supposed Death by Drowning after Post-mortem Examination of the Body**

1. Did you examine the body of , a late resident of , and if so, what did you observe?
2. What do you consider to have been the cause of death? State your reasons.
3. Were there any external marks of violence upon the body? If so, describe them.
4. Describe any unnatural appearances which you observed on further examination of the body.
5. Did you find any foreign matter, such as weeds, straw, etc., in the hair, or clenched in the hands of the deceased or in the air-passages or attached to any other part of the body?
6. Did you find any water in the stomach?

NO. VIII. **Questions that may be put to a Medical Witness in a case of Alleged Rape**

1. Did you examine the person of Musammat.....? If so, how many days after the alleged rape did you make the examination and what did you observe?
2. Did you observe any marks of violence about the vulva or adjacent parts?
3. Are these injuries such as might have been occasioned by the commission of rape?
4. Was the hymen ruptured? *N.B.*—This question is only to be asked in the case of the rape of a girl of tender years.
5. Did you observe any further marks of violence upon the person of the woman?
6. Has she passed the age of puberty?
7. Can you state approximately what her age is?
8. Did you find her to be a strong, healthy woman, or so weakly as to be unable to resist an attempt at rape?
9. Did you examine the person of the accused?
10. Did you observe any marks of violence upon his body?
11. Was he suffering from any venereal disease?
12. Did you find the woman to be suffering from a similar or other venereal disease?
13. Had a sufficient time elapsed, when you examined the person of the woman, for venereal disease to have made its appearance, in case of her having been infected?

APPENDIX I 789

14. Can you state approximately how long the woman had been suffering from this complaint?

15. Can you state approximately how long the woman had been suffering from this (venereal) complaint?

16. Have you examined the stained articles forwarded to you and now in Court (No. ..... of police charge sheet)?

17. What is the result of your examination?

18. Do you believe that rape has been committed or not? State your reasons.

NO. IX. **Questions that may be put to a Medical Witness in a case of Insanity**

1. Have you examined.....?

2. Have you done so on several different occasions, so as to preclude the possibility of your examination having been made during lucid intervals of insanity?

3. Do you consider him to be capable of managing himself and his personal affairs?

4. Do you consider him to be of "unsound mind"; in other words intellectually insane?

5. If so, do you consider his mental disorder to be complete or partial?

6. Do you think he understands the obligation of an oath?

7. Do you consider him in his present condition, competent to give evidence in a Court of Law?

8. Do you consider that he is capable of pleading to the offence of which he now stands accused?

9. Do you happen to know how he was treated by his friends (whether as a lunatic, an imbecile or otherwise) prior to the present investigation and the occurrences that have led to it?

10. Is he subject to insane delusions?

11. If so, what is the general character of these? Are they harmless or dangerous? How do they manifest themselves?

12. Might such delusion or delusions have led to the criminal act of which he is accused?

13. Can you discover the cause of his reason having become affected? In your opinion was it congenital or accidental?

14. If the latter, does it appear to have come on suddenly, or by slow degrees?

15. Have you any reason for believing that his insanity is of hereditary origin? If so, please specify the grounds for such an opinion; and all the particulars bearing on it as to the insane parents or relations of the accused; the exciting cause of his attack; his age when it set in; and the type which it assumed.

16. Have you any reason to suspect that he is, in any degree, feigning insanity? If so, what are the grounds for his belief?

17. Is it possible, in your opinion, that his insanity may have followed the actual commission of his offence, or been caused by it?

18. Have you any reason to suppose that the offence could have been committed during a lucid interval during which he could be held responsible for his act? If so, what appears to you to have been the duration of such lucid interval? Or, on the contrary, do you believe his condition to be such as altogether to absolve him from legal responsibility.

19. Does he now display any signs of homicidal or of suicidal mania or has he ever done so to your knowledge?

20. Do you consider it absolutely necessary from his present condition that he should be confined in a mental hospital?

21. Do you think that judicious and unremitting supervision, out of a mental hospital might be sufficient to prevent him from endangering his own life or the property of others?

NO. X. **Questions that may be put to a Medical Witness in a case of Alleged Causing Miscarriage**

1. Did you examine the person of Musammat.....? If so, when? What did you observe?

2. Are you of opinion that a miscarriage has occurred or not? Give your reasons.

3. In what mode do you consider the miscarriage to have been produced, whether by violence per vaginam or by external violence, or by the use of irritants internally?

4. It is alleged that a drug called..... was used. State the symptoms and effects which the administration internally of this drug would produce. Do you consider that it would produce miscarriage?

5. Can you state whether the woman was quick with child when miscarriage was produced? State your reasons.

6. Did you see the fœtus? If so, at what period of gestation do you consider the woman to have arrived?

NO. XI. **Questions that may be put to a Medical Witness in a case of Grievous Hurt**

1. Have you examined.....? If so, state what you observed.

MEDICAL JURISPRUDENCE

2. Describe carefully the mark of violence which you observed.
3. In what way do you consider the injuries to have been inflicted? If by a weapon, what sort of weapon do you think was used?
4. Do you consider that the injuries inflicted could have been caused by the weapon now shown to you (No. ..... in the police charge sheet)?
5. What was the direction of the wound, and can you form an opinion as to the position of the person inflicting such a wound with respect to the person receiving it?
6. Is it possible for such a wound to have been inflicted by anyone on his own person? Give your reasons.
7. Do you consider that the injuries inflicted constitute any of the forms of "grievous hurt" defined in S. 320 of the Indian Penal Code? If so, which of them? Give your reasons. The Magistrate in putting this question will show the Indian Penal Code to the witness or the Magistrate may vary the form of the question so as to elicit the required information without calling the witness's attention to the Code.
8. Do you consider that the person injured is now out of danger?
9. It is alleged that the injuries were caused by..... Could they have been caused in the manner indicated?
10. Have you chemically or otherwise examined the stains on the weapon, clothes, etc. now before you (No. ..... in the police charge sheet)?
11. Do you believe the stains to be those of blood?

N.B.—In case of the injuries being gun shot wounds, questions 21 to 24 under the head of No. IV (Death by wounds) may be put to the witness.

NO. XII. **Questions that may be put to a Medical Witness in a case of Death from the Rupture of Spleen**

1. What appearances of external violence were perceptible on the body?
2. What was the size and weight of the spleen after death?
3. How far did it project beyond the ribs?
4. What was the consistency of the spleen—hard, firm, soft, pulpy or diffluent?
5. How long after death was the body exhumed, and what was the temperature of the air?
6. Was the body much putrefied?
7. What was the position of the rupture?
8. What was the length and depth of the rupture?
9. Is it your opinion that rupture was caused by external violence or not? State your reasons or your opinion.
10. Were there any adhesions about the spleen, if so, were they older than the rupture or not?

23. பிணத்தை தோண்டி எடுத்து பிரேதப் (EXHUMATION) பரிசோதனை செய்தல்

ஒருவரது மரணத்திற்கான காரணம் மற்றும் அடையாளத்தை கண்டுபிடிப்பதற்காக ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டிருக்கிற ஒரு சடலத்தை சோதனை செய்வது நலமென விசாரணை அலுவலர் கருதினால் இது சம்மந்தமாக ஒரு வேண்டுகோள் கடிதத்தை வருவாய் வட்டாட்சியர் / நிர்வாகத்துறை இரண்டாம் வகுப்பு நடுவர் அவர்களுக்கு கொடுத்து அவர் முன்னிலையில் அச்சடலத்தை தோண்டி எடுத்து சோதனையிடும்படி செய்யலாம். பிரேத விசாரணையை மேற்படி வருவாய் வட்டாட்சியர் தான் மேற்கொள்ள வேண்டும்.

i. சடலம் மிகவும் அழுகியிருந்தால் அரசு மருத்துவ அலுவலரை அவ்விடத்திற்கு வரவழைத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.
ii. **Any Injury / fracture is found on the corpse – we may question the police surgeon to know whether the injury or fracture is ante mortem / post mortem**
iii. இதற்கு கால வரம்பு கிடையாது.
iv. இறந்த சடலத்தை அடையாளம் காட்ட உரிய சாட்சியை காவல் துறை ஏற்பாடு செய்ய வேண்டும்.

SUPERIMPOSITION – (மண்டை ஓட்டுப் பரிசோதனை)

புலன் விசாரணையின் போது இறந்து போனவரின் அடையாளம், பெயர், முகவரி குறித்து தெரியாத / சந்தேகப்படும் சூழ்நிலையில் அந்த பிணத்தின் மண்டை ஓட்டைக் கொண்டு பின்னிட்டு சந்தேகப்படும் புகைப்படத்தின் மண்டை ஓட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்து விபரம் தெரிந்து கொள்வதற்கு பயன்படும் தடயமாகும்.

i. பிரேத பரிசோதனையின் போது பதப்படுத்தப்பட்ட தலைப்பகுதியையும் (Skull) கைப்பற்றப்பட்ட புகைப்படத்தையும் இன்னார் என்று அடையாளம் காண ஒப்பிட்டுப் பார்க்க சென்னை தடய அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி வைக்க நீதிமன்றத்தின் மூலம் வேண்டுகோள் கொடுக்கப்படவேண்டும்.
ii. மண்டை ஓட்டினை கீழ்த் தாடையுடன் பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
iii. அனுப்பப்படும் புகைப்படத்தை சேதப்படுத்தாமல் அனுப்பி வைக்க வேண்டும்.
iv. அடையாளம் தெரியாது இறந்து போன பிரேதங்கள் இம்முறை மூலம் பல வழக்குகளில் கண்டுபிடிக்க வாய்ப்பாக உள்ளது.

DIOXY RIBONUCLEIC ACID TEST (DNA TEST) (மரபணு சோதனை)

i. பாதிக்கப்பட்டவர் அல்லது இறந்தவருடைய இரத்தம், ஆண் விந்து, முடியின் மேற்பகுதி, சதை, நகம், உமிழ் நீர், எலும்பு தோல், உடலின் திசுக்கள் ஆகியவைகளில் உள்ள (DNA Molecule) இவைகளில் ஒப்பீடு செய்து கண்டுபிடிக்கும் முறை மரபணு சோதனை எனப்படும்.
ii. எதிரியின் மீது நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, நீதிமன்றத்தின் உத்திரவுப் பெற்று Blood sample எடுத்து அனுப்ப வகை செய்ய வேண்டும். அப்போது எதிரி மறுத்தாலும் நீதிமன்றம் உத்திரவு பிறப்பிக்கலாம். எதிரியினுடைய Blood sample எடுத்து அதன் மூலம் அவருடைய DNA வையும், தகாத உறவு முறையில் பிறந்த குழந்தை மற்றும் தாயினுடைய Blood sample யும் எடுத்து நீதிமன்றம் மூலம் உயிரியல் பிரிவு வேதியியல் பரிசோதனைக்கு Genetic Character –ஐ தெரிந்து கொள்ள அனுப்பி வைக்கவேண்டும், அதனை நீதிமன்றம் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 7 மற்றும் 9 ன் படி முடிவான சாட்சியமாக (Conclusive Proof) ஏற்றுக்கொள்கிறது, **(Premanandha Swamy Vs State of Tamil Nadu by CB CID, Chennai)**
iii. **494 IPC** வழக்குகளில் தந்தை, தான் குழந்தைக்கு தந்தை இல்லை என்று கூறும் வழக்குகளில் DNA Test மூலம் குழந்தையினுடைய உண்மையான தந்தை யார் (Paternity Proof) என்பதை நிரூபிக்க முடியும். இதனை நீதிமன்றம் முடிவான சாட்சியமாக (Conclusive Proof) ஏற்றுக் கொள்கிறது.
iv. பாதிக்கப்பட்டவருக்கு குழந்தை பிறந்த பின்பு தான் மரபணு சோதனை மேற்கொள்ளப்படும்.
v. இம்முறை மூலம் தனி மனிதரது இரத்தம், அவரின் ஆண் விந்து தான், என ஒப்புக் கொள்ளும் அளவிற்கு இது சாட்சியமாக அமைகிறது.
vi. இப்பரிசோதனை கொலை, கற்பழிப்பு, சந்தேக மரணம், பெற்றோர் யார் ? குழந்தையின் தந்தை யார், சிசுக் கொலை ஆகிய வழக்குகளைக் கண்டுபிடிக்க பயனுள்ளதாக அமைகிறது.

vii. சந்தேகப்படும் நபர், பாதிக்கப்பட்ட நபர் உறுப்புகளில் இருந்து மேற்படி DNA பெற நீதிமன்றம் மூலம் மருத்துவத் துறைக்கும் மற்றும் சென்னை, தடய அறிவியல் துறைக்கும் அனுமதி பெற்று அந்த நபரை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்ல வேண்டும்.

LIE DETECTOR ETC., (NARCO ANALYSIS TEST / BRAIN MAPPING)

முக்கிய வழக்குகளில், கொலை, கொள்ளை, கூட்டுக் கொள்ளை, ஆதாயக் கொலை, பண மோசடி, அரசிற்கும் பொதுமக்களுக்கும் பங்கம் விளைவிக்கும் குற்றங்கள், ஆகியவைகளின் போதிய சாட்சியங்கள் இல்லாத பட்சத்தில் சம்மந்தப்பட்ட நபரிடமிருந்து உண்மையைக் கண்டறியும் பொருட்டு செய்யப்படும் சோதனை ஆகும்.

i. இந்த முறை மாநில அளவிலான முக்கிய வழக்குகளில் மட்டுமே பயன்படுத்தப்படும்.
ii. இம்முறையைப் பயன்படுத்தும் போது நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்று மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
iii. கர்நாடக மாநிலம் பெங்களூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் மட்டுமே இந்த முறையில் கண்டறியும் வசதி உள்ளது.

Section 7 of I.E. Act 1872

தொடர்புற்ற நிகழ்மைகள் அல்லது தீர்வுதரு நிகழ்மைகள் நிகழ்ந்த தருணமாகவோ, அவற்றின் காரணமாகவோ அல்லது விளைவாகவோ உள்ள நிகழ்மைகள் அவை உடனடியானவையாக இருந்தாலும்சரி, அல்லது எந்த நிலைளில் அவை நிகழ்ந்தனவோ அந்த நிலையை உருவாக்கும் நிகழ்மைகள் அல்லது அவை நிகழ்வதற்கு அல்லது நடைபெறுவதற்கு ஒரு வாய்ப்பை அளித்த நிகழ்மைகள் தொடாபுற்றவையாகும்.

24. மரண வாக்குமூலம் பிரிவு 32 (1) இந்திய சாட்சியச் சட்டம்.

மரண வாக்குமூலம் என்பது சட்ட விரோதமாக செய்யப்படும் செயலால் இறக்க நேரிடும் போது ஒரு நபரால் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அல்லது சைகை மூலமோ வெளிப்படுத்தும் கூற்று ஆகும்.

i. நேரமிருப்பின் இந்த கூற்றை நீதித்துறை நடுவர் மட்டுமே பதிவு செய்ய வேண்டும். இதை அரசு மருத்துவமனையில் பணியில் இருக்கும் மருத்துவ அலுவலர் சம்மந்தப்பட்ட நீதிமன்ற நடுவருக்கு தகவல் தெரிவித்து மரண வாக்குமூலம் பதிவு செய்ய உறுதுணையாக இருக்க வேண்டும். மரண வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பு அந்த மருத்துவ அலுவலரால் மேற்படி நபர் வாக்குமூலம் கொடுக்கும் போது சுயநினைவில் உள்ளாரா, இல்லையா என்று சான்றளிக்க வேண்டும். சுய நினைவு இல்லாத நிலையில் மரண வாக்குமூலம் பதிவு செய்ய முடியாது. மரண வாக்குமூலம் பதிவு செய்யும் போது எந்த ஒரு காவல் அலுவலரும் உடன் இருக்க கூடாது.
ii. அடிபட்ட நபர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் நீதிமன்ற நடுவரை அழைக்க கால அவகாசம் இல்லாத தருணத்தில் மருத்துவ அலுவலரே மரணவாக்கு மூலத்தை இரண்டு சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யலாம். இதில் மருத்துவ அலுவலர் மற்றும் இரண்டு சாட்சிகளும் கையொப்பம் இடல் வேண்டும்.
iii. சூழ்நிலையைப் பொறுத்து மரணவாக்குமூலத்தை வேறு யாரும், கிராம நிர்வாக அலுவலர் (VAO) காவல் அலுவலர் அல்லது எந்த ஒரு தனி மனிதரும் பதிவு செய்யலாம். (இதற்கு சாட்சிய சட்டத்தில் மதிப்பு குறைவாகும்).
iv. மரண வாக்குமூலத்தில், இறக்கும் தருவாயில் உள்ள ஒரு நபர் உண்மையைத் தவிர பொய்யான தகவல்களை கொடுக்க மாட்டார் என்று நம்பப்படுவதால் அது முக்கியமான சாட்சியமாக ஏற்றுக்

கொள்ளப்படுகிறது. நீதிமன்ற தகவலின் படி மரண வாக்குமூலம் முற்றிலும் உண்மையென ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

v. மரண வாக்குமூலத்தை முத்திரையிடப்பட்ட உறையில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இதனை வழக்கு விசாரணை நடக்கும் போது மட்டுமே வெளிப்படுத்துதல் வேண்டும்.

vi. மரண வாக்குமூலம் கொடுத்த நபர் இறந்து விட்டால் மட்டுமே இது செல்லத்தக்கது.

vii. மரண வாக்குமூலம் கொடுத்த நபர் இறக்காதபோது அந்த மரண வாக்குமூலம் ஒரு நடுவரின் முன்பு கொடுத்திருந்தாரானால் அது 164 குவிமுச சட்டப்படி வாக்குமூலமாகவும், மற்றவர்கள் முன்னிலையில் கொடுத்திருப்பாரேயானால் அது 157 இந்திய சாட்சிய சட்டப்படி வாக்கு மூலமாகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

viii. மரணவாக்குமூலம் எழுத்து மூலமாக இருக்க வேண்டியது அவசியம் இல்லை. வாய்மொழியாகவும், சைகையாகவும் இருக்கலாம். இறக்கும் தருவாயில் உள்ள ஒரு நபர் மற்றொருவரிடம் கூறிவிட்டு இறந்துவிட நேரும் போது அவர் யாரிடம் மரண வாக்குலம் கொடுத்தாரோ அவரை சாட்சியமாக சேர்த்து அவர் இறந்து போன நபர் இறக்கும் தருவாயில் தன்னிடம் என்ன கூறினார் என்பதை நீதிமன்றத்தில் கூறும் போது அது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

Section 32 of I.E. Act 1872

இறந்து போன அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாத, அல்லது சாட்சியம் கொடுக்கத் திறனற்றவர் ஆகிவிட்ட ஒருவரால், அல்லது வழக்கின் சூழ்நிலைகளில் நியாயமற்றவை என்று நீதிமன்றத்திற்குத் தோன்றும் அளவிற்கு தாமதமோ செலவோ இல்லாமல் எவரது வருகையை முயன்றும் பெற முடியாதோ அவரால் தொடர்புற்ற பொருண்மைகளைப் பற்றிச் சொல்லப்பட்ட எழுத்துமூலமான அல்லது சொல் மூலமான உரைகளானவை, பின்வரும் நேர்வுகளில் தாமே தொடர்புற்ற பொருண்மைகள் ஆகும்.

i. அது மரணத்திற்கான காரணத்தைப்பற்றியதாயிருக்கும்போது

ii. அலுவல் நடப்பு முறையில் செய்யப்படும்போது

iii. எழுதிக் கொடுத்தவரின் உரிமைக்கு விரோதமாக செய்யப்படும்போது

iv. பொதுவுரிமை, வழக்கம், அல்லது பொது அக்கறைக்குரிய விஷயங்கள் பற்றிக்கருத்து தெரிவிக்கும் போது,

v. உறவு முறை சம்பந்தமாக இருக்கும்போது

vi. குடும்ப காரியங்கள் சம்பந்தமான ஆவணம் அல்லது உயிலால் அது செய்யப்படும்போது

vii. 13 வது பிரிவின் (அ) கூறில் கூறப்பட்ட நடவடிக்கைக்கு சம்பந்தமுள்ள பத்திரத்திலிருக்கும்போது

viii. பல்வேறு ஆட்களால் செய்யப்பட்டு பிரச்சனையிலும் விஷயத்திற்கு தொடர்புற்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்போது.

செய்யவேண்டியவை

1. நோயாளியின் உடல்நிலை குறித்து மருத்துவரின் மூலம் தெரிந்து கொண்டு அதை அணுசரித்து மரணவாக்குமூலம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

செய்யக்கூடாதவை

1. மரண வாக்குமூலத்திற்கும் காவல்அலுவலர் புலன் விசாரணையின் போது பதிவு செய்யும் வாக்கு மூலங்களுக்கும் முரணபாடுகள் இருத்தல்.

25. குற்ற அறிக்கை தாக்கல் செய்தல் (LAYING OF CHARGE SHEET) கு.வி.மு.ச. பிரிவு 173 (2)

i. வழக்குகளில் புலன் விசாரணை முடிந்த பின்பு இப்பிரிவின் கீழ் குற்ற அறிக்கை உரிய சட்டப்பிரிவின் கீழ் அரசு வழக்குரைஞருடைய மாதிரி வரைவு குற்ற அறிக்கை (DRAFT CHARGE SHEET) பெற்று உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

ii. 167 கு.வி.மு.ச படி கால அளவுக்கு உண்டான சட்டப்பிரிவுகளுக்கு தகுந்த குற்றத்திற்கு 30, 60, 90 நாட்களுக்குள் குற்ற அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் எதிரியை நீதிமன்றம் பிணையில் விட நேரிடும்.

iii. எந்த ஒரு வழக்குகளிலும் புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யும் போது "ச/பி 173 (2) கு.வி.மு.ச படியான குற்ற அறிக்கை" என்று குறிப்பிடவும். எக்காரணம் கொண்டும் "ச/பி 173 (2) கு.வி.மு.ச படியான இறுதி அறிக்கை (Final Report) என்ற வார்த்தை பயன்படுத்துவதை தவிர்க்கவும், ஏனெனில் சில வழக்குகளில் புலன் விசாரணையில் தவறுகள் ஏற்படும் பட்சத்தில் மீண்டும் ச/பி 173(8) கு.வி.மு.ச படி திறனாய்வு செய்து (Re-open) மேல் புலன் விசாரணை (Further investigation) செய்வதற்கு வசதியாக இருக்கும்.

Section 173 (2) Cr PC – PSO 573

(i) புலனாய்வு முடிக்கப்பட்ட உடனேயே காவல் அறிக்கையின்பேரில் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடுவருக்கு பின் வரும் விவரங்களை சொல்லி, மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் (Printed Charge sheet) அறிக்கையொன்றை காவல் நிலைய பொறுப்பு அலுவலர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) தரப்பினர்களின் பெயர்கள்.

(ஆ) தகவலின் தன்மை

(இ) வழக்கு விவரங்களைத் தெரிந்தவர்களாகத் தோன்றுகிறவர்களின் பெயர்கள்,

(ஈ) குற்றம் ஏதேனும் செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதா, அவ்வாறாயின், அது எவரால்

(உ) எதிரி கைது செய்யப்பட்டுள்ளாரா

(ஊ) அவர் தமது பிணை முறியின் பேரில் விடுவிக்கப்பட்டிருக்கிறாரா, அவ்வாறாயின் அது பிணையாள்களுடனோ இல்லாமலோ

(எ) (i) அவர் 170 ஆவது பிரிவின்படி காவலில் இட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்

(ii) அவ்வலுவலர் குற்றம் செய்யப்பட்டது சம்பந்தமான தகவலை முதலில் கொடுத்தவர் எவரேனும் இருப்பின் அவருக்கு, தாம் எடுத்த நடவடிக்கைப் பற்றி மாநில அரசால் விதிக்கப்படக்கூடிய முறையில் தெரியப்படுத்துதல் வேண்டும்.

PSO 573

(1) ஒரு குற்றவறிக்கையைப் படிவம் 78 ல் நீதிமன்றத்துக்கு அனுப்பும்போது அழைக்கவேண்டிய சாட்சிகளின் பெயர்களையும் முகவரிகளையும் குறித்து, ஒவ்வொரு சாட்சியும் மெய்ப்பிக்க வேண்டிய விஷயங்களைத் தெளிவாகக் குறிப்பிடும் தனிக்குறிப்பு ஒன்றை குற்றவியல் துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் இது சாட்சியக் குறிப்பானை (Memo of Evidence) எனப்படும்.

(2) சாட்சியக் குறிப்பாணை நீதிமன்றத்தின் உபயோகத்துக்காக ஏற்பட்டது. அதன் நகல்கள் எதிரிக்காவது வேறொருவருக்காவது கொடுக்கப்படமாட்டாது.

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. வழக்கில் புலன் விசாரணையினை எவ்வளவு விரைவாக முடிக்க இயலுமோ அவ்வளவு விரைவாக முடித்து காலதாமதமின்றி இறுதி அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.	1. வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதில் எக்காரணம் கொண்டும் காலதாமதம் செய்தல்.
2. இறுதி அறிக்கையில் அனைத்து பகுதிகளையும் நன்கு தெரியும்படி தெளிவாக விபரங்களை முழுமையாக எழுத வேண்டும்.	2. நீதிமன்றத்திற்கு அனுப்புமுன் இறுதி அறிக்கை களில் அரசு வழக்குரைஞர்களின் (ADP, APP . PP) இவர்களின் opinion / approval வாங்காமல் அனுப்புவது.
3. குற்றப் பத்திரிகைப் படிவத்தில் Charge sheet Form-ல் குற்ற வரிசை எண் சரியாக எழுத வேண்டும்,	3. இரு குற்றப்பத்திரிக்கைகளில் ஒரே எண்ணை எழுதி விடுவது.

26. தொடர் புலன் விசாரணை – வழி முறைகள்

வழக்குகளில் குற்ற அறிக்கை தாக்கல் செய்த பின்பு, ஒரு வழக்கில் புது பொருண்மை வெளிப்படும் பட்சத்தில் (New Fact came to light) அந்த வழக்கில் புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்திருந்தால் கூட, அந்த வழக்கு நீதிமன்ற நிலுவையில் இருக்கும் பட்சத்தில் அல்லது முடிந்த பின்பும் கூட மேற்படி வழக்கினுடைய பொருண்மைக்கு முதல் கு.வி.மு.ச படி அந்த வழக்கை உரிய நீதிமன்றத்தில் இப்பிரிவின் படி மேல் புலன்விசாரணை அனுமதி பெற்று அந்த வழக்கில் மேல் புலன் விசாரணை செய்து அதிகப்படியான குற்றத்திற்கு (Major offence) குற்ற அறிக்கை தாக்கல் செய்யலாம்.

உதாரணம்

ஒரு நபர் அவரை மற்றொரு நபர் தடியால் காயத்தை உண்டாக்கியதற்காக ச/பி 324 இதச கீழ் வழக்குப் பதிவு செய்து, வழக்கில் நீதிமன்ற விசாரணை முடிந்த பின்பு, சில நாட்கள் கழித்து அந்த காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என தெரியவந்தால் இப்பிரிவு பொருந்தாது. ஆனால் அந்த காயம் பட்ட நபர் அந்த சம்பவத்தின் போது ஏற்பட்ட அந்த காயத்தினால் இறந்துள்ளார் என தெரியவரும் பட்சத்தில் இப்பிரிவின் கீழ் மேல் நடவடிக்கை மேற்கொண்டு உரிய சட்டப்பிரிவின் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். (300 (3) Cr.PC).

(A person is charged for a major offence need not to be charged for near major section. But consequences ensure for the death of the person, case may be further investigated and the accused may be charged for the major offence (300 (3) Cr.PC).

324 – 326 IPC	**:-**	**not necessary**
324 – 302 IPC	**:-**	**necessary**
337 – 338 IPC	**:-**	**not necessary**
337 – 304(A) IPC	**:-**	**necessary**

Section 173 (8) Cr P.C

(8) இந்தப்பிரிவிலுள்ள எதுவும் (2) வது உட்பிரிவின்படி அறிக்கையொன்று நடுவருக்கு அனுப்பப் பட்டதற்குப் பின்பு குற்றமொன்றைப் பற்றி மேற்கொண்டு புலனாய்வு செய்வதைத் தடை செய்வதாகக் கொள்ளுதல் ஆகாது. மற்றும் அத்தகைய புலனாய்வின் பேரில் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் மேற்கொண்டு வாய்மொழியான அல்லது பத்திரமூலமான சாட்சியத்தைப் பெற்றுக்கொள்ளுமிடத்து அவர் அத்தகைய சாட்சியத்தைப் பற்றி மேற்கொண்டு ஒரு அறிக்கை அல்லது அறிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட வகைமுறைகள் (2) ஆவது உட்பிரிவின்படி அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை சம்பந்தமாக இயங்குவன போன்றே அத்தகைய அறிக்கை அல்லது அறிக்கைகள் சம்பந்தமாகவும் இயலுமளவிற்கு இயங்குதல் வேண்டும்.

Section 300(3) Cr P.C. :-

பின்விளைவுகளை ஏற்படுத்துகிற எந்தச் செய்கையேனும் உண்டான குற்றம் எதையேனும் செய்ததாகத் தண்டிக்கப்பட்ட ஒருவர் அந்தப் பின்விளைவுகள் அத்தகைய செய்கையுடன் ஒருங்கு சேர்த்து, எந்தக் குற்றத்திற்காக அவர் எவ்வாறு தண்டிக்கப்பட்டாரோ அந்தக்குற்றத்தினின்றும் வேறுபட்ட ஒரு குற்றமாக அமையுமானால் அவர் தண்டிக்கப்பட்ட காலத்தில் அந்தப் பின் விளைவுகள் நிகழவில்லையாயினும் அல்லது நிகழ்ந்திருப்பனவாக நீதிமன்றத்திற்குத் தெரியவில்லையானாலும், கடைசியாகச் சொன்ன குற்றத்திற்காக அவர் விசாரணை செய்யப்படலாம்.

27. புலனாய்வில் அறிவியலின் பங்கு

சம்பவ இடத்தில் குற்றவாளிகள் விட்டுச் சென்ற தடயங்கள் நம் கண்ணிற்கு தெரியாத தருணத்தில் சட்டம் மற்றும் அறிவியல் சார்ந்த மருத்துவத் துறை மூலம் தடயங்களை கண்டு பிடிக்கும் முறையாகும்.

FINGER PRINTS – கைவிரல் ரேகை பதிவு

உலகில் எந்த இரு நபர்களுக்கும் ஒரே மாதிரியான விரல் ரேகைகள் இருக்காது என்ற தத்துவத்தின் அடிப்படையில் இம்முறை இயங்குகிறது. (No two finger prints are identical).

ஒவ்வொரு மாவட்ட அளவிலும் ஒருவிரல் கைரேகை பதிவுக்கூடம் இயங்கி வருகிறது. முக்கிய குற்றங்களான கொலை, கொள்ளை, திருட்டு, ஆதாயக் கொலை, கூட்டுக் கொள்ளை ஆகிய வழக்குகளில் எதிரிகள் தங்களுக்குத் தெரியாமல் விட்டுச் சென்ற ஆதாயங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு வழக்குப் பதிவு செய்யும் அலுவலரின் மூலம் மேற்படி ஆய்வகத்திற்கு தகவல் அனுப்பியும், அவர்கள் வருகை தரும் பட்சத்தில் அவர்களுக்கு உதவியாக இருந்தும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். சம்பவ இடத்தில் வசிக்கும் நபர்கள் அடிக்கடி வருகை தரும் நபர்கள், சந்தேகப்படும் நபர்கள் ஆகியோருடைய கைரேகைகளை அதற்கென பிரத்யேகமாக உள்ள கைரேகை படிவத்தில், மூன்று பிரதிகளில் பதிவு செய்து (Records slip) அதை சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும். ஆய்வு செய்த கைவிரல் ரேகை பதிவு அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும். இது நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

குற்றம் நடந்த இடத்தில் கால் பதிவு (Foot Print) தடங்கள் இருப்பின் அதை பாதுகாத்து சம்மந்தப்பட்ட துறைக்கு தகவல் அனுப்பி அவர்கள் வந்து ஆய்வு செய்யும் வரை உடனிருந்து கால் பதிவை எடுத்து, சந்தேகப்படும் நபர்கள் ஆகியோருடைய கால் பதிவுகளையும் அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் தரும் அறிக்கையின் அடிப்படையில் வழக்கு விசாரணையை மேற்கொள்ளலாம். காலில் ஏற்படும் நிரந்தர காயங்கள், அதிகப்படியான கால் விரல்கள், குறைவான கால் விரல்கள், நிரந்தர ஊனங்கள் ஆகியவைகளின் பதிவுகள் சாட்சியத்திற்கு பயன்படுகிறது. ஆய்வு செய்த கால் தட பதிவு அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும். இது நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

DOG SQUAD (துப்பறியும் நாய் பிரிவு)

மனிதனை விட நாய்க்கு மோப்ப சக்தி 40 மடங்கு அதிகம் என்பதால் இம்முறை பயன்படுத்தப்படுகிறது. இது விசாரணைக்கு பகுதி அளவு வழிகாட்டியாக அமையுமே ஒழிய சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் துப்பறியும் நாய் பிரிவு இயங்கி வருகிறது. குற்றம் நடந்த உடன் காவல் நிலைய அலுவலர் வான் தகவல் மூலமும் / தபால் மூலமும் மேற்படி துப்பறியும் நாய் பிரிவுக்கு தகவல் அனுப்பி உடனடியாக எந்த ஒரு தாமதமும் இல்லாமல் வரவழைத்து விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

PHOTO –SECTION (புகைப்படப் பிரிவு)

முக்கிய வழக்குகளில் புலன் விசாரணை அலுவலர் மாவடட புகைப்படப் பிரிவிற்கு தகவல் அனுப்பி அவர்களை வரவழைத்து சம்பவ இடத்தை பல்வேறு கோணங்களில் எந்த ஒரு சாட்சியமும் விட்டுவிடாமல் புகைப்படம் எடுத்து விசாரணைக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புகைப்படம் மற்றும் நெகட்டீவ் ஆகியவைகளுடன் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். புகைப்படம் எடுத்த நிபுணரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும். இது நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

BOMB DETECION AND DISPOSAL SQUAD (BDDS) etc., – வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயல் இழப்பு பிரிவு

i. இப்பிரிவு ஒவ்வொரு மண்டல அளவில் இயங்கி வருகிறது. இதற்கான வேண்டுகோள் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மூலம் பெற்று நீதிமன்றத்தில் ஒப்புவித்து, உத்திரவுப்படி செயல்பட வேண்டும்.

ii. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெடிபொருட்கள் இருக்கும் இடத்தை சுற்றி சுமார் 300 மீட்டர் அளவிற்கு எந்த ஆள் நடமாட்டம் இல்லாத அளவிற்கு அப்புறப்படுத்த வேண்டும். அதற்கருகில் எந்த ஒரு அதிர்வுகளோ, மின்சாரமோ, நெருப்போ இல்லாத அளவிற்கு பார்த்துக் கொள்ள வேண்டும். வெடிபொருள் இருக்கும் இடத்தைச் சுற்றி பாதுகாப்பிற்காக மணல் மூட்டைகளை அடுக்கி உயிர் மற்றும் பொருள் இழப்பு ஏற்படுவதை தடுக்கவேண்டும்.

iii. வெடிபொருள் நிபுணரிடம் இருந்து அறிக்கை பெற்று அது வெடிக்கும் தன்மையுள்ளது, உயிருக்கும், உடமைக்கும் இழப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதை அறிந்து வழக்கு விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

iv. வெடிபொருள் கண்டுபிடிப்பு நிபுணரின் அறிக்கை நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப் படும்.

28. (CASE DIARY – MAINTENANCE AND DISPOSAL) வழக்குக் கோப்பு – பராமரித்தலும் அழித்தலும்

பராமரித்தல் –

i. வழக்கு கோப்புக்கள் காவல் நிலையப் பொறுப்பு அதிகாரியால் பாதுகாக்கப்பட வேண்டும்.

ii. வழக்கு கோப்புக்கள் முறையாக படிவம் 83 ல் கொடுக்கப்பட்ட (Case Diary Docket Sheet) விபரங்கள் அடங்கிய மேல் அட்டையுடன் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

iii. உயரலுலர்கள் மற்றும் மேல் அதிகாரிகளின் ஆய்வின் போதும், தணிக்கையின் போதும் சுத்தமாக உரிய விபரங்களுடன் ஆஜர் படுத்தப்படவேண்டும்.
iv. நீதிமன்றங்களிலும், அரசு வழக்குரைஞர்களும் வழக்கு கோப்பை கோரும் போது அவர்களது தணிக்கைக்கு ஆஜர் செய்ய வேண்டும்.
v. வழக்கு கோப்புகள் நீதிமன்றத்திலோ மற்றும் உயரலுவலர்களின் அலுவலகத்திலோ ஒப்படைக்கப் படும் போது ஒப்புதல் பெற வேண்டும். அந்த ஒப்புதல் விபரத்தை முதல் தகவல் அறிக்கை பதிவேட்டில் அந்த வழக்கிற்கு எதிரில் குறிக்கவேண்டும்.

அழித்தல்

வழக்கு கோப்புக்கள் வழக்குகள் முடிவு செய்யப்பட்டவுடன் மாவட்ட காவல் துறை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேற்படி கோப்புக்கள் மேல் முறையீடு இல்லாத பட்சத்தில் 5 ஆண்டுகளுக்கு பின்பு அழிக்கப்பட வேண்டும்.

i. மேல் முறையீடுகள் செய்யப்பட்டிருப்பின் அம்முறையீடுகள் முடிவுற்று அதன் பின்பு 5 வருடங்கள் கழித்து வழக்கு கோப்புகள் அழிக்கப்பட வேண்டும்.

29. சமுதாயப் பணிப்பதிவேடு மற்றும் மனு விசாரணை

காவல் நிலையத்தில் பிடிக்கக் கூடாத குற்றங்கள், குடும்பம், (COMMUNITY SERVICE REGISTER AND PETITION ENQUIRY) மற்றும் உரிமையியல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் சம்மந்தமாக பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக மனு இரசீது வழங்கி இப்பதிவேட்டில் பதிவு செய்தும், பொது நாட்குறிப்பில் உடனடியாக பதிவு செய்ய வேண்டும். தேவைப்படும்பட்சத்தில் நீதிமன்ற அனுமதி பெற்று 190 (1) (ெ) கு.வி.மு.ச படி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

i. மனு விசாரணை சம்பவ இடத்தில் தான் மேற்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் காவல் நிலையத்திற்கு மனு விசாரணைக்காக பெண்கள் / குழந்தைகள் / முதியோர்கள் ஆகியோர்களை வரவழைக்கக்கூடாது.
ii. உடனடியாக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் – 3 தினங் களுக்குள் விசாரணை முடிக்கப்படவேண்டும்.
iii. விசாரணையில் பிடிக்கக்கூடிய குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் தாமதமின்றி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.
iv. குடும்ப பிரச்சனைகளை இயன்ற வரை சுமூகமாகப் பேசி முடித்து முடிவு செய்தல் வேண்டும்.
v. சிவில் பிரச்சனைகளை கவனமாகக் கையாண்டு இரு தரப்பினரையும் சம்மந்தப்பட்ட நீதி மன்றத்தில் முறையிட்டு நிவாரணம் தேடிக்கொள்ள அறிவுரை வழங்க வேண்டும்.
vi. ஒரு தலைப் பட்சமாக செயல்படக் கூடாது.
vii. காவல் நிலையத்திற்கு வரும் மனுதாரர்களை மரியாதை மற்றும் மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும்.
viii. மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இருதரப்பினரையும் ஒரே நேரத்தில் வைத்து சரி சமமாக விசாரிக்க வேண்டும்.
ix. விசாரணை முடிவுகளை மனுதாரருக்கு தெரிவித்து ஒப்புதல் பெற வேண்டும்.
x. மனுவிசாரணை முடிவுகளை அந்த முடிவுற்ற மனுக்களில் விசாரணை அலுவலர் தன் கைப்பட எழுத வேண்டும்.
xi. விசாரணையின் முடிவுகள் கீழ்க்கண்டவாறு அமையும் –

- Compromise – சமாதானம் செய்து வைத்தல்
- Warning – எச்சரித்தல்
- Petty Case – சிறு வழக்கு பதிவு செய்தல்
- FIR – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல்
- Withdrawn – திரும்பப் பெறுதல்
- Transfer. – மற்ற காவல் நிலையத்திற்கு மாற்றுதல்

xii. மேற்கண்ட விதத்தில் முடிவு செய்யப்பட்ட மனுக்கள் அனைத்தும் முழு விபரங்களுடன் கோப்பாக, வரிசை கிரமமாக பராமரித்து பாதுகாக்கப்பட வேண்டும்.

xiii. பிடிக்கக் கூடாத குற்ற வழக்குகளில் புகார் வரும் போது நீதிமன்ற நடுவரின் அனுமதி பெற்றுத்தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். மேலும் அவ்வாறான வழக்குகளில் எதிரிகளை நீதிமன்ற அனுமதியின்றி கைது செய்யக்கூடாது.

செய்யவேண்டியவை

1. மனு விசாரணையில் பிடிக்கக்கூடாத குற்றம் ஒன்று நடந்ததாக தெரிய வருமாயின் தாமதமின்றி அது குறித்த அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
2. உரிமையியல் வழக்கு சம்பந்தப்பட்ட பிரச்சனை களை கையாள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. நீதிமன்றங்கள் மனு விசாரணை குறித்து கோரும் போது உரிய மனுவினை தகுந்த ஒப்புகையுடன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும்.

செய்யக்கூடாதவை

1. மனுவிசாரணையில் காலதாமதம் செய்வது.
2. இரு தரப்பினரிடையேயும் வேண்டத்தகாத நிகழ் வுகள் நிகழ வழி வகை செய்தல்.
3. சிவில் வழக்கு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் தேவையில்லாமல் தலையிட்டு அதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படவோ மற்றும் நீதிமன்றத்தின் கேள்விக்கோ (Unnecessary comments) இடமளித்தல்.

30. குற்றப் பதிவு, புலன் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணை குறித்து மேற்கொள்ளவேண்டிய தொடர் நடவடிக்கைகள்

குற்றங்களைப் பதிவு செய்தல்

1. புகார் மனுவைப் பெற வேண்டும்
2. வாய்மொழியாகப் புகார் கொடுக்கப்பட்டால், அதனை எழுத்து வடிவில் மாற்றி புகார்தாரருக்குப் படித்துக் காட்டிய பின்பு அவரது கையொப்பம் பெற வேண்டும்

மனுக்கள்

3. கைது செய்வதற்குரியதல்லாத (அ) கைது செய்யக்கூடாத குற்றமாக இருக்குமானால்:
   - i. (Community Service Register-CSR) சமுதாயப் பணிப் பதிவேடு ரசீது கொடுக்க வேண்டும்
   - ii. காயம் அடைந்திருந்தால், மருத்துவக் குறிப்பாணையுடன் அவரை மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்
   - iii. (General Diary - GD) பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்
   - iv. சமுதாயப் பணிப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்
   - v. (கூடுமானவரையில், சம்பவம் நிகழ்ந்த கிராமத்திலோ அல்லது இடத்திலோ) மனுதாரரையும் , எதிர்மனுதாரரையும் சந்தித்து விசாரணை செய்யவேண்டும்
   - vi. மருத்துவக் குறிப்பாணை மீது மருத்துவ அலுவலரின் அறிக்கையைப் பெற்று, அதனை மருத்துவக் குறிப்பானை பதிவேட்டில் அடிநகலை ஒட்ட வேண்டும். நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருந்தால், அதுபற்றிய விவரங்களை மருத்துவக் குறிப்பாணையின் பின்புறத்தில் எழுத வேண்டும்
   - vii. புகார் மனு மீதான நடவடிக்கையை முடிவு செய்ய வேண்டும்
   - viii. கைது செய்யத்தகாத குற்றமாக இருக்குமானால்: தேவைப்படும்போது, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 190(1)(ெ) பிரிவின்படி, அது குறித்த அறிக்கையை நீதிமன்ற நடுவருக்கு அனுப்ப வேண்டும்
   - ix. சமுதாயப் பணிப் பதிவேட்டில் பைசல் செய்யப்பட்டதற்கான விவரத்தைக் குறிக்க வேண்டும்

முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆரம்பகட்ட நடவடிக்கை

4. கைது செய்வதற்குரிய குற்றமாக இருக்குமானால்: முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்யவும்
5. பதிவு செய்யப்பட்ட விவரத்தை, பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்
6. குற்றச்சம்பவம் நிகழ்ந்த இடம், வேறொரு காவல் நிலைய எல்லைக்குட்பட்டதாக இருக்குமானால்:
   - i. குறிப்பிட்ட எல்லைக்குரிய காவல் நிலையத்திற்கு புகாரை மாற்ற வேண்டும்
   - ii. அக்குறிப்பிட்ட காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டதற்கான குற்ற எண் என்ன என்பதைக் கேட்டறிந்து, அந்த விவரத்தை. முதல் தகவல் அறிக்கை அட்டவணையில் குறித்துக் கொள்ள வேண்டும்
7. சம்பவ இடத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்
8. முதல் தகவல் அறிக்கையின் நகலை நீதிமன்றத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அனுப்ப வேண்டும்
   - i. முதல் தகவல் அறிக்கையுடன், புகார் மனுவின் உண்மை நகலைச் சேர்த்து – நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்
   - ii. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 174–வது பிரிவு சம்பந்தப்பட்ட சாதாரண புகார்களாக இருந்தால் – வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்

iii. திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள்ளாக ஒரு பெண் இயற்கைக்கு மாறான வகையில் மரணமடைந்தால் – வருவாய்க் கோட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்

iv. வழக்கு நாட்குறிப்புப் பதிவேட்டில் ஒரு நகல் ஒட்டப்பட வேண்டும்

v. காவல் ஆய்வாளருக்கு ஒரு நகல் அனுப்ப வேண்டும்

vi. மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடத்திற்கு ஒரு நகல் அனுப்ப வேண்டும்

vii. புகார்தாரருக்கு ஒரு நகல் கொடுக்க வேண்டும்

viii. அலுவலக நகலை, முதல் தகவல் அறிக்கைப் புத்தகத்தில் ஒட்ட வேண்டும்

9. முதல் தகவல் அறிக்கையின் நகலை, புகார்தாரரின் ஒப்புகையைப் பெற்றுக்கொண்டு, கட்டணம் ஏதும் பெறாமல், இலவசமாக அளிக்க வேண்டும்

10. உரிய குற்ற வழக்குகளில், கீழ்க்குறிப்பிட்டவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களை அழைக்க வேண்டும்

i. புகைப்பட நிபுணர்

ii. விரல் ரேகைப் பதிவு நிபுணர்

iii. அறிவியல் உதவியாளர்

iv. மோப்ப நாய்ப் படை பிரிவினர்

v. வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றம் செயலிழக்கச் செய்யும் பிரிவினர்

11. சம்பவம் ஒரு முக்கிய நிகழ்வாக இருக்குமானால், அதுகுறித்து தனிப்பிரிவிற்குத் தெரியப்படுத்த வேண்டும்

12. புகார்தாரரோ அல்லது வேறு நபரோ காயமடைந்திருந்தால்

i. மருத்துவக் குறிப்பாணை தயார் செய்ய வேண்டும்

ii. காவலர் ஒருவருடன் காயமடைந்த நபரை மருத்துவச் சோதனைக்கு அனுப்ப வேண்டும்

iii. விபத்து அறிக்கை நகலைப் பெற வேண்டும்

13. பாதிக்கப்பட்ட நபர் மிகவும் மோசமான நிலையில் இருந்தால், அவரது மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய வாக்குமூலம் நீதிமன்ற நடுவரால் பதிவு செய்யப்பட வேண்டும்; நீதிமன்ற நடுவர் இல்லாதபட்சத்தில், மருத்துவ அலுவலரின் முன்னிலையில் பதிவு செய்து, வாக்குமூலம் கொடுக்கக்கூடிய நிலையில்தான் பாதிக்கப்பட்ட நபர் இருந்தார் என்பதற்கான சான்றினை, அம்மருத்துவ அதிகாரி அளித்தல் வேண்டும்

தனித்தன்மை குற்ற வகைகள்

14. பாரிக் குற்றங்கள்

i. குற்ற வகைகள்

a. கொலை

b. கொலையாகாத மரணம்

c. கூட்டுக் கொள்ளை

d. வழிப்பறி (ரூபாய் 150–க்கு மேல்)

e. வீட்டை உடைத்து உட்புகுந்து, பாரிக் குற்றத்தில் ஈடுபடுதல் (பொதுவாக ரூ.35,000/– மதிப்பிற்கு மேலான சொத்துக்களைத் திருடுதல்)

f. ரூ 50,000/– மதிப்பிற்கு மேலான சொத்துக்களைத் திருடிய பாரிக் குற்றங்கள்

g. கலவரம், சச்சரவுகள் போன்ற வன்முறைக் குற்றங்களால் ஏற்படும் இடையூறுகள்

h. கள்ள ரூபாய்நோட்டு சம்பந்தமான குற்ற வகைகள்

i. ஒன்றுக்கும் மேற்பட்ட மரணங்கள் சம்பவித்த சாலை விபத்துக்கள்

j. சந்தேகத்திற்கிடமான மரணங்கள்

k. சிலைகள் மற்றும் புராதணப் பொருட்கள் களவாடப்படுதல்

l. ஆதிதிராவிடர்களுக்குக் கொடுங் காயங்களை ஏற்படுத்தும் விதத்தில் நிகழ்ந்த வன்முறைச் செயல்கள்

m. கற்பழிப்புக் குற்றங்கள் (இதில் ஆதிதிராவிடர்கள் பாதிக்கப்பட்டார்களா என கவனித்தல் வேண்டும்)

n. ஆதிதிராவிடர் சொத்துக்களுக்குத் கொடுந்தீங்கிழைத்தல் அல்லது தீ வைத்தல் போன்ற குற்றங்கள்

o. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் 3 மற்றும் 4 ஆகிய பிரிவுகளின் கீழ் வரக்கூடிய குற்றங்கள்

p. வெடிபொருட்கள் சட்டம், வெடி மருந்துச் சட்டம் அல்லது ஆயுதச் சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்துவிதமான குற்றங்கள் (தலைமை அலுவலக சுற்றறிக்கை எண் Rc.No ,227835/Cr,I (1).2005, Dt. 27.01.2006–யில் கூறியுள்ளபடி)

ii. இவ்வாறான பாரிக் குற்றங்களாக இருப்பின்:

விரைவு முதல் தகவல் அறிக்கையினை, நீதிமன்றம், ஆய்வாளர், உட்கோட்ட காவல் அதிகாரி மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு, சிறப்பு தபால் அலுவலர் மூலம் அனுப்புதல் வேண்டும்

ஆய்வாளர் மற்றும் உட்கோட்ட காவல் அதிகாரி ஆகியோருக்கு தொலைபேசி அல்லது வான்செய்தி மூலமாக தகவல் தெரிவிக்க வேண்டும்

ஆய்வாளர் வந்துசேரும் வரையில், குற்றச்சம்பவம் நிகழ்ந்த இடத்தைப் பாதுகாக்க வேண்டும்

15. நினைவில் கொள்க

i. திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள்ளாக ஒரு பெண், இயற்கைக்குப் மாறான முறையில் மரணமடைந்தால்

a. வருவாய்க் கோட்ட அலுவலரால் பிரேத விசாரணை நடத்தப்பட வேண்டும்

b. உட்கோட்ட காவல் அதிகாரியால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்

ii. கீழ்க்குறிப்பிட்ட வகை குற்றங்களில், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத அதிகாரியால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்

a. தாழ்த்தப்பட்ட / பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரான (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் குறித்த குற்றங்கள்

b. தகவல் தொழில்நுட்பச் சட்டம் சம்பந்தமான குற்றங்கள்

iii. கீழ்க்குறிப்பிட்ட வகைக் குற்றங்களில், காவல்துறை ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட வேண்டும்

a. விபச்சாரத் தடைச் சட்டத்தின் கீழ் வரக்கூடிய குற்றச்செயல்கள்

b. இதர அனைத்து பாரிக் குற்றச்செயல்கள்

c. போதைப் பொருள் மற்றும் மதிமயக்கப் பொருள்கள் சட்டத்தின் கீழ் வரும் குற்றச் செயல்கள்

d. 304–பி பிரிவின் கீழ்வரும் குற்றங்கள்

காவல் நிலை ஆணை எண் 151–ன் கீழ் வரும் குற்றங்கள்

a. முதல் தகவல் அறிக்கை நகலை வருவாய்க் கோட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்

b. வருவாய்க் கோட்ட அலுவலரால் புலன் விசாரணை நடத்தப்பட வேண்டும்

16. கற்பழிப்பு குற்றச்செயலால் பாதிக்கப்பட்ட நபரை, பெண் காவலர் ஒருவருடன் மருத்துவப் பரிசோதணைக்கு அனுப்ப வேண்டும்

புலன் விசாரணை

ஆரம்பகட்ட புலன்விசாரணை

17. சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட வேண்டும்

18. தேவைப்படுமானால், சம்பவ இடத்தைப் புகைப்படம் எடுக்கவும் அல்லது ஒளிப்பதிவு செய்யவும்

i. புகைப்பட நிபுணரை விசாரித்து வாக்குமூலம் தகவலைப் பதிவு செய்யவும்

ii. புகைப்படங்கள் மற்றும் எதிர்மறை புகைப்படச்சுருள்கள் ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்

19. சம்பவ இடத்தில் பார்வை கிரகத்து மகஜர் தயார் செய்யவும்

i. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 160–வது பிரிவின்படி இரண்டு மதிப்புமிக்க உள்ளூர்வாசிகளை சாட்சிகளாக அழைத்து அவர்களின் முன்னிலையில் மேற்படி மகஜரை தயார் செய்ய வேண்டும்

ii. அவ்வாறு தயாரிக்கப்பட்ட மகஜரின், மேற்படி சாட்சிகளின் கையொப்பங்களைப் பெறவும்

20. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 160–வது பிரிவின்படி இரண்டு மதிப்புமிக்க உள்ளூர்வாசிகளை சாட்சிகளாக அழைத்து அவர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தின் மாதிரி வரைபடத்தைத் தயார் செய்ய வேண்டும்

21. தகுந்த அறிவியல்பூர்வமான சாட்சியப் பொருட்கள் கிடைக்கின்றனவா என கூர்ந்து பார்க்க வேண்டும்

22. கட்டுப்பாட்டு மாதிரிகள் உட்பட (control samples) தகுந்த சாட்சியப் பொருட்களைக் (evidentiary value) கைப்பற்றி, காலதாமதமின்றி அவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

23. கைப்பற்றுதல்

i. கைப்பற்றப்பட்ட பொருட்கள் என்னென்ன என்ற விவரத்துடன் கைப்பற்றுதல் மகஜர் தயாரிக்கவும்

ii. இரண்டு மதிப்புமிக்க உள்ளூர்வாசி சாட்சிகளிடம், அம்மகஜரில் கையெழுத்து பெறவும்

24. தகுந்த முன்னெச்சரிக்கையுடனும், அறிவியல் உதவியாளரின் உதவியுடனும், கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பாகக் கட்டி எடுத்துக்கொள்ளவும்

25. சாட்சியங்களை விசாரணை செய்யவும்

i. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 161–பிரிவின்படி வாக்குமூலத்தைப் பதிவு செய்யவும்

ii. பெண்கள் மற்றும் குழந்தைகளை விசாரிப்பதற்கென காவல் நிலையத்திற்கு அழைக்கக்கூடாது, ஆனால் அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களை விசார–ணை செய்ய வேண்டும்

iii. பெறப்பட்ட வாக்குமூலத்தை சம்பந்தப்பட்ட சாட்சி படித்துப் பார்க்க வேண்டும் அல்லது அவருக்குப் படித்துக் காட்ட வேண்டும், (சாட்சியால் படித்துப் பார்க்கப்பட்டது அல்லது சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டது) என்ற விவரத்தையும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு எழுத வேண்டும்

iv. வாக்குமூலத்தில் புலன் விசாரணை அதிகாரி கையொப்பமிட வேண்டும், சாட்சியின் கையெழுத்து பெறக்கூடாது

v. வாக்குமூலத்தை மூன்று நகல்களாக எடுக்க வேண்டும்

a. வழக்கு நாட்குறிப்பில் ஒரு நகல்

b. ஆய்வாளர் மூலமாக உட்கோட்ட காவல் அதிகாரிக்கு அனுப்புவதற்கு ஒரு நகல்

c. நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்காக ஒரு நகல்

vi பாரிக் குற்றங்கள் சம்பந்தமாகப் பெறப்படும் வாக்குமூலமாக இருந்தால், மேலும் ஒரு நகலை எடுத்து (நான்காவது நகல்), காவல் நிலைய வழக்கு நாட்குறிப்பு கோப்புடன் சேர்த்து வைக்க வேண்டும்

26. கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் அல்லது சாட்சியப் பொருட்கள்

i. படிவம்–91 –ஐ பூர்த்தி செய்து மூன்று நகல்கள் எடுக்கவும். படிவம் –91 புத்தகத்தில் ஒரு நகலை விட்டு, இதர இரண்டு நகல்களையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் சேர்த்து நீதிமன்றத்திற்கு அனுப்பவும். இவ்விரு நகல்களில் ஒன்றில், நீதிமன்றத்தில் சொத்துக்கள் பெற்றுக் கொண்டதற்கான எண் (Received Property No. – RP No.) குறிக்கப்பட்டு, பெற்றுக்கொண்டவரின் கையொப்பத்துடன் திருப்பி அளிக்கப்படும். நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்ற நகலை படிவம்–91 புத்தகத்தில் ஒட்டிவைக்கவும். ஏற்கனவே அப்புத்தகத்தில் இருந்த (படிவம்–91) படிவத்தை எடுத்து, அதில் நீதிமன்ற RP No.–ஐ பதிவு செய்து, அந்நகலை வழக்கு நாட்குறிப்பு கோப்பில் வைக்கவும்

ii. நீதிமன்றத்திலிருந்து ஆரம்பகட்ட பதிவு எண் (Priliminary Registration No.-PR No.) அல்லது சொத்துக்கள் பெற்றுக்கொண்டதற்கான எண் (RP No.)–(அந்தந்த நீதிமன்றத்தில் வழக்கத்தில் உள்ளபடி) ஆகியவற்றில் ஒன்றைப் பெறுவதன் மூலம் உரிய ஒப்பளிப்பினை பெற்று வரவேண்டும்

27. கைப்பற்றப்பட்ட சாட்சியப் பொருட்களின் மீது கூராய்வு நடத்துமாறு கோரி, தமிழ்நாடு தடய அறிவியல் கூடம் / மண்டல தடய அறிவியல் கூடம் ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விண்ணப்பம் நீதிமன்றத்திலிருந்து அனுப்ப வேண்டும் – கைப்பற்றப்பட்ட பொருட்களை கூராய்வு செய்வதற்காக சம்பந்தப்பட்ட தடய அறிவியல் கூடத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு புலனாய்வு அதிகாரி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும்

28. வழக்கு நாட்குறிப்பு எழுதவேண்டும் (இரு நகல்கள்): ஒரு நகல் நிலைய வழக்கு நாட்குறிப்புக் கோப்பில் வைக்கவும், மற்றொரு நகலை ஆய்வாளர் மூலமாக, உட்கோட்ட காவல் அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். பாரிக் குற்றங்களாக இருப்பின், ஆய்வாளர் மற்றும் ஒரு நகல் தயார் செய்து, தனது சொந்த கட்டுப்பாட்டில் இருக்கும் வழக்கு நாட்குறிப்புக் கோப்பில் அந்நகலை இணைத்து வைக்க வேண்டும்

தனித்தன்மை குற்ற வகைகள்

29. இயற்கைக்கு மாறான வகையில் நிகழ்ந்த மரணங்கள்

i. பிரேதம் புதைக்கப்பட்டு விட்டால், வட்டாட்சியர் முன்னிலையில் புதைகுழியிலிருந்து பிரேதத்தைத் தோண்டி வெளியில் எடுக்க வேண்டும்

ii. பிரேத விசாரணை செய்ய வேண்டும்

iii. தேவைப்படுமானால், பிரேதத்தை பரிசோதனை செய்ய, காவலர் ஒருவருடன் அனுப்பி வைக்க வேண்டும்

iv. வழக்கின் சுருக்க வரலாற்றை எடுத்துக்கூறி, பிரேத பரிசோதனை செய்யுமாறு கோரி விண்ணப்பம் அனுப்புவதோடு, பரிசோதனையின்போது எடுத்து பாதுகாக்க வேண்டிய குடலின் உள்ளுறுப்புகள் என்னென்ன என்பதையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்

v. தேவைப்படும் குறிப்பிட்ட வழக்குகளில், பிரதேப் பரிசோதனை பல மருத்துவர்கள் கொண்ட குழுவினரால் நடத்தப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், பிரேதப் பரிசோதனையை ஒளிப்பதிவு செய்யுமாறும் உரிய வேண்டுகோள் விடுக்க வேண்டும்

vi. பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன், பிரேதத்தை சம்பந்தப்பட்ட உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்

30. அடையாளம் தெரியாத பிரேதமாக இருப்பின்:

i. பிரேதத்தைப் புகைப்படம் எடுத்து, விரல் ரேகைகளைப் பதிவு செய்து அதனை செய்தி ஊடகங்கள் மூலமாக விளம்பரப்படுத்தி – பிரேதம் யாருடையது என்பதைக் கண்டறிய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

ii. உடல் பொருத்த ஒப்பிடுதல் பரிசோதனை மேற்கொள்வதற்காக, தோண்டி எடுக்கப்பட்ட பிரேதத்தின் மண்டை ஓட்டினை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்

iii. பிரதேத்திலிருந்து எடுக்கப்பட்ட மரபணுக்களின் மாதிரிகளை சேகரித்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

iv. பிரேதத்திற்கு சம்பந்தப்பட்ட உறவினர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் யாரும் இல்லாதபட்சத்தில், பிரேதத்தை புதைத்து விட வேண்டும்

31. விபத்து சம்பந்தமான வழக்குகளாக இருப்பின்: வட்டாராப் போக்குவரத்து ஆய்வாளரைக் கொண்டு விபத்திற்குள்ளான வாகனத்தை சோதனையிட வேண்டும்

32. சொத்து சம்பந்தமான வழக்குகளாக இருப்பின்:

i. பகுதி–I –ல் பதிவு செய்ய வேண்டும்

ii. பகுதி–II–ல் குறித்துக் கொள்ள வேண்டும்

iii. (Modus Operandi [MO] - செயல் முறை) தனித் தாள் அட்டவணையில் பதிவு செய்ய வேண்டும்

கைது

33. குற்றவாளியைக் கைது செய்தல்

34. சூரியன் மறைந்த பின்னரும் உதிப்பதற்கு முன்னரும் உள்ள இடைப்பட்ட காலநேரத்தில் பெண்களைக் கைது செய்யக்கூடாது. ஆனால், அவசியம் ஏற்படின், குறிப்பிட்ட சிலவகைக் குற்றங்களில்: நீதிமன்ற ஆணையைப் பெற்று, பெண் காவலர் உதவியுடன் பெண்களை மேற்குறிப்பிட்ட காலநேரத்தில் கைது செய்யலாம்

35. குற்றவாளியைக் கைது செய்யும்போது:

i. கைது செய்யச் செல்லும் காவலர், தனது பெயர் மற்றும் வகிக்கும் பதவி பொறிக்கப்பட்ட அடையாளச் சின்னத்தை அணிந்து செல்ல வேண்டும்

ii. எந்த காரணத்திற்காக, அந்த குற்றவாளி கைது செய்யப்படுகிறார் என்பதைத் அவருக்குத் தெரிவிக்க வேண்டும்

iii. கைதியை சோதனையிட வேண்டும். குற்றவாளி பெண்ணாக இருப்பின், அவரை பெண் காவலரைக் கொண்டோ அல்லது வேறு ஒரு பெண்ணின் உதவியுடனோ தான் சோதனை செய்ய வேண்டும்

iv. கைது குறிப்பாணை:

a. கைது செய்யப்பட்ட நாள், நேரம் ஆகியவற்றைக் குறிக்க வேண்டும்

b. சாட்சி ஒருவரால் (உண்மையென) கையொப்பம் இடப்பட வேண்டும்

c. (1) குற்றவாளியின் குடும்ப உறுப்பினர் ஒருவர் – அல்லது

d. (2) தனிநபர் உள்ளூர் சாட்சியின் கையொப்பம் பெறப்பட வேண்டும்

v. குற்றவாளியை விசாரணை செய்ய வேண்டும்

vi. கைதிகள் பரிசோதனை பதிவேட்டில் பதிவு செய்து, குற்றவாளியை கைதி அறையில் (சிறைக்குள்) அடைக்க வேண்டும்

vii. குற்றவாளியைக் கைது செய்யும்போது, அதற்கான கைது நமூனாவில் சாட்சியம் அளிக்கக்கூடிய ஆண் / பெண்; குற்றவாளியின் உறவினராகவோ அல்லது நண்பராக இல்லாதபட்சத்தில்

a. கைது செய்யப்பட்ட விவரத்தை, குடும்ப நண்பர் அல்லது உறவினருக்குத் தெரியப்படுத்த உரிமையுள்ளது என்பதை, குற்றவாளிக்குத் தெரிவிக்கவும்

b. குற்றவாளியின் உறவினர் அல்லது நண்பருக்குத் தகவல் அனுப்பவும்

c. குற்றவாளியின் உறவினர் வேறொரு மாவட்டம் அல்லது நகரத்தில் இருந்தால்: உள்ளூர் சட்ட உதவி மையம் அல்லது காவல் நிலையம் மூலம், குற்றவாளி கைது செய்யப்பட்ட விவரத்தை 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரத்திற்குள்ளாக தந்தி மூலம் தெரியப்படுத்த வேண்டும்

viii. கைது அட்டை தயார் செய்ய வேண்டும்

ix. கைது விவரம் தெரியப்படுத்தப்பட்ட உறவினர் அல்லது நண்பரின் பெயர் உட்பட அனைத்து விவரங்களையும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்

x. தேவைப்படும் வழக்குகளில், குற்றவாளியின் புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

xi. குற்றவாளியை மருத்துவ அலுவரைளக் கொண்டு மருத்துவ சோதனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்

xii. கற்பழிப்பு வழக்கு சம்பந்தமான குற்றவாளியாக இருப்பின், அவரது ஆண்மைத்தன்மையை சோதிக்கும் வகையிலான மருத்துவ சோதனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

xiii. கைதி விசாரணைக்காகவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ வெளியில் கொண்டுவரப்பட்டால், விசாரணை செய்யவிருக்கும் அதிகாரியின் பெயர் விவரத்துடன் பாரா மாற்று புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்

xiv. விசாரணையின்போது குற்றவாளி தனது வழக்கறிஞரைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும் (விசாரணையின் முழுமையிலும் இல்லாவிடினும்)

xv. சொத்து சம்பந்தமான வழக்குகள் மற்றும் காவல் நிலை ஆணையில் குறிப்பிட்டுள்ள இதர சில வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளியின் விரல் ரேகைகளைப் பதிவு செய்ய வேண்டும். அதன் 5 பிரதிகளை எடுத்து, அவற்றில் 2 பிரதிகளை ஒரு விரல் ரேகைக் கூடத்திற்கு சோதனைக்காக அனுப்ப வேண்டும், இதர 3 நகல்களை, குற்றவாளிக்குத் தண்டனை வழங்கக்கூடிய சமயத்தில் பயன்படுத்திக் கொள்ளும்பொருட்டு பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்

xvi. ஆவண பரிசோதகரின் அறிக்கை பெறவேண்டிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளியின் மாதிரி கையொப்பம் மற்றும் கையெழுத்து ஆகியவற்றின் மாதிரிகளை பெற வேண்டும்

xvii. ஜாமீனில் விடத்தக்க வழக்குளில், நிலைய பொறுப்பு அதிகாரியே குற்றவாளியை ஜாமீனில் விடுவிக்கலாம். அவ்வாறு ஜாமீனில் விடுவிக்கும்போது –

a. இரண்டு நபர்களிடம் உத்திரவாதம் பெற வேண்டும்

b. ஜாமீன் பத்திரம் தயார் செய்து அதில் குற்றவாளி மற்றும் இரு உத்திரவாதிகளின் கையொப்பங்களைப் பெற வேண்டும்

c. ஜாமீனில் விடுவிக்க வேண்டும்

d. பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்

e. கைதி பரிசோதனை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

f. பாரா மாற்று புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்

xviii. குற்றவாளி ஜாமீனில் விடுவிக்கப்படாதபோது

a. குற்றவாளியை அடைப்புக் காவலில் வைப்பதற்கான அறிக்கையை தயார் செய்ய வேண்டும்

b. குற்றவாளியை, 24 மணி நேரத்திற்குள்ளாக அடைப்புக் காவலில் வைக்க அடைப்புக் காவல் அறிக்கையுடன் அனுப்பி வைக்க வேண்டும்

c. பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்

d. கைதி பரிசோதனை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

e. பாரா மாற்று புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்

f. அடைப்புக் காவலில் இருக்க வேண்டிய நாள் எப்போது முடிவடைகிறது என்பதைத் தெரிந்து கொண்டு, அடைப்புக் காவலை நீட்டிக்க செய்ய தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்

xix. குற்றவாளி, சொத்து சம்பந்தமான வழக்கில் தொடர்புடையவராக இருப்பின் – கீழ்க்குறிப்பிட்ட பதிவுகளை செய்ய வேண்டும்

a. செயல் முறை தனித் தாள் அட்டவணையில் (Modus Operandi - MO) பதிவு செய்ய வேண்டும்

b. அகரவரிசை அட்டவணையில் பதிவு செய்ய வேண்டும்

c. பகுதி – I –பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

xx. காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் வைத்து குற்றவாளியை விசாரிக்க வேண்டியிருந்தால், குற்றவாளி கைது செய்யப்பட்ட அல்லது சரண் அடைந்த 15 நாட்களுக்குள்ளாக அதற்கான நீதிமன்ற ஆணையைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்

xxi. காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் குற்றவாளி இருக்கும்போது, 48 மணி நேரத்திற்கு ஒருமுறை அவரை மருத்துவ சோதனைக்கு உட்படுத்த வேண்டும்

36. குற்றவாளி, வேறு ஒரு வழக்கில் சரணடைந்தாலோ அல்லது கைது செய்யப்பட்டாலோ

i. அந்த குற்றவாளியை, அக்குறிப்பிட்ட வழக்கு சம்பந்தமாக முறைப்படி கைது செய்ய வேண்டும்

ii. அக்குற்றவாளியை கைது செய்வதற்கான, கைதி ஆஜர் கட்டளையைப் பெற வேண்டும்

iii. அக்குறிப்பிட்ட வழக்கில் அவரை அடைப்புக் காவலில் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

37. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைக் குற்றவாளிகளுக்கான சிறப்பு விதிமுறைகள்

i. அவ்வாறான குழந்தைக் குற்றவாளிகளை சிறைச்சாலைக்கு அனுப்பக்கூடாது, மாறாக இளஞ்சிறார் நீதிக் குழு முன்பு ஆஜர்படுத்த அவர்களை அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது, சாதாரண உடையில் உள்ள காவலர்களுடன் பாதுகாப்பாக அனுப்ப வேண்டும்

ii. குழந்தைக் குற்றவாளிகளின் பெயர் மற்றும் இதர விவரங்களை விளம்பரப் படுத்தக்கூடாது

மேற்கொண்டு நடத்தப்பட வேண்டிய புலன்விசாரணைகள்

38. கீழ்க்குறிப்பிட்ட புலன்விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்

i. சாட்சிகளை விசாரிக்க வேண்டும்

ii. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 165–வது பிரிவின்படி தேடுதல் மற்றும் கைப்பற்றுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

iii. சாட்சியப் பொருட்களைச் சேகரிக்க வேண்டும்

iv. ஆவண சாட்சியங்களைச் சேகரிக்க வேண்டும்

v. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 164–வது பிரிவின்படி, குற்றவாளியின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய வேண்டும்

vi. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 164–வது பிரிவின்படி, முக்கிய சாட்சிகளின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய வேண்டும்

vii. அடையாள அணிவகுப்பு நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

viii. குற்றவாளியாக இருப்பவர், நீதிமன்ற நிபந்தனையின் பேரில், வழங்கப்படும் மன்னிப்பை (Tender of Pardon) ஏற்று சாட்சியாக மாறிட தயாராக இருக்கும்போது, அதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்

39. சேகரிக்க வேண்டிய அறிக்கைகள்

i. விரல் ரேகை சோதனை அறிக்கைகள் மற்றும் பழைய குற்றவாளியாயின் அதுகுறித்த விவரங்கள்

ii. தமிழ் நாடு தடய அறிவியல் கூடம் அல்லது வேறு நிபுணர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய அறிக்கைகள்

iii. காயச் சான்றுகள்

iv. பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ்கள்

v. அடையாள அணிவகுப்பு நடவடிக்கை குறித்த அறிக்கையின் நகல்

vi. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 164–வது பிரிவின்படி நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் நகல்கள் – ஆகியவற்றைச் சேகரிக்க வேண்டும்

40. அடைப்புக் காவலை நீட்டிப்பதற்கான அறிக்கை அனுப்ப வேண்டும்

41. குற்றவாளியை ஜாமீனில் விடுவிக்காமல் இருக்க, தேவைப்படும் சந்தர்ப்பங்களில், அரசுதரப்பு ஆட்சேபணைகளை எழுத்துப்பூர்வமாக அரசுதரப்பு குற்றம் சாட்டுனரிடம் (Public Prosecutor) அளித்து, அதற்குரிய ஆணையைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்

42. ஒவ்வொரு நாளும் நடைபெற்ற புலன்விசாரணை அறிக்கைகளை வழக்கு நாட்குறிப்பில் தொகுத்து எழுதி அதனை சமர்பிக்க வேண்டும்

43. தலைமைக் காவலர்களால் புலன்விசாரணை செய்யப்பட்ட வழக்குகளில், புலன்விசாரணை விவரங்களைச் சரிபார்த்த பின்னரே அவற்றை வழக்கு நாட்குறிப்பில் எழுத வேண்டும்

காவல் துறையினர் பைசல் செய்யக்கூடிய வழக்கு

44. குற்றவாளி பெற்றிருக்கக்கூடிய முந்தைய தண்டனை விவரங்களைச் சரிபார்த்து, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 75–ன்படி, அவருக்குக் கூடுதல் தண்டனை பெற ஏற்பாடு செய்ய வேண்டும்

45. வரைவு குற்றப் பத்திரிகையைத் தயார் செய்து, அதனை அரசுதரப்பு குற்றஞ்சாட்டும் உதவி இயக்குநரிடம் அளித்து சரிபார்த்தல் வேண்டும்

46. சாட்சிகளின் பட்டியலுடன் குற்றப் பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்

47. வரையறுக்கப்பட்ட 60 அல்லது 90 நாட்களுக்குள்ளாகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யத் தவறிய காரணத்திற்காக, ஒரு குற்றவாளி ஜாமீனில் விடுவிக்கப்பட்டால், அந்த ஜாமீன் ஆணையை ரத்து செய்ய உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்

48. கண்டுபிடிக்கப்படவில்லை (undetected), சங்கதியைப் பொறுத்தமட்டில் பிழை (mistake of fact), சட்டத்தைப் பொறுத்தமட்டில் பிழை (mistake of law), மேல்நடவடிக்கை கைவிடப்பட்டது (action dropped) அல்லது குற்றச்சாட்டு தள்ளுபடி (charge abates) போன்ற காரணங்களால் தள்ளுபடி செய்யப்பட்டால் –

i. அவ்வாறு நடவடிக்கைக் கைவிடப்பட்ட குற்றஅறிக்கையின் நகலை, அழைப்பு ஆணை விதிமுறையைப் பின்பற்றி, சம்பந்தப்பட்ட புகார்தாரருக்கு சார்வு செய்ய வேண்டும்

ii. நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்

iii. நீதிமன்றத்திலிருந்து தீர்ப்புரைக் குறிப்பைப் பெற வேண்டும்

iv. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 174–வது பிரிவின் கீழ் வரக்கூடிய வழக்குகளில், மேல்நடவடிக்கை கைவிடப்படுவதற்கான வட்டாட்சியரின் நடைமுறை குறிப்பாணையை பெற வேண்டும்

v. வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக புகார்தாரரிடமிருந்து மேல்முறையீடு மனு வரப்பெற்றால், அதுசம்பந்தமான பதில்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்

49. ஒரு வழக்கு மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்த பின்பு, அவ்வழக்கை மீண்டும் விசாரிக்கவோ அல்லது தொடர் புலன்விசாரணை மேற்கொள்வதற்கோ அவசியம் ஏற்பட்டால் – குற்றவியல் நடைமுறைச் சட்டம் 173(8) பிரிவின்படி நீதிமன்றத்தின் முன்அனுமதி பெற வேண்டும். தேவைப்படும் சந்தர்ப்பங்களில், துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம்

50. வழக்கின் முடிவை (இறுதி அறிக்கையின் விவரம் அல்லது தள்ளுபடி விவரம்) போன்றவற்றை முதல் தகவல் அறிக்கை அட்டவணையில் குறித்துக் கொள்ள வேண்டும்

51. சொத்து சம்பந்தமான வழக்குகளில், நீதிமன்ற உத்தரவினைப் பெற்று, அதன்படி பாதிப்புக்குள்ளான நபரிடமிடமிருந்து உறுதிமொழிப் பத்திரம் பெற்றுக் கொண்டு அச்சொத்தினை அவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்

52. பாதிக்கப்பட்டோர் இழப்பீட்டு நிதியிலிருந்து, இழப்பீட்டைப் பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

53. விபத்து சம்பந்தமான வழக்குளில் –

i. கருணைத்தொகை பெறுவதற்கான விண்ணப்பத்தை, உட்கோட்ட காவல் அதிகாரி மூலமாக, வருவாய்க் கோட்ட அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும்

ii. விபத்தில் மரணம் அல்லது கடுமையான காயங்கள் ஏற்பட்டிருந்தால், உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து, அதனை வாகன விபத்து இழப்பீட்டு ஆணையத்தில் முறையீடு செய்யும் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட நபர், தமக்குரிய இழப்பீட்டுத் தொகையைப் பெற, நீதிமன்றத்தை நாட இயலாத நிலையில் இருப்பாரேயானால், அதுகுறித்த அறிக்கையைத் தயார் செய்து, அதனை இலவச சட்ட உதவி மையத்திற்கு அனுப்புதல் வேண்டும்

iii. பிரேதப் பரிசோதனை சான்றிதழ் நகல்களை, இலவசமாக வழங்க வேண்டும்

நீதிமன்ற விசாரணை

54. வழக்கின் சுருக்கு விசாரணை எண் (Summary Trial Case Number), நாட்குறிப்பு வழக்கு எண் (Calendar Case Number) அல்லது ஆரம்பகட்ட பதிவு வழக்கு எண் (Preliminary Registration Case No.) பெற வேண்டும். பின்னர், அமர்வு நீதிமன்ற வழக்கு எண் (Sessions Court No.) பெற வேண்டும்

55. வழக்கு ஆவணங்களின் நகல் நீதிமன்றத்தால் எதிரிக்கு வழங்குதல்

56. நீதிமன்றத்தால் குற்றச்சாட்டு சுமத்தப்படுதல்

57. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313–வது பிரிவின்படி குற்றவாளியிடம் கேள்விகள் கேட்கப்படும்

58. நிலையத்தில் உள்ள நீதிமன்ற நாட்குறிப்பு அட்டையில் அடுத்தகட்ட விசாரணை தேதிகளைக் குறித்துக் கொள்ள வேண்டும்

59. விசாரணைகளுக்குத் தவறாமல் ஆஜர் ஆக வேண்டும்

60. ஒவ்வொரு வழக்கு விசாரணை தேதிக்கும் (வாய்தாவிற்கும்) வழக்கு நாட்குறிப்பு எழுத வேண்டும். (பிடிக்கட்டளை நிறைவேற்றுதல் போன்ற விவரங்களை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்)

61. சாட்சிகளுக்கு அழைப்பாணைகளை சார்வு செய்து, அவர்களை நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராகுமாறு உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்

62. பிடி ஆணை வரப்பெற்றிருந்தால் அவற்றை நிறைவேற்ற வேண்டும்

63. சாட்சி யாரேனும் அழைப்பாணையை ஏற்று ஒத்துழைக்காத சமயத்தில், அவருக்குப் பிடி ஆணை பிறப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

64. குற்றவாளி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனில்:

    i. பிடி ஆணையைப் பெற்று, குற்றவாளியைக் கைது செய்து நிறைவேற்ற வேண்டும்

    ii. குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால்

        a. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 82–வது பிரிவின்படி அறிவிக்கப்பட்ட குற்றவாளி என நீதிமன்றம் அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்

        b. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 83–வது பிரிவின்படி சொத்து பறிமுதல்/ இணைத்தலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

65. சாட்சிகளிடம் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் மறு–விசாரணைகளை மேற்கொள்ளுதல்

66. நீதிமன்றத்தில் புலன்விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்தல்

67. தேவையிருப்பின் எதிர்தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டும். சாட்சிகளின் தொடர்புடையதான மற்றும் அவரது பின்னணி, குணநலன்கள் பற்றிய தகவல்கள் ஏதுமிருப்பின் அதுகுறித்த விவரங்களை, குறுக்கு விசாரணையைத் திறம்பட மேற்கொள்ளும்பொருட்டு, அரசுதரப்பு குற்றம் சாட்டுனரிடம் சுருக்கமாக எடுத்துக் கூறவேண்டும்

68. அரசுதரப்பு மற்றும் எதிர்தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள்

69. நீதிமன்றத்தில் குற்றவாளியிடம் கேள்விகள் எழுப்புதல்

70. நீதிமன்றத் தீர்ப்பு

71. வழங்கப்பட்ட தண்டனை அளவுமீது குற்றவாளியின் மேல்முறையீடு: பதில் மனு தாக்கல் செய்தல்

72. தீர்ப்பு அளித்தல்

73. முதல் தகவல் அறிக்கை அட்டவணையில் வழக்கின் தீர்ப்பு விவரத்தை எழுத வேண்டும்

74. நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர் சொத்துக்களை உரியவரிடம் ஒப்படைக்கும்போது:

i. பகுதி–I பதிவேட்டில் பைசல் பற்றி குறிப்பு எழுதவும்

ii. தனித்தாள் அட்டவணையில் எழுதவும்

iii. அகரவரிசை அட்டவணையில் எழுதவும்

iv. பொது தண்டனைப் பதிவேட்டில் (பகுதி – III) பதிவு செய்யவும்

v. முன் தண்டனைக் குற்றவாளி தணிக்கைப் பதிவேட்டில் பதிவு செய்யவும்

vi. சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு வரலாற்று அட்டை இருக்குமானால், அதிலும் பதிவு செய்யவும்

vii. படிவம் 129 மற்றும் தண்டனைக் குறிப்பாணை ஆகியவற்றை, குற்றவாளியின் விரல்ரேகைப் பதிவுச் சான்றின் மூன்று நகல்களையும் இணைத்து, தனி விரல் ரேகைப் பதிவு கூடத்தின் மூலமாக, விரல்ரேகைப் பதிவுக் கூடத்திற்கு அனுப்ப வேண்டும்

viii. இவ்வழக்கு சம்பந்தமாக விரல் ரேகைப் பதிவுக் கூடத்தால் அளிக்கப்பட்ட எண் மற்றும் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதி – ஆகியவற்றை, பகுதி – III பதிவேட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்

ix. தகுந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகளுக்கு வரலாற்று அட்டை துவங்க உரிய அதிகாரிக்கு விண்ணப்பித்து ஆணை பெற வேண்டும்

x. திருட்டுச் சொத்துக்களை தெரிந்தே வாங்கி விற்கும் செயலில் ஈடுபடுவோர் மீது, இந்திய தண்டனைச் சட்டம் 411–வது பிரிவின்படி, நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை சம்பந்தப்பட்ட பகுதி–I பதிவேட்டில் குறிப்பு எழுத வேண்டும்

xi. குற்றவாளி வேறு ஒரு காவல் நிலைய எல்லைக்குட்பட்டவராக இருந்தால்: சம்பந்தப்பட்ட காவல் நிலையப் பதிவேட்டில் குற்றவாளியைப் பற்றிய விவரங்களைக் குறித்துக் கொள்வதற்கென தகவல்களை அனுப்ப வேண்டும். பொது தண்டனைப் பதிவேட்டின் வரிசை எண் மற்றும் குறுக்கு சரிபார்த்தல் எண் ஆகியவற்றைப் பெற்று, அதனை நிலைய பொது தண்டனைப் பதிவேட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்

75. தமிழ்நாடு நகரக் காவல் சட்டம் 75–வது பிரிவு மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 110–வது பிரிவின்படி தண்டனை வழங்கப்பட்டிருந்தால், அந்த விவரங்களை ரவுடி பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

i. வரிசைக் கிரமமாக (Chronological entries) பதிவு செய்ய வேண்டும்

ii. அகரவரிசை அட்டவணையில் (Alphabetical entries) பதிவு செய்ய வேண்டும்

iii. கிராமவரிசை அட்டவணையில் பதிவு செய்ய வேண்டும்

76. நீதிமன்றத்திலிருந்து தீர்ப்புரைக் குறிப்பைப் பெற வேண்டும்

77. இறுதி வழக்கு நாட்குறிப்புடன், நீதிமன்றத் தீர்ப்புரைக் குறிப்பையும் இணைத்து, நிலைய ஆய்வாளர் மூலமாக உட்கோட்ட காவல் அதிகாரிக்கு தகவல் அனுப்ப வேண்டும்

78. ஒருசில குற்றவாளிகள் தலைமறைவாக இருந்தால், வழக்கைப் பிரித்து, தனியாக வழக்கின் நாட்குறிப்பு எண் அல்லது அமர்வு நீதிமன்ற வழக்கு எண் ஆகியவற்றை தலைமறைவு குற்றவாளிக்கு வழங்கச் செய்து, ஆஜரில் இருக்கும் இதர குற்றவாளிகள் மீதான நீதிமன்ற விசாரணையைத் தொடர ஏற்பாடு செய்ய வேண்டும்

79. தீர்ப்பு நகலைப் பெற்று, தேவைப்படும் வழக்குகளில் மேல்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

80. குறிப்பிட்ட ஒரு வழக்கு நீண்டகால நிலுவையில் இருந்தாலோ அல்லது குற்றவாளி கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருந்தாலோ –

i. நீண்டகால நிலுவை வழக்கென பாவித்து அதற்கான சான்றிதழைப் பெற வேண்டும்

ii. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆணையைப் பெற்று – நீண்டகால நிலுவை வழக்குகளைத் திரும்பப் பெறும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். (வழக்குகளின் தன்மையைப் பொறுத்து, காவல்துறை கண்காணிப்பாளர் / மாவட்ட ஆட்சியர் / அரசாங்கம் ஆகியோரிடம் உரிய ஆணை பெறவேண்டும்).

– – –

IV. நீதிமன்றம் சம்மந்தப்பட்ட அலுவல்கள்

1. நீதிமன்றம் ஆஜராதல்

நீதிமன்ற நடைமுறையில் பலவகையான நீதிமன்றங்கள் உள்ளன.

HIERARCHY OF COURTS (Order of courts)

உச்ச நீதிமன்றம் (Supreme Court)	:	புதுதில்லியில் உள்ளது
உயர் நீதிமன்றம் (High Court)	:	ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ளது
மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் (Principal District & Sessions Court)	:	மாவட்ட அளவில் உள்ளது
கூடுதல் அமர்வு / விரைவு நீதிமன்றம் (Additional District & Sessions Court / Fast Track Court)	:	மாவட்ட, வட்ட அளவில் உள்ளது
முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம் (Principal Assistant Sessions Court)	:	மாவட்ட, வட்ட தலைமையிடத்தில் உள்ளது.
உதவி அமர்வு நீதிமன்றம் (Assistant Sessions Court)	:	மாவட்ட, வட்ட தலைமையிடத்தில் உள்ளது.
முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மற்றும் உரிமையியல் நீதிபதி (Judicial 1st Class Magistrate cum Civil Judge – District Munsif Courts) – சில காவல் நிலையங்களில் ஏற்படும் வழக்குகளை விசாரிக்க பகுதி வாரியாக ஒதுக்கப்பட்டுள்ளது.	:	மாவட்ட, வட்ட தலைமையிடத்தில் உள்ளது.

SI_GUIDE.indb 183 1/6/2009 8:51:37 AM

சிறுவர் சீர்திருத்த நீதிமன்றம் (Juvenile Justice Board)	:	சரக அளவில் (ஒவ்வொரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் சில காவல் நிலையங்களில் பதியப்படும் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

i. காவல்துறை அலுவலர்கள் வழக்குகளில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த பின்பு அவைகள் நீதிமன்றத்தில் சரிபார்க்கப்பட்டு வழக்குகளில் தன்மை பொறுத்து தரம் (Calender Case, Summary Trial Case, Priliminary Registered Case) வாரியாக நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்படும். மிக முக்கியமான வழக்குகள் முறையே கொலை, ஆதாயக் கொலை, கொலை முயற்சி, கற்பழிப்பு, வீடுகளுக்கு தீ வைத்தல், வன்கொடுமை சட்டங்கள் போன்ற கொடுங்குற்றங்களுக்கான குற்றப்பத்திரிக்கைகள் (Preliminary Registered Case) எண் கொடுக்கப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டதும் ஆரம்ப கட்ட பணிகளை முடித்து விசாரணைக்காக மாவட்ட அளவிலான முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அவைகள் தன்மை மற்றும் தர வாரியாகப் பிரிக்கப்பட்டு அவைகள் கூடுதல் அமர்வு நீதிமன்றம், துணை அமர்வு நீதிமன்றம் மற்றும் விரைவு நீதிமன்றங்களுக்கோ விசாரணைக்காக அனுப்பப்படும். அந்தந்த சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களில் அமர்வு நீதிமன்ற எண் (Sessions Case Number (SC No) எண் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ii. அரசு உத்திரவுப்படி முதல் வகுப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டிய தண்டனைக்குரிய குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு சம்மந்தப்பட்ட அரசு வழக்குரைஞரிடம் (APP) ஒப்புதல் பெற்ற பின்னர்தான் (Approval) நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். மாவட்ட நீதிமன்றம் மற்றும் முக்கியமான வழக்குகளில் (Sensational Cases) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு சம்மந்தப்பட்ட மாவட்ட அதிகாரியான குற்ற வழக்குத் தொடர்புத்துறை இயக்குநர் (Assistant Director of Prosecution) அவர்களிடம் வரைவுக் குற்றப்பத்திரிக்கை (Draft Charge Sheet) வாங்க வேண்டும். அதே போன்று ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன்விசாரணைக்குப் பிறகு புலன்விசாரணை அலுவலரால் தள்ளுபடி செய்யப்படும் போது (Referred) சம்மந்தப்பட்ட Assistant Director of Prosecution / Assistant Public Prosecutor அவர்களிடம் ஒப்புதல் (Approval) வாங்குவது நல்லது.

iii. நீதிமன்றத்தில் வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட உடன் எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய காவல் துறைக்கு அழைப்பாணை வழங்கப்படும் (Summon – 61 Cr.PC) அதனைப் பெற்றதும் காவல் துறையினர் சம்மந்தப்பட்ட எதிரிகளுக்கு (Accused Summon) சார்வு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எதிரிகள் நீதிமன்றக் காவலில் இருக்கும் போது அவர்கள் சம்மந்தப்பட்ட சிறைகளில் இருந்து நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை தேதிகளில் ஆஜர்படுத்தப்படுவார்கள். எதிரிகளுக்கு வழக்கு சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் நகலாக நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்படும் (207 கு.வி.மு.ச). எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவர்களை நீதிபதிகள் கேள்வி கேட்டு (313 கு.வி.மு.ச) அவர்கள் குற்றத்தை மறுப்பார்களேயானால் அந்த வழக்குகளில் சாட்சிகளை விசாரிப்பதற்காக சாட்சிகளுக்கு உரிய அழைப்பாணைகள் வழங்கப்படும்.

iv. அந்த அழைப்பாணைகளின் பேரில் காவல் துறையினர் சாட்சிகளுக்கு கு.வி.மு.ச **62** முதல் **66** வரை குறிப்பிட்டுள்ளவாறு சம்மன் சார்வு செய்து வழக்கு சம்மந்தமான விபரங்களை சாட்சிகளுக்கு விபரமாக எடுத்துரைத்து (Regarding Chief and Cross Examination) (முக்கியமாக குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகளும் அதற்குரிய பதில்கள் குறித்தும் அனுமானம் செய்து தெளிவாக விபரமாக சொல்லிக் கொடுக்க வேண்டும்) அவர்களை அரசு வழக்குரைஞர் (Public Prosecutor / Additional Public Prosecutor / Assistant Public Prosecutor – Grade I & II) ஆகியோர் முன்பு ஆஜர் செய்து நீதிமன்றங்களில் ஆஜர் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காவல்துறை அலுவலர்கள் நீதிமன்றங்களில் உள்ள அரசு வழக்குரைஞர்களுடன் நல்ல விதமான நட்புரிமையுடன் பழகி அலுவல் ரீதியாக நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

v. நீதிமன்ற விசாரணை நாட்களில் கட்டாயமாகக் காவல் துறை அலுவலர்கள் ஆஜராகி வழக்கினை நடத்தும் அரசு வழக்குரைஞருக்கு உதவியாக இருக்க வேண்டும். அரசு வழக்குரைஞர் (Assistant Public Prosecutor – Grade I & II) இல்லாத சமயத்தில் காவல் துறை ஆய்வாளர் மற்றும் அதற்கு மேலான அதிகாரிகள் நீதிமன்ற ஒப்புதலோடு மேற்படி விசாரணையை நடத்தலாம். விசாரணையின் போது எதிரிகள் ஆஜராகவில்லையெனில் அவர்களுக்கு அவர்களால் நியமிக்கப்படும் வழக்கறிஞர்கள் 317 – கு.வி.மு.ச படி மனு தாக்கல் செய்கிறார்களா என்பதை கவனிக்க வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யாமல் இருந்தால் நீதிமன்றத்தில் பிடிகட்டளைகள் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

vi. நீதிமன்றங்களில் இருந்து பெறப்படும் எதிரிகள் மீதான பிடிகட்டளையை காவல் அலுவலர்கள் பெற்று கால தாமதமின்றி நீதிமன்றத்தால் பிடிகட்டளைகள் குறிக்கப்பட்டுள்ள விசாரணை தேதிகளுக்குள் கு.வி.மு.ச 70 முதல் 81 வரை குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நிறைவேற்றி எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vii. விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் காவல் துறையால் வழங்கப்பட்ட குற்றப் பத்திரிக்கையில் மாற்றம் ஏதேனும் இருப்பதாக நீதிமன்றம் கருதினால் கு.வி.மு.ச 216 ன் படி திருத்தப்பட்ட குற்றப்பத்திரிக்கையினை (Amended Charge Sheet) வழங்கி அதன் விபரத்தை எதிரிகளுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

viii. அரசு தரப்பில் சேர்க்கப்பட்ட சாட்சிகளின் விசாரணை முடிந்ததும் எதிரிகளை அவர்களுக்கென சாட்சிகள் இருப்பின் (Defence witnesses)C.V.P.C 247 ன் படி எதிரி தரப்பு சாட்சிகளை ஆஜர் செய்ய வாய்ப்பு வழங்கப்படும். எதிரி தரப்பு சாட்சிகளின் முந்தைய நடப்பு விபரங்களை (Antecedents) முன் கூட்டியே தெரிந்து, அவர்களைப் பற்றி விசாரித்து APP அவர்களுக்கு விபரம் தெரிவிக்க வேண்டும். எதிரி தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படும் நாட்களிலும் கண்டிப்பாக காவல் அலுவலர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆக வேண்டும்.

ix. அரசு தரப்பு மற்றும் எதிர் தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றதும் சில சமயங்களில் மீண்டும் முதன்மை மற்றும் குறுக்கு விசாரணைகள் கோரும் போதும் சாட்சிகளை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். (Re-Examination in Chief & Cross)

x. வழக்கில் முழு விசாரணை முடிவுற்றதும் அரசு வழக்குரைஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆகியோரின் வாத பிரதிவாதங்கள் நடைபெறும் நாட்களிலும் காவல் அலுவலர் நீதிமன்றத்தில் ஆஜராகி புலன் விசாரணையின் குறைகளை கூர்ந்து கேட்டறிந்து தெரிந்து கொண்டு வருங்காலங்களில் அவ்வித குறைகள் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

xi. இறுதியாக நீதிபதி அவர்கள் கு.வி.மு.ச படி தீர்ப்பு வழங்குவார். தீர்ப்பு வழங்கும் நாட்களிலும் கண்டிப்பாக காவல் அலுவலர்கள் உரிய வழிக்காவல் அலுவலர்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். காரணம் எதிரிகள் தண்டிக்கப்படும் போது அந்த வழிக்காவல் மூலம் மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்ல ஏதுவாக இருக்கும்.

xii. நீதிபதி அவர்களின் தீர்ப்பு நடவடிக்கை தாள் (Court slip Proceedings) பெறப்படுதல் வேண்டும்.

xiii. நீதிமன்றத்தில் காவல் அலுவலர் ஆஜர் ஆகும் ஒவ்வொரு நாட்களிலும் அன்றைய நீதிமன்ற நடவடிக்கை குறித்து வழக்கு நாட்குறிப்புகளில் விபரமாக எழுதி அசலை வழக்கு கோப்புகளிலும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் மூலம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். நீதிமன்ற தீர்ப்பு பெறப்பட்டதும் அதே போன்று விபரமாக எழுதி அசலை வழக்கு கோப்பிலும் ஒரு நகலை நீதிமன்ற முடிவுத் தாளுடன் இணைத்து காவல் ஆய்வாளர் மூலம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

xiv. நீதிமன்ற தீர்ப்பு நகல்களை (Judgement copies) கட்டாயம் பெற்று வழக்கு கோப்புகளில் வைக்க வேண்டும்.

xv. தீர்ப்பு நகல் பெறப்பட்டதும் வழக்கு தள்ளுபடி / விடுதலை செய்யப்பட்டிருந்தால் அதற்கான காரணத்தை ஆராய்வதற்காக சம்மந்தப்பட்ட அரசு வழக்குரைஞர்களை அணுகி பத்தி வாரியாக (Para war) கருத்துப் பெற்று மேற்படி வழக்கினை தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலேயே 4 தீர்ப்பு நகல்கள்

கொடுக்க வேண்டி சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் APP/PP அவர்கள் மூலமாக Copy Application போட வேண்டும். தீர்ப்பு நகல் கிடைத்ததும் அன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் மேல் முறையீட்டிற்கான தகுதி (Fit for Appeal) மற்றும் மேல்முறையீட்டிற்கான அடிப்படைகள் (Grounds for Appeal) இவற்றை PP மூலமாக தயார் செய்து மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும். மேல் முறையீடு செய்ய தகுதி இல்லாத வழக்காக இருப்பின் அரசு வழக்குரைஞரிடமிருந்து மேல் முறையீடு செய்ய தகுதியற்ற வழக்கு (Not fit for appeal) என்று கருத்துப் பெற்று வழக்கு கோப்பில் வைக்க வேண்டும்.

xvi. இதற்கிடையில் வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகள் (புலன் விசாரணை நிலை – நீதிமன்ற விசாரணை நிலை – வழக்கு தீர்ப்பான பின்பு) தங்களது குற்றத்தை மறுத்து உயர் நீதிமன்றங்களில் மேல் முறையீடு மனுக்கள் தாக்கல் செய்வார்கள்.

xvii. அந்த மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் Criminal Appeal எண்கள் வழங்கப்பட்டு உரிய புலன் விசாரணை அலுவலரை விசாரணை தேதிகள் குறிப்பிட்டு உயர் நீதிமன்றங்களுக்கு வந்து அங்குள்ள அரசு வழக்குரைஞருக்கு வழக்கு சம்மந்தமாக உதவி செய்யுமாறு தகவல்கள் பெறப்பட்டதும், சம்மந்தப்பட்ட காவல் அலுவலர்கள் மற்றவர்களை பெயரளவில் அனுப்பாமல் அவர்களே உரிய வழக்கு கோப்புகளுடன் (வழக்கு சம்மந்தமாக படித்தறிந்து கொண்டு) நீதிமன்றம் சென்று அரசு வழக்குரைஞர்களை குறித்த தேதி, நேரத்தில் நேரில் சந்தித்து வழக்கு சம்மந்தமாய் விபரமாக எடுத்துரைக்க வேண்டும். உயர்நீதிமன்றங்கள் செல்லும் போது சீருடையில் தான் செல்ல வேண்டும்.

xviii. வழக்கு கோப்புக்களை உயர் நீதிமன்றத்தில் ஒப்புவிக்கப்படும் போது அதனை ஒப்புவித்ததற்கு ஒப்புகை பெற்று அதனை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து முதல் தகவல் பதிவேட்டில் உரிய வழக்கிற்கு அந்த இடத்தில் ஒட்டி வைப்பது முக்கியம்.

Section 61 Cr P.C. Summon

இந்தச்சட்ட்த்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வோர் அழைப்பாணையும் எழுத்து வடிவானதாக, இரட்டை படிகளில், அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலரோ, உயர் நீதிமன்றம் அவ்வப்போது விதி மூலமாக உத்தரவிடலாகும் வேறு அலுவலரோ கையொப்பமிட்டு, அந்நீதிமன்றத்தின் முத்திரையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

Section 207 Cr P.C. Furnishing copies to the accused

காவலறிக்கையின் பேரில் நடவடிக்கை தொடரப்பட்டிருக்கிற வழக்கு எதிலும் நடுவர் பின்வருவனவற்றில் ஒவ்வொன்றின் நகலையும், கட்டணமின்றி, எதிரிக்கு தாமதமின்றி அளித்தல் வேண்டும்

(i) காவலறிக்கை

(ii) 154 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை

(iii) அரசு தரப்பு தன் சாட்சிகளாக விசாரிக்க உத்தேசித்துள்ள அனைவராலும் தரப்பட்டவையும் 161 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவின்படி பதிவு செய்யப்பட்டவையுமான வாக்குமூலங்களிலிருந்து எந்தப்பகுதியை நீக்குவதற்காக 173 ஆவது பிரிவின் (6) ஆவது உட்பிரிவின்படி காவல் அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளாரோ அந்தப்பகுதியை நீக்கி விட்டு மீதியுள்ள வாக்குமூலங்கள்.

(iv) 164 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள், மற்றும் வாக்குமூலங்கள் எவையேனும் இருப்பின் அவை

(v) 173 ஆவது பிரிவின் (5) ஆவது உட்பிரிவின்படி காவலறிக்கையுடன் நடுவருக்கு அனுப்பப்பட்ட வேறெந்த ஆவணமும் அல்லது தொடர்புற்ற அவற்றின் எடுகுறிப்பும்

Section 313 Cr P.C. :-

(1) பரிசீலனை அல்லது விசாரணைஒவ்வொன்றிலும் சாட்சியத்தில் எதிரிக்குப் பாதகமாகத் தோன்றுகிற விவரங்கள் எவற்றையும் அவரே நேர்முகமாக விளக்குவதற்கு இயலும்படி செய்யும் பொருட்டு நீதிமன்றம்

(அ) எந்தக்கட்டத்திலும் எதிரியை முன்னதாகவே எச்சரிக்கை செய்யாமலேயே நீதிமன்றம் அவசிய மென எண்ணும் கேள்விகளை அவரிடம் கேட்கலாம்

(ஆ) வாதி தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டதற்குப் பின்பும் எதிர் வாதம் செய்ய அவரைக் கூப்பிடுவதற்கு முன்பும் வழக்கைப் பொறுத்து

இருப்பினும் அழைப்பாணை வழக்கில் எதிரி நேர்முகமாக முன்னிலையாவதை நீதிமன்றம் தவிர்க்கு மிடத்து அது (அ) கூறின் படி அவரை விசாரிப்பதையும் தவிர்த்து விடலாம்.

2) எதிரியை (1) ஆவது உட்பிரிவின்படி விசாரிக்கும் போது மெய்யுறுதி எதுவும் அவருக்கு செய்து வைக்கப்படுதல் ஆகாது

(3) எதிரி அத்தகைய கேள்விகளுக்கு விடையளிக்க மறுப்பதன் காரணமாகவோ, அவைகளுக்கு பொய்யான விடைகளைத் தருவதன் காரணமாகவோ தண்டனைக்கு ஆளாதல் கூடாது.

(4) எதிரியால் தரப்பட்ட விடைகள் அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படலாம் மற்றும் அவை, அவர் வேறெந்த குற்றத்தையேனும் செய்திருப்பதாகக் காட்டக்கூடிய போக்கில் அமையுமானால் அது சம்பந்தமாகப் பரிசீலனை அல்லது விசாரணை நடத்தும்போது, அதில் அந்த பதில்கள் அவருக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ சாட்சியத்தில் பயன்படுத்தப்படலாம்.

Section 317 Cr P.C.

1) இந்தச்சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை அல்லது விசாரணையின் எந்தக் கட்டத்திலேனும் நீதிமன்றத்தின் முன் எதிரி முன்னிலையாவது நீதியின் நலத்திற்காக அவசியமில்லை என்பதாகவோ எதிரி நீதிமன்றத்தில் நடக்கும் நடவடிக்கைகளைப் பிடிவாதமாகத் தொடர்ந்து குலைத்து வருகிறார் என்பதாகவோ நீதிபதி அல்லது நடுவருக்கு உளநிறைவாகத் தெரியுமானால், பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக அந்த நீதிபதி அல்லது நடுவர் எதிரிக்காக வாதுரைஞர் ஒருவர் பிரதிநிதியாக முன்னிலையாகியிருந்தால், எதிரி முன்னிலையாவதைத் தவிர்த்து அவர் இல்லாமலேயே அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையை மேல் நடத்தலாம். மற்றும் அந்த நடவடிக்கைகளின் பிந்திய கட்டம் எதிலும் அத்தகைய எதிரி நேர்முகமாக முன்னிலையாவதற்கு உத்தரவிடலாம்.

2) அத்தகைய வழக்கு எதிலேனும் எதிரிக்காக வாதுரைஞர் எவரும் பிரதிநிதியாக முன்னிலையாக வில்லையானாலும் அல்லது அவர் நேர்முகமாக முன்னிலையாவது அவசியமென்று நீதிபதி அல்லது நடுவர் எண்ணுவாரானால் தாம் பொருத்தமென நினைக்கும் போதும் தம்மால் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும் அவர் அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையை ஒத்தி வைக்கலாம் அல்லது அத்தகைய எதிரியின் வழக்கு தனியாக எடுத்துக் கொள்ளப்படவோ தனியாக விசாரணை செய்யப்படவோ வேண்டுமென்று கட்டளையிடலாம்.

Section 216 Cr P.C.

இப்பிரிவின்படி நீதிமன்றமானது முறையான குற்றச்சாட்டு வனைந்திட ஏற்கனவே வனைந்த குற்றச் சாட்டினை மாற்றியமைத்து மற்றும் எதிரிக்கு குந்தகம் ஏற்படுத்தப்படாது சாட்சிகள் முன்னரே எதிரியால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை மற்றும் குற்றச்சாட்டு வனைந்திட்ட பின்னர் அனைத்து சாட்சிகளையும்

விசாரிக்க வாய்ப்பு இருந்திருக்கும் போது கீழமை நீதிமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட உத்திரவில் சட்ட விரோதம் ஏதுமில்லை.

Section 247 Cr P.C. :-

அதன்பின்பு எதிரி தம்முடைய எதிர் வாதத்தைச் செய்ய தலைப்படுமாறும் தம் சாட்சியத்தைக் கொண்டு வருமாறும் கோரப்பட வேண்டும் மற்றும் 243 ஆவது பிரிவின் வகைமுறைகள் இந்த நடவடிக்கை மீது இயங்குதல் வேண்டும்.



SUMMONS TO A WITNESS.

IN THE COURT OF THE Judicial Magistrate OF SATHYMANGALAM

C Case No. 372/08 of 20

WHEREAS complaint has been made before the Police. Sathy. PS

G MMMMMM

committed the offence

Judicial Magistrate, SATHYMANGALAM

HEAD CLERK, Judicial Magistrate Court, Sathyamangalam

SUMMONS TO AN ACCUSED PERSON.

IN THE COURT OF THE Judicial Magistrate, SATHYMANGALAM. MAGISTRATE

CALENDAR CASE No. 38/08 of 20

Judicial Magistrate, SATHYMANGALAM.

Judicial Magistrate, SATHYMANGALAM.

2. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் முறை

i. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் போது தனிநபர் சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்பட்ட பின்பு புலன் விசாரணை மற்றும் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்த அலுவலர்கள் விசாரிக்கப் படுவார்கள்.

ii. அந்த விசாரணைக்கு சாட்சியம் அளிக்கச் செல்லும்போது காவல் அலுவலர்கள் மிடுக்கான சீருடையில்தான் செல்ல வேண்டும். மாவட்ட முதன்மை நீதிமன்றம் (Chief Judicial Magistrate), மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் (Principal Sessions), மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் (Additional District Sessions), துணை அமர்வு நீதிமன்றங்கள் (Assistant Sessions), விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Court) ஆகிய நீதிமன்றங்களுக்கு சாட்சியம் அளிக்க செல்லும் போது மிடுக்கான சீருடையுடன் குறுக்கு பட்டை(Cross Belt) அணிந்து தான் செல்ல வேண்டும்.

iii. சாட்சியம் சொல்வதற்கு முன்பு சம்மந்தப்பட்ட அரசு வழக்குரைஞர்களை சந்தித்து வழக்கு சம்மந்தமாக விவாதித்து அறிவுரை பெற்று அதன் பின்பு சாட்சியம் அளிக்க நீதிமன்றம் செல்ல வேண்டும். வழக்கு சம்மந்தமாக வழக்கு கோப்பை முழுமையாக படித்தறிந்து சிறிய குறிப்பு எழுதிக் கொள்ளலாம். அல்லது முழுமையாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

iv. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் பெட்டியில் ஏறியவுடனும், சாட்சியம் சொல்லி முடித்த பின்பும் நீதிமன்ற நடுவருக்கு மரியாதை செலுத்த வேண்டும். (Salute)

v. நீதிமன்றத்தில் எதிர் தரப்பு வழக்குரைஞர் கேள்விகள் கேட்கும் போது வழக்கு நாட்குறிப்பை பார்வையிட்டு சாட்சியம் அளிக்க வேண்டும். அவ்வாறு வழக்கு கோப்பை பார்த்து சொல்லும் போது அந்த வழக்கு கோப்பை எதிரி தரப்பினர் ஆஜர் படுத்த கோரினால் எக்காரணம் கொண்டும் தரக்கூடாது. மாறாக நீதிமன்ற நடுவர் உத்திரவு பிறப்பித்து கோரினால் நீதிமன்ற நடுவர் மட்டும் பார்வையிட கொடுக்கலாம் (172 Cr.PC)

vi. சாட்சியம் அளிக்கும் போது அரசு வழக்குரைஞர் கேள்விகள் முதன்மை விசாரணை ஆகும். (Chief Examination) அதில் வழக்கு புலன் விசாரணையில் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கை களையும் வரிசை கிரமமாக ஞாபகப்படுத்தி பதில் சொல்ல வேண்டும். அந்த பதிலை வைத்து எதிரி தரப்பினர் கேட்கப்படும் கேள்விகள் குறுக்கு விசாரணை ஆகும். (Cross Examination) அந்த விசாரணையின் போது அவர்கள் கேட்கும் கேள்விகளை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு தெளிவாக பதில் கூற வேண்டும். கேள்விகள் புரியவில்லை என்றால் திரும்பவும் கேள்வியைக் கேட்டு நன்கு புரிந்து கொண்டு புத்திசாலித்தனமாகப் பதில் கூற வேண்டும். இல்லையெனில் நீதிமன்ற தீர்ப்புகளில் புலன் விசாரணை குறித்து விமர்சித்தல் (Comments) கூறி கண்டனங்கள் (Strictures) வழங்க வழி வகுக்கும். காவல் அலுவலர் அளித்த சாட்சியத்தால் எக்காரணத்தை முன்னிட்டும் வழக்கும் தள்ளுபடி / விடுதலை ஆவதற்கு வழி வகுக்கக் கூடாது.

vii. சாட்சியம் அளித்த பின்பு நீதிமன்றத்தில் தாம் சாட்சியம் அளித்த விபரத்தை நீதிமன்ற சாட்சியின் படிவத்தில் (Deposition Form) கூறப்பட்டுள்ள விபரங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து பின்பு அளித்த சாட்சியத்தை கூர்ந்து படித்து அதன் பின்பு அடியில் கையொப்பம் செய்ய வேண்டும். மேற்படி படிவத்தில் கூறிய சாட்சியத்தில் பிழைகளோ, தவறுகளோ, மாற்றங்களோ காணப்பட்டால் அது சம்மந்தமாக நடுவர் அவர்களிடம் எடுத்துரைத்து அவர்களால் திருத்தப்பட்டால் பின்பு கையெழுத்து செய்ய வேண்டும்.

viii. அதன் பின்பு நீதிமன்றத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் கையெழுத்து செய்ய வேண்டும்.

ix. நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியம் அளித்ததற்கான "நீதிமன்ற வருகை பதிவு சான்றிதழ்"

x. (Court Attendance Certificate) நீதிமன்றத்தில் இருந்து பெற்று வழக்கு கோப்பில் வைக்க வேண்டும்.

xi. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க செல்லும் போதும் திரும்பி காவல் நிலையத்திற்கு வந்து அறிக்கை செய்யும் போதும் பொது நாட்குறிப்பில் வழக்கின் குற்ற எண், சட்டப்பிரிவு போன்ற விபரங்களைத் தெளிவாக எழுத வேண்டும்.

Section 172 Cr P.C :-

1) இந்த அத்தியாயத்தின்படி, புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் ஒவ்வொருவரும், புலனாய்வில் தாம் எடுக்கும் நடவடிக்கைகளை ஒரு நாட்குறிப்பில் அந்தந்த நாளில், தமக்கு வந்து சேர்ந்த நேரம், தம் புலனாய்வைத் தாம் ஆரம்பித்த நேரம், முடித்த நேரம், தாம் பார்வையிட்ட இடம் அல்லது இடங்கள் மற்றும் தம் புலனாய்வின் மூலம் நிச்சயிக்கப்பட்ட விவரங்களைப் பற்றிய குறிப்பு ஆகியவற்றைப் பதிவு செய்து வருதல் வேண்டும்.

2) குற்ற வழக்கு நீதிமன்றம் எதுவும், அந்நீதிமன்றத்தில் பரிசீலனை அல்லது விசாரணையிலுள்ள வழக்கு சம்பந்தமான காவல் நாட்குறிப்புகளைத் தருவிக்கலாம், மற்றும் அத்தகைய நாட்குறிப்புகளை அவ்வழக்கில் சாட்சியமாக அல்லாமல் ஆனால் அத்தகைய பரிசீலனை, அல்லது, விசாரணையில், அந்நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் பயன் படுத்தலாம்.

3) எதிரிக்கோ, அவரது முகவர்களுக்கோ அத்தகைய நாட்குறிப்புகளை வரவழைக்கும் உரிமை கிடையாது. அவற்றை நீதிமன்றம் பார்வையிட்டிருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமே, அவற்றைப் பார்ப்பதற்கும் அவருக்கோ, அவர்களுக்கோ உரிமை கிடையாது. ஆனால் அவற்றை எழுதிய காவல் அலுவலர் நினைவு படுத்திக் கொள்வதற்காக, அவற்றைப் பயன்படுத்துவாரானால், அத்தகைய காவல் அலுவலரின் கூற்றை முரண்படுத்தும் நோக்கத்திற்காக, நீதிமன்றம் அவற்றை பயன்படுத்துமானால் 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின் வகைமுறைகள் நேர்விற்கேற்ப, இயங்குதல் வேண்டும்.

SLIP PROCEEDING OF J.M. COURT

13 2008

STC/CC 985/08

Cr. No. : 81/08

Section of Law :

Name of the Accused : SSSSSSSS

Disposal

JUDICIAL MAGISTRATE COURT

3. நீதிமன்றத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் சொத்துக்கள் பதிவேடு

காவல் துறையினரால் வழக்கின் புலன் விசாரணையின் தொடர்பாக கைப்பற்றப்படும் சொத்துக்கள் படிவம் **91**–ன் மூலம் உரிய நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் போது நடுவர் அவர்கள் அதனை மீண்டும் காவல் துறையினரிடம் ஒப்படைப்பார். மேற்படி சொத்துக்களை பெற்று காவல் நிலையத்தில் பாதுகாப்பாக வைத்திருந்து நீதிமன்றம் கோரும் போது திருப்பி ஒப்படைக்க வேண்டும். அதற்கென பராமரிக்கப்படும் பதிவேடு நீதிமன்ற சொத்துக்கள் பதிவேடு எனப்படும்.

i. அப்பதிவேடு வரிசை எண், குற்ற எண், மற்றும் சட்டப்பிரிவு, கைப்பற்றிய தேதி, நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி, சொத்தின் விபரம், நீதிமன்றத்தில் இருந்து திருப்பி பெறப்பட்ட நாள் மற்றும் நீதிமன்ற சொத்து பதிவேடு எண் (PR /CR / PI No.) நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்பட்ட நாள் மற்றும் விபரம், குறிப்பு ஆகிய கட்டங்களை (Columns) உள்ளடக்கியதாகும்.

ii. இப்பதிவேட்டில் மேற்குறிப்பிட்ட அனைத்து கட்டங்களும் உண்மையாகவும், முழுமையாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். குறிப்பு பகுதியில் நீதிமன்றத்தில் இருந்து சொத்துக்களை காவல் நிலையத்திற்கு திருப்பி அனுப்புவது மற்றும் நீதிமன்றத்தில் திருப்பி ஒப்புவிப்பது சம்மந்தமாகப் பெறப்பட்ட குறிப்பாணை, அறிவுரைகள் ஆகியவற்றை நீதிமன்ற கடித எண்கள் விரிவாக எழுதப்பட வேண்டும்.

iii. சில வழக்குகளில் நீதிமன்றத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்படும் சொத்துக்களின் உரிமையாளர் நீதிமன்றத்தின் மூலம் குறிப்பாணை பெற்று வரும் போது அந்த சொத்தை அவரிடம் ஒப்புவித்து நீதிமன்ற குறிப்பாணையின் பின்புறம் ஒப்புகை பெற்று, ஒப்புகை பெற்ற குறிப்பாணையினை போட்டோ நகல் எடுத்து இப்பதிவேட்டில் ஒட்டியும், அதன் அசலை நீதிமன்றத்தில் காலதாமதமின்றி சமர்ப்பிக்கவேண்டும்.

iv. நீதிமன்றத்திற்கு சொத்துக்கள் திருப்பி அனுப்பப்படும்போது அதனை பெற்றுச் செல்லும் காவல் ஆளிநரின் கையெழுத்து கண்டிப்பாக பெறப்படவேண்டும். அதே போன்று சொத்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட பின்பும் அல்லது உரிமையாளரிடம் ஒப்புவித்த பின்பும் அதன் விபரங்களை எழுதி நிலைய பொறுப்பு அலுவலர் கையெழுத்து செய்ய வேண்டும்.

v. இந்தப் பதிவேட்டினை அடித்தல், திருத்தங்கள் இல்லாமல் பராமரிக்க வேண்டும். உயர் அலுவலர்கள் ஆய்வின் போது காட்ட வேண்டும்.

4. அழைப்பாணை / பிடிகட்டளை ஒப்பீடுப் பதிவேடு

காவல் நிலையங்களில் குற்ற வழக்குகளில் பிடி ஆணை, அழைப்பாணை ஆகியவை நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் போது அதன் விபரங்களை பதிவு செய்யப்படும் பதிவேடு நீதிமன்றக் கட்டளைப் பதிவேடு எனப்படும்.

i. இந்தப் பதிவேடு வ.எண். யார் பிறப்பித்தது, அழைப்பாணை / பிடிகட்டளை விபரம் (குற்ற எண். ச/பி மற்றும் STC/CC/PRC/SC) சாட்சி / பிடிகட்டளைதாரர் பெயர், பிடிகட்டளை / அழைப்பாணை பிறப்பித்த தேதி, காவலரால் பெற்றுக் கொண்ட தேதி, விசாரணை தேதி, சார்வு செய்வதற்கு நியமனம் செய்யப்பட்ட தேதி, சார்வு செய்யப்பட்டதேதி / சார்வு செய்தவர், குறிப்பு போன்ற விபரங்களை உள்ளடக்கியது.

ii. ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் தனித்தனியாக பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

iii. அழைப்பாணை / பிடிகட்டளை பெறப்பட்டதும் இப்பதிவேட்டில் பிடிகட்டளைகளை சிகப்பு மையி னாலும், அழைப்பாணையினை நீல மையினாலும் எழுத வேண்டும்.

iv. மேற்படி அழைப்பாணை / பிடிகட்டளை ஆகியவற்றின் பின்புறம் மேல் வரைவு இட்டு (Endorsement) ஆளிநர்களை நியமனம் செய்து கடவுச் சீட்டுக்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

v. அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டாலும், செய்யப்படாவிட்டாலும் அவைகள் முழு விபரங்களுடன் முக்கியமாக விசாரணைத் தேதிக்குள் (Hearing Date) நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
vi. மேற்படி விபரம் இப்பதிவேட்டின் 10 வது கட்டத்தில் பதியப்பட வேண்டும்.
vii. இப்பதிவேட்டில் மாதம் ஒரு முறை பெறப்பட்ட / சார்வு செய்யப்பட்ட, அழைப்பாணை / பிடிகட்டளை ஆகியவை குறித்து சுருக்கப்பட்டியல் (Monthly Abstract) தயார் செய்து நிலையப் பொறுப்பு அலுவலர் கையொப்பம் செய்ய வேண்டும்.
viii. இந்தப் பதிவேட்டினை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை காவல் ஆய்வாளர் நிலையில் உள்ளவர் நீதிமன்ற பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து இப்பதிவேட்டில் நடுவர் அவர்களின் கையெழுத்துப் பெற வேண்டும். ஆய்வாளர் நீதிமன்ற பதிவேட்டில் கையெழுத்து செய்தல் வேண்டும். (PSO 715 (3)
ix. ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் புதிதாக துவங்கப்படும் பதிவேட்டில் முந்தைய ஆண்டின் இறுதியில் நிலுவையில் இருந்த அழைப்பாணை மற்றும் பிடிகட்டளை ஆகியவற்றின் விபரங்களை இப்பதிவேட்டில் பதிவு செய்த பின்பே (Brought forward) இந்த ஆண்டு பெறப்படும் விவரங்கள் எழுதப்பட வேண்டும்.
x. உயர் அலுவலர்களின் ஆய்வின் போதும், நீதிமன்ற நடுவர்கள் கோரும் போதும் இப்பதிவேட்டினை ஆஜர் செய்ய வேண்டும்.

PSO 715(1)

நீதிமன்றக் கட்டளைப் பதிவேடு படிவம் 100 ல் உள்ளபடி ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பராமரிக்கப்பட வேண்டும், நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் அனைத்து அழைப்பாணைகளும் பிடிகட்டளைகளும் சார்வு செய்யவேண்டியும், நிறைவேற்ற வேண்டியும் இந்தப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

PSO 715 (3)

ஒவ்வொரு காவல் நிலைய காவல் ஆய்வாளரும் இயன்றவரை இரண்டு மாதத்துக்கு ஒரு முறையோ அல்லது இருப்புப்பாதைக் காவல்துறையாக இருப்பின் நான்கு மாதத்துக்கு ஒரு முறையோ இப்பதிவேட்டினை உரிய நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று நீதிமன்றத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் உள்ள பதிவுகள் மற்றும் காவல் நிலைய பதிவேட்டில் உள்ள பதிவுகள் மற்றும் அது சார்ந்த அனைத்து பதிவேடுகளையும் ஒப்பீடு செய்து பின்னர் இது சம்பந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

செய்யவேண்டியவை	செய்யக்கூடாதவை
1. நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் அனைத்து அழைப்பாணைகளையும் பிடிகட்டளைகளையும் கண்டிப்பாக வரிசைக்கிரமமாக பதிவு செய்ய வேணடும்.	1. நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் ஆணைகளை பதிவு செய்யாமல் இருப்பது.

5. பிடிகட்டளையினை நிறைவேற்றுதல்

நீதிமன்றத்தில் வழக்குகளில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளுக்கும், சில சமயங்களில் சாட்சிகளுக்கும் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்படும் ஆணை பிடிகட்டளை ஆகும்.

i. பிடிகட்டளையின் மேல் பகுதியில் காவல் நிலையக் குற்ற எண்ணும், அடுத்த விசாரணை தேதியும் குறிக்கப்பட்டிருக்கும். அதோடு CC/STC/SC எண்கள் குறிக்கப்பட்டிருக்கும். அதில் ஆஜர் படுத்தப்பட வேண்டியவர் பெயர், விலாசம் மற்றும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறிக்கப்பட்டிருக்கும். அந்த பிடிகட்டஞை வழங்கப்பட்ட தேதியும் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் கீழ் அந்த பிடிகட்டளையை வழங்கிய நடுவரின் கையொப்பம் முத்திரையுடன் இருக்கும். நீதிமன்றத்தின் முத்திரை இடப்பட்டிருக்கும். 100 சதவீதம் பிடிகட்டளைகள் ரோஸ்/சிவப்பு மைகளில் எழுதப்பட்டிருக்கும்.

ii. பிடிகட்டளை பிணையில் விடக்கூடியது (Bailable), பிணையில் விடக்கூடாதது (Non-bailable) என இரண்டு வகைப்படும். சாட்சிகளுக்கு வழங்கப்படும் பிடிகட்டளை கூடுமானவரை பிணையில் விடக்கூடியதாகத்தான் இருக்கும். பிணையில் விடக்கூடாத பிடிகட்டளைகள் எதிரிகளுக்கும், சில சமயங்களில் வழக்குகளின் தன்மையைப் பொறுத்து சாட்சிகளுக்கும் வழங்கப்படும்.

iii. நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட பிடிகட்டளையை நிறைவேற்றும் முறைகள் கு.வி.மு.ச 70 முதல் 81 வரை உள்ள பிரிவுகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்த அறிவரைகளைக் கண்டிப்பாக மனதில் கொண்டுதான் பிடிக்கட்டளையை நிறைவேற்ற வேண்டும். பிடிக்கட்டளையை நீதி மன்றத்தில் இருந்து பெற்றதும் அதனை காவல் நிலையத்தின் கட்டளைப் பதிவேட்டில் (Process Register) முறையாகப் பதிவு செய்து பின்பு நிலைய பொறுப்பு அலுவலர் அதன் பின்புறத்தில் அந்த பிடிகட்டளையை நிறைவேற்ற பணிக்கப்படும் காவல் ஆளிநரின், பெயர், தகுதி, எண், ஆகியவற்றை தெளிவாக எழுதி அந்தப் பிடிகட்டளையை நிறைவேற்றுவதற்கு சம்மந்தப்பட்ட வழக்கின் விபரம் எதிரி குறித்த விபரங்கள், பிணையில் சென்றிருந்தால் பிணைதாரர்கள் விபரங்கள், ஆகியவற்றை எடுத்துக் கூறி பிடிகட்டளையை நிறைவேற்றும் பணியில் கடவுச் சீட்டு தேவைப்படின் புகைவண்டி மற்றும் பேருந்து பயணச்சீட்டு கொடுத்தும், வெளி மாநிலங்களுக்கு செல்ல நேரிட்டால் வெளியூர் கடவுச்சீட்டு (Foreign Passport) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அனுமதியோடு மாவட்ட குற்றப் பதிவேடு கூடத்தில் இருந்து (DCRB) பெற்று அனுப்பி வைக்க வேண்டும்.

iv. மேற்படி பிடிகட்டளையை பெற்றுச் சென்ற காவல் ஆளிநர் எதிரியின் மீது பிடிகட்டளையை நிறைவேற்றும் பட்சத்தில், அது குறித்து உடனே காவல் நிலையப் பொறுப்பு அலுவலரைத் தொடர்பு கொண்டு காவல் ஆலுவலரிடம் உரிய அறிவுரை பெறவேண்டும் என்றும் அதனை நிறைவேற்றுவதில் குற்ற விசாரணை முறைச் சட்டத்தில் பிரிவு 70 முதல் 81 முடிய உள்ள அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுரை வழங்கவேண்டும்.

v. பிடிகட்டளை நிறைவேற்றப்பட்ட எதிரி அவர் அந்த நாள் வரை வழக்கில் கைது செய்யப்படாமல் இருந்தால் அவரைக் காலதாமதமின்றி கண்டிப்பாக காவல் நிலையத்தில் ஆஜர் செய்து அதன் பின்பு தான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கவேண்டும்.

vi. பிடிகட்டளையில் பிடிக்கப்படும் எந்த ஒரு எதிரியும் 24 மணி நேரத்திற்குள் (பயண நேரம் தவிர) சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் பிடிகட்டளையுடன் ஆஜர் படுத்தவேண்டும்.

vii. அவ்வாறு காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்படும் எதிரியை முறைப்படி திரேகப் பரிசோதனை செய்து அது சம்மந்தமாக அனைத்து வழி முறைகளையும் (கு.வி.மு.ச 50, 51,53,54) பின்பற்றி அவரை நீதிமன்ற காவலுக்கு பிடிகட்டளையை நிறைவேற்றி காவல் ஆளிநர் மூலம் தான் கடவுச் சீட்டுடன் அனுப்பி வைக்கவேண்டும்.

viii. மேற்படி காவல் ஆளிநர் எதிரியை நீதிமன்றத்தில் பிடிக்கட்டளையுடன் ஆஜர் செய்து அதன் பின்பு நடுவர் அவர்களின் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும் என்று அறிவுரை வழங்கவேண்டும்.

ix. பிணையில் விடக்கூடிய குற்றமாயின் காவல் நிலையத்தில் வைத்து பிணையில் விடுவது சம்மந்தமாக அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி பிணையில் விடுவிக்கலாம். அவ்வாறு செய்யும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட பிடி கட்டளையை குறிப்பாணை மூலம் நீதிமன்றத்திற்கு காலதாமதமின்றி அனுப்பி ஒப்புகை பெற்று அந்த ஒப்புகையை அடிக்கட்டையில் ஒட்டுவதோடு அது குறித்த விபரங்களை வழக்கு நாட்குறிப்பில் எழுத வேண்டும்.

x. வழக்குகளில் இந்தியாவில் எந்த ஒரு இடத்திலும் ஒரு எதிரியை கைது செய்யும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து வழி முறைகளும் பிடிகட்டளை நிறைவேற்றும் போதும் கடைபிடிக்க வேண்டும்.

xi. ஒரு பிடிகட்டளையை நீண்டகாலமாக நிறைவேற்ற இயலாத சூழ்நிலையில், முதலில் பிணையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க (Surities Action) நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும் (441 Cr.PC)

xii. அதன் பின்பு பிடிகட்டளை நிலுவை எதிரி மீது ச/பி 82, 83 கு.வி.மு.ச படி அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக (Proclaimed Offender) ச/பி 82–86 குவிமுச வழிமுறைகளை பின்பற்றி அவரை நீமிமன்றம் "Proclaimd Offender" என்று அறிவித்த பின்பு அமர்வு வழக்குகளில் அந்த வழக்கை 321 குவிமுச படி திரும்ப பெற (Withdrawal) நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

xiii. அமர்வு நீதிமன்ற வழக்குகளில் – மாவட்ட ஆட்சியரும், மற்ற வழக்குகளில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களும் அந்த வழக்கை திரும்ப பெற (Withdrawal) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

Section 70 Cr P.C : – பிடிகட்டளையின் வடிவமும் கால அளவும்,

Section 71 Cr P.C : – பிணையம் வாங்க வேண்டுமென உத்திரவிடுவதற்குள்ள அதிகாரம்.

Section 72 Cr P.C : – பிடி கட்டளை யாரால் நிறைவேற்றப்படவேண்டுமென்பது.

Section 73 Cr P.C : – பிடி கட்டளை எவருக்கும் குறிப்பிட்டனுப்பலாம் என்பது.

Section 74 Cr P.C : – பிடி கட்டளை ஒரு காவல் அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்புதல்,

Section 75 Cr P.C : – பிடி கட்டளையின் சாராம்சத்தை அறிவித்தல்,

Section 76 Cr P.C : – கைது செய்யப்பட்டவர் தாமதமின்றி நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படுதல்.

Section 77 Cr P.C : – எவ்விடத்தில் பிடிகட்டளையை நிறைவேற்றலாம் என்பது.

Section 78 Cr P.C : – நிறைவேற்றுவதற்காகப் பிடிகட்டளையை அதிகார வரம்புக்கு வெளியே அனுப்புதல்.

Section 79 Cr P.C : – அதிகார வரம்புக்கு வெளியே நிறைவேற்றப்படுவதற்காகப் பிடி கட்டளையை காவல் அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்புதல்.

Section 80 Cr P.C : – எவருக்காக பிடி கட்டளைப் பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவரைக் கைது செய்தபின் நடை முறை என்ன என்பது.

Sectioin 81 Cr P.C : – கைது செய்யப்பட்டவர் எந்த நடுவர் முன்பு கொணரப்படுகிறாரோ அவர் மேற் கொள்ள வேண்டிய நடைமுறை.

Section 441 Cr P.C :–

1) எவரேனும் பிணையில் விடுவிக்கப்படுவதற்கு முன்பு அல்லது அவரது சொந்த பிணையின் பேரில் விடுவிக்கப்படுவதற்கு முன்பு நேர்விற்கேற்ப காவல் அலுவலர் அல்லது நீதிமன்றம் போதுமென நினைக்கும் பணத்தொகைக்கான பிணைமுறியொன்று அத்தகையவராலும் அவர் பிணையில் விடுவிக்கப்படும்போது அவர் அப்பிணைமுறியில் சொல்லப்பட்ட காலத்திலும் இடத்திலும் முன்னிலையாக வேண்டும் என்ற நிபந்தணையுடனும் நேர்விற்கேற்ப அக்காவல் அலுவலரால் அல்லது நீதிமன்றத்தால் வேறு விதமாக உத்திரவிடப்படும்வரை அவ்வாறு தொடர்ந்து முன்னிலையாகிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போதுமான பிணையாள்களாலும் எழுதிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

2) எவரையேனும் பிணையில் விடுவிப்பதற்காக நிபந்தனை ஏதேனும் விதிக்கப்படுமிடத்து அப்பத்திரத்தில் அந்த நிபந்தனை அடங்கியிருத்தல் வேண்டும்.

3) வழக்கின் தன்மையைப் பொறுத்து கோரப்படும்போது குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதற்காக உயர்நீதிமன்றத்திலோ அமர்வு நீதிமன்றத்திலோ வேறு நீதிமன்றத்திலோ அவர் முன்னிலையாக வேண்டும் என்று பிணையில் விடுவிக்கப்பட்டவரை அப்பிணைமுறி கட்டுப்படுத்தலும் வேண்டும்.

4) பிணையாள்கள் பொருத்தமானவர்களா, அல்லது போதுமான அளவில் உள்ளனரா என்பதை நிர்ணயிப்பதற்காக நீதிமன்றம், பிணையாள்களின் போதிய நிலை அல்லது பொருத்தம் பற்றி ஆணையுறுதி ஆவணங்களில் அடங்கியுள்ள பொருண்மைககளப் மெய்ப்பிப்பதற்காக, அப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளலாம், அல்லது தான் அவசியமென எண்ணுமானால் அத்தகைய போதிய நிலை அல்லது பொருத்தம் பற்றித் தானே பரிசீலனை ஒன்றை நடத்தலாம், அல்லது தனக்கு கீழமைந்துள்ள நடுவர் ஒருவரால் விசாரணையொன்று செய்யும்படி செய்யலாம்.

Section 82 Cr P.C.

(1) தன்னால் எவர்மீது பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவர் அப்பிடிகட்டளையை நிறைவேற்ற முடியாதபடி செய்வதற்காகத் தலைமறைவாகியுள்ளார், அல்லது தம்மையே மறைத்துக் கொண்டிருக்கிறார் என்பதாக (சாட்சியம் எடுத்த பின்போ எடுக்காமலோ) ஒரு நீதிமன்றம் நம்புவதற்குக் காரணமிருப்பின் அந்நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட இடத்திலும், அறிக்கையை வெளியிடுகின்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குக் குறையாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் முன்னிலையாகுமாறு கோரி எழுத்து மூலமான ஒரு பகிங்கிர அறிக்கையை வெளியிடலாம்.

(2) அந்தப் பொது அறிவிப்பு பின்வருமாறு வெளியிடப்பட வேண்டும்

(i) (அ) அத்தகையவர் சாதாரணமாகக் குடியிருக்கிற நகரம் அல்லது கிராமத்தின் மையமான ஓரிடத்தில் பகிங்கிரமாக படிக்கப்பட வேண்டும்.

(ஆ) அத்தகையவர் சாதாரணமாகக் குடியிருக்கிற வீடு அல்லது வீடு சார்ந்த இடத்தின் எடுப்பான ஒரு பகுதியிலோ, அத்தகைய நகரம் அல்லது கிராமத்தின் எடுப்பான ஓரிடத்திலோ அது ஒட்டப்பட வேண்டும்.

(இ) நீதிமன்றம் / காவல் நிலையத்தின் எடுப்பான ஒரு பகுதியில் அதன் நகலொன்றை ஒட்டப்பட வேண்டும்.

(ii) அத்தகையவர் சாதாரணமாகக் குடியிருக்கிற இடத்தில் வெளியிடப்படும் தினசரி செய்தித்தாள் ஒன்றில் அந்தப் பகிங்கிர அறிக்கையின் நகல் வெளியிடப்படுவது பொருத்தமென நீதிமன்றம் கருதினால், அது அவ்வாறும் கட்டளையிடலாம்.

(3) அந்தப் பகிங்கிர அறிக்கையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் (2) ஆவது உட்பிரிவின் (1) ஆவது கூறில் குறிப்பிடப்பட்ட முறையில் குறிப்பிட்ட நாளில், அந்த அறிக்கை உரிய வாறு வெளியிடப்பட்டது என்று எழுத்து மூலமாகக் கூறுமானால் அக்கூற்று இந்தப்பிரிவின்படியுள்ள கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்பதற்கும் அந்தப் பகிங்கிர அறிக்கை அத்தகைய நாளில் வெளியிடப்பட்டது என்பதற்கும் முடிவான சான்றாகும்.

Section 83 Cr P.C. : -

(1) 82 ஆவது பிரிவின்படி அறிக்கையொன்றைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் அதைப் பிறப்பித்ததற்குப் பின்பு எந்த நேரத்திலும் எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக பகிங்கிர அறிக்கையிடப்பட்ட நபருக்கு சொந்தமான சொத்து எதனையும் அது அசையும் பொருளாயினும், அசையாப் பொருளாயினும் அல்லது இரண்டுமே ஆயினும் பற்றுகை செய்யும்படி கட்டளையிடலாம் , ஆனால் எவரைப்பற்றி அந்த பகிங்கிர அறிக்கை பிறப்பிக்கப்ட்டுள்ளதோ, அவர்

(அ) தம் சொத்து முழுவதையும் அல்லது எந்தப்பகுதியேனும் விற்கப் போகிறார் அல்லது

(ஆ) நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள்ளிருந்து தம் சொத்து முழுவதையும் அல்லது எந்தப் பகுதியையேனும் அகற்றப்போகிறார் என்பதாக மெய்யுறுதி ஆவணத்தின் மூலமாகவோ வேறு வகையிலோ அந்த பகிங்கிர அறிக்கையைப் பிறப்பிக்கும் காலத்தில் நீதிமன்றத்திற்கு மனநிறைவு ஏற்படுமிடத்து பற்றுகை செய்ய வேண்டுமென்று அந்த அறிக்கை பிறப்பிக்கப்படும் அதே நேரத்தில், அந்நீதிமன்றம் கட்டளையிடலாம்,

(2) எந்த மாவட்டத்திற்குள் அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ, அந்த மாவட்டத்தில், அந்த நபருக்கு சொந்தமாகவுள்ள சொத்து எதனையும் பற்றுகை செய்வதற்கும், அத்தகைய கட்டளை அதிகாரம் அளித்தல் வேண்டும், மற்றும் அந்த மாவட்டத்திற்குள் வெளியே, அந்த ஆளுக்குச் சொந்தமாகவுள்ள சொத்து எதனையும், எந்த மாவட்ட நடுவரின் மாவட்டத்திற்குள் அத்தகைய சொத்து அமைந்திருக்கிறதோ, அவரது மேற்குறிப்பின் பேரில் பற்றுகை செய்யும்படி, அக்கட்டளை அதிகாரமளித்தல் வேண்டும்.

(3) பற்றுகை செய்யக் கட்டளையிடப்பட்ட சொத்து ஒரு கடனாகவோஅல்லது வேறு அசையும் பொருளாகவோ இருப்பின், இந்தப்பிரிவின்படி கீழ்க்கண்டவாறு அது பற்றுகை செய்யப்பட வேண்டும்.

(அ) கைப்பற்றுதல் மூலமாக, அல்லது

(ஆ) பாதுகாவலர் (RECEIVER) ஒருவரை நியமிப்பதன் மூலமாக அல்லது

(இ) அத்தகைய சொத்தினை பகிங்கிர அறிக்கையிடப்பட்டவருக்கோ, அவரது சார்பாக வேறெவ ருக்குமோ, ஒப்படைக்கப்படக்கூடாதென்று, எழுத்துமூலமாகதடைசெய்கிற ஒரு கட்டளை வாயிலாக அல்லது

(ஈ) நீதிமன்றம் பொருத்தமென கருதுகிறபடி, அத்தகைய முறைகள் அனைத்தின் மூலமாக, அல்லது அவற்றில் இரண்டின் மூலமாக

(4) பற்றுகை செய்யக் கட்டளையிடப்பட்ட சொத்தானது அசையாப்பொருளாக இருப்பின், இந்தப் பிரிவின்படியுள்ள பற்றுகையானது மாநில அரசுக்கு நிலவரி செலுத்துகின்ற நிலத்தைப் பொறுத்தமட்டில், அந்த நிலம் அமைந்துள்ள மாவட்டத்தின் ஆட்சியர் மூலமாகவும், மற்ற சொத்துக்களைப் பொறுத்தமட்டில் கீழ்கண்டவாறும் செய்யப்பட வேண்டும்.

(அ) அனுபோகம் எடுத்துக் கொள்வது மூலமாக அல்லது

(ஆ) பாதுகாவலர் ஒருவரை நியமனம் செய்வதன் மூலாமாக அல்லது

(இ) பகிங்கிர அறிக்கையிடப்பட்டவருக்கோ அல்லது அவரது சார்பாக வேறொருவருக்குமோ, சொத்து ஒப்படைக்கப்படுங்கால், வாடகை கொடுக்கக்கூடாதென்று எழுத்துமூலமாக தடைசெய்கிற ஒரு கட்டளை வாயிலாக அல்லது

(ஈ) நீதிமன்றம் பொருத்தமெனக் கருதுகிறபடி அத்தகைய முறைகள் அனைத்தின் மூலமாக, அல்லது அவற்றில் இரண்டின் மூலமாக

(5) பற்றுகை செய்யக்கட்டளையிடப்பட்ட சொத்து கால்நடையாகவோ, அழியும் தன்மையுடைய தாகவோ இருப்பின், நீதிமன்றம் அதை உடனடியாக விற்பனை செய்வது நலமெனக் கருதுமாயின், அவ்வாறே கட்டளையிடலாம், அவ்வாறாயின் அவ்விற்பனையில் விற்றுமுதல், அந்த நீதிமன்றத்தின் கட்டளையைப் பொறுத்ததாகும்.

(6) இந்தப்பிரிவின்படி நியமனம் செய்யப்பட்ட பாதுகாவலர் ஒருவரின் அதிகாரங்களும், கடமைகளும், கட்டுப்பாடுகளும், 1908 ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணைமுறைச் சட்டத்தின்படி, நியமனம் செய்யப்படும் பாதுகாவலருக்குள்ளவையாகவே இருக்கும்.

Section 84 Cr P.C : - சொத்துக்கு உரிமை கொண்டாடுதலும் பற்றுகைக்கு ஆட்சேபணையும்.

Section 85 Cr P.C : - பற்றுகை செய்யப்பட்ட சொத்தினை விடுவித்தல், விற்பனை செய்தல் மற்றும் திரும்ப ஒப்படைத்தல்.

Section 86 Cr P.C : - பற்றுகை செய்யப்பட்ட சொத்தினைத் திரும்ப ஒப்படைப்பதற்கான விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்கின்ற கட்டளையிலிருந்து மேல் முறையீடு,

Section 321 Cr P.C

வழக்கின் பொறுப்பினைக் கொண்டுள்ள அரசு வழக்குரைஞர் அல்லது அரசு உதவி வழக்குரைஞர் பொதுவாகவோ அல்லது எந்தக்குற்றம் அல்லது குற்றங்களுக்காக எவர் ஒருவர் விசாரணை செய்யப் படுகிறாரோ, அந்தக் குற்றம் ஒன்று, அல்லது மேற்பட்டவரைப் பொறுத்தோ, அத்தகையவர் மீது தொடர்ந்த குற்ற வழக்கை நீதிமன்றத்தின் இசைவுடன் தீர்ப்பு கூறப்படுவதற்கு முன் எந்த வேளையிலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம், அவ்வாறு திரும்ப பெற்றுக் கொண்டதின் பேரில் –

அது குற்றச்சாட்டொன்று வனையப்பட்டிருப்பதற்கு முன்பு செய்யப்படுமானால் எதிரி

அத்தகைய குற்றம் அல்லது குற்றங்களைப் பொறுத்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அது, குற்றச்சாட்டொன்று வனையப்பட்டிருப்பதற்கு முன்பு செய்யப்படுமானால் அல்லது இந்தச் சட்டத்தின்படி குற்றச்சாட்டு எதுவும் தேவைப்படாத போது அத்தகைய குற்றம் அல்லது குற்றங்களைப் பொறுத்து விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

இருப்பினும், அத்தகைய குற்றமானது –

(i)ஒன்றியத்தின் நிர்வாகத்துறை அதிகாரம் அளாவுகிற ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட சட்டம் எதற்கும் விரோதமானதாக இருந்தவிடத்து, அல்லது,

(ii) 1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல்துறைப் பணியாளர் தொகுதிச் சட்டத்தின்படி (The Delhi Special Police Establishment Act – 1946) டெல்லி சிறப்புக் காவல்துறைப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்தவர்களால் புலனாய்வு செய்யப்பட்டிருந்தவிடத்து அல்லது

(iii) மைய அரசுக்குச் சொந்தமான சொத்தை கையாடல் அல்லது அழித்தல் அல்லது அதற்கு இழைக்கப்பட்ட சேதம் அதில் உட்பட்டிருந்தவிடத்து, அல்லது

(iv) மைய அரசின் ஊழியத்திலுள்ள ஒருவர் தம் அலுவல் முறைக் கடமையை ஆற்றிச் செயற்படும் போதோ செயற்படுவதாகப் புலப்படும்போதோ, அவரால் செய்யப்பட்டவிடத்தும் அவ்வழக்கின் பொறுப்பினைக் கொண்டுள்ள அரசு வழக்குரைஞரை மத்திய அரசு நியமனம் செய்திராவிடத்தும், அவர் அவ்வாறு செய்வதற்கு மத்திய அரசால் தாம் அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி, தொடர்ந்த குற்ற வழக்கை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு இசைவு தருமாறு நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளுதல் ஆகாது, மற்றும் நீதிமன்றம், இசைவு அளிப்பதற்கு முன் தொடர்ந்த குற்ற வழக்கைத் திரும்ப பெற்றுக்கொள்வதற்கு மைய அரசால் அளிக்கப்பட்ட அனுமதியைத் தன்முன் தாக்கல் செய்யுமாறு அரசு வழக்குரைஞரை ஏவ வேண்டும்.



WARRANT OF ARREST
BAILABLE
(Sections 70 and 71 Code of Criminal Procedure)

IN THE COURT OF THE Judicial Magistrate SATHYMANGALAM MAGISTRATE

OF

Calendar Case No. 231/2000 of 20

To AAAA Age: 35 S/o BBBBB

Whereas

of

standard charged

with the offence

You are hereby directed to arrest the said and to produce him before me. Herein fail not.

Judicial Magistrate, SATHYMANGALAM.

AAAA shall give bail himself in the sum of Rs. 5000/- with / two sureties each in the sum of Rs. to attend before me Judicial Magistrate SATHYMANGALAM. the day of 26/3/08 10a.m., and to continue go to attend until otherwise directed by me, he may be released.

Judicial Magistrate, SATHYMANGALAM.



WARRANT OF ARREST (NON-BAILABLE.)
(Section 70, Code of Criminal Procedure)

Judicial Magistrate, SATHYMANGALAM.

IN THE COURT OF THE MAGISTRATE

Calendar Case No. 276/07

To CCCC Age: 20 S/o DDDDD

Whereas

of

stands charged with the offence of

you are hereby directed to arrest the said CCCC and to produce him before me. Herein fail not.

Judicial Magistrate, SATHYMANGALAM.

V. சரிபார்த்தல் மற்றும் தணிக்கை அலுவல்

1. ரோந்து அனுப்புதல், தணிக்கை செய்தல் மற்றும் வரவு வைத்தல்

ரோந்து அலுவல் என்பது ரோந்துப் புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நாள், நேரம் வரை சுற்றிவந்தும், குற்றங்கள் சம்பந்தமாக தகவல் சேகரித்தும், குற்றக் குணத்தார்களைத் தணிக்கை செய்தும், பொதுமக்களைத் தொடர்பு கொண்டு தகவல்கள் சேகரித்தும், கிராமங்கள் மற்றும் நகரங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து தகவல்கள் சேகரித்தும் மேலும் ரோந்துப் புத்தகத்தில் குறிக்கப் பட்டிருக்கும் அலுவல்களைச் செய்து வருவதே ரோந்துப் பணி ஆகும்.

ரோந்துப் பணி நான்கு வகைப்படும்

அவையாவன

i. பகல் ரோந்து (Day Beat) 08.00 மணி முதல் 20.00 வரை
ii. இரவு ரோந்து (Night Beat) 18.00 மணி முதல் 06.00 வரை
iii. குற்ற ரோந்து (Crime Beat) 22.00 மணி முதல் 05. 00 வரை
iv. போக்கிரி ரோந்து (Rowdy Beat) 08.00 மணி முதல் 22.00 வரை
v. ரோந்துப் பணி செல்லும் காவலர்கள் ரோந்துப் புத்தகத்தை நிலையப் பொறுப்பு அலுவலர் (SHO) இடமிருந்து பெற்றுச் செல்லவேண்டும். அச்சடிக்கப்பட்ட ரோந்துப் புத்தகம் (Printed Beat Book) 1 முதல் 16 பக்கங்களைக் கொண்டும் ஆறு விதமான பணித் தலைப்புகளைக் கொண்டு இருக்கும்.

அவையாவன

- கெட்ட நடவடிக்கையாளரின் முந்தைய ஆஜரின்மை (Absent) பற்றிய விசாரணைக் குறிப்பு
- குற்றத் தடுப்புக்கான நடவடிக்கைகள்

SI_GUIDE.indb 199 1/6/2009 8:51:39 AM

- தகவல் சேகரிப்பு
- நிலைய அன்றாட அலுவல் சம்பந்தமாக
- பொதுமக்கள் காவலர் தொடர்பு
- ரோந்துத் தணிக்கை

ரோந்துப் பணிப்புத்தகம் நிரப்புதல்

- ரோந்துப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் பகல் ரோந்தா, இரவு ரோந்தா என்றும், தேதியும், ரோந்துப் புத்தகத்தின் வரிசை எண்ணும் (Service No.) நிரப்பப்பட வேண்டும்.
- இரண்டாம் பக்கத்தில் இருக்கும் காவலர் பொதுமக்கள் தொடர்ச்சியைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- மூன்றாம் பக்கத்தில் காவல் நிலையத்தின் பெயர், ரோந்து அலுவல் செல்லும் காவலர்கள் பெயர், எண், ரோந்து எண் (Beat No: I, II, III, IV) இவைகளில் காவலர்கள் எந்த ரோந்து செல்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுதல் வரிசை எண் இவைகளை இடது பக்கத்திலும், ரோந்து அனுப்பிய தேதியும் நேரமும் பொது நாட்குறிப்பில் எழுதப்பட்ட பக்க எண்ணுடனும், ரோந்து திரும்பி வர வேண்டிய தேதியும் நேரமும் வலது பக்கத்தில் நிரப்பப்பட்டு, அதன்கீழ் ரோந்தை அனுப்பியவர் கையொப்பமிட வேண்டும்.
- நான்காம் பக்கத்தில் காவலர்கள் ரோந்து செல்ல வேண்டிய
  i. வரிசை எண்
  ii. ரோந்து அலுவல் செய்யும் இடம்
  iii. நேரம்
  iv. தணிக்கை செய்யப்பட வேண்டிய கெட்ட நடத்தைக்காரர்களின் பெயர்கள் ஆகியவை நிரப்பப்பட வேண்டும்
  5, 6, 7 ஆகிய காலங்கள் ரோந்து காவலர்களால் எழுதப்பட வேண்டியவை.
- ஐந்தாம் பக்கத்தில், கெட்ட நடத்தைக்காரர்களின் (Bad Characters) முந்தைய ஆஜரின்மை (Absent) பற்றிய விசாரணைக் குறிப்பு உள்ளது.

அதில்

i. வரிசை எண்
ii. ஆஜரின்மை நபரின் பெயர் / இடம்
iii. ஆஜரின்மை நாள் ஆகியவைகள் நிரப்பப்பட வேண்டும்
iv. விசாரணை முடிவினை ரோந்து சென்ற காவலர்களால் எழுதப்பட வேண்டும்.
v. ஆறாம் பக்கத்தில் குற்றத் தடுப்புக்கான நடவடிக்கைகள் உள்ளது.

அதில்

i. வரிசை எண்
ii. சமூக விரோதிகளின் வகைகள்
iii. பெயரும் முகவரியும்
iv. இடமும் நேரமும் ஆகியவைகள் நிரப்பப்பட வேண்டும்

v. சமூக விரோதிகளைக் கண்டதும் எடுத்த நடவடிக்கைகள், சட்டப்பிரிவு ஆகியவை ரோந்துக் காவலர்களால் எழுதப்பட வேண்டும்.

- ஏழாம் பக்கத்தில் அந்நிய சந்தேக நபர்கள், சிறு குற்றங்கள் புரிவோர் தொடர்பான விபரங்கள் ரோந்துக் காவலர்களால் எழுதப்பட வேண்டும்.
- எட்டாம் பக்கத்தில் தகவல் சேகரிப்பு என்ற தலைப்பின்கீழ்

1. வரிசை எண்
2. எந்த வகைக் குற்றங்களைப் பற்றி தகவல் சேகரிக்கப்பட வேண்டும் என்பதில் புலன் விசாரணையில் உள்ள (UI) முதல் தகவல் அறிக்கை (FIR) வழக்குகளில்எதிரி, சொத்துக்கள் பற்றியும், மதுவிலக்குக் குற்றங்கள் புரிவோர் பற்றியும் நிரப்பப்பட வேண்டும்.
3. குற்ற எண் / சட்டப் பிரிவு / எதிரி/ சந்தித்த நபர் பெயர் விபரங்கள் ஆகியவை நிரப்பப்பட வேண்டும்.
4. விசாரணை இடமும், நேரமும், விசாரணையின் முடிவும் ரோந்துக் காவலர்களால் எழுதப்பட வேண்டும்.

- ஒன்பதாம் பக்கத்தில் ரோந்து அறிக்கைத் தலைப்புகளில் வராத அலுவல் பற்றி ரோந்துக் காவலர்களுக்குப் பணிகள் கொடுக்கப்பட்டால் அதன் விபரங்களை இடது பக்கத்தில் நிரப்பப்பட வேண்டும். வலது பக்கத்தில் ரோந்துக் காவலர்கள் தங்களது ரோந்துப் பணிபற்றி எழுதப்பட வேண்டும்.
- பத்தாம் பக்கத்தில், ஒன்பதாம் பக்கத் தொடர்ச்சியினை நிரப்புதல் வேண்டும்.
- பதினொன்றாம் பக்கத்தில் நிலைய அன்றாட அலுவல்கள் சம்பந்தமாக நிரப்பப்பட வேண்டும்.

அதில்

1. வரிசை எண்
2. கடமை வகைகளில்
   அ) அழைப்பாணை/பிடியாணை நிறைவேற்றுதல்
   ஆ) வாதி / பிரதி வாதிகளை விசாரணைக்கு வர முச்சலிக்கா வாங்குதல்
   இ) சட்டம் ஒழுங்கு அலுவலில்
      (1) பாதுகாப்பு
      (2) வேலை நிறுத்தம்
      (3) கலவரம்
      (4) விழாக்கள் ஆகியவைகளில் செய்யவேண்டிய பணிகள் குறித்து நிரப்பப் பட வேண்டும்
3. குறிப்பாக எது சம்பந்தமாக எந்தச் சூழ்நிலையில் என்ற விபரங்கள் நிரப்பப்பட வேண்டும்.
4. இடம், நேரம், பணியின் தன்மை ஆகியவை ரோந்துக் காவலர்களால் எழுதப்பட வேண்டும்.

- பன்னிரண்டாம் பக்கத்தில் நிலைய அன்றாட அலுவல் சம்பந்தமான தொடர்ச்சி உள்ளது. அதில் சூதாட்டக் குற்றம் புரிவோர் / நடத்துவோர் பற்றிய விபரங்கள் சேகரித்துவர நிரப்பப்பட வேண்டும்.
- 13. பதின்மூன்றாம் பக்கத்தில் ரோந்து அனுப்பும் அலுவலர் நிரப்ப வேண்டியதில்லை. அதில் பொதுமக்கள் காவலர் தொடர்புபற்றி ரோந்து சென்ற காவலர்கள் எழுத வேண்டும்.

- 14. பதினான்காம் பக்கத்தில், பதின்மூன்றாம் பக்க தொடர்ச்சி இருப்பின் அதனை எழுத வேண்டும்.
- 15. பதினைந்தாம் பக்கத்தில் ரோந்து அனுப்பும் அலுவலர் நிரப்ப வேண்டாம். அதில் ரோந்து சென்ற காவலர்கள் அலுவல் நேரத் தொகுப்பு கணனிப் படிவத்தை (Computer Form) எழுதி கையொப்பமிட வேண்டும்.
- 16. பதினாறாம் பக்கம் ரோந்துத் தணிக்கைப் படிவமாகும். அந்தப் படிவம் ரோந்துத் தணிக்கை அலுவலர்களின் உபயோகத்திற்குரியதாகும்.

ரோந்து அனுப்பும் முறை (Beat Marching)

ரோந்து அனுப்பும் நிலைய அலுவலர், பகல் ரோந்தாக இருப்பின் ஒரு காவலர் / தலைமைக் காவலரையும், இரவு ரோந்தாக இருப்பின் இரண்டு காவலர்கள் / தலைமைக் காவலர்களுக்குக் குறையாத அளவில் அனுப்பவேண்டும். தேவைப்படின் துப்பாக்கி, தோட்டாக்களைக் கொடுத்தனுப்ப வேண்டும்.

ரோந்து அனுப்பும்போது செய்யக்கூடியவை

- ரோந்துப் புத்தகத்தில் இருக்கும் மேலேகண்ட 16 பக்கங்களையும் தவறாது முழுமையாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும்.
- ரோந்து அனுப்பிய விபரத்தை பொது நாட்குறிப்பில் எழுதி, பொது நாட்குறிப்பு தொகுதி (Volume) எண், நாள், நேரம் ஆகியவைகளைத் தவறாது ரோந்துப் புத்தகத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- பகல் ரோந்தா இரவு ரோந்தா என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.
- தணிக்கை செய்யப்பட வேண்டிய கெட்ட நடத்தைக்காரர்கள் (BCs) ரோந்து செல்லும் பகுதியில் இருந்தால் அவர்களைத் தணிக்கை செய்யும் பொருட்டு பெயர் விலாசங்களை சிவப்பு மையினால் எழுதி அனுப்பிட வேண்டும்.
- துவக்கத்தில் இருக்கும் பிடிக்கட்டளை (Warrant) முதல் தகவல் அறிக்கை (FIR) வழக்குகளில் கைது செய்யப்பட வேண்டிய எதிரிகள் ஆகியவைகளைக் கண்டுபிடித்துவர உரிய பக்கத்தில் நிரப்பி அனுப்பவேண்டும்.
- ரோந்து அனுப்பும் இடங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு நிரப்பி ரோந்து அனுப்ப வேண்டும்.
- ரோந்து செல்லும் காவலர்களிடம் ரோந்துப் புத்தகத்துடன் காவலர் நோட்டுப் புத்தகம், கடவுச்சீட்டு (Passport) ஆகியவைகளையும் சேர்த்துக் கொடுத்தனுப்ப வேண்டும்.
- குற்றங்கள் அடிக்கடி நடைபெறும் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ரோந்து அனுப்ப வேண்டும். குறிப்பாக நகைக்கடைகள், நகை அடமானக் கடைகள், பெரிய துணிக் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், முக்கிய கடை வீதிகள், வங்கிகள், செல்போன் கடைகள், பெட்ரோல் நிலையங்கள், தானியங்கி பணம் எடுக்கும் நிலையங்கள் (ATM Centres), தனித்தனியே அமைந்துள்ள குடியிருப்புகள் உள்ள பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியே ரோந்து இருக்க வேண்டும். அதே சமயம் குறிப்பிட்ட நாட்களுக்குள் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் ரோந்து அனுப்பப்படல் வேண்டும்.
- பூட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பற்றிய காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்

- பட்டிருந்தால் அப்பகுதி ரோந்துக் காவலர்களுக்கு அவ்வீட்டை உன்னிப்பாகக் (Close watch) கவனிக்கும் பொருட்டு ரோந்துப் புத்தகத்தில் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- நகர்ப்புறங்களில் ரோந்து அனுப்பும்போது வார்டு வாரியாகவும், தெருக்கள் வாரியாகவும் ரோந்து அனுப்பப்பட வேண்டும்.

செய்யக்கூடாதவை

- ரோந்துப் புத்தகத்தைச் சரிவரப் படிக்காமல் அரைகுறையாக நிரப்பி ரோந்து அனுப்புதல்.
- பொது நாட்குறிப்பில் பதியப்படாமல் ரோந்து அனுப்புதல்.
- ரோந்து அனுப்பும் இடங்களை குழப்பம் அளிக்கும் வகையில் குறித்து அனுப்புதல்.

ரோந்துத் தணிக்கை (Beat Checking)

பகல் ரோந்தோ இரவு ரோந்தோ சென்ற காவலர்கள் ரோந்துப் புத்தகத்தில் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அறிவுரைகளின்படி சரியாக ரோந்துப் பணி செய்கிறார்களா என்பதைச் சோதனை செய்வதே ரோந்துத் தணிக்கை ஆகும்.

ரோந்து தணிக்கையின்போது செய்யக்கூடியவை

- ரோந்துக் காவலர்களைத் தணிக்கை செய்யும்போது ரோந்துப் புத்தகத்தில் நிரப்பப்பட்டுள்ள இடம் மற்றும் நேரத்தில் சரியாக பணி செய்கிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- அவர்கள் ரோந்துப் புத்தகத்தில் பக்கம் எண் 4ல் நிரப்பப்பட்டுள்ள அறிவுரைகளைச் சரியாக நிறைவேற்றியுள்ளார்களா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.
- இரவு ரோந்தில் கெட்ட நடத்தைக்காரர்கள் வீட்டை ரோந்துக் காவலர்கள் தெரிந்திருக்கிறார்களா என்பதைச் சேர்த்து அறிய வேண்டும்.
- ரோந்துக் காவலர்கள் ரோந்துப் பணிப்பகுதியில் முக்கிய இடத்தில் இருக்கும் பட்டாப் புத்தகத்தில் கையெழுத்திட்டு பட்டா புத்தக எண், வரிசை எண் ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்களா என்று ரோந்துப் புத்தகத்தையும் பட்டாப் புத்தகத்தையும் சரி பார்த்திடல் வேண்டும்.
- மாதிரிக் கையொப்பம் அந்தப் பகுதியில் உள்ள முக்கிய நபர்களிடம் பெறப்பட்டுள்ளதா என்பதை ரோந்துப் புத்தகத்தில் பார்வையிட வேண்டும்.
- ரோந்துக் காவலர்கள் கையொப்பத்திற்குக் கீழ் தணிக்கை செய்யும் அலுவலர் பட்டாப் புத்தகத்தில் கையொப்பமிடல் வேண்டும்.
- ரோந்துப் புத்தகத்தில் பக்கம் எண் 16ல் ரோந்துத் தணிக்கை என்ற தலைப்பில் உள்ள அட்டவணையில் உள்ள காலத்திற்கேற்ப தணிக்கை செய்யும் அலுவலரின் பெயர், பதவி, தணிக்கை செய்த இடம், நேரம், தணிக்கைக் குறிப்பில் தணிக்கை செய்யப்பட்டது காவலர்கள் ஆஜரில், விழிப்புடன் உள்ளனர்'' (Checked Found present and alert) அல்லது "தணிக்கை செய்யப்பட்டது ஆஜரில் இல்லை'' (Checked found absent) போன்ற விபரங்களை எழுதி கடைசிக் கட்டத்தில் (Column) முழுக் கையொப்பமிடல் வேண்டும்.

- அதே போன்று ரோந்துக் காவலர்களின் நோட்டுப் புத்தகத்திலும் தணிக்கை விபரங்களை நாள், நேரமிட்டு தனித்தனியே எழுதி கையொப்பமிடல் வேண்டும்.
- தணிக்கை அலுவலர் தணிக்கை செய்த விபரத்தை (காவலர்கள் பெயர்/ எண்/இடம்/நேரம்/ தணிக்கை/செய்த விபரம்) தனியாகக் குறித்துக் கொள்ள வேண்டும்.
- ரோந்துக் காவலர்களை இரவில் குடியிருப்புப் பகுதிகளில் ரோந்துப் பணி செய்யும்போது விசில் ஊதி ரோந்து செய்யும்படி அறிவுறுத்த வேண்டும்.

செய்யக்கூடாதவை

- ரோந்துக் காவலர்களை கடவுச்சீட்டு, நோட்டுப் புத்தகம், குறுந்தடி (Lathi), வாக்கி டாக்கி (Walkie talkie) இரவு ரோந்தாக இருப்பின் டார்ச் லைட் தேவைப்படும் பட்சத்தில் துப்பாக்கி தோட்டாக்கள் ஆகியவை இல்லாமல் ரோந்துப் பணிக்குச் செல்ல அனுமதித்தல்.
- குற்ற ரோந்து (Crime Beat) தவிர ஏனைய ரோந்துப் பணிக் காவலர்கள் அரைகுறைச் சீருடையில் (without proper uniform) செல்ல அனுமதித்தல்.

ரோந்து தணிக்கையின்போது ஆஜரில் இல்லாத காவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முறை:

- ரோந்து பணிக்குச் செல்லும் காவலர்கள் ஆஜரில் இல்லை என்றால் உடனே காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தணிக்கை நேரத்தைக் குறிப்பிட்டு தகவல் கொடுத்து அதைக் காவல் கட்டுப்பாட்டு அறை நாட்குறிப்பில் பதிவு செய்யச் சொல்ல வேண்டும்.
- ரோந்து அலுவலின் போது ஒருவர் பணியிலிருந்தும், மற்றவர் பணியில் இல்லாமலிருந்தால் பீட் புத்தக தணிக்கைப் பகுதியில் தேதி, நேரம், இடம், ஆஜரில் இருந்த காவலர்கள், ஆஜரில் இல்லாத காவலர்கள் விபரங்களைக் குறிப்பிட்டு கையொப்பம் செய்ய வேண்டும். அலுவலில் இருக்கும் காவலரிடம் தனி அறிக்கை பெற வேண்டும். அவரின் நோட் புத்தகத்திலும் ஆஜரின்மையைக் குறிப்பிட்டுக் கையொப்பம் செய்ய வேண்டும்.
- ரோந்து இடத்திலுள்ள பட்டாப் புத்தகத்தில் கண்டிப்பாக கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
- தணிக்கையின்போது தணிக்கை நேரத்தில் பணிக் காவலர்கள் ஆஜரில் இருந்தார்களா? இல்லையா? என்ற விபரம் குறிப்பிட்டு, நாள், நேரம் ஆகியவைகளை தெளிவாக உதவி ஆய்வாளரின் நோட்டு புத்தகத்தில் எழுத வேண்டும்.
- ஆஜரில் இல்லாத காவலர்களுக்குப் பதிலாக வேறு காவலர்கள் பணிக்கு நியமிக்க வேண்டும்.
- ஆஜரில் இல்லாத விபரம் பற்றி பட்டா புத்தகத்தாரரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.
- அனைத்து விபரங்களையும் பொது நாட்குறிப்பிலும் பதிவு செய்ய வேண்டும்.
- மேலும் விபரங்களைக் குறிப்பிட்டு தணிக்கையின்போது ஆஜரில் இல்லாத காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க தனி அறிக்கை தயார்செய்து பணியில் ஆஜரில் இருந்த காவலரிடம் வாங்கிய தனி அறிக்கையுடன் சேர்த்து ஆய்வாளருக்குக் கொடுக்க வேண்டும்.

ரோந்து வரவு வைத்தல்

பகல் அல்லது இரவு ரோந்து சென்ற காவலர்கள் ரோந்துப் பணி முடித்து ரோந்துப் பணிப்புத்தகம், நோட்டுப் புத்தகம், கடவுச்சீட்டு ஆகியவைகளுடன் நிலையம் வந்து அறிக்கை செய்பவர்களை சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் உரிய பதிவுகள் செய்து ரோந்துக்காவலர்களை ரோந்து பணியிலிருந்து விடுவித்தலே ரோந்து வரவு வைத்தல் ஆகும்.

ரோந்து வரவு வைக்கும்போது செய்ய வேண்டியவை

- ரோந்துப் பணி முடித்து நிலையம் திரும்பும் காவலர்களிடமிருந்து ரோந்துப் பணிப் புத்தகம், நோட்டுப் புத்தகம், கடவுச்சீட்டு ஆகியவைகளுடன் நிலையம் வந்து அறிக்கை செய்பவர்களை சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் உரிய பதிவுகள் செய்து ரோந்துக்காவலர்களை ரோந்துப் பணியிலிருந்து விடுவிக்க வேண்டும்.
- ரோந்துப் புத்தகம் பக்கம் எண் 4ல் 7வது காலத்தில் (Column) பெறப்பட்ட மாதிரிக் கையொப்பத்தை (Sample Signature or S.S) நிலைய மாதிரிக் கையொப்பப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பக்கம் எண், வரிசை எண் சரியாகப் போடப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.
- ரோந்துப் புத்தகம் பக்கம் எண் 4ல் 7வது காலத்தில் (Column) மாதிரிக் கையொப்பம் பெறப்படாத நிலையில் வேறு முக்கிய நபர்களிடம் கையெழுத்துப் பெறப்பட்டிருந்தால் ஆஜர் என்று எழுதப் பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.
- குறிப்பாக மதுவிலக்குக் குற்றங்கள் பற்றியோ சூதாட்டக் குற்றங்கள் பற்றியோ தகவல்கள் ஏதும் ரோந்துக் காவலர்களால் ரோந்துப் பணிப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.
- அவ்வாறான குற்றங்கள் நடைபெறுவதாக ரோந்துப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் உடனடியாக வேட்டை (Raid) செய்து அதை தடுக்கும் நோக்கில் பார்வையிட வேண்டும்.
- முன்கூட்டியே தகவல்கள் (Advance Information) ஏதேனும் ரோந்துப் புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறதா என்பதைப் பார்வையிட வேண்டும்.
- உயர் அதிகாரிகள் யாரேனும் ரோந்தைத் தணிக்கை செய்துள்ளார்களா என்பதைப் பார்வை யிட்டு, குறிப்புகள் ஏதும் இருந்தால் அதனை நிறைறேற்ற வேண்டும்.
- ரோந்துக் காவலர்கள் ரோந்துப் புத்தகத்தின் 15வது பக்கத்தில் கையொப்பம் செய்துள்ளார்களா என்பதைப் பார்க்க வேண்டும்.
- ரோந்துக் காவலர்கள் பணி முடித்துத் திரும்பும்போது அவர்கள் பணிக்குக் கொண்டுசென்ற வாக்கி டாக்கி, துப்பாக்கி, தோட்டாக்களைச் சரிபார்த்து பாரா மாற்றுப் பதிவேட்டில் எழுதி திரும்பப் பெற வேண்டும்.
- இவை அனைத்தையும் பார்வையிட்டபின் நிலையப் பொது நாட்குறிப்பில் ரோந்துப் புத்தகத்தில் கண்ட விபரத்தை முழுமையாகக் குறிப்பிட்டு எழுதி பொது நாட்குறிப்பு தொகுதி எண், பக்க எண் ஆகியவைகளை எழுதி வரவு வைக்கும் அலுவலர் ரோந்துப் புத்தகம் பக்கம் 3ல் வலது பக்கக் கடைசியில் கையொப்பமிட வேண்டும்.
- தலைமைக் காவலர் ரோந்து சென்று ரோந்துப் புத்தகத்தில் கெட்ட நடத்தைக்காரர்களைத் தணிக்கை செய்திருந்தால் அதன் விபரத்தைக் கெட்ட நடத்தைக்காரர்கள் பதிவேட்டில் (K.D

Check Register) நாள், நேரம், தணிக்கை, செய்தவர் விபரம், கெட்ட நடத்தைக்காரர்களின் ஆஜர் நிலை ஆகியவைகளைக் குறிப்பிட வேண்டும்.

- தலைமைக் காவலர்கள் ரோந்து சென்ற கிராமங்களை நிலைய கிராமப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும்.

செய்யக்கூடாதவை

- ரோந்துப் புத்தகம் அரைகுறையாக எழுதப்பட்ட நிலையில் வரவு வைத்தல்.
- ரோந்துப் புத்தகத்தில் ரோந்து சென்ற காவலர்கள் கையொப்பமில்லாமல் வரவு வைத்தல்.
- ரோந்தை வரவு வைக்கும் அலுவலர் ரோந்துப் புத்தகத்தில் பொது நாட்குறிப்பு தொகுதி எண், பக்க எண் ஆகியவைகளைக் குறிப்பிடாமல் இருத்தல்.
- ரோந்து குறிப்பிட்ட இடத்தில் காவலர்களில் ஒருவர் ஆஜரில் இருந்து, மற்றொருவர் ஆஜரில் இல்லையென்றால் இருவரையும் ஆஜர் எனக் காட்டுதல்.
- ரோந்துப் பணியில் காவலர் ஆஜரில் இல்லை எனில் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க தவறுதல்.
- காவலர்கள் குடிபோதையில் ரோந்து பணி செய்ய அனுமதித்தல்.

தமிழ்நாடு அரசு காவல் துறை

அன்றாட ரோந்து அலுவல் அறிக்கை.

ரோந்து எண்

~~பகல்~~இரவு ரோந்து தேதி 05.03.2008 சர்வீஸ் எண் 119/2008.

காவலர் பொதுமக்கள் தொடர்பு

கீழ்கண்ட இடங்களில் வசிப்பவர் / உடைமையாளர் / பணிபுரிபவர் / வருவோர் போவோர் மற்றவர்கள் தொடர்பு கொள்ளலாம். இது சிந்தனையைத் தூண்ட தயாரிக்கப்பட்டது.

1. வசிக்கும் இடங்கள்.
   - அ. வீடு
   - ஆ. குடிசை
   - இ. பங்களா
   - ஈ. உணவுவிடுதி (ஹோட்டல்)
   - உ. சத்திரம்
2. கடைகள்
   - அ. பெட்டிக்கடை
   - ஆ. கடை
   - இ. சந்தை
   - ஈ. சிறப்பு அங்காடி
   - உ. கம்பெனி
   - ஊ. தொழிற்சாலை
   - எ. நடைப்பாதைக் கடை
   - ஏ. அரங்கங்கள் (சினிமா, நாடகம், சங்கீதம்) போன்றவைகள்
3. கல்வி
   - அ. பள்ளி
   - ஆ. குழந்தைகள் வளர்ப்பு இல்லம்
   - இ. கல்லூரி
   - ஈ. பல்கலைக்கழகம்
4. மருத்துவமனைகள்
   - அ. சர்க்கார் மருத்துவமனை
   - ஆ. சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை
   - இ. பஞ்சாயத்து / நகர/மாநகர மருத்துவமனை
   - ஈ. தனியார் மருத்துவமனை

காவலர் பொதுமக்கள் தொடர்பு–தொடர்ச்சி

5. அறநிலை வழிப்பாட்டு இடங்கள்
   அ) இந்து கோவில்
   ஆ) கிருஸ்துவ கோவில்
   இ) மசூதி

6. போக்குவரத்து
   அ) பேருந்து புறப்படும் இடம்
   ஆ) பேருந்து நிற்கும் இடம்
   இ) புகைவண்டி நிலையம்
   ஈ) வாகனங்கள் நிற்கும் இடம்
      அ) சைக்கிள்
      ஆ) மிதிவண்டி ரிக்ஷா
      இ) குதிரை / மாட்டு வண்டி
      ஈ) ஆட்டோ ரிக்ஷா
      உ) வாடகை கார்
      ஊ) தனியாரால் சாலையில் நிறுத்தி வைக்கப்படும் கார்

7. கிராமங்களில்
   1) கிராம முன்சீப்
   2) கணக்குப்பிள்ளை
   3) தலையாரி
   4) கிராம ஊஷார் கமிட்டியினர்
   5) மதுவிலக்கு கமிட்டியினர்
   6) கிராம நிர்வாக இதர அதிகாரிகள்

8. நெடுஞ்சாலை வகைகள்
   1) நெடுஞ்சாலை
   2) சாலை
   3) தெரு
   4) சந்து
   5) பூங்கா வகையரா

9. உதவி செய்யத்தக்க நபர்கள்
   1) குருடு
   2) நொண்டி
   3) நோயுற்றோர்
   4) வயதானோர்
   5) குழந்தைகள்
   6) நகரத்தில் கிராமத்தினர்
   7) கிராமங்களில் கிராமிய மக்கள் ஆகியோர்

அன்றாட ரோந்து அலுவல் அறிக்கை
பகல் / இரவு

காவல் நிலையத்தின் பெயர்
சேலம், நகர, காவல் நிலையம்

ரோந்து அலுவலில் சென்ற காவலர்கள் பெயரும் எண்ணும்
1. தலைமை காவலர் 0000 திரு AAAA
2. மு. நி. கா 0000 திரு

ரோந்து எண் No IV

சர்வீஸ் எண் 119/2008

ரோந்து அனுப்பிய தேதியும் நேரமும் (பொதுநாட்குறிப்பு பக்க எண்ணுடன்) 05.03.08 / 18.00 Hrs
(G.D. Vol - I / P - 244)

ரோந்து திரும்ப வரவான தேதியும் நேரமும் (ரோந்து நாட்குறிப்பு பக்க எண்ணுடன்) 06.03.08 / 0530 Hrs
(G.D. Vol - 1 / P. 245)

ரோந்தை அனுப்பியவர் (கொட்டை எழுத்துகளில்) (இரா) SISI
காவல் உதவி ஆய்வாளர்
சேலம், நகர காவல் நிலை

ரோந்தை வரவு வைத்தவர். (கொட்டை எழுத்துகளில்) (இரா) SISI
காவல் உதவி ஆய்வாளர்
சேலம், நகர காவல் நிலை

ரோந்து சென்ற இடங்களும், பழங்குற்றவாளிகள் தணிக்கையும்						
	ரோந்து அலுவல் இடம்	நேரம்				
வரிசை எண்	சாலை, தெரு, சந்து, காலனி, நகர், கிராமம் இவைகளின் பெயர்.	மணி முதல் வரை	தணிக்கை செய்யப்பட வேண்டிய கெட்ட நடவடிக்கையாளர்களின் பெயர்கள்.	தணிக்கை முடிவும் நேரமும்	பட்டா புத்தக பக்க எண், வரிசை எண், கையெழுத்திட்ட நேரம்	மாதிரி கையெழுத்து பெற்ற நேரத்துடன்
I	பெரிய கடை வீதி	1830 To 2200			13/121, 122 18.30 hrs	m. xxxx SS. Page 11/1
II	ஜிலானி புரா வீதி	2230 To 2400	Suspect xxxx தெரு yyyy	P 23.00	1/34 / 22.30 hrs	G. yyyy SS. Page 35/1
III	பழைய பேருந்து நிலையம்	00.30 To 0230	D.C zzzz c/o AAAA	P 01.00	2/13, 14 / 00.30 hrs	ZZZZ SS Page No. 40/1
IV	நகைக்கடை ஏமயின் பஜார் வீதி	0300 To 0530			10/89, 90 03.00 hrs	எஎஎஎ SS. Page 39/1

1. (அ) கெட்ட நடவடிக்கையாளரின் முந்தைய " ஆப்செண்ட்" பற்றிய விசாரணைக் குறிப்பு.

வரிசை எண்	ஆப்செண்ட் நபர் பெயர் / இடம் (நிலையத்தில் எழுத.)	ஆப்செண்ட் தேதி.	விசாரணை முடிவு (காவலர் எழுத)
1.	K.D. xxxx தெரு yyy மேலம் நகரம்	14.02.2007	மேற்படி நபர்கள் பற்றி விசாரித்ததில் அவர்கள் போன் அடிக்கும் வருங்காலமும் தெரியவில்லை.
2.	Suspect: zzz தெரு AAA பஜார் வீதி	08.11.2007	

குற்றத் தடுப்பிற்கான நடவடிக்கைகள்

வரிசை எண்	சமூக விரோதிகளின் வகைகள்	பெயரும் முகவரியும்	இடமும் நேரமும்	கண்டதும் எடுத்த நடவடிக்கைகளும்
4.	பழங்குற்றவாளிகள் (நிலையத்திலிருந்து குறித்து அனுப்பவும்)	xxxxx த/பெ. yyyyy சேலம் நகரம் xxxxx		இருப்பிடம் – தொழில் – வருமானம் – குடும்பம் – நடத்தை –
5.	ரௌடிகள் (நிலையத்திலிருந்து குறித்து அனுப்பவும்)	த/பெ. aaaaa. சேலம் நகரம். அவர்கள் பற்றி விசாரித்து வரவும்.		இருப்பிடம் – தொழில் – வருமானம் –
6.	குற்றம் புரியும் சூழ்நிலையிலுள்ள இளம் பிள்ளைகள் (Juvenile)	விசாரித்து வரவும்.		குடும்பம் – நடத்தை –
	அந்நிய சந்தேக நபர்கள்	விசாரித்து வரவும்		ஐயா, மேற்கண்ட சந்தேக விரோதிகளின் நடவடிக்கைகள் பற்றி விசாரிக்க விசேஷம் ஏதுமில்லை. த.கா.000.
	சிறுகுற்றங்கள் புரிவோர் (petty offenders)	விசாரித்து வரவும்		

3. தகவல் சேகரிப்பு

வரிசை எண்	எந்த வகை குற்றங்களைப் பற்றி தகவல் சேகரிக்கப்பட்டது	குற்ற எண் / சட்டப்பிரிவு / எதிரி/ சந்தித்த நபர் பெயர் விபரங்கள் (நிலையத்தில் எழுத)	விசாரணை இடமும் நேரமும் விசாரணையின் முடிவும் (காவலர் எழுத)
	(எப்ஐஆர் வழக்குகளில் எதிரி, சொத்து வகையராக்கள் பற்றி)	① கு. எண்: 3/08 u/s. 457, 380 IPC ② கு. எண்: 17/08 u/s 379 IPC	ஐயா, மேற்படி வழக்குகளின் எதிரிகள் குற்றத்து கூலம் பெரியகடை வீதி YYYY என்பவரின் மகன் ZZZ வயது 35 என்பவரை விசாரித்ததில் வழக்கிற்கு உகந்ததான தகவல் ஏதுமில்லை. த.கா. 000.
	குறிப்பாக பதுவிலக்கு குற்றம் புரிவோர் பற்றி	விசாரித்து வரவும்	

(அ) ரோந்து அறிக்கை தலைப்புகளில் வராத அலுவல் பற்றி பணிகள் கொடுத்தால் எழுதவும்.

நிலையத்தில் ரோந்து அனுப்புபவர் எழுதும் பகுதி	ரோந்து காவலர்கள் பதிவு எழுதும் இடமும், நேரமும்
நீங்கள் உடன்புறப்பட்டு ரோந்து புத்தகத்தில் கண்ட கடைகளில் பட்டா புத்தகத்தில் கையொப்பம் செய்தும், மாதிரி கையொப்பம் (ஆ) பெற்றும், குற்றம் நடைபெறாமல் கண்காணித்தும் ரோந்து செய்தும், கெட்ட நடத்தை காரர்களை தணிக்கை செய்தும், அந்நிய சந்தேக நபர்களை கண்காணித்தும் 06.30 மணிக்கு நிலையம் வந்து அறிக்கை செய்யவும். நாம். xxxx காவல் உதவி ஆய்வாளர் கூலம், நகர் காவல் நிலையம்.	ரோந்து புத்தகத்தில் கண்டபடி உரிய கடைகளுக்கு சென்று பட்டா புத்தகத்தில் கையொப்பம் செய்தும், ஆ பெற்றும், கெட்ட நடத்தைகாரர்களை கண்காணித்தும் தணிக்கை செய்தும், அந்நிய சந்தேக நபர்கள் நடமாட்டம் பற்றி விசாரித்தும் நிலையம் வரப்பட்டது. த.கா. 000.

பக்கம் 9 ன் தொடர்ச்சி

நிலைய அன்றாட அலுவல்கள் சம்மந்தமாக

வரிசை எண்	கடமை வகைகள்	குறிப்பாக எது சம்மந்தமாக எந்தச் சூழ்நிலையில் (நிலையத்தில் எழுத)	இடமும் நேரமும் முடிவின் தன்மை (காவலர்கள் எழுதும் பகுதி)
1.	சம்மன் வாரண்ட் நிறைவேற்றுதல்	இ.எண்: 531/2007 u/s 294(b), 323 IPC வழக்கின் சம்மன் எண்: 0000	ஐயா, சம்மன் 0000 சார்பு நிறைவேற்றப்பட்டது.
2.	வாதி/பிரதிவாதிகளை விசாரணைக்கு வர முச்சலிக்கா வாங்குதல்		
3.	சட்ட அமைதி அலுவல் (வகைகள்) (அ) பந்தோபஸ்த்து (ஆ) வேலைநிறுத்தம் (இ) கலவரம் (ஈ) விழா வகையறா	விசாரித்தும், தேவைப்படின் பாதுகாப்பு அளித்தும் வரவும்.	வேலை நிறுத்தம் குறித்து விசாரித்தும், பாதுகாப்பளித்து கொடுத்தும், நிலையம் வரப்பட்டது.

4. நிலைய அன்றாட அலுவல்கள் சம்பந்தமாக – தொடர்ச்சி

4. 5.	குறிப்பாக சூதாட்டம் புரிவோர் / நடத்துவோர் பற்றி (நிலையத்திலும் எழுதலாம், காவலரும் விவரமாக எழுதலாம்	கண்காணிக்கப்பட்டு, தகவல் சேகரிக்கப்பட்டு வரவும்.	கீயா, விழிப்பு ஒன்றும் இல்லை. ரு.கா.000.

5. பொதுமக்கள் காவலர் தொடர்பு

வரிசை எண் (1)	எந்த வகை மக்களுடன் தொடர்பு (2)	பெயரும், முகவரியும் (3)	எதைப்பற்றி பேசப்பட்டது இடமும் நேரமும் (4)	சந்திப்பில் பேச்சை முதலில் துவக்கியது யார் (5)	தொடர்பினால் ஏற்பட்ட நல்ல பயன் (6)
01	விவசாயி	xxxx திரு yyy அம்மாபேட்டை சேலம்.	நீர், பயன்பாடு சுரைப் பற்றியும் விவசாயிகளின் பிரச்சினை தொடர்பாக கேட்டும்	காலம் (2) ல் கண்டவர்	பிரச்சினை நன்றாக அறியப்பட்டதாகவும் போதுமான நீர்வரத்து அறியப்பட்டதாகவும் தெரிகிறார்.
02	வியாபாரி	zzzzz திரு.aaa காந்தி நகர் தூரமங்கலம்	பஜாரில் அதிகம் சுற்றித் திரியும் நபர்கள் பற்றி வரியறைடவி 02.00 மணி	நிலையக் காவலர் 000	மடிக்கு வரைவு காரணமாக பணம் புழக்கம் குறைவு அதிகம் சுற்றித் திரியும் நபர்கள் நடவடிக்கை கட்டுப்பட்டுள்ளதாகவும் தெரிகிறார்.

ரு.கா.000.

5. பொதுமக்கள் காவலர் தொடர்பு – தொடர்ச்சி

வரிசை எண் (1)	எந்த வகை மக்களுடன் தொடர்பு (2)	பெயரும், முகவரியும் (3)	எதைப்பற்றி பேசப்பட்டது இடமும் நேரமும் (4)	சந்திப்பில் பேச்சை முதலில் துவக்கியது யார் (5)	தொடர்பினால் ஏற்பட்ட நல்ல பயன் (6)

காவலர்கள் கையொப்பம்

அலுவல் நேர தொகுப்பு

புதிய எஸ். எச். ஆர் தலைப்பில் உள்ள 21 முதல் 24 கட்டம் முடிய சம்பந்தப்பட்டவைகளில் செலவழிக்கப்பட்ட நேரம் எவ்வளவு என்பதை ரோந்து காவலரே எழுதுக.

21	02	11	03	05	18	05		12							மொத்தம்

எஸ். எச். ஆர் அலுவல் எண்ணை மேல் கட்டங்களில் எழுதி அதன் அடியில் செலவழித்த நேரத்தை தனித்தனியாக பிரிக்கவும்.

5. ரோந்து தணிக்கை

வரிசை எண் (1)	தணிக்கை செய்தவரின் பெயரும் பதவி நிலையும் (பெரிய எழுத்துகளில்) (2)	தணிக்கை செய்த இடமும், நேரமும் (3)	தணிக்கை குறிப்பு (4)	முழுக் கையொப்பம். (5)
1)	SISI நீலன் உதவி ஆய்வாளர் சேலம் நகர காவல் நிலையம்	நகைக்கடை பஜார் 06.03.08 03.30 Hrs	Checked Hr 0000 ✗ GrI 000 found Present	SI/B, PS.

2. கெட்டநடத்தைக்காரர்கள் தணிக்கை

தங்கள் காவல் நிலைய எல்லைக்குள் இருக்கும், கெட்ட நடத்தைக் காரர்களைத் தொடர்ந்து கண்காணித்தும், அவர்களின் செயல்களையும், நடவடிக்கைகளையும் கண்காணித்து, எவ்வித சட்ட ஒழுங்குப் பிரச்சனை இன்றியும், திருட்டுக் குற்றங்கள் நடவாமல் தடுப்பதே கெட்ட நடத்தைக்காரர்கள் தணிக்கை ஆகும்.

கீழ்க்கண்டவர்கள் கெட்ட நடத்தைக்காரர்கள் என வகைப் படுத்தப் பட்டுள்ளது.

1. ஊரறிந்த குற்றவாளி (Known Depredator)
2. கைச் சுவடிக் குற்றவாளி (Dossier Criminal)
3. சந்தேக நபர் (Suspect)
4. வழக்கமான குற்றவாளிகள் (Habitual Offenders) மற்றும் அறிவிக்கப்பட்ட குற்றவாளிகள். (Notified Offenders)
5. போக்கிரி (Rowdy)
6. குற்ற செய்முறைவிளக்கக் கூட குற்றவாளிகள் (MOB Crimnals)

1. ஊரறிந்த குற்றவாளி (Known Depredator)

இரண்டு கன்னக் களவு வழக்குகள் மற்றும் ஒரு களவு வழக்கில் தண்டனையடைந்தவர், இரண்டு களவு வழக்குகள் மற்றும் ஒரு ஜாமீன் வழக்கில் தண்டனையடைந்தவர் ஆகியோர் மீது நிலையப் பொறுப்பு அலுவலரால் சிபாரிசின் தன்னிச்சையாக பதிவேடு ஆரம்பிக்கப்பட்டு கண்காணிப்பிற்குள் வருபவர்கள் ஊரறிந்த குற்றவாளிகள் ஆவர்.

2. கைச்சுவடிக் குற்றவாளி (Dossier Criminal)

ஒரு உட்கோட்ட எல்லைக்கு அப்பால் சென்று குற்றம் செய்யும் குற்றவாளிக்கு காவல் கண்காணிப்பாளர் பதவி நிலைக்கு குறையாத காவல் அலுவலர்கள் உத்திரவின் பேரில் பதிவேடு ஆரம்பிக்கப்பட்டு கண் காணிப்பிற்குள் வருபவர்கள் கைச்சுவடிக் குற்றவாளிகள் ஆவர். மேற்படிப் பதிவேடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குற்ற ஆவணக் கூடத்தில் வரிசை எண் கொடுக்கப்பட்டு வருடம் ஒருமுறை நிலைய சரித்திரப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும்.

1. அரசியல் போக்கிரி

அரசியலில் அடிக்கடி சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், மறியல், ஜாதி / கட்சி உணர்வைத் தூண்டுபவர்களை காவல்துறை அலுவலர்கள் மிக உன்னிப்பாகக் கண்காணித்து அவர்களின் போக்கிரித் தனத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அம்மாதிரியான நபர்கள் மீது காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி நிலைக்கு குறையாத காவல் அலுவலர்களின் உத்தரவின் பேரில் சரித்திர ஏடு துவக்கப்பட்டு கண்காணிப்பிற்குள் வருபவர் அரசியல் போக்கிரி ஆவார்.

2. போக்கிரி

பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அடிக்கடி சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்துபவர்கள், பொது இடங்களில் பொதுமக்கள் அருவருக்கத்தக்க செயல்களில் ஈடுபடுவோர், பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளை மிரட்டுபவர்கள், ஜாமீன் வழக்குகளில் தண்டனை அடைந்தோர் 106, 107, 109, 110 குற்றவிசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 75 தமிழ்நாடு நகர காவல் சட்டம் (TNCP Act) மற்றும் காய வழக்குகளில் தண்டனை அடைந்தோர் ஆகியோர்கள் போக்கிரிகள் ஆவார்கள்.

3. மதுவிலக்குப் போக்கிரிகள்

காவல் நிலையச் சரக எல்லைக்குள் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை அடைந்தவர்கள் மதுவிலக்குப் போக்கிரிகள் ஆவர்.

மேற்கண்ட கெட்ட நடத்தைக்காரர்களுக்கு வரலாற்றுத் தாள் (History Sheet) துவக்கப்பட வேண்டும். காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மேற்கண்ட நபர்களின் செய்கைகள் குறித்து அறிவித்து வரலாற்றுத்தாள் ஆரம்பிக்க அனுமதி பெறவேண்டும்.

கெட்ட நடத்தைக்காரர்கள் வரலாற்றுத் தாளில் பெயருடன் கூடிய சுய விபரங்கள் (Bio Data) பதிவு செய்யவேண்டும். அவரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள், தண்டனைக் குறிப்புகள், தற்போதைய செயல்பாடு ஆகிய விபரக் குறிப்புகள் அடங்கியிருக்க வேண்டும்.

தணிக்கைக் குறிப்பின் அடிப்படையில் வரலாற்றுத் தாள்களை வருடந் தோறும் நீட்டிக்கவோ அல்லது முடிவுக்குக் கொண்டுவரவோ நிலையப் பொறுப்பு அலுவலரின் பரிந்துரையின் பேரில் காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் அனுமதி பெறவேண்டும்.

மேற்கண்ட நபர்களை கெட்ட நடத்தைக்காரர்கள் பதிவேட்டில் ரோந்து வாரியாக எழுதி தணிக்கை செய்யப்பட்டு வரவேண்டும்.

தணிக்கை செய்யும் முறை

- சந்தேக நபர்கள், அறிவிக்கப்பட்ட குற்றவாளிகள், ஊரறிந்த குற்றவாளிகள் ஆகியோர்களை இரவில் மட்டுமே தணிக்கை செய்ய வேண்டும்.
- ஒவ்வொருவரின் வசிப்பிடங்களையும் தனித்தனியே தெரிந்து வைத்துக் கொண்டு அவர்கள் அங்குதான் தங்கியிருக்கிறார்களா என்பதை நேரில் பார்த்து உறுதி செய்யவேண்டும்.
- இவர்களின் தணிக்கை விபரத்தைப் பதிவேட்டில் பதிவு செய்யும்போது ஆஜரில் இருந்தால் ஆஜரில் உள்ளார் (Present) என்றும், ஆஜரில் இல்லையானால் ஆஜரில் இல்லை (Absent) என்றும், தணிக்கை செய்தது யார் என்றும் தணிக்கை செய்த நேரத்தையும் குறிப்பிட வேண்டும்.
- வழக்கமான குற்றவாளிகளைத் தணிக்கை செய்யும் போது நேரடியாக வசிப்பிடம் சென்று ஆஜரில் உள்ளமை, அவரின் செயல்பாடுகள் குறித்து விசாரிக்கவேண்டும்.
- இவர்களை கும்மிருட்டு நேரங்களிலும், அமாவாசை காலங்களிலும், மற்றும் இரவு நேரங்களிலும் கண்டிப்பாகத் தணிக்கை செய்ய வேண்டும்.
- போக்கிரிகளை சூரிய உதயத்திற்குப் பின்பும் மறைவுக்குப் முன்பும் விசாரித்து ஆஜர்த் தன்மையை உறுதி செய்ய வேண்டும்.
- கிராம நிர்வாக அலுவலர்களிடம் வழக்கமான குற்றவாளிகளைப் பற்றி விசாரிக்கவேண்டும். வழக்கமான குற்றவாளி வெளியிடம் செல்லும்போது தகவல் தெரிவிக்கவேண்டும். ரோந்துக் காவலர்களும், நகரங்களில் போக்கிரி ரோந்து செல்லும் காவலர்களும் தணிக்கை செய்ய வேண்டும்.
- போக்கிரிகளை விசாரணை மூலம் மட்டுமே தணிக்கை செய்ய வேண்டும். அவர்களை நேரிடையாக தணிக்கை செய்யத் தேவையில்லை.
- போக்கிரிப் பதிவேட்டில் தணிக்கைக் குறிப்பு எழுதும் போது போக்கிரி ஆஜரில் இருந்தால் Enquired present (E.P.) என்றும், ஆஜரில் இல்லையென்றால் Enquired Absent (E.A.) என்றும் தணிக்கை செய்த அலுவலர் யார் என்றும், தணிக்கை செய்த நேரத்தையும் குறிப்பிட வேண்டும்.
- கெட்ட நடத்தைக்காரர்களைத் தணிக்கை செய்யும்போது ஆஜரில் இல்லை என்றால் அதனை சிவப்பு மையினால் எழுதவேண்டும்.
- கெட்ட நடத்தைக்காரர்களைக் கூர்ந்து கண்காணித்தல் (Close watch) சாதரணமாக கண் காணித்தல் (Non Close watch) என இரண்டாக பிரித்து தணிக்கை செய்ய வேண்டும். கூர்ந்து கண்காணித்தலில் இருப்பவர்களை மாதத்திற்கு ஒருமுறைக்கு குறையாமலும், சாதாரண கண்காணித்தலில் இருப்பவர்களை மூன்று மாதத்திற்கு ஒருமுறை குறையாமலும் தணிக்கை செய்ய வேண்டும்.
- தணிக்கை செய்யும் போது இவர்கள் தற்போது என்ன வேலை செய்கிறார்கள், யாருடன் பழகுகிறார்கள், தற்போது இவரது கூட்டாளி யார், எங்கெல்லாம் செல்கிறார்கள், எந்த வருமானத்தில் குடும்பம் நடத்துகிறார்கள் போன்ற விபரங்களை விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும்.
- கெட்ட நடத்தைக்காரர்களின் நண்பர்கள், உறவினர்களைக் கூர்ந்து கவனித்து அவர்களிடம் ரகசிய விசாரணை செய்து இவர்களை குறித்து புதிய தகவல்கள் சேகரிக்க வேண்டும்.

- கெட்ட நடத்தைக்காரர்களின் நடவடிக்கையும், ஆஜர் தன்மையையும் உதவி ஆய்வாளர் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். ஆஜரில் இல்லையென்றால், போகும் இடத்தையும் வரும் காலத்தையும் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- போக்கிரிகளைப் பகல் நேரத்தில்தான் விசாரிக்க வேண்டும். போக்கிரி நீங்கலாக ஏனைய கெட்ட நடத்தைக்காரர்களை இரவு நேரங்களில் தணிக்கை செய்வதுடன் அமாவாசை, பவுர்ணமி காலங்களில் அவர்களது நடவடிக்கைகளை உன்னிப்பாகத் கவனித்து அவர்களின் ஆஜர் தன்மையை உறுதி செய்ய வேண்டும்.
- கெட்ட நடத்தைக்காரர்கள் அனைவரையும் மாதம் ஒரு முறையாவது கண்டிப்பாகத் தணிக்கை செய்யப்பட வேண்டும். அமாவாசை, பவுர்ணமி காலங்களில் கூடுதல் தணிக்கைகள் செய்வது நல்லது.
- ஆஜரில் இல்லாமல் இருக்கும் (Absent, OV) கெட்ட நடத்தைக்காரர்களை உடனடியாகத் தேடிக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கைக்குப் பின் ஆஜருக்குக் கொண்டுவரத் தவறக்கூடாது. அவ்வாறு தொடர்ந்து இனம் தெரியாத குற்றவாளி, அறிவிக்கப்பட்ட குற்றவாளி, வழக்கமான குற்றவாளி ஆஜரின்மையில் இருந்தால் காவல் நிலைய அதிகாரி அவர்களுக்கு தலைமறைவு அட்டைகளை (O.V. Card) ஆரம்பித்து மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடத்திற்கு (D.C.R.B) அனுப்ப வேண்டும்.
- தணிக்கை விபரங்களை தணிக்கையின்போது உதவி ஆய்வாளர் நோட் புக்கில் குறித்துக் கொள்ளவேண்டும். காவல் நிலையம் வந்து பொது நாட்குறிப்பில் விபரங்களை எழுதியும், கெட்ட நடத்தைக்காரர்கள் பதிவேடு, கிராம பதிவேடு ஆகியவைகளில் பதிவு செய்யவேண்டும்.

செய்யக்கூடாதவை

- தணிக்கை விபரங்களை உடனுக்குடன் நிலையப் பராமரிப்பிலுள்ள கெட்ட நடத்தைக்காரர்கள் பதிவேட்டில் பதிவுகள் செய்யத் தவறுதல். அதே போன்று ரோந்து சென்ற தலைமைக் காவலர்கள் கெட்ட நடத்தைக் காரர்களைத் தணிக்கை செய்திருந்தால் அதையும் பதிவேட்டில் பதிவு செய்யத் தவறுதல்.
- வழக்கமான குற்றவாளிகள் இரவில் ஆஜரின்மையிலிருந்தால் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறுதல்.
- கெட்ட நடத்தைக்காரர்கள் தற்போது என்ன செய்கிறார்கள் என்ற விபரங்களை சரியாக தெரிந்து கொள்ளாமல் சரித்திரப் பதிவேட்டில் மாதாந்திர அறிக்கை (Current doings) எழுதுதல்.

பார்வை

i. PSO 749 Rowdy – போக்கிரி
ii. PSO 749 Suspect – சந்தேக நபர்
iii. PSO 747 Known Depredator – ஊரறிந்த குற்றவாளி
iv. PSO 609 Dossiers Criminal – கைச்சுவடிக் குற்றவாளி
v. PSO 776 Habitual Offender – வழக்கமான குற்றவாளி
vi. PSO 777 Notified Offender – அறிவிக்கப்பட்ட குற்றவாளி
vii. MOB Criminal – குற்ற செய்முறை விளக்கக் கூட குற்றவாளி

3. துப்பாக்கி உரிமங்களைத் தணிக்கை செய்தல்

நகர்ப் பகுதி/புறநகர்ப் பகுதி/வனப் பகுதியில் வசிக்கும் தனி நபர்கள் தங்கள் உயிர், உடைமைகளை எதிரி மற்றும் சமூக விரோதிகள், கொடிய மிருகங்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், சமூக அந்தஸ்து கருதியும் தனி நபர் ஒருவர் தன் வசம் துப்பாக்கி வைத்துக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவரால் துப்பாக்கி உரிமம் வழங்கப்படும். உரிமம் வழங்கப்பட்ட விபரம் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் காவல் நிலையத்திற்கு அனுப்பப்படும்.

உரிமம் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கி வகைகளில் சில

- ஒற்றைக் குழல் துப்பாக்கி (S.B.B.L)
- இரட்டைக் குழல் துப்பாக்கி (D.B.B.L)
- முறுக்குக் குழல் துப்பாக்கி (Rifle)
- சுழல் துப்பாக்கி (Revolver)
- கைத்துப்பாக்கி (Pistol)
- ஒற்றைக் குழல் Muzzle Loaded துப்பாக்கி (S.B.M.L)
- இரட்டைக் குழல் Muzzle Loaded துப்பாக்கி (D.B.M.L)

துப்பாக்கி உரிமம் பதிவேடு

- காவல் நிலைய சரகத்திலுள்ள உரிமம் பெற்ற அனைத்து ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் குறித்து பராமரிக்கப்படும் பதிவேடு துப்பாக்கி உரிமப் பதிவேடு ஆகும்.
- மேற்படிப் பதிவேட்டின் முன்பக்கத்தில் நிலையக் கண்காணிப்பில் உள்ள மொத்தத் துப்பாக்கி உரிமங்கள் விபரம் துப்பாக்கி வகைப்படி அட்டவணையிடப்பட வேண்டும். அதில் துப்பாக்கி உரிமதாரர் மற்றும் ஆயுதங்கள் பற்றிய முழு விபரங்களும் அடங்கும்.
- மேற்படிப் பதிவேட்டின் உள்ளே இடது பக்கம் துப்பாக்கி உரிமம் எண், உரிமதாரர் பெயர் மற்றும் முழு விலாசம், எந்த வகை ஆயுதம் மற்றும் அதன் விபரம், உரிமத்தின் கால அளவு , உரிமக் காலம் புதுப்பித்தல் (Renewal) விபரம் குறிப்பிடப்பட்டு அதே இடது பக்கத்தில் உரிமதாரரின் மார்பளவு வண்ணப் புகைப்படமும், ஆயுதத்தின் தயாரிப்பு, வரிசை எண்
- (Barrel Number) போன்ற விபரங்கள் நன்கு பார்வைக்குத் தெரியும்படியான வண்ணப் புகைப்படமும் அதன் கீழ் ஒட்டப்படவேண்டும்.
- மேற்படிப் பதிவேடு இருபகுதியாகப் பிரிக்கப்பட்டு பின்பகுதியில் காலாண்டுக்கு ஒருமுறை துப்பாக்கி உரிமங்கள் விபரம் குறித்த தொகுப்பு (Abstract) போடப்பட்டு நிலையப் பொறுப்பு அலுவலர் (S.H.O) கையொப்பமிடவேண்டும்.

செய்யக்கூடியவை

- ஆயுத உரிமங்களை ஓராண்டில் இரண்டு முறை தணிக்கை செய்யவேண்டும்.

- ஆயுத உரிமதாரரின் வசிப்பிடத்திற்கு நேரில் சென்று தணிக்கை செய்யவேண்டும்.
- உரிமதாரரின் வசிப்பிடம் அருகில் உள்ளவர்களிடம் உரிமதாரரைப் பற்றி விசாரித்தறிய வேண்டும்.
- முதல் தணிக்கை, உரிமம் புதுப்பித்தலுக்குப் பின் முதல் காலாண்டிலும் இரண்டாவது தணிக்கை உரிமம் புதுப்பித்தலுக்கு முந்தைய மூன்றாம் காலாண்டிலும் ஆய்வு செய்யவேண்டும்.
- முதல் தணிக்கையின்போது ஆயுதங்களை ஆய்வு செய்து உரிமம் புதுப்பிக்கப்பட்டு நடப்பில் உள்ளதா என்பதையும், துப்பாக்கி, தோட்டாக்கள் சரியாக இருக்கிறதா என்பதையும் உறுதி செய்து, சரியாக இருந்தால் ''சரிபார்க்கப்பட்டது'' (Checked Found Correct) என்று எழுதி, சரிபார்த்த தேதியும் கையொப்பமும் இடவேண்டும்.
- இரண்டாவது தணிக்கையின்போது ஆயுதங்களை ஆய்வு செய்து துப்பாக்கி, தோட்டாக்கள் சரியாக இருக்கிறா என்பதையும் உறுதி செய்து, சரியாக இருந்தால் ''சரிபார்க்கப்பட்டது'' 4 (Checked Found Correct) என்று எழுதி, சரிபார்த்த தேதியும் கையொப்பமும் இடவேண்டும். அத்துடன் அந்த உரிமம் அடுத்த காலாண்டுடன் முடிவடைய இருப்பதைத் தெரிவித்து அடுத்த வருடத்திற்கு உரிமம் புதுப்பிக்க அறிவுரை வழங்கவேண்டும். துப்பாக்கி உரிமம் புதுப்பிக்கப்படவில்லையெனில் அந்தத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களைக் கைப்பற்றி நிலையப் பாதுகாப்பில் வைக்க வேண்டும். இந்த விபரத்தை ஆயுத வைப்புப் பதிவேட்டில் ARMS DEPOSIT REGISTER (PSO 322 got« 47) துல்லியமாக எழுதி, நிலையப் பாராப் புத்தகத்திலும் குறிப்பிடவேண்டும்.
- துப்பாக்கி உரிமைதாரர் இறந்துவிட்டால் அவரது உறவினர்கள் இறப்புச் சான்றுடன் துப்பாக்கியை காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் இல்லையென்றால் காவல் நிலைப் பொறுப்பு அலுவர் அதை பறிமுதல் செய்து ஆயுதப் படையில் ஒப்படைக்க வேண்டும்.
- நிலையத்தில் வைப்பில் வைக்கப்பட்ட ஆயுதம் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே நிலைய வைப்பில் இருக்கலாம். அதற்குமேல் வைக்க நேரிட்டால் துப்பாக்கி, தோட்டாக்களைப் பொதுக் குறிப்பாணை (General Memo) மூலம் படிவம்–48னை பூர்த்தி செய்து பாதுகாப்பாக மாவட்ட ஆயுதக் கிடங்குக்கு (Armoury Godown) அனுப்பிவைக்க வேண்டும்.
- இத்தகவலை துப்பாக்கி உரிமதாரருக்கு தெரியப்படுத்துவதோடு ஆயுத வைப்புப் பதிவேட்டில் பொது குறிப்பானை எண், அனுப்பிய நாள், ஒப்படைக்கப் பெற்றுச் சென்ற காவலர் எண், பெயர் ஆகியவைகளை சிவப்பு மையினால் தெளிவாக எழுதி, துப்பாக்கியைப் பெற்றுச் செல்லும் காவலரிடம் பொது குறிப்பானை பின்பக்கம் அத்தாட்சிக் கையொப்பம் பெறவேண்டும்.
- துப்பாக்கி உரிமதாரர்கள் தனது வசிப்பிடத்தைவிட்டு வேறு இடத்திற்கு குறிப்பிட்ட காலத்திற்குச் செல்லும்பட்சத்தில் ஆயுதத்தைக் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டுத்தான் வெளியிடம் செல்லவேண்டும் என்பதை உரிமதாரருக்கு வலியுறுத்தவேண்டும். அப்படி ஒப்படைக்கும் ஆயுதத்தினை நிலைய ஆயுத வைப்புப் பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்து துப்பாக்கி உரிமதாரருக்கு ஒப்புதல் (Acknowledgement) வழங்க வேண்டும்.
- பெரிய அளவிலான சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்படும் சமயம்,தேர்தல் காலம், முக்கியத் தலைவர்கள்/பிரமுகர்களின் வருகையின்போது மற்றும் அவசர காலகட்டங்களில் துப்பாக்கி உரிமதாரர்கள் தங்களது துப்பாக்கி. தோட்டாக்களை நிலையத்தில் வைப்பு (Deposit) செய்ய வேண்டும் என்பதை உரிமதாரருக்கு வலியுறுத்தவேண்டும்.
- துப்பாக்கித் தணிக்கை விபரத்தைக் காவல் நிலையத்தில் உள்ள துப்பாக்கி உரிமங்கள் பதிவேட்டில் வலது பக்கம் Checked on என்று எழுதி, தேதி குறிப்பிட்டு கையொப்பமிடவேண்டும்.

- துப்பாக்கி உரிமம் பதிவேட்டில் கைத்துப்பாக்கி மற்றும் சுழல் துப்பாக்கி ஆகியவற்றை ஆய்வாளரும் அதற்கு மேல் பதவியிலுள்ள அலுவலர்களும் தணிக்கை செய்யவேண்டும். ஒற்றைக் குழல், இரட்டைக் குழல் துப்பாக்கிகள் முறுக்குக் குழல் துப்பாக்கிகள் மற்றும் இதர வகைகளை உதவி ஆய்வாளர் தணிக்கை செய்யவேண்டும்.
- துப்பாக்கி உரிம விதிகளை மீறினால் முறையான வழக்குப் பதிவு செய்து துப்பாக்கி, தோட்டாக் களைப் பறிமுதல் செய்யவேண்டும்.

துப்பாக்கி உரிமப் பதிவேடு ஒப்பீடு

நிலையச் சரகத்திலுள்ள மேற்கண்ட வகைத் துப்பாக்கி உரிமங்கள் மற்றும் ஏனைய வகைகள் முறையே குறிப்பிட்ட காலங்களுக்குள் தணிக்கை செய்து வருவாய்த் துறை அலுவலகப் பதிவேட்டுடன் குறிப்பிட்ட காலமுறைப்படி ஒப்பீடு செய்யப்படவேண்டும். காவல் நிலையத் துப்பாக்கி உரிமப் பதிவேட்டினை நிலையச் சரக வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பதிவேட்டுடன் காலாண்டுக்கு ஒருமுறை முதல் மாதத்தின் 15 தேதிக்குப் பின்னும், தவறாது ஒப்பீடு செய்ய வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் பதிவேட்டில் உள்ள துப்பாக்கி உரிமங்களின் எண்ணிக்கையும் காவல் நிலையப் பதிவேட்டுத் தொகுப்பில் உள்ள எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதைச் சரிபார்ப்பதே இதன் நோக்கமாகும். வித்தியாசம் இருந்தால் அவைகளை உரிய பதிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

செய்யக்கூடாதவை

- துப்பாக்கி உரிமங்களை நிலையத்தில் வைத்து தணிக்கைசெய்தல்.
- துப்பாக்கி, தோட்டக்களை நிலையம் கொண்டுவரும்படி கட்டாயப் படுத்துதல்.
- தணிக்கைக்கென குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குப் பின் தணிக்கை செய்தல்.
- உரிமம் புதுப்பிக்காத நிலையில் ஆயுதத்தை உரிமதாரர் தனது பொறுப்பில்
- வைத்துக் கொள்ள அனுமதித்தல்.
- உரிமதாரர் தனது வசிப்பிடத்தைவிட்டு நீண்ட நாட்கள் வேறு இடத்திற்கு செல்லும்போது ஆயுதத்தை தன்னுடன் எடுத்துச் செல்வதையும் தனது வீட்டில் பாதுகாப்பின்றி வைத்துச் செல்வதையும் அனுமதித்தல்.
- உரிமதாரர் ஆயுதங்களை நிலையத்தில் வைப்பு செய்ய அறிவிக்கும் காலங்களில் வைப்பு செய்யாமல் தன்வசம் வைத்திருக்க அனுமதித்தல்.
- காவல் நிலையப் பதிவேட்டிற்கும் வட்டாட்சியர் அலுவலகப் பதிவேட்டிற்கும் வித்தியாசம் இருத்தல்.

4. விடுதலை / பிணையம் / பரோலில் வெளிவருவோர்களைக் கண்காணித்தல்

சிறையிலிருந்து வெளிவருவோர்களைக் கண்காணித்தல்

(JAIL RELEASE WATCHING)

கொலைக் குற்றங்கள், திருட்டு வழக்குகள், சிலைத் திருட்டு வழக்குகள், கூலிப் படையினர், தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சார்ந்த நபர்கள், போதைப் பொருள் குற்றவாளிகள், தீவிரவாத இயக்கங்கள் போன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்கள் கைதாகி சிறையிலிருந்து வெளியில் வரும்போது அவர்களின் நடவடிக்கைகளை தொடர்ந்து கவனிப்பது சிறையிலிருந்து வெளிவருவோர்களை கண்காணித்தல் ஆகும்.

குற்றவாளிகளை வகைப்படுத்துதல் செய்முறை வாரியாக (M.O. War)

- சிறைத் தண்டனை முடித்து வெளியில் வந்தவர்களை அவர்கள் சம்பந்தப்பட்ட காவல் சரக எல்லைக்குள் இருக்கும் வரை தொடர்ந்து கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- சட்டம் ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமான குற்றவாளிகளை கூலிப்படையினர் (Gangsters) ஜாதிப் பிரச்சினையைத் தூண்டுவோர் (Communal Trouble mongers), மதப் பிரச்சினையைத் தூண்டுவோர் (Religious Trouble mongers) என்று வகைப்படுத்தி அவர்களை உரிய முறைப்படி கண்காணிக்க வேண்டும். அவர்கள் மீண்டும் அதே குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அவர்கள் செல்லுமிடம், திரும்ப வரும் காலங்களை அறிந்திருத்தல் வேண்டும்.
- கொள்ளை (Dacoity), வழிப்பறி (Robbery) பகல் கன்னக் களவு (H.B by Day) இரவு கன்னக் களவு (H,B by Night) பெரிய திருட்டு (Theft-A) சிறிய திருட்டு (Theft-B) கால்நடைத் திருட்டு (Theft-C) போன்ற வழக்குகளில் தண்டனை பெற்ற குற்றவாளிகள் (Crime accused) மீண்டும் அதே குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அவர்கள் செல்லுமிடம், திரும்ப வரும் காலங்களை அறிந்திருத்தல் வேண்டும்.

தணிக்கையின் போது செய்யக்கூடியவை

- பொதுவாக கெட்ட நடத்தைக்காரர்கள் விடுதலையாவது சம்பந்தமாக மாவட்ட காவல் கண் காணிப்பாளருக்கு மாவட்ட சிறைக் கண்காணிப்பாளரால் தெரிவிக்கப்படும். அதன் விபரம் காவல் நிலையத்திற்கும் தெரிவிக்கப்படும்,
- சம்பந்தப்பட்ட காவல் நிலைய அலுவலரும் சிறைத் துறை அதிகாரியிடம் சிறையிலிருந்து வெளி வருவோர் பட்டியல் கேட்டு பெறலாம்.
- போக்கிரி ரோந்து, இரவு ரோந்து செல்லும் தலைமைக் காவலர்களை கெட்ட நடத்தைக்காரர் களையும் தணிக்கை செய்து வரும்படியும் ரோந்துப் புத்தகத்தில் நிரப்பி அனுப்பலாம்.
- கலவர காலங்களில் கெட்ட நடத்தைக்காரர்கள் காவல் நிலையத்தில் தினமும் ஆஜராகி தங்கள் நன்னடத்தை பற்றி உறுதி செய்ய அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

- மேற்படிக் குற்றவாளிகளை நேரடியாக அவர்களின் இருப்பிடங்களில் தணிக்கை செய்து ஆஜர் தன்மையை உறுதிப்படுத்தியும், இரகசியமாக அருகில் வசிப்பவர்களிடம் விசாரித்து நடவடிக்கைகளைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.
- தண்டனை முடிந்தவர்களின் மறுவாழ்வுக்கு காவல் துறையின் மூலம் முடிந்தால் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் நல்வாழ்விற்கு வழிவகுக்க வேண்டும். அவ்வாறு செய்வது அவர்கள் மீண்டும் அக்குற்றச் செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்க உதவும்.
- கெட்ட நடத்தைக்காரர்கள் தண்டனை முடிந்து வெளியில் வந்தபின்பும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது சாதாரணக் குற்றப்பிரிவுகளை மட்டும் பயன்படுத்தாமல் உயரலு வலர்களின் உத்தரவின் படி வழக்கமான குற்றவாளிகள் கட்டுப்பாடு சட்டம் போன்ற சிறப்புப் பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- நிலையான இருப்பிடம் இல்லாத அல்லது விடுதலைக்குப் பின் தங்களது சொந்த இருப்பிடத்திற்கு திரும்பிச் செல்ல மாட்டார்கள் எனக் கருதப்படுகிற அல்லது குறிப்பாக அபாயகரமான தண்டனை யாளர்களை மட்டுமே பின்தொடர வேண்டும்.
- காவல் கண்காணிப்பாளரால் குறிப்பிடப்பட்ட தண்டனையாளர்களை மட்டும் பின்தொடர வேண்டும், அவ்வாறு பின்தொடர அவசியமா இல்லையா என்பதை காவல் வட்ட ஆய்வாளரால் உதவி ஆய்வாளருக்கு தண்டணைக்குறிப்பின் மேல் உத்திரவிடப்பட்டிருக்கும்.
- விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளர் அவரது கிராமத்திற்கு வரவில்லை என்றால் நிலையப் பொறுப்பு அலுவலர் (SHO) தலைமறைவு அட்டைகளை (OV Card) DCRB க்கு அனுப்ப வேண்டும்.
- விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளர்கள் தனது சொந்த ஊருக்கு தொடர் வண்டியில் வந்தால் உதவி ஆய்வாளர் தொடர் வண்டி நிலையம் சென்று இருப்புப்பாதை காவலர் உதவியுடன் அங்கிருந்தே கண்காணிப்பைத் தொடர வேண்டும்.
- விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளர் சாலை வழியாகப் பயணம் செய்யும் போது தனது காவல் எல்லையைக் கடக்கும் வரை கண்காணித்து தொடர் கண்காணிப்பிற்காக அவர்கள் வருகை பற்றி அடுத்த காவல் நிலையத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளர் இருப்புப்பாதை, மூலமாகவோ, சாலை வழியாகவோ பயணம் செய்யும்போது இடையில் பயணம் தடைப்பட்டு தங்க நேரிட்டால் அந்த சரக உதவி ஆய்வாளர் உடனடியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு இத்தகவலைத் தெரிவிப்பதுடன் தண்டனையாளர் மீண்டும் தனது பயணத்தைத் தொடங்கி தனது இருப்பிடம் செல்லும் வரை உரிய பாதுகாப்பளித்து கண்காணிப்பதுடன் தண்டனையாளரின் இருப்பிடம் பற்றி மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.
- விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளரைப் பின்தொடர நியமிக்கப்பட்ட காவலர் அவரது நோட்டுப்புத்தகத்தில் பதிவு செய்து பின்தொடர்ந்து அடுத்த பின்தொடர்வுக்கு காவலர்களிடம் ஒப்படைக்கும்போது அவர்களிடம் நோட்டுப்புத்தகத்தில் ஒப்படைத்தமைக்குப் கையெழுத்துப் பெறப்பட்டுள்ளதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளர்களை பார்வையில் வைத்திருக்க வேண்டுமே தவிர அவர்களது நகர்வுகளை எவ்வகையிலும் தடுக்கக்கூடாது. இளம்சிறார் பள்ளியிலிருந்து (Borstal School) விடுதலை செய்யப்பட்ட இளங் குற்றவாளிகள் சம்பந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் குறிப்புரைகள் ஏதும் இல்லாத போதுஅவர்களைப் பின் தொடர வேண்டியதில்லை.

- தமிழ்நாட்டைச் சேர்ந்த விடுதலை செய்யப்பட்ட தண்டனையாளர்கள், விடுதலைக்குப்பின் கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் இருப்பின் அவர்களை அந்த மாநில எல்லைக்கருகே உள்ள அடுத்த இம்மாநில காவல் நிலையக் காவலர்கள் பின்தொடர வேண்டும். இதே போன்றே பிற மாநிலங்களைச் சேர்ந்தோர் தமிழ்நாட்டில் இருப்பின் அவர்களைப் பின் தொடரும் பணியும் மேற்கண்ட விதத்தில் இருக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- தண்டனை முடிந்து வெளியே வந்த கெட்ட நடத்தைக்காரர்கள் ஒவ்வொருவரின் வசிப்பிடத்தையும் தணிக்கை அதிகாரி தெரிந்துகொள்ளாதிருத்தல்.
- வயதான குற்றவாளிகள் தண்டனை முடிந்து வெளியே வந்த பின் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடாமலிருந்தால் அவர்களைக் கண்காணிப்புச் செய்தல் மற்றும் துன்புறுத்துதல்.
- இளம் சிறார் பள்ளியிலிருந்து (Borstal School) விடுவிக்கப்படும் சிறார்களை தனிப்பட்ட குறிப்புகள் ஏதும் இல்லாத போது பின்தொடர்தல்.

பிணையில் வெளிவருவோர்

(Bail Release)

விசாரணைக் கைதியை தகுந்த பிணையின் பேரில் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் காவல் அடைப்பிலிருந்து தற்காலிகமாக விடுவிப்பது பிணை விடுதலை ஆகும்.

- பிணை விடுவிப்பிற்கான நீதிமன்ற பிணை உத்திரவை (Bail order) சேகரிப்பதுடன் பிணை நிபந்தனைகளையும் (Condition Bail) தெரிந்து கொள்ள வேண்டும்.
- பிணையில் விடுவிக்கப்பட்டவர் நீதிமன்ற நிபந்தனைகளை தவறாமல் கடைப்பிடிக்கிறாரா என்பதைக் கண்காணிக்க வேண்டும். மேலும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள காவல் நிலையம் / நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் நிபந்தனை பிணை நோட்டுப் புத்தகத்தில் (Condition Bail Note Book) கையெழுத்திட்டு வருகிறாரா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- நீதிமன்ற பிணை நிபந்தணை உத்தரவைப் பெற்று நோட்டுப்புத்தகத்தில் முதல் பக்கத்தில் ஒட்டி அடுத்த பக்கங்களில் தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு உரிய காலங்களில் உரிய நேரத்தில் முறையாகக் கையெழுத்திட்டு வருகிறாரா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- பிணை உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்திற்குப் பிந்தியோ முந்தியோ கையொப்பமிட கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது.
- தவறும் பட்சத்தில் அன்றைய தினம், நேரம் குறிப்பிட்டு ஆஜரின்மை (Absent) எனக் குறிப்பிட்டு உதவி ஆய்வாளர் கையொப்பமிட வேண்டும்.
- கையொப்பமிடும் புத்தகம் உதவி ஆய்வாளரின் நேரடி மேற்பார்வையிலும் தனிக்கவனத்திலும் இருக்க வேண்டும்.
- கையெழுத்திடும் நாளில்/நேரத்தில் நீதிமன்றத்தில் விசாரணை சம்பந்தமாக ஆஜராக நேரிட்டால் மறுநாள் கையெழுத்திட வரும் போது நீதிமன்றத்தில் ஆஜரான உத்தரவை எதிரி வசமிருந்து பெற்று நோட்டுப்புத்தகத்தில் ஒட்டி பதிவு செய்ய வேண்டும்.

- கையெழுத்திடும் நாளில்/நேரத்தில் தவிர்க்க இயலாத வேறு சொந்தக் காரியங்களுக்காக செல்லும்போது கையெழுத்திட இயலவில்லை எனில் அதனை உரிய நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் தெரிவித்து உரிய உத்தரவு பெற்றுவரச் செய்து அதனை நோட்டுப்புத்தகத்தில் ஒட்டிவைக்க வேண்டும்.
- பிணையில் விடுவிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட பிணை நிபந்தனைகளை மீறினால் அதனை சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தி பிணை உத்தரவை ரத்து செய்ய நடவக்கை எடுக்க வேண்டும்.
- இருவேறு ஜாதி மற்றும் மதம் சம்பந்தப்பட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வழக்குகளில் ஈடுபட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிர்த்தரப்பினரால் ஏதேனும் உயிர்ப் பயமுறுத்தல் மற்றும் வேறு ஏதாவது அசம்பாவிதச் செயல்கள் நடக்க வாய்ப்பிருக்கும் நிலையில், உதவி ஆய்வாளர் சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தை அனுகி சூழ்நிலைகளை விளக்கிக்கூறி பிணை உத்தரவின் நிபந்தனைகளை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பிணை கையொப்பமிட வருபவர் தான் மட்டும் தனியாக வராமல் கூட்டம் சேர்த்துக் கொண்டு வாகனத்தில் வருகிறார்களா அந்த வாகனத்தில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் கூலிப் படையினர் யாரேனும் உடன்வருகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கவனிப்பது உதவி ஆய்வாளரின் தலையாய கடமை ஆகும். மேற்கண்டவாறு தகவல்கள் ஏதும் தெரிந்தால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உயர் அலுவலர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- சட்டம் ஒழுங்கு பிரச்சினை வழக்குகளில் இரு கோஷ்டியினரும் பிணை உத்தரவு பெற்று ஒரே இடத்தில் கையெழுத்திடுவதால் ஏற்படும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை முன்னரே தவிர்க்கும் பொருட்டு, இரு தரப்பினரும் வெவ்வேறு இடங்களில் கையெழுத்திடும் வகையில் அரசு வழக்கறிஞர் மூலம் சூழ்நிலையினை விளக்கிக்கூறி நீதிமன்றத்தில் உரிய உத்தரவு பெற ஆவண செய்ய வேண்டும்.
- சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட வழக்குகளில் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் மேலும் குற்ற சம்பவத்தில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக அவர்களது செயல்பாடுளைக் கூர்ந்து கண்காணித்து வரவேண்டும்.
- ஒவ்வொரு வழக்கிலும் தினந்தோறும் பிணையில் வரும் நிபந்தனைக் குற்றவாளிகள் பற்றிய விபரங்களை நீதிமன்ற தலைமைக் காவலர் மூலம் அன்றாடம் தெரிந்து கொள்வது அவசியம்.

செய்யக்கூடாதவை

- பிணை உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்திற்குப் பிந்தியோ முந்தியோ கையொப்பமிட அனுமதித்தல்.
- பிணை உத்தரவு பெற்றவர் கையெழுத்திட காவல் நிலையம் வரும்போது அவரிடம் கடுஞ்சொற்களைப் பயன்படுத்துவதோ வழக்குக்கு சம்பந்தமில்லாத கேள்விகள் கேட்பதோ, அவர்களிடம் காவலர்கள் அநாவசியமாகப் பேசுவதையோ அனுமதித்தல்.

தண்டனைக் காலத்தில் தற்காலிகமாக வெளிவருதல்

(Parole Release)

ஒரு தண்டணைக் கைதி அத்தியாவசியத்தின் நிமித்தம் தண்டனைக் காலத்தின் இடையே சிறையிலிருந்து வெளியே செல்ல நேரிட்டால் தகுந்த வழிக்காவல் மூலமோ அல்லது வழிக் காவல் இன்றியோ கைதியின் நன்னடத்தை காரணமாக குறிப்பிட்ட காலம் சிறையை விட்டு வெளியே வருவதற்கு சம்பந்தப்பட்ட சிறை அதிகாரியால் வழங்கப்படும் தற்காலிக உத்தரவே தண்டனைக் கால தற்காலிக விடுவிப்பு (Parole Release) ஆகும்.

இவ்விடுவிப்பு ஒரு கைதிக்கு அவரின் நன்னடத்தையின் பேரில் அவரது தண்டனைக் காலம் முடிவதற்குள் எத்தனை முறை வேண்டுமானாலும் சிறைத்துறை அலுவலரால் வழங்கப்படலாம்.

செய்யக்கூடியவை

- பரோலில் வெளிவர விண்ணப்பிக்கும் நபர் பரோலுக்காக கூறும் காரணங்கள், அந்த நபரின் நடவடிக்கைகள் மற்றும் அவருக்கு எதிரிகள் இருப்பின் அவர்களால் ஏற்படும் ஆபத்து மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக சிறைத் துறையினருக்கு அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க உதவி ஆய்வாளர் விரிவான, சரியான அறிக்கை அளிக்கவேண்டும்.
- பொதுவாக பரோல் விடுப்பு ஒருமாத கால அளவிற்கு வழங்கப்படலாம். பரோலில் வரும் குற்றவாளி சிறையிலிருந்து வெளிவருவதற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு சிறை அலுவலரால் தெரிவிக்கப்படும். அந்த உத்தரவில் உள்ள நிபந்தனைகளை உதவி ஆய்வாளர் தெரிந்து கொண்டு அதனை பரோலில் உள்ள நபர் கடைப்பிடிக்கிறாரா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- பரோலில் வரும் நபர் கையெழுத்திட உத்தரவிடும் பட்சத்தில் நிலையத்தில் அதற்கென நோட்டுப் புத்தகம் பராமரித்து முதல் பக்கத்தில் அந்த உத்தரவை ஒட்டி அடுத்த பக்கத்தில் நாள் மற்றும் நேரம் குறிப்பிட்டு உத்தரவு படி கையெழுத்திட அனுமதித்தும், அவர் தங்குமிடத்தை அந்த நோட்டு புத்தகத்தில் எழுதி அறிந்து வைத்திருப்பதுடன் அவர் ஆஜரில் உள்ளாரா இல்லையா என்பதையும் குறிப்பாக இரவு நேரங்களில் அவரது நடவடிக்கையைக் கண்காணித்து வரவேண்டும்.
- பரோல் நிபந்தனைகளை மீறும் போது உடனடியாக சம்பந்தப்பட்ட சிறைக் கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.
- பரோலில் வெளிவருபவர் பரோல் நிபந்தனைகளை மீறி தலைமறைவாகும் போது அத் தகவலை உடனடியாக காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்குத் தகவல் தெரிவித்து சிறைத் துறையினரிடமிருந்து புகார் பெற்று பரோலில் வந்த நபர் மீது சட்டப் பிரிவு 224 இதச பிரகாரம் குற்ற வழக்கு தொடர்வதுடன் அவரைக் கண்டுபிடித்து சிறையில் மீண்டும் அடைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பரோலில் வரும் நபருக்கு தம் பரோல் உத்தரவில் மாலை 06.00 மணி முதல் காலை 06.00 மணி வரை காவல் நிலையத்தில் தங்கி இருக்க வேண்டும் என்று கண்டிருந்தால் அந்த நபர் காவல் நிலையத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளை உதவி ஆய்வாளர் செய்து கொடுக்க வேண்டும். அவரை கைதிகள் அறையில் (Lock up) அடைத்தல் கூடாது.

செய்யக்கூடாதவை

- பரோலில் வரும் குற்றவாளி அந்த உத்தரவில் உள்ள நிபந்தனைகளை மீற அனுமதித்தல்.
- பரோலில் வரும் நபர் இரவு காவல் நிலையத்தில் தங்க வேண்டும் என்று நிபந்தனை இருக்கும் போது அவரை வெளியே தங்க அனுமதித்தல்.

பார்வை

i. (PSO 770) – சிறை விடுதலைக்குப்பின் தண்டனையாளர்களைப் பின்தொடர்தல் பற்றிய விதிகள் (Shadowing of convicts on release)

ii. (PSO 771) – சிறை விடுதலைப்பட்டியல் (Prison Release List)

நீதிச்சிறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்

அறிவிப்பு

நாள்: 10.1.08.

சங்.கோவில் டவுன் காவல் நிலைய குற்ற எண். 000/07

வழக்கில் எதிராக 1.ककक (2) ङङङङ

எங்பவர்கள் சங்கரன்கோவில் நீதிச்சிறை நடுவர் நீதிமன்ற உத்தரவின்படி

இந்த பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் காவல் நிலையத்தில்

பிணையில் இருந்து வெளிவந்த நாள் முதல் தொடர்ந்து 30 நாட்களுக்கு திங்கள்

காலை 10.00 மணிக்கு ஆஜராகி கையொப்பம் போடவேண்டும் என்ற

விபரம் தெரிவிக்கப்படுகிறது.

/உத்தரவுப்படி/

தலைமை எழுத்தர்.
நீதிச்சிறை நடுவர் நீதிமன்றம்,
சங்கரன்கோவில்

பெறுநர்
உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் இலகுவில் டவுன்.பா.நி.

1. ककक (43/08) த/பெ சசசச சங்கரன்கோவில்	11.01.2008 10.00 மணி: 1) ककक 2) ङङङङ
2. ङङङङ (46/08) த/பெ ஞஞஞஞ கோமதியாபுரம் சங்கரன்கோவில்	12.01.2008 10.00 மணி: 1) ककक 2) ङङङङ

5. வாகனத் தணிக்கை (VEHICLE CHECK)

காவல் நிலைய சரக எல்லை மற்றும் உயர் அலுவலர்கள் குறிப்பிடும் இடத்தில் மோட்டார் வாகனச் சட்ட விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படும் வாகன ஓட்டுநர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுத்திடவும், வாகன விபத்துக்களைத் தவிர்த்திடவும், திருட்டு வாகனங்களைக் கண்டுபிடிக்கவும், தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும், தப்பி ஓடும் குற்றவாளிகள் மற்றும் கடத்தப்படும் வாகனங்களைக் கண்டுபிடிக்கவும், முக்கியப் பிரமுகர்களின் வருகையின் போது அவர்களின் பாதுகாப்பு கருதியும் செய்யப்படுவதே வாகனத் தணிக்கையாகும்.

வாகனத் தணிக்கையின் போது செய்ய வேண்டியவை

- வாகனத் தணிக்கைக்குத் தேர்வு செய்யப்படும் இடம், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாதவாறு அகன்றதாகவும், வளைவுகள் இன்றியும், பார்வைக்கு நன்கு தெரியும்படியும், போதிய அளவுள்ள இடமாகவும், வான் தகவல் தொடர்புக்கு எவ்வித இடையூறு இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்.
- வாகனத் தணிக்கையின்போது முழு விழிப்புணர்வுடனும், சுய பாதுகாப்புடனும் இருத்தல் வேண்டும்.
- உதவி ஆய்வாளர் சீருடையணிந்து கைத் துப்பாக்கி (Pistol) மற்றும் வாக்கி டாக்கியைத் (Walkie Talkie) தன் வசம் வைத்திருக்கவேண்டும்.
- தணிக்கை செய்யும் இடத்தில் நல்ல நிலையில் உள்ள வாகனம் ஒன்றைத் தயார் நிலையில் நிறுத்திவைத்திருத்தல் வேண்டும்.
- ஒலி பிரதிபலிக்கும் தடுப்பு வேலி (Reflector Barricade) மற்றும் தடுப்புக் கூம்புகள் போதிய அளவில் அவ்விடத்தில் அமைக்கவேண்டும்.
- போதிய அளவு காவல் ஆளிநர்கள் சீருடையில் தணிக்கையின் போது அவ்விடத்தில் இருக்க வேண்டும். குறைந்த அளவு நான்கு பேர் இருத்தல் வேண்டும். தேவைப்படும் போது சூழ்நிலைக்குத் தகுந்தவாறு கூடுதல் காவல் ஆளிநர்களை நியமிக்கவேண்டும்.
- வாகனத் தணிக்கை மேற்கொள்ளும் காவலர்கள் ஒலி பிரதிபலிக்கும் சட்டை (Reflector Jacket) அணிந்தும், வாகனத்தை நிறுத்துவதற்கான ஒளி பிரதிபலிக்கும் கைத்தடி (Reflector Baton) மற்றும் பேட்டரி லைட் (Torch Light) ஆகியவை வைத்திருக்கவேண்டும்.
- அனைத்து வழிகளிலும் இருந்து வரும் வாகனங்களையும் முழுமையாகச் சோதனையிட வேண்டும்.
- வாகனத்தை நிறுத்தித் தணிக்கை செய்யும்போது முதலாவதாக வாகன ஓட்டுநரை வாகன இயந்திரத்தின் இயக்கத்தை வாகனச் சாவியுடன் கீழே இறங்க சொல்லவேண்டும். இரவாக இருப்பின் வாகனத்தின் உள்விளக்கை எரியவிட்டு வாகனத்தின் உள்ளே இருக்கும் நபர்களையும் கீழே இறங்கச் சொல்லவேண்டும். ஓட்டுநரும் உடன் வந்தோரும் தப்பி ஓடிவிடாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.
- வாகனத் தணிக்கை செய்யும் போது, சந்தேக நபர்கள், கெட்ட நடத்தைக் காரர்கள், தலைமறைவுக் குற்றவாளிகள், பிடிக்கட்டளை பிறப்பிக்கப் பட்டவர்கள் போன்றோர்களின் புகைப்படங்களை கைவசம் வைத்துக் கொண்டு ஒப்பீடு செய்து பார்க்கவேண்டும்.

- ஓட்டுநரின் இருக்கையின் பின்புறம், வாகனத்தின் டிக்கி, வாகனத்தின் மேல்புறம், மேற்கூரை, அடிப்புறம் மற்றும் அடித்தளம் ஆகியவற்றிலும் சோதனையிட வேண்டும்.
- வாகன விபத்துகளைத் தவிர்க்கும்பொருட்டு, வாகன ஓட்டுநர் மது அருந்தியுள்ளாரா என்பதைக் கண்டறிய வேண்டும்.
- வாகனத்தில் சரக்கு வாகனப்பதிவேடு (Goods Vehicle Register - G,V,R) பொருட்களுக்குரிய சரக்குப்பட்டியல் (Invoice) முறையாக உள்ளனவா என்று சரிபார்க்கவேண்டும்.
- வாகனத் தணிக்கையின் போது வரும் வாகனங்களை அதன் வாகனப் பதிவுச் சான்று (Registration Certificate Book – R,C, Book), ஓட்டுநர் உரிமம் (Driving License – D.L), வாகன அனுமதிச் சான்று (Vehicle Permit), வாகனக் காப்பீட்டுச் சான்று (Insurance), புகைச் சோதனைச் சான்று (Emission Test Certificate) ஆகியன முறையாகவும் நடப்பிலும் உள்ளனவா என்றும் சரிபார்க்கவேண்டும். குறைகளோ மீறல்களோ காணப்படின் அதற்கான சட்டப்பிரிவின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- வாகனத் தணிக்கையின் போது உதவி ஆய்வாளர் வாகன மோட்டார் சிறு வழக்குகள் (Motor Petty Case) போடவேண்டும்.
- வாகன ஓட்டுநர்கள் மோட்டார் வாகன விதிமுறைகளைத் தெரிந்துகொள்ள அறிவுறுத்துவதுடன் விபத்தில்லாப் பயணம் மேற்கொள்ளுமாறும் அறிவுரை வழங்கவேண்டும்.
- வாகனத் தணிக்கையின்போது வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகனத்தில் வருபவர்களிடம் கண்ணியமான வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும்.
- வாகனத் தணிக்கைப் பணி முடிந்தவுடன் உயர் அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பவேண்டும். குறிப்பாக, தணிக்கையின்போது முக்கியமான வழக்குகள் ஏதேனும் இருந்தால் தகவல் தெரிவிக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- எக்காரணம் கொண்டும் உதவி ஆய்வாளர் சீருடை, உரிய உபகரணங்கள், போதிய காவலர்கள் இன்றி தணிக்கையில் ஈடுபடுதல்.
- தணிக்கைக்காக சைகை காட்டி நிறுத்தப்படும் வாகனத்தை வாகன ஓட்டுநர் நடுரோட்டில் நிறுத்தவோ, இயந்திர ஓட்டத்தை நிறுத்தாமல் கீழே இறங்கவோ, இரவாக இருப்பின் வாகனத்தின் பார்க்கிங் லைட் போடாமலோ வாகனத்தை விட்டு கீழே இறங்க அனுமதித்தல்.
- வாகன ஓட்டுநர் மது அருந்தியிருந்தால், வாகனத்தை அவர் தொடர்ந்து ஓட்டிச்செல்ல அனுமதித்தல் மற்றும் அவர்மீது உரிய பிரிவின்கீழ் வழக்குப் பதிவுசெய்யத் தவறுதல்.
- வாகனத் தணிக்கையின்போது வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகனத்தில் வருபவர்களிடம் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துதல்.
- தணிக்கை என்ற பெயரில் அலுவலகம் செல்பவர்கள், பள்ளிக்/கல்லூரி செல்பவர்கள், அவசர நிமித்தம் செல்பவர்கள், அவசர ஊர்தி (Ambulance) ஆகிய வாகனங்களை நிறுத்தி காலதாமதப் படுத்துதல்.
- வயதுமுதிர்ந்தவர்களையோ, கர்ப்பிணிப் பெண்களையோ, மருத்துவ சிகிச்சைக்குச் செல் பவர்களையோ, முக்கியப் பிரமுகர்களையோ, பள்ளிக் குழந்தைகளையோ தேவையில்லாமல் தணிக்கையின்போது வாகனத்தை விட்டு இறங்கச் சொல்லுதல்.

- இழுவை வாகனம் (Tractor), திறந்த வாகனம் (Open Type Vehicle). போன்ற வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் செல்வதை அனுமதித்தல்.
- வாகனங்களில் ஒட்டுநருக்கு இடையூறாகவும், அனுமதிக்கப்பட்ட இருக்கைகளுக்கு அதிக மாகவும் ஆட்களை ஏற்றிச்செல்ல அனுமதித்தல்.

6. பணி நியமன விசாரணை

முப்படைகளுக்கு, அரசுப் பணிக்கு மற்றும் தனியார் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் முன்நடத்தை (Antecedents) மற்றும் அவர்கள் மீது உரிமையியல் மற்றும் குற்ற வழக்குகள் (Police Cases) ஏதும் நிலுவையில் உள்ளனவா என்பதை அறியும் பொருட்டு உரிய துறை சார்ந்த அலுவலகம் மற்றும் நிறுவனங்களிலிருந்து வரப்பெறும் படிவங்களில் உள்ள விபரங்களைச் சரிபார்க்க, விசாரணை செய்வதே ''பணி நியமன விசாரணை'' ஆகும்.

பணி நியமன விசாரணையின்போது செய்யக்கூடியவை

- பணி நியமன விசாரணைப் படிவத்துடன் அதன் முகவரியில் நேரில் சென்று விசாரணை செய்ய வேண்டும்.
- அதில் கண்ட நிரந்தர முகவரியும் தற்காலிக முகவரியும் சரியாகவுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். உறுதிப்படுத்துவதற்கு குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம், நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card), வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றுடன் சரிபார்ப்பதுடன் தபால் காரரிடம் விசாரனை செய்துகொள்ள வண்டும்.
- படிவத்தில் கண்ட நபரை நேரில் பார்த்து படிவத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்துடன் ஒப்பீடு செய்து சான்று செய்யவேண்டும்.
- படிவத்தில் உள்ள நபர் அரசால் தடை செய்யப்பட்ட இயக்கங்களிலோ, மதவாத இயக்கங்களிலோ உறுப்பினராகவோ பிற பொறுப்பிலோ அங்கம் வகிப்பவரா என்பதையும், அவரது தனிப்பட்ட ஒழுக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளை அக்கம்பக்கத்தில் இரகசியமாக விசாரணை செய்யவேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குளில் சம்பந்தப்பட்டவரா இல்லையா என்பதை அக்கம் பக்கம் விசாரித்தும், நிலையக் குற்றப் பதிவேடுகளைப் பார்வையிட்டும் உறுதி செய்யவேண்டும்.
- இந்திய முப்படைகளின் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் இராணுவ சோதனைக் குறிப்புப் படிவத்தில் பக்கம் **3** மற்றும் **4**–ஐ கவனமாகப் பூர்த்தி செய்து கையொப்பம், முத்திரை, காவல் நிலைய முத்திரை (Round Seal) ஆகியவை இடப்படவேண்டும்.
- விசாரணை அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரைக்குக் கீழ் தேதியிட்டு அவரது பெயர் பெரிய எழுத்துக்களில் எழுதப்படவேண்டும்.
- படிவத்தில் கண்டுள்ள முகவரியில் விசாரிப்பதுடன் அவர் வெளியூரில் படிப்பு, தொழில் அல்லது வேறு காரணங்களுக்காக நீண்டகாலம் தங்கியிருந்தால் அவர் தங்கியிருந்த பகுதிக்குட்பட்ட காவல் நிலையத்திலும் விசாரணை செய்யும் பொருட்டு குறிப்பிட்டு எழுதப்படவேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் படித்த பள்ளி/கல்லூரிகளில் சென்று குறிப்பிடும் காலத்தில் அவர் அங்கு படித்தது உண்மையா என்றும் நடத்தை பற்றியும் விசாரித்தறியவேண்டும்.

- படிவத்தில் கண்ட பொறுப்புள்ள நபர்கள் (Responsible persons) என்று குறிப்பிடப்பட்ட இரு வரிடமும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறவேண்டும்.
- விசாரணை முடிவை, விசாரணைப் படிவத்துடன் இணைக்கப்பட்ட படிவம் 1=ல் தெளிவாக எழுத வேண்டும். ஏதேனும் குற்ற வழக்குளில் ஈடுபட்டிருந்தால் அதுகுறித்து, வழக்குத் தொடுத்த காவல் நிலையம், குற்ற எண், சட்டப்பிரிவு, வழக்கின் தற்போதைய நிலை, அவ்வழக்கில் இவரது பங்கு போன்ற விபரங்கள் தெளிவாக எழுதப்படவேண்டும்.
- விசாரணைப் படிவம் அதில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் தாமதமின்றி அனுப்பப்பட வேண்டும்.
- பணி நியமன விசாரணையை உள்ளூர்க் காவல் நிலைய அலுவலர்கள் மட்டுமல்லாமல் மாவட்டத் தனிப் பிரிவு, மாநிலக் குற்றப் பிரிவு (S.B.C.I.D.) மற்றும் மாவட்ட காவல் கண்காணிப் பாளரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் விசாரணை மேற்கொள்ளலாம்.

செய்யக்கூடாதவை

- பணி நியமன விசாரணையை அலுவலகத்தில் வைத்துச் செய்தல்.
- படிவத்தில் கண்ட நபரை நேரில் பார்க்காமல் சான்று செய்தல்.
- படிவத்தில் கண்ட நபர் உரிமையியல் / குற்றவியல் வழக்குகளில் ஈடுபட்டவரா இல்லையா என்பதை அக்கம் பக்கம் விசாரிக்காமலும் நிலையக் குற்றப் பதிவேடுகளைப் பார்வையிடாமலும் அறிக்கை அனுப்புதல்.
- படிவத்தில் கண்டுள்ள முகவரியில் விசாரிக்காமலும், அவர் வெளியூரில் படிப்பு, தொழில் அல்லது வேறு காரணங்களுக்காக நீண்ட காலம் தங்கியிருந்தால் அங்கும் விசாரணை செய்யவேண்டும் என்ற குறிப்பு இல்லாமல் அறிக்கை அனுப்புதல்.
- விசாரணைப் படிவத்தை விசாரணை முடித்து அனுப்புவதில் காலதாமதம் செய்தல்.

In lieu of IAFK – 1152

VERIFICATION ROLL OF COMBATANT AND NON COMBATANT

Photograph

1. Regt No 9514095 M
2. Rank PO/HAV
3. Name in full AAAA
4. Class XXX Sub Class _____ Religion HMC (हिंदू कायस्थ)

   Nationality INDIAN

   Burki Company

5. If member of Scheduled Caste/Tribe, give name there of _____
6. Date of Birth 14-05-1984 Height 168 cm Weight 53 kg
7. Date of Enrolment 25 JUNE 2007 Entertained by : AEC Training College and Centre, Pachmarhi (MP).
8. Regt/Corps in which enrolled : Army Education Corps (AEC)
9. Present address in full : Vill R. AYYAMPALAYAM

   Post Office R. AYYAMPALAYAM Tehsil PALANI

   Police Station PALANI TO PALANI

   NRS DINDUGUL House Name _____

   Dist DINDIGUL State TAMILNADU

   Pin Code 624621

10. Home address in full : See Coln 9 above.
11. Particular of place where the recruits has resided for more than one year at time during the proceeding five years. In case of study abroad (including Pakistan). Particulars of all places where the recruits has resided for more than after attaining the age 21 years :-

From District.	To	Residential address in full ie. Vill, Thana, Name of District Headquarters or House No. Lane, Street Road and Town
1. FROM 2002	to 2007	R. AYYAMPALAYAM (P.O)
2.		PALANI (T.K)
3.		DINDUGUL (DT)

2

Father's

(a) Name in full with aliases, if any BBBB

(b) Present address (if dead give last address) : (As given in coin 9 above).

(c) Permanent address : (As given in coin 9 above).

(d) Profession (if service, give official address and designation)

13. Nationality of father INDIAN Mother INDIAN

Wife _____ Place of birth of wife _____

14. Educational Qualifications showing places of education with years in School and

3

(g) Is any case pending against you in any court of Law at the time of filling up this verification Roll? Yes/No ✓

(h) Have you ever been bound down? Yes/No ✓

(j) Is any case pending against you in any University or any other Educational Authority/Institution at the time of filling up of this Verification Roll? Yes/No ✓

(k) Have you ever been arrested for being a member of a banned Organisation? Yes/No ✓

(l) Have you ever been arrested for being member of a banned Militant Organisation? Yes/No. ✓

17. Reference (Entry Recruit should be asked to give names and address of two JCOs other trustworthy persons as reference, to whom reference should be made by the Centre Commandant concerned or other authority, if considered necessary at any stage).

1. aaaa
R-AYYAMPALAYAM (P.O)
PALANI (T.K), DINDUGUL (D.t)
TAMILNADU (State)

(Signature of the Recruit)

2. bbbb R-AYYAMPALAYAM (P
PALANI (T.K), DINDUGUL (D.t)
TAMILNADU (State)

(Signature of the Enrolling Officer)
Lt. Col.
कम्पनी कमान्डर
Company Commander
बर्की कम्पनी
Burki Company

Station : Pachmarhi (MP)

Dated : 31-10-2007

Station : Pachmarhi (MP)

Dated : 31OCT07

காவல் ஆய்வாளர் படிவத்தை பூர்த்தி செய்து அலுவலக முத்திரை உடன் கையெழுத்து செய்து அனுப்ப வேண்டும்

VERIFICATION REPORT BY THE STATE CID OFFICER

The CID Officer will complete the portion given below and will also enter any additional facts about the recruit, that may be available.

Railway Station and Distance from Home : _____

Whether or not the recruit has criminal Record. If so, in what respect ? : _____

Has the recruit ever been imprisoned ? : _____

If so, or how long and did his offence : _____

Involved moral turpitude ? : _____

Whether or not the recruit has been engaged in or associated with either engaged in Subversive/Criminal activities or has otherwise come to adverse notice ? If so, state in what particular aspect. : _____

Is the recruit in your considered opinion FIT for service in the Army/Navy ? : Yes/No

Dated :

Office Stamp

_____
(Signature of Verifying Officer)

The District Collector/Magistrate,
The Verifying Officer concerned after having completed the roll will return it to the
OFFICER COMMANDING,
AEC TRAINING COLLEGE & CENTRE,
PACHMARHI (MP) – 461 881

7. அன்னிய நாட்டு பயண அனுமதி சீட்டு / கடவுச் சீட்டு விண்ணப்ப விசாரணை

(PASSPORT VERIFICATION)

ஒரு நாட்டில் வசிப்பவர் தான் வசிக்கும் நாட்டைவிட்டு வேற நாடுகளுக்கு பணியின் நிமித்தமோ, மேற்படிப்பின் நிமித்தமோ, மருத்துவக் காரியங்களுக்காகவோ, சுற்றுலாவுக்காகவோ பிற காரியங்களுக்காகவோ செல்லும் போது தனது பெயர், வயது, நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி போன்ற விபரங்களை உரிய படிவத்தில் குறிப்பிட்டு உரிய சான்றாவணங்களுடன் அவர் வசிக்கும் பகுதியிலுள்ள கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பத்தை, அவர் சார்பான விபரங்கள் சரியானவைதானா என்பதை உறுதிசெய்யும் பொருட்டும், அவர் ஏற்கனவே தண்டனை பெற்றவரா என்பதையும், காவல் துறையினரால் தேடப்படுபவரா என்பதையும், அவர் மீது ஏதும் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதா என்பதையும் அறிந்து அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடத்திலிருந்து (DCRB) விண்ணப்பதாரரின் வசிப்பிட எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பி அதன் படி காவல் நிலைய உதவி ஆய்வாளர் செய்யும் சரிபார்ப்பு மற்றும் விசாரணைப் பணியே ''கடவுச்சீட்டு விண்ணப்ப விசாரணை'' ஆகும்.

கடவுச் சீட்டின் வகைகள் மற்றும் பெறுவதற்குத் தகுதியானவர்கள்

வ.எண்	கடவுச் சீட்டின் வகை	பெறுவதற்குத் தகுதியானவர்கள்
1.	சாதாரணக் கடவுச் சீட்டு	இந்தியக் குடிமக்கள்
2.	இந்திய வங்காள தேசக் கடவுச் சீட்டு	இந்தியக் குடிமக்கள்
3.	இந்திய இலங்கை கடவுச் சீட்டு	இந்தியக் குடிமக்கள்
4.	இந்திய இலங்கை கடவுச் சீட்டு (1954 = 1974 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (Agreement) பிரகாரம் திரும்ப அனுப்பப் பட்டவர்)	(1954 = 1974 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (Agreement) பிரகாரம் திரும்ப அனுப்பப் பட்டவர்)
5.	அலுவல் ரீதியான கடவுச் சீட்டு (OFFICIAL PASSPORT)	அரசு செலவில் பயணம் மேற்கொள்ளும் அரசு அலுவலர்கள் /இதர அலுவலர்கள் மற்றும் அவர்களுடன் இந்தியாவை விட்டு வெளியே அரசுச் செலவில் செல்லும் அவர்களது குடும்பத்தினரும்
7.	வெளிநாட்டுத் தூதுவர்கள் கடவுச் சீட்டு (Diplomatic Passport)	அலுவல் ரீதியாக வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் இந்திய அயல்நாட்டு பணியில் உள்ள அலுவலர்கள் /இதர அமைச்சகத்தில் உள்ள வெளியுறவு நிர்வாக அலுவலர்கள்/ (குடும்பத்தினர் உட்பட)

கடவுச்சீட்டு விண்ணப்ப விசாரணை

1967ஆம் வருடத்திய கடவுச் சீட்டுச் சட்டத்தின் படி கடவுச் சீட்டு விண்ணப்ப விசாரணை காவல் அலுவலரால் செய்யப்படவேண்டும்.

கடவுச்சீட்டு விண்ணப்ப விசாரணையின்போது செய்யக்கூடியவை

- படிவத்தில் கண்ட நபரை நேரில் பார்த்து படிவத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்துடன் ஒப்பீடு செய்து, இரண்டும் ஒத்துள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும். புகைப்படத்தில் மேல் விசாரணை அலுவலர் கையொப்பம் இடவேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் படிவத்தில் கண்ட முகவரியில் முந்தைய இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து வசித்துவருகிறாரா, இல்லையா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் இந்தியக் குடிமகனா என்பதை சரிபார்க்க வேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் உரிமையியல் / குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவரா இல்லையா என்பதை நிலையக் குற்றப் பதிவேடுகளைப் பார்வையிட்டு உறுதி செய்யவேண்டும்
- படிவத்தில் கண்ட நபர் முந்தைய 5 ஆண்டுகளில் ஏதேனும் குற்ற வழக்குகளில் சிறைத் தண்டனை பெற்றவரா, இல்லையா என்பதை உறுதி செய்யவேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் மீது ஏதேனும் நீதிமன்றத்தில் பிடியாணை (Warrant) பிறப்பிக்கப்பட்டு நிலுவையிலுள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் ஏதேனும் நீதிமன்ற ஆணை மூலம் இந்தியாவை விட்டு வெளிநாடு செல்லத் தடைசெய்யப்பட்டவரா என்பதை விசாரிக்கவேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் ஏற்கனவே கடவுச் சீட்டு (PassPort) பெற்றுள்ளாரா என்பதை விசாரிக்க வேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் மத்திய மாநில அரசு, பொதுத் துறை நிறுவனத்தில் பணிபுரிபவரா இல்லையா என்பதை விசாரிக்கவேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் இந்திய இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும், இந்தியப் பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபடுபவரா, எந்தவொரு அந்நிய நாட்டுடனோ அல்லது அந்நிய நாட்டு மக்களுடனோ தொடர்பு வைத்துக்கொண்டு இந்தியாவுக்கு எதிராக செயல்படுபவரா இல்லையா என்பதை விசாரிக்க வேண்டும்.
- மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடத்திலிருந்து வரப்பெற்ற படிவத்தை நியைத்தில் உள்ள உரிய பதிவேட்டில் பதிவுசெய்யவேண்டும்.
- படிவத்தில் கண்டுள்ள முகவரில் விசாரிப்பதுடன் அவர் வெளியூரில் படிப்பு, தொழில் அல்லது வேறு காரணங்களுக்காக நீண்ட காலம் தங்கியிருந்தால் அவர் தங்கியிருந்த பகுதிக்குட்பட்ட காவல் நிலையத்திலும் விசாரணை செய்யும் பொருட்டு குறிப்பிட்டு எழுதப்படவேண்டும்
- படிவத்தில் கண்ட, பொறுப்புள்ள நபர்கள் (Responsible Persons) என்று குறிப்பிடப்பட்ட இருவரிடமும் தனித்தனியாக வாக்குமுலங்கள் பெற வேண்டும்.
- படிவத்தில் கண்ட நபர் அரசால் தடை செய்யப்பட்ட இயக்கத்திலோ, மதவாத இயக்கங்களில் உறுப்பினராகவோ பிற பொறுப்பிலோ வசிப்பவரா என்பதையும், அவருடைய தனிப்பட்ட

ஒழுக்கங்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவைகளை அக்கம்பக்கத்திலும், ஊர் பிரமுகர்கள் மற்றம் ஊர்ப் பெரியவர்களிடமும் இரகசியமாக விசாரித்து அறியவேண்டும்.

- விசாரணையை முழுமையாக முடித்து விசாரணை அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரைக்குக் கீழ் தேதியிடுவதுடன் அவரின் பெயரை பெரிய எழுத்துக்களில் (Capital Letters) எழுதப்படவேண்டும்.
- விசாரணை முடிவை படிவத்தில் பதிலளித்தது போக தனியே இணைக்க வேண்டியவை இருந்தால் அதுகுறித்தும் தெளிவாக எழுதவேண்டும். ஏதேனும் குற்ற வழக்குகளில் அவர் சம்பந்தப்பட்டிருந்தால் அதுகுறித்து வழக்குத் தொடுத்த காவல் நிலையம், குற்ற எண், சட்டப்பிரிவு, வழக்கின் தற்போதைய நிலை, அவ்வழக்கில் இவரது பங்கு போன்ற விபரங்களைத் தெளிவாக எழுதப்படவேண்டும்.
- விசாரணைப் படிவத்தை அதில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் தாமதமின்றி திரும்ப மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூட்டத்திற்கு அனுப்பவேண்டும்.
- கடவுச் சீட்டு விண்ணப்ப விசாரனையை தனிப் பிரிவு அலுவலகம், S.B.C.I.D. பிரிவினரும் மற்றும் காவல் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்ட எந்த அதிகாரியும் மேற்கொள்ளலாம்.
- முறையாக விசாரிக்காமல், கடவுச் சீட்டு விண்ணப்பத்தை அனுப்பினால், விசாரணை அலுவலர் மீது துறை வாரியான நடவடிக்கை எடுக்கப்படும்.

செய்யக்கூடாதவை

- கடவுச்சீட்டு விசாரணையை அலுவலகத்தில் வைத்துச் செய்தல். படிவத்தில் கண்ட நபரை நேரில் பார்க்காமல் சான்று செய்தல்.
- படிவத்தில் கண்ட நபர் உரிமையியல் / குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவரா என்பதை அக்கம் பக்கம் விசாரிக்காமலும் நிலையக் குற்றப்பதிவேடுகளைப் பார்வையிடாமலும் அறிக்கை அனுப்புதல்.
- விசாரணை அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரைக்குக் கீழ் தேதியிடாமலும் கையொப்ப மிடப்பட்டுள்ள அலுவலரின் பெயரை பெரிய எழுத்துக்களில் இல்லாமலும் அறிக்கை அனுப்புதல்.
- விசாரணை படிவத்தை விசாரணை முடித்து அனுப்புவதில் காலதாமதம் செய்தல்.

S.No. DATE :

THE COMMISSIONER OF POLICE
THE SUPERINTENDENT OF POLICE

Sir,

SUB : IDENTITY VERIFICATION OF PASSPORT APPLICANT

A personal particulars form with copies of supporting documents and photograph of Sri/Smt/Kum .....MMMM.....

Son/Wife/Daughter of.....is towarded here with for verification, Report may kindly be sent to this office on the following points as early as possible but in any case not later than four weeks from date of receipt of this form

"PHOTOGRAPH OF APPLICANT IN P.P. FORM TO BE DEFACED BY. POLICE OFFICER"

For **PASSPORT OFFICER**
MADURAI

PART - A

i)	Do the particulars and description given in the form and photograph tally ?	YES/NO
ii)	Has the applicant been living,except for visits outside, at the address given during the preceeding two years ?	YES/NO
	(If the answer to any of above questions(1) & (11) are No, please furnish the details in a separate note)	
iii)	Is the applicant a Citizen of INDIA ? if the answer is No please furnish the details in a separate note	YES/NO
iv)	Is the applicant facing any criminal charges	YES/NO
v)	Has the applicant Convicted for any Crime During the preceeding 5 years and sentenced to imprisonment	YES/NO
vi)	Has a warrant or summons for the appearance of or a warrant for the arrest of the applicant been issued by any court ?	YES/NO
vii)	Has any court made an order prohibiting the departure of the applicant from india ?	YES/NO
viii)	Has the applicant travelled abroad before and is he / she in possession of a passport / travel documents ?	YES/NO
ix)	Is the applicant an employee of Central-State Government / Statutory Body / Public Sector Undertaking ?	YES/NO

(P.T.O)

Photograph

PERSONAL PARTICULARS FORM
(In Duplicate)

1. Full name (Initials not allowed)
MMM

2. Sex: Male / Female / Others FEMALE

(a) Has the applicant ever changed name?

(b) If yes, previous name: .....

4. Date of Birth: 12-MAY-1980 5. Place of Birth MADURAI

6. Profession NIL

7. a) Father NNN
(Surname) (Name)

b) Mother LLL
(Surname) (Name)

c) Husband / wife —
(Surname) (Name)

8 a) Permanent Address & Tel. No. along with Police Station
SOUNDARA PANDIYA VINAYAGAR
KOIL STREET, SANKARAN KOVIL
THIRUNELVELI DT
SANKARAN KOVIL (POPS)

8(b) Present Residential Address & Tel. No, along with Police Station and residing since
SOUNDARA PANDIYA VINAYAGAR
KOIL STREET, SANKARAN KOVIL
THIRUNELVELI DT
0

9. If you have not been resident at the address given at COLUMN 8(b) continuously for the last one year, please furnish other address(es) with duration(s) resided (Please furnish an additional set of P P Forms for each address with Police station.

From.....To.....
— NA —

From.....To.....
— NA —

10. **References:** Names and Addresses of two responsible persons in the applicant's locality who can vouch for the applicant.

(1) Name, Address & Tel. No.
XXX
SOUNDARA PANDIYA VINAYAGAR
KOIL ST. SANKARAN KOVIL

(2) Name. Address & Tel. No.
YYY
SOUNDARA PANDIYA VINAYAGAR
KOIL ST. SANKARAN KOVIL

11. Citizenship of India by: Birth ☑ Descent ☐ Registration ☐ Naturalization ☐

12. Furnish details of previous passport / travel document, if any:
(i) Passport/Travel document No: — (ii) Date & Place of issue —

MDUI02414208

For Police Use Only

Recommended Passport: **YES/NO**

MMM

Signature or Thumb Impression of the applicant
(Left Hand T.I. if male and Right Hand T.I. if female)

PART - B

Has the applicant indulged in activities which are prejudicial to the sovereignity and integrity of india, the security of India, friendly realtions of india with any foreign country or in the interests of the general public? **YES/NO**

(If the answer to any of the above questions are 'YES' Please furnish the details in a separate note)

RECOMMENDATION OF THE INSPECTOR OF POLICE **SUB-INSPECTOR OF POLICE**

District Police Officer

REF No .....

DATE .....

SUB : Passport verification Report of .....

.....

.....

.....

Bharathi Ula Veethi, Madurai-2.

Retransmitted to the Passport Office, [redacted]

THERE IS NO OBJECTION IN GRANTING PASSPORT TO THE APPLICANT

Encl : One

SUPERINTENDENT OF POLICE

8. அகதிகள் முகாம் (REFUGEES CAMP)

அகதிகள் (Rufugees)

இயற்கைச் சீற்றங்கள், போர் அபாயங்கள், போர் அழிவுகள், திடீர்க் கலவரப் பயம் காரணமாக அந்நாட்டில் வசிக்கும் மக்கள் அங்கு தொடர்ந்து வசிப்பதற்குப் பயந்து, சொத்து சுகங்கள், சொந்தபந்தங்களை இழந்து அந்நாட்டைவிட்டு அகன்று தனியாகவோ, குடும்பத்தோடோ வேற்று நாட்டுக்கு இடம் பெயர்ந்து வரும் போது அவர்கள் ''அகதிகள்'' (Refugees) எனக் கருதப்படுவர்.

அகதிகள் முகாம் (Refugees Camp)

அவ்வாறு வருபவர்களை சம்பந்தப்பட்ட அரசு அரவணைத்து அவர்களுக்குத் தங்க இடம், உண்ண உணவு, உடுக்க உடை , தொழில் வாய்ப்புக் கொடுத்து அவர்கள் தங்களது தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்லும் வரை அவர்களைத் தங்கவைக்கும் தற்காலிக இடம் ''அகதிகள் முகாம்'' (Refugees Camp) எனப்படும்.

அகதிகள் முகாம் பராமரிப்பு (Maintenance of Refugees Camp)

இந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளைக் குடும்பம் வாரியாக இனங்கண்டு, அவர்களின் பெயர், வயது, பாலினம், பெற்றோர் அல்லது கணவர் பெயர், சொந்த நாட்டில் அவர்களது முழு முகவரி போன்ற விபரங்களைச் சேகரித்து, ரேசன் அட்டையின் அடிப்படையில் குடும்பம் வாரியாகப் புகைப்படம் எடுத்து விபரங்கள் குறிக்கப்பட்டிருக்கும் பதிவேடு அகதிகள் முகாம் பதிவேடு. இப்பதிவேடுகள் காவல் நிலையத்திலும், வருவாய்த் துறை அலுவலகத்திலும் தனித்தனியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அகதிகள் முகாமில் செய்யவேண்டியவை

- இந்த முகாமிற்கு ''அகதிகள் முகாம் காவல்'' (Refugees Camp Guard) கொடுக்கப்பட்டிருக்கும். அதற்கு ஒரு தலைமைக் காவலர், நான்கு காவலர்கள் (1+4 Guard) நியமிக்கப்படவேண்டும். அந்த முகாமில் ''அகதிகள் நகர்வுப் பதிவேடு'' (Refugees Movement Register) என்ற பதிவேடு ஒன்றும் பராமரிக்கப்படவேண்டும். அதில் முகாமை விட்டு தற்காலிகமாக வெளியே செல்லும் நபர்களின் பெயர், வெளிச் செல்லும் நேரம், வெளிச் செல்வதற்கான காரணம், திரும்ப வந்த நேரம் ஆகிய விபரங்களை முகாம் காப்புக் காவலர்கள் சரியாகப் பதிவு செய்கிறார்களா என்றும் அதில் உரிய நபர்களிடம் இரு சமயங்களிலும் கையொப்பம் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்வையிடவேண்டும்.
- வெளியில் செல்லும் முகாம் அகதிகளை மாலை 6.00 மணிக்குள் திரும்புமாரு அறுவுறுத்த முகாம் காவலர்களுக்கு உத்தரவிடவேண்டும்.
- முகாமில் இருக்கும் அகதிகளை யாராவது பார்க்க வந்தால் அவர்களைப் பற்றி முழுமையாக விசாரித்து, அதன் அவசியத்தைப் பொருத்து இது விபரத்தை முகாமில் இருக்கும் அகதிக்குத் தெரிவித்து அவரின் சம்மதம் பெற்றும், முகாம் காவலருக்கு நம்பிக்கை ஏற்பட்டால் அதற்குரிய நோட்டுப் புத்தகத்தில் நாள், நேரம், பெயர் மற்றும் முழு விலாசம், பார்க்கப்போகும் அகதியின் விபரம், பார்ப்பதன் நோக்கம் ஆகியவற்றை எழுதிக் கையொப்பம் பெற்றும் முகாம் காவலர்கள்

முன்னிலையில் குறிப்பிட்ட கால அளவுக்கு மட்டுமே பேச அனுமதிக்க வேண்டும் என்ற விபரத்தை முகாம் காவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

- குறிப்பாக முகாமில் உள்ள இளைஞர் மற்றும் பெண்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து அவர்கள் எந்தவித சட்டவிரோதச் செயல்களிலோ, தீவிரவாத அமைப்புகளிலோ, குற்றச் செயல்களிலோ, விபச்சாரத்திலோ ஈடுபடாதவண்ணம் கண்காணிக்கும்படி முகாம் காவலர்களுக்கு அறிவுறுத்தவேண்டும்.
- சந்தேகத்திற்கிடமாகச் செயல்படும் அகதிகளையும், ஆடம்பரச் செலவு செய்யும் அகதிகளையும் அவர்கள் செய்யும் பணி, வருமானம் மற்றும் நண்பர்கள் குறித்து விசாரணை செய்து அவர்கள் ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்களா எனக் கவனித்து நடவடிக்கை எடுத்தல்.
- முகாமில் காப்புக் காவலில் இருக்கும் காவலர்கள் தீயணைப்பு நிலையம், ஆம்புலன்ஸ், அரசு மருத்துவமனை, முக்கிய தனியார் மருத்துவமனைகள், முக்கிய அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், உயர் காவல் அலுவலர்கள் ஆகியோர்களின் தொலைபேசி மற்றும் செல்போன் எண்களைத் தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றை பட்டியலிட்டு முகாம் காப்பறையில் தொங்க விடவேண்டும்.
- முகாமில் தங்கியிருப்பவர் முகாமைவிட்டு தன் சொந்த நாட்டுக்கு திரும்பச் சென்றுவிட்டால் அவருடைய பெயர் விலாசத்தை முகாம் கணக்கிலிருந்து நீக்குவதற்குரிய அறிக்கையினை வருவாய்த் துறையினருக்கு உடனடியாக அனுப்பி வைக்கவேண்டும்.
- முகாமிலிருந்து தற்காலிகமாக வெளிச் செல்வோர் ஒரு தினத்திற்கு மேல் செல்வதாயிருந்தால் அவர்கள் வெளிச்செல்வதற்கான காரணத்தை முன்கூட்டியே தெரிவித்து உரிய உத்திரவு பெற்று வெளிச் செல்ல அனுமதிக்க வேண்டும்.
- முகாம் பாராப் புத்தகம் (Sentry Relief Book) சரிவரப் பராமரிக்கப்பட வேண்டும்.
- முகாம் காப்புக் காவலர்களுக்கு உரிய துப்பாக்கி, தோட்டாக்கள் வழங்கப்படவேண்டும்.
- முகாமைத் தினந்தோறும் பகலிலும் இரவிலும் தணிக்கையிடல் வேண்டும்.
- முகாமில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ஏதேனும் கோரிக்கைகள், பிரச்சனைகள் இருந்தால் அவைகளை முன்கூட்டியே கேட்டறிந்து அதனை உரிய துறைக்கும், காவல் உயர் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்தி அலுவலர்களுக்கும் உத்திரவுப்படி அகதிகளின் கோரிக்கைகள் மற்றும் பிரச்சனை களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவேண்டும்.
- அந்நிய சந்தேக நபர்களோ அல்லது வேறு முகாமைச் சேர்ந்தவர்களோ முகாமிற்குள் வந்து செல்லுதல் மற்றும் தங்கியிருத்தளை முகாம் காப்புக் காவலர்கள் மற்றும் 'க்யூ' பிரிவு காவலர்கள் ('Q' Branch) மூலமாகவும் இரகசிய விசாரணை மூலமாகவும் அறிந்து தனிப் பிரிவு மற்றும் உயர் அலுவலர்களின் உத்தரவுப்படி உரிய மேல்நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- மேலே குறிப்பிட்ட அனைத்து அறிவுரைகளையும் முகாம் அலுவலுக்குப் பணி நியமிக்கப்பட்டுள்ள வருவாய்த் துறை அலுவலருடன் இணைந்து பணி செய்யவேண்டும்.
- அகதிகளின் வெளித் தொடர்புகள், தொலைபேசித் தொடர்புகள் ஆகியவற்றை இரகசியமாகக் கண்காணிக்கவேண்டும். சந்தேகமிருந்தால் சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களுக்குத் தகவல் தெரிவிக்கவேண்டும்.
- முக்கிய நபர்களின் வருகையின்போது முகாமில் அனைத்து அகதிகளும் ஆஜரில் இருக்க வேண்டும். ஆஜர் இல்லாதவர்களை விசாரணை செய்து ஆஜரின்மைக்கான காரணம் சரியானது தானா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

செய்யக்கூடாதவை

- முகாமிற்குள் அந்நிய சந்தேக நபர்களோ அல்லது வேறு முகாமைச் சேர்ந்தவர்களோ வந்து செல்லவோ தங்கவோ அனுமதித்தல்.
- முகாமிற்குள் சட்டவிரோதச் செயல்கள் நடக்க அனுமதித்தல்.
- முகாமிலிருந்து தற்காலிகமாக வெளிச் செல்வோர் அதற்கான பதிவேட்டில் பதிவு செய்யாமல் வெளிச் செல்ல அனுமதித்தல்.
- முகாமிலிருந்து தற்காலிகமாக வெளிச் செல்வோர் ஒரு தினத்திற்கு மேல் செல்வதாயிருந்தால் அவர்கள் வெளிச்செல்வதற்கான காரணத்தை முன்கூட்டியே தெரிவித்து உரிய உத்திரவு பெறாமல் வெளிச் செல்ல அனுமதித்தல்.
- மாலை 6.00 மணிக்கு மேல் யாரையும் முகாமை விட்டு வெளியே செல்ல அனுமதித்தல்.
- பணியிலிருக்கும் காவலர்கள் அகதிகளிடம் நெருங்கிப் பழக அனுமதித்தல்.

9. கோயில் பாதுகாப்புப் படை (TEMPLE PROTECTION FORCE)

அரசால் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பெரிய மற்றும் சிறிய கோயில்களில் சிலை திருட்டு, உண்டியல் திருட்டு போன்றவை (Idol theft, Hundial theft etc) நடவாமல் தடுக்கும் வண்ணம் இரவு நேரப் பாதுகாப்பு கருதி ஓய்வு பெற்ற காவலர்கள், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட காவல் நிலையக் காவலர்களையும் சேர்த்து நியமித்து அவர்கள் அங்கு இரவு முழுவதும் தங்கி விழித்திருந்து பாதுகாப்பு அலுவல் செய்வதற்காக அமைக்கப்பட்டது கோயில் பாதுகாப்பு படை ஆகும்.

கோயில் பாதுகாப்புப் பணிக்கு அனுப்பும்போது செய்யக்கூடியவை

- கோயில் பாதுகாப்புப் பணிக்கு ஓய்வுபெற்ற காவலர், முன்னாள் இராணுவத்தினர் நிலையப் பணியிலிருக்கும் காவலர் ஆகியோர்களுக்கு மாலை 18,00 மணிக்கு நிலையத்தில் வைத்து பணிப்புத்தகம் நிரப்பிக் கொடுத்து அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கோயில்களுக்குப் பணிக்கு அனுப்பவேண்டும்.
- கோயில் பாதுகாப்புப் பணிக்கு காவலர்களை அனுப்பும்போது பொது நாட்குறிப்பில் பதிவு செய்யவேண்டும்.
- காவலர்களை கோயில் பாதுகாப்பு பணிக்கு அனுப்பும்போது அவர்களுக்கு துப்பாக்கி, தோட்டாக்கள், டார்ச் லைட் மற்றும் வாக்கி டாக்கி ஆகியவை கொடுத்து அனுப்ப வேண்டும்.
- பணிக்குச் சென்ற காவலர்கள் இரவு 18,00 மணி முதல் மறுநாள் காலை 06,00 மணி வரை பணியில் இருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கவேண்டும்.
- கோயில் நடை அடைத்தபின் பணிக் காவலர்கள் கோயிலுக்குள் இருந்து குற்றங்கள் நடவாமல் விசில் சத்தம் கொடுத்து பணி செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- கோயில் நடை அடைத்தபின் கோயிலின் உள்ளே உள்ள அனைத்து சந்நிதிகள் மற்றும் உட் பிரகாரங்கள், உண்டியல்கள் ஆகியன சரியாகப் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளதா என்பதைத் தினந்தோறும் கண்காணிக்கும்படி அறிவுரை வழங்கவேண்டும்.

- இரவு நேரங்களில் பணிக் காவலர்களைத் தணிக்கை செய்ய வேண்டும்.
- பணியிலிருக்கும் காவலர்கள் சீருடையில் இருக்கிறார்களா என்பதைத் தணிக்கையின்போது கண்காணிக்க வேண்டும்.
- பணிக் காவலர்கள் கோயிலுக்குள் ஒரே இடத்தில் இருந்து கண்காணிக்காமல் கோயில் முழுவதும் ரோந்து சுற்றி வரும்படி அறிவுரை கொடுத்து அனுப்ப வேண்டும்.
- அந்நிய சந்தேக நபர்கள் நடமாட்டங்கள் பற்றியும், கோயில் வளாகத்தில் இரவில் வெளியாட்கள் தங்குகிறார்களா என்பதையும் கவனிக்க வேண்டும் என்று பணிக்காவலர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.
- பணிக்காவலர்கள் கோயில் பணியாளர்களிடம் சுமூகமான உறவுமுறையுடன் பழகவேண்டும் என்பதை அறிவுறுத்த வேண்டும்.
- பணிக் காவலர்கள் காலை 06,00 மணிக்குப் பணி முடித்து நிலையம் வந்து பணிப்புத்தகம், துப்பாக்கி, தோட்டா, வாக்கி டாக்கி ஆகியன வற்றை திரும்ப ஒப்படைத்து விட்டார்களா, பாராப் புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டுவிட்டதா என்பதைத் தினந்தோறும் கண்காணிக்க வேண்டும்.
- பணிக்காவலர் ஆஜரில் இல்லாமல் (Absent) இருந்தால் நிலையம் வந்து பொது நாட்குறிப்பில் எழுதி தனிஅறிக்கை மூலம் தக்க நடவடிக்கைக்காக ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

செய்யக்கூடாதவை

- வேற்று மதத்தைச் சார்ந்த காவலர்களை கோயில் காவல் பணிக்கு பெரும்பாலும் அனுப்புதல்.
- பணிக் காவலர்கள் பணிக்குத் காலதாமதமாகச் செல்ல அனுமதித்தல்.
- பணிக் காவலர்கள் பணிப் புத்தகம், துப்பாக்கி, தோட்டா, டார்ச் லைட் மற்றும் வாக்கி டாக்கி, லத்தி, ரெயின் கோட் ஆகியன இல்லாமல் பணிக்குச் செல்ல அனுமதித்தல்.
- பணி முடித்து நிலையம் வரும் காவலர்கள், பணிக்குச் செல்லும்போது நிலையத்திலிருந்து பெற்றுச் சென்றவைகளைத் திரும்ப ஒப்படைக்காமல் துப்பாக்கி தோட்டாக்களை தன்வசம் வைத்துக் கொள்ள அனுமதித்தல்.

10. மறைமுகக் கண்காணிப்பு (SHADOWING)

குற்றவாளிகளை, அவர்களுக்கு தெரியாமல் அவர்களது நடத்தைகளையும், செய்கைகளையும், தொடர்பு களையும், இயக்கத்தையும் பற்றி இரகசியமாக பின் தொடர்ந்து அவர்கள் அடுத்து செய்யும் குற்றங்களை தடுப்பதே கண்காணிப்பு ஆகும்.

கண்காணிப்பு செய்யும்போது கவனிக்கப்பட வேண்டியவைகள்

- கண்காணிப்பு இரகசியமாக இருக்க வேண்டும்.
- எக்காரணம் கொண்டு கண்காணிப்பது குற்றவாளிகளுக்கு தெரியக்கூடாது.
- குற்றவாளிகளை கண்காணிக்க தகவலாளர்களை Informents பயன்படுத்தலாம்.
- குற்றவாளிக்கு யார் கண்காணிக்கின்றார் என்ற விபரம் தெரியக்கூடாது.

- விசாரணைகள் இரகசியமாக இருக்க வேண்டும்.
- குற்றவாளிகள் தொடர்பு நபர்களை விசாரிக்கும் போது குற்றவாளிக்கும், தொடர்பு நபர்களுக்கும் சந்தேகம் வராதவாறு விசாரணைகள் இருக்க வேண்டும்.
- குற்றவாளிகள் வேறு காவல் நிலைய சரக எல்லையில் பதுங்கியிருந்தால் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு விசாரணைப் படிவம் 'ஆ' (Enquiry Roll Form 'B') அனுப்ப வேண்டும்.
- சந்தேகப்பட்ட அந்நிய நபர் குற்றவாளிகள் காவல் நிலைய எல்லைக்குள் இருந்தால், சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தணிக்கை செய்து விசாரணைப் படிவம் 'ஆ' (Enquiry Roll Form 'B') படிவம் அனுப்ப வேண்டும்.
- கண்மறைவில் உள்ள குற்றக்குணத்தாரைப் (O.V.) பற்றிய தகவல் படிவம் DCRB –க்கு அனுப்ப வேண்டும்.
- குற்றக் குணத்தார் செல்லக்கூடிய இடங்கள் மற்றும் செயல்பாடுகளை சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு காவலர்களை அனுப்பி கண்காணிக்க வேண்டும். வேறு மாநிலத்திற்கு சென்றால் DCRB–க்கு அறிக்கை கொடுக்க வேண்டும்.
- அறிவிப்பு செய்த குற்றவாளி வசிப்பிடம் சென்று தணிக்கை செய்து ஆஜர் தன்மையும் அவரது செயல்பாட்டையும் விசாரிக்கலாம்.
- அயல் நாட்டினரின் நடத்தை, ஒழுக்கத்தின் மீது சந்தேகம் இருந்தால் காவல் ஆய்வாளர் மூலம் காவல் கண்காணிப்பாளருக்கு கண்காணிப்பு செய்ய அறிக்கை அனுப்ப வேண்டும்.
- அயல் நாட்டினரை காவல் கண்காணிப்பாளர் உத்திரவு பெற்றே கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- அயல்நாட்டினர் கொடிய குற்றத்தில் பங்கேற்பதாக தகவல் / சந்தேகம் இருந்தால் உடனே காவல் ஆய்வாளர் மூலம் உயர் அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- அயல் நாட்டினரை அவசியமாக வெளியேற்ற நேர்ந்தால் 1946–ம் ஆண்டு அயல் நாட்டினர் சட்டம் பிரிவு 3(2) (இஇ)–ன் கீழ் இந்தியாவில் இருந்து வெளியேற்றலாம்.

கண்காணிப்பு செய்ய வேண்டிய குற்றகுணத்தார்கள்

1. தீவிரவாதிகள்
2. அடிப்படை வாதிகள்
3. நக்சலைட்டுகள்
4. தமிழக அரசால் தடை செய்யப்பட்ட அமைப்புகள் (உ–ம்) Peoples War Group (PWG), Tamil Nadu Liberation Army (TNLA)
5. DC, KD, ரவுடி, சந்தேக நபர்கள், வழக்கமான குற்றவாளிகள், MOB குற்றவாளிகள்

வரிசை எண்கள் 1– முதல் 4 வரை உள்ளவர்களை குற்றப் புலனாய்வு CIU, SIU, 'Q' Branch போன்ற பிரிவினர் தொடர் கண்காணிப்பு செய்து வருகின்றனர். அவர்களுடன் உதவி ஆய்வாளர் தொடர்பு வைத்துக் கொண்டு கிடைக்கும் தகவல்களின் பேரில் உயர் அலுவலர்களின் உத்திரவுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- வரிசை எண் 5– ல் கண்ட குற்றக் குணத்தார்களை உதவி ஆய்வாளர் தணிக்கை செய்து அதனை காவல் நிலைய பதிவேட்டில் பதிவு செய்து வர வேண்டும். குற்றக் குணத்தார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து உயரலுவலர்களிடம் கலந்து ஆலோசனை செய்து அவர்கள் உத்திரவுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- குற்ற குணத்தார் தணிக்கையில் அலட்சியம் காட்டுதல்.
- வரிசை எண் 1 முதல் 4 வரையில் உள்ளவர்களை கண்காணிக்காமல் இருத்தல், மற்றும் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுதல்.

பார்வை:

i. PSOs 762, 767, 788, 792, 795,798

VI. பார்வை மற்றும் ஆய்வு

1. மாவட்டக் குற்றப் பதிவேடுகள் கூடம் (DISTRICT CRIME RECORDS BUREAU)

குற்றங்கள் பற்றியும், குற்றவாளிகளைப் பற்றியும் தகவல்கள் திரட்டி, ஒழுங்குபடுத்தி, அவற்றைப் புலனாய்வு அலுவலர்களுக்குத் தேவைப்படும்போது அளித்து ஒருங்கிணைப்புச் செய்வதற்காக தமிழ்நாடு காவல் மாவட்டங்கள் தோறும் செயல்படும் பிரிவு மாவட்டக் குற்றப் பதிவேடுகள் கூடம் ஆகும்.

i. இக்கூடம் சென்னையிலுள்ள மாநில குற்றப் பதிவேடுகள் கூடத்தை (SCRB) தலைமையிடமாகக் கொண்டு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் / மாநகரக் காவல் ஆணையர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் (Deputy Superintendent of Police) தலைமையில் இயங்கி வருகிறது.

ii. மாவட்டத்திலுள்ள புலனாய்வு அலுவலர்களுக்குக் குற்றங்களைத் தடுக்கவும், நடைபெற்ற குற்றங்களில் சீரிய புலனாய்வு செய்யவும் இக்கூடம் உதவுகிறது.

iii. கைச்சுவடிக் குற்றவாளிகள் (DC) மற்றும் வழக்கமான குற்றவாளிகள் (HO) மற்றும் குற்ற செய்முறை விளக்கக்கூட (MOB) குற்றவாளிகளின் புகைப்பட தொகுப்புகள், சரித்திரப் பதிவேடுகள் ஆகியவற்றை இக்கூடம் பராமரிக்கிறது.

iv. குற்றவாளிகள் பற்றிய விபரங்களைக் காவல் நிலையங்களிலிருந்து பெற்று சேமித்து, பாதுகாத்தும், குற்றங்கள் பற்றியும், குற்றங்கள் செய்பவர்கள் பற்றியும் தகவல்களை (M.O.) செய்முறை வாரியாகப் பிரித்து வைத்தலும், பாரிக் குற்றங்களில் (Grave Crime) ஈடுபடும் வழக்கமான குற்றவாளிகளைப் பற்றிய விபரங்களை அறிவுரைக் குறிப்பாணை (Advisory Memo) மூலம் தேவைப்படும் புலனாய்வு அலுவலர்களுக்கு வழங்குவதும் இக்கூடத்தின் முக்கியச் செயலாகும்.

v. வாராந்திரக் குற்றச் சம்பவத் தாள் (Weekly Crime and Occurrence Sheet or C & O Sheet) குற்றவாளிகளைப் பற்றியும், குற்றங்கள் பற்றியும் முறையான தகவல்களை மாவட்ட அளவில் அளிப்பதற்காக, ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை வரை நடைபெற்ற குற்றங்கள் மற்றும் அதன் விபரங்கள் வியாழன் தோறும் இக்கூடத்திலிருந்து வெளியிடப்படும். இது 4 பாகங்களில் வெளியிடப்படும்

vi. மாவட்டத்தில் நடைபெறும் குற்றங்கள் பற்றிய குற்ற மதிப்பீடு (Monthly Crime Review) அறிக்கை தயார் செய்வதும் இக்கூடத்தின் பணியாகும்.

SI_GUIDE.indb 249 1/6/2009 8:51:51 AM

vii. அடையாளம் தெரியாத பிணம், காணாமல் போன நபர்கள் சம்பந்தமான வழக்குகளில் (THALASH) படிவம் பெற்று புலன் விசாரனைக்கு உதவி செய்தல்.
viii. காவல் நிலைய வருடாந்திர நிர்வாக அறிக்கை மற்றும் வருடாந்திரக் குற்ற அறிக்கைகளைப்பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

பார்வை செய்யும்போது உதவி ஆய்வாளர் கவனிக்கவேண்டியது

i. உதவி ஆய்வாளர் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது இக்கூடத்தைப் பார்வையிட (Visit) வேண்டும்.
ii. பார்வைக்குச் செல்லும்போது நிலையக் குற்ற வரலாறு பாகம் **1** (Part – I), F.I.R. Index மற்றும் G.C.R. Particulars. கொண்டுசெல்லவேண்டும்.
iii. இக்கூடத்திலிருந்து கிடைக்கப்படும் அறிவுரைக் குறிப்பாணைகளுக்கு காலதாமதம் இல்லாமல் பதில் அளிக்க வேண்டும்.
iv. பார்வை செய்யும்போது இரு தரப்பினருக்கும் பலன் அளிக்கும் விதத்தில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். குற்ற வழக்குகள் குறித்து தனக்கு உள்ள சந்தேகங்களை விவாதித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
v. பார்வை செய்யும்போது சொத்து சம்பந்தப்பட்ட நிலுவையிலுள்ள (U.I property Cases) வழக்குகள் சம்பந்தமாக சந்தேகிக்கப்படும் நபர்கள் பற்றி விவாதிக்க வேண்டும்.
vi. காவல் நிலைய எல்லையில் இருக்கும் வெளிநாட்டுக்காரர்கள், நிலுவையில் உள்ள பாஸ்போர்ட் சரிபார்ப்பு அறிக்கை, தண்டனை குறிப்பாணை, SDFPB மற்றும் FP அனுப்பிய விபரம், நிலுவையில் உள்ள விபரம் பற்றி விவாதிக்க வேண்டும்.
vii. DCs MOB மற்றும் H.O இவர்களின் சரித்திரப் பதிவேடுகளை ஆரம்பித்த உடன் தற்போதைய நிலவரம் பற்றி விவாதிக்க வேண்டும். புதிதாக DC, HO பதிவேடுகள் ஆரம்பிப்பது பற்றியும், தலைமறைவாக உள்ள கெட்ட நடத்தைக்காரர்கள் (OV, DC, OV, HO, OV, KD, OV Suspects OV Ex-Convicts) பற்றியும் விவாதிக்க வேண்டும். (OV- Out of View)
viii. அந்தக் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட நன்னடத்தை காப்பு (Security Proceedings) வழக்குகள் பற்றி விவாதிக்க வேண்டும்.
ix. கெட்ட நடத்தைக்காரர்களின் சரித்திரப் பதிவேடு முடித்தது மாறுதல் செய்தது பற்றிய விபரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.
x. சம்பவ இடத்தில் (SOC) இருந்து பெறப்பட்ட அடையாளம் காணப்பட்ட (FP lifted cases) பற்றிய விபரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.
xi. அடையாளம் தெரியாத பிணங்கள் பற்றிய விபரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.
xii. அந்தக் காலாண்டில் சிறையிலிருந்து வெளிவந்த குற்றவாளிகள், அவர்களின் தற்போதைய நடத்தைகள் பற்றிய விபரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.
xiii. கணிணிப் பிரிவில் (Computer Wing) FIR அனுப்பிய விபரம் மற்றும் நிலுவையில் உள்ள Computer Forms I to VII- பற்றிய விபரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.
xiv. DCRB Visit – மற்றும் Computer Wing Visit – பாரங்களை நிரப்பி கையொப்பமிடல் வேண்டும்.
xv. DSP DCRB அவர்களை அவ்வப்போது சந்தித்து அறிவுரை பெறவேண்டும்.

செய்யக்கூடாதவை

i. இக்கூடத்திற்குச் செல்லாமல் இருத்தல்.
ii. சந்தேகங்களை வெளிப்படையாக விவாதிக்கத் தயங்குதல்.

PROCEEDINGS OF THE ASSISTANT COMMISSIONER OF POLICE, CITY CRIME RECORDS BUREAU, SALEM CITY ON THE VISIT OF INSPECTORS / SUB-INSPECTORS OF POLICE, SALEM CITY TO CITY CRIME RECORDS BUREAU, SALEM CITY FOR THE IVth QUARTER ENDING : 31.12.2008.

oOo

PRESENT: THIRU. _____
Asst.Commissioner of Police,
City Crime Records Bureau,
Salem City.

2. THIRU. _____
Inspector of Police,
PS.,
Salem City.

3. **THIRU.** _____
Inspector of Police,
C.C.R.B., Salem City.

oOo

Section, Cr.No. and Sec.of Law.

1. Important unlocated UI cases with M.O.)

2. Offenders wanted or suspected in case of UI accused or otherwise and action taken so far in this regard.)

3. Property recovered yet to be identified (102 Cr P.C.))

4. No.of Burglary cases)

5. No.of cases F.P. expert attended)

6. No.of cases where F.P.traced)

7. Proposal for registering in DCs. & HOs.)

8. No.of CV DCs. of the last quarter and it traced particulars)

9. Details of active criminals including DC & HO yet to be photographed.)

11. Pending dowry reports yet to be registered)

12. Pending claim forms yet to be sent to legal aid in accident cases)

Inspector of Police,

Circle :

Dated :

Sub-Inspector of Police

1.

2.

3.

4.

5.

Inspector of Police,
C.C.R.B., Salem City.

REMARKS

S.No.	Section		Signature of the incharge
1.	D-2 Crime and Publication		...
2.	D-3 Prohibition	) ...	
3.	D-4 Dossier Sheets and	)	
4.	D-5 Statistical	...	
5.	D-7 Dowry Cell	)...	
	NBW s. & Advisory Memos	)	...

NOTE:

6. Is yet to be visited

Asst.Commissioner of Police,
City Crime Records Bureau,
Salem City.

பார்வை : PSO 607 to 621

CRB / Visit / Format

1. Name, Rank of the Officer and Police Station :

2. Date of Visit :

3. Offenders wanted or suspected in crime cases and their present whereabouts :

4. Cut file index :

5. Affairs relating to foreigners residing in the Station limit :

6. Pending passport verification papers :

7. Details of advisory memos pending without reply :

8. Details of crime cases disposed during the quarter :

9. Details of Conviction memos sent to SDFPB and FPB yet to be received :

10. Pending reply for memos :

11. DCs comparison and their current doings with Photograph :

12. H.O. Sheet comparison and their current doings with Photograph :

13. Proposal for pending DC Sheet :

14. Proposal for opening of H.O. Sheet :

15. Details of NBWS pending in the court:

16. Details of crimes against women :

17. Details of U.I. Crime cases (snatching, wire theft, Idol theft, Cycle theft, Automobile, theft, Bank theft, Burglary etc)

18. Details of violent crimes in which accused not known :

19. Details of Robbery cases :

20. Details of Grave crimes :

21. Action taken u/s 356 Cr.Pc during the quarter :

22. Whether photographs of the criminals were sent to DCRB if not reasons for delay

23. Details of action taken against the receiver of stolen properties:

24. Details of OV DC, OV HO OV KD, OV suspected etc. :

25. Details of OV Ex-convicts :

26. Details of security cases booked during the quarter :

27. Details of cases in which SOC prints developed indentified and details of suspected accused;

28. Details of History sheet transferred or closed during the quarter

29. Details of conviction memo pending with S D PPH without F.P.No

30. Details of undentified dead bodied photos taken for publication of C.I.G.;

31. Current doings of criminals released from central prison during the quarter

(vide C.No.D4/1/CRB/TIN/03)

S.I./Inspr. of Police,

Remarks:

Dy.Supdt of Police,
DCRB Tirunelveli district.

Computer wing Triunelveli District

1. Station :

2. Total No. of Cases Registered as on for the year 01.01.08 to :

3. Total FIR sent to C.W/DCRB for the year 01.01.08 to :

4. Total NO of Grave Crime and Crime cases Registered (Crime No.Wise) for the year 01.01.08. to :

5. Pending integrated investigation form to SW/DCRB (Crime NO.Wise) :

Form I

Form II

Form III

Form IV

Form V

Form VI

Form VII

Inspr/ S.I Of Police.

D1 D4

D2 D5

D3 D6

2. விரல் ரேகைக் கூடம் (FINGER PRINT BUREAU)

குற்றங்கள் நடந்த இடங்களில் காணப்படும் குற்றவாளியின் கைரேகைகளை சேகரித்து அதை ஏற்கனவே பிற வழக்குகளில் சேகரித்து வைத்திருக்கும் எதிரிகளின் ரேகையோடு ஒப்பிட்டுப் பார்த்து குற்றங்களைக் கண்டுபிடிக்க விசாரணை அலுவலருக்கு உறுதுணையாக செயல்படும் பிரிவு விரல் ரேகைக் கூடமாகும். இக்கூடம் ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும், மாநில தலைமையிடத்தில் உள்ளது.

கை விரல் ரேகை தத்துவம்

i. கை விரல் ரேகைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் மாறுபட்டு அமைந்துள்ளது.
ii. கருவிலிருந்து கல்லறை வரை கைவிரல் ரேகை மாறாது எனும் தத்துவங்களின் அடிப்படையில் விரல் ரேகைக் கூடங்கள் செயல்படுகின்றன.

விரல் ரேகைக் கூடச் செயல்பாடுகள்

i. இக்கூடம் ஒரு இயக்குநர் / காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது. விரல் ரேகைக் கூடத்தின் இயக்குநர் மற்றும் அவரது உதவியாளர்கள் அனைவரும் இந்திய சாட்சியச் சட்டப்பிரிவு 45–ன் படி நிபுணர்கள் எனப்படுவர்.
ii. இக்கூடம் காவல் துறை தலைவர் (மாநில குற்றப்பதிவேடுகள் கூடம்) (IGP SCRB) அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.
iii. மாநில விரல் ரேகைக் கூடம் 10 விரல்களின் ரேகையை (10 Digit) அடிப்படையாகவும், ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள கூடங்கள் ஒரு விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் (Single Digit Finger Print Bureau) ஒருவிரல் ரேகையை அடிப்படையாகவும் கொண்டு இயங்கி வருகின்றன.
iv. கொல்கத்தாவிலுள்ள மத்திய விரல்ரேகைக் கூடத்துடன் தொடர்பு கொண்டு மாநிலத்தில் குற்றம் செய்யும் அனைத்து மாநிலக் குற்றவாளிகள் (Inter State Criminals) மற்றும் அனைத்துலகக் குற்றவாளிகளைக் (International Criminals) கண்டுபிடிக்க உதவுகிறது.

இக்கூடம் சம்பந்தமாக உதவி ஆய்வாளர் செய்யவேண்டியவை

i. குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது இக்கூடத்தைக் பார்வையிட வேண்டும். கைரேகை நிபுணர்களைச் சந்தித்து ஆலோசனைகள் பெற வேண்டும்.
ii. முக்கிய சந்தேகமாக உள்ள வழக்குகளில் குற்றச் சம்பவ இடத்திற்கு (Scene of Crime) விரல்ரேகைப் பிரிவு ஆய்வாளரை வரவழைத்து அந்நிய ரேகைகள் (Foreign prints) இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும்.
iii. கண்டுபிடிக்க முடியாத குற்றங்களில் சந்தேக நபர்களின் விரல் ரேகைகள் எடுத்து அனுப்ப வேண்டும்.
iv. அடையாளம் காணமுடியாத பிரேதங்களின் விரல் ரேகைகளைக் கண்டிப்பாக எடுத்து அனுப்ப வேண்டும்.
v. பார்வை செய்யும்போது சொத்து சம்பந்தமான நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து விவாதிக்க வேண்டும்.
vi. சிறு வழக்குகள் தவிர மற்ற எல்லா வழக்கின் எதிரிகளுக்கும் விரல் ரேகைகள் எடுப்பது காவல் நிலைய அலுவலரின் பொறுப்பு ஆகும்.
vii. **விரல் ரேகைக் கூடத்திற்கு பதிவுக்கு அனுப்ப வேண்டிய விரல் பதிவுச் சீட்டுக்கள் பற்றிய நடைமுறை**

viii. ஒரு குற்ற வழக்கில் ஒருவரைக் கைது செய்யும்போது மூன்று விரல்ரேகை தொகுப்புகள் எடுக்க வேண்டும். அவருடைய பெயர் மற்றும் இதர விபரங்கள் படிவத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்.

ix. படிவத்தின் முதல் பக்க தலைப்பில் பாலினம் குறிப்பிடப்பட வேண்டும்.

x. ஒருவிரல் ரேகைத் தொகுப்புடன், கைது செய்யப்பட்ட நபரின் விபரங்களை (Form 129) இணைத்து விரல் ரேகைப் பதிவுக் கூடத்திற்கு அனுப்ப வேண்டும். மற்றவை வழக்கு நாட்குறிப்பில் பத்திரமாக பாதுகாத்து வைக்க வேண்டும்.

xi. இந்த நபர் தண்டிக்கப்பட்டால் மற்ற விரல் ரேகைத் தொகுப்புகளை, தற்போதைய தண்டனை விபரம் மற்றும் முந்தைய தண்டனை விபரம் (முந்தைய தண்டனை விபரம் இருந்தால் மட்டும்) மற்றும் தண்டனை குறிப்பாணை படிவம் 127 உடன் அனுப்ப வேண்டும்.

xii. படிவம் 129ன் உச்சியில் “Reconvicted or Unidentified” என எழுத வேண்டும்.

xiii. S.D.F.P.B–ல் பெறப்பட்ட படிவங்களைப் பரிசீலனை செய்து, தவறுகளைத் திருத்தி F.P.B–க்கு அனுப்பி வைத்து F.P.B– யிலிருந்து தண்டனை குறிப்பிற்கு வரிசை எண் குறிப்பிடப்பட்டு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

xiv. விரல் ரேகைப் பதிவு எடுக்கும்போது விரல்ரேகை பயிற்சி முடித்த காவலர்களை வைத்துத்தான் எடுக்க வேண்டும். விரல் ரேகை பதிவு சரியில்லாத நேரத்தில் ரேகை எடுத்த காவலருக்கு தண்டனையும் கூட வழங்க வாய்ப்புள்ளது.

xv. விரல் ரேகைப் பதிவு எடுக்க உபயோகிக்கப் பயன்படுத்தும் கருவிகளாகிய கண்ணாடிப் பலகை, ரப்பர் உருளை, மைக் குப்பி போன்றவைகளைப் பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க வேண்டும்.

பின்வரும் குற்றவாளிகளுக்கு விரல் ரேகை பதிவுகள் எடுக்கப்பட வேண்டும்:

i. ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்டக் கால அளவுக்கு கடின சிறைத் தண்டனை விதிக்கப் படத்தக்க, இந்திய தண்டனை சட்டத்தின் XII, XVII– வது அத்தியாயங்களின் கீழுள்ள குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்.

ii. இந்திய தண்டனை சட்டத்தின், VI–வது அத்தியாயத்தின் கீழ் எந்த ஒரு குற்றத்திற்காகவோ, அல்லது அரசுக்கு எதிராக அழிவு வேலை, சதி வேலைகளுக்காகவோ, தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்.

iii. இந்தியத் தண்டனை சட்டத்தின், 170, 302, 304–ஆவது பிரிவுகள் (லாபத்துக்காக கொலை) 328, 338, 465 முதல் 477–அ வரையுள்ள பிரிவுகள், 489–அ முதல் 489–ஈ வரையுள்ள பிரிவுகள், ஆகியவற்றின் கீழுள்ள குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்.

iv. படைக்கலங்கள், அபின் அல்லது (1930–ன் சட்டம் II) அபாயகரமான மருந்துச் சரக்குகள் சட்டத்தில் வரையறுத்துள்ள மருந்துச் சரக்குகள் ஆகியவற்றைக் கள்ளத்தனமாய்க் கடத்துவதாகச் சந்தேகிக்கப்பட்டு, படைக் கலச் சட்டம், போதை பொருள் சட்டம், மாநில ஆயத்துறைச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ்வரும் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் அல்லது மறு தண்டனை விதிப்பின் போது உயர்த்தப்பட்ட தண்டனையை அவசியமாக்கும் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள், அனைவருக்கும்

v. 1947–ம் ஆண்டு அன்னியச் செலாவணி பராமரிப்பு சட்டம் VII–ன் கீழ், தங்கம், நாணயம், மதிப்புள்ள பொருள்கள் ஆகியவைகளை கள்ளத்தனமாய்க் கடத்தும் குற்றத்துக்காகத் தண்டிக்கப் பட்டவர்கள் அனைவரும்

vi. குற்ற விசாரணைமுறைச் சட்டப் பிரிவுகள் வழக்கு நடைமுறை விதித் தொகுப்பு 109, 110–வது பிரிவுகளின் கீழ் (சொத்துக்கு எதிரான குற்றங்களுக்காக மட்டும்) பிணைப்பத்திரங்களை எழுதிக்கொடுக்கும்படி ஆணையிடப் பெற்றவர்கள் அனைவருக்கும்.

vii. பெண்கள், குழந்தைகள் ஆகியோரை வைத்து இழி தொழில் செய்து, இந்தியக் குற்ற தண்டனை விதித் தொகுப்பு 363, 363 (–அ,) 364 முதல் 374 வரையுள்ள பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களுக்கும்.

viii. தந்திக் கம்பிகளைச் சட்டவிரோதமான கைப்பற்றி வைத்திருப்பதற்காக சட்டம் (IXXIV) 1950–ன் 5–வது பிரிவின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்.

ix. ரயில்வே சாமான்களைச் சட்ட விரோதமாக கைப்பற்றி வைத்திருப்பதாக 1944–ன் அவசரச் சட்டம் (XIX) பிரிவு 3–ன் கீழ் தண்டிக்கப்பட்டவர்களுக்கும்

x. எந்த மாநிலச் சட்டத்தின் கீழேனும் எந்த ஒரு பரப்பிலிருந்தும் நாடு கடத்தப்பட்ட குற்றத்தைத் தொழிலாகக் கொண்ட குற்றவாளிகள் ஆகிய அனைவரும் அபாயத் தன்மையானவர்களுக்கும்.

xi. 1946–ன் அயல் நாட்டார் சட்டம் XXXI–ன் கீழ் நாடு கடத்தப்பட்ட அயல் நாட்டார்கள் அனைவருக்கும்.

xii. குற்றக்கூட்டம், கூட்டுக்கொள்ளை, குற்றமுறு சதி, ஆகிய வழக்குகளில் உடன் குற்றம் ஏற்ற சாட்சிகள் (APPROVERS) அனைவரும்.

xiii. வழக்கமாய்த் தங்கள் வீடுகளில் இல்லாமல், குற்றம் செய்யும் பொருட்டு இதர மாநிலங்களுக்குப் பயணம் செய்வதாக நம்பப்பட்டு, காவலரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் கூட 1920–ன் சட்டம் (XXXIII), பிரிவு 7–ன் கீழ் நீதிமன்ற அனுமதியுடன் விரல் பதிவுகள் எடுக்கப்பட்ட, ஊருராய்த் திரியும் தொழிலாக நடத்தும் குற்றவாளிகளென்றும் பேர் கெட்ட குற்றவாளிகளென்றும் சந்தேகிக்கப்பட்டவர்கள் அனைவரும்.

xiv. இந்தியத் தண்டனை சட்டப் பிரிவு 115 அல்லது பிரிவு 109/114–ன் படி முயற்சி அல்லது உடந்தைக்காகவும் (இந்தியத் தண்டனை சட்டப் பிரிவு 120– B – ன் படி) குற்றமுறு சதிக்காகவும், இந்த அட்டவணையில் கண்ட குற்றங்களுக்காகவும், தண்டனை பெற்ற அனைவருக்கும்.

xv. வெளிநாடுகளில் செய்யப்பட்ட யாதொரு குற்றத்திற்காக இம்மாநிலக் கைரேகை நிலையத்தில் விரல்பதிவுகள் வரப்பெற்றுக் கொள்ளப்பட்டு, அக்குற்றத்திற்காக இந்தியாவுக்கு வெளியே தண்டனை பெற்ற சகல இந்தியக் குடிமக்களுக்கும்.

xvi. இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளிலிருந்து இம்மாநில நிலையத்துக்கு விரல் பதிவுகள் அனுப்பப்பட்ட சகல நாட்டுக் குற்றவாளிகளும் தலைமறைவாயுள்ளவர்களும்.

xvii. வெடிபொருள் சட்டத்தின் கீழ் (1923–ன் சட்டம் VI) தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்.

xviii. அரசினர் அலுவலக மறையச் சட்டத்தின் கீழ் (1923–ன் சட்டம் XIX) தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்

xix. இந்திய இருப்புப்பாதைகள் சட்டம் (1890–ன் சட்டம் IX) பிரிவுகள் 101, 126, 128–ன் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும்.

xx. சிறைப்பட்டவர் அடையாளச் சட்டத்தின் (1920–ன் சட்டம் XXXIII) ஏற்பாடுகளுக்குட்பட்டு விரல் பதிவுகள் வைத்து வரப்பட வேண்டுமென்று இந்திய அரசால் அவ்வப்போது உத்தரவிடப்பட்ட ஆட்களுக்கும்.

xxi. தமிழ்நாடு 1948–ம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டு மேற்படிச் சட்டத்தின் 12–வது பிரிவின் கீழும் மேற்படிச் சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் எவற்றுக்காயினும் தண்டிக்கப்பட்டவர்களுக்கும் கைவிரல் ரேகைப் பதிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

செய்யக்கூடாதவை

i. விரல் ரேகைக் கூடத்திற்குப் பார்வையிடச் செல்லாமல் இருத்தல்.

ii. விரல் பதிவு எடுக்கத் தெரியாத காவலர்களை வைத்து விரல் பதிவு எடுத்தல்.

iii. சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் தண்டனையில் முடிவுறும்போது தண்டனைக் குறிப்பாணை அனுப்பாமல் இருத்தல்.

iv. முக்கிய வழக்குகளில் குற்றச் சம்பவ இடத்தில் உள்ள தடயங்களை விரல் ரேகை நிபுணர்கள் வரும்வரை பாதுகாத்து வைக்காமல் விசாரணை என்ற பெயரில் அழித்துவிடுதல்.

v. இரவில் சந்தேக நபர்களை கைது செய்யும்போது விரல்ரேகை எடுத்து விரல் ரேகை கூடத்திற்கு அனுப்பி மேற்படி நபர்கள் மீது எங்காவது வழக்குகள் ஏதும் நிலுவையில் உள்ளதா என்பதை கண்டறியாமல் அனுப்பி விடுதல்.

பார்வை: PSO 801 to 820

G.C.P. Kdll 167/10., 25-3-98 1,00,000 Cys.

FINGER PRINT SEARCH SLIP - I

To

The Superintendent of Police
(Finger Print)
Tamil Nadu Finger Print Bureau,

Search slip of a person accused of some spacing offence.

FIR No. 152/07 Dated 15.3.2007 Section 457, 380 IPC

Police Station Palani Town PS District Dindigul.

Name given by accused [illegible]

Father's/ Husband's Name [illegible]

Address [illegible]

Date of taking prints 15.3.2007. Dt. of Despatch 16.3.2007.

Name, Rank/No. of the officer taking prints:

D. [illegible] HC 10[illegible] Palani Town PS

If remand taken, date of expiry Remanded on 16.3.2007./Expy. on 1.4.2007.

Remarks

[illegible]
Sr. of Police.
(Name and Designation of Originator.)


FINGER PRINT SLIP
CLASSIFICATION No.
REGULAR CRIM. No.
PROVISIONAL CRIME No.
RIGHT HAND
THUMB
INDEX
MIDDLE
RING
LITTLE
LEFT HAND
LEFT HAND
PLAIN PRINTS
RIGHT HAND
THUMB
THUMB
Date
Signature
Rank/No. of Officer
Rank/No.
Date
Place
UPDATE CODE
To be filled by F.P.B.
NAME
FPB Sl. No.
HENRY CLASSIFICATION
CLASSIFIED BY
CODIFIED BY
TESTED BY
CHECKED BY
INDEXED BY
RECORDED BY

O.C.P.—1804—Pol.B-111-Kind-II—6,10,000 Cps.13-8-98

To
The SI of Police
Palani Town PS. DGL

REFERENCE : P.S

FIR No. 152/07 Section 457, 380 IPC Date 15/3/02.

NAME [illegible] @ [illegible] AGE 34 Father's / Husband's Name [illegible]

Address [illegible]

POLICE STATION [illegible] DISTRICT [illegible]

CONVICTIONS

Sl. No. (1)	Name under which convicted (2)	District and Court (3)	Date of conviction (4)	Section (5)	Sentence (6)	J.A. No. (7)	PS CASE/FIP. No. and Date (8)
		Untraced.					

1. Result of Search Untraced Traced/Untraced

2. If Traced, Regular Crml. No.

40 DIGIT PATTERN & COUNT CODE

3. Henry Classification

Date

SUPERINTENDENT OF POLICE,
(FINGER PRINT),
TAMIL NADU,
CHENNAI-600 004.

GCR VOL. XXXIV P.NO: 140 S.NO: 9820

COUNTERFOIL

00000

1. Name with aliases and H.O. number, If any
   A1 - ABCDXYZ @ EFGH
   [redacted] வயது 24
2. Father's name BBBB
   மேலத்தோப்பு, வசிஷ்டர், மதுரை
3. Crime number and Section.
   பழனி நகர் காவல் நிலைய
   குற்ற எண்: 530/97
   சி/பி: 379 IPC
   MO: II(S)(L), III (C) (C1)
4. Date of despetch.
   30.9.2007.

Palani Town PS. GCR Vol. XXXIV P.NO: 140 GCR S.No. 9820

CONVICTION MEMO

00000 C

6102107053 0 A
single

1. Name with aliase and H.O. number, If any A1. ABCDXYZ @ EFGH வயது 24
2. Father's name BBBB
3. Caste and profession XXXX, கூலி
   C.No: 206/PP/[illegible]/07
   4975/SP.
4. General description and physical peculiarity. Age Height
   1) மார்பின் நடுவில் கருப்பு மச்சம் 24 5½ அடி
   2) வலது கையில் "XYZ" என்ற பச்சை குத்தப்பட்டுள்ளது.

   General description and physical peculiarities of speech, height, gait and malformation loss of any limb, eye or tooth, permanent and suspicious marks and scars
5. Residence: மேலத்தோப்பு
   Village. வசிஷ்டர்
   Police Station.
   District. மதுரை, மாவட்டம்.
6. Relatives with address: அம்மா: aaa, தந்தை: bbb, தங்கை: ccc } மேலத்தோப்பு, வசிஷ்டர், மதுரை.
7. Associates with address.
   A2 - XYZabc (24) தாய abcd
8. Present Conviction – R1 for 10 years. சிறைதண்டனை, பழனி நகர் PS.
   a. Stations Crime number and Section பழனி நகர் கா.கு.எ. எண்: 530/07 u/s 457, 380.
   b. M.O. Details. II (S)(L) III (C) (C1)
   c. Date and place of occurrences. 14.6.2007
   d. Name and address of the complainant. M/s. அ.அ.அ (35)
   தாய. BBBB.
   பழனி ஆண்டவர் நகர்,
   பழனி.

e. Details of arrest 15.06.2007.

f. Property lost and recovered P/L - 2 செல்போன்கள், பணம், மொத்தம் ₹ 14,800/-
P/R - 2 செல்போன்கள், பணம், மொத்தம் ₹ 14,800/-

g. Court, C.C. number, and date sentence, Police Officers to prove convictions.
JM - Palani, CC No: 363/07, 10 மாதம் கடுங்காவல் தண்டனை. Dt: 13.9.07.

h. Name of the Jail சேலம் சிறை, பழனி

i. Date of despatch. —

9. Details of provious convictions, if any. ① காவல் ஆய்வாளர், பழனி நகர் காவல் நிலையம்,
② தலைமை காவலர் 0000 ஆம். .....

10. Whether likely to commit crime outside stations limits. YES.

11. Whether to be shadowed on release. YES.

INSPR of Police
Palani Town PS.

SI of Police.
Palani Town PS

Commissioner's Reatin
---------- Order ---------- finger – prints F.R.S
Superintendent's Destroy.

The convict No. is of Jail.

Finger – Prints taken on at

Regular Criminal Number.

6102107053 0A.

The finer-Print slip sent with this memorandum
Has been assigned. Finger – Print bureau

Serial NO. M 1034388

Director, F.P. Bureau, Madras.
SP FPB, chennai
18/12/07.

Signature of Finger – Print Officer at Jail.

3. தமிழ்நாடு தடய அறிவியல் துறை (TAMILNADU FORENSIC SCIENCES DEPARTMENT)

சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட தடயங்களை பரிசோதனை செய்து, சம்பவம் நடந்த காரணத்தை அறிவியல் ரீதியாக அறிந்து காவல் துறையினரின் புலன் விசாரணைக்கு உதவுவதே தடய அறிவியல் ஆய்வுக் கூடம் ஆகும்.

பொருட்களின் பரிமாற்றக் கொள்கை (Principle of Exchange):

i. இரு பொருட்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளும்போது துகள்கள் பரிமாற்றம் நிகழ்கிறது எனும் பிரான்சு நாட்டு அறிவியல் சர் எட்மண்ட் லோகார்ட் என்பவரின் பரிமாற்றக் கொள்கையினை (Locard's Principle of Exchange) அடிப்படையாகக் கொண்டு தடய அறிவியல் துறை செயல் படுகிறது.

ii. கொலை மற்றும் இதர முக்கிய வழக்குகளில் கிடைக்கக்கூடிய இரத்தம் மற்றும் இரத்தக் கரையுடன் கூடிய கருவிகள், மண் ஆகியவற்றையும் துப்பாக்கி தோட்டா, ஆவணங்கள், கால் தடங்கள் போன்ற தடயங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வுக்குப் பிறகு நிபுணர்கள் முடிவினை தெரிவிப்பார்கள்.

iii. இந்த நிபுணர்களின் சாட்சியம் இந்திய சாட்சியச் சட்டப்பிரிவு 45–ன் படி ஏற்கப்படுகிறது.

iv. எல்லா மாவட்டத்திலும் புலனாய்வு அலுவலுக்கு உதவிட ஒரு இயங்கும் தடய அறிவியல் ஆய்வுக் கூடம் (Mobile Forensic Science Laboratory) இயங்குகிறது.

v. சென்னையில் அமைந்துள்ள அலுவலகத்தில் இயக்குநர் ஒருவர் தலைமை தாங்குகிறார். ஒவ்வொரு பிரிவும் ஒரு உதவி இயக்குநரின் பொறுப்பில், அறிவியல் அலுவலர்களின் (Scientific Officers) உதவியுடன் கீழ்க்காணும் பிரிவுகளில் செயல்படுகின்றன.

1. தோட்டாப் பிரிவு	Ballistic Division
2. இயற்பியல் பிரிவு	Physics Division
3. மனித இயல் ஆராய்ச்சிப் பிரிவு	Anthropology Division
4. இரத்தப் பரிசோதணைப் பிரிவு	Serology Division
5. ஆராய்ச்சிப் பிரிவு	Research Division
6. ஆவணப் பிரிவு	Documents Division
7. நிழற்படப் பிரிவு	Photography Division
8. நஞ்சுப் பிரிவு	Toxicology Division
9. உயிரியல் பிரிவு	Biological Division
10. வேதியியல் பிரிவு	Chemistry Division
11. மதுவிலக்குப்பிரிவு	Prohibition Division
12. போதைப் பொருள் பிரிவு	Narcotics Division
13. வெடிமருந்துகள் பிரிவு	Explosives Division

செய்யவேண்டியவை

i. உதவி ஆய்வாளர் காலாண்டிற்கு ஒருமுறையாவது இக்கூடத்தைப் பார்வை செய்யவேண்டும். அவ்வாறு பார்வை செய்யும்போது முக்கிய வழக்குகள் குறித்தும், நிலுவையில் உள்ள வேதியியல் அறிக்கை குறித்தும் விவாதிக்க வேண்டும்.

ii. கீழ்க்கண்ட குற்றங்களில் கண்டிப்பாக அறிவியல் ஆய்வக அலுவலர்களை குற்றச் சம்பவ இடத்திற்கு வரவழைக்க வேண்டும்.

iii. ஆதாயக் கொலை (Murder for Gain)

iv. கொலை வழக்குகள் (Murder)
v. அடையாளம் தெரியாத பிணங்கள் (Un Identified Dead Bodies)
vi. சந்தேக மரணங்கள் (Suspicious Death)
vii. பாரி சொத்து வழக்குகள் (Grave property Crime)
viii. கள்ளநோட்டு வழக்குகள் (Counterfeit currency)
ix. கற்பழிப்பு வழக்குகள் (Rape)
x. தீ வைப்பு வழக்குகள் (Arson)
xi. குற்ற வழக்குகளில் கைப்பற்றப்படும் பொருட்களை படிவம் –95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
xii. நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கொடுத்து தடய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு வேதியியல் பரிசோதணைக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும்.

செய்யக்கூடாதவை

i. தடய அறிவியல் ஆய்வுக் கூடத்தை உதவி ஆய்வாளர் பார்வையிடாமல் இருத்தல்.
ii. தேவைப்படும் பட்சத்தில் சம்பவ இடத்திற்கு (SOC) அறிவியல் அலுவலர்களை அழைக்காமல் தன்னிச்சையாக செயல்படுதல்.
iii. வேதியியல் பரிசோதனைக்கு சொத்துக்களை அனுப்புவதைத் தேவையில்லாமல் காலதாமதப் படுத்துதல்.

பார்வை: PSO 593

4. புறக் காவல் நிலையம் (OUT POST POLICE STATIONS)

ஒரு காவல் நிலைய எல்லையில் ஒரே பகுதியில் தொடர்ந்து அதிகமான குற்ற வழக்குகள், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படும் போதும் மற்றும் குற்றவாளிகள் அதிகம் அப்பகுதியில் இருக்கும் போதும் அங்கே எப்போதும் காவலர்கள் ஆஜரில் இருக்கவும், கண்காணிப்புகளை தீவிரப்படுத்தவும், குற்றங்களை தடுக்கவும் புறக்காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

செய்ய வேண்டியவை

i. புறக் காவல் நிலையப் பொறுப்பில் உள்ள தலைமைக் காவலருக்கு பிரிவு 154 கு.வி.மு.ச.படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று அறிவுறுத்த வேண்டும்.
ii. பிடிக்கக்கூடிய குற்றம் பற்றிய தகவல் கிடைக்கும்போது புறக்காவல் நிலையப் பொது நாட் குறிப்பில் பதிவு செய்து, குற்றத்தின் சூழ்நிலைக்கேற்றவாறு கூடியவிரைவில் பிரதான காவல் நிலைய அலுவலர்களுக்கு உடனே அறிக்கை செய்ய வேண்டும் என்ற விபரத்தை தெரிவிக்க வேண்டும்.
iii. ஒரு புறக் காவல் நிலையப் பொறுப்பில் உள்ள காவல் அலுவலர் ஒரு குற்றம் அல்லது ஒரு சம்பவம் பற்றிய ஒரு நேரடிக் குற்றச்சாட்டையோ/செய்தியையோ பெற்றுக் கொண்டவுடன் உதவி செய்யவோ அந்த குற்றம் சாட்டப்பட்டவரைப் பிடிக்கவோ குற்றச் சம்பவ இடத்துக்கு உடனடியாகச் சென்று நடவடிக்கை எடுக்கலாம் என்ற விபரத்தை அறிவுறுத்த வேண்டும்.
iv. புறக்காவல் நிலையத்தில் இருக்கும் காவலருடன் எப்போதும் தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

v. புறக்காவல் நிலையத்தில் இருக்கும் காவலர்களை ஆண்டுக்கு ஒருமுறை ஏப்ரல் மாதத்தில் காலமுறைப்படி மாற்றவேண்டும். நீண்ட நாட்கள் இந்தப் பணியில் அமர்த்தக்கூடாது.
vi. புறக்காவல் நிலைய தலைமைக் காவலர் தனது கீழ் உள்ள காவலர்களின் பணியை மேற்பார்வையிடுவது.
vii. குறிப்பிட்ட பதிவேடுகளைப் பராமரித்தல்
viii. தினசரி அறிக்கை காவல் நிலையத்திற்கு அனுப்புவது.
ix. மேற்படி பணிகளை புறக்காவல் தலைமை காவலர் புறக்காவல் நிலையத்தில் ஒழுங்காக செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

புறக்காவல் நிலையத்தில் பராமரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

i. பொது நாட்குறிப்பு (General Diary)
ii. அலுவல் பதிவேடு (Duty Roster)
iii. நோட்டுப் புத்தகம் (Note Book)
iv. சரித்திரப் பதிவேடு பிரதிகள் (Copies of History Sheets)
v. விசாரணைப் படிவம் “A” (BCR “A”)
vi. விசாரணைப் படிவம் “B” (BCR “B”)
vii. ரோந்துப் புத்தகம் (Beat Book)
viii. நிலையப் பாரா மாற்றுப் புத்தகம் (Sentry Relief Book)
ix. கிராமப் பதிவேடு (Village Roaster)
x. ஆய்வாளர் பார்வைப் புத்தகம் (Inspector’s Visiting Book)
xi. குறிப்பாணைப் படிவங்கள் புத்தகம் (Memo Forms Book)
xii. தபால் புத்தகம் (Tappal Book)
xiii. உயர் அலுவலர்கள் பார்வைப் புத்தகம் (Superior Officers Visiting Book)
xiv. காவல் நிலைய ஆணைகள் தொகுதி I (PSO Vol-1)
xv. ஊரறிந்த குற்றவாளிகள் தணிக்கைப் பதிவேடு (K.D Check Register)
xvi. சிறு பணப் பதிவேடு (Petty Cash Book)
xvii. கைதிகள் அறிக்கை (Arrest Report)
xviii. கைதிப் பரிசோதனைப் பதிவேடு (P. S. R)
xix. குற்ற அறிக்கை (Charge Sheet)

செய்யக்கூடாதவை

i. உதவி ஆய்வாளர் புறக்காவல் நிலையத்தை பார்வையிடாமல் இருத்தல்.
ii. புறக்காவல் நிலைய ஆளிநர்களின் செயல்பாடுகளை கண்காணிக்காமல் இருத்தல்.

பார்வை PSO 733

5. புகைப்படப் பிரிவு (PHOTO SECTION)

குற்ற வழக்குகளில் குற்றம் சம்பந்தப்பட்ட இடங்களையும், குற்ற நிகழ்விடங்களையும், புகைப்படம் எடுத்து அவற்றைப் புலன் விசாரனைக்கும் வழக்கு விசாரணைக்கும் உதவிகரமாக இருப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே புகைப்படப் பிரிவாகும். இப்பிரிவு உரிய கருவிகளுடன் புகைப்படக்காரரைக் கொண்டு மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

i. இப்புகைப்படங்கள் இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 7ன்படி நீதிமன்றத்தில் சாட்சியங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.
ii. காவல் துறை புலனாய்வு சம்பந்தமாக கீழ்கண்ட நிகழ்வுகளில் புகைப்படம் எடுக்கவேண்டும்.
iii. குற்ற சம்பவ இடங்கள், கொலை, கொள்ளை, பெரும் விபத்துகள்.
iv. கலவரம் நடந்த இடங்கள்
v. அடையாளம் தெரியாத பிணங்கள்
vi. ஆவணங்கள் மற்றும் சான்றுகள்
vii. இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரழிவுகள்

புகைப்படம் கீழ்க்கண்ட வகைகளில் எடுக்கப்படவேண்டும்

i. குற்றச் சம்பவ இடம்.
ii. கால் தடப் பதிவுகள்/விரல் ரேகைப் பதிவுகள்.
iii. இரத்தக் கரை பதிவுகள்.
iv. பயன்படுத்திய கருவிகள்.
v. பயன்படுத்திய கருவிகளில் உள்ள பதிவுகள்.
vi. துப்பாக்கி போன்ற சுடுகலன்கள் (Fire Arms) பயன்படுத்தப்பட்டிருந்தால் அவைகள்.
vii. குற்றவாளியின் படங்கள்.

செய்யவேண்டியவை:

i. உதவி ஆய்வாளர் மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது புகைப்படப் பிரிவினைப் பார்வையிட்டு சந்தேக நபர்கள் புகைப்படங்கள் பற்றி கலந்தாலோசிக்க வேண்டும்.
ii. பாரி வழக்குகளில் (G,C,R, Cases) கண்டிப்பாக புகைப்படங்கள் எடுக்க வேண்டும்.
iii. புகைப்பட நிபுணரை வரவழைக்க மாவட்ட குற்ற ஆவணக் கூடத்திற்கு (D,C,R,B,) தகவல் தெரிவிக்கவேண்டும். தனிப்பிரிவு அலுவலகத்திற்கும் தகவல் தெரிவிக்கவேண்டும்.
iv. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் தனியார் புகைப்படக்காரர்களைப் பயன்படுத்தும்போது அதற்காகும் செலவினங்களை புலனாய்வு செலவினமாகக் காட்டி மாவட்டக் காவல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவேண்டும்.
v. புகைப்படமும் புகைப்பட நெகட்டிவ்களையும் இணைத்து வழக்கு ஆவணமாகப் பதிவு செய்யவேண்டும்.
vi. புகைப்படக் கலைஞரை சாட்சியமாகச் சேர்க்கவேண்டும்.
vii. பொதுவாக காவல் நிலையத்தில் குற்றவாளிகள் மற்றும் சந்தேக நபர்களைப் புகைப்படம் எடுத்து ஆல்பம் தயார் செய்து வைத்திருக்கவேண்டும்.
viii. இந்த புகைப்படைத் தொகுப்பினை (Album) குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்களிடம் காட்டி குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடிக்க உபயோகமாய் இருக்கும்.
ix. காநி. ஆணை எண் : 609(4) குற்றவாளிகளின் புகைப்படங்கள் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

செய்யக்கூடாதவை

i. பொதுவாக குற்ற வழக்குகளில் தனியார் புகைப்படக்காரர்களை புகைப்படம் எடுக்க அனுமதித்தல்.

பார்வை: P.S.O. 821

6. நிலையப் பார்வை / ஆய்வுப் பதிவேட்டுக் குறிப்புரைகளை நிறைவேற்றுதல்

காவல் நிலையத்தை உயர் அலுவலர்கள் பார்வை மற்றும் ஆய்வு செய்வது தொடர்பான அறிக்கைகளை உயர் அலுவலர்களின் பார்வைப் பதிவேடு மற்றும் உயர் அலுவலர்களின் ஆய்வுப் பதிவேடு ஆகியவற்றில் ஒட்டி பராமரிக்கப்படுகிறது.

உயர் அலுவலர்களின் பார்வைப் பதிவேடு (SUPERIOR OFFICERS VISITING BOOK)

i. இதில் துணைக் காவல் கண்காணிப்பாளர் பதவி நிலைக்கு மேல் வரையுள்ள அலுவலர்களின் பார்வை அறிக்கை ஒட்டப்படவேண்டும்.
ii. பார்வைப் பதிவேட்டில் இடது பக்கம் பார்வைக் குறிப்பை ஒட்டியும், வலது பக்கம் அறிவுரைகளுக்கு ஏற்பளித்து நிறைவேற்றப்பட்ட விபரங்களைக் குறிக்கவேண்டும்.
iii. ஏற்பளித்து நிறைவேற்றப்பட்ட விபரங்கள் குறித்த அறிக்கையை வழி வழியாக உயர் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும்.

உயர் அலுவலர்களின் ஆய்வுப் பதிவேடு (SUPERIOR OFFICERS INSPECTION BOOK)

i. இதில் துணைக் கண்காணிப்பாளர் பதவி நிலைக்கு மேல் உள்ள அனைத்து உயர் அலுவலர்களின் ஆய்வு அறிக்கை ஒட்டப்படவேண்டும்.
ii. காவல்துறை துணைத் தலைவர் மற்றும் அவரது பதவி நிலைக்கு மேல் உள்ள அனைத்து உயர் அலுவலர்களின் பார்வை அறிக்கையும் ஒட்டப்பட வேண்டும்.
iii. ஆய்வுப் பதிவேட்டில் இரு பக்கங்களிலும் ஆய்வுக் குறிப்பை ஒட்ட வேண்டும்.
iv. ஏற்பளித்து நிறைவேற்றப்பட்ட விபரங்கள் குறித்த அறிக்கையை வழி வழியாக உயர் அலுவலர் களுக்கு அனுப்பவேண்டும்.

செய்யவேண்டியவை

i. வட்ட ஆய்வாளருக்குத் தனியாக பார்வை மற்றும் ஆய்வுப் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்.
ii. உயர் அலுவலர்கள் பார்வை மற்றும் ஆய்வு அறிக்கைகள் கோடிட்டுக் காட்டும் குறைகளை (Remarks) நிவர்த்தி செய்து அவர்களது அறிவுரைகளுக்கு ஏற்பளித்து பதில் அறிக்கை அளிக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

i. காவல் துறைத் துணைத் தலைவர் பதவி நிலைக்கு மேல் உள்ள அலுவலர்களின் பார்வை அறிக்கையை உயர் அலுவலர்களின் ஆய்வுப் பதிவேட்டில் ஒட்டுதல்.
ii. உயர் அலுவலர்களின் பார்வைக் குறிப்பு மற்றும் ஆய்வுக் குறிப்பிற்கு ஏற்பு அளிப்பதிலோ, நிறை வேற்றுவதிலோ, பதில் அறிக்கை அனுப்புவதிலோ காலதாமதம் செய்தல்.

பார்வை: P.S.O. 725

7. உடைப் பொருட்கள் தணிக்கை (KIT INSPECTION)

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களை பணிக்கு அமர்த்தும்போது அவர்களுக்கு காக்கிச் சீருடை, இடுப்புக் கச்சை (BELT), காலணிகள், லத்தி, தொப்பி, காலுறைகள் போன்ற பொருட்கள் வழங்கப் படுகின்றன. இவற்றை ஆய்வு செய்து சரி செய்வதே உடை பொருட்கள் தணிக்கை ஆகும்.

காவலர்களுக்கு வழங்கப்படும் உடை பொருட்கள் பழையன ஆகும்போது மாற்றாகப் புதியன வழங்கப்படுகிறது. இவைகளைத் தூய்மையாகவும் பாதுகாப்பாகவும், சீராக அணிவதற்கும் Kit சிறு பணிப் பதிவேட்டில் சீருடை பராமரிப்பு படி (Kit Maintenance Allowance) அளிக்கப் படுகிறது. இவ்வாறு வழங்கும் பொருட்களின் விபரங்கள் அனைத்தும் சீருடை பராமரிப்பு (Small Service Book)– ல் பதிவு செய்ய வேண்டும்.

செய்யவேண்டியவை

i. உடைப் பொருட்கள் தணிக்கையை அந்தக் காவல் நிலைய அலுவலர் காலாண்டுக்கு ஒருமுறை முதல் மாதத்தில் செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்.
ii. ஆய்வாளர் 6 மாதங்களுக்கு ஒரு முறையும், உட்கோட்ட அலுவலர் ஆண்டுக்கு ஒருமுறையும் ஆய்வு செய்ய வேண்டும். இவர்கள் காவல் நிலையங்களைப் பார்வையிடும்போது உடைப் பொருட்கள் தணிக்கை செய்யப்பட்டுள்ளதா எனச் சரிபார்க்க வேண்டும்.
iii. ஆஜர் செய்ய வேண்டிய பொருட்களைக் காட்டும் விளக்கப் படம் காவலர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. அதன்படி தணிக்கைக்கு வைக்க வேண்டும். சீருடை கடைசியாக வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
iv. ஆய்வு செய்யும்போது சீருடைகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை உடனே மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
v. ஆய்வின் போது மருத்துவ சரித்திர ஏடு அதில் காவலர்களுக்கு இரண்டாண்டுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதணை (Biennial Examination) செய்து அதில் குறிப்புகள் எழுதப்பட்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
vi. தவறுகைக் குறிப்பேட்டில் (Defaulter Sheet) கடைசி தண்டனை குறிப்புகள்எழுதப்பட்டுள்ளதா என்று சரி பார்க்க வேண்டும்.
vii. காவலர்களுக்கு கடைசியாக கொடுக்கப்பட்ட உடைப் பொருட்கள் விபரங்களை சிறு பணி பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
viii. காவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சீருடை மற்றும் பொருட்களில் ஏதாவது காணாமல் போய் விட்டால் உடனடியாக அதை உயர் அலுவலர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

செய்யக்கூடாதவை

i. உடைப் பொருட்களை தணிக்கை செய்யாமல் தணிக்கை செய்ததாகக் கணக்குக் காட்டுதல்.
ii. சீருடைக் குறைபாடுகளை உயர் அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தாமல் இருத்தல்.
iii. உடைப் பொருட்கள் விபரங்களை சிறு பணிப் பதிவேட்டில் (SS Book)– பதிவு செய்யாமல் இருத்தல்.

பார்வை: PSO 247

8. உயர் அலுவலர்களின் ஆய்வுக்குத் தயார்படுத்திக் கொள்ளுதல்

ஒரு காவல் நிலையம் சரிவர பராமரிக்கப்பட்டு வருகிறதா என்பதை உயர் காவல் அலுவலர்கள் உரிய காலகட்டத்திலோ அல்லது அவர்கள் விரும்பும்போதோ தணிக்கை மற்றும் பார்வையிடுவார்கள். அதற்கு நாம் உரிய முறையில் நம்மைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும்.

i. காவல் துணைக் கண்காணிப்பாளர் (D.S.P.) வருடம் ஒரு முறையும்,
ii. காவல் கண்காணிப்பாளர் (S.P.) மூன்று வருடங்களுக்கு ஒருமுறையும்,
iii. சரக காவல் துணைத் தலைவர் (D.I.G.) ஐந்து வருடங்களுக்கு ஒருமுறையும் – காவல் நிலையத்தை ஆய்வு செய்வார்கள்.
iv. சரக காவல் துணைத் தலைவர் பதவிக்கு மேல் உள்ள அலுவலர்கள் எப்போது வேண்டுமானாலும் காவல் நிலையத்தை ஆய்வோ – பார்வையிடவோ செய்யலாம்.

1. ஆய்வு அறிக்கை தயார் செய்தல்:

i. அறிக்கையில் முதலில் பொதுத் தகவல்கள் இருக்கவேண்டும். காவல் நிலையத்தின் தோற்றம், அந்த இடத்தின் சிறப்பு அம்சங்கள் போன்றவை எழுத வேண்டும்.
ii. இதற்கு முன்பு 5 ஆண்டுகளில் பணியாற்றிய அலுவலர்களின் பெயர்ப் பட்டியல்
iii. காவல் நிலைய எல்லையில் உள்ள மற்ற காவல் நிலையங்கள்
iv. காவல் நிலையக் கட்டிடம், அமைந்திருக்கும் இடத்தின் பரப்பளவு, அரசுக் கட்டிடம் அல்லது வாடகைக் கட்டிடம் என்ற விபரம்.
v. நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து அரசு வாகனங்கள், வான் தந்தி, வாக்கி டாக்கி, தொலைபேசி, காவல் துறையினை நவீனப் படுத்தும் திட்டத்தின் கீழ் (M.P.F. Scheme) வழங்கப் பட்டுள்ள பொருட்களின் விபரங்கள்.
vi. காவலர் குடியிருப்பு வசதிகள், அமைந்திருக்கும் இடத்தின் பரப்பளவு
vii. காவல் நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட காவலர்கள் எண்ணிக்கை, தற்போது இருப்பவர்களின் எண்ணிக்கை விபரங்கள்
viii. காவல் துறைத் துணைத் தலைவர் மற்றும் அதற்குமேல் உள்ள அலுவலர்கள் ஆய்வு செய்யும்போது 5 ஆண்டுகளுக்கான குற்ற வழக்குகளின் விபரங்கள்
ix. காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் அதற்குக் கீழ் உள்ள அலுவலர்கள் பார்வையிடும்போது 3 ஆண்டுகளுக்கான குற்ற வழக்குகளின் விபரங்கள்
x. 10 ஆண்டு குற்ற வழக்குகளின் தொகுப்பு (10 Years Comparative Statement of Crimes) –
xi. ஆய்வுத் தொகுப்பினை ஆய்வு தேதிக்கு முன்பு ‘‘B’’ Dress order உடன் ஆய்வு அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

2. பதிவேடுகள் தயார் செய்தல்:

i. எல்லாப் பதிவேடுகளையும் ஆய்வு நடக்கும் தேதி வரை சரியாக எழுதப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்.
i. கட்டளைப் பதிவேடு, துப்பாக்கிப் பதிவேடு, அரசுச் சொத்துப் பதிவேடு ஆகியவற்றை ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டுள்ளதா என்று பார்க்கவேண்டும்.
ii. எல்லாப் பதிவேடுகளிலும் மாதாந்திர மற்றும் காலாண்டுத் தொகுப்பு வரையப்பட்டுள்ளதா எனப் பார்க்கவேண்டும்,

iii. எல்லாப் பதிவேடுகளுக்கும் புதிய அட்டைகள் மாற்றி தூய்மையாக இருக்கவேண்டும்.
iv. வழக்குக் கோப்புகளை அன்றைய நாள் வரையிலான வழக்கு நாட்குறிப்புகள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3. காவல் நிலையத்தை மற்றும் குடியிருப்பைத் தயார் செய்தல்:

i. காவல் நிலையத்தில் உள்ள அரசுச் சொத்துக்கள் அனைத்தையும் சுத்தம் செய்யவேண்டும்.
ii. காவல் நிலையத்தையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தம் செய்யவேண்டும்.
iii. காவலர் குடியிருப்புகளைச் சுத்தம் செய்யவேண்டும்.
iv. காவல் நிலையத்தில் உள்ள அரசுச் சொத்துக்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

4. கவாத்துக்குத் தயார் செய்தல்:

i. துப்பாக்கியை நன்றாகத் துடைத்து சுத்தம் செய்யவேண்டும்,
ii. அனைத்துக் காவலர்களும் அரசு அளித்த காக்கிச் சீருடையைத்தான் அணியவேண்டும்.
iii. உடை பொருட்களில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை ஆய்வுக்கு முன்னதாகவே பெற்று நிவர்த்தி செய்யவேண்டும்.
iv. கவாத்துப் பயிற்சியை முன்கூட்டியே மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பு:உதவி ஆய்வாளர், ஆய்வுக்கு தேவையான அனைத்து விபரங்களையும் தெரிந்து ஆய்வின்போது உயர் அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எவ்விதப் பதட்டமும் இன்றி தெளிவாகப் பதில் சொல்ல தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

VII. தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

1. பாதுகாப்பு நோக்கு கைது நடவடிக்கைகள்

106 குவிமுச – தண்டனை தீர்ப்பு காலத்தில்அமைதி பேணுவதற்காக இயற்றப்படும் பிணையம்

i. **106(2)** (a,b,c,d,) ல் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் ஒரு அமர்வு நீதிமன்றமோ அல்லது முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றமோ தண்டனை தீர்ப்பு வழங்கும் போது காவல் அலுவலரால் எதிரிகள் மீண்டும் நகருக்குள் வந்தால் சட்டம் ஒழுங்கு குற்றங்களில் ஈடுபடுவார்கள் என நம்பகமாக தெரியவரும் போது நீதியரசர் / நடுவர் முன்பு இப்பிரிவின் கீழ் அமைதிக்கான பிணைப்பத்திரம் பெறுமாறு வேண்டுகோள் கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ii. அதனை பெறும் நீதியரசர் / நடுவர் அத்தகைய எதிரிகளிடம் இருந்து அமைதிக்கான பிணைய பத்திரம் பெற வேண்டியது அவசியம் என கருதும் போது, மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாது தாம் பொருத்தமென கருதும் கால அளவிற்கு பிணைதாரர்களுடனோ அல்லது இல்லாமலோ கடப்பாட்டு ஆவணம் எழுதித் தருமாறு படிவம் **12** (Cr Pc Schedule II) ல் எதிரிகளுக்கு உத்திரவிட்டு அமைதிக்கான பிணைப்பத்திரம் பெறுவார்.

iii. அந்த படிவத்தின் ஒரு நகலை காவல் அலுவலர் பெற்று PSO–**749 (2)** (b) ன் படி ஊரறிந்த குற்றவாளி வரலாற்று தாள் துவக்க காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி, உத்தரவு பெற்று ஊரறிந்த குற்றவாளி வரலாற்றுத்தாள் துவக்கி அதன்மூலம் அவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும்.

107 குவிமுச – இரு பிரிவுகளுக்கிடையே அமைதி பேணுவதற்காக இயற்றப்படும் பிணையம்.

i. இரு தரப்பினர் அமைதிக்குலைவு / பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க கூடும் என நம்பகமான தகவல் காவல் அலுவலருக்கு கிடைக்கும் போது கனம் நிர்வாகத்துறை நடுவர்

SI_GUIDE.indb 273 1/6/2009 8:51:56 AM

அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் இப்பிரிவின் கீழ் அமைதிக்கான பிணைப்பத்திரம் இயற்ற கோரவேண்டும்.

ii. இரு தரப்பினர் மேற்சொன்ன செயல் புரியவோ அல்லது புரிய முற்படும் போதோ சட்டம் ஒழுங்கு அமைதி காக்க இப்பிரிவின் கீழ் இரு தரப்பினர்களுக்கும் தனித்தனி வழக்குப் பதிவு செய்து கோட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் அசலை அனுப்பி வைக்க வேண்டும். விசாரணையின் போது அவருக்கு உடனிருந்து விசாரணை நடக்க உதவி புரிய வேண்டும்.

iii. அதனை பெறும் நிர்வாகத்துறை நடுவர் அவர்கள் எதிரிகளிடமிருந்து இப்பிரிவின் கீழ் அமைதிக்கான பிணைய பத்திரம் பெற வேண்டியது அவசியம் என கருதும் போது ஒரு ஆண்டுக்கு மேற்படாது தாம் பொருத்தமென கருதும் கால அளவிற்கு ஏன் கடப்பாட்டு ஆவணம் இயற்றக்கூடாது எனக் கோரி படிவம் 12 (Cr Pc – Schedule II) ல் எதிரிகளுக்கு உத்தரவிட்டு அமைதிக்கான பிணைப்பத்திரம் பெறுவார்.

iv. அந்த படிவத்தின் ஒரு நகலை காவல் அலுவலர் பெற்று PSO 747 (2) (B) ன் படி ஊறறிந்த குற்றவாளி வரலாற்று தாள் துவக்க காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி, உத்தரவு பெற்று ஊறறிந்த குற்றவாளி வரலாற்றுத்தாள் துவக்கி அதன்மூலம் அவர்களது நடவடிக்கைகளை கண்காணிக்கவேண்டும்.

109 குவிமுச – சந்தேகப்படும் நபர்களிடமிருந்து நன்னடத்தைக்கான பிணயம்

i. யாராவது ஒருவர் தாம் இருப்பதை மறைத்துக் கொள்ள முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார் என்றும், கைது செய்வதற்குரிய குற்றம் ஒன்றை செய்யும் நோக்கத் துடன் இருக்கிறார் என்றும் நம்பகமான காரணம் இருப்பதாக காவல் அலுவலருக்குத் தெரியும் போது அந்த நபரை இப்பிரிவின் கீழ் கைது செய்து வழக்கு பதிவு செய்து நிர்வாகத்துறை நடுவர் அவர்கள் முன்பு தகவல் அறிக்கையுடன் கைதி வழிக் காவல் மூலம் ஆஜர் படுத்த வேண்டும்.

ii. அதனைப் பெறும் நிர்வாகத்துறை நடுவர்அவர்கள் அந்த எதிரியிடம் இருந்து இப்பிரிவின் கீழ் அமைதிக்கான பிணைய பத்திரம் பெற வேண்டியது அவசியம் என கருதும் போது ஒரு ஆண்டுக்கு மேற்படாது தாம் பொருத்தமென கருதும் கால அளவிற்கு பிணையாட்களுடனோ, இல்லாமலோ ஏன் கடப்பாட்டு ஆவணம் இயற்றக்கூடாது எனக் கோரி படிவம் 13 (Cr Pc –Schedule II) ல் எதிரிகளுக்கும், பிணைதாரர்களுக்கும் உத்திரவிட்டு நன்னடத்தைக்கான பிணைப்பத்திரம் இயற்றுவார்.அந்த நன்னடத்தை காலத்திற்குள் எதிரி குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டாலோ அல்லது அந்த நன்னடத்தை விதிகளை மீறி செயல்பட்டாலோ கு.வி.மு.ச 122 (1 (b) –ன் படி அந்த நிர்வாகத்துறை நடுவர் எதிரியை நன்னடத்தை மீறிய காலத்தில் இருந்து நன்னடத்தை காலம் முடியும் வரை எந்த விசாரணையும் இன்றி சிறைக்கு அனுப்ப அதிகாரம் உண்டு.

iii. அந்த படிவத்தின் ஒரு நகலை காவல் அலுவலர் பெற வேண்டும். அந்த எதிரி இரண்டு முறை இப்பிரிவின் கீழ் குற்றவாளி என தீர்ப்பானால் PSO 747 (1) ன் படி ஊறறிந்த குற்றவாளி (K.D) வரலாற்று தாள் துவக்க காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி, உத்திரவு பெற்று ஊறறிந்த குற்றவாளி வரலாற்றுத்தாள் துவக்கி அதன்மூலம் அவர்களது நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும்.

110 குவிமுச வழக்கமான குற்றவாளிகளிடமிருந்து நன்னடத்தைக்கான பிணயம் இயற்றுதல்

i. 110 (a,b,c,d,e & f (i) a,b,c,d,e,f,g) (ii) g) –ல் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் ஈடுபடும் எதிரியை காவல் அலுவலர் இப்பிரிவின் கீழ்கைது செய்து. வழக்கு பதிவு செய்து முதல் வகுப்பு நிர்வாகத்துறை நடுவர் நீதிமன்றம் முன்பு முதல் தகவல் அறிக்கையுடன் கைதி வழிக் காவல் மூலம் ஆஜர் படுத்த வேண்டும்.

ii. அதனைபெறும்முதல்வகுப்புநிர்வாகத்துறைநடுவர் அவர்கள் அந்தஎதிரியிடம்இருந்துஇப்பிரிவின் கீழ் நன்னடத்தைக்கான பிணை பத்திரம் பெற வேண்டியது அவசியம் என கருதும் போது மூன்று ஆண்டுக்கு மேற்படாது தாம் பொருத்தமென கருதும் கால அளவிற்கு பிணயாட்களுடனோ, இல்லாமலோ ஏன் கடப்பாட்டு ஆவணம் இயற்றக்கூடாது எனக் கோரி படிவம் 13 (Cr.Pc –Schedule II) ல் எதிரிகளுக்கும், பிணைதாரர்களுக்கும் உத்தரவிட்டு நன்னடத்தைக்கான பிணைப்பத்திரம் இயற்றுவார். அந்த நன்னடத்தை விதிகளை மீறி செயல்பட்டாலோ கு.வி.மு.ச 122 (–1) (b) –ன் படி அந்த நிர்வாகத்துறை நடுவர் எதிரியை நன்னடத்தையை மீறய காலத்தில் இருந்து நன்னடத்தை காலம் முடியும் வரை எந்த விசாரணையும் இன்றி சிறைக்கு அனுப்ப அதிகாரம் உண்டு.

iii. அந்த படிவத்தின் ஒரு நகலை காவல் அலுவலர் பெற வேண்டும். அந்த எதிரி ஒரு முறை இப்பிரிவின் கீழ் குற்றவாளி என தீர்ப்பானால் PSO 747 (1) ன் படி போக்கிரி வரலாற்று தாள் துவக்க காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி, உத்தரவு பெற்று ஊரறிந்த குற்றவாளி வரலாற்றுத்தாள் துவக்கி அதன்மூலம் அவர்களது நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும்.

Section 106 Cr P.C (a,b,c,d) :-

(2) (1) வது உட்பிரிவில் குறிக்கப்பட்டகுற்றங்களாவன

(அ) இந்திய தண்டனைச் சட்டத்தின் VIII – ஆவது அத்தியாயத்திலுள்ள 153 பிரிவு 153 ஆ – பிரிவு அல்லது 154 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதையும் தவிர, மற்ற குற்றம் எதுவும்

(ஆ) தாக்குதல், அல்லது வன்முறையை உபயோகித்தல் அல்லது அழிம்பு செய்தல் இவற்றில் ஏதாவதொன்றால் ஆகியதும், அல்லது ஏதாவதொன்றை உள்ளடக்கியதுமான குற்றம் எதுவும்

(இ) மிரட்டுதல் குற்றம் எதுவும்

(ஈ) அமைதிக்குலைவை உண்டாக்கிய, அல்லது உண்டாக்கக் கருதிச் செயல்பட்ட அல்லது அநேகமாக உண்டாக்குமென்று தெரிந்து செய்யப்பட்ட வேறு குற்றம் எதுவும்

Section 107 Cr P.C. : -

(1) யாராவது ஒருவர் அநேகமாக அமைதிக் குலைவை உண்டாக்கவோ, அல்லது பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கவோ, அல்லது சட்டத்தை மீறிய ஏதாவதொரு செயலால் அநேகமாக அமைதிக்குலைவையோ, பொது அமைதிக்கு பங்கத்தையோ விளைவிக்கக் கூடும் என்பதாகத் தகவல் கிடைத்து, நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான காரணமிருப்பதாக நிர்வாகத்துறை நடுவர் கருதும்போது அவர் ஓராண்டு காலத்திற்கு மேற்படாது தாம் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு, அமைதி பேணுவதற்கான முறியொன்றை எழுதித்தர வேண்டுமென்று ஏன் அத்தகையவருக்கு உத்திரவிடக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு, இதற்குப் பின் வகை செய்யப்பட்ட முறையில் அவரைக் கோரலாம்.

(2) அமைதிக்குலைவோ, பங்கமோ ஏற்படக்கூடுமென அஞ்சப்படும் இடமானது, நிர்வாகத்துறை நடுவர் ஒருவரின் வட்டார எல்லைக்குள் இருக்கும் போதோ அவரது அதிகார எல்லைக்கப்பால், மேற் சொன்னவாறு அநேகமாக அமைதிக்குலைவை உண்டாக்கக்கூடிய, அல்லது சட்டத்தை மீறிய செயலைச் செய்யக்கூடிய ஒருவர் அவருடைய அதிகார எல்லைக்குள் இருக்கும்போதோ இந்தப் பிரிவின்படியுள்ள நடவடிக்கைகள் அந்த நடுவர் முன் எடுக்கப்படலாம்

Section 109 Cr P.C. : -

முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஒருவரின் வட்டார அதிகார வரம்புக்குள் இருந்து கொண்டு தாமிருப்பதை மறைத்துக்கொள்ள முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை ஒருவர் செய்து கொண்டிருக்கின்றார் என்பதாகவும், கைது செய்தற்குரிய குற்றம் ஒன்றைச் செய்யும் நோக்கத்துடன் அவர் அவ்வாறு செய்து கொண்டிருக்கறாரென நம்புவதற்குக் காரணமிருப்பதாகவும் அந்நடுவருக்குத் தகவல் வரும்போது, அவர் ஓராண்டிற்கு மேற்படாத தாம் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு நன்னடத்தைக்கான பத்திரமொன்றை பிணையாள்களுடனோ, இல்லாமலோ, எழுதித் தர வேண்டுமென்று ஏன் அவருக்குக் கட்டளையிடப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு இதன் பின் வகை செய்யப்பட்ட முறையில் அவரைக் கோரலாம்.

Section 110 Cr P.C. : -

கீழ்க்கண்டபடி உள்ள ஒருவர் தம் வட்டார அதிகார வரம்பிற்குள் இருப்பதாக முதல் வகுப்பு நீதித்துறை நடுவருக்கு தகவல் வரும்போது அத்தகைய நடுவர் மூன்றாண்டுகளுக்கு மேற்படாது தாம் தக்கதெனக்கருதும் கால அளவிற்கு நன்னடத்தைக்கான பத்திரமொன்றை பிணையாள்களுடன் எழுதித்தர வேண்டுமென்று ஏன் அவருக்குக் கட்டளையிடக்கூடாது என்பதற்கு காரணங்காட்டுமாறு அவரை, இதன் பின் வகை செய்யப்பட்ட முறையில் கோரலாம்.

(அ) வாடிக்கையாகக் கொள்ளைக்காரனாக, கன்னமிடுபவராக, திருடராக அல்லது பொய்யாவணம் புனைபவராக உள்ளார் அல்லது

(ஆ) திருட்டுப் பொருளெனத் தெரிந்தே அதை வாடிக்கையாகப் பெறுபவர் அல்லது

(இ) வாடிக்கையாகவே திருடர்களுக்கு காப்பளிப்பவர் அல்லது அவர்களுக்குத் தஞ்சம் கொடுக்கிறவர், அல்லது திருட்டுப்பொருளை மறைத்து வைப்பதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு உதவி செய்கின்றவர் அல்லது

(ஈ) பிள்ளை பிடித்தல், ஆட்க்கடத்துதல் மிரட்டிப் பறித்தல், ஏமாற்றுதல் அல்லது அழிம்பு செய்தல் அல்லது இந்திய தண்டனைச்சட்டத்தின் XII ஆவது அத்தியாயத்தின்படியோ, அச்சட்டத்தின் 489 – அ, 489 – ஆ, 489 –இ , அல்லது 489 – ஈ இவற்றில் எந்தப்பிரிவின்படியோ, தண்டிப்பதற்குரிய குற்றம் எதையும் வாடிக்கையாக செய்கிறவர் அல்லது செய்ய முயல்கிறவர் அல்லது செய்வதற்கு உடந்தையாக இருக்கிறவர் அல்லது

(உ) அமைதிக்குலைவை உண்டாக்கக்கூடிய குற்றங்களை வாடிக்கையாகவே செய்கிறவர், அல்லது செய்ய முயல்கிறவர் அல்லது செய்வதற்கு உடந்தையாக இருக்கிறவர் அல்லது

(ஊ) பின்வரும் குற்றம் எதையும் வாடிக்கையாகவே செய்கிறவர், அல்லது செய்ய முயல்கிறவர், அல்லது செய்வதற்கு உடந்தையாக இருக்கிறவர்

(i) பின்வரும் சட்டங்களில் (அதாவது,)

(அ) 1940 ஆம் ஆண்டு மருந்துச் சரக்குகள் மற்றும் அலங்கார சாதனங்கள் சட்டம்

(ஆ) 1947 ஆம் ஆண்டு அயல் நாட்டு நாணயமாற்றை பராமரிக்கும் சட்டம்

(இ) 1952 ஆம் ஆண்டு வேலை பெறுபவர்களின் எதிர்காலக் காப்புநிதிச் சட்டம்

(ஈ) 1954 ஆம் ஆண்டு உணவுக் கலப்படத்தை தடைசெய்யும் சட்டம்.

(உ) 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியமான பண்டங்கள் சட்டம்

(ஊ) 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்பு சட்டம்

(எ) 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டம்

இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதன் படியான எதனையும் அல்லது

(ii) பதுக்கலை அல்லது கொள்ளை லாபம் அடிப்பதை அல்லது உணவு மருந்துச் சரக்குகளின் கலப்படத்தை அல்லது லஞ்சத்தை தடை செய்வதற்கு வகை செய்கின்ற வேறெந்தச் சட்டத்தின் படியேனும் தண்டிப்பதற்குரிய எதனையும்

(ஏ) பிணையம் வாங்காமல், சுதந்திரமாக விட்டு வைப்பது, சமுதாயத்திற்கு அபாயகரமானதெனும் அளவிற்கு ஒரு வெறித்தனங்கொண்டவராகவும், ஆபத்தானவராகவும் இருந்தால், அவர்,

Section 122(1)(b) : -

(1) (ஆ) எவரேனும் 117 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட நடுவரின் உத்திரவைத் தொடர்ந்து அமைதி பேணுவதற்காக பிணையாள்களின்றிப் பத்திரமொன்றை எழுதி வைத்ததற்குப்பின்பு அவர் அந்தப் பத்திரத்தை மீறி நடந்திருப்பதாக அத்தகைய நடுவருக்கோ பதவியில் அவருக்குப் பின்னவருக்கோ, உள நிறைவு சொல்லத்தக்க வகையில் மெய்ப்பிக்கப்படுமாயின், அந்நடுவரோ, பதவியில் அவருக்குப் பின்னவரோ அத்தகைய நிரூபணத்திற்குரிய காரணங்களை எழுத்துமூலம் பதிவு செய்த பின்பு அத்தகையவரை கைது செய்து அந்தப் பத்திரத்தின் கால அளவு முடியும்வரை சிறையில் இருத்தி வைக்கப்பட வேண்டுமென்று உத்திரவிடலாம், மேற்சொன்னவர் சட்டத்தின்படி வேறு எந்தத் தண்டனைக்கு அல்லது தண்ட இழப்புக்கு உட்படலாகுமோ அதற்கு அத்தகைய உத்தரவு இயங்குதல் வேண்டும்.

PSO 747(1) :-

(1) கீழ்க்கண்டவாறு தண்டனைப் பெற்றவர்களுக்கு வரலாற்று ஏடுகள் தன்னிச்சையாக துவங்கப் படுதல் வேண்டும் – அவைகள் அத்தகையவர்கள் சிறையிலிருந்து விடுதலையான நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படவேண்டும்.

நபர்கள் அல்லது எவ்வித தண்டனை பெற்றவர்கள் (1)	எத்தனை முறைகள் தண்டிக்கப்பட்டவர்கள் (2)
இந்திய தண்டனைச்சட்டம் அத்தியாயங்கள் XII மற்றும் XVII ன்படி ஆயுள் தண்டனை பெற்றவர்கள்	
இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 395 முதல் 402 வரை	ஒரு முறை
இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 392 முதல் 394 ல் தண்டனை பெற்றவர்கள் அல்லது 75 இதச படி தண்டிக்கப் பட்டவர்கள்.	இருமுறை
கன்னக்களவு	இருமுறை
திருட்டு	மூன்றுமுறை
109 கு.வி,மு.ச வின் கீழ் தண்டனை பெற்றவர்கள்	இருமுறை
110 கு.வி,மு.ச வின் கீழ் தண்டனை பெற்றவர்கள்	ஒரு முறை

Section 151 Cr P.C. :-

(1) கைது செய்வதற்குரிய குற்றம் எதையேனும் செய்வதற்கான ஒரு திட்டத்தைப் பற்றித் தெரிய வந்ததும் ஒரு காவல் அலுவலர் அந்தக்குற்றம் செய்யப்படுவதை வேறுவிதமாகத் தடுக்க முடியாதென்று தமக்குத் தோன்றுமானால், நடுவர் ஒ–ருவரிடமிருந்து கட்டளையின்றியும், பிடிகட்டளை இல்லாமலும் அவ்வாறு திட்டமிடுகின்றவரைக் கைது செய்யலாம்.

(2) (1) ஆவது உட்பிரிவின்படி கைது செய்யப்பட்ட எவரையும் அவரைக் கைது செய்த நேரத்திலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்திற்கு மேற்பட்ட கால அளவிற்குக் காவலில் வைத்திருக்குமாறு இந்தச் சட்டத்தின் வேறு வகை முறைகளின் படியேனும் அல்லது அவ்வப்போது அமலில் உள்ள வேறெந்த சட்டத்தின் வகை முறைகள் எவற்றின்படியேனும் கோரப்பட்டிருந்தாலன்றி அல்லது அதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றி அவரை அந்த கால அளவிற்கு மேறகொண்டு காவலில் வைத்திருத்தல் ஆகாது.

Section 102 Cr P.C. : –

(1) திருடப்பட்டிருப்பதாச் சொல்லப்படும் அல்லது திருடப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் எந்தப் பொருளையும் அல்லது குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதென்றும் சந்தேகத்தை உண்டாக்கும் சூழ்நிலையில் காணலாகும் எந்தப் பொருளையும் காவல் அலுவலர் எவரும் கைப்பற்றலாம்.

(2) அத்தகைய காவல் அலுவலர் ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குக் கீழ்நிலையிலுள்ள வராயிருந்தால் கைப்பற்றியதைக்குறித்து உடனடியாக அந்த அலுவலருக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ்ச் செயற்படும் ஒவ்வொரு காவல் அலுவலரும் அதிகார வரம்புடைய நடுவருக்குக் கைப்பற்றப்பட்ட பொருள் பற்றிய அறிவிப்பைச் செய்தல் வே.ண்டும். கைப்பற்றப்பட்ட பொருள் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வசதியுடையதாக இல்லாதிருக்குமிடத்து, அதனை நீதிமன்றம் வேண்டும்போது ஒப்படைக்கும் வகையிலும் மற்றும் அப்பொருளைத் தீர்வு செய்வதன்பொருட்டு நீதிமன்றம் மீண்டும் பிறப்பிக்கும் கட்டளைக்குச் செயலாக்கம் கொடுக்கும் வகையிலும் நபர் எவரிடமும் பிணைமுறி ஒன்று எழுதி வாங்கிக் கொண்டு அப்பொருளை அந்நபரின் பாதுகாப்பில் இருத்தி வைக்கலாம்.

Section 151 CrPC – முன்னெச்சரிக்கை கைது நடவடிக்கை

i. கைது செய்வதற்குரிய குற்றம் ஒன்று நடப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்றும், ஒரு திட்டம் நிறைவேற்றக்கூடும் என்றும் ஒரு காவல் அலுவலுருக்கு தெரிய வரும் போது அந்தக் குற்றத்தை வேறு விதமாகத் தடுக்க முடியாது என அவருக்கு தோன்றும் போது நடுவரது கட்டளையின்றியும், பிடிகட்டளையின்றியும் கைது செய்து காவல் நிலையம் அழைத்துச் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தக்க திரேக சோதனை செய்து நிலையக் காவலில் வைக்க வேண்டும்.
ii. கைது செய்யப்படும் நபர்கள் அதிகமாக இருக்கும் போது ஒரு பாதுகாப்பான, நல்ல சுகாதாரமான /அடிப்படை வசதிகள் உள்ள இடத்தில் காவலில் வைக்க வேண்டும்
iii. உடனடியாக மாவட்ட உயர் அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
iv. கைது செய்யப்பட்ட நபர்களுக்கு குடிநீர், உணவு வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்
v. அவ்வாறு கைது செய்யப்பட்ட எவரையும் 24 மணி நேரத்திற்கு மேல் காவலில் வைத்திருப்பது அவசியம் என்று குவிமுசட்டத்தில் கண்ட வேறு வகை முறைகளின் படியோ அல்லது அவ்வப்போது அமலில் உள்ள வேறு சட்ட வகைமுறைகள் படியோ அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி காவலில் வைத்திருத்தல் கூடாது.

vi. மாவட்ட உயர்அலுவலர்களின் உத்திரவு கிடைக்கும் போது கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவித்து அந்த தகவலை உடனடியாக மாவட்ட உயர் அலுவலர்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

vii. உயர் அலுவலர்களின் உத்திரவு கிடைக்காமல் இவ்வழக்குகளில் மேல் நடவடிக்கையினை கைவிடுதல் கூடாது.

viii. ஒவ்வொரு காவல் அலுவலரும் அவர் அலுவல் புரியும் காவல் நிலைய சரகத்தில் அன்றாடம் ரோந்து சுற்றியும், தகவல் கொடுப்போர் மூலம் தகவல் சேகரித்தும் முன்கூட்டியே நடவடிக்கை மேற்கொள்ள ஆவண செய்து சட்டம் ஒழுங்கினை நன்கு பராமரிக்க வேண்டும்.

ix. **151** கு.வி.மு.ச படி ஒருவரை கைது செய்தவுடன் நீதிமன்ற அடைப்புக் காவலுக்கு உட்படுத்த விரும்பினால் சட்டப்பிரிவு 7**(1)** (a) Criminal Law Amendment (CLA Act-) ஐ சேர்த்து அடைப்புக் காவல் அறிக்கையினை உரிய நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டும்.

41 (1) (ii) CrPC

i. இப்பிரிவு காவல் அலுவலர் எவரும் ஒரு நடுவரிடம் இருந்து கட்டளையின்றியும், பிடிகட்டளை யின்றியும் ஒரு நபரை கைது செய்வது குறித்து கூறுகிறது.

ii. குமுவிச ச/பி **41** மற்றும் **(2)** பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள அனைத்து சமயங்களிலும் எந்த ஒரு நபரையும் இப்பிரிவின் கீழ் கைது செய்யலாம்.

iii. இப்பிரிவின் கீழ் கைது செய்யும் போது உடல் நலம் குன்றியவர்கள், மன நிலை பாதிக்கப்பட்டவர்கள், வயதான பெண்கள், குழந்தைகள், அப்பாவிகள், பிச்சைக்காரர்கள் ஆகியோர்களை கைது செய்யக் கூடாது.

iv. தகுந்த காரணம் இல்லாமல், சந்தேகப்படும்படியாக பராரியாக திரிபவர்களை கைது செய்யலாம்.

v. புள்ளிவிவரக் கணக்கிற்காக இப்பிரிவின் கீழ் நபர்களை கைது செய்யாமல், குற்றத் தடுப்பு நடவடிக்கை பொருட்டு உண்மையான சந்தேக நபர்களை மட்டும் கைது செய்ய வேண்டும்.

vi. கைது செய்யப்படும் நபர்களை நிலையத்திற்கு அழைத்துச் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தக்க திரேகப் பரிசோதனை செய்து நிலையக் காவலில் வைத்து அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

vii. கைவிரல் ரேகை பதிவுகள் பதிவு செய்து மாவட்ட கைவிரல் ரேகை பதிவுக் கூடத்திற்கு கொண்டு சென்று ஒப்பீடு செய்ய வேண்டும்.

viii. அவர்கள் குறிப்பிடும் முகவரிகளையும், விவரங்களையும் முழுமையாகத் தெரிந்து கொள்வற்கு மேற்படி முகவரிகளிலுள்ள முக்கிய நபர்களையோ அவ்விடங்கள் அமைந்துள்ள காவல் நிலையத் தையோ தொடர்பு கொண்டு அவர்களது நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ளுதல் அவசியம்.

ix. புலன் விசாரணையின் முடிவில் கைது செய்யப்பட்ட நபர்கள் குற்றம் செய்பவர்கள் அல்ல என தெரிந்தவுடன் விடுவிக்க வேண்டும்.

x. வழக்கில் புலன் விசாரணை முடித்து மேல் நடவடிக்கை கைவிட்டு இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கும், நகலை வழக்குநாட்குறிப்பில் இணைத்து நிலைய வழக்குக் கோப்பிலும், நகலை காவல் ஆய்வாளர் மூலமாக காவல் துணைக் கண்காணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

xi. காவல் நிலைய சரகத்தில் யாரும் கோராத ஒரு அசையும் சொத்து (வாகனம், விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் இதர) கண்டுபிடிக்கப்படும் போது அதை ச/பி **41** (ii) r/w 102 Cr.PC ன் கீழ் வழக்குப் பதிவு செய்து அந்த சொத்தை படிவம் **95** –ன் மூலம் வருவாய் வட்டாடசியர் அவர்களுக்கு அனுப்பி ஒப்புகை பெற்று வழக்குக் கோப்பில் வைத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

145 Cr.PC

ஒரு ஊரில் உள்ள இரு சாரார்கள் இடையே இடம், கோவில், கிணற்றில் தண்ணீர் எடுப்பது சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு அவர்கள் மீது ஒரு சில வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது அவர்கள் மீண்டும் சட்டம் ஒழுங்கு பிரச்சனையை ஏற்பட்டுத்தினார்கள் என்று தெரிந்தால் அவர்களை 'அ' பிரிவு 'ஆ' பிரிவு (A Party. B Party) என இரண்டு பிரிவுகளாகப் பிரித்து இந்தப் பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு காலதாமதமின்றி விசாரணைக்காக அனுப்பி வைக்க வேண்டும்.

Section 145 Cr P.C. : -

(1) நிலம் அல்லது நீர் அல்லது அதன் எல்லைகள் சம்பந்தமாக அமைதிக்குலைவை உண்டாக்கக்கூடிய பூசல் ஒன்று தம் வட்டார எல்லைக்குள் ஏற்பட்டிருப்பதாக காவல் அலுவலரின் அறிக்கையிலிருந்தோ, பிற தகவலின்பேரிலோ நிர்வாகத்துறை நடுவறொருவருக்கு உள நிறைவாகத் தெரியும்போதெல்லாம், அவர் தமக்கு அவ்வாறு உளநிறைவாகத் தெரிவதற்கான காரணங்களை குறிப்பிட்டும் குறிப்பிட்ட ஒரு தேதியிலும், நேரத்திலும் நேர்முகமாகவோ, வழக்குரைஞர் மூலமாகவோ, தம் நீதிமன்றத்தில் வந்து, பிரச்சினையில் உள்ள சொத்து உள்ளபடியே எவரது அனுபோகத்தில் இருக்கிறது என்பது பற்றி , அவரவர் கொண்டாடும் உரிமைகளைக் குறித்து எழுத்து மூலமாக வழக்குரைகளைத் தாக்கல் செய்யுமாறும், அத்தகைய பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்களைக் கோரியும் எழுத்து மூலமான கட்டளையொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

2) இந்தப்பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில் "நிலம், அல்லது நீர்" என்னும் சொற்றொடரில் கட்டிடங்கள், சந்தைகள், மீன்பிடிக்கும் உரிமை, பயிர்கள் அல்லது நிலத்தின் பிற விளைபொருள் மற்றும் அத்தகைய சொத்திலிருந்து கிடைக்கும் வாடகைகள், அல்லது ஆதாயங்கள் உள்ளடங்கும்.

3) அத்தகைய கட்டளையின் நகலொன்றை அழைப்பாணை சார்வுக்காக இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட முறையில் நடுவர் உத்திரவிடும் ஆள் அல்லது ஆட்களுக்குச் சார்வு செய்யப்பட வேண்டும் மற்றும் குறைந்தது ஒரு நகலேனும் பிரச்சினையில் உள்ள சொத்து இருக்குமிடத்திலோ, அதற்கருகிலோ, எடுப்பான ஓரிடத்தில் ஒட்டப்பட்டு பிரசுரம் செய்யப்பட வேண்டும்.

4) அதன் பேரில் நடுவர் பிரச்சினையில் உள்ள சொத்து அனுபோகத்திற்கு தரப்பினர்கள் கொண்டாடும் உரிமைகளையோ அல்லது தகுதிகளையோ, கவனிக்காமல், அவ்வாறு கொடுக்கப்பட்ட எழுத்து மூலமான வழக்குரைகளைப் பெற்றுக்கொண்டு, மேற்கொண்டு தாம் அவசியமென நினைக்கும் சாட்சியம் ஏதேனும் இருப்பின், அதையும் எடுத்துக்கொண்டு, கூடுமானால் (1) வது உட்பிரிவின் படியான தாம் பிறப்பித்த கட்டளைத் தேதியன்று, தரப்பினர்களில் எவரேனும் பிரச்சினையில் உள்ள சொத்தின் அனுபோகத்தை கொண்டிருந்தாரா, என்பதையும், அவர் எந்தத் தரப்பினர் என்பதையும், தீர்மானித்தல் வேண்டும், ஆனால் நடுவருக்கு காவல் அலுவலரின் அறிக்கையோ பிற தகவலோ, கிடைத்த தேதிக்கு அடுத்து முந்திய இரண்டு மாதங்களுக்குள், அல்லது அந்தத் தேதிக்குப் பின்பும் (1) ஆவது உட்பிரிவின்படியான அவரது கட்டளைத் தேதிக்கு முன்பும், தரப்பினர் எவரேனும், பலவந்தமாகவும், சட்ட விரோதமாகவும், அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதாக அந்த நடுவருக்குத் தோன்றுமானால், அவர் (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட தமது கட்டளையின் தேதியன்று, அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டுள்ள தரப்பினரே, சுவாதீனத்தில் இருந்ததாகப் பாவிக்கலாம்.

5) அவ்வாறு முன்னிலையாகும்படி கோரப்பட்ட தரப்பினர் எவரும் அல்லது அக்கறை கொண்டுள்ள வேறு எவரும், மேற்சொன்னவாறான பிரச்சினை எதுவும் இல்லையென்றோ இருந்ததில்லையென்றோ காட்டு வதற்கு இநத்ப்பிரிவிலுள்ள எதுவும், தடையாயிருத்தல் ஆகாது, அத்தகைய நேர்வில் நடுவர் மேற்சொன்ன தம் கட்டளையை ரத்து செய்தல் வேண்டும், அதன் பின்னர் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி வைத்தல் வேண்டும்,

ஆனால் அவ்வாறு ரத்து செய்யப்பட்டதற்குட்பட்டு (1) ஆவது உட்பிரிவின்படியான நடுவரின் கட்டளை முடிவானதாகும்.

6) (அ) மேற்சொன்ன சொத்து தரப்பினர்களில் ஒருவரின் சுவாதீனத்தில் இருந்ததாகவோ (4) ஆவது உட்பிரிவின் விலக்கின்படி, அவரது சுவாதீனத்தில் இருந்ததாகக் கொள்ளப்பட வேண்டுமென்பதாகவோ, நடுவர் தீர்மானிப்பாரானால், அவர், முறையான சட்ட நடவடிக்கை மூலம் அதிலிருந்து வெளியேற்றப்படும்வரை, அத்தகைய தரப்பினர்,அந்தச் சொத்தின் சுவாதீனத்திற்குத் தகுதியுடையவரென விளம்பியும், அவ்வாறு வெளியேற்றப்படும்வரை அத்தகைய சுவாதீனத்தில் எந்தவொரு விதமான குலைவும் ஏற்படாமல் தடுத்தும் கட்டளையொன்றைப் பிறப்பிக்கவேண்டும் மற்றும் (4) ஆவது உட்பிரிவின் விலக்கின்படி தாம் மேல் நடவடிக்கை எடுக்கும்போது, பலவந்தமாகவும், சட்டவிரோதமாகவும், அப்புறப்படுத்தப்பட்ட தரப்பினருக்கு சுவாதீனத்தை மீட்டுத்தரலாம்.

(ஆ) இந்த உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையானது (3) ஆவது உட்பிரிவில் விதிக்கப்பட்ட முறையில் சார்வு செய்து பிரசுரிக்கப்பட வேண்டும்.

7) அத்தகைய நடவடிக்கைக்கான தரப்பினர் எவரேனும் மரணமடையும்போது, மரணமடைந்த தரப்பினரின் சட்டப்படியான பிரதிநிதியை அந்த நடவடிக்கைக்குரிய தரப்பினராக இருக்கும்படி நடுவர் செய்விக்கலாம், அதன் பேரில் விசாரணையைத் தொடர்ந்து நடத்தல் வேண்டும். மற்றும் அத்தகைய நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் மரணமடைந்த தரப்பினரின் சட்டப்படியான பிரதிநிதி யார் என்பது பற்றி கேள்வி ஏதேனும் எழுமானால் மரணமடைந்த தரப்பினரின் பிரதிநிதிகளாக பாத்தியதை கொண்டாடுகிறவர்கள் அனைவரையும் அதற்குத் தரப்பினர்களாக ஆக்குதல் வேண்டும்.

8) நடுவர் தம் முன்னிலையில் நடப்பிலிருக்கின்ற இந்தப் பிரிவின்படியான நடவடிக்கையொன்றில் பூசல் சொத்தாகவுள்ள பயிரோ, சொத்தின் பிற விளைபொருளோ, விரைவாகவும் இயல்பாகவும் அழியக்கூடியதென்று கருதுவாரானால், அவர், அத்தகைய பொருளைத் தக்கவாறு காப்பதற்கு அல்லது விற்பதற்குக் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம், மற்றும் அந்த விசாரணை முடிவடைந்ததின்பேரில் அத்தகயை பொருள் அல்லது அதனை விற்ற தொகையினை வகை செய்வதுபற்றி தாம் தக்கதெனக் கருதும் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

9) நடுவர் தாம் தக்கதென நினைத்தால் இந்தப் பிரிவின்படியான நடவடிக்கைகளில் எந்தக் கட்டத்திலும் தரப்பினரில் எவரது விண்ணப்பத்தின் பேரிலும் சாட்சி எவரையும் முன்னிலையாகுமாறு, அல்லது பத்திரம் அல்லது பொருளைத் தாக்கல் செய்யுமாறு உத்திரவிடுகிற அழைப்பாணையொன்றைப் பிறப்பிக்கலாம்.

10) இந்தப் பிரிவிலுள்ள எதுவும் 107 ஆவது பிரிவின்படி மேல் நடவடிக்கை எடுப்பதற்கு நடுவருக்குள்ள அதிகாரங்களைப் பாதிப்பதாகக் கருதுதல் ஆகாது.

PSO 151

இந்தப் பிரிவின் கீழ் விசாரணை மேற்கொள்ள வேண்டி அதிகாரம் உட்கோட்ட வருவாய் துறை கோட்டாட்சியர்/ நிர்வாகத்துறை முதல் வகுப்பு நடுவர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

i. காவல் நிலையங்களில் காவல் அலுவலர்களால் நடத்தப்பட்டதாக அவர்கள் மீது கொடுக்கப்படும் வன்கொடுமைகள், இறப்புகள், கொடுங்காயங்கள் மற்றும் காவல்துறை அத்துமீறல்கள் போன்றவற்றில் விசாரணை நடத்தப்படும்.
ii. வருவாய் கோட்டாட்சியர் முதல் கட்ட விசாரணை முடித்து நடவடிக்கை மேற்கொள்வார்
iii. இறப்பு ஏற்பட்டிருந்தால் பிரேத விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை மேற்கொண்டு முதல் கட்ட விசாரணை அறிக்கையை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புவார்,

iv. அதன் பின்னர் மாவட்ட ஆட்சியரின் உத்திரவினைப்பெற்று முழுமையான விசாரணை மேற் கொள்வார்.
v. விசாரணை முடிவுற்று அந்த விசாரணை அறிக்கையை மாவட்ட ஆட்சியர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைப்பார்.
vi. அரசிடமிருந்து அறிக்கை பெற்ற பின்பு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

PSO 151 Procedure in respect of charges of torture by the Police, or of death or grievous hurt caused by the Police.

i. The following procedure is prescribed in respect of allegations of torture or of causing death or grievous hurt or other serious offences against the person made against the Police officials. In cases of allegation or rape or commission of an unnatural offence, such enquiry shall be held irrespective of the fact whether the act or acts committed was in the course of duties or outside the sphere of duties.
ii. **General –** When complaints of torture, etc., against a Police Subordinate are received by a Police officer either in the muffassil or in the City through telegram from non-official sourse or anonymous or pseudonymous petitions, letters or even by vague romour, the officer receiving the same should immediately inform the RDO concerned in the muffassil and the PA to Collector in the City of the fact that a complaint has been received and that he is trying to verify the veracity or authenticity of the information and that the result of the verification will be communicated to him as early as possible. **He should not however register the complaint as a FIR until after such verification.**

2. அமைதிக் குழு – அமைப்பு முறையும் அதன் பணியும்

காவல் நிலைய எல்லைக்குள் சமுதாயம், சமூகம், ஜாதி, இனம், மதம் ஆகியவற்றில் ஏற்படும் வேண்டத்தகாத நிகழ்ச்சிகளின் போதும், நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் போதும், நடந்து முடிந்த பிறகும் அந்தப் பகுதிகளில் சுமூகமான உறவுகள் மேம்பட ஏற்படுத்தப்படும் குழுவே இதுவாகும்.

i. இக்குழுவில் அனைத்து தர முக்கிய நபர்களையும், வருவாய் துறை உயரலுவலர்களையும், மதிப்பிற்குரிய பொறுப்பில் உள்ள அப்பகுதியின் பெண்களையும், எந்தக் கட்சி பாகுபாடின்றி அனைத்து கட்சியின் முக்கிய நபர்களையும், பிரச்சனைக்குரிய இரண்டு தரப்பினர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டும்.
ii. இதற்கான நடவடிக்கையில் காவல் துறை அலுவலர்கள் வருவாய் துறை அலவலர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.
iii. அரசியலமைப்பு சாசனச் சட்டங்கள் 14 முதல் 31 முடிய உள்ள அனைத்து சட்டதிட்டங்களையும் முறையாக சமயம், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கடைபிடிக்க வேண்டும்.
iv. காவல் துறையில் காவலர் முதல் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் வரை உள்ளவர்கள் தாக்கலாகும் எந்த ஒரு பிரச்சனையையும் சாதாரணப் பிரச்சனையாக எடுத்துக் கொள்ளாமல் முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை மேற்கொண்டு சட்டம் மற்றும் ஒழுங்கை நன்கு பேணிக் காக்க வேண்டும். இதற்கு அமைதிக் குழுவின் துணையினை தேவைப்படும்போது நாடுவது அவசியம்.
v. இது போன்ற குழுக்கள் அமைக்கப்படுவதால் அரசியல் சாசன சட்டங்களில் கூறப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தற்போதும் முறையாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

vi. அரசியல் சாசன சட்டங்களை காவல் துறையினர் நீதித்துறையினர் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் முறையாகக் கடைபிடித்து சட்டம் ஒழுங்கை நல்ல முறையில் நிலை நாட்டுவதில் அமைதிக் குழுவின் பங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

VIII. பாதுகாப்பு, அமலாக்கல் மற்றும் இதர அலுவல்கள்

சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதியைக் காத்து அவைகளை நல்லமுறையில் பராமரிக்கும் பொருட்டு, அதற்கெதிரான சட்ட விரோதச் செயல்களில் யாரேனும் ஈடுபடுகிறார்களா என்பதைக் கண்காணித்து அப்படி தவறு செய்பவர்களைக் கைது செய்வதுடன், தடைசெய்யப்பட்ட பொருட்கள் ஏதும் அவர்கள் வசம் இருந்தால் அவைகளையும் கைப்பற்றி, அவர்கள் மீது உரிய சட்ட நடவக்கைகள் எடுத்து அவர்களுக்கு நீதிமன்றத்தில் தண்டனை கிடைக்கச் செய்து அவர்கள் மீண்டும் அம்மாதிரியான குற்றங்களில் ஈடுபடாதவாறு தடுப்பதற்காகச் செய்யும் பணியே வேட்டை (Raid) ஆகும்.

கீழ்க்கண்ட குற்றங்களைத் தடுப்பதற்காக வேட்டைகள் நடத்தப்படுகின்றன (Types of Raid)

- சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்தல்
- மதுவிலக்குக் குற்றத்தில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்தல்
- விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்தல்
- போதைப் பொருட்கள் கடத்துபவர்கள், விற்பவர்களைக் கண்டுபிடித்தல்
- வெடிகுண்டு மற்றும் வெடிமருந்துப் பொருட்களை சட்ட விரோதமாகப் பயன்படுத்துவோர் மற்றும் கடத்துபவர்களைக் கண்டுபிடித்தல்
- மண், மணல், கல்குவாரி ஜல்லிக் கற்கள், கனிம வளங்கள், அத்தியாவசியப் பொருட்களான ரேசன் அரிசி மற்றும் உணவு வகைப் பொருட்கள் ஆகியவற்றைக் திருடுவோர் மற்றும் கடத்துபவர்களைக் கண்டுபிடித்தல்
- தடை செய்யப்பட்ட லாட்டரிச் சீட்டுக்கள் வைத்திருப்போர், விற்போர் மற்றும் கடத்துபவர்களைக் கண்டுபிடித்தல்
- திருட்டு வீடியோ குறுந்தகடுகளை விற்போரை கண்டுபிடித்தல்
- ஆபாச புத்தகங்கள் / குறுந்தகடுகள் விற்போரை கண்டுபிடித்தல்

SI_GUIDE.indb 285 1/6/2009 8:51:57 AM

பொதுவாக அனைத்து வேட்டையின்போதும் கவனிக்க வேண்டியவைகள்

- தனக்கு நேரடியாகவோ அல்லது காவல் நிலையம் மூலமாகவோ எங்காவது சட்ட விரோதச் செயல்கள் நடப்பதாகத் தகவல் கிடைத்தால் அவசியம் ஏற்பட்டால் உயர் அலுவலர்களுக்குத் தகவல் தெரிவித்து அவர்கள் அறிவுரைகளைப் பின்பற்றியும், போதிய காவலர்களைத் தயார் செய்தும், செல்லும் பணி குறித்து காவலர்களுக்கு உரிய விளக்கம் கொடுத்தும் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும். (இரகசியம் காப்பதாக இருந்தால் காவலர்களைத் தயார் மட்டும் செய்து கொண்டு பணிக்கு அழைத்துச் சென்று வேட்டை நடத்தவேண்டிய இடத்தில் வைத்து பணி விளக்கம் கொடுக்கலாம்).
- வேட்டைக்குச் செல்லும் உதவி ஆய்வாளர் கண்டிப்பாக சீருடை அணிந்தும், கைத்துப்பாக்கி, வாக்கி டாக்கியும், டார்ச் லைட் ஆகியவற்றை மறவாமல் தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டும்.
- இரவு நேர வேட்டையின்போது உரிய விளக்கு வசதிகள் (Torch light, Search light) வாகன வசதி களுடன் செல்ல வேண்டும்.
- வேட்டைக்குச் செல்லும் போது வீடியோ கேமிரா கொண்டு செல்வது நல்லது.
- வேட்டையாடவேண்டிய சம்பவ இடம், அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் நன்கு கவனித்து, குற்றச்செயலில் ஈடுபடுவர்களைப் பிடிக்க உரிய காவலர்களைச் சீருடையிலோ அல்லது சீருடையின்றியோ (Mufty) பணியில் அமர்த்த வேண்டும்.
- குற்றச் செயல்களில் பெண்கள் ஈடுபட்டிருப்பதாகத் தகவல் தெரியும் போது வேட்டைக்குச் செல்லும்போது தேவையான பெண் காவலர்களையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும்.
- எதிரிகள் தப்பிச் செல்லாதபடி முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.
- வேட்டை நடக்கும் இடத்தருகில் கிணறு, பள்ளம், உயரமான கட்டிடங்கள் எதுவும் இருந்தால் அதில் குற்றவாளிகள் விழுந்துவிடாமல் தடுக்குமாறு காவலர்களுக்குத் தகுந்த அறிவுரை கொடுக்க வேண்டும்.
- எதிரிகளைத் துரத்திச் செல்லும்போது அவ்விடத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தால் மட்டுமே தொடர்ந்து துரத்திச் சென்று பிடிக்க வேண்டும். தெரியாத இடங்களில் துரத்தாமல் அவர்களது போக்கை மட்டும் கண்காணிக்க வேண்டும்.
- அவ்வாறு துரத்திச் செல்லும்போது எதிரிக்கு ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டு அதனால் காவல் துறையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட வாய்ப்புண்டு.
- விரட்டிப் பிடித்து கைது செய்யப்பட்ட எதிரிகளை உடனடியாகத் திரேகப் பரிசோதனை செய்ய வேண்டும்.
- வேட்டையின்போது எதிரிகளால் காவலர்களுக்கு அசம்பாவிதங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நடக்கும் என நம்பும் போது தேவையான குறைந்தபட்ச பலத்தை உபயோகப்படுத்தலாம். தகவலை உடனடியாக உயர் அலுவலர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- பொது இடத்தில் வேட்டைக்குச் செல்லும்போது தனி நபர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியவர்களைச் சாட்சிக்கு வைத்துக் கொள்ளலாம்.
- சம்பவ இடம் பொது இடமாக இருக்கும் போது தனி நபர் சாட்சி இல்லையெனில், வேட்டைக்கு உடன்செல்லும் காவலர்கள் / அலுவலர் சம்பவ இடத்தில் பொருட்களை அத்தாட்சி தயார்

செய்து கைப்பற்றும்போது அதில் கையொப்பம் இட வேண்டும். மேற்படி அத்தாட்சியில், எங்கு, எப்போது, யாரால், யாரிடமிருந்து, என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அந்த அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெற வேண்டும்.

- அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருட்களை நிலையம் கொண்டு வந்து படிவம் 95ல் (Form 95) பூர்த்தி செய்தும், முதல் தகவல்அறிக்கை, காவல் அடைப்பு அறிக்கை (Remand Report) ஆகியவைகளுடன் எதிரியைத் தாமதமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
- வேட்டையின்போது எதிரிக்குக் காயம் எதுவும் ஏற்பட்டிருந்தால் மருத்துவ குறிப்பாணை மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.
- குடிபோதையில் உள்ளவர்களைக் கைது செய்யும்போது அவர்களின் அப்போதைய நிலை அறிந்து அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கட்டிடத்திற்குள் வைத்தோ, வீடுகளில் வைத்தோ அல்லது வாகனங்களைப் பயன்படுத்தியோ குற்றம் புரிபவர்கள் மீதான வேட்டையின் போது கவனிக்க வேண்டியவை

- தகவல் கிடைத்தவுடன் உடனடியாகவும், நேரடியாகவும் வேட்டைக்குச் செல்லாமல், குற்றம் நடக்கும் கட்டிடம், வீடு பற்றிய தகவல்களை உயர் அலுவலர்களுக்குத் தெரிவித்து அவர்களது அறிவுரைகளைப் பின்பற்றி அதன்படி வேட்டைக்குச் செல்ல வேண்டும்.
- குற்றம் நடக்கும் வீடு அல்லது கட்டிடத்திற்குள் வேட்டைக்குச் செல்லும்போது கூடியவரையில் ஆய்வாளர் தலைமையில் சோதனை வாரண்ட் (Search Warrant) பெற்றுச் செல்ல வேண்டும்.
- குற்றம் நடக்கும் வீடு அல்லது கட்டிடத்திற்குள் உள்ள நபர்கள் ஓடிவிடுவார்கள் அல்லது சாட்சியங்களை அழித்துவிடுவார்கள் என்று கருதும்போது சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு எழுத்துமூலமான முன் தகவலைத் (Advance Intimatiion) தெரிவித்துவிட்டு சோதனைக்குச் செல்லலாம்.
- இந்த வேட்டைக்குச் செல்லும்போது தனியார் சாட்சிகள் இருந்தால் உடன் அழைத்துச் செல்ல வேண்டும்.

வேட்டை முடிந்து தனி அறிக்கை சமர்ப்பித்தல்

- உயர் அலுவலர்களின் உத்தரவுபடி தனி அலுவலாக வேறு காவல் நிலைய எல்லைக்குள் வேட்டையாடச்சென்று பணி முடித்து தனி அறிக்கை செய்யும்போது, அசல் அறிக்கையை சம்பந்தப்பட்ட காவல் நிலைய அலுவலரிடம் நடவடிக்கைக்காகக் கொடுத்தும், நகலைத் தன் வசமும் வைத்துக்கொண்டு, காவல் கண்காணிப்பாளருக்கு உரிய அறிக்கை அனுப்ப வேண்டும்.
- அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருட்களை நிலையம் கொண்டுவந்து படிவம் 95–ஐ பூர்த்தி செய்து நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
- கைது செய்யப்பட்ட கைதிகளை அத்தாட்சியுடன் முதல் தகவல் அறிக்கையும் தயார் செய்து காவல் அடைப்பு அறிக்கை மூலம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப வேண்டும்.

1. சிறு வழக்குகள் (PETTY CASES)

உதவி ஆய்வாளர் ரோந்து அலுவல் செய்யும்போது நகரத்தின் முக்கிய வீதிகள், சாலைகள் போன்ற வற்றில் போக்குவரத்துக்கு இடையூறாகவும், பொதுமக்கள் நடப்பதற்கு இடையூறு (NUISANCE) செய்பவர்கள் (பாதையில் கடைகள் அமைத்தல், சாலையை அடைத்துக் கொள்ளுதல், பாதைகளில் மண் குவியல்கள், கல் குவியல்கள், குப்பைகள், கழிவு நீர் திறந்துவிடுதல்) போன்ற சிறு குற்றங்கள் புரிவோரைத் தண்டிப்பதற்கு சிறு வழக்குகள் பதிவு செய்ய வேண்டும்.

செய்யவேண்டியவை

- உதவி ஆய்வாளர் தினமும் காலை, மாலை ரோந்து செல்லும்போது மேற்கண்ட தலைப்புகளில் வழக்குகள் பதிவு செய்து, ஆஜர் முச்சலிக்கா பெற்று, நிலையம் வந்து, பதிவேட்டிலும் பொது நாட்குறிப்பிலும் பதிவு செய்து, வழக்கு விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரிவித்து வழக்கை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- தலைமைக் காவலர்களைக் கொண்டு அந்த வழக்குகளைப் பதிவு செய்யலாம். அதை உதவி ஆய்வாளர் மேற்பார்வையிட வேண்டும்.
- இடையூறு செய்பவர்கள் மற்றம் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக இருக்கும் பொருட்களை உடனே அகற்ற வேண்டும்.
- தினமும் ரோந்து அலுவல் புரிந்து மீண்டும் இதே குற்றத்தைச் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

செய்யக்கூடாதவை

இடையூறு செய்பவர்களை அவதூறாகப் பேசுதல்

- போக்குவரத்து நெரிசலான நேரங்களில் (Peak Hours) உதவி ஆய்வாளர் ரோந்து செல்லாமல் இருத்தல்.
- அற்ப வழக்கு என்ற பேரில் ஏழைகளைத் துன்புறுத்துதல்.

தமிழ்நாடு நகரம் மற்றும் தொல்லைச் சட்டம் 1889 (The Tamilnadu Town Nuisance Act 1889)

- நகரங்களில் போக்குவரத்து மற்றும் வாகனங்களால் ஏற்படும் இடையூறுகளையும் தொந்தரவு களையும், அபாயத்தையும் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும்.
- இந்தச் சட்டம் அனைத்து நகராட்சிக்கும் உட்பட்ட இடங்களிலும், அரசால் அறிவிப்புச் செய்யப்பட்ட மற்ற சில இடங்களிலும் மற்றும் சில சிறப்பான காலங்களிலும் அமலில் இருக்கும்.

காவல் அலுவலர்களின் அதிகாரங்கள்

- இச்சட்டத்தின்கீழ் உதவி ஆய்வாளர் தம்முன்னே தண்டனைக்குரிய குற்றத்தை யார் செய்தாலும் அவர்களைப் பிடியாணையின்றிக் கைது செய்யலாம். கைது செய்த நபர்கள் மீது அந்தந்தப் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம். குற்றங்கள் அனைத்தும் பிணையில் விடக்கூடியவை.

பிரிவு 3:

- அஜாக்கிரதையாக வண்டி ஓட்டிச் செல்லுதல்.
- கால்நடைகளைப் பொதுமக்களுக்கு அபாயம் ஏற்படும் விதத்தில் ஓட்டுதல்.
- இடையூறு ஏற்படும் விதத்தில் சாலையின் வலதுபுறம் வண்டியை ஓட்டுதல்.
- வாகனம் அல்லது கால்நடைகளை அடக்கமுடியாமல் விரட்டிவிடுதல்.
- வாகனங்களை நிறுத்துமிடம் தவிர வேறு இடங்களில் நிறுத்துவது.
- போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் வியாபாரம் செய்தல்.
- குதிரை அல்லது நாயை மற்றவர் மீது பாய விடுதல்.
- அருவருப்பு உண்டாகும்படி பிச்சை எடுத்தல்.
- கட்டிடம் கட்டத் தேவையான பொருட்கள் மற்றும் குப்பைகளைச் சாலையில் கொட்டிவைத்தல்.
- விதிமுறைகளை மீறி ஒலிபெருக்கியை உபயோகப்படுத்துதல்.
- அருவருப்பு உண்டாகும்படி நிர்வாணமாகத் திரிதல், பொது இடங்களில் காலைக் கடன்களைக் கழித்தல், தன் பொறுப்பிலிருக்கும் குழந்தைகளையும் பொது இடங்களில் காலைக் கடனைக் கழிக்கவிடுதல்.
- குடிபோதையில் தகாத முறையில் நடத்தல் மற்றும் பேசுதல்.
- இவ்வாறான குற்றங்களை எந்தக் காவல் அலுவலரேனும் தம் கண்முன்னே யாரேனும் செய்வதைக் கண்டால், இந்தச் சட்டம் அவ்விடத்தில் அமலில் இருக்கும்போது உடனே கைது செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

பிரிவு 4:

- கிணறு, குளம் மற்றும் அபாயமான இடங்களைத் தக்க பாதுகாப்பு இல்லாமல் விட்டுவைத்தல்.
- தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளைப் பொது இடங்களில் கொட்டுதல்.

ஆஜர் முச்சுவிக்கை.

ககக வயது 29/08
த/பெ சசச
தெற்கு அண்ணாநகர்
பழனி

மார்ஜினில் கண்ட நான், 09.01.08ம் தேதி 1300 மணிக்கு பழனி R.F-ரோட்டில் தள்ளுவண்டியில் பழங்களை வைத்து போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு உண்டாகும்படி வாகனனை நிறுத்த இந்நாளிற்கான 10.01.08ம் தேதியில் தருமபுரி மாவட்டம் சொள்ள பழனி இரண்டாவது நடுவர் நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரடி ஆஜராகிறேன்.

(ஒப்பம்) சொள்வம்.

Before me,

S. I. OF POLICE.
PALANI TOWN P.S
DINDIGUL DIST
9/1/08

In the Court of the Judicial Magistrate, Palani.

ORDINARY **PETTY CASE CHARGE SHEET**

Circle : **PALANI TOWN** Station : **PALANI TOWN P.S.** Judicial MAGISTRATE COURT - Palani.

1.Consecutive Number : 3/08

2.Names of persons charged, address and occupation : [illegible] வயது 29/08
[illegible]
தெற்கு அண்ணாநகர்
பழனி

3.By whom arrested and when : 09.01.08 - 1300 hrs.
சார்பு ஆய்வாளர்.
பழனி நகர் காவல் நிலையம்.

4.When Bailed : 09.01.08 - 14.00 hrs.

5.Charge under Section : 7, 9 & XIX MCP ACT

09.01.08ல் இரவு 1300 மணிக்கு ஊரடங் காலம் விதி கண்ட எதிரி குள்ளவண்டி-யில் பழங்களை வைத்து பழனி R.F. ரோடில் ரோட்-டிலே நடுவே நிறுத்தி போக்கு-வரத்துக்கும் பொது ஜன அமை-திக்கும் இடையூறு செய்த குற்றம்.

S.I. OF POLICE 9/1/08
PALANI TOWN P.S
DINDIGUL DIST

2. மோட்டார் வாகன சிறு வழக்குகள் (Motor Vehicle Petty Cases)

வாகனங்களுக்கான சான்றுகள், காப்பீடுகள் ஆகியவற்றை சரி பார்க்கவும், வாகன ஓட்டுநர்கள் விதிமுறைகளை மீறினாலோ, குடிபோதையில் வாகனங்களை ஓட்டிவந்தாலோ நிகழக் கூடிய சாலை விபத்துக்களை தடுக்கும் நோக்கோடும் அவர்கள் மீது எடுக்கப்படும் சட்டப்பூர்வமான நடவடிக்கை ஆகும்.

செய்யவேண்டியவை

- வாகன வழக்குகள் பதிவு செய்யும்போது வாகனத்தின் ஆவணங்களைச் சோதனை செய்து, அவைகள் சரியில்லையென்றால் அதற்கான பிரிவில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.
- வாகன வழக்குகள் பதிவு செய்யும் போது சான்றுகள் சரியாக இல்லாத சந்தேகமான வாகனத்தை மட்டும்தான் நிலையத்திற்க்கு கொண்டு வர வேண்டும். சரியான ஆவணங்களை ஆஜர் செய்யும்போது வாகனத்தை விடுவிக்க வேண்டும். தேவையில்லாமல் வாகனங்களைக் காவல் நிலையத்தில் நிறுத்திவைக்கக் கூடாது, நிலையத்திற்க்கு கொண்டு வரும் வாகனத்தை தகுந்த பாதுகாப்பில் நிறுத்தி வைக்க வேண்டும்.
- குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்தவர் மீது வழக்குப் பதிவு செய்தால் அவரை மருத்துவ குறிப்பாணையுடன், அரசு மருத்துவமனைக்கு அனுப்பி குடிபோதைச் சான்று பெற வேண்டும்.
- குடிபோதையில் வாகனம் ஓட்டிவந்தவரை வழக்குப் பதிவிற்குப்பின் மீண்டும் தொடர்ந்து வாகனத்தை ஓட்டிச்செல்ல அனுமதிக்கக்கூடாது. அவரின் ஓட்டுநர் உரிமத்தை கைப்பற்றி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு (RTO) அனுப்பி வாகன ஓட்டுனர் உரிமத்தை ரத்து செய்ய பரிந்துரை செய்து அனுப்ப வேண்டும். ஓட்டுநர் உரிமம் உள்ள வேறு ஒருவர் அவ்வாகனத்தை ஓட்டிச் செல்ல அனுமதிக்க வேண்டும்.
- வழக்குப் பதிவுசெய்யும்போது அச்சிடப்பட்ட காவல்துறை அறிவிப்பு (Printed POLICE NOTICE) 2 கார்பன் வைத்து 3 பிரதிகளும் பூர்த்தி செய்ய வேண்டும். முதல் பிரதியை நீதிமன்றத்திற்கும், இரண்டாம் பிரதியை எதிரிக்கும் கொடுத்து மூன்றாவது நகல் கிழிக்கப்படக்கூடாது. மோட்டார் வாகன வழக்கு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- ஆவணம் இல்லை என வழக்குப் பதிவு செய்யும்போது காவல்துறை அறிவிப்பு (Printed POLICE NOTICE) Col.5-ல் குறிப்பிட்டுள்ளபடி, அவருக்கு ஆஜர்ப்படுத்த அவகாசம் அளிக்க வேண்டும்.
- Spot Fine முறை நடைமுறையில் இருந்தால் அபராதத் தொகையை வாங்கி அதற்குரிய ரசீதை உடனடியாக ஆய்வாளரை வரவழைத்துக் கொடுக்க வேண்டும். அபராதத் தொகையை குறிப்பாணையுடன் மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு தாமதமின்றி அனுப்ப வேண்டும்.
- வாகனத்தைக் காவல் நிலையத்தில் நிறுத்தும்போது உரிமையாளரிடம் வாகனத்தில் ஏதாவது பொருட்கள் இருந்தால் எடுத்துக்கொள்ளச் சொல்ல வேண்டும். அவ்வாகனத்திற்கு பாதுகாப்பாக கிளீனரை உடன் இருக்க செய்ய வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு நேரிடையாக வந்து வழக்கை முடிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அழைப்பாணை பெற்று, சார்பு செய்து வழக்கை முடிக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- வாகன தணிக்கையின்போது விதிகளை மீறும் வாகனங்களை அவசியமில்லாமல் காவல் நிலையத்தில் நிறுத்திவைத்தல்.
- Spot Fine அபராதம் விதிப்பதற்கு காவல் ஆய்வாளர் பதவி நிலைக்கு மேலுள்ள அலுவலர்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. Spot Fine ரசீது புத்தகத்தை ஆய்வாளர் கையொப்பம் பெற்று உதவி ஆய்வாளர் கையில் வைத்திருத்தல்.
- Spot Fine விதித்த பின் ரசீது கொடுக்காமல் பணம் வாங்குதல்.
- Spot Fine நடைமுறையில் இல்லையென்றால் நீதிமன்றத்தில் முடிப்பதாகக் கூறி பணம் வாங்குதல்.

1. B. 311 – 20,000 Bks – 29.9.06

POLICE NOTICE / காவல் துறை அறிவிப்பு
TRIPLICATE / மூன்றாம்படி

1880599

1. Please note the Vehicle (type) BAJAJ PLATINA TWO WHEELER registration No. / பதிவு எண் XXXXX was found violating Motor Vehicles Ct / Rules on (date) தேதி 5-6-2007 at (time) / மணிக்கு 1600 in place / (இடத்தில்) கீரமேல் நிலையம் and license the owner driver is liable for prosecution / மோட்டார் வாகனச் சட்டம் / விதிமுறைகளை மீறியதாகக் காணப்பட்டதால், அதன் உரிமையாளர் / ஓட்டுநர் குற்றச்சாட்டிற்கு உள்ளாகிறார் என்பதை தயவு செய்து தெரிந்து கொள்ளலாம்.

2. The violation / defects are (gives serial Nos.) (2) WITH OUT D/L
மாறுதல்களும் / குறைபாடுகளும் (வ.எண்.குறிப்பிடவும்)

3. Driver/ ஓட்டுநர்:

Name / பெயர் : XXXXXXX

Age / வயது 40/07

Address / முகவரி S/o XXXXXXX
No: , N.G.O காலனி,
தல்லாகுளம், மதுரை-12

Police Station / காவல் நிலையம் B-12 தல்லாகுளம்

4. Owner / உரிமையாளர்:

Name / பெயர் : XXXXXXX

Age / வயது 52/07

Address / முகவரி S/o XXXXXXX
கதிரேசன் காலை,
தல்லாகுளம், மதுரை

Police Station / காவல் நிலையம் B-12, தல்லாகுளம்.

5. The owner / driver is given an opportunity to produce the following records (Clear Xerox copy) to the undersigned before (date) / வாகன ஓட்டுநர் / உரிமையாளர், கீழ்க்கண்ட ஆவணங்களை (தெளிவான நகல் நகல்) (தேதி) 8-6-2007 at (time) / 1000 மணிக்குள் கீழே ஒப்பமிட்டுள்ள அதிகாரியிடம் கொண்டுவந்து காண்பிக்கவும்.

(i) Vehicles Permit (for Commercial Vehicles only) / வாகன பெர்மிட்.
(ii) R.C. Book / வாகனப் பதிவுச் சான்று.
(iii) Vehicle Insurance Certificate / வாகன காப்புறுதி சான்று.
(iv) Driving Licence / ஓட்டுநர் உரிமம். ✓

6. If the above documents are not produced, the offender is liable for prosecuting in a Court of Law.

மேற்கண்ட ஆவணங்களை குறிப்பிட்ட தேதிக்குள், கொண்டுவரத் தவறினால், நீதிமன்றத்தில் , மீறியவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(X) (கை)
XXXXXX
Received a Copy
காவல் துறை அறிவிப்பின் நகல் ஒன்று
பெற்றுக் கொண்டேன்.
Signature / ஒப்பம்

Signature of Police Office.
காவல் அதிகாரியின் ஒப்பம்.
தல்லாகுளம் காவல் நிலையம்
மதுரை-12
Police Station / காவல் நிலையம்

Seal / முத்திரை.

POLICE STATION COPY

3. மோட்டார் வாகனச் சட்டம்

இச்சட்டம் முதன் முதலில் 1939–இல் இயற்றப்பட்டது. பின்பு, பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கை, சாலைப் பாதுகாப்பு விதிகள், விபத்துக்களைக் குறைக்க ஏற்படுத்தப்பட்ட விதிகள், வாகனங்களால் ஏற்படும் மாசினைக் குறைக்க விதிக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 1988–ஆம் ஆண்டு புதிய வாகனச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டத்தின் சில முக்கிய பிரிவுகள்

பிரிவு 119 மோட்டார் வாகன ஓட்டிகள், தானியங்கிப் போக்குவரத்துச் சைகை விளக்குகள் காட்டும் சைகைப்படியும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் காவலரது சைகைப்படியும் வண்டிகளை ஓட்டுதல் வேண்டும்.

பிரிவு 122 மோட்டார் வாகன ஓட்டிகள் வாகனத்தைப் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையிலும், போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் நிறுத்தி வைக்கக் கூடாது.

பிரிவு 123 வாகனத்தின் உட்புறம் தவிர, மிதிப் படியிலோ, வாகனத்தின்மேற் கூரையிலோ அல்லது வேறெந்தப் பாகத்திலோ பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடாது.

பிரிவு 124 பயணச் சீட்டு மற்றும் பயணச் சலுகை அட்டை இல்லாமல் யாரும் வாகனத்தில் பயணம் செய்யக் கூடாது.

பிரிவு 125 வாகன ஓட்டிகள் வாகனத்தை ஓட்டுவதற்கு இடைஞ்சலாக எந்த ஒரு நபரையும் தன் அருகில் நிற்பதற்கோ அல்லது அமர்வதற்கோ அல்லது வேறு எந்தப் பொருளையும் தன் அருகில் வைப்பதற்கோ அனுமதிக்கக்கூடாது.

பிரிவு 128 இருசக்கர வாகன ஓட்டிகள் தனக்குப்பின்னால் உள்ள இருக்கையில் ஒரு நபருக்கு மேல் ஏற்றிச் செல்லக்கூடாது.

பிரிவு 129 தலைப்பாகை அணிந்திருக்கும் சீக்கிய மதத்தினரைத் தவிர மற்றவர்கள் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது தலைக் கவசம் (HELMET) அணிந்து செல்ல வேண்டும்.

பிரிவு 130 மோட்டார் வாகன ஓட்டுநர் அல்லது நடத்துநர், சீருடையில் உள்ள ஒரு காவலர் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமத்தையும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்களையும் தணிக்கை செய்யவேண்டிக் கேட்கும்பொழுது காண்பிக்க வேண்டும். வாகன உரிமையாளரோ அல்லது ஓட்டுநரோ வாகனத்தின் பதிவு மற்றும் தகுதிச் சான்றிதழ்களைத் தணிக்கை செய்யும் அலுவலர் கேட்கும்போது காண்பிக்க வேண்டும்.

பிரிவு 133 மோட்டார் வாகன ஓட்டுநரோ அல்லது நடத்துநரோ அல்லது வாகனத்தின் உரிமையாளரோ இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட்டு காவல் அலுவலர்களால் விசாரணை செய்யப்படும்போது தன்னுடைய பெயர், முகவரி, ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமம் ஆகியவற்றைப் பற்றிய சரியான தகவலை அளிக்க வேண்டும்.

பிரிவு 134 மோட்டார் வாகன ஓட்டுநரோ அல்லது வாகனத்தின் பொறுப்பாளரோ வாகனம் விபத்துக் குள்ளாகும்போது காயமடைந்த நபர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்க உடனே ஏற்பாடு செய்துவிட்டு அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு விபத்து நடந்த 24 மணி நேரத்திற்குள் தகவல் தெரிவிக்க வேண்டும். வாகனக் காப்பீட்டு அலுவலருக்கும் தகவல் அளிக்க வேண்டும்.

பிரிவு 177 இச் சட்டம் அல்லது விதி இவைகளில் கூறப்பட்ட நிபந்தனைகளை ஒருவர் மீறினால் அதற்குரிய தண்டனை குறிப்பிடப்படவில்லையெனில் இப்பிரிவின்கீழ் அவருக்கு நூறு ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம். குற்றவாளி இதற்கு முன்னால் இச்சட்டப்படி தண்டனை அடைந்திருந்தால் அவருக்கு ரூ. 300/– வரை அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 179 எவரேனும் இச்சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்றுள்ள ஒரு நபரை அவரது அலுவலைச் செய்ய விடாமல் தடுத்தாலும் அல்லது அவரது உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தாலும் அல்லது தகவல் அளிக்கக் கடமைப்பட்டவர் அத்தகவலை அளிக்காமல் விடுத்தாலும் அந்த நபருக்கு ரூ. 100/– வரை அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 181 உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டினால் 3 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 1000/- வரையிலான அபராதம் இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம்.

பிரிவு 183 எவரேனும் பிரிவு 112–ல் வரையறுக்கப்பட்டுள்ள வேகத்திற்கு அதிகமாக மோட்டார் வாகனத்தை ஓட்டினால் ரூ. 400/– வரை அபராதமும், மீண்டும் அதே தவறினைச் செய்து இப்பிரிவின்கீழ் தண்டனை பெறும்போது ரூ.1000/– வரை அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 184 பொதுமக்களுக்கு அபாயம் ஏற்படும் வகையில் மோட்டார் வாகனத்தை ஓட்டினால் அந்த நபருக்கு ஆறு மாதங்களுக்கு மிகாமல் சிறைத் தண்டனையும் ரூ.1000/- வரை அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்தும் விதிக்கப்படும். இப்பிரிவின் கீழ் தண்டனை பெற்ற 3 ஆண்டுகளுக்குள் மீண்டும் இதே குற்றத்தைப் புரிந்தால் 2 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத் தண்டனை அல்லது ரூ. 2000/– அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம்.

பிரிவு 185 எவரேனும் வாகனம் ஓட்டும்போது மது அல்லது போதைப் பொருட்களை உட்கொண்டு அதனால் வாகனத்தைத் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இயலாத நிலையில் இருந்தால் அந்த நபருக்கு இரண்டு ஆண்டுகள்வரை சிறைத்தண்டனையோ அல்லது ரூ. 3,000/– வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படலாம்.

பிரிவு190 சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடிக்காமல் சீர்கெட்ட நிலையிலுள்ள வாகனத்தை ஓட்டிச் செல்வது குற்றமாகும். இதற்கு ரூ. 250/- அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 192 பதிவுசெய்யப்படாத வாகனத்தை ஓட்டினால் ரூ. 2000/-க்குக் குறையாமலும் ரூ. 5000/-க்கு மிகாமலும் அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 192-A வாகன உரிமை (Permit) இல்லாமல் ஓட்டினால் ரூ. 2000/–த்துக்குக் குறையாமலும் ரூ. 5000/–க்கு மிகாமலும் அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு194 இச்சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை மீறி அதிகமான சுமைகளை (Overload) ஏற்றிச்செல்லும் வாகன ஓட்டிக்கு ரூ. 2000/-த்திலிருந்து அதிகப் படியான சுமை ஒவ்வொரு டன்னுக்கும் ரூ.1000/- வீதம் அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 202 சீருடையில் உள்ள ஒரு காவல்அலுவலர் பிடியாணையின்றி பிரிவு 184 அல்லது பிரிவு 185 அல்லது பிரிவு 197–ன்கீழ் குற்றம் புரியும் நபரைக் கைது செய்யலாம். பிரிவு 185–ன் கீழ் கைது செய்யப்படும் நபர் (குடிபோதையில் வாகனத்தை ஓட்டுதல்) கைது செய்யப்பட்ட 2 மணி நேரத்திற்குள் மருத்துவ அலுவலரிடம் சோதனைக்காக அனுப்பப்பட வேண்டும்.

- மேலும் இச்சட்டத்தின்கீழ் பெயர், முகவரி விசாரிக்கும்போது தர மறுத்தாலும், தவறான தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிந்தாலும் காவல் துறை அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாம்.

- ஒரு வாகன ஓட்டுநரைக் கைதுசெய்யும்போது தற்காலிகமாக அந்த வாகனத்தை அப்புறப்படுத்தித் தீர்வு காணலாம்.

பிரிவு 207

- எந்தக் காவல் அலுவலரும் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத அனுமதி பெறப்படாத வாகனத்தைக் கண்டால், அந்த வாகனத்தைக் கைப்பற்றி தற்காலிகமாகப் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

4. சூதாட்ட வேட்டை (Gambling Raid)

சூதாட்டம் என்பது பணம் மற்றும் சொத்தை பகடையாக வைத்து ஆதாயத்துக்காக விளையாடும் ஒரு விளையாட்டு.

இவ்விளையாட்டில் ஒருவருக்கு லாபமும் பலருக்கு நஷ்டமும் ஏற்படும். இதை அரசு தடை செய்துள்ளது. எனவே சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களை வேட்டையாடிப் பிடித்துக் கைது செய்து அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, தண்டனை பெற்றுக் கொடுத்து அவர்களைத் திருத்துவதன் மூலம் சூதாட்டத்தை அறவே ஒழித்து சமுதாயத்தைச் சீர்படுத்த வேண்டும் என்பதே சட்டத்தின் நோக்கம்.

தமிழ்நாடு சூதாட்டச் சட்டம் 1930 (Tamilnadu Gaming Act 1980)

வீடு, கூடாரம், அடைப்பு வாகனம், கப்பல் போன்ற இடங்களில் சீட்டு அட்டைகள் (Gambling Cards), பகடைக் காய்கள், மேசைகள் மற்றும் சூதாட்டக் கருவிகள் வைத்து அவற்றைச் சூதாட்டத்திற்குப் பயன்படுத்தி, அதன் மூலமாக அந்த இடத்தின் உரிமையாளருக்கு லாபம் ஏற்பட்டால் அது சூதாட்ட வீடு (House Gambling) எனப்படும்.

இது பிணையில் விடக்கூடிய குற்றமாகும்.

பிரிவு – 8 சூதாடும் வீட்டின் உரிமையாளராக இருந்தாலும், சூதாடும் வீட்டை வைத்திருந்தாலும், அந்த வீட்டில் சூதாட்டத்தை அனுமதித்தாலும் அது குற்றமாகும்.

பிரிவு –9 சூதாடினாலும்,சூதாடும் வீட்டில் இருந்தாலும், எந்தவிதத்திலாவது சூதாடுவதற்கு உதவி செய்தாலும், சூதாட்டத்திற்குப் பணம் கொடுத்து உதவினாலும் அது குற்றமாகும்.

பிரிவு 12 பொது இடங்களில் சூதாடும் கருவிகளை வைத்து சூதாடினாலும், கோழிச் சண்டை நடத்தி னாலும், இப்பிரிவுகளின் கீழ் குற்றமாகும்.

சூதாட்ட வேட்டை பற்றிய பொதுவான அலுவல்கள்

- உதவி ஆய்வாளர் தனக்குக் கீழ் உள்ள அனைத்துக் காவலர்களுக்கும் சூதாட்டம் பற்றிய தகவல்களைச் சேகரிக்க ஆஜர் பட்டியலின் (Roll Call) போது அறிவுரை வழங்க வேண்டும்.
- பொது இடங்களில் நடைபெறும் சூதாட்டத்தைத் தடுக்க அனைத்துக் காவலர்களுக்கும் அறிவுரை வழங்க வேண்டும்.
- சூதாட்டம் பற்றிய குற்றங்கள் குறித்து தகவல் கொடுக்க ஒவ்வொரு பகுதியிலும் தகுந்த தகவலாளர்களை (Informants) நியமித்து இரகசியத் தகவல்களைச் சேகரிக்கலாம். தகவலாளர் கள் பற்றிய விபரங்கள் குற்றவாளிகளுக்குத் தெரிந்து அவர்களால் தீங்கு ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அன்றாட ரோந்து அலுவல்கள் செய்யும் காவலர்களின் ரோந்துப் பணிப் புத்தகத்தில் சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களைப் பற்றி தகவல் சேகரித்து வரும்படி எழுதி யனுப்பி தகவல் சேகரிக்கலாம்.

குறிப்பாக சூதாட்ட வேட்டையின்போது கவனிக்க வேண்டியவை

- குறிப்பாக சூதாட்ட வேட்டையின்போது, சூதாட்டத்திற்குப் பயன்படுத்திய சீட்டுக்கட்டுகள், பணம் மற்றும் இதரப் பொருட்கள் இருப்பின் அவைகளை அவ்விடத்தில் வைத்தே முறையாகப் பட்டியலிட்டுக் கைப்பற்றி, அத்தாட்சி தயார் செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சூதாட்ட வேட்டையின்போது செய்யக்கூடாதவை

- போதிய அளவு காவலர்கள் இல்லாமல் வேட்டைக்குச் செல்லுதல்.
- சூதாட்டத் தகவல்களை அலட்சியப்படுத்துதல்.
- காவலர்களுக்குப் பயந்து ஓடுபவர்களைக் கண்மூடித்தனமாகத் துரத்துதல்.


L NADU POLICE
IGATION FORM-I
31.3.2008
0930 hrs

12. FIR Contents (Attach separate sheet if required / முதல் தகவல் அறிக்கையின் வருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரிகள்

1. AAAA வயது 27/ 2008
த/பெ XXXXX
144, கோமதியபுரம்
புது 3 ம் தெரு, சங்கரன் கோயில்

2. BBBB வயது 29/ 2008
த/பெ YYYYYY
99A கோமதியபுரம்
புது 1 ம் தெரு, சங்கரன் கோயில்

3. CCCC வயது 37/ 2008
த/பெ ZZZZZ
கோமதியபுரம்
புது 2 ம் தெரு, சங்கரன் கோயில்

4. DDDD வயது 26/ 2008
த/பெ AZAZAZ
கோமதியபுரம்
புது 2 ம் தெரு, சங்கரன் கோயில்

பணித்து அனுப்பப்படுகிறது.

இன்று 31.03.08 ந்தேதி 08.30 மணிக்கு சங்கரன் கோயில் நகர், காவல் நிலைய உதவி ஆய்வாளராகிய நான், தலைமைக் காவலர் 0000 முதல்நிலை காவலர் 0000 , காவலர் 0000 , பெண்காவலர் 0000, ஆகியோர் சகிதம் ரூரூட்ட வழக்கு வேட்டையாக சங்கரன் கோயில் இலயிலேயே டி.ச் ரோட்டில் உள்ள கல்யாண மகால் மேல்புறம் போது கற்றிவரும் போது, பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த மாற்றிளில் கண்ட எதிரிகள் நான்கு பேரும் தலையில் வட்டமாக உட்கார்ந்து கொண்டு பணம் வைத்திருக்காமல் விரித்து 52 சீட்டுகளுடன் பணம் ரூ. 100 (நூறு ரூபாய் நாணயங்கள் 20) வைத்து உள்ளே / வெளியே தோல்வு / ஜெயிக்கறது என ஒருவருக்கு வாடை, பிறருக்கு நஷ்டமும் ஏற்படும் வகையில் வேட்டுச் சீட்டு விளையாடியவர்கள் போற்று சோளராகிய சங்கரை கண்டதும், ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்தும், சம்பவ இடத்தில் காணப்பட்ட பொத்துக்களை மகஜரில் கண்டப்படி வைப்பற்றியும் எதிரிகளுடன் நிலையம் வந்து 09.30 மணிக்கு நிலைய குற்ற எண் 40 /2008 ச.பி 12 தமிழ்நாடு ரூரூட்டச் சட்டத்தின் படி வழக்கு பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மகஜரையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் சங்கரன் கோயில் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் இதர நகல்களை உரிய முறையே உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2, registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை / மேலே குற்றமுறையீட்டில் உள்ளவை பிரிவு 2க் கூறப்பட்ட சட்டவிரோதமான குற்றமாக வழக்குப் பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது / பணிக்கப்படுகிறது _____ பதவி _____ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / வழக்கப்பட்டு எல்லைக்கு உரிய புலனாய்வுக்கு _____ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the complainant / informant free of cost. முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டதுபோல ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant.
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் கையொப்பம் / பெருவிரல் ரேகை பதிவு

ஒம்/–
Signature of the Officer in-charge, Police Station காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் கையொப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name / பெயர் .....000.....
Rank / நிலை காவல் உதவி ஆய்வாளர்

5. மதுவிலக்கு வேட்டை (Prohibition Raid)

- மனித உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் அரசால் தடை செய்யப்பட்ட மது வகைகள், கஞ்சா, அபின், கோகைன், ஸ்பிரிட் போன்ற இதர வகை போதைப் பொருட்கள் சட்ட விரோதமாக விற்பதைத் தடுக்கும் பொருட்டு செல்லும் வேட்டை மதுவிலக்கு வேட்டை ஆகும்.

குறிப்பாக மதுவிலக்கு வேட்டையின்போது கவனிக்க வேண்டியவை

i. குறிப்பாக மதுவிலக்கு வேட்டையின்போது, அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள், கள்ளச் சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகள் ஆகியவற்றை ஒருவர் தன் வசமோ, ஒரு இடத்திலோ வைத்திருத்தல், விற்பனை செய்தல், கடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுவர்களைக் கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்து, அவர் வசமுள்ள பொருட்களை உரிய அத்தாட்சியில் கைப்பற்றியும், கள்ளச்சாராயம் கண்டுபிடிக்கப்பட்டால் மாதிரிக்கு எடுக்கப்பட்ட சாராயத்தைத் தவிர மீதியை அத்தாட்சி பிரகாரம் கொட்டி அழித்தும், எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், அதன்படி உரிய நடவடிக்கை எடுத்து சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ii. மதுவிலக்கு வேட்டைக்குச் செல்லும்போது தன்னிச்சையாகவோ, தனியாளாகவோ செல்லக் கூடாது.

தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 (Tamilnadu Prohibition Act 1937)

மது வகைகளையும், போதையூட்டும் மருந்துப் பொருட்களையும் அறிவியல் வாயிலான மருத்துவப் பயன் பாட்டுக்காக அன்றி, வேறு காரணங்களுக்காக உற்பத்தி செய்வதையும், விற்பனை செய்வதையும், பருகு வதையும் தடை செய்வதற்கென உருவாக்கப்பட்ட சட்டம்.

பிரிவு 4(1)(a) 50 லிட்டருக்குக் குறைவான அளவுள்ள எந்த வகை மது அல்லது போதை மருந்தை இறக்குமதி செய்தாலோ, ஏற்றுமதி செய்தாலோ, எடுத்துச் சென்றாலோ அல்லது வைத்திருந்தாலோ இப் பிரிவின்படி குற்றம் ஆகும்.

பிரிவு 4(1)(aa) 50 லிட்டருக்கு அதிகமாகவும் 100 லிட்டருக்குக் குறைவாகவும் உள்ள மது வகைகளை ஏற்றுமதி செய்தாலோ, இறக்குமதி செய்தாலோ, எடுத்துச்சென்றாலோ அல்லது வைத்திருந் தாலோ இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு4(1)(aaa) 100 லிட்டருக்கு அதிகமாக உள்ள மது வகைகளை ஏற்றுமதி செய்தாலோ, இறக்குமதி செய்தாலோ, எடுத்துச் சென்றாலோ அல்லது வைத்திருந்தாலோ இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு 4(1)(b) ஏதேனும் மது வகை அல்லது போதைப் பொருளைத் தயாரித்தல் இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு 4(1)(c) போதை மருந்து தயாரிக்கப் பயன்படக்கூடிய செடிகளைப் பயிரிடுதல், அத்தகைய செடியின் பாகங்களைச் சேகரித்தல் ஆகியன இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு 4(1)(e) மரத்திலிருந்து கள் (Toddy) இறக்குதல், தனக்குச் சொந்தமான மரத்தில் கள் இறக்க அனுமதித் தல் ஆகியன இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு 4(1)(f) மது காய்ச்சுதல், காய்ச்ச இடமளித்தல் ஆகியன இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு 4(1)(g) மது காய்ச்சுவதற்குத் தேவையான மூலப்பொருட்களை வைத்திருத்தல் இப்பிரிவின்படி குற்ற மாகும்.

பிரிவு **4(1)(i)** மது வகை அல்லது போதைப் பொருட்களை விற்பனை செய்தல், வாங்குதல் ஆகியன இப் பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு **4(1)**(j) குடிபோதையில் பொது இடத்தில் காணப்படுதல் இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு **4(1)(jj)** மேற்கண்ட செயல்கள் ஏதேனும் புரிவதற்கு உதவியாக இருந்தாலும், தெரிந்திருந்தாலும், பணம் செலவிட்டாலும் அல்லது பயன்படுத்தினாலும் இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு **4(1)(k)** தன் வசம் உள்ள கட்டிடத்தில் மேலே கண்ட செயல்களுக்கு அனுமதித்தல் இப்பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு **4(1)(A)** மேற்சொன்ன செயல்களில் நச்சுச் தன்மை (Poison) கலந்து அதனால் நுகர்வோருக்கு மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்கக்கூடிய குற்றம் புரிந்தால் இப்பிரிவின்படி குற்றமாகும்.

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under section 154 Cr.P.C)
(குற்ற வி. தொ. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District / மாவட்டம் சேலம் மாநகர் PS / காவல் நிலையம் கிச்சிப்பாளையம் Year / ஆண்டு 2008 FIR No. முத.தகவல் A26 C 0000000 Date / நாள் 27.02.08

2. (i) Act / சட்டம் TNP Act Sections / பிரிவுகள் A(1)(L), A(1)(aa) r/w 4(1-A) (ii) Act / சட்டம் — Sections / பிரிவுகள் —

(iii) Act / சட்டம் — Sections / பிரிவுகள் — (iv) Act / சட்டம் — Sections / பிரிவுகள் —

3. (a) Occurrence of offence Day / குற்றம்நிகழ்ந்த நாள் — Date from / நாள் முதல் 27.2.08 Date to / நாள் வரை — Time Period / நேர அளவு — Time from / நேரம் முதல் 10:30 Time to / நேரம் வரை 12:15 Hrs

(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.2.2008 Time / நேரம் 12:15 Hrs (c) General Diary Reference : Entry No(s) / பொதுநாட்குறிப்பில் பதிவு எண்கள் எண் V Time / நேரம் 12:15 Hrs

4. Type of Information / தகவலின் வகை Written/Oral / எழுத்துவடிவம் / வாய்மொழியா மதுபானக்கடை பொட்டலையில் போது மழையட்ட வழக்கு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS. / குற்ற நிகழ்விடம் அங்கு காவல் நிலையத்தில் இருந்து எல்லையை நோக்கி, எத்தொலைவு 1 1/2 கி.மீ. வடக்கு Beat Number / ரோந்து காவல் எண் II

(b) Address / முகவரி கிச்சிப்பாளையம், கிச்சிப்பாளையம், சேலம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. / இந்தகாவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருந்தால், அந்நிலையம் அந்த மாவட்டம் — District / மாவட்டம் —

6. Complainant / Informant : (a) Name / குற்றஞ்சாட்டியவர் / தகவல் தந்தவர் பெயர் விஜய். [illegible] (b) Father's / Husband's Name தந்தை / கணவர் பெயர் [illegible]

(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு 11.10.80 (d) Nationality / நாட்டுரிமை இந்தியர் (e) Passport No. / கடவுச்சீட்டு எண் — Date of issue / வழங்கப்பட்ட நாள் — Place of issue / வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation / தொழில் கிராமல் உதவி ஆய்வாளர், (g) Address/முகவரி மயிலாடி கிராமல் உதவி ஆய்வாளர், கிச்சிப்பாளையம் கிராமல் நிலையம் சேலம்.

7. Details of Known / Suspected / Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்படுபவரோ / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுவிவரங்கள் (தேவைபெயின் தனித்தாள் இணைக்கவும்)

① xxxx வயது 37 கி/ஒப. zzzzz 109 மாரியம்மன் கோவில் வீதி, கிச்சிப்பாளையம், சேலம்-16

8. Reason for delay in reporting by the complainant / informant / குற்றஞ்சாட்டியவர் / தகவல் கொடுப்பவரால் முறையிட்ட தில், தகவல் கொடுப்பதில் தாமதம்.

காரணமாகவும் கவனமாக

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) / களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டவை பொருட்களின் விவரம் (தேவைபெயின் தனித்தாள் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved / களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டவை பொருட்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any : / விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் எதேனும் இருப்பின்

12. FIR Contents (Attach separate sheet if required / முதல் தகவல் அறிக்கையின் வடிவம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 27.02.2008 ந் தேதி காலை 10.30 மணிக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் 000 ஆகிய நான் தலைமைக் காவலர் 0000, மு.நி.கா 0000 ஆகியவர்களுடன் கிச்சிப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பச்சப்பட்டி கடுகாட்டில் உள்ள முட்புதர் மறைவில் மது விலக்கு குற்றங்கள் சம்மந்தமாக கண்காணித்துக் கொண்டு சென்ற போது மேற்படி முட்புதர் மறைவில் பெயர் விலாசம் தெரிந்த xxxx(37), க/பெ. zzzzz 109, மாரியம்மன்கோவில்தெரு, பச்சப்பட்டி, சேலம் -15 என்பவர் சுமார் 5 லிட்டர் பிடிக்கக் கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் இருந்து ஒரு சில்வர் டம்ளரில் ஏதோ திரவம் போன்றதை ஊற்றி எதிரே நின்று கொண்டிருந்தவரிடம் கொடுக்க அதை அந்த நபர் பணம் கொடுத்து வாங்கி குடிக்க முயன்ற போது போலீஸ் பார்ட்டி ஆகிய எங்களை கண்டதும் மேற்படி பெயர் விலாசம் தெரியாத நபர் அந்த டம்ளரில் இருந்த திரவத்தை குடிக்காமல் தரையில் போட்டு விட்டு தப்பி ஓடி விட்டார். மேற்படி எதிரி xxxx தப்பி ஓட முயன்ற போது போலீஸ் பார்ட்டி ஆகிய நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது தான் மேற்படி வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் கள்ளச்சாராயம் வைத்து விற்று வருவதாகவும், மேற்படி சாராயத்தை ஜருகு மலையில் இருந்து பெயர் விலாசம் தெரியாத நபர் சன்னியாசிகுண்டு அருகில் கொண்டு வந்ததை 3 கார் டியூப்களில் தலா 20 லிட்டர் வீதம் மொத்தம் 60 லிட்டர் கள்ள சாராயத்தை தான் விலைக்கு வாங்கி வந்ததாகவும், அதிக போதை தருவதற்காக அந்த சாராயத்தில் ஊமத்தை சாறு வடிகட்டி மூன்று கார் டியூப்புகளிலும் கலந்து சில்லறை விற்பனைக்காக ஒரு கார் டியூப்பிலிருந்து சுமார் 5 லிட்டர் கள்ளச்சாராயத்தை வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் ஊற்றிக் எடுத்துக்கொண்டு மீதமுள்ள 55 லிட்டர் கள்ளச்சாராயம் கொண்ட மூன்று கார் டியூப்களையும் அருகிலுள்ள முட்புதரில் மறைத்து வைத்து விட்டு பிளாஸ்டிக் கேனில் இருந்த சாராயத்தை மட்டும் விற்பனைக்காக எடுத்து வந்ததாகவும் சொல்லி யாருடைய வற்புறுத்தலும், துன்புறுத்தலும், நூண்டுதலும், இல்லாமல் தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்கு மூலத்தை 10.30 மணிக்கு தனி நபர் சாட்சிகள் 1). aaaa (45), த/பெ. bbbb, எஸ்.எம்.சி காலனி, சேலம் 15. 2). cccc (50), த/பெ dddd;, மேட்டுத்தெரு, தாதகாப்பட்டி, சேலம் 6. ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்பு மேற்படி தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு 11.35 மணிக்கு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் மேற்படி எதிரி வைத்திருந்த 5 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் சுமார் 5 லிட்டர் கள்ள சாராயம் ஒரு சில்வர் டம்ளர், சாராயம் விற்ற பணம் ரூபாய் 10/- மற்றும் முட்புதர் மறைவில் மறைத்து வைத்திருந்த மூன்று கார் டியூப்களில் மொத்தம் 55 லிட்டர் விஷ நெடியுடன் கூடிய கள்ள சாராயத்தை எதிரி எடுத்து என்னிடம் கொடுத்ததை மகஜரில் 12.20 மணிக்கு மேற்படி தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். பின்பு எதிரியை கைது செய்த விவரத்தை கைது நமுனா மூலம் எதிரியின் மகள் yyyy என்பவருக்கு 13.15 மணிக்கு தெரிவித்துவிட்டு எதிரியுடனும் கைப்பற்றிய தடயங்களுடனும், மற்றும் சாட்சிகளுடனும் 13.30 மணிக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 426/2008. u/s 4(1)(i) , 4(1)(aa) & 4(1-A) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து முறைப்படி நானே எதிரியை திரேக சோதனை செய்து நிலைய பாரா மு.நி.கா 0000 வசம் ஒப்படைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் ஜே.எம் 2 அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலையும், கைப்பற்றிய தடயங்கள், ஆவணங்கள் மற்றும் எதிரியையும் புலன் விசாரணைக்காக கிச்சிப்பாளையம் காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஆஜர் செய்தேன்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2, registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of Jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை / மேலே குற்றமுறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட கட்டப்பிரிவுப்படியான குற்றமாக வழக்குப் பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. / பணிக்கப்பட்டுள்ள _____ பதவி _____ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / வழக்கப்பட்டு எல்லைக்கும் கருதி புலனாய்வுக்கு _____ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the complainant / informant free of cost. முதல் குற்ற முறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டிருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டு அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant.
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகை பதிவு

ஓம்/–

Signature of the Officer in-charge, Police Station காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name / பெயர் .....000.....

Rank / நிலை காவல் உதவி ஆய்வாளர்

போதைப் பொருட்கள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம் 1985 (Narcotic Drugs and Psychotropic Substances Act 1985)

போதைப் பொருள் என்பது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பொருட்களாகும். போதைப் பொருட்கள் இயற்கையான தாவரங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களாகவும் இருக்கலாம். இயற்கை வகைத் தாவரங்கள் மூலம் கிடைக்கும் போதை பொருட்கள்:

- கஞ்சா (கஞ்சா செடியிலிருந்து கிடைப்பது)
- கோக்கெய்ன் (கோகோ இலையிலிருந்து கிடைப்பது).
- போதைப் பொருட்கள் என்பது கேனாபிஸ் செடி மற்றும் ஜீனஸ் கேனாபிஸ் வகையின் எந்தவொரு வகைச் செடி என்பதை வரையறுக்கிறது. கஞ்சா எனப்படுவது கேனாபிஸ் செடியின் பூ அல்லது பழம் ஆகும்.

கஞ்சா வழக்கில் வழக்குத் தாக்கல் செய்யும் நீதிமன்றங்கள்

- கஞ்சா வழக்கில் 1 கிலோவிற்குக் கீழ் உள்ள குற்றங்கள் அந்தந்த குற்றவியல் நீதிமன்றத்திற்கும் 1 கிலோவும் அதற்கு மேலும் உள்ள குற்றங்கள் அத்தியாவசியப் பொருட்கள் நீதிமன்றத்திற்கும் (E.C.Court) அனுப்ப வேண்டும்.
- கஞ்சா வழக்கில் எதிரிகளைச் சோதனைசெய்யும்போது அவர்களிடமிருந்து தன்சோதனை விருப்பக் கடிதம் மற்றும் இதர நடைமுறைகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

பிரிவு 8: எந்தவொரு நபரும் கஞ்சா, அபின், ஹெராயின், கோக்கெய்ன், ஹசீஸ் போன்றவைகளைப் பயிரிடுதல், உற்பத்தி செய்தல், வைத்திருந்தல், விற்றல் மற்றும் கடத்துதல் ஆகியவை இப்பிரிவின்கீழ் தடைசெய்யப்படுகிறது.

பிரிவு 20: கஞ்சாச் செடிகள் பயிரிடல், விற்பனை, கடத்தல், இறக்குமதி, ஏற்றுமதி செய்தல் ஆகியன இப்பிரிவின் கீழ் குற்றமாகும்.

மதுவிலக்கு வேட்டையின்போது செய்யக்கூடாதவை

- போதிய காவலர்கள் மற்றும் ஆயுதங்கள் எடுக்காமல் செல்லுதல்.
- போதிய உபகரணங்களான கம்பி, கடப்பாறை போன்றவை இல்லாமல் செல்லுதல்.
- வேட்டையின்போது காவலர்களுக்குப் பயந்து ஓடுபவர்களைக் கண்மூடித் தனமாகத் துரத்துதுல்.
- சாராய ஊறல், கஞ்சாச் செடிகள் போன்றவற்றை அலுவலர்களின் முன்னிலையில்லாமல் அழிக்கக் கூடாது.
- எரிசாராயம் கைப்பற்றப்பட்டால் காவல் நிலையத்தில் அனுமதியின்றி வைத்திருக்கக்கூடாது. உத்தரவு பெற்று அரசு குறிப்பிடும் தொழிற்சாலையில் உள்ள பாதுகாப்பு வைப்பிடங்களுக்கோ அல்லது உதவி தீர்வை ஆணையர் உத்தரவு பெற்று அழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. விபச்சாரத் தடுப்பு வேட்டை (Brothel Raid)

சிறுமியர் மற்றும் பெண்களை வைத்து பொது இடத்திலோ, விடுதிகளிலோ, குடியிருப்புகளிலோ ஆதாயத்திற்காக பாலியல் தொழில் புரிவதும், உடந்தையாக இருப்பதும் விபச்சாரம் எனப்படும்.

விபச்சார வேட்டைக்குச் செல்லும்போது பெண் காவல் ஆளிநர்களை உடன் அழைத்துச் செல்வது அவசியமாகும்.

3. குறிப்பாக விபச்சார வேட்டையின்போது கவனிக்க வேண்டியவை (தமிழ்நாடு விபச்சாரக் குற்றம் புரிவோர் சட்டம் 1956)

குறிப்பாக விபச்சார வேட்டையின்போது, விபச்சாரக் குற்றம் புரியும் ஆண்கள் மற்றும் பெண்களின் செயல்பாடுகளைத் தடுத்து அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக அவர்களைக் கைது செய்து, அவர்களது வசமுள்ள பொருட்களை உரிய அத்தாட்சியில் கைப்பற்றி கைதியுடன் நிலையம் கொண்டுவந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், காவல் அடைப்பு விண்ணப்பம், படிவம் 95 ஆகியவை மூலம் எதிரி மற்றும் சொத்துக்களை நீதி மன்றக் காவலுக்கு அனுப்ப வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள சில வழக்குகள் தவிர சட்டவிரோதமான பொருட்கள், தடை செய்யப்பட்ட பொருட்கள் இருக்கும் எனக் கண்டுள்ள இடங்களில் சோதனையிடும்போது வழக்கமாக சோதனையின்போது கடைப்பிடிக்கவேண்டிய அனைத்து நடைமுறைகளையும் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

விபச்சாரத் தடுப்புச் சட்டம் 1956 (Immoral Traffic (Prevention) Act 1956)

விபச்சாரத்திற்கு பெண்களையும் சிறுமியரையும் பயன்படுத்துவதை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம். பிராத்தல் என்பது வீட்டிலோ, ஒரு அறையிலோ, ஒரு இடத்திலோ நடந்தால் அது பிடிக்கக்கூடிய குற்றமாகும்.

பாலியல் தொழில் விடுதி

- பாலியல் தொழில் விடுதி என்பது மற்றொருவரின் ஆதாயத்திற்காகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விபச்சாரிகளின் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் ஆதாயத்திற்காகவோ விபச்சார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிற வீடு, அறை, வாகனம் அல்லது இடம் எதையும் அல்லது வீடு, அறை, வாகனம் அல்லது இடம் ஏதொன்றின் பகுதி எதையும் உள்ளடக்கும்.

பிரிவு – 3 எவரேனும் விபச்சாரம் செய்வதற்காக ஒரு வீட்டைப் பயன்படுத்தினாலோ அல்லது தன் வீட்டைக் கொடுத்தாலோ – குற்றம்.

பிரிவு – 4 எவரேனும் ஒருவர் பெண்களை வைத்து விபச்சாரம் நடத்தி அதன்மூலம் வருமானம் ஈட்டினால் – குற்றம்.

பிரிவு – 5 ஒரு பெண்ணை அனுமதியுடன் அல்லது அனுமதியின்றி விபச்சாரத்தில் ஈடுபடுத் தினால், தூண்டினால், அதற்காக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கூட்டிக் கொண்டு சென்றால் – குற்றம்.

பிரிவு – 6 விபச்சாரம் நடக்கும் இடத்தில் ஒரு பெண்ணை அவரின் அனுமதியுடனோ அல்லது அனுமதியின்றியோ விபச்சாரத்தில் பயன்படுத்தும் நோக்குடன் வைத்திருத்தல் – குற்றம்.

பிரிவு – 7 பொது இடங்களான கோயில்கள், பள்ளிகள், சிற்றுண்டி விடுதிகள், மருத்துவ மனைகள் ஆகிய இடங்களிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் விபரச்சாரம் செய்தல் – குற்றம்.

பிரிவு – 8 ஒரு பெண் ஆசை வார்த்தை, செய்கை, உடலின் பகுதியைக் காட்டுதல் போன்றவை களால் விபச்சாரத்திற்கு அழைத்தல் – குற்றம்.

பிரிவு – 9 தன் பாதுகாப்பிலிருக்கும் பெண்ணையோ அல்லது சிறுமியையோ விபச்சாரத்திற்குப் பயன்படுத்துதல், விபச்சாரம் செய்யத்தூண்டுதல் – குற்றம்.

- மேலேகண்ட குற்றங்களுக்காக சிறுமிகளைப் பயன்படுத்தினால் 7 ஆண்டுகளுக்குக் குறையாமலும், ஆயுள் தண்டனை வரையும் விதிக்கப்படலாம்.
- மேலேகண்ட குற்றங்களுக்காக 16 வயதிற்குக் குறையாத 18 வயது முடிவடையாத சிறுமிகளைப் பயன்படுத்தினால் 7 ஆண்டுகளுக்குக் குறையாமலும், 14 ஆண்டுகளுக்கு மிகாமலும் கடுங் காவல் தண்டனை விதிக்கப்படலாம்.
- மேலேகண்ட குற்றங்களுக்காக 18 வயதுக்கு மேல் உள்ள பெண்களைப் பயன்படுத்தினால் 7 ஆண்டுகளுக்குக் குறையாமலும் ஆயுள் காலம் வரையிலும் சிறைத் தண்டனை விதிக்கப் படலாம்.

விபச்சார வேட்டையின்போது செய்யக்கூடாதவை

- பெண் காவல் அலுவலர்கள் இல்லாமல் வேட்டைக்குச் செல்லுதல்.
- பெண்களை அவமானப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளுதல்.
- வேட்டையில் பிடிபட்ட பெண்களை புகைப்படம் எடுக்க அனுமதித்தல்.
- கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதையும் அத்தாட்சியில் காட்டத் தவறுதல்.

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under section 154 Cr.P.C)
(குற்ற வி. தொ. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District / மாவட்டம் திண்டுக்கல் PS / காவல் நிலையம் பழனி நகர் பி.டி Year / ஆண்டு 2008 FIR No. முத.தகவல் 35/2008 C 0000000 Date / நாள் 22.02.2008

2. (i) Act / சட்டம் ITP Act Sections / பிரிவுகள் 3(2)(a), 3(a) 4(2)(c) & 5(1)(c) (ii) Act / சட்டம் — Sections / பிரிவுகள் —

(iii) Act / சட்டம் — Sections / பிரிவுகள் — (iv) Act / சட்டம் — Sections / பிரிவுகள் —

3. (a) Occurrence of offence Day / குற்றம்நடந்தநாள் ஞாயிறு Date from / நாள் முதல் 22.2.08 Date to / நாள் வரை — Time Period / நேர அளவு 23.15 Hrs Time from / நேரம் முதல் — Time to / நேரம் வரை —

(b) Information Received at PS. Date / காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நாள் 23.2.2008 Time / நேரம் 01.30 Hrs (c) General Diary Reference / Entry No(s) / பொதுநாட்குறிப்பில் பதிவு எண்கள் V Time / நேரம் 01.30 Hrs

4. Type of Information / தகவலின் வகை Written/Oral / எழுத்துமூலம் / வாய்மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS. / குற்ற நிகழ்விடம் அல்லது காவல் நிலையத்தில் இருந்து எல்லை தூரம், எந்திசையில் 2 கி.மீ தெற்கு Beat Number / ரோந்து காவல் எண் —

(b) Address / முகவரி கிழவு எண்: 000/4, பழனி ஆண்டவர் நகர், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. / இக்காவல் நிலைய எல்லைக்கு வெளியே நடந்து இருக்குமானால், அந்நிலையம் அந்த காவல் நிலையம் — District / மாவட்டம் —

6. Complainant / Informant : (a) Name / குற்றஞ்சாட்டியவர் / தகவல் தந்தவர் பெயர் தெ. aaaa (b) Father's / Husband's Name தந்தை / கணவர் பெயர் தெ.bbbb

(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality / நாட்டுரிமை இந்தியர் (e) Passport No. / கொடுபட்டு கடவுச் சீட்டு எண் — Date of issue / வழங்கப்பட்ட நாள் — Place of issue / வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation / தொழில் TV கேபிள் ஆப்பரேட்டர் (g) Address/ முகவரி பழனி ஆண்டவர் நகர், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known / Suspected / Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்படுகிற / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுவிவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

① ####, வயது 25/08, கிராம xxxxx, மாதாந்திரபட்டி, ② kkkk, தந்தை lll, மதுரை ④ pppp, கிராம 9999, கோம்,
③ 8888, வயது 29/08, கிராம yyyy, கோவை, ⑤ mmm, தந்தை uuuu, ஈரோடு ⑧ zzzzz, தந்தை 8555, பழனி
⑥ hhhh, வயது 19/08, தந்தை zzzzz, திண்டுக்கல் ⑦ nnnn, தந்தை ooo, நாமக்கல் ⑨ tttt, தந்தை 8555, பழனி.

8. Reasons for delay in reporting by the complainant / informant / குற்றஞ்சாட்டியவர் / தகவல் கொடுப்பவரால் முறையிட, தெரிவிக்க கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) / களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டவை சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved / களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டவை சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any : / விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் எதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet if required / முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவைபெனின் தனித்தாளின் இணைக்கவும்)

பணித்து அனுப்பப்படுகிறது.

இன்று 22.02.08 ந்தேதி இரவு பழனி நகர் காவல் நிலைய ஆய்வாளராகிய நான்உதவி ஆய்வாளர் திரு.AAAA , பெண் காவல் உதவி ஆய்வாளர் திரு.BBBB, மற்றும் பெண் உதவி ஆய்வாளர் செல்வி. CCC , மற்றும் அவைத்து மகளிர் காவல் ஆய்வாளர் DDDD அவர்களுடன் தலைமைக் காவலர்கள் 0000 முதிகா. 0000 காவலர் 0000 பெண் காவலர் 0000 ஆகியோர் பழனி நகரில் இரவு ரோந்து செய்துக் பேருந்து நிலையம் அருகில் வாகனத் தணிக்கை செய்யதுர்ரும், தங்கும் விடுதிகளை தணிக்கை செய்வதுற்கும் இரவு அலுவலில் இருந்த போது பழனி ஆண்டவர் நகரை சேர்ந்த பால்வரர் மகன் திரு. aaaa, தாயி bbbb, என்பவர் என்னிடம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், aaaa, தாயி bbbb, பழனிஆண்டவர் நகர், பழனி. பெறுநர், காவல் துறை ஆய்வாளர் அவர்கள், நகர் காவல் நிலையம் பழனி, அய்யா, நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கேபிள் டிவி வைக்கும் கொடுக்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த சுமார் ஒன்றரை மாதமாக பழனிஆண்டவர் நகரில், கதவு எண்000/W என்ற முகவரியில் ffff என்ற பெண் குடியிருந்து வருவதாகவும் இரவு மற்றும் பகல் நேரங்களில் சந்தேகப்படும் படியாக சில ஆண்களும், பெண்களும் வந்து தங்கி போவதாகவும், அங்கு ஏதோ சட்டவிரோதமாக செயல் நடப்பதாகவும் பொதுமக்கள் தெருவில் பேசிக்கொள்கிறார்கள். இன்று 22.02.2008 ம் தேதி சுமார் இரவு 0900 மணிக்கு நான் என் தொழில் சம்மந்தமாக மேற்படி வீட்டாரிடம் போன போது மேற்படி ffff என்ற பெண் என்னை கைவைசால் கூப்பிட்டால் நானும் வீட்டிற்கும் போனேன். அவள் என்னிடம் கடந்த ஒன்றரை மாதமாகத்தான் இங்கு குடியிருப்பதாகவும், இனம் ஆடுகிகள் தன்னிடம் இருப்பதாகவும் கூறினாள். நான் என்னுடன் சேர்ந்து தன் நண்பர்களை அழைத்து வந்தால் உன்னால் எத்தனை பேரை தர முடியும் என்று கேட்டேன். அதற்கு அவர் தன் செல்போனை காட்டி எத்தனைப் பேரை வேண்டுமானாலும் இதில் பேசி வரவைக்க முடியும் என்றாள். ஒரு நாடு நிமிடங்கள் பொறுங்கள் நான் என் நண்பர்களுடன் வருகிறேன் என்று கிளம்பினேன். உங்களுக்கு பெண்கள் வேண்டுமென்றால் ரூ. 2000/– கொடுக்கும் என்றாள். நான் இதோ வருகிறேன் என்று வெளியே வந்து அவருக்கு தெரியாமல் என்னிடம் இருந்த நூறு ரூபாய் நோட்டில் அடையாள வைத்து அவருக்கு தெரியாமல் நூறு ரூபாய் நோட்டின் எண் (6FU 291920) என்பதை குறித்துக்கொண்டு அவளிடம் சாதுர்யமாக இந்த நூறு ரூபாயை முன்பணமாக வைத்துக்கொள். மீதி பணம் ரூ.1900/– யை வரும் போது கொடுக்கிறேன் என்று கொடுத்துவிட்டு பார்ட்டியை பார்க்கலாம் என்று கேட்டேன். அவள் கொஞ்சம் பொருங்கள் வரவழைக்கிறேன் என்று சொல்லி அவளது செல்போனில் பேசினால் ஐந்து நிமிடத்தில் ஒரு காரில் ஒரு ஆணும், பெண்ணும் வந்து இறங்கி வீட்டிற்குள் போனார்கள். அப்போது ffff பார்ட்டி டெ என்று சொன்னால் நான் உடனே என் நண்பருடன் வந்துவிடுகிறேன் என்று சொல்லி வந்தேன் வழியில் எனது அலுவலகம் சென்று புகார் எழுதிக்கொண்டு தங்களை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு மனுக் கொடுக்கின்றேன். ஒப்பம் aaaa. நான் மேற்படி புகார் மனுவைப் பெற்று முறையே உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும், பழனி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தகவல்தெரிவிக்க தகவலைக் காவலர், 00000 என்பவருக்கு கடிதம் கொடுத்து தகவல் அனுப்பியும் மேலும் காலத்தாமதம் ஏற்பட்டால் எதிரிகள் தப்பிவிட கூடும் என்பதால் விரைவு நிரவாக அலுவலருக்கு தகவல் சொல்லி சம்பவ இடம் வரும்படி தொலைபேசி மூலமாக தெரிவித்தோம். சம்பவ இடம் செல்லும் வழியில் இடும்பன் நகரைச் சேர்ந்த GGG என்ற பெண்ணை தனி நபர் சாட்சியாக அழைத்துக்கொண்டும் கதவு எண். 0000 / W என்ற விலாசத்தில் சோதனை நடத்தியப் போது பின்னர் வெள் விலாசம் கேட்டுத்தெரிந்த முதல் தகவல் அறிக்கையின் காபம் 7 ல் கண்ட எதிரிகள் மேற்படி வீட்டில் உள்ளவாக விபச்சாரத்தில் ஈடுபட்டவர்களை தனிநபர் சாட்சி GGGG விரைவு நிரவாக அலுவலர் ஆகியோர் முன்னிலையில் கைது செய்தும் எதிரிகள் பயன்படுத்திய கார், TN 4 x 0000 மற்றும் TN 22 B0000 என்ற கார் செல்போன்கள் ஐந்து, காண்டம் மூன்று, சீட்டுக்கட்டுக்கள் மூன்று பணம் ரூ. 7600/– மற்றும் வாதியிடம் இருந்து ffff பெற்ற மை அடையாளம் இடப்பட்ட நூறு ரூபாய் நோட்டு ஆகியவற்றை விடு சோதனை ஜாபிதாவில் கைப்பற்றியும் எதிரிகள் மற்றும் பொதுக்களுடன் 23.02.08 ந்தேதி 0130 மணிக்கு காவல் நிலையம் வந்து எதிரிகள் மீது பழனி நகர் காவல் நிலைய குற்ற எண். 35/ 2008 சபி 3(2) (a) , 6(a) 4 (2)(c) மற்றும் 5 (1) (c)ITP Act படி வழக்கும் பதிவுசெய்தேன்.

முதல் தகவல் அறிக்கையின் அரல் நகலை புகார் மனு விடு சோதனை ஜாபிதாவுடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை பழனி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் நேரில் கொடுத்தேன்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2, registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.
எடுக்கப்பட்ட நடவடிக்கை / மேலே குற்றமுறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்டவிரோதமான குற்றமாக வருக்கும் பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. / பணிக்கப்படுகிறார் _____ பதவி _____ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பணிக்கப்பட்டது / வழக்கப்பட்டு எல்லைக்கு வருமி புலனாய்வுக்கு _____ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the complainant / informant free of cost. முதலாவது குற்ற முறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant.
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of dispatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name / பெயர் .....

Rank / நிலை .....

7. இரவு ரோந்து (Night Beat)

தமது காவல் நிலையச் சரக எல்லைக்குள் உதவி ஆய்வாளர் இரவில் ரோந்து செய்து குற்றம் நடவாமல் கண்காணித்தும், கிராமங்களை ரோந்து செய்தும், குற்றக் குணத்தாரைத் தணிக்கை செய்தும், திருட்டுக் குற்றங்கள் நடைபெறாமல் கண்காணிப்பதே இரவு ரோந்தாகும்.

இரவு ரோந்து தொடங்குமுன் பொதுவாக கவனிக்கப்படவேண்டியவை

- இரவு ரோந்தில் இரவு 10.00 மணிக்கு ஆரம்பித்து காலை 06.00 மணி வரை ரோந்து செய்து காலை 06.30 மணிக்கு நிலையம் திரும்ப வேண்டும்.
- உதவி ஆய்வாளர் இரவு ரோந்துகளின்போது முழுமையான சீருடை அணிந்து, கைத்துப்பாக்கி (Pistol or Revolver) டார்ச் லைட், நல்ல நிலையில் இயங்கக்கூடிய வாகனம், வாக்கி டாக்கி உடன் செல்ல வேண்டும்.
- இரவு ரோந்துக்குப் போதிய காவலர்கள் மற்றும் காவல் நண்பர்களை (F,O,P) அழைத்துச் செல்ல வேண்டும்.
- காவல் நிலைய பீட் விபரங்கள் பற்றி குறித்துக் கொள்ள வேண்டும்.
- கெட்ட நடத்தைக்காரர்கள் பட்டியல்.
- நிலுவையிலுள்ள பிடியாணை விபரங்கள். (Pending NBWS)
- பிக்கெட்டிங் விபரங்கள்.
- நிலுவையிலிருக்கும் வழக்குகளில் கைது செய்யப்படவேண்டிய எதிரிகள் பட்டியல்.
- சார்பு ஆய்வாளர் இரவு ரோந்தைத் தொடங்கும்போது காவல்கட்டுப்பாட்டு அறைக்கு இரவு ரோந்து தொடங்கப்பட்ட விபரம், நேரம் மற்றும் தன்னுடன் வரும் காவலர்கள் யார் யார் என்றும் தெரியப்படுத்த வேண்டும்.

இரவு ரோந்து செய்யும் முறை

இரவு ரோந்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று விதிமுறைகள் ஏதும் வரையறுக்கப்படவில்லை. தேவைக்கு ஏற்பவும், சூழ்நிலைக்கு ஏற்பவும் இரவு ரோந்தைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

இரவு ரோந்து பயன் உள்ளதாக இருக்க கீழ்க்கண்டவாறு நான்கு பகுதிகளாகப் பிரித்து மேற் கொள்ளலாம்.

(1) 10.00 மணி முதல் 12.00 மணி வரை

- வாகனத் தணிக்கை.
- மோட்டார் வாகன வழக்குகள் பதிவு செய்தல்.
- டாஸ்மாக் மதுபானக் கடைகள், பார்கள் உரிய நேரத்தில் அடைக்கப்படுகிறதா எனக் கண்காணிக்க வேண்டும். மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இரவு நேரக் கடைகள் அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன் கடைகளை அடைத்துவிட்டார்களா என்று கண்காணிக்க வேண்டும்.

(2) 12.00 மணி முதல் 02.00 மணி வரை

- சத்திரங்கள், கல்யாண மண்டபங்கள் தணிக்கை.
- பீட் மற்றும் பிக்கட் தணிக்கை.
- அகதிகள் முகாம் தணிக்கை.
- கோயில் பாதுகாப்புப் படைத் தணிக்கை.
- கரூவூலக் காப்புத் தணிக்கை.
- எல்லைக்குட்பட்ட முக்கிய காப்புகளான அணைக்கட்டுக் காப்பு, மின் உற்பத்தி நிலையக் காப்பு மற்றும் அவ்வப்போது உள்ள இதர சிறப்புக் காப்புக்கள் தணிக்கை.

தணிக்கை செய்யும் முறை

- பீட்கள் உள்ள இடங்களுக்கு சென்று பீட்டில் கண்ட இடங்களில் பீட் காவலர்கள் ஆஜரில் இருக்கிறார்களா இல்லையா என்றும் தணிக்கை செய்தும், பீட் காவலர்கள் பட்டாப் புத்தகத்தில் கையொப்பம் இட்டுள்ளார்களா என்று சரிபார்க்க வேண்டும். உதவி ஆய்வாளர் பட்டா புத்தகத்தில் பெயர் (பெரிய எழுத்துகளில்) தேதி, மணி குறிப்பிட்டு கையொப்பம் செய்ய வேண்டும்.
- பீட் தணிக்கை விபரத்தையும் உதவி ஆய்வாளர் பட்டா புத்தகத்தில் கையெழுத்திட்ட விபரத்தையும் நோட்டு புத்தகத்தில் குறித்துக்கொள்ள வேண்டும். அதே போன்று பிக்கட் உள்ள இடங்களில் பிக்கட் தணிக்கை செய்தும் அதில் தணிக்கை செய்த தேதி, மணி, பிக்கட்டில் இருக்கும் காவலர்களின் ஆஜர்தன்மை எழுதிக் கையொப்பம் செய்ய வேண்டும்.
- எல்லைக்குட்பட்ட காப்புகளை நேரடியாகச் சென்று தணிக்கை செய்து காவலர்களின் ஆஜர் தன்மையை உறுதிப்படுத்தி பட்டாப் புத்தகத்தில் நாள், நேரம் எழுதிக் கையொப்பமிட வேண்டும். காப்புக்களில் முத்திரை (seal) இருந்தால் அது சரியான முறையில் (Intact) இருக்கிறதா என பார்க்க வேண்டும்.
- தங்கும் விடுதிகள், சத்திரம், கல்யாண மண்டபம் தணிக்கை செய்யும்போது சந்தேக நபர்கள் மற்றும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் (Gambling, Brothel, etc.,).

(3) 02.00 மணி முதல் 04.00 மணி வரை

- குற்றம் சம்பந்தமாக கெட்ட நடத்தைக்காரர்களைத் தணிக்கை செய்து அவர்களின் ஆஜர் மற்றும் ஆஜரின்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- அதிகப்படியான குற்றங்கள் நிகழும் இடம், ஒதுக்குப்புறமான வீடுகள் உள்ள இடங்களில் ரோந்து செய்து குற்றங்கள் நடைபெறாமல் கண்காணிக்க வேண்டும்.
- ரோந்தின்போது சந்தேக நபர்கள் தென்பட்டால் அவர்களை விசாரணை செய்து தகுந்த காரணம் இல்லையென்றால் அவர்களை நிலையம் கொண்டுவந்து **41** (ii) கு.வி.மு.ச படி வழக்குப் பதிவு

செய்து அவர்களின் விரல் ரேகைப் பதிவுகள் எடுத்து விரல் ரேகைப் பிரிவுக்கு அனுப்பி அதன் அறிக்கையில் எவ்விதக் குற்றச் செயல்பாடுகளிலும் ஈடுபடாதாவர் என்று தெரிந்தால் மேல் நடவடிக்கை தேவையில்லை. குற்றம் புரிந்தவர் என்று தெரிந்தால் அவர் மீது மேலும் விசாரனை செய்து உரிய வழக்குப் பதிவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- நகரில் நகைக்கடை, பஜார், மார்க்கெட், வங்கிகள் ஆகிய இடங்களுக்கு ரோந்து சென்றும் அங்குள்ள காவலாளிகளுக்கு பணி விழிப்புணர்வு கொடுக்க வேண்டும்.

(4) 04.00 மணி முதல் 06.00 மணி வரை

- குற்ற ரோந்து மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக, திருடர்கள் திருடிவிட்டு கிராமங்களிலிருந்து அதிகாலையில் நகருக்கு முதலில் வரும் பேருந்துகளில் வர வாய்ப்பு இருக்கிறது. எனவே பேருந்தைத் தணிக்கை செய்ய வேண்டும்.
- நகரின் முக்கியத் தெருக்களில் ரோந்து செய்து அதிகாலை நேரங்களில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருப்பதால் திருடர்கள் அதிகாலையில் கோலம் போடும் பெண்கள், பால் வாங்கச் செல்லும் பெண்கள், நடைப் பயிற்சி செல்பவர்கள் மற்றும் டியூசன் செல்லும் பள்ளி மாணவ மாணவிகள் ஆகியோரிடம் செயின் பறிக்கும் சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும்.
- சந்தேக நபர்களையும் மற்றும் சந்தேகமான வாகனங்களையும் தணிக்கை செய்ய வேண்டும்.
- பீட் பணியின்போது நேரம்வாரியாக செய்த பணிகள் பற்றிக் குறிப்பிட்டு வர வேண்டும். நிலையம் வந்ததும் இரவு ரோந்தில் செய்த பணி விபரங்களை நேரம் வாரியாக பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும். கெட்டநடத்தைக்காரர்கள் தணிக்கை இருந்தால் கெட்ட நடத்தைக் காரர்கள் பதிவேட்டில் ஆஜர் தன்மை பற்றியும், நேரம் குறிப்பிட்டு எழுத வேண்டும். சென்று வந்த கிராமங்களைக் குறித்து கிராமப் பதிவேட்டில் (Village Roster) பதிவு செய்ய வேண்டும். இவைகள் அனைத்தையும், பதிவு செய்த வழக்கு விபரங்களையும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.

பீட், காப்புத் தணிக்கையின்போது ஆஜரில் இல்லாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முறை

- பீட், பிக்கட், காப்பு ஆகிய பணிக்குச் செல்லும் காவலர்கள் ஆஜரில் இல்லை என்றால் உடனே காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தணிக்கை நேரத்தைக் குறிப்பிட்டு தகவல்கொடுத்து அதைக் காவல் கட்டுப்பாட்டு அறை நாட்குறிப்பில் பதிவுசெய்யச் சொல்ல வேண்டும்.
- பீட், பிக்கட், காப்பு ஆகிய அலுவலின்போது ஒருவர் பணியிலிருந்தும், மற்றவர் பணியில் இல்லாமலிருந்தால் பீட் புத்தகம், பிக்கட் புத்தகம் தணிக்கைப் பகுதியில் தேதி, நேரம், இடம், ஆஜரில் இருந்த காவலர்கள், ஆஜரில் இல்லாத காவலர்கள் விபரங்களைக் குறிப்பிட்டு கையொப்பம் செய்ய வேண்டும். அலுவலில் இருக்கும் காவலரிடம் தனி அறிக்கை பெற வேண்டும். அவரின் நோட் புத்தகத்திலும் ஆஜரின்மையைக் குறிப்பிட்டுக் கையொப்பம் செய்ய வேண்டும்.
- காப்பு அலுவலில் இருக்கும் காவலர்களைத் தணிக்கை செய்யும்போது காவல் முறை மாற்று (Sentry Relief) புத்தகத்தில் நாள், நேரம், இடம், ஆஜரில் இருந்த காவலர்கள், ஆஜரில் இல்லாத காவலர்கள் விபரங்களைக் குறிப்பிட்டு கையொப்பம் செய்ய வேண்டும்.

- பீட், பிக்கட், காப்பு ஆகிய இடங்களிலுள்ள பட்டாப் புத்தகங்களில் கண்டிப்பாகக் கையொப்ப மிட்டிருக்க வேண்டும்.
- தணிக்கையின் போது குறிப்பிட்ட காலங்களில் பணிக் காவலர்கள் ஆஜரில் இருந்தார்களா இல்லையா என்ற விபரம் குறிப்பிட்டு, நாள், நேரம் குறிப்பிட்டு நோட்டு புத்தகத்தில் எழுத வேண்டும்.
- ஆப்சென்ட் காவலர்களுக்குப் பதிலாக வேறு காவலர்கள் நியமிக்க வேண்டும்.
- ஆப்சென்ட் ஆன விபரம் பற்றி பட்டா புத்தகதாரரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.
- அனைத்து விபரங்களையும் பொது நாட்குறிப்பிலும் பதிவு செய்ய வேண்டும்.
- மேலும் விபரங்களைக் குறிப்பிட்டு தணிக்கையின்போது ஆஜரில் இல்லாத காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க தனி அறிக்கை தயார்செய்து ஆய்வாளருக்குக் கொடுக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- இரவு ரோந்தின்போது வாகனத் தணிக்கை, பீட் தணிக்கை, பிக்கட் தணிக்கை, தங்கும் விடுதிகள் தணிக்கை செய்யாமல் அஜாக்கிரதையாக பணியில் இருத்தல்.
- பீட், பிக்கட், காப்புத் தணிக்கையின்போது ஆஜரின்மைக்காவலர்களை ஆஜரில் காட்டுதல்.
- சந்தேக நபர்களை ஏனோதானோவென்று விசாரித்து அனுப்புதல்.
- காவலர்கள் மது அருந்திவிட்டு பணியில் இருந்தால் பணி செய்ய அனுமதித்தல்.

பார்வை: P.S.O. 836

8. நகர ரோந்து (Town Beat)

காவல் உதவி ஆய்வாளர் தனது காவல் நிலைய சரக எல்லைக்குள் காலை மாலை இருவேளைகளில் செய்யும் ரோந்து நகர ரோந்து ஆகும். நகர ரோந்து மூலம் சமூக விரோதிகள் மற்றும் சட்டங்களை மீறுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும்போது பொதுமக்கள் மத்தியில் உதவி ஆய்வாளருக்கு நற்பெயர் ஏற்படுவதுடன் காவல் துறை மீதுள்ள மதிப்பும் அதிகரிக்கும்.

பொதுவாக நகர ரோந்து செல்லும் போது உதவி ஆய்வாளர் பின்பற்ற வேண்டியவைகள்

- கெட்டபெயருள்ள போக்கிரிகளின் (Notorious Rowdies) பெயர் விபரப் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து கைவசம் வைத்துக்கொண்டு அவர்கள் செய்யும் போக்கிரித்தனம் மற்றும் நேரத்தைத் தெரிந்துகொண்டு அதற்கேற்றாற் போல் அவர்களை உரிய நேரங்களில் கண்காணித்து தணிக்கை செய்து சட்டம் ஒழுங்கினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். உரிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து குற்றத்தில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும்.
- தொல்லை (Nuisance) கொடுக்கப்படும் இடங்கள் மற்றும் நேரங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு அவ்விடங்களுக்கு உரிய நேரங்களில் சென்று குற்றங்கள் ஏதும் நடவாமல்

கண்காணித்தும் தொல்லை கொடுப்பவர்கள் மீது உரிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து குற்றத்தில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும்.

- அங்காடி, கடை வீதிகள், பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பள்ளி கல்லூரி விடும் நேரங்களில் ரோந்து செய்து போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- தொலைந்துபோன குழந்தைகள் பற்றிய விபரங்கள் தெரிந்துகொண்டு விசாரிக்க வேண்டும்.
- நிலையத்தில் நிலுவையிலுள்ள மனு விசாரணை மற்றும் பாஸ் போர்ட்/பணி நியமன சரிபார்ப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- குற்ற வழக்குகளில் தலைமறைவாக உள்ள எதிரிகளைக் கைது செய்தும், நிலுவையில் உள்ள பிடி கட்டளைகளை நிறைவேற்றிடவும் வேண்டும்.
- அழிம்பு (Mischief) விளைவிப்போரின் வசிப்பிடங்களை நேரடியாகப் பார்வையிட்டு அவர்கள் எங்கு இருக்கிறார்கள், என்ன நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை அறிந்து அவர்கள் ஏதேனும் குற்றங்களில் ஈடுபடாமல் கண்காணிக்க வேண்டும்.
- பெண்களைக் கேலி கிண்டல் செய்பவர்கள் மீது பெண்களைத் தொல்லை செய்வதைத்தடுக்கும் சட்டத்தின்கீழ் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

காலை ரோந்து

- காலை ரோல் கால் முடிந்து 08.00 முதல் 10.00 மணி வரை காலை ரோந்து அமைய வேண்டும்.
- குறிப்பாக, பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவியர் மற்றும் பணிக்குச் செல்வோர் அவர்கள் செல்லவேண்டிய இடங்களுக்கு விரைவாகவும் உரிய நேரத்திலும் செல்வதற்கு வசதியாக சாலைப் போக்குவரத்து மற்றும் வாகனப் போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.
- ரோந்தின்போது, குற்றச் செயல்களில் யாரும் ஈடுபடுகிறார்களா என்றும், குறிப்பாக களவு மற்றும் பிக்பாக்கட் குற்றங்களில் ஈடுபடுகிறார்களா என்பதைக் கண்காணித்து குற்றங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- மாணவிகள் செல்லும் பாதையில் அவர்களை யாரும் கேலி கிண்டல் செய்யாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். காலை பீட் இருந்தால் அதனையும் தணிக்கை செய்ய வேண்டும்.
- பேருந்து நிலையம் சென்று தணிக்கை செய்து போக்குவரத்து நெரிசல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மாலை ரோந்து

- மாலை 16.00 மணி முதல் 20.00 மணி வரை மாலை ரோந்து அமைய வேண்டும்.
- சாலைப் போக்குவரத்துக்கு இடையூறு உள்ள வாகனங்கள் மீது மோட்டார் வாகன வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.
- சாலையில் மற்றும் அங்காடிகளில் போக்குவரத்துக்கு இடையூறாகக் கடைகள் வைத்திருப்போர், பொது நடைபாதையில் கற்கள், குப்பைகள், ஏதேனும் பொருட்களைப் பரப்பிவைத்திருப்பவர்கள்

மீது சாதாரணச் சிறுவழக்குகள் பதிவு செய்து போக்குவரத்து இடையூறுகளை நீக்க வேண்டும்.

- பகல் பீட்/பிக்கட்/ரவுடிபீட் ஆகியவற்றை ரோந்தின் போது தணிக்கை செய்ய வேண்டும்.

செய்யக்கூடாதவை

- ஒரே இடத்தில் நின்றுகொண்டு வாக்கி டாக்கியில் இருப்பிடத்தை மாற்றி மாற்றிக் கூறி நேரத்தை வீணடித்து பணி செய்தல்.

பார்வை: P.S.O. 370

9. நெடுஞ்சாலை ரோந்து (Highway Patrol)

நெடுஞ்சாலைகளில் (தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை) விபத்துக்களைத் தடுப்பதற்கும், விபத்துக்கு உள்ளானவர்களை விரைந்து மருத்துவமனையில் சேர்ப்பதற்கும், வழித் திருட்டு, வழிப்பறிக் கொள்ளை, கடத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கும், விபத்து ஏற்பட்டால் வாகனப் போக்குவரத்தை இடையூறு இல்லாமல் வழிவகை செய்வதும், மோட்டார் வாகனச் சட்ட விதிகளை மீறுவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுத்தல் ஆகிய காரணங்களுக்காக செய்யப்படும் பணியே ''நெடுஞ்சாலை ரோந்துப் பணி'' ஆகும்.

நெடுஞ்சாலை ரோந்துப் பணி என்பது நெடுஞ்சாலையின் அளவுகளைப் பொறுத்தும், மாவட்டத்திற்குள் இருக்கும் நெடுஞ்சாலைகளைப் பொறுத்தும், வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். அவை முறையே நெடுஞ்சாலை ரோந்து I, II, III, IV என வகைப்படுத்தப்பட்டு அதற்கென பகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

நெடுஞ்சாலை ரோந்துப் பணி மாற்றுமுறையில் (Shift System) செயல்படும். இதில் பணிபுரிவோர் இரண்டு அணியாக பிரிக்கப்படுவார்கள்.

ஒரு அணியில் ஒரு உதவி ஆள்வாளர், குறைந்த பட்சம் 2 காவலர்கள், அதிக பட்சம் 4 காவலர்கள் பணியில் இருப்பார்கள்.

பணி புரியும் முறை

Shift	Duty Hours	Duty Hours
A	08.00 to 14.00	08.00 to 20.00
B	14.00 to 22.00	20.00 to 08.00
A	22.00 to 08.00	

இப்பணிகளுக்கு நவீன வகை வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் கீழ்க்கண்ட கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

i. Rador Gun
ii. Breath Analyzer
iii. Video Camera

iv. V.H.F.
v. Reflector Button
vi. Public Adddressing System
vii. Cell Phone

இப்பணிக்கென பராமரிக்கப்படும் பதிவேடுகள் விபரம்

- பொது நாட்குறிப்பு (General Diary),
- விபத்துப் பதிவேடு, (Accident Register),
- அலுவல் பதிவேடு (Duty Roster),
- விபத்து வழக்கு விபரக் குறிப்புப் பதிவேடு (Accident Case Particulars Register).
- மோட்டார் வாகன சிறு வழக்குப் பதிவேடு (Motor Petty Case Register),
- உயர்அலுவலர்கள் பார்வைப் பதிவேடு (Superior Officers Visiting Book)
- காவல் அறிவிப்பு (Police Notice)
- நிகழ்வுகள் பதிவேடு (Incident Register),
- கூட்டு நடவடிக்கை அணியினர் பார்வைப் பதிவேடு (Co-ordination Team Visit Register) போன்ற பதிவேடுகளை உரிய முறையில் தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.

நெடுஞ்சாலை ரோந்துப் பணியில் செய்ய வேண்டியவை

பணிக்குச் செல்லும்போது அரசுச் சொத்துப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு கையொப்பமிட்டு மேற்கண்ட பொருட்களை எடுத்துச் சென்றும், பணி முடித்துத் திரும்பும் போது இவைகளை மேற்படிப் பதிவேட்டில் உரிய வரவுப் பதிவுகள் செய்தும் கையொப்பமிட வேண்டும்

- அலுவலுக்குச் செல்லும் உதவி ஆய்வாளர் சுத்தமான சீருடையில் கைத்துப்பாக்கியுடன் மேலேகண்ட அனைத்துச் சாதனங்களும் நன்றாக இயங்கும் நிலையில் இருக்கிறதா என்று சரிபார்த்து பணியைத் தொடங்க வேண்டும்.
- பணி தொடங்கும் உதவி ஆய்வாளர் தன்னுடன் பணிக்கு உள்ளோர் விபரத்தை தனது காவல் நிலையம் அமைந்துள்ள மாவட்டக் காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் தனிப் பிரிவு அலுவலகத்திற்கும் தெரிவித்த பின்பே பணியைத் தொடங்க வேண்டும்.
- பணிபுரியும் பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ள சாலையின் துவக்கம் மற்றும் முடிவு ஆகியவற்றை நன்கு தெரிந்துகொண்டு முழுப் பகுதியிலும் ரோந்து செல்ல வேண்டும்.
- பல முனைகள் சந்திக்கும் சாலைப் பகுதி உள்ள இடத்தில் இருந்துகொண்டு எல்லா வழிகளிலுமிருந்து வரும் வாகனங்களையும் சோதனையிட வேண்டும்.
- வாகன விபத்து, தீ விபத்து நிகழ்ந்தால் உயிர் மற்றும் பொருள் இழப்பைத் தடுக்கும் வகையில் உரிய இடங்களுக்கு தொலைபேசி/செல்போன் மூலம் தொடர்புகொள்ள வசதியாக அதன் எண்களைப் பட்டியலிட்டு கைவசம் வைத்திருக்க வேண்டும்.

- பணிபுரியும் பகுதிக்குட்பட்ட இடத்தில் விபத்து எதுவும் நடந்தால் அங்கு உடனே சென்று பார்வையிட்டு உடனடி நடவடிக்கை எடுப்பதுடன் தனிப் பிரிவு அலுவலகம் மற்றும் உரிய காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுக்க வேண்டும்.
- விபத்தில் சிக்கிய நபர் மற்றும் சொத்து சம்பந்தமாக அவர்களின் உறவினர்களுக்கோ, பணிபுரிபவராயிருந்தால் அலுவலகத்திற்கோ நிறுவனத்திற்கோ உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- விபத்தில் சிக்கிய நபர்களின் உடமைகளைப் பாதுகாப்பு செய்ய வேண்டும்.
- நெடுஞ்சாலையில் உள்ள அவசர விபத்து நிவாரண மையம் (Emergency Acccident Relief Centre-) உடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும். காயம்பட்டவர்களை அவர்கள் உதவியுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.
- தேவைப்படும்போது, தனியார் ஆம்புலன்சுக்குத் தகவல் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்.
- ஆம்புலன்ஸ் வரத் தாமதமானால் காயம்பட்டவரை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு நெடுஞ்சாலை ரோந்து வண்டியைப் பயன் படுத்தலாம்.
- காயம்பட்டவர்களுக்கு முதலுதவி செய்ய இணை மருத்துவர் பணியாளர் அல்லது முதலுதவி பயிற்சி பெற்ற காவலர் ஒருவரை இதில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- விபத்து நடந்த இடத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு விபத்துக்குள்ளான வாகனம் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள வாகனங்களை உடனடியாக அப்புறப்படுத்திவிட்டு போக்குவரத்தை மாற்றுப் பாதையில் திருப்பிவிட வேண்டும்.
- கோர விபத்தோ, தீ விபத்தோ நிகழ்ந்தால் உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்திற்கும், அரசு மருத்துவமனைக்கும், தீயணைப்பு நிலையத்திற்கும் தகவல் தெரிவித்து, அவர்கள் வரும்வரை பணியில் இருக்க வேண்டும்.
- Breath Analyzer-ஐப் பயன்படுத்தி வாகன ஓட்டுநர் மீது குடிபோதை வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.
- Rador Gun-ஐப் பயன்படுத்தி அதிவேக வாகன ஓட்டுநர் மீது அதிவேகத்தில் வாகனம் ஓட்டியதாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.
- தனிப் பிரிவு அலுவலகம் மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து சந்தேக வாகனங்கள் மற்றும் கடத்தல் வாகனங்கள் பற்றி தகவல் தெரிவிக்கும்போது உடனே முழுமையாக வாகன சோதனை நடத்தப்பட வேண்டும். சோதனையில் மேற்கண்ட வாகனங்கள் பிடிபட்டால் அவற்றைக் கைப்பற்றி காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் தனிப் பிரிவு அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தி அவர்களது உத்தரவுப்படி செயல்பட வேண்டும்.
- வாகன விபத்தில்லாத நேரங்களில் ஆங்காங்கே வாகன சோதனை நடத்தி மோட்டார் வாகன சிறுவழக்குகள் பதிவு செய்ய வேண்டும்.
- இரவு நேரங்களில் கொடுக்கப்பட்ட பகுதியை முழுமையாக ரோந்து செய்ய வேண்டும்.

செய்யக்கூடாதவை

- வாகனத்தை ஒரே இடத்தில் நிறுத்தியிருத்தல்.

- வாகனத் தணிக்கையில் சோதனை என்ற பெயரில் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்துதல்.
- தணிக்கையின் போது பணம் வசூலித்தல்.
- வாகனத் தணிக்கையின்போது சந்தேக நபர்கள், திருட்டுக் குற்றவாளிகளைத் தப்பிக்க விடுதல்.

ஒழுங்கு நடவடிக்கை

- நெடுஞ்சாலை ரோந்துப் பணிக்கு காவலர்கள் வரவில்லை என்றால் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு ஆப்சென்ட் (பணிக்கு ஆஜரின்மை) குறித்து தகவல் கொடுத்து அதைக் காவல் கட்டுப்பாட்டு அறை நாட்குறிப்பில் பதிவு செய்யச் சொல்ல வேண்டும்.
- பணிப் பதிவேட்டில் ஆப்சென்ட் குறிப்பிட வேண்டும்.
- இதன் விபரத்தைப் பொது நாட்குறிப்பில் எழுத வேண்டும்.
- ஆப்சென்ட் ஆன காவலர்கள் விபரத்தை அவர்கள் மீது ஒழுங்கு நடவடி.க்கை எடுக்க தனி அறிக்கை மூலம் தனிப் பிரிவு அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

செய்யக்கூடாதவை

- 30(2) காவல் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது காவல் நிலையத்தில் கூட்டம் அல்லது ஊர்வலத்திற்கு அனுமதி அளிக்கக்கூடாது.

10. இருப்புப் பாதை ரோந்து

இந்த வகை ரோந்து இருப்புப் பாதை வழித்தடத்தில், இருப்புப்பாதைக்கு சமூக விரோதிகளால் சேதம் ஏற்படுத்துவதை தடுக்கவும் சட்ட விரோத செயல்களை தடுக்கவும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

செய்ய வேண்டியவை

- இவ்வகை ரோந்து, காவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களைக் கொண்டு இரவு, பகல் நேரங்களில் குறிப்பிட்ட தூரம் வரை இருப்புப்பாதை ரோந்து செய்வது ஆகும்.
- உதவி ஆய்வாளர் இந்த ரோந்துப் பணிக்கு திடகாத்திரமுள்ள காவலர்களை நியமிக்க வேண்டும்.
- காவலர் துப்பாக்கி தோட்டா, டார்ச் லைட், வாக்கி டாக்கி கொடுத்து பீட் புத்தகம், கடவுச் சீட்டு கொடுத்து அதில் இருப்புப்பாதை ரோந்து செல்லும் இடத்தை தெளிவாக குறித்து செல்ல வேண்டும்.

ரோந்து காவலர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய அறிவுரைகள்

- ரோந்தில் குறிப்பிட்ட இடத்தில் உரிய முறையில் ரோந்து செய்தும், இருப்புபாதை நிலைய அலுவலரிடம் கையொப்பம் பெற வேண்டும்.

- இருப்புப்பாதையில் ஏதாவது அசம்பாவிதம் நடந்துள்ளதா என கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- இருப்புப்பாதையில் தேவையற்ற சந்தேகப்படும்படியான பொருட்கள் உள்ளதா என கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- தண்டவாளங்களை இணைக்கும் கம்பிகள் சரியாக உள்ளதா என கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- இருப்புப்பாதையில் வெடிபொருட்கள், மின் வயர்கள், கம்பிகள் ஏதாவது தென்படுகிறதா என்று கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- இருப்புப்பாதையில் சந்தேக நபர்கள் யாராவது இருந்தால் அவர்களை தீவிரமாக விசாரித்து அவர்களை இருப்புப்பாதை காவல் நிலையத்தில் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.
- இருப்புப்பாதையில் யாராவது அடிப்பட்டு இறந்திருந்தால் அதுகுறித்து இருப்புப்பாதை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தும் உரிய அலுவலர் வரும்வரை ஒருவர் அவ்விடத்தில் பாதுகாப்பு செய்ய வேண்டும்.
- மேற் சொன்ன அறிவுரைகளை விளக்கிக் கூறி இருப்புப்பாதையில் சந்தேகப்படும் பொருட்கள் – அசம்பாவிதங்கள் போன்றவை தெரிந்தால் உடனுக்குடன் இருப்புப்பாதை காவல் நிலைய அலுவலர், மற்றும் உள்ளூர் காவல் நிலைய அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தி காவலர்களை பணிக்கு அனுப்ப வேண்டும்.
- பணிக்கு செல்லும் விபரத்தினை அன்றைய நிலைய பொது நாட்குறிப்பில் குறிப்பிட வேண்டும்.
- உதவி ஆய்வாளர் காவலர்கள் ரோந்துக்கான பணியினை எந்த நேரத்திலும் தணிக்கை செய்ய வேண்டும்.
- தணிக்கை செய்யும் போது காவலர்கள் ஆஜரில் இருக்க வேண்டும். தணிக்கை குறிப்பில் இடம், தேதி, நேரம் ஆகியன குறிப்பிட்டும் காவலர் ஆஜர் தன்மை உஷார் தன்மை எழுதி கையொப்பமிடல் வேண்டும். உதவி ஆய்வாளர் நோட்டுப் புத்தகத்தில் குறித்து கொள்ள வேண்டும். இத்தணிக்கையின் போது இருப்புப்பாதை நிலைய அலுவலரிடம் கையொப்பம் பெற்றள்ளாரா என்று பார்க்க வேண்டும்.
- பணி முடித்து வரும்பொழுது ரோந்து காவலர் செய்த பணி விபரத்தையும், தணிக்கை விபரத் தையும் பொது நாட்குறிப்பில் வரவு வைத்து எழுதப்படல் வேண்டும்.
- போதிய தணிக்கைகள் இருக்க வேண்டும், இரவு நேரத்தில் அதிக தணிக்கைகள் இருக்க வேண்டும்.
- சிவப்பு மற்றும் பச்சை நிறக் கைவிளக்குகளை/கொடிகளை வைத்திருத்தல் வேண்டும்.

செய்யக்கூடாதவை

- ரோந்தை தணிக்கை செய்யாமல் இருத்தல்.
- ரோந்து காவலர்கள் ரோந்து செல்லாமல் இருப்பதை அனுமதித்தல்.
- போதிய உபகரணங்கள் இன்றி பணி செய்யச் சொல்லுதல்.

11. போக்கிரி ரோந்து (Rowdy Beat)

காவல் நிலைய எல்லைக்குள் உதவி ஆய்வாளர் தினசரி காலை, மாலை நேரங்களில் போக்கிரிகள், போக்கிரி தனம் செய்பவர் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்பவர்கள் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்காக ரோந்து செய்வதே போக்கிரி ரோந்தாகும்.

செய்யவேண்டியவை

உதவி ஆய்வாளர் குறைந்தது இரண்டு காவலர்கள் அல்லது அதற்கு மேலும் காவலர்களை வைத்துக் கொண்டு சைக்கிளிலோ அல்லது இரு சக்கர வாகனத்திலோ ரோந்து செய்ய வேண்டும்.

- மக்கள் கூட்டம் அதிகமுள்ள இடங்களான பேருந்துநிலையம், பள்ளிக்கூடங்கள், கோவில்கள், தங்கும் விடுதிகள், மதுபானக்கடைகள், ஆகிய இடங்களில் ரோந்து செய்து பெண்களைக் கேலி செய்வோர், பொதுமக்களிடம் வீண்தகராறு செய்பவர்கள் போக்குவரத்துக்கு இடையூறு செய்பவர்களை கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இருப்புபாதை நிலையங்களிலும், தினசரி அங்காடி, சந்தை ஆகிய இடங்களிலும் ரோந்து செய்து சந்தேகப்படுமாறு யாராவது நடமாடுகிறார்களா என்று கண்காணிக்க வேண்டும்.
- கல்லூரி, பள்ளிகளுக்கு செல்லும் மாணவிகளை கேலி கிண்டல் செய்பவர்களை இனம் கண்டு கைது செய்தும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சூதாட்டம் நடைபெறுகின்ற இடங்களை கண்காணித்தும் பொது இடத்தில் சூதாடுபவர்களை கைது செய்தும் தக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கஞ்சா, தடை செய்யப்பட்ட லாட்டரி டிக்கெட்டுகள் மற்றும் கள்ளச் சாராயம் விற்பனை சம்பந்தமாக ரோந்து செய்து இதில் சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- மேலே சொன்ன குற்றங்கள் யாவும் காவல் நிலைய எல்லைக்குள் நடவாமல் சார்பு ஆய்வாளர் உறுதிப்படுத்த வேண்டும்.
- வங்கிக் காவலர்கள் மற்றும் கோயில் பாதுகாப்பு பணியில் உள்ளவர்களிடம் (Temple Protection Force) சந்தேகப்படும்படி யாராவது நடமாட்டம் இருந்தால் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு அறிவுரை வழங்க வேண்டும்.
- கெட்ட நடத்தைக்காரர்களின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும்.
- சாலையில் மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள இடங்களில், யாரேனும் இடையூறு செய்பவர்கள் போக்குவரத்திற்கு இடையூறு உள்ள இடங்களில் தொடர்ரோந்து செய்து இடையூறுகளை அகற்ற வேண்டும்.
- குடியிருப்பவர்கள் மற்றும் கடை வைத்திருப்பவர்களிடம் பேசி, யாராவது வந்து வீண் தகராறு செய்தாலோ, பெண்களை கேலி செய்தாலோ காவல் நிலையத்திற்கு உடனே தகவல் தருமாறு அறிவுறுத்தி அவர்களுக்கு காவல் நிலையத்தின் தொலைபேசி எண் மற்றம் அலுவலர்களின் தொலைபேசி எண்களை கொடுக்க வேண்டும்.
- நகரில் வீண் தொல்லைகள் செய்யும் போக்கிரிகளைக் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- மக்கள் நெருக்கம் உள்ள இடங்களில் ஒலி பெருக்கி மூலம் அவர்களின் பொருட்களை பாது காப்பாக வைத்துக்கொள்ளுமாறு எச்சரிக்கை செய்வதுடன் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரம் மூலம் பொதுமக்களுக்கு கெட்ட நடத்தைகாரர்கள் பற்றி விழிப்புணர்வு செய்ய வேண்டும்.
- முக்கிய நேரங்களில் (Peak hours) போக்குவரத்து நெருக்கடியான இடங்களில் போக்கு வரத்தினை சரி செய்ய வேண்டும்.
- பிடியாணை நிலுவையிலுள்ள நபர்களை கைது செய்தல் வேண்டும்.

செய்யக்கூடாதவை

- ரோந்து செல்லாமல் இருப்பது.
- பொதுமக்களிடத்தில் அநாகரிகமாக நடப்பது.
- இடையூறு செய்பவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யாமல் இருப்பது.

பார்வை: PSO 365 to 370

12. சுற்றுலாத் தல ரோந்து

சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வரும் பொது மக்களுக்கு போதிய பாதுகாப்பு அளிப்பதும், சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்தவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்த ஏற்படுத்தப்பட்டதே சுற்றுலாத் தல ரோந்து ஆகும்.

செய்யவேண்டியவை

- இப்பணிக்கு உதவிஆய்வாளர் மற்றும் 5 அல்லது 10 காவலர்களை உள்ளடக்கி வாகனம் வழங்கப்படும். அதில் வான் தொலைபேசி (V.H.F) பொருத்தப்பட்டிருக்கும்.
- உதவி ஆய்வாளர் சுற்றுலா தலங்கள், முக்கிய தங்கும் விடுதிகள், மருத்துவமனைகள் போன்ற பொது விபரங்களை நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும்.
- உதவி ஆய்வாளர் சுற்றுலா தலம், அதன் சுற்றுப்புறங்களையும் ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு முறையே ரோந்து செல்ல வேண்டும்.
- காவல் நிலையத்தில் இருந்து சொல்லப்படும் இடங்களில் ரோந்து செய்ய வேண்டும்.
- சுற்றுலாப் பயணிகள் கேட்கும் கேள்விகளுக்கு தக்க பதில்களை அன்புடன் சொல்ல வேண்டும். அருகருகே உள்ள சுற்றுலாத் தலங்கள் எங்கு எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதை சரியாக கூற வேண்டும்.
- சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பு, தங்கும் இடம், பொருள் வைப்பறை பற்றி தகவல் கூற வேண்டும்.
- சுற்றுலா தலத்தில் உள்ள சூழ்நிலைகளைப் பற்றி சுற்றுலா பயணிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

- ஆபத்தான இடங்களைக் கண்டறிந்தும், விலங்குகள் சாலையைக் கடக்கும் இடங்களிலும் எச்சரிக்கைப் பலகைகளை வைக்க வேண்டும்.
- சுற்றுலா வழித்தடங்களில் விபத்து ஏற்படும் போது உடனே ஆஜராகி போக்குவரத்தினை சரி செய்தும், காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து அதன் தகவலை காவல் நிலையத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
- முதியவர்கள்/பெற்றோர்களை விட்டுப் பிரிந்த குழந்தைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- சுற்றுலா பயணிகளுக்கு முதல் உதவி புரிய காவல்துறை வாகனத்தில் முதல் உதவி பெட்டி வைத்திருக்க வேண்டும்.
- சுற்றுலாத் தலங்களில் உள்ள ஆபத்தான இடங்களை முன்பே அறிந்து வைத்திருக்க வேண்டும்.
- சுற்றுலா பயணிகள் வேண்டுகோளுக்கிணங்க உரிய கட்டணத்தில் வாடகை வாகனங்களை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.
- சுற்றுலாத் தலத்தில் பிரச்சினைகள் ஏற்படின் உடனே ஆஜராகி பிரச்சினைகளை தீர்த்தும், பிரச்சினை செய்பவர்களை காவல் நிலையத்திற்க்கு கொண்டு சென்று உரிய சட்ட நடவக்கை எடுக்க வேண்டும்.
- பொருட்கள், நகைகள் திருடு போய்விட்டால் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று புகார் கொடுக்க உதவ வேண்டும்.
- சுற்றுலா ரோந்து அலுவல் நியமிக்கப்படும் காவலர்கள் பன்மொழி தெரிந்தவர்களாக இருத்தல் நலம்.
- சுற்றுலாத் தலங்களில் பிச்சைக்காரர்கள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

செய்யக்கூடாதவை

- காவல் வாகனத்தை ஒரே இடத்தில் நிறுத்தி வைத்தல்.
- காவலர்கள் சுற்றுலா பயணிகளிடத்தில் மரியாதைக்குறைவாக நடந்துகொள்ளுதல்.
- சுற்றுலா பயணிகளுக்கு தவறான தகவல்கள் அளித்தல்.

13. போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் (Regulation of Traffic)

- பெருகிவரும் வாகனப் போக்குவரத்து மற்றும் அதிகரித்து வரும் விபத்துக்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள முக்கிய வீதிகளில் ஏற்படும் வாகனம் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்தி, பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாத வண்ணமும், விபத்துக்கள் மற்றும் அசம்பாவிதங்களைத் தடுக்கும் விதத்திலும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்ல மேற்கொள்ளும் பணியே போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் ஆகும்.
- போக்குவரத்தை நெறிப்படுத்த நாம் மூன்று விதங்களில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.
- போக்குவரத்துக் கட்டமைப்புகளைக் கூட்டுதல் (Traffic Engineering)

- போக்குவரத்து அறிவை மேம்படுத்துதல். (Traffic Education)
- விதிமுறைகளை நடைமுறைப்படுத்துதல். (Enforcement)

போக்குவரத்துக் கட்டமைப்புகளைக் கூட்டுதல் (Traffic Engineering)

- தானியங்கி சிக்னல் (Automatic Signal) தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்த வேண்டும்.
- சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கம்பங்கள் இருந்தால் அதை சம்பந்தப்பட்ட துறையினருக்குத் தெரிவித்து அப்புறப்படுத்த வேண்டும்.
- சாக்கடைகள், மதகுகள் போன்றவை போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தால் சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தெரிவித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பள்ளி, மருத்துவமனை மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேகத் தடை, எச்சரிக்கை மற்றும் அறிவிப்புப் பலகை வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- நகரில் தேவைக்கேற்ப 'Speed Limit', 'No Parking', 'No Air Horn', 'School Zone' போன்ற பகுதி களில் Informative, Cautionary, Mandatory எச்சரிக்கைப் பலகைகள் வைக்க வேண்டும்.
- நகரில் புதிதாக வரும் நபர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய வழிகாட்டிப் பலகைகள் வைக்க வேண்டும்.
- வாகனங்களை நிறுத்த தனியே இடம் ஒதுக்கி, ஒழுங்குபடுத்த வேண்டும்.
- சாலையில் பாதசாரிகள் கடக்க 'Zebra Crossing' கோடு போட வேண்டும். மற்றும் முக்கியமான இடங்களில் பெயிண்டால் மார்க் செய்ய வேண்டும்.

போக்குவரத்து அறிவை மேம்படுத்துதல் (Traffic Education)

- பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று போக்குவரத்து விதிகள் குறித்து வகுப்பு நடத்த வேண்டும்.
- சில மாவட்டங்களில் உள்ள 'Mobile Traffic Park'-க்கு மாணவர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.
- 'Notice' மற்றும் 'Posters' விநியோகித்து பொதுமக்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் குறித்த அறிவைப் பெருக்க வேண்டும்.
- 'Helmet' அணிந்து வாகனம் ஓட்ட அறிவுறுத்த வேண்டும்.
- குடிபோதை மற்றும் அதிவேகமாக வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும்.

விதிமுறைகளைச் செயல்படுத்துதல் (Enforcement)

- ஒருவழிப் பாதைகள் ஏற்படுத்தி போக்குவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- ரோந்து சென்று 'No Parking', பகுதிகளில் வாகனங்களை நிறுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

- தானியங்கி சிக்னல் உள்ள இடங்களில் Signal Jumping மற்றும் Line Crossing செய்பவர்கள் மீது வழக்குப் பதிவு செய்தல் வேண்டும்.
- குடிபோதையில் அதிவேகமாக, அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.
- செல்போன் உபயோகித்துக்கொண்டு வாகனம் ஓட்டுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சாலை விதிமுறைகளை மீறுபவர்கள் மீது தகுந்த பிரிவில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.
- போதிய அளவு காவலர்களை நியமித்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.
- அடிக்கடி வாகன விபத்துகள் ஏற்படும் இடங்களில் எச்சரிக்கைப் பலகை வைக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான சொற்களை உபயோகப்படுத்துதல்.
- வாகனத்தைச் சேதப்படுத்துதல், விதிமுறைகளை மீறுபவர்களை அடித்தல்.

14. கிராமத் தணிக்கை (Village Visit)

உதவி ஆய்வாளர் தமது காவல் நிலைய சரகத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று, கிராமத்தில் முக்கிய நபர்களிடம் அங்கு நடந்த முக்கிய நிகழ்வுகள், குற்றச் சம்பவங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள், வேறு ஏதேனும் பிரச்சினைகள், குற்றம் புரிவோர் பற்றிய தகவல்கள், தண்டனையடைந்த குற்றவாளிகள் வசிப்பிடத்தில் ஆஜர்த் தன்மை குறித்தும் மற்றும் காவல் நிலை ஆணைகளின் நோக்கங்களை நிறைவேற்ற செய்யப்படுவதே கிராமத் தணிக்கை ஆகும்.

கிராமத் தணிக்கைக்குச் செல்வதற்கு முன், தான் செல்லும் கிராமம் சம்பந்தமாக அக்கிராமத்தைப் பற்றியும், அமைவிடம், அதன் வழித் தடங்கள், ஊர் முக்கிய நபர்கள் விபரம், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் பற்றியும், வசிக்கும் மக்கள் விபரம், அரசியல்வாதிகள் நிலவரம், நிலையப் பதிவேட்டின்படி கெட்ட நடத்தைக்காரார்கள் இருந்தால் அவர்களின் விபரங்கள் போன்ற அனைத்துவிதமான தகவல்களையும் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

செய்யவேண்டியவை

- கிராமத்திற்கு சென்றவுடன் அங்குள்ள பட்டா புத்தகத்தில் தேதி, நேரம் குறிப்பிட்டு கையொப்பம் செய்ய வேண்டும்.
- அப்பகுதியின் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர்களிடம் கிராமத்தின் தற்போதைய நிலைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.
- புதிதாக கிராமத்திற்கு வந்து தங்கியிருப்போர் விபரங்கள், திருட்டுப் பொருளை வாங்குவோர், விற்போர், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் ஈடுபடுபவர்கள், ரவுடித் தனம் செய்பவர்கள், குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றி பொதுவாக விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

- ஊராட்சி மன்றத் தலைவர், ஊர்ப் பெரியவர்களிடம் அன்பாகப் பேசி அக்கிராமத்திலுள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாகவும், கலகம் செய்பவர்கள் பற்றியும், திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் பற்றியும், சாராயம் காய்ச்சுபவர்கள் பற்றியும், சூதாட்டங்களில் ஈடுபடுபவர்கள் பற்றியும், அந்நிய சந்தேக நபர்கள் பற்றியும் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், இதரப் பிரச்சினைகள் குறித்தும் உதாரணமாக திருவிழாக்கள், கோயில் திருவிழாக்கள், குடிநீர்ப் பிரச்சினை, சாலை வசதிப் பிரச்சினை, ரேசன் பொருட்கள் பிரச்சினைகள் குறித்தும் விவாதித்து கலந்துபேசி, பிரச்சினைகள் இருப்பின் வட்டாட்சியர் முன்பு சமாதானக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தும், சுமூகமான முறையில் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- காவலர்கள் ரோந்துப் பணியில் இருந்தால் தணிக்கை செய்து ரோந்துப் புத்தகத்தில் உள்ளவாறு பணி செய்துள்ளார்களா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.
- கிராமங்களில் உள்ள சமுதாயக் காவல் (Community Police) மற்றும் கிராமக் கண்காணிப்புக் குழு (Village Vigilance Commitee) உறுப்பினர்களைச் சந்தித்து ஆலோசனைகள் பெற/ வழங்க வேண்டும்.
- கிராமப் பார்வை முடிந்து நிலையம் வந்து தணிக்கை செய்த கெட்ட நடத்தைக்காரர்கள் பற்றிய விபரத்தை அந்தப் பதிவேட்டிலும், கிராமத்தைப் பற்றி சேகரித்த விபரங்களை உரிய கிராமப் பதிவேட்டிலும் பதிவு செய்வதுடன் பொது நாட்குறிப்பிலும் பதிவு செய்ய வேண்டும்.

செய்யக்கூடாதவை

- கிராமத்தில் உள்ள பெரியோர்களை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளுதல்.
- கிராம மக்களிடம் பேசுவதிலும் பழகுவதிலும் பாரபட்சம் காட்டுதல்.

பார்வை: P.S.O, 365 and 370

15. இரவு தங்கல் (Night Halt)

உதவி ஆய்வாளர் தமது காவல் நிலைய சரகத்தில் உள்ள கிராமங்களுக்குச் இரவு நேரத்தில் சென்று தங்கி கிராமத்தில் முக்கிய நபர்களிடம் அங்கு நடந்த முக்கிய நிகழ்வுகள், குற்றச் சம்பவங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள், வேறு ஏதேனும் பிரச்சினைகள், குற்றம் புரிவோர் பற்றிய தகவல்கள், தண்டனையடைந்த குற்றவாளிகள் வசிப்பிடத்தில் ஆஜர்த் தன்மை குறித்தும் மற்றும் காவல் நிலை ஆணைகளின் நோக்கங்களை நிறைவேற்ற அதன்படி செய்யப்படுவதே இரவு தங்கல் ஆகும்.

இரவு தங்க செல்வதற்கு முன், தான் செல்லும் கிராமம் சம்பந்தமாக அக்கிராமத்தைப் பற்றியும், அமைவிடம், அதன் வழித் தடங்கள், ஊர் முக்கிய நபர்கள் விபரம், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் பற்றியும், வசிக்கும் மக்கள் விபரம், அரசியல்வாதிகள் நிலவரம், நிலையப் பதிவேட்டின்படி கெட்ட நடத்தைக்காரார்கள் இருந்தால் அவர்களின் விபரங்கள் போன்ற அனைத்துவிதமான தகவல்களையும் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

செய்யவேண்டியவை

- கிராத்திற்கு சென்றவுடன் அங்குள்ள பட்டா புத்தகத்தில் தேதி, நேரம் குறிப்பிட்டு கையொப்பம் செய்ய வேண்டும்.
- அப்பகுதியின் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்களிடம் கிராமத்தின் தற்போதைய நிலைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.
- புதிதாக கிராமத்திற்கு வந்து தங்கியிருப்போர் விபரங்கள், திருட்டுப் பொருளை வாங்குவோர், விற்போர், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் ஈடுபடுபவர்கள், ரவுடித் தனம் செய்பவர்கள், குற்றம் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றி பொதுவாக விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- ஊராட்சி மன்றத் தலைவர், ஊர்ப் பெரியவர்களிடம் அன்பாகப் பேசி அக்கிராமத்திலுள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாகவும், கலகம் செய்பவர்கள் பற்றியும், திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் பற்றியும், சாராயம் காய்ச்சுபவர்கள் பற்றியும், சூதாட்டங்களில் ஈடுபடுபவர்கள் பற்றியும், அந்நிய நபர்கள் பற்றியும் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், இதரப் பிரச்சினைகள் குறித்தும் உதாரணமாக திருவிழாக்கள், கோயில் திருவிழாக்கள், குடிநீர்ப் பிரச்சினை, சாலை வசதிப் பிரச்சினை, ரேசன் பொருட்கள் பிரச்சினைகள் குறித்தும் விவாதித்து கலந்துபேசி, பிரச்சினைகள் இருப்பின் வட்டாட்சியர் முன்னிலையில் சமாதானக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தும், சுமூகமான முறையில் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பீட் தணிக்கை இருந்தால் தணிக்கை செய்து பீட் டிக்கட்டில் உள்ளவாறு பணி செய்துள்ளார்களா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.
- கிராமங்களில் உள்ள சமுதாயக் காவல் மற்றும் கிராமக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து ஆலோசனைகள் வழங்க வேண்டும்.
- கிராமப் பார்வை முடிந்து நிலையம் வந்து தணிக்கை செய்த கெட்ட நடத்தைக்காரர்கள் பற்றிய விபரத்தை அந்தப் பதிவேட்டிலும், கிராமத்தைப் பற்றி சேகரித்த விபரங்களை உரிய கிராமப் பதிவேட்டிலும் பதிவு செய்வதுடன் பொது நாட்குறிப்பிலும் பதிவு செய்ய வேண்டும்.
- உதவி ஆய்வாளர் தனது காவல் சரகத்தில் இரவு தங்கி கிராமத் தலைவர்கள் மற்றும் முக்கிய நபர்களுடன் கலந்துரையாடல் செய்தும், கிராமத்தில் உள்ள மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியும், கிராம நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல், கிராமத்தில் உள்ள பிரச்சினைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல், மேற்படிப் பிரச்சினைகளைப் பற்றி உயர் அலுவலர்களிடம் கலந்து ஆலோசனை செய்து பிரச்சினை தீர்க்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். (உதாரணமாக குடிநீர்ப் பிரச்சினை, திருவிழா பிரச்சினை) காவல் துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்ல உறவை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ள வேண்டும்.
- உதவி ஆய்வாளர் தங்கள் காவல் சரகக் கிராமங்களில் அசம்பாவிதம், சாதிக் கலவரங்கள், கோவில் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களிலும், வழக்கு விசாரணையிலுள்ள வழக்குகளில் குற்றவாளிகளைக் கைது செய்தல் போன்ற காலங்களில் கிராமங்களில் தங்கி கிராம மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். மற்றும் கிராம மக்களிடம் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்.
- கிராமத்தில் உள்ள சமுதாயக் காவல், கிராமக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து குற்றங்கள் மற்றும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடி ஆலோசனைகள் வழங்க வேண்டும்.

- கிராமத்தில் உள்ள காவல் துறை நண்பர்களை இரவு தங்கலின் போது உடன் வைத்துக்கொண்டு அவர்களை ஊக்குவித்து அறிவுரைகள் வழங்க வேண்டும்.
- உதவி ஆய்வாளர் பொது இடங்களில் மட்டுமே இரவில் தங்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- கிராமத்தில் உள்ள பெரியோர்களை அவமதிக்கும் விதத்தில் நடந்துகொள்ளுதல்.
- கிராம மக்களிடம் பேசுவதிலும் பழகுவதிலும் பாரபட்சம் காட்டுதல்.

16. கிராமக் கண்காணிப்புக் குழு (Village Vigilance Committee)

கிராமக் கண்காணிப்புக் குழு என்பது, கிராமங்களில் நடைபெறும் குற்றங்கள் மதுவிலக்குக் குற்றங்களை. பொதுமக்கள் ஒத்துழைப்புடன் அமல்படுத்த ஏற்படுத்தப் பட்ட அமைப்பாகும்.

இக்குழுவில் ஊராட்சி மன்றத் தலைவர்/கிராமத்தின் முக்கிய நபர் / நாட்டாமை, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் துறை அலுவலர் போன்றோர்கள் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

செய்யவேண்டியவை

- மதுவினால் சமுதாயத்திற்கு ஏற்படும் தீமைகள் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக்கூற இந்தக் குழுவைப் பயன்படுத்த வேண்டும்.
- பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே மதுவிலக்கு மற்றும் இதர குற்றங்கள் நடவாமல் தடுத்து நிறுத்தி சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கு இந்த கிராம கண்காணிப்புக் குழுவினர் உதவுகின்றனர்.
- இக்குழுவினர் காவல் நிலைய எல்லையில் நடக்கும் மற்ற குற்றங்கள் பற்றியும் தகவல் அளிப்ப தற்கு இவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
- மதுவிலக்கை முழுமையாக அமுல்படுத்த எல்லாக் கிராமங்களிலும் கிராமக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்த வேண்டும்.
- அதிகமான பொதுமக்களை இந்தக் குழுவில் சேர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.
- இக்குழுவினர்கள் மூலம் பொதுமக்களுக்கு குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- குற்றம் குறித்து தகவல் தருபவர்களைப் பற்றிய விபரம் இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.
- கிராம கண்காணிப்புக் குழுவில் பொதுமக்களைச் சேர்க்கும்போது எந்தப் பாரபட்சமும் காட்டக் கூடாது.

செய்யக்கூடாதவை

- கிராம கண்காணிப்புக் குழுக் கூட்டம் எனக் கூறி அவர்களை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அலைய வைத்தல்.
- கிராம கண்காணிப்புக் குழுவிற்கு, ஜாதி, மத, அரசியல் சம்பந்தமான சாயம் பூசுதல்.

17. முக்கிய நபர் பாதுகாப்பு (VIP Security)

நாட்டின் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதம மந்திரி, ஆகியோர் மிக மிக முக்கிய நபர்கள் எனப்படுவர். மாநில ஆளுநர், முதல் அமைச்சர், மத்திய மாநில அமைச்சர்கள், அயல்நாட்டுத் தலைவர்கள் ஆகியோர் மிக முக்கிய நபர்கள் எனப்படுவர். இவர்களுக்குப் பல காரணங்களினால் உயிருக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்தும் மற்றும், எதிர்பாராத விபத்துக்களில் இருந்தும் நாம் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

ஒரு முக்கிய நபருக்கு கீழ்கண்ட காரணங்களினால் ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

- அரசியல் சம்பந்தப்பட்ட எதிரிகள்
- மத சம்பந்தப்பட்ட தீவிரவாதிகள்
- மாறுபட்ட கொள்கைகள் உடையவர்கள்
- அரசின் கொள்கையால் பாதிக்கப்பட்டவர்கள்
- அதிகார ஆசை கொண்டவர்கள்
- தனிப்பட்ட விரோதங்கள்
- தீவிரவாத இயக்கங்கள்

முக்கிய நபர்களுக்கு நாம் கீழ்க்கண்ட பாதுகாப்பு அலுவல் செய்யவேண்டும்

1. பொதுக்கூட்ட மேடைப் பாதுகாப்பு

- பொதுக்கூட்ட மேடை அமைக்கும் மு.ன்பே அந்த இடத்தை நாசவேலைச் சோதனை (Anti-Sabotage Check) செய்ய வேண்டும். அப்போதே பாதுகாப்பிற்குக் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- மேடைப் பாதுகாப்பாக இருக்கிறதா என பரிசோதனை செய்ய வேண்டும். பொதுப்பணித்துறை பொறியாளரிடமிருந்து (P.W.D. Engineer) சான்று வாங்க வேண்டும். மேடையில் எவ்வளவு நபர்களை அனுமதிக்க முடியும் என்ற சான்றிதழைப் பெற வேண்டும்.
- மின்சார வாரியத்திலிருந்து மின் ச்ாதனங்கள் சரியான முறையில் உள்ளதா என்ற சான்று பெற வேண்டும்.
- பொது ஒலி பெருக்கி சாதனம் சரியாக செயல்படுகிறதா என்ற சான்று பொதுப் பணித் துறை யினரிடமிருந்து பெற வேண்டும்.
- மேடை அமைத்தபிறகு, B.D.D.S, Check செய்ய வேண்டும். பரிசோதனை செய்தபிறகு பொதுக் கூட்ட மேடைக்கு பாதுகாப்பிற்காக காவலர்களை நியமிக்க வேண்டும்.
- பொதுக்கூட்ட மேடையில் அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்கக் கூடாது.
- மேடையில் அளவுக்கு அதிகமாக நபர்களை அனுமதிக்கக்கூடாது.
- பூமாலை, துண்டு ஆகியவை போடும்போதும், மனுக்கள் கொடுக்கும் போதும், சம்பந்தப்பட்ட பொருட்களையும் நபர்களையும் சோதனையிட்ட பின்புதான் அனுமதிக்க வேண்டும்.

- பொதுக்கூட்ட மேடையின்முன் அலுவல் செய்யும்போது பார்வையாளர்களை நோக்கி நின்று பணி செய்ய வேண்டும்.
- மேடையைச் சுற்றி கல் மற்றும் கம்பு போன்ற எதுவும் இல்லாதவாறு முன்கூட்டியே பார்த்துக் கொள்ள வேண்டும்.
- சந்தேகமான நபர்கள் மற்றும் பொருட்கள் இருந்தால் உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சாலை ஓரங்களில் நடக்கும் பொதுக்கூட்டத்தால், போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- பொதுக் கூட்ட மேடைக்கு முன்பு பாதுகாப்பிற்காக Sterile zone அமைக்க வேண்டும். அந்தப் பகுதியில் யாரையும் அனுமதிக்கக்கூடாது.
- தீயணைப்புத் துறையினரால் உரிய தீத்தடுப்புச் சாதனங்கள் பொதுக்கூட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும்.
- பொதுக் கூட்ட இடத்தில் கூட்டத்தைக் கட்டுப்படுத்த போதிய அளவு தடுப்பு வேலிகள் (Barricades) அமைக்க வேண்டும்.
- போதிய மின் விளக்கு வசதிகள் அமைக்க வேண்டும்.
- போதிய ஜெனரேட்டர் வசதி செய்யப்பட வேண்டும்.

விமான தள பாதுகாப்பு (Airport/Helipad Bandobust)

- விமான தளத்தைச் சுற்றிலும் போதிய பாதுகாப்பிற்குக் காவலர்களை நியமிக்க வேண்டும்.
- விமான தளத்திற்கு வரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த தடுப்புகள் ஏற்படுத்த வேண்டும்.
- விமான தளத்தின் சுற்றுப்புறங்களில் ரோந்து சென்று கண்காணிக்க வேண்டும்.
- ஹெலிகாப்டருக்குத் தனியாகக் காப்பு நியமிக்க வேண்டும்.
- Wind Sack, Smoke Candle, Verlite Pistol ஆகியவைகள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- கூட்ட நெரிசல் ஏற்படாதவாறு கட்டுபடுத்த வேண்டும்.
- அனுமதி பெறாத யாரையும் விமானத்தை (Helicopter) பார்க்க அனுமதிக்கக் கூடாது.

வழி பாதுகாப்பு பணி (Route Bandobust)

- முக்கிய நபர் வரும் வழியில் முன்னதாக ரோந்து சென்று சாலையின் ஓரங்களில் சந்தேகத் திற்கிடமாக எந்த வாகனமும் பொருட்களும் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- சாலையில் பழுதடைந்த வாகனம் அல்லது இதரவாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தால் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.
- பாலம், மதகு (Culvert) ஆகிய இடங்களில் தேவையான அளவு காவலர்களை நியமிக்க வேண்டும். பாலத்தை முன்கூட்டியே B.D.D.S. சோதனை செய்ய வேண்டும். சோதனை செய்தபிறகு பாது காப்பிற்கு காவலர்கள் நியமிக்க வேண்டும்.

- சாலை ஓரம் அமைந்துள்ள வீடுகளின் சன்னல், கூரை, மாடி போன்ற இடங்களையும், உயரமான கட்டிடங்கள், உயரமான மரங்களில் இருந்து முக்கிய நபரை இலக்கு வைத்து துப்பாக்கியால் சுட இயலுமாதலால் இவ்விடங்களைத் துல்லியமாகக் கண்காணித்து பாதுகாப்பிற்கு காவலர்கள் நியமிக்க வேண்டும்.
- சாலை ஓரங்களில் பாதுகாப்புப் பணியில் இருக்கும்போது கூட்டத்தினரைக் கவனமாகக் கண் காணிக்க வேண்டும். சந்தேகமான பொருட்கள் வைத்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கறுப்புக் கொடி காட்ட முயன்றால் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- முக்கிய நபர்கள் வருகையின்போது கறுப்புக் கொடி காட்டுவார்கள் என்ற தகவல் இருக்கும் போது உயர் அலுவலர்களின் அறிவுரை பெற்று செயல்பட வேண்டும்.
- மிக முக்கிய நபர்கள் வரும் சாலையில் முன்னால் வரும் வாகனம் (Advance Pilot) தென்பட்டவுடன் சாலைப் போக்குவரத்தை நிறுத்தி சாலையில் எந்தவித இடையூறும் இல்லாமல் செய்ய வேண்டும். மேலும் பாதசாரிகள், கால்நடைகள் மற்றும் சிறுவர்கள் திடீரென சாலையைக் கடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- முக்கிய நபர்கள் வரும் வழியில் உள்ள பார்வையாளர்கள் யாராவது முக்கிய நபரிடம் மனுக் கொடுக்க முயற்சி செய்து Convoy-யின் முன் வருவார்கள். அவர்களை முன்கூட்டியே அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- முடிந்தவரையில் போக்குவரத்தை மாற்று வழிகளில் அனுப்பி, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- சாலை ஓரங்களில் அதிகமான கூட்டம் இருந்தால் முன்கூட்டியே பாதுகாப்பு பொறுப்பு அலுவலர் களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- முக்கிய நபர்கள் வந்து சென்றபிறகு உயர்அலுவலர்கள் உத்தரவு பெற்று, சாலைகளில் வாகனங் களை அனுமதித்து உடனடியாக போக்குவரத்தை சீர்செய்ய வேண்டும். மறு உத்தரவு வரும்வரை பாதுகாப்பு தொடர வேண்டும்.
- பாதுகாப்புப் பணியில் இருக்கும் காவலர்கள் பொதுமக்களைப் பார்த்துத்தான் நிற்க வேண்டும்.

தங்கும் இடம் (Place of Stay)

- தங்கும் இடத்தையும் அதைச் சுற்றியும் Anti-Sabotage Check செய்ய வேண்டும். சோதனை முடிந்த உடன் நான்கு திசைகளிலும் துப்பாக்கி ஏந்திய காவலர்களை பாதுகாப்பிற்கு நியமிக்க வேண்டும்.
- சந்தேகமான பொருட்கள், தோண்டப்பட்ட பள்ளம், மண் குவியல்களை உடனே சோதனை செய்து அப்புறப்படுத்த வேண்டும்.
- முக்கிய நபர்கள் தங்கும் இடத்தில் அந்நிய நபர்கள் செல்லாமல் கண்காணிக்க வேண்டும். பார்வையாளர்களை அனுமதிச் சீட்டு மற்றும் உயர் அலுவலர்களின் அனுமதி பெற்றே உள்ளே அனுப்ப வேண்டும்.
- தங்கும் இடத்தில் உள்ள முகாம் அலுவலரின் உத்தரவின்கீழ் பணிபுரிய வேண்டும்.
- தங்கும் இடத்தில் உள் காப்பு மற்றும் வெளிக் காப்புக்குக் காவலர்கள் நியமிக்க வேண்டும்.

வாகனத்தில் செல்லும்போது (Convoy)

- முக்கிய நபர்களின் பாதுகாப்புக்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள்படி வாகனங்களை வரிசைப் படுத்த வேண்டும்.
- வாகனங்களுக்கு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் இருந்து தகுதிச் சான்று பெற வேண்டும்.
- வாகனங்களை முன்கூட்டியே B.D.D.S. Check செய்ய வேண்டும்.
- Tail Car வாகனத்தில் முக்கிய நபரின் இரத்தப்பிரிவு உள்ள 5 காவலர்களை முன்கூட்டியே பரிசோதனை செய்து உடன் அழைத்துச் செல்ல வேண்டும்.
- Package Team-ல் உள்ளவர்கள் முக்கிய நபர்களின் பொருட்களை அவர்கள் தங்கும் இடத்திற்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்ல வேண்டும்.

பாதுகாப்பு வளையம் (Ring Round)

- Ring Round அலுவலுக்குச் செல்லும்போது சாதாரண உடையில் – முடிந்தால் சஃபாரி உடையில் மிடுக்காகச் செல்ல வேண்டும். கண்டிப்பாக Pistol வைத்திருக்க வேண்டும்.
- முக்கிய நபர்கள் வாகனத்தைவிட்டு பொதுக்கூட்ட மேடை, தங்கும் இடம் போன்றவற்றுக்குச் செல்லும்போது இடையூறு மற்றும் ஆபத்து ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு வளையம் அமைத்து முக்கிய நபரை அழைத்துச் செல்ல வேண்டும்.
- Ring Round அலுவலில் இருக்கும்போது தங்கள் வளையத்தின் உள் அந்நியர்கள் யாரும் உள்ளே புகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

மெய்க்காப்பாளர் (Personal Security Officer – P.S.O)

- P.S.O. ஆக இருப்பவர்கள் நல்ல உடல் தகுதி உடையவர்களாகவும், நல்ல பயிற்சி பெற்றவர் களாகவும் இருக்க வேண்டும்.
- P.S.O அலுவலர்கள் கண்டிப்பாக Pistol வைத்திருக்க வேண்டும்.
- முக்கிய நபரின் பாதுகாப்பிற்கு எந்த ஆபத்தும் வராமல் இவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- அவர் எங்கு சென்றாலும் அவருடன் நிழல் போல தொடர்ந்து செல்ல வேண்டும்.
- முக்கிய நபரின் அலுவலை முன்கூட்டியே தெரிந்து கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

உணவு சோதனை (Food Check)

- உணவு தணிக்கை அலுவல் புரியும்போது Protocal-ல் குறிப்பிட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் நுண் உயிரியல் வல்லுநர்கள் (Microbiologist)-உடன் ஒருங்கிணைந்து பணிபுரிய வேண்டும்.
- முக்கிய நபர்களுக்கு அளிக்கும் அனைத்து வகை உணவுகளும் நுண்உயிரியல் வல்லுநர்களால் பரிசோதிக்கப்பட்டு மருத்துவர்கள் சான்று அளித்த பிறகுதான் முக்கிய நபருக்கு அளிக்க வேண்டும்.

- சோதனை செய்யாத உணவுப் பொருட்களை அனுமதிக்கக் கூடாது.
- சோதனை முடித்த உணவுப் பொருட்களை பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

செய்யவேண்டியவை

- முக்கிய நபர்களுக்கு பாதுகாப்பு பணிக்குச் செல்லும்போது Pistol மற்றும் Walkie Talkie வைத்திருத்தல் வேண்டும்
- முக்கிய நபர்களுக்கு எந்தவிதத்திலாவது ஆபத்தோ அச்சுறுத்தலோ உள்ளதா என்பதை முன் கூட்டியே தெரிந்துவைத்திருத்தல் வேண்டும்.
- முக்கிய நபர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், எத்தனை காவலர்கள் தேவைப்படுவார்கள் என்பதையும் உயர் அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்து அறிவுரைப்படி திட்டம் (Scheme) தயார் செய்ய வேண்டும்.
- பாதுகாப்பு அலுவலுக்கு வரும் காவலர்கள் சுத்தமான சீருடை, புகைப்பட அடையாள அட்டை, குறுந்தடி, டார்ச் லைட், மழைக் கோட், கம்பூட் ஆகியவைகள் வைத்திருக்கிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும். தானும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- பாதுகாப்பு அலுவல் புரியும்போது தனக்கு மேல் உள்ள அலுவலர்களையும் கீழ் உள்ள காவலர்கள் யார் என்பது பற்றியும் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.
- சாதாரண உடையில் பாதுகாப்புக்கு காவலர்கள் நியமிக்க வேண்டும்.
- இடையூறு செய்யும் நபர்களை குழப்பம் இன்றி சலசலப்பில்லாமல் வெளியேற்ற வேண்டும். அந்த இடத்தில் திட்டவோ அடிக்கவோ கூடாது.

செய்யக்கூடாதவை

- தன்னிச்சையாகச் செயல்படுதல்.
- பல சந்தர்ப்பங்களில் ஆர்வமிகுதியால் தொண்டர்களும், பொதுமக்களும் எவ்வழியிலாவது முக்கிய நபரின் அருகில் நெருங்க முயல்வர். அவர்களை முரட்டுத்தனமாக நடத்துதல்.
- பணிக்கு காலதாமதமாக வருதல், பணியில் அலட்சியமாக இருத்தல்.
- பணியின்போது செல்ஃபோன் பயன்படுத்துதல்.

18. சந்தைகள் மற்றும் திருவிழாக்கள் பாதுகாப்பு (Fairs and Festivals Security)

திருவிழாப் பாதுகாப்பு அலுவல்

திருவிழா சம்பந்தமான விபரங்களை காவல் நிலைய குற்ற வரலாறு பாகம் – IV (PART – IV) பதிவேட்டைப் பார்வை யிட்டும், திருவிழா நடத்துபவர்களைக் கலந்து ஆலோசித்தும், திருவிழாவின்போது ஏற்படும் பிரச்சினைகள், கூடும் மக்களின் எண்ணிக்கை, போக்குவரத்து வசதிகள், திருவிழா நிகழ்ச்சிகள், பொழுது போக்கு அம்சங்கள் ஆகியவைகள் பற்றித் தெளிவாக விசாரித்து தகவல்கள் சேகரிப்பதுடன் தக்க பாதுகாப்பு அலுவலுக்கு ஏற்பாடுகள் செய்தல் திருவிழாப் பாதுகாப்பாகும்.

திருவிழாவின் போது பொது மக்கள் அதிகம் கூடுமிடங்கள், சந்தைகள், கடை வீதிகள் ஆகிய இடங்களில் உரிய பாதுகாப்பு அளிப்பதும் காவல் துறையின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

பொது மக்கள் எவ்விதப் பயமுமின்றி திருவிழாக் கொண்டாட கீழ்க்கண்டவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

- சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்.
- திருட்டுக் குற்றங்கள் நடவாமல் தடுத்தல்.
- வாகனப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல்.
- சூதாட்டங்கள் மற்றும் விபச்சாரங்கள் நடக்காமல் தடுத்தல்.
- போதைப் பொருட்கள் விற்பனையைத் தடுத்தல்.
- விழாக்களில் கலந்துகொள்ளும் முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.

திருவிழாவுக்கு முன் உதவி ஆய்வாளர் செய்யவேண்டியவைகள்

- திருவிழாப் பாதுகாப்பு சம்பந்தமாக பாதுகாப்புத் திட்டம் குறித்து உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்து விரிவான முறையில் பாதுகாப்புத் திட்டம் தயார் செய்து அதனை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும்.

வரைவு பாதுகாப்புத் திட்டம் தயார் செய்தல்

- முந்தைய ஆண்டு பாதுகாப்புத் திட்ட அறிக்கைகளைப் பார்வையிட்டும், கடந்த திருவிழாவின் போது ஏற்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும், திருவிழாவின் வகைகள், எந்தெந்தப் பகுதிகள் எவ்வகையில் கொண்டாடப்படுகிறதோ அதற்குத் தகுந்தாற்போல் வரைவுப் பாதுகாப்புத் திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டும்.
- திருவிழா நடைபெறும் இடங்கள், கோவில் உட்புறம், வெளிப்புறம், அதன் வெளி வீதிகள், கோவில் சுற்றுப்புறங்கள், தற்காலிகப் பேருந்து நிலையங்கள், கலை நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள், மண்டகப்படி நடைபெறும் இடங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள், முக்கியக் கடை வீதிகள், நகரின் முக்கிய சந்திப்புகள், முக்கிய இடங்கள், திரையரங்குகள், மற்றும் அதன் சுற்றுப் புறங்கள், திருவிழா நடைபெறும் ஊரின் எல்லைகள், அருகில் உள்ள கிராமங்களில் உள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வரைவு பாதுகாப்புத் திட்டம் தயார் செய்ய வேண்டும்.
- விழாக்களின்போது நடந்த அசம்பாவிதங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.
- திருவிழா நிகழ்ச்சி/கலை நிகழ்ச்சி (சினிமா மெல்லிசை, ஆடலும் பாடலும், கரக ஆட்டம்), கேளிக்கை நிகழ்ச்சிகள் (இராட்டினம், மரணக் கிணறு, சர்க்கஸ், நாடகம், சாகசங்கள் செய்தல் மற்றும் இதர வகைகள்) போன்றவற்றில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை மற்றும் இதரப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.
- தேர்திருவிழாவின்போது தேர் செல்லும் பாதை/ தேர் இழுப்பதில் ஏதேனும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் உள்ளதா என்பதை விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

- திருவிழாவின் போது சப்பரம் புறப்படும் நேரம், சுற்றிவரும் வீதிகள். மற்றும் கோயிலுக்குள் சென்றடையும் நேரம் குறித்து திருவிழாக்குழுவினர்/ மண்டகப்படிதாரர்கள், காவல் துறை மற்றும் திருக்கோவில் நிர்வாகத் தினருடன் கலந்தாலோசனை செய்து கொள்ள வேண்டும்.
- திருவிழாவின்போது ஏற்படும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை முன்கூட்டியே விசாரித்து அறிய வேண்டும். இரகசியத் தகவல் இருந்தால் பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை, காவல் துறை உயர் அலுவலர்களுக்கும் தெரிவித்து சாமாதானக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி, பதட்டம் ஏற்படும் என்று எண்ணும் போது சட்டம் ஒழுங்கு பிரச்சினையைத் தீர்க்க, உயரலுவலர்களிடம் தெரிவித்து உத்தரவுப்படி முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கைகளை வட்டாட்சியர் தலைவர் மற்றும் கோட்டாட்சியர் தலைவர் மூலம் மேற் கொள்ள வேண்டும்.
- திருவிழாவிற்கு முன்பு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை செய்வோர் பட்டியல் தயாரித்து உயர் அலுவலர்களின் ஒப்புதல் பெற்று உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- திருவிழா பற்றியும் திருவிழாவில் கலந்துகொள்ளும் முக்கிய பிரமுகர்கள் பற்றியும் தகவல் சேகரித்துக் கொள்ள வேண்டும்.
- 30(2) காவல் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தால் அது குறித்து திருவிழாக் குழுவினர்/மண்டகப் படிதாரர்களுக்கும் மற்றும் பொது மக்கள் கூடுமிடங்களான இரயில் நிலையம், பேருந்து நிலையம், பொது இடங்களிலும் ஒட்டித் தெரிவிக்க வேண்டும்.
- திருவிழாக் குழுவினர்/மண்டகப்படிதாரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கோவில் நிர்வாகத்தினர், வருவாய்த் துறை, மின்சாரத் துறை, போக்குவரத்துத் துறை, நகராட்சி, பஞ்சாயத்து, மருத்துவத் துறை, நெடுஞ்சாலைத் துறை, தீயணைப்புத் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறையினருடன், திருவிழா சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு கலந்தாலோசனை செய்ய வேண்டும்.
- திருவிழாக் கமிட்டியினர்/மண்டகப்படிதாரர், கோயில் நிர்வாகத்தினர் ஆகியோருடன் திருவிழா நிகழ்ச்சிகள் சம்பந்தமான பட்டியல் தயார் செய்வது குறித்து கலந்தாலோசனை செய்ய வேண்டும்.
- திருவிழாக் கமிட்டியினர்/மண்டகப்படிதாரர்களால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள், வான வேடிக்கைகள் சம்பந்தமாக கலந்தாலோசனை செய்து நிகழ்ச்சிப் பட்டியல் தயார் செய்ய வேண்டும்.
- திருவிழாக் கமிட்டியினர்/மண்டகப்படிதாரர்கள் நடத்தும் கலை நிகழ்ச்சி மற்றும் வான வேடிக்கைகளுக்கு காவல் துறையினரிடம் உரிய அனுமதி பெற வேண்டுமென்று அறிவுறுத்த வேண்டும்.
- கலை நிகழ்ச்சிகளுக்குரிய கால நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும்.
- திருவிழாக் குழுவினர்/மண்டகப்படிதார்களுடன் கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக கலந்தாலோசனை செய்து அது ஜாதி ரீதியாக யாரையும் குறிப்பிடாமலும், தனிப்பட்ட ஜாதி குறித்து அடையாளச் சின்னம் வாசகங்கள் உள்ள பனியன்கள், மேலாடைகள், ரிப்பன்கள், தொப்பிகள், கொடிகள் மற்றும் ஜாதி சம்பந்தப்பட்ட போஸ்டர்கள், பிரசுரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.
- ஜாதி ரீதியான பாடல்களை ஒலிபரப்பவோ பாடவோ கூடாது என்பதை அறிவுறுத்த வேண்டும்.

- கலை நிகழ்ச்சி நடத்த அனுமதி கோரி காவல் துறைக்கு மனுச் செய்யும்போது, அதில் நிகழ்ச்சி இடம், நேரம், பிரபலமான நிகழ்ச்சி ஏற்பாடாக இருந்தால் அதன் விபரம் போன்றவைகளைத் தெளிவாக குறிப்பிட அறிவுறுத்த வேண்டும்.
- திருவிழாவின்போது பந்தல் அமைப்பது பற்றி திருவிழாக் கமிட்டியினர்/மண்டகப்படிதாரர்கள், காவல் துறை, வருவாய்த் துறை, தீயணைப்புத் துறையினருடன் கலந்தாலோசனை செய்து போக்குவரத்துக்கு இடையூறாக இல்லாமலும், மிக நீண்ட அளவில் இல்லாமலும், போதிய தீயணைப்பு சாதனங்களுடனும் உதவி ஆய்வாளர் மேற்பார்வையில் பந்தல் அமைக்குமாறு அறிவுறுத்தப் பட வேண்டும். பந்தல் அமைக்கப்பட்டவுடன் பந்தல் பாதுகாவலுக்கு காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

சந்தை மற்றும் திருவிழாக்களில் பந்தல் அமைக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

- திருவிழாப் பந்தல்களில் நாலாபக்கமும் வாசல்கள் இருக்குமாறும், தீவெட்டிகள் மற்றும் மூடப் படாத விளக்குகளால் தீப்பிடிக்கும் அபாயத்தைத் தடுக்கும் பொருட்டு பந்தலை உயரமாக அமைக்க அறிவுறுத்த வேண்டும்.
- திருவிழாப் பந்தலில் தேவைக்கேற்ப ஆங்காங்கே தீயணைப்பு சாதனங்களைக் கண்டிப்பாக தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்த வேண்டும்.
- போதிய மின்விளக்கு வசதிகளும் மின்சாரத் தடையைச் சமாளிக்க ஜெனரேட்டர் வசதியும் ஏற்படுத்தும்படி வலியுறுத்த வேண்டும்.
- பந்தல் அமைப்புகள் மேற்குறிப்பிட்டபடி பாதுகாப்பாக இல்லை என்றால் பொது மக்கள் பாதுகாப்பைக் கருதி விழாவை நிறுத்த நிர்வாகத் துறை நடுவர் அவர்களிடம் கு.வி.மு.ச. பிரிவு 144–படி தடை உத்திரவு பிறப்பிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்திரவை அமல்படுத்த வேண்டும்.
- திருவிழா சம்பந்தமாக சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் இருந்தால் அது சம்பந்தமாக வருவாய்த் துறையினருடன் கலந்தாலோசனை செய்து உயர் அலுவலர்களின் உத்திரவுப்படி நடந்துகொள்ள வேண்டும்.
- வாணவேடிக்கைகள் சம்பந்தமாக திருவிழாக் குழுவினர்/மண்டகப் படிதார்கள் காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினருடன் கலந்தாலோசனை செய்து, பந்தல் மற்றும் கூரைகள் இல்லாத இடத்தில், பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாதவாறு பாதுகாப்பாக வாண வேடிக்கை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
- திருவிழாக் குழுவினர்/மண்டகப்படிதார்களுக்கு மண்டகப்படியன்று ஒரு நாள் மட்டும் ஒரு நிகழ்ச்சிக்கே அனுமதி வழங்க வேண்டும்.
- நகராட்சி நிர்வாகம், அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் களுடன் தற்காலிகப் பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து செல்லும் பாதைகள் பற்றிக் கலந்தா லோசனை செய்து அதன் முடிவைத் திருவிழாவிற்கு முன்பே பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.
- தீயணைப்புத் துறையினரோடு கலந்தாலோசனை செய்து பெரிய பந்தல்கள் இருந்தால் போதிய தீத்தடுப்பு சாதனங்களுக்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். போதிய தீயணைப்பு வாகனம் தயார் நிலையில் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

- திருவிழாவில் அசம்பாவிதம் ஏற்பட்டால் பொதுமக்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்ற போதிய அவசர வழிகள் பற்றி கலந்தாலோசனை செய்து அப்பாதைகளில் இடையூறு ஏதும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- நகராட்சி பஞ்சாயத்து நிர்வாகத்துடன் கலந்தாலோசனை செய்து போதிய குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சுகாதார வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
- நெடுஞ்சாலைத் துறையினருடன் கலந்தாலோசனை செய்து திருவிழா நடைபெறும் நகருக்குள் உள்ள சாலைகளை செப்பனிட்டு சீரான போக்குவரத்துக்கு ஏற்றதாக இருக்குமாறும், தேர் செல்லும் பாதையை செப்பனிடப்பட்டு சீராக இருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். தேர்/ சப்பரம் சாலையில் பழுதின்றி செல்லுமா என்பதை பொதுப்பணித்துறையினர் உதவியுடன் உறுதி செய்ய வேண்டும்
- பொது பணித் துறையினருடன் கலந்தாலோசனைசெய்து தேர் மற்றும் தெப்ப மிதவைகளுக்கு கட்டுக் கோப்பு மற்றும் ஆபத்தின்மை (Structural and Safety) குறித்து திருவிழாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக விண்ணப்பம் செய்து சான்று வாங்கி வைத்திருக்க வேண்டும்.
- திருவிழாவின்போது தெப்ப மிதவைகளில் எவ்வளவு பேர் செல்லலாம் என்பதைக் காவல் துறை அலுவலர், பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை மற்றும் கோயில் நிர்வாகத்துடன் திருவிழாவிற்கு முன்பு ஆட்களை ஏற்றி அதில் எவ்வளவு நபர்கள் செல்லலாம் என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- மின்சாரத் துறையினருடன் கலந்தாலோசனை செய்து திருவிழா சமயத்திலும். மண்டகப்படிதாரர் கள் கலை நிகழ்ச்சிகள். பொழுது போக்கு நிகழ்ச்சிகளின் போது தடையில்லாமல் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- குறிப்பாக தேர்த்திருவிழாவின் போது மின்சாரம் வழங்குவதைத் தற்காலிகமாக துண்டித்து வைத்திருக்க வேண்டும்.
- மின்சாரத்தை எப்போது துண்டித்து எப்போது வழங்க வேண்டும் என்பதை முன்கூட்டியே ஆலோசனை செய்துகொள்ள வேண்டும்.
- தேர் செல்லும் பாதையில் தேருக்கு இடையூறாக உள்ள மின்கம்பங்கள் மற்றும் குறுக்காகச் செல்லும் மின் கம்பிகளைத் தற்காலிகமாக துண்டித்துவைப்பது சம்பந்தமாக மின்சாரத் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும்.
- திருவிழா பாதுகாப்பிற்கு வரும் வெளி மாவட்டக் காவல் அலுவலர்கள், காவலர்கள் மற்றும் பணிக்கு வரும் காவலர்கள் தங்குவதற்கு போதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.
- திருவிழா சம்பந்தமான அனைத்து தகவல்களையும் அவ்வப்போது உயர் அலுவலர்களுக்குத் தகவல் சொல்லி அவர்கள் உத்தரவுப்படியே நடக்க வேண்டும்.

திருவிழாவின் போது புறக் காவல் நிலையம் அமைத்தல்

- கோயில் நிர்வாகத்துடன் கலந்தாலோசனை செய்து பொருத்தமான இடத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டும்.
- மின்சார வசதி
- தொலைபேசி

- வ. எண் தொலைபேசி கருவி (V.H.F. Set)
- பொது அறிவிப்புக்கான ஒலி பெருக்கி (Public Address System) வசதி
- குடிதண்ணீர் வசதி
- மருத்துவ வசதி போன்ற வசதிகள் உள்ளடக்கி இருக்க வேண்டும்.
- புறக் காவல் பணிக்கு தேவையான காவலர்களை நியமிக்க வேண்டும்.

புறக்காவல் நிலையத்தில் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்

- பொது நாட்குறிப்பு (G.D.)
- பணிக்கு அறிக்கை செய்வோர் விபரப் பதிவேடு (Reportiong Strength Register)
- பணிக்கு அமர்த்தப்பட்டோர் விபரப் பதிவேடு (Duty Deployment Register)
- காணாமல்போன நபர்கள் பதிவேடு (Missing Persons Register)
- காணாமல் போன பொருட்கள் பதிவேடு (Missing Articles Register)
- பாதுகாப்பு அலுவல் திட்டப்படி (Bandobust Scheme) காவல் அலுவலர்களை அலுவலுக்கு நியமிக்க வேண்டும்.
- காவல் அலுவலர்கள் தொற்று நோயால் பாதிக்கப்படாத வகையில் தடுப்பூசி போட்டுக் கொள்ள அறிவுறுத்த வேண்டும்
- காவலர்களுக்கு அலுவல் அட்டை கொடுக்க வேண்டும்.
- புறக்காவல் நிலைய அன்றாட நிகழ்வுகளைப் பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.
- திருவிழா சம்பந்தமான அனைத்துத் தகவல்கள், பணியின் போது எழும் பிரச்சினைகளைப் புறக் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க காவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
- May I Help You – நான் உங்களுக்கு உதவலாமா – என்ற அறிவிப்புப் பலகையுடன் காவல் சாவடிகள் (Police Booths) அமைத்து சாவடி ஒன்றுக்கு இரு காவலர்கள் வீதம் நகரின் முக்கியமான இடங்களில் அமைக்க வேண்டும். இந்தச் சாவடிகளில் ஒலி பெருக்கி வசதி, வாக்கி டாக்கி, கூட்டத்தில் தவறிய குழந்தைகளை பெற்றோரிடம் ஒப்படைக்கும்வரை அதன் அழுகையை நிறுத்தும்பொருட்டு, பொம்மைகள், மிட்டாய்கள் வைத்திருக்க வேண்டும்.
- வெளியூர்களிலிருந்து திருவிழாவிற்கு வருபவர்களில் வழி தெரியாதவர்களுக்கு வழிகாட்டி உதவவும், விழாக் கூட்டத்தில் பெரியவர்கள் மற்றும் உறவினர்களை விட்டுப் பிரிந்தவர்கள் மற்றும் சிறுகுழந்தைகளை உரியவர்களிடம் ஒப்படைப்பதும் இவர்களின் பணி ஆகும்.
- பொதுமக்களின் உடமைகளைப் பாதுகாத்துக் கொள்ள ஒலிபெருக்கி, துண்டுப் பிரசுரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- திருவிழாக் கூட்டத்தில் தவறும் முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் உடமைகள் பற்றிய விபரத்தை ஒலிபெருக்கி மூலம் அறிவித்து உரியவரிடம் ஒப்படைக்க ஆவண செய்ய வேண்டும்.
- திருவிழாக் கூட்டத்தில் பெண்கள் அணிந்திருக்கும் நகைகள் களவு போகாத வண்ணம் போதிய பெண் காவலர்கள் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

- திருவிழாக் கூட்டத்தில் பெண்களைக் கேலி செய்பவர்கள்வவவ, போக்கிரித் தனம் செய்பவர்களைக் கைது செய்து சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- திருவிழாக் கூட்டத்தில் குற்றம் புரிவோர் சம்பந்தமாக பொது ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தேவைப்பட்டால், வாகன நெரிசலைத் தவிர்க்கவும், உரிய வாகன நிறுத்துமிடங்களை (Parking Area) ஏற்படுத்தி போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், தற்காலிகப் பேருந்து நிலையத்திற்கும் போதிய காவலர்கள் நியமிக்கவும் வேண்டும்.
- குற்றப்பிரிவு காவலர்கள் போதிய அளவில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ரோந்து வர வேண்டும். அதை சார்பு ஆய்வாளர் தணிக்கை செய்ய வேண்டும்.
- திருவிழாவில் அசம்பாவிதமோ சட்டம் ஒழுங்குப் பிரச்சினையோ ஏற்பட்டால் போதிய காவலர்கள் கொண்ட காவல் குழு ஒன்று அவ்விடத்திற்கு உடனே செல்லத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- திருவிழாக் காலத்தில் Home Guard, Friends of Police, N.S.S., N.C.C. மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களையும் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

திருவிழா முடிந்த பின்

- திருவிழா பாதுகாவல் பணிக்கு வெளியிடங்களிலிருந்து வந்த காவல் அலுவலர்களுக்கு தேதி, நேரம் மற்றும் கையொப்பமிட்டு உரிய கடவுச் சீட்டு கொடுத்து திருப்பி அனுப்ப வேண்டும்.
- திருவிழாப் பாதுகாவல் பணிக்கு பெறப்பட்ட அரசுச் சொத்துக்களை உரிய அலுவலகத்திற்கு குறிப்பாணை மூலம் திரும்ப ஒப்படைத்து ஒப்புதல் பெற வேண்டும்.
- திருவிழா முடிந்தவுடன், திருவிழாவிற்காக கோவில் முன்பும், மண்டகப்படிகள் முன்பும், விழா நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் ஆகியவற்றிலும் உள்ள பந்தல்களை பிரிக்க ஏற்பாடு செய்து, வாகனப் போக்குவரத்து மற்றும் பொது மக்கள் போக்குவரத்து பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

செய்யக்கூடாதவை

- பிரச்சினைகள் வரும்போது சாதி, மதம் மற்றும் அரசியல் சார்ந்த வார்த்தைகளை உபயோகித்தல்.
- குடிபோதையில் அல்லது குற்றம் செய்பவர்களைக் கூட்டத்தின் மத்தியில் வைத்து அடித்தல்.
- விழாவிற்கு வரும் பொதுமக்களிடம் கோபப்படுதல், கடுஞ் சொற்களை உபயோகித்தல் மற்றும் வாக்குவாதத்தில் ஈடுபடுதல்.
- பாதுகாப்பு அலுவலுக்கு நியமிக்கப்பட்டவர்கள் பொறுப்பு அலுவலர்களின் உத்திரவின்றி அலுவல் இடத்தைவிட்டுச் செல்லுதல்.
- மறு உத்திரவு கிடைக்கும் முன்பு பணியை விட்டுச் செல்லுதல்.

பார்வைகள்: P.S.O. 372, 377

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under section 154 Cr.P.C)
(கு.ந. வி. தொ. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District / மாவட்டம் திருநெல்வேலி PS/ காவல் நிலையம் திசையன்விளை Year / ஆண்டு 2008 FIR No. முத.தகவல் எண் 134 C 0000000 Date / நாள் 21.10.2008

2. (i) Act / சட்டம் இ.பி.கோ. Sections / பிரிவுகள் 147 (ii) Act / சட்டம் — Sections / பிரிவுகள் —

(iii) Act / சட்டம் — Sections / பிரிவுகள் — (iv) Act / சட்டம் — Sections / பிரிவுகள் —

3. (a) Occurrence of offence Day / குற்றநிகழ்வுநாள் Date from / நாள் முதல் 21.10.08 Date to / நாள் வரை — Time Period / நேர அளவு 19.00 Time from / நேரம் முதல் — Time to / நேரம் வரை —

(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.10.08 Time / நேரம் 19.00 (c) General Diary Reference : Entry No(s) / பொதுநாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. V Time / நேரம் 19.00

4. Type of Information / தகவலின் வகை Written/Oral / எழுத்துமூலம் / வாய்மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS. / குற்ற நிகழிடம் அல்லது காவல் நிலையத்தில் இருந்து எல்லையை நோக்கும் எத்திசையும் சுமார் 12 கி.மீ. வடகிழக்கு Beat Number / ரோந்து காவல் எண்

(b) Address / முகவரி திருச்புரம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமானால், அந்நிலையில் அந்த காவல் நிலையம் — District / மாவட்டம் —

6. Complainant / Informant : (a) Name / குற்றமுறையிட்டவர் / தகவல் தந்தவர் பெயர் MMMM (b) Father's / Husband's Name தந்தை / கணவர் பெயர் AAAAA

(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality / நாட்டுரிமை இந்தியர் (e) Passport No. / கடவுச்சீட்டு எண் — Date of issue / வழங்கப்பட்ட நாள் Place of issue / வழங்கப்பட்ட இடம்

(f) Occupation / தொழில் கூலி தொழிலாளி (g) Address/ முகவரி திசையன்விளை நல்லூர் காலனி சிவசைலபுரம் திருநெல்வேலி மாவட்டம்

7. Details of Known / Suspected / Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்படுகிறவர் / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

A மற்றும் B மற்றும் எதிரிகளின் பெயர் பட்டியல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது

8. Reason for delay in reporting by the complainant / informant / குற்றமுறையிட்டவர் / தகவல் தெரிவிப்பவர் முறையிட்டதில், தகவல் தெரிவிப்பதில் தாமதம்

நேரம் காலம் தினைக் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகம் மூலம் மனு பெறப்பட்டு பதிவு செய்தல்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) / களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துகளின் விவரம் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved / களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துகளின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any : / கொலையான குறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் எதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet if required / முதல் தகவல் அறிக்கையின் வடிவம் (தேவைப்பெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் தாலுக்கா, கரிவலம்வந்த நல்லூர், காவல் நிலைய சரகம் முருகன் குளம் கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ – ககக கோவிலில் வருடந்தோறும் புரட்டாசி மாதம் மழை வேண்டி குலுமை சாமி கும்பிடுவது சம்மந்தமாகவும் மாசி மாதம் நடைப்பெறும் பெரும் பொங்கல் திருவிழா சம்மந்தமா முருகன் குளம் A இன மக்களுக்கும் சிவன்புரம் கிராமத்தைச் சேர்ந்த B இனமக்களுக்கும் திருவிழா கொண்டாடுவதில் இருந்து வரும் உரிமை பிரச்சனை சம்மந்தமாக விசாரணை செய்து முடிவு செய்ய வேண்டி இன்று 21.10.2008 1900 மணிக்கு கிடைக்கப்பெற்ற விவரங்களின்படி கரிவலம்வந்த நல்லூர், காவல் நிலைய ஆய்வாளராகிய என்னால் நிலைய குற்ற எண் 134 / 2008 சரிபி 145 கு.வி.மு.ச.வின்படி பதிவு செய்யப்பட்ட வழக்கு பின்வருமாறு திருநெல்வேலி வருவாய் உட்கோட்ட அலுவலர் அவர்கள் முன்பாக சமர்ப்பிக்க படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் தாலுக்கா, கரிவலம்வந்த நல்லூர், முருகன் குளம் கிராமத்தில் இருக்கும் A இன மக்களுக்கும் பக்கத்து கிராமமான சிவன்புரம் கிராமத்தைச் சேர்ந்த B இனமக்களுக்கும் முருகன் குளம் கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ – ককক கோவிலில் வருடந்தோறும் மாசி மாதம் கோவில் கொடையும், புரட்டாசி மாதம் மழை வேண்டி குலுமை பூஜை நடத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. மேலும் மேற்படி கோவிலில் காலை, மாலை தினசரி பூஜைகள் நடைப்பெறும். கடந்த வருடம் 2007ம் ஆண்டு மாசி மாதம் கொடை விழாவில் சிவன்புரத்தை சேர்ந்த XXXX என்பவர் ——— என்ற படம் போட்ட பனியன் அணிந்து வந்த சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையில் குற்ற எண் 42/07 சரிபி 3(1) (x)SC/ST Act and 353 IPCயின் படி வழக்கும் அதே விழாவில் எட்டாம் நாள் பூஜையில் நடந்த மற்றொரு சம்பவம் தொடர்பாக குற்ற எண் 55/07 சரிபி 147,148, 324, 294 (b), 3(1) (x)SC/ST Actன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது. இவ்வருடம் புரட்டாசி மாதம் (02.10.08) ந்தேதி மழைக்காக பூஜை நடைப்பெற்ற போது முருகன்குளம் A சமுதாயத்தினர், மேளதாளம் வாசிக்க வழக்கம் போல் சிவன்புரம், B சமுகத்தினருக்கு சம்பளம் கொடுத்து அழைக்காமல் கடந்த வருடம் மாசி மாத கொடையில் நடந்த சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு மேல மாத்தோணியில் இருந்து மேளத்தாளத்தை வரவழைத்து பூஜை நடத்தியுள்ளனர். இதனால் சிவன்புரத்தை சேர்ந்த B சமுதாயத்தினர் தங்கள் ஊரிலிருந்து மேளம் சொல்லாததால், தாங்கள் தனியாக மேளம் அடித்துச் செல்வதாகக் சொன்னதற்கு, முருகன் குளம் கிராமத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததால் மழைக்கால பூஜையில் சிவன்புரம் கிராமத்தினர் கலந்து கொள்ள வேண்டி 30.09.08 ம் தேதி கரிவலம் வந்தநல்லூர் காவல் நிலையத்தில் முருகன் குல கிராமத்தினர் ஒரு புகார் மனு கொடுத்து மேற்படி மனுவண் 467/2008ன் படி இருத்தரப்பினரையும் வரவழைத்து விசாரித்ததில் இவ்வருடம் மேலமாத்தோணி மேளம் அடித்துக்கொள்ள வேண்டுமெனமுடிவு செய்யப்பட்டு அதன் படி இரு கிராமத்தாரும் சாமிக்கும்பிட வேண்டுமென முடிவு செய்யப்பட்டப்படி நடந்துகொள்ளாமல் மீண்டும் சிவன்புரம் கிராமத்தினர் மேளம் அடித்துச் சென்று சாமிக்கும்பிட முடிவு செய்ததால் முருகன்குளம் கிராமத்தில் எதிர்ப்பு தெரிவித்ததால் சிவன் புரம் கிராமத்தினர் 02.10.08ந்தேதி மழைக்காவ் பூஜையில் கலந்துகொள்ள வில்லை. மீண்டும் 09.10.08ந்தேதி அன்று சிவன்புரம் கிராம B சமுதாயத்தினர் மட்டும் தனியாக பூஜைக்கு மேளம் அடித்துச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியபோது முருகன் குளம் கிராம A சமுதாயத்தினர் மேற்படி ஸ்ரீ ককক கோவில் தங்கள் ஊரில் அமைந்துள்ளதாகவும் மேற்படி கோவில் அமைந்துள்ள இடம் சேர்ந்து மொத்தம் உள்ள மூன்றரை ஏக்கர் நிலம் A சமுதாயத்தை சேர்ந்த 11 பேர்களுக்கு இடத்தின் உரிமையாளர் CCCC என்பவர் எழுதிக்கொடுத்துவிட்டதாகவும் மேற்படி கோவிலின் மீது உரிமைக் கொண்டாடுவதால், ஸ்ரீ ককক கோவில் யாருக்கு உரிமையுள்ளது. என்பதையும் சாமி கும்பிடுவதில் உள்ள உரிமையப் பற்றியும் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் சிவன்புரம் கலாபொதுமக்கள் சார்பாக வட்டாட்சியர் சங்கரன் கோவில் அவர்களுக்கு கொடுத்த மனு பின்வருமாறு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2, registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS. .....on point of jurisdiction.
எடுக்கப்பட்ட நடவடிக்கை / மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமை பிரிவு 2ல் கூறப்பட்ட குற்றங்களை வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டுள்ள ..... புரவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / வழக்கப்பட்டு எல்லைமைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the complainant / informant free of cost. முதுகு குற்ற முறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant.
குற்றவாளியீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

ஒப்பம்–
Signature of the Officer in-charge, Police Station காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of dispatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name / பெயர் .....

Rank / நிலை .....

கரிவலம் வந்த நல்லூர் காவல் நிலைய குற்ற எண் 134/ 08 ச/பி 145 கு.வி.மு.ச வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி. :-

வரைநர் ஊர் பொதுமக்கள் சிவன்புரம். பெறுநர். உயர்திரு வட்டாட்சியர் அவர்கள். வட்டாட்சியர்அலுவலகம் சங்கரன் கோவில். பொருள். 09.10.08 செவ்வாய்கிழமை குலுமை மழைவர வேண்டி நிகழ்ச்சி நடக்க அனுமதி வேண்டுதல் சார்பாக, அய்யா, நாங்கள் மேலே கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறோம். நாங்கள் அனைவரும் B சமுகத்தைச் சேர்ந்தவர்கள் 1. முருகன் குளம் 2. சிவன்புரம். 3. சின்னையா புரம் 4. பெரியய்யா புரம் 5. இரட்டைக்கடை 6. கங்கா சமுத்திரம். 7. நத்தம். ஆகிய ஏழு ஊர்களுக்கும் பாத்தியப்பட்ட ஸ்ரீ கककக கோவில் உள்ளது. கடந்த வருடம் மாசி திருவிழாவின் போது பிரச்சனை ஏற்பட்டது. தீண்டாமை வழக்கு பதிவு செய்யப்பட்டது. வருடம் வருடம் புரட்டாசி மாதம் குலுமை (மழை வேண்டி சாமி கும்பிடும் நிகழ்ச்சி) சம்மந்தப்பட்ட எல்லை ஊர்களின் நாட்டாமைகள் கலந்து பேசி அனைவரும் வழிப்படுவார்கள். 13.03.08 அன்று தாசில்தார் தலைமையில் சமாதான கூட்டம் முடிவில் கோவில் சம்மந்தமான நிகழ்ச்சிகள் சிவன்புரம் மக்களுக்கு தெரியாமல் நடக்ககூடாது என முடிவு செய்யப்பட்டது. ஆனால் 02.10.08 அன்று எங்களிடம் சொல்லாமலே குலுமை நிகழ்ச்சி நடத்திவிட்டார்கள் நாங்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ள வில்லை. ஆகவே எங்கள் ஊர் மக்கள் தெய்வ குற்றம்ஆகிவிடும் என அனைவரும் பீதியில் மனப்பயத்தில் அஞ்சுகிறார்கள் ஆகவே 09.10.08 செவ்வாய் கிழமை நாங்கள் சாமி கும்பிடுவதற்கு பாதுகாப்போடு அனுமதி வழங்க வேண்டிக்கொள்கிறோம்.
இப்படிக்கு ஊர் நாட்டாமைகள் (ஒப்பம்) 1. MMMMM 2. NNNNN நகல் உயர்திரு. துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் சங்கரன் கோவில்.
இதன் அசலுடன் சிவன்புரம் ஊர்பொதுமக்களின் மனுவை இணைத்து கனம் முதல் வகுப்பு நிர்வாகத்துறை நடுவர் (கோட்டாட்சியர்) திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பியும், பிறநகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணைக்காக ஒரு நகலை நான் எடுத்துக்கொண்டேன்.

ஒம்/–
காவல் ஆய்வாளர்
கரிவலம் வந்தநல்லூர் காவல்நிலையம்

A மற்றும் B பார்ட்டி எதிரிகளின் விவரப்பட்டியல்

A பார்ட்டி	B பார்ட்டி
1. XXXX த/பெ AAAA	1. அஅஅஅ த/பெ கककक
2. YYYY த/பெ BBBB	2. ஆஆஆஆ த/பெ ஙஙஙஙஙஙங
3. ZZZZ த/பெ CCCC	3. இஇஇஇ த/பெ சசசச
4. aaaa த/பெ DDDD	4. ஈஈஈஈ த/பெ ஞஞஞஞ
5. bbbb த/பெ EEEE	5. உஉஉஉ த/பெ டடடட
6. CCCC த/பெ FFFF	6. ஊஊஊஊ த/பெ ணணணண
7. dddd த/பெ GGGG	7. எஎஎஎ த/பெ பபபப

22. தகவலாளர் முறை (Informant System)

தகவலாளர் என்பவர் குற்றங்கள் நடவாமல் தடுப்பதற்கும், நடைபெற்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய தகவல்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளில் காவல் துறையினருக்குத் தேவையான தகவல்களை அளிப்பவர் ஆவார்.

தகவலாளர் பதிவேடும் அதன் பயன்களும்: (Information Register and its Uses)

- தகவலாளர் பதிவேடு ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஆய்வாளர்/உதவி ஆய்வாளரால் இரகசியமாகப் பராமரிக்கப்பட வேண்டும். இப்பதிவேட்டில் தகவலாளரின் பெயர், தந்தை பெயர், முகவரி, அலுவல், நிரந்தர அல்லது தற்காலிக தகவலாளரா என்ற விபரங்கள் அடங்கியிருக்க வேண்டும். காவல் நிலையத்திற்குப் புதியதாக நியமனம் செய்யப்படும் காவல் அலுவலர்கள் இப்பதிவேட்டின் மூலம் தகவலாளர்கள் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம். மாறுதலில் செல்லும் அலுவலர்கள் தங்களுக்கு அறிமுகமுடைய தகவலாளர்களின் விபரங்களை மற்றவர் களுக்கு எடுத்துக்கூறி அவர்கள் மூலம் பயன்பெறச் செய்ய வேண்டும்.

செய்யவேண்டியவை

- தகவலாளர் மூலம் பாரிக் குற்றங்கள் (Grave Cases) மற்றும் கொடுங்குற்ற (Heinous) வழக்கு களில் எதிரிகளைக் கண்டுபிடிப்பதை எளிதாக்கிக் கொள்ளலாம்.
- தகவலாளர்கள் கொடுக்கும் தகவல்களை இரகசியமாக காக்கப்பட வேண்டும்.
- சில தகவலாளர்கள் காவல் துறையினருக்கு உதவ வேண்டும் என்ற சீரிய நோக்குடனும் ஒரு சில வேண்டாத நபர்கள்மீது பழிவாங்கும் எண்ணத்துடனும் தகவல் அளிப்பார்கள். எனவே தகவல்களைச் சீர்தூக்கிப் பார்த்து திறமையான, சிறந்த குணமுடைய தகவலாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- தகவலாளரை வெவ்வேறு நாள், நேரம், இடம் ஆகியவற்றில் தொடர்பு கொள்ள வேண்டும்.
- தகவலாளர் அளிக்கும் தகவல்கள் சரிதானா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- தகவலாளருக்குத் தக்க வெகுமதி அளிக்க காவல் துறையில் வழியுண்டு. எனவே அளிக்கும் தகவலின் தன்மைக்கு ஏற்ப பண வெகுமதி அளிக்கலாம்.
- தகவலாளர்கள் பற்றிய விபரங்களை மந்தனமாக (Secret) வைத்துப் பாதுகாக்க வேண்டும். அவர்களை அடையாளம் காட்டினால் பாதிக்கப்பட்டவர்களால் அவர்களுக்குத் தீங்கு நேரக்கூடும்.
- சமூக மரியாதை அதிகமிக்க தகவலாளர் பண வெகுமதி பெற விரும்பாவிட்டால் பாராட்டுக் கடிதம் அல்லது சான்றிதழ் அளிக்கலாம்.
- தகவலாளர்களுக்கு வெகுமதி Special Rewards கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

- தகவலாளரிடம் பொது இடத்தில் வைத்து தகவல் பெறுதல்.
- ஒரே இடம், நாள், மணி எனத் தொடர்ச்சியாகத் தொடர்புகொள்ளுதல்.

- தகவலாளரை வெளிப்படுத்துதல்.

பார்வை: PSO 55

23. சமுதாயக் காவல் (Community Policing)

சமூகத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் குற்றத்தைக் கண்டு அஞ்சுவதை விட காவல் துறையினரைக் கண்டு அதிகம் அஞ்சுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் பொதுமக்கள், செய்தியாளர்கள், மாணவர்கள் மத்தியில் காவல்துறையினரைப் பற்றி ஏற்பட்டிருக்கும் தவறான எண்ணம்தான். இதனால் பொதுமக்களிட மிருந்து கிடைக்க வேண்டிய போதுமான தகவல்கள், கருத்துக்கள், ஒத்துழைப்பு ஆகியன கிடைக்காமல் போய்விடுகின்றன. போதை பொருள் கடத்தல், படுகொலை, மக்கள் தொகை அதிகமுள்ள நகர் பகுதிகளில் குண்டு வீசுதல் போன்ற ஆபத்தான நடவடிக்கைகள் உலகளவில் காவல்துறையினருக்கு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. உலகெங்கும் மிகக் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் சூழ்நிலையில் காவல் துறையில் இத்தகைய எதிரிகள் மட்டுமல்லாமல் நண்பர்களிடமிருந்தும் கூடப் பிரிக்கப்பட்டு தனிமைப்பட்டு நிற்க வேண்டிய துரதிஷ்டமான நிலையில் உள்ளனர். காவல்துறை குறித்து அனைத்து மாவட்டத்திலும் பரவியுள்ள இத்தகைய எதிர்மறையான எண்ணங்கள் அனைத்தும் ''சமூக காவல் முறை'' என்றதொரு புதிய அனுகுமுறை மூலம் முறியடித்துவிட முடியும்.

- 1997ம் ஆண்டு புது டெல்லியில் உள்ள காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கூடமும் (Bureau of Police Research and Development) மற்றும் அனைத்துலக வளர்ச்சி திட்டம் (United Nations Development Programme Project) ஆகிய அமைப்புகள் சேர்ந்து சமுதாய காவல் பணி திட்டத்தை இந்தியாவில் உருவாக்கினர்.
- பொது மக்களும் காவல் துறையினரும் நல்லுறவினை வளர்க்கும் நோக்கத்தோடு இருவரும் சேர்ந்து செயல்படும் அமைப்பு சமுதாய காவல் எனப்படும்.
- அந்த பகுதியில் வசிக்கும் மக்களுடன் காவல் துறை ஒன்று சேர்ந்து பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் குற்றம் மற்றும் குற்றவாளிகள், போதை பொருட்கள் நடமாட்டம் ஆகியவற்றை தடுத்து சமூக மற்றும் சுற்றுப்புற மாற்றம் உருவாக்குவதே சமுதாய காவல் அமைப்பின் தலையாய நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் காவல் நிலையங்களில் சிறந்த ஆய்வாளர் முதல் காவலர் வரை தேர்ந்தெடுக் கப்பட்டு ராஜஸ்தான் மாநில காவல் பயிற்சி கழகத்தில் சமுதாய காவல் பற்றி குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட்டும், மேலும் இத்திட்டத்தை நடைமுறைபடுத்தும் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் லண்டன் நகரங்களுக்கு இக்குழுவினரை நேரில் அழைத்துச் சென்று சமுதாய காவல் பணி நிறைவேற்றும் முறைகளை கண்டறிய வழிவகுக்கப்பட்டது இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் மாற்று முகவர்கள் (Change Agents)என அழைக்கப்பட்டு தாங்கள் பணிபுரியும் காவல் நிலையங் களில் தாங்கள் கற்றும் கேட்டு வந்த சமுதாய காவல் பணி திட்டத்தை செயல்படுத்த நியமிக்கப் பட்டனர்.

viii. சமுதாய காவல் பணி திட்டத்தின் கீழ் அந்த பகுதியில் வாழும் உள்ளூர் பள்ளி கல்லூரி முதல்வர் கள் மற்றும் ஆசிரியர்கள், கோவில் மசூதி தேவாலயங்களின் உறுப்பினர்கள், போக்குவரத்து பணியாளர்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், வழக்கறிஞர்கள், குடிசை வாழ்வோர் சங்க பிரதிநிதி போன்ற பொது மக்கள் சமுதாய தொடர்பு குழுவினர்கள் (Community Liaison Group) நியமனம் செய்து அவர்கள் மூலம் பொது மக்களும், காவல் துறையினருக்கும் நல்லுறவை மேம்படுத்த வேண்டும்.

செய்ய வேண்டியவை

- ஒவ்வொரு உதவி ஆய்வாளரும் ஒரு மாற்று முகவர் (Change Agent) ஆக செயல்பட்டு தனது காவல் நிலையத்தில் உள்ள கிராமங்களில் சமுதாய தொடர்பு குழுவினர்களை நியமித்து சமுதாய காவல் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.
- காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வரும் பொது மக்களை நல்ல முறையில் வரவேற்று பொறுமையுடன், இன்முகத்துடன், அவர்கள் குறைகளை கேட்டறிந்து ஆறுதல் அளித்து அவர் களை திருப்திபடுத்தி அனுப்புவதே சமுதாய காவல் பணியின் அடிப்படை நோக்கமாகும்.
- கிராம மக்களின் நல்லெண்ணத்தை பெரும் வகையில் நாம் முன்னின்று ஒருங்கிணைத்து கிராமங்களில் சாலை வசதிகள் ஏற்படுத்துதல், விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், ஏழை மக்களுக்கு சிறு உதவிகள் செய்தல், பள்ளிகளில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல் மருத்துவ முகாம் அமைத்தல் போன்ற நல்ல திட்டங்களை செயல்படுத்தி கிராம மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்.

காவல் நண்பர்கள் இயக்கம் (Friends of Police Movement)

தமிழ்நாட்டில் இராமநாதபுர மாவட்டத்தில்தான் முதன்முறையாக காவல் நண்பர்கள் இயக்கம் (Friends of Police movement) என்றழைக்கப்படும் இப்புதிய யுக்தி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இயக்கம் பொது மக்கள் மத்தியிலும், தன்னார்வ அமைப்புகள் மத்தியிலும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாட்டால் காவல்துறையின் மதிப்பு உயர்ந்ததோடு, புதிய தகவல் தொடர்புகள் அதிகரிப்பால் நன்மதிப்பு, பயனுள்ள கருத்துக்கள், தகவல்கள் மனித சக்தி ஆகியவையும் பெருமளவில் கிடைக்கப் பெறுகின்றன.

பெரும்பாலான நாடுகளில் சட்டத்தை மதிக்கும் குடிமக்களுக்கும், சட்டத்தை பாதுகாக்கும் காவல் துறையினருக்கும் நல்லுறவை மேம்படுத்த இத்தைகையான முழுமையான புதியதொரு அனுகுமுறை தேவைப் படுகிறது. உலகமெங்கிலும் உள்ள காவல்துறைக்கு தமிழ்நாட்டின் காவலர் நண்பர்கள் இயக்கம் ஒரு வழிகாட்டியாக திகழ்கிறது.

இயக்கத்தில் சேர தகுதிகள்

- காவலர் நண்பர்கள் இயக்கத்தில் உறுப்பினராக சேருவது மிக சுலபமானது மற்றும் வெளிப்படை யானது. படிப்பு அல்லது வேலை தகுதிகள் குறித்து வரையறை ஏதும் கிடையாது. எனினும் விண்ணப்பத்தாரர் எழுத்து மூலம் தகவல்களை அளிக்கும் அளவிற்க்கு கற்றவராக இருத்தல் நன்று. 18 வயதிற்கு மேல் 70 வயதிற்கு உட்பட்ட குற்ற வழக்குகள் எதிலும் சம்பந்தப்படாத பொது மக்களில் ஆண் / பெண் எவர் வேண்டுமானலும் இவ்வியக்கத்தில் சேரத் தகுதியுடையர் ஆவார்கள். காவலர் நண்பர்கள் இயக்கத்தில் சேர விரும்புவர்கள் அதற்கான விண்ணப்ப படிவத்தைப் பெற்று தனது பெயர், வயது, முகவரி, மற்றும் செய்யும் தொழில்/வேலை ஆகியவற்றைக் குறிப்பிட்டு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பங்களில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை சரி பார்த்து பின் மாவட்ட கண்காணிப் பாளரால் காவலர் நண்பர்கள் இயக்கத்தில் உறுப்பினராகப் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
- உறுப்பினராக சேர்க்கப்பட்டதும் அவர்களுக்கு அடையாள அட்டைகளும், காவலர் நண்பர்கள் இயக்கம் என பொறிக்கப்பட்ட கைப்பட்டைகளும் வழங்கப்படும்.

காவலர் நண்பர்கள் இயக்கத்தின் பங்கு

- காவல்துறையிலுள்ள அனைத்து மட்ட அலுவலர்களையும் காவலர் நண்பர்கள் சந்தித்து கருத்துக் களையும், பயனுள்ள தகவல்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- தங்கள் பகுதியில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறி அதற்கான தீர்வினையும் பரிந்துரைக் கலாம்.
- காவலர்களுடன் இணைந்தும் அல்லது ஒரு குழுவாகவும் தத்தமது குடியிருப்பு பகுதிகளில் வீடுகளை சுற்றி இரவு ரோந்துப் பணியில் ஈடுபடலாம்.
- போக்குவரத்து பணிகளில் ஈடுபடும் போது போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், போக்குவரத்து விதிமுறைகளை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி வாகன விபத்துக்களை தடுக்கவும் காவலர்களுடன் இணைந்து செயல்படலாம்.

செய்ய வேண்டியவை

- காவல் நண்பர்கள் இயக்கத்தில் ஊக்குவித்து அதிகமான இளைஞர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களை இதில் உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும்.
- இவர்களை நாம் ஒரு இரகசிய தகவலாளர்களாக உபயோகப்படுத்திக் கொண்டு கிராமங்களில் நடக்கும் குற்றங்களைக் குறித்து தகவல் சேகரிக்க வேண்டும்.
- சந்தை மற்றும் திருவிழா பாதுகாப்பு அலுவல்களில் இவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.
- இரவு ரோந்து அலுவல்களுக்கு காவலர்களுடன் காவலர் நண்பர்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். இது அதிகப்படியான ரோந்து நியமிக்க உதவிடும்.

24. பேரிடர் மேலாண்மை (Disaster Management)

இயற்கையின் சீற்றங்களான நில நடுக்கம், நிலச் சரிவு, கட்டிட இடிபாடுகள், புயல், மழை, வெள்ளம், சுனாமி போன்ற இடர்ப்பாடுகளின்போதும், தீ விபத்து, தொடர்வண்டி மற்றும் ஆகாய விமான விபத்து போன்ற அவசர காலங்களிலும் நாம் மீட்பு மற்றும் உதவிப் பணிகள் செய்ய வேண்டும்.

- இத்தகைய நிகழ்வுகள் குறித்துத் தகவல் கிடைத்தவுடன் உயர் அலுவலர்களுக்குத் தெரியப் படுத்த வேண்டும்.
- வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, தீயணைப்புத் துறை, மருத்துவத் துறை மற்றும் இதரத் துறையினருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- ஆம்புலன்ஸ் வாகனங்களுங்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- மீட்பு மற்றும் இதரப் பணிகளுக்கு சாரணர் இயக்கம், ஊர்க் காவல் படை, தேசிய மாணவர் படை, தேசிய சேவைத் திட்டம் மற்றும் சமூக சேவை இயக்கங்களுக்குத் தகவல் தெரிவித்து அதன் உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்.
- தகவல் தெரிவித்து ஆஜரில் உள்ள அனைத்துக் காவலர்களையும் ஒன்று திரட்டி சம்பவ இடம் விரைந்துசென்று மீட்புப்பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

செய்யவேண்டியவை

I. மீட்புப் பணிகள்: புயல் மற்றும் வெள்ளம்:

- பொதுமக்களை அபாயமான இடத்திலிருந்து அப்புரப்படுத்தி, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப வேண்டும்.
- பொதுப் பணித் துறையினரிடம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி திசை திருப்பி விடச் சொல்ல வேண்டும்.
- ஏரி, கண்மாய், குளம் போன்ற நீர் நிலைகளில் உடைப்பு ஏற்பட்டு மீண்டும் கிராமங்களில் வெள்ளம் புகுவதைத் தடுக்க, போதிய மணல்மூட்டைகள் ஏற்பாடு செய்து தயார் நிலையில் வைத்து உடைப்பு ஏற்பட வாய்ப்புள்ள இடங்களில் வைக்க வேண்டும்.
- கால்நடைகளைப் பாதுகாப்பாக வெளியேற்ற வேண்டும்.
- மின்சாரத் துறையினரிடம் மின்சாரத்தைத் துண்டிக்கச் சொல்ல வேண்டும். மின்கம்பிகள் துண்டிக்கப்பட்டு கிடந்தால் யாரும் அருகே செல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- வெள்ளத்தால் சூழப்பட்டு எவ்வித வெளியுலகத் தொடர்பும் இல்லாத பகுதிகளுக்குத் தொடர்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- காயம்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்.

சுனாமி (Tsunami)

- பொதுமக்களை அபாய இடத்திலிருந்து அப்புறப்படுத்தி, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப வேண்டும்.
- மீண்டும் அபாயம் தொடர்வதாயிருந்தால் பொது மக்கள் யாரையும் கடலுக்குள் செல்ல அனுமதிக்கக் கூடாது.
- கடலுக்கு அருகாமையில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்ற வேண்டும்.
- பொது ஒலிபெருக்கி மூலம் அவ்வப்போது பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- காயம் பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்.

தீ விபத்து (Fire Accident)

- தீயை அணைக்கும் தீயணைப்புத் துறையினருக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.
- பொதுமக்களை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.
- யாராவது வீட்டில் இருந்து வெளியே வரமுடியாமல் இருந்தால் தீயணைப்புத் துறை மற்றும் காவலர்கள் உதவியுடன் காப்பாற்ற முயற்சி எடுக்க வேண்டும்.
- தீ விபத்து பெரிதாக இருந்தால் அருகில் உள்ள காவல் நிலையங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- தீ விபத்து பெரிதாக இருந்து, தீயை அணைக்க மேலும் தீயணைப்பு வண்டிகள் தேவைப்படும்போது மாவட்டத்தில் உள்ள இதர தீயணைப்பு வாகனங்களை வரவழைக்க வேண்டும்.

- நகராட்சி, உள்ளாட்சி மற்றும் தனியார் தண்ணீர் லாரிகளை நீர் நிரப்பி தீயணைப்புத் துறைக்கு உதவிசெய்ய வரவழைக்க வேண்டும்.
- மற்ற இடங்களுக்கு தீ பரவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- காயம் அடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும்.

2. பாதுகாப்பு நடவடிக்கைகள்

- பாதிக்கப்பட்டவர்களின் உடமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.
- விபத்து நேரங்களில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும் தோரணையில் வந்து பொருட்களை யாரும் திருடிச் செல்லாமல் பார்க்க வேண்டும்.
- பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே வந்தபிறகு யாரும் வீட்டுக்குள் சென்று திருட்டு நட வடிக்கைகளில் ஈடுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்ட பொதுமக்கள் தங்குவதற்கு வருவாய்த் துறை யினரின் உதவியுடன் இடம் ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தண்ணீர், உணவு, துணி வகைகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- மருத்துவத் துறையினருக்குத் தகவல் தெரிவித்து மருத்துவ வசதி செய்துகொடுக்க வேண்டும்.
- தொற்று நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அப்புறப்படுத்தி நோய் பரவாது தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3. சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு

- பாதிக்கப்பட்ட மக்களின் உடமைகளுக்கு சமூக விரோதிகளால் தீங்கு நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- வதந்திகளைப் பரப்பும் சமூக விரோத சக்திகளின் முயற்சியை முறியடித்து உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- இறந்துபோனவர்களை உடனடியாக மருத்துவமனை பிண அறைக்கு கொண்டுசெல்ல ஏற்பாடு பண்ண வேண்டும். பிணத்தைத் துணியால் மூட வேண்டும். கொடூரமாக வெளியில் தெரியும்படி வைத்திருத்தல் கூடாது. பிணத்தை வெகுவிரைவில் பிரேத பரிசோதனை முடித்து உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க, தேவைப்படும் இடங்களில் பிக்கட்டிங் நியமிக்கப்பட வேண்டும்.
- அதிகப்படியான ரோந்து அலுவல் மேற்கொள்ள வேண்டும்.
- இயற்கைச் சீற்றம் குறித்து முன்னறிவிப்புக் கிடைக்கப்பெறின் உடனே தகவல் தெரிவித்துத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

செய்யக்கூடாதவை

- தகவல் கிடைத்தால் அலட்சியமாக இருப்பது.
- உயர் அலுவலர்களுக்குத் தகவல் தெரிவிக்காமல் இருப்பது.
- காயம் பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்புவதில் காலந்தாழ்த்துவது.

பார்வை P.S.O. 378 – தீப் பிடித்த இடத்தில் காவலர்கள் செய்யவேண்டிய கடமைகள் குறித்துத் தெளிவாக விவரிக்கிறது.

Terms used in Investigation and Police Records	
Abbreviation	**Expansion**
AR Copy	Accident Register Copy
CD	Case Diary
Cr. No.	Crime Number
FIR	First Information Report
FP	Finger Print
FR	Final Report
IO	Investigating Officer
IP	In Patient
LCD	Last Case Diary
MO	Modus Operandi
MO	Medical Officer
PM	Post Mortem
PMC	Post Mortem Certificate
PNR	Prisoner Nominal Roll (Prison Record)
RCS	Referred Charge Sheet
r/w	Read with
Sec.	Section
SOC	Scene of Crime
UI	Under Investigation
u/s	Under Section
WC	Wound Certificate
AD	Action Dropped
UN	Undetected
MF	Mistake of Fact
ML	Mistake of Law
CSR	Community Service Register
GCR	Grave Crime Report or General Conviction Register
GD	General Diary
LLI	Loose Leaf Index
OP	Out Put/Out Patient
PSR	Prisoners Search Register
SHO	Station House Officer
SHR	Station House Report
BC	Bad Character
DC	Dossier Criminal

Abbreviation	Expansion
HO	Habitual Offender
HS	History Sheet
KD	Known Depredator
LFO	Local First Offender
LKD	Local Known Depredator
NLFO	Non Local First Offender
NLKD	Non Local Known Depredator
L & O	Law and Order
OD	Other Duty
PSO	Police Standing Orders
VIP	Very Important Person
VVIP	Very Very Important Person
ID	Illicit Distillation
IMFL	Indian Made Foreign Liquor
IMFS	Indian Made Foreign Sprit
GSE	Good Service Entry
MSE	Meritorious Service Entry
Court Terms	
ADP	Assistant Director of Prosecution
APP	Assistant Public Prosecutor
CC No.	Calendar Case Number
CJM	Chief Judicial Magistrate
DDP	Deputy Director of Prosecution
DJ	District Judge
DW	Defence Witness
FTC	Fast Track Court
JM	Judicial Magistrate
MC	Magisterial Clerk
NBW	Non Bailable Warrant
PP	Public Prosecutor
PRC No.	Preliminary Registration Case Number

Abbreviation	Expansion
PT	Pending Trial
PT Warrant	Prisoner Transfer Warrant
PW	Prosecution Witness
SC No.	Sessions Case Number
STC No.	Summary Trial Case Number
Acts	
CrPC	Criminal Procedure Code
IPC	Indian Penal Code
IEA	Indian Evidence Act
ITP Act	Immoral Traffic Prevention Act
MV Act	Motor Vehicles Act
NSA	National Security Act
SLL	Special and Local Laws
MA	Minor Acts
Ranks/Designations in Police	
DGP	Director General of Police
ADGP	Additional Director General of Police
IGP/IG	Inspector General of Police
DIG	Deputy Inspector General of Police
SCB	Superintendent of Police, Crime Branch CID
SP	Superintendent of Police
SSB	Superintendent of Police, Special Branch CID
SRP	Superintendent of Police, Railways
AdSP	Additional Superintendent of Police
SDO	Sub Divisional Officer(DSP/ASP/JSP)
JSP	Joint Superintendent of Police
ASP	Assistant Superintendent of Police
DSP	Deputy Superintendent of Police
CI	Circle Inspector
SI	Sub-Inspector of Police
HC	Head Constable
Hav	Havildar
PC	Police Constable
ORs	Other Ranks
WPC	Woman Police Constable

Abbreviation	Expansion
Other Designations	
CS	Chief Secretary
HS	Home Secretary
DM	District Magistrate
RDO	Revenue Divisional Officer
RMO	Residential Medical Officer
RTO	Regional Transport Officer
DRO	District Revenue Officer
MVI	Motor Vehicle Inspector
VAO	Village Administrative Officer
Technical	
CAARUS	Crime Analysis and Automatic Record Updating System
CCIS	Crime and Criminal Information System
CIPA	Common Integrated Police Application
DFMD	Door Frame Metal Detector
FACTS	Fingerprint Automated Criminal Tracing System
HHMD	Hand Held Metal Detector
IED	Improvised Explosive Device
OHP	Over Head Projector
VHF	Very High Frequency
HF	High Frequency
UHF	Ultra High Frequency
LAN	Local Area Network
WAN	Wide Area Network
Officers / Units / Organizations	
AP	Armed Police
AR	Armed Reserve
AWPS	All Women Police Station
BDDS	Bomb Detection and Disposal Squad
Bn	Battalion
CBCID	Crime Branch CID
CCB	Central Crime Branch

Abbreviation	Expansion
CCIW	Commercial Crime Investigation Wing
CPO	City Police Office
CRB	Crime Records Bureau
CSG	Coastal Security Group
DCB	District Crime Branch
DCRB	District Crime Records Bureau
DPO	District Police Office
DVAC	Directorate of Vigilance and Anti-Corruption
EOW	Economic Offences Wing
FPB	Finger Print Bureau
FSL	Forensic Science Laboratory
HR&SJ	Human Rights and Social Justice
HWP	Highway Patrol
IS	Intelligence section
MFSL	Mobile Forensic Science Laboratory
MOB	Modus Operandi Bureau
MT	Motor Transport
NHRC	National Human Rights Commission
NIB	Narcotics Intelligence Bureau
PCCC	Police Computer Communication Centre
PCW	Police Computer Wing
PEW	Prohibition Enforcement Wing
PRO	Police Radio Office
PRS	Police Recruit School
PS	Police Station
PTC	Police Telecommunication Branch
PWD	Public Works Department
RC	Regimental Centre
RFSL	Regional Forensic Science Laboratory
SB	Special Branch
SBCID	Special Branch CID
SCRB	State Crime Records Bureau
SDFPB	Single Digit Finger Print Bureau
SF	Striking Force / Special Force Battalion
SHRC	State Human Rights Commission
STF	Special Task Force

Abbreviation	Expansion
TNCF	Tamil Nadu Commando Force
TNCS	Tamil Nadu Commando School
TNFPB	Tamil Nadu Finger Print Bureau
TNFSL	Tamil Nadu Forensic Science Laboratory
TNPA	Tamil Nadu Police Academy
TNPSC	Tamil Nadu Public Commission
TNUSRB	Tamil Nadu Uniformed Services Recruitment Board
TSP	Tamil Nadu Special Police
UPSC	Union Public Service Commission
V & AC	Vigilance & Anti-Corruption
Central Police Organizations	
BPR&D	Bureau of Police Research and Development
BSF	Border Security Force
CBI	Central Bureau Of Investigation
CDTS	Central Detective Training School
CFSL	Central Forensic Science Laboratory
CISF	Central Industrial Security Force
CPMF	Central Para Military Force
CPO	Central Police Organizations
CRPF	Central Reserve Police Force
DCPW	Directorate of Coordination, Police Wireless
IB	Intelligence Bureau
ITBP	Indo Tibetan Border Force
NCRB	National Crime Records Bureau
NCB	Narcotics Control Bureau
NPA	National Police Academy
NSG	National Security Guard
RAW	Research and Analysis Wing
RPF	Railway Protection Force
SPG	Special Protection Group
SVPNPA	Sardar Vallabbhai Patel National Police Academy
Miscellaneous	
ACR	Annual Confidential Report
CPS	Contributory Pension Scheme
DA	Daily Allowance / DearnessAllowance
EL	Earned Leave

Abbreviation	Expansion
ETR	Extra Time Remuneration
FBF	Family Benefit Fund
G.O.	Government Order
Hq	Headquarters
HRA	House Rent Allowance
LTC	Leave Travel Concession
LWP	Leave without pay
ML	Medical Leave
MPF	Modernization of Police Force
NGO	Non Governmental Organization
GPF	General Provident Fund
NOC	No Objection Certificate
TA	Travelling Allowance
TNPBF	Tamil Nadu Police Benevolent Fund
TNPSS (D&A) Rules	Tamil Nadu Police Subordinate Services(Discipline and Appeal)Rules

இந்த கையேடு உருவாவதற்கு பங்களிப்பு செய்தவர்கள்			
Tr. K.P. Shanmuga Rajeswaran, IPS.,	SP	TRAINING	Chennai
Tr. R. Rajagopalan	ADSP	TNPA	Chennai
Tr. V. Balasubramanian, M.Com.	DSP	Mamallapuram	Kancheepuram Dt.
Tr. M. Subramaniam, M.A.	DSP	Sathyamangalam	Erode Dt.
Tr. D. Chandra Senan	DSP	Palani	Dindigul Dt.
Tmt. C. Pauline, M.A.	DSP	TNPA / PTC	Chennai
Tr. T. Ramachandiran, M.Sc., B.Ed.	Inspector of Police	PTC	Chennai
Tr. M. Narayanasamy,	Inspector of Police	PTC	Chennai
Tr. A. Devarajan	Inspector of Police	Kalpakkam PS	Kancheepuram Dt.
Tr. M.S.M. Valavan, M.Sc., B.L.	Inspector of Police	Kangayam PS	Erode Dt.
Tr. S. Soundarajan	Inspector of Police	Sankaran Kovil PS	Tirunelveli Dt.
Tr. K. Shivakumar	Inpsector(Technical)	PTC	Chennai
Tr. D. Karunanithi	SI of Police	Arakkonam Taluk PS	Vellore Dt.
Tr. T. Kannan, M.Sc.	SI of Police	Karungalpalayam PS	Erode Dt.
Tr. P. Thangaraj	SI of Police	Vellakoil PS	Erode Dt.
Tr. S. Christin Jeyasil	SI of Police	Kottar PS	Kanniyakumari Dt.
Tr. Manohar	SI of Police	Central PS	Thoothukudi Dt.
Tr. K. Nagarajan	SI (Technical)	PTC	Chennai
Tr. S. Shahul Hameed	SI (Technical)	PTC	Chennai
Tmt. Priya, (Typist)	WHC	PTC	Chennai
Tr. P. Rengarajan	Stenographer	SBCID	Chennai